EO_GRAM-TA 50

EO_GRAM-TA_50-001 12/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

EO_GRAM-TA 50

-TA

EO_GRAM-TA_50-002 12/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

EO_GRAM-TA_50-003 12/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

PY 7000
EO
GRAH-TA
50

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு - 147

சுப்பிரமணிய தீக்கிதர் இயற்றிய

# பிரயோக விவேகம்

மூலமும் உரையும்

*பதிப்பாசிரியர் :*
பண்டித வித்துவான்,
**தி. வே. கோபாலையர்,** எம். ஏ., பி. ஓ. எல்.,
திருவையாறு.



தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக் கமிட்டியினருக்காகக்
கௌரவ காரியதரிசி,
வித்துவான், அ. வடிவேலன்
அவர்களால் வெளியிடப்பட்டது.

கி. பி. 1973]                [விலை ரூ. 21-00

ECOLE FRANÇAISE
BIBLIOTHEQUE
PONDICHERY
D'EXTREME ORIENT

ஜெமினி அச்சகம், கும்பகோணம்
( போன் : 835 )

# வெளியிடுவோர் உரை

மொழி உறுப்பாம் சொற்களைப் பொருட் சிறப்பு ஒளிர நெறியறிந்து பொருந்தப் பயன்படுத்தும் அறிவு தரும் நூல் எனப் பொருள்படும் **'பிரயோக விவேகம்'** என்னும் பெயரினதாய்ப் பெரிதும் சொல்லிலக்கணங்களை ஒல்லும் வகையில் தொகுத்து விளக்கும் இந்நூல், வடமொழிக்கும், தமிழ்மொழிக்கும் அடிப்படை வேறுபாடுகள் பலவிருப்பினும் இலக்கணக்கூறுகளுள் பல ஒன்றுபட்டியல்வதை நுணுகியறிந்து தம் இருமொழிப்-புலமையும் தோன்ற இலக்கணப்புலம் விழைவாருக்கு ஆரமிழ்தாக வடமொழி இலக்கண மரபுச் சொற்களோடு தமிழில் ஐம்பத்தொரு காரிகையாக உரையுடன் திருக்குருகூர் **சுப்பிரமணிய தீட்சிதர்** என்பவரால் இயற்றப்பெற்றதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் நன்னூலாருக்கும், சின்னூலாருக்கும் பின்னர் இலக்கண உரைநூல்களே வளர்ந்து வந்த நிலைமாறப் பதினேழாம் நூற்றாண்டில் நயனும், பயனும் மிக்க இலக்கண வழிநூல்களைச் செய்த பெருமக்கள் மூவருள் நடுநாயகமாகத் திகழ்பவர் இந்நூலாசிரியர்.

அருமறையும், திருமுறையும் ஓர்ந்து ஆழ்வார்தம் அருள் செயல்களுள் ஆழ்ந்து காப்பிய, புராண, இதிகாசங்களை அறிந்து இருமொழி இலக்கணங்களையும் தேர்ந்து வைதீக சமயநெறி போற்றி ஒழுகிய இப்பெரும்புலவர் அருளிய இலக்கண நுண்பொருட் கருவூலமாகிய இந்நூலை யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் முதற்கண் அச்சிட்டு வெளிப்படுத்தினரேனும் அதனைப் பயில்வதினும் ஓலைச்சுவடியின் மூலம் பயில்வது எளிதெனக் கருதும் நிலையில் அப்பதிப்புக்கள் உள்ளமையின், நூலாசிரியர் எந்த நோக்கத்தோடு இந்நூலைச் செய்தாரோ அது கைகூடவில்லை என்பதை அறிஞர் உலகறியும்.

இக்குறை நீங்க இஞ்ஞான்று நமது சரசுவதி மகால் நூல் நிலைய வாயிலாக இந்நூலின் பருப்பொருளும், நுண்பொருளும் பயில்வோர் எளிதின் அறிந்து பயன்கொள்ளும் வண்ணம் நூலாசிரியரைப் பற்றிய குறிப்புக்களோடு நூல்நுதலியதும், நுதலியது தெளிவாகும் முறையில், உரை நூற்பாக்களைத் தனியே தொகுத்தும், தொல்காப்பிய நூற்பாக்களையும், தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துக்களையும் திரட்டி அவை வந்துள்ள இடங்களையும், வந்ததற்குரிய சூழ்நிலைகளையும், அவற்றால் தெளிவாகும் இலக்கண நுண்மைகளையும் புலப்படுத்தி, இவ்வாறே நன்னூல், திருக்குறள், திருக்கோவையார் முதலிய மேற்கோள் நூல்களையும் இயைபொடு விளக்கி, இலக்கணக் கொத்துரை நூலையும் ஒப்பிட்டுக் காட்டி, மேலும் பயில்வோருக்கு வேண்டுமளவில் செய்திகளை வகுத்தும், தொகுத்தும் பிற்சேர்க்கையாக எடுத்துக்காட்டுகளின் நிரல்களோடு தமிழ் இலக்கண - வடமொழி இலக்கண மரபுச் சொற்களின் பட்டியைப் பொருளொடு முறைப்படுத்தி, முன்னாள் பொறுப்பேற்றிருந்த முதுபெரும்புலவர், திரு. **நீ. கந்தசாமி பிள்ளை** அவர்களின் விருப்பிற்கிணங்க விரிவான விளக்கத்துடன் இந்நூல் வெளியிடப் பெறுகின்றது.

இதனை மிகச் சிறப்பாக வகுத்தெழுதிப் பதிப்பித்துதவிய பண்டித வித்துவான் திரு. **தி. வே. கோபாலையர்**, எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கட்கும், செம்மையோடு வெளிவரத் தக்க முறையில் செயலாற்றிய இந்நூல்நிலைய கியூரேட்டர் டாக்டர் **சி. எஸ். வெங்கடேசுவரன்**, எம். ஏ., பிஎச். டி., அவர்கட்கும், துணைநூலகர் திரு. **எம். சீராளன்**, பி. ஏ., அவர்கட்கும், காலத்தோடு கவினுற அச்சிட்டுத் தந்த குடந்தை **ஜெமினி அச்சக உரிமையாளர்** அவர்கட்கும் கனிந்த உள்ளத்தோடு நன்றி பாராட்டுகின்றோம்.

இத்தகைய பணிகளுக்கு ஆக்கமளித்துப் பேணிவரும் நமது தமிழக அரசை நன்றியோடு போற்றி மகிழ்கின்றோம்.

தஞ்சாவூர்
4—9—1973

அ. வடிவேலன்,
கௌரவ காரியதரிசி,
த. ம. ச. ச. ம. நூலகம்.

# முகவுரை

★

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கண நூல்கள் மூன்றனுள் **பிரயோக விவேகம்** இரண்டாவதாகும். இதனை ஐம்பத்தொரு காரிகைகளில் உரையுடன் இயற்றியவர் **சுப்பிரமணிய தீக்கிதர்** ஆவார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் **ஆறுமுக நாவலர்** அவர்களால் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் பொருட்செறிவும் வடசொற்கலப்பும் கொண்டு புதுவோர்க்குப் பயிலுதற்கண் தடைசெய்வதாய் உள்ளது.

இந்நூலினை அச்சுப்படியினையும், சரசுவதிமகால் கையெழுத்துப் படியினையும் ஒப்புநோக்கித் தேவையான செய்திகள் யாவும் ஒருங்கு அமைய விரிவான விளக்கத்துடன் தெளிவாகப் பதிப்பித்தல் வேண்டும் என்ற சரசுவதிமகால் கௌரவ காரியதரிசியாயிருந்த முதுபெரும் புலவர் திருவாளர் **நீ. கந்தசாமிப்பிள்ளை** அவர்களின் ஆணையை ஏற்றுப் பதிப்பிக்கலாயினேன்.

இப்பணி முட்டின்றி நிறைவேற ஆவன செய்து வரும் சரசுவதிமகால் இந்நாள் கௌரவ காரியதரிசி திருவாளர் வித்துவான் **அ. வடிவேலனார்** அவர்களுக்கும், நூல்நிலையத் துணைக் காப்பாளர் **திரு. சீராளன்**, B. A. அவர்களுக்கும் பெரிதும் நன்றி அறிதலுடையேன்.

என் ஐயங்களை மகிழ்வோடு அகற்றிவரும் பெரும் புலவர்களாகிய ப்ரஹ்மஸ்ரீ சேதிரீபுரம் **நாராயண சுவாமி ஐயர்,** ப்ரஹ்மஸ்ரீ சுவேதாரண்யம் **கிருஷ்ண சாஸ்திரியார்** ஆகியோருக்கு என் தலைதாழ்ந்த வணக்கங்கள்.

இப்பதிப்பிற்குப் பல்லாற்றானும் உதவிய திரு. வித்துவான் **கங்காதரன்,** M. A. உள்ளிட்ட என் உடன்பிறந்தார்களுக்கு என் ஆசிகள்.

இதனை விரைவில் செம்மையாக அச்சிட்டளித்த குடந்தை **ஜெமினி அச்சக** உரிமையாளருக்கும், அந்நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர் அனைவருக்கும் என் கனிவான நன்றி.

என் அயர்வான் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழைகளைப் பொறுத்தருளுமாறு தமிழ் கூறு நல்லுலகத்துக்கு என் வேண்டுகோள்.

என்னை இத்தகைய நற்பணிக்கண் உய்த்தருளும் ஐயாறன் அடியிணைகளை இறைஞ்சி என் தமிழ்ப் பணியினைத் தொடர்கிறேன்.

46, மேல மடவளாகம்
திருவையாறு

தி. வே. கோபாலையர்

—★—

# பொருளடக்கம்

★


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | பதிப்புரை ... | iii |
| 2 | முகவுரை ... | v |
| 3 | பொருளடக்கம் ... | vii |
| | **முன்னுரை** | |
| 4 | நூலாசிரியர் வரலாறு ... | 1 |
| 5 | பிரயோக விவேக மூலம் ... | 5 |
| 6 | உரை நூற்பாக்கள் | 15 |
| 7 | நூலமைப்பு ... | 22 |
| 8 | தொல்காப்பியமும் பிரயோகவிவேகமும் ... | 48 |
| 9 | சேனாவரையமும் பிரயோகவிவேகமும் ... | 82 |
| 10 | நச்சினார்க்கினியமும் பிரயோகவிவேகமும் ... | 91 |
| 11 | நன்னூலும் பிரயோகவிவேகமும் ... | 99 |
| 12 | திருக்குறளும் பிரயோகவிவேகமும் ... | 106 |
| 13 | திருக்கோவையாரும் பிரயோகவிவேகமும் ... | 150 |
| 14 | பிரயோகவிவேகம் குறிப்பிடும் அருஞ்செய்திகள் ... | 154 |
| 15 | இலக்கணக் கொத்தும் பிரயோகவிவேகமும் ... | 186 |
| 16 | இந்நூலின் காரிகைச் செய்திகள் ... | 198 |
| 17 | சுருக்கெழுத்து விளக்கம் ... | 202 |

நூல்

| | | | |
|---|---|---|---|
| 18 | காரக படலம் | ... | 1 |
| 19 | சமாச படலம் | ... | 107 |
| 20 | தத்தித படலம் | ... | 197 |
| 21 | திங்ஙுப் படலம் | ... | 229 |

பிற்சேர்க்கை

| | | | |
|---|---|---|---|
| 22 | காரிகை முதற்குறிப்பு | ... | 349 |
| 23 | உரைநூற்பா முதற்குறிப்பு | ... | 351 |
| 24 | எடுத்துக்காட்டு நூற்பா முதற்குறிப்பு | ... | 355 |
| 25 | எடுத்துக்காட்டுப் பாடல்கள் முதற்குறிப்பு | ... | 364 |
| 26 | எடுத்துக்காட்டுச் சொற்கள் | ... | 381 |
| 27 | எடுத்துக்காட்டுத் தொகைகள் | ... | 385 |
| 28 | எடுத்துக்காட்டு இருமொழித் தொடர்கள் | ... | 388 |
| 29 | எடுத்துக்காட்டுப் பன்மொழித் தொடர்கள் | ... | 392 |
| 30 | தமிழிலக்கண மரபு சொற்கள் | ... | 396 |
| 31 | வடமொழி இலக்கணச் செய்திகள் | ... | 414 |
| 32 | வடமொழி ஆசிரியரும் நூல்களும் | ... | 425 |
| 33 | வடசொல் எடுத்துக்காட்டுக்கள் | ... | 440 |
| 34 | வடமொழி இலக்கண மரபு சொற்கள் | ... | 453 |
| 35 | பிழையும் திருத்தமும் | ... | 475 |

— ★ —

# பிரயோக விவேகம்

★

## நூலாசிரியரைப் பற்றிய குறிப்புக்கள்

பிரயோக விவேகம் என்னும் பெயரிய சொல்லிலக்கண நூலை வடமொழிச் சொல்லிலக்கணத்தோடு தமிழின் சொல்லிலக்கணத்தை ஒப்பிட்டு, வடமொழி எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாதலின் அவ்வெண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஐம்பத்தொரு பாடல்களில் பெரும்பான்மையும் வடமொழி இலக்கண மரபுச் சொற்களை அமைத்து, உரைநூற்பாக்களும் எடுத்துக் காட்டுக்களும் வரைந்து, உரையும் எழுதி இயற்றித் தமிழுக்கு அரிய இலக்கண நூலொன்றைத் தந்தவரும், பதினேழாம் நூற்றாண்டில் பாண்டியநாட்டுத் திருக்குருகூரில் தோன்றி இரு மொழிகளிலும் பெரும்புலமை பெற்றுச் செய்யுள் இயற்றும் ஆற்றலும் ஒருங்கு அமையப்பெற்றவரும், அந்நூற்றாண்டில் திருவாரூர் வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கம் என்ற நூலை இயற்றிய காலத்திற்குச் சற்றுப் பின்னரும், பாண்டிநாட்டினராகிய சாமிநாததேசிகர் இலக்கணக்கொத்து என்ற நூலை இயற்றிய காலத்திற்குச்சற்று முன்னரும் இந்நூலை உரையுடன் வரைந்தவரும் ஆகிய **சுப்பிரமணிய தீக்கிதர்**, போதாயன முனிவர் மரபில் தோன்றி, நம்மாழ்வார் அவதரித்த திருத்தலத்தில் பிறக்கும் வாய்ப்புப் பெற்றமையால் இயல்பாகவே திருமாலிடத்தில் மாறாத பத்தி பூண்டு, நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் ஈடுபாடு கொண்டு, சுமார்த்த அந்தணர் ஆதலின் சிவனடி பரவுதலிலும் தவறாது, தேவாரம் முதலிய தெய்வப்பனுவல்களிலும் திளைத்து, தம் மரபிற்கு ஏற்ப வேள்விகள் பல செய்து, வடமொழிப்புலமை நிரம்பப் பெற்று, வடமொழி இலக்கணம் பற்றிய **மாபாடியம், கையடம்,**

**சித்தாந்தகௌமுதி, சத்தகௌமுதி, வாக்கியபதீயம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்தகௌத்துவம்** முதலிய நூல்களையும், காவிய நாடக அலங்கார நூல்களையும் கற்று, இதிகாச புராணங்களிலும் இலக்கண நயம் கண்டு, வடசொற் கடற்கு எல்லை தேர்ந்து, தமிழ் மொழியிலுள்ள **தொல்காப்பியம், நன்னூல், சின்னூல்,** முதலிய இலக்கணங் களையும், **திருக்குறள், திருக்கோவையார், சீவகசிந்தாமணி** முதலிய இலக்கியங்களையும் கற்றுத் துறைபோய், இரு மொழி களிலும் இலக்கண ஒற்றுமைகள் பலவாக இருத்தலைக் கூர்ந்து நோக்கி, வடமொழியில் உள்ள இலக்கணச் செய்திகள் பலவும் தமிழின்கண்ணும் உள என்பதனைத் தமிழ் வல்லார் அனைவரும் அறிந்து கோடல் வேண்டும் என்ற வேட்கையால், இரு மொழி இலக்கணச் செய்திகளையும் ஒப்பிட்டுத் தமிழறிஞர் வடமொழிச் செய்திகள் பல உணரவும், வடமொழியறிஞர் தமிழ்மொழிச் செய்திகள் பலவும் தெளிவாக அறியவும் வழிகோலிய பெருநன்று செய்தவராவர். இவருடைய பெரும்புலமையும் அருந்திறலும் நூலாராய்ச்சி முதலிய பகுதிகளில் விரித்துக்கூறப்பட்டுள்ளன.

'மாணைக்கனை ஊர்க்குப்போக்கினன் ஆசிரியன்' – என்ற எடுத்துக்காட்டினை நோக்கின், இவர் நல்லாசிரியர்பால் குருகுல வாசம் செய்து தமிழும் வடமொழியும் கற்றவராதல் பெறப்படும்.

> **ஆசிரியனோடு மாணைக்கன் வந்தான் ;**
> **ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினவினன் ;**
> **மாணைக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசிரியன் —**

என்ற எடுத்துக்காட்டுக்களை நோக்கின், மாணைக்கர் ஆசிரியரிடம் தம்பணிவு தோன்றப் பயின்று, ஐயுற்ற பொருளை வினவி அறிந்து, தவறு செய்தவழி ஆசிரியர் தரும் ஒறுப்பை விருப்பாய் ஏற்றுப் பயின்ற காலத்தவர் இவர் என்பது தெளிவாகிறது.

'அக்கிநீ இஇ – இதி' முதலிய வேதத்து மேற்கோள்களை நோக்குமிடத்து, இவர் முறையாக வேதாத்தியயனம் செய்ததோடு பொருள் உணர்ந்தும் வேதம் வல்லவராயினர் என்று உணர் கிறோம்.



பாலால் ஓமம் செய்தான், தயிரால் ஓமம்செய்தான், பஞ்ச கபாலத்தில் வறுத்த புரோடாசம், ஏகாதச கபாலத்தில் வறுத்த புரோடாசம், யூபத்துக்கு மரம், யூபதாரு, அரணிக்கண் தீ, யட்டும் யாதி, யாகாய யாதி, குண்டலத்துக்குப் பொன் முதலிய எடுத்துக் காட்டுக்களை நோக்க, இவர் கேள்வியால் சிறப்பெய்தியதோடு வேள்வியால் வீறுபெற்றுக் குண்டலமணிந்த தீக்கிதராகக் காட்சி வழங்கி, வைதிக மரபின்படி நாட்கடமைகள் செய்து வாழ்ந்தவ ராவர் என்பது காணக்கிடக்கிறது.

கும்பகடம், மருதங்வா – என்று வான்மீகம், வியாசபாரதம் இவற்றிலிருந்து காட்டப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் இவருடைய இதிகாசப் பயிற்சியைப் புலப்படுத்தும்.

இவ்வயல் உழுத அந்தணன் – உழுவித்த அந்தணன் என்ற எடுத்துக்காட்டால் இவர் பெருநிலக்கிழாராய்ச் செல்வமுட்டுப்-பாடின்றி உழுவித்துண்ணும் செல்வராக வாழ்ந்தமை தேற்றம்.

'பிரமைவ சத்தியம்' என்ற தொடரால் இவர் அத்துவைத சமயத்தைச் சார்ந்து விளங்கினர் என்பது பெறப்படுகிறது. சங்கரர் மதத்தைச் சார்ந்த இவர் சங்கராசாரியன் என்ற எடுத்துக்காட்டுத் தந்துள்ளமையும் குறித்துணரத்தக்கது.

திவ்வியப்பிரபந்த மேற்கோள்கள் பலவற்றோடு இராம லட்சுமணர், தாசரதி, சானகி, மணிவண்ணன்தமர், ராகவன், ராமராம என்ற எடுத்துக்காட்டுக்களை நோக்க இவர் திருமாலிடத்துக் கொண்ட ஈடுபாடு புலனாகிறது.

திருக்கோவையார் மேற்கோள்கள் பலவற்றோடு, முக்கண் மூர்த்திக்குப் பூவிட்டான், சிவன்தமர், சைவன், பாசுபதன், சிவ சிவ, சூலி, கபாலி முதலிய எடுத்துக்காட்டுக்களை நோக்கு மிடத்து, இவர் சிவனிடத்திலும் நல்ல ஈடுபாடுடையவர் என்பது தெளிவாகிறது.

'**பெரும்புங்கவர்**' (3) என்ற நூற்பா உரையுள் 'வட நூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வட நூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும்

செய்து, உதாரணமும் காட்டினும், தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற் போல யாமும் உரை எழுதியதல்லது மூலோதாரணமும் காட்டினும்' என்று குறிப்பிடுவதுகொண்டு இந்நூற்கு ஆசிரியரே உரை வரைந்துள்ளார் என்று பெறப்படும் செய்தியை, இலக்கணகொத்து ஏழாம் நூற்பா உரையில்,

'அன்றியும் தென்திசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை எழுதினன்' -

என்று குறிப்பிடும் செய்தி வலியுறுத்துகிறது.

தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டிநாட்டுப் புலவராகிய இவர், தஞ்சாவூரில் அரசவைப் புலவராய்ச் சரசுவதி மகாலுக்கு அணியாகத் திகழ்ந்தவரும், கலியுக பதஞ்சலி என்று போற்றப்பட்ட சான்றவரும் ஆன சீதள சந்திரமுக ராமபத்திர தீக்கிதர் முன்னிலையில் தம்நூலை அரங்கேற்ற விரும்பிய விருப்பமும், அவ்விருப்பம் முழுமையும் ஈடேறியதனால் இவர்பெற்ற மகிழ்ச்சியும் நோக்குழி, தமிழகம் முழுதும் இருந்த பெரும்புலவர்பலரும் அழுக்காறு முதலிய பண்புகளுக்கு இலக்காகாமல் புலமைக்கு உரிய உண்மையான மதிப்புக்கொடுத்து 'உவப்பத்தலைக்கூடி' த் தமக்குப் பின்தோன்றும் தமிழ்மக்களும் நீடித்த பயன்பெறுமாறு ஞானத்தொண்டு புரிந்து வாழ்ந்துவந்த அந்நூற்றாண்டுக் கற்றறிந்தோரின் மனப்பாங்கு நமக்கு நினையுந்தொறும் நினையுந்தொறும் மகிழ்வூட்டுவதாகும்.

'மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்' - என்ற தொடரை நோக்கி, இவர் பிரமசாரியாய்க் கல்வி பயின்று, இல்லறத்தவராய் வேள்வி பல செய்து, வானப்பிரத்தராய் இவ்வரிய இலக்கண நூலை இயற்றி, இறுதியில் துறவியாகி இறைவனோடு இரண்டறக் கலந்திருத்தல் வேண்டும் என்பதனையும் காண்கிறோம்.

தமிழ் இலக்கணத்தோடு வடமொழி இலக்கணத்தையும் ஒப்புநோக்கி இப்புலவர்பெருமகனார் வரைந்த இந்நூல் பிற்கால ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்கு ஒருவகையில் அடிகோலியாக அமைகிறது.

இவர்தம் பெரும்புகழ் வாழ்க !

# பிரயோக விவேகம் - மூலம்

★

[நூலுள் இந்நூற் சூத்திரங்கள், சந்தி பிரித்து, நிறுத்தக் குறியிட்டு, கற்பார் நலன் கருதி, எளிதின் உணரும்வகை பிரித்துப் பதிப்பிக்கப்படுதலால், அவற்றைப் பட்டாங்கு வாசித்தலை விரும்புபவர் பயன்கொள்ளும் வகை, அவை, ஈண்டுச் சந்திபிரித்தல் முதலிய இன்றி உள்ளவாறே அச்சிடப்படுகின்றன.]

★

## காரக படலம்

1. நீர்கொண்ட சென்னி மகேச்சுரன் பாணினி நீள்கடல்சூழ்
பார்கொண்ட கீர்த்தி வரருசி ஞான பதஞ்சலிபூந்
தார்கொண்ட வானவர் கோன்பா ரதியிவர் தாள்வணங்கி
யேர்கொண்ட சொற்பிர யோக விவேக மியம்புவனே.

2. பொற்பமர் தெய்வ மொழிப்பாகு பாடும் பொதுவெழுத்தாய்ப்
பற்பல வாகித் திரிவதுஞ் சாற்றினர் பண்டுணர்ந்தோர்
முற்பகர் நூலுட் சிறுபான்மை பேர்க்கு மொழிபெயர்த்தாந்
தற்பவந் தற்சம மேபெரும் பான்மையுஞ் சாற்றினமே.

3. பெரும்புங்க வர்புகழ் போதா யனிசுப் பிரமணிய
னரும்புங் குருகையிற் கோதில் குலோத்துங்க னாரிடமாய்
விரும்பும் பொருளைத் தரும்பிர யோக விவேகந்தன்னைக்
கரும்புங் கனியு மெனப்பா டினான்தமிழ் கற்பவர்க்கே.

4. ஆவி யெழுத்தச் சொடுசுர மாகு மவற்றின் பின்னே
மேவிய மெய்கள் விளம்புமல் லோடு வியஞ்சனமாந்
தாவி யெதிர்த்து மதர்த்தரி பாய்ந்திரு தாழ்குழைதோய்
காவி நெடுங்கட் கதிர்மதி வாணுதற் காரிகையே.

5. கூரு மிரச்சுவந் தீர்க்கம் புலுதங் குறினெடிலோ
டாரு மளபெடை வல்லினமெல்லின மாம்பரிசந்
தேரும் யரலவ வாமந்தத் தாக்கரஞ் சீர்த்தசந்தி
சாருமை யௌவுட னேயோ மயக்கங்கள் சையுத்தமே.

6. கூறிய வையிரண் டாறுெடு மூன்றுகுவ் வோடுபொருட்
டேறிய நான்குமற் றேழொடு கூடி யியைந்தநின்றே
டாறிய வின்னேந் தத்குவ் வுடையஅ ஆறில்கண்ணேழ்
தேறிய சத்த மிவற்றுள்ளு மத்தஞ் சிலவுளவே.

7. பன்னும் பகாப்பதப் பேரே பிராதி பதிகமது
துன்னுங் குறிபெற் ருெருமை யிருமை தொலேவில்பன்மை
யென்னும் பிரதமை சேர்ந்தெழு வாயென லாமிவைபோய்
மன்னும் பிறவுரு பாருெடவ் வாறு வடமொழிக்கே.

8. தேற்றுந் தமிழுக் கெழுவாய் விபத்தி திரிபில்பெயர்
தோற்றும் பிறவுரு போராறும் வேற்றுமை தோன்றிநிற்கு
மாற்றுங் கருத்தாக் கருமம் கரண மவதிகொள்வோன்
சாற்றுந் தொழிற்கிட மென்றறு காரகந் தாமுளவே.

9. பழியா வினேசெய் பவன்கருத் தாச்செயப் பட்டபொரு
ளழியாது நிற்குங் கருமங் கருவி யருங்கரண
மொழியாது கொள்பவன் சம்பிர தான மொழிபவதி
யிழியா வதிகர ணந்தா னிடமென்ப ரேந்திழையே.



10. இந்திரன் ருமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தி னீங்கிவிண் மேலிருந் தானெனலும்
வந்தருங் காரக மெல்லாம் பிறக்குமோர் வாக்கியத்துட்
சிந்துர வாணுதற் செவ்வாய்ச் குறுநகைத் தேமொழியே.

11. ஏயுங் கருமஞ் சுதந்திர மேதுவென் றெண்ணவிரிந்
தாயுங் கருத்த னபிகித மொன்றே யநபிகிதஞ்
சாயும் பிரிவி னபாதான மாகுஞ் சலமசலங்
காயுங் கதிர்வடி வேல்விழித் தேமொழிக் காரிகையே.

12. அண்ணிய கர்மத் தபிகித மொன்றே யநபிகிதந்
தண்ணிய வீச்சிதந் தன்னே டநீச்சிதந் தானிருமை
யெண்ணிய நற்கருத் தாவொ டகதித மென்ருெரைந்தாங்
கண்ணிய காலே யகம்புற மாகுங் கரணங்களே.

13. விடைய மொரோவழி மேவுத லெங்கும் வியாபகமென்
றடையவிம் மூன்று வகையான் விரியு மதிகரணம்
பெடைமயி லேயநி ராகருத் தாவும் பிரேரகமுங்
கொடையெதிர் கூற்றநு மந்தாவு மாமென்பர் கொள்பவனே.

14. ஆதிய தென்ப ரபிகித கர்த்தா வநபிகித
மாதிவிட் டாருெடு மூன்றும் பெறுமென்ப ராய்ந்துணர்ந்தோ
ராதிய தென்ப ரபிகித கன்ம மநபிகித
மாதியைந் தேயொழிந் தல்லா தனபெறு மாரணங்கே.

15. ஆருெடு மைந்தொடு மூன்ருெடுந் தோன்று மருங்கரண
மாருெடு நான்கொடு மூன்ருெடுந் தோன்று மளித்தல்
கொள்வோன்
வீருெடுந் தோன்று மைந்தன்றிப் பெருது விடுமவதி
யீருெடுந் தோன்றுங்கண் ணன்றிப் பெருதிட மேந்திழையே.

ECOLE FRANÇAISE
BIBLIOTHEQUE
PONDICHÉRY
D'EXTRÊME ORIENT

16. உடனிகழ் கின்றச கார்த்தாதி யாகு மொடுச்சொற்
கொள்வோன்
விடனிகழ் கின்றகுத் தாதர்த்தி யாதி வினைநிகழ்ச்சி
யுடனிகழ் கின்றகண் ணேசதி சத்தமி பான்மொழியாய்
கடனிகழ் வேற்றுமை தாம்வினை யான்முற்றல் காரகமே.

17. முற்றிய காரக மாங்கிரி யாசட்டி மொய்குழலாய்
பற்றியபேத மபேதமென் றுனசம் பந்தசட்டி
யொற்றிய காரக மாகாது பன்மை யொருமைவிளி
தூற்றிய சம்புத்தி சம்போ தனமெனத் தோன்றிடுமே.

## சமாச படலம்

18. மண்டலத் துப்பதி னெண்டே சிகச்சொல் வடசொல்லெனப்
பண்டை வழக்கொடு பாராட் டுரிச்சொற் பலபொருட்கே
யொண்டொடி யாய்பின் னொருமொழி யாய்மற்
றொருபொருட்கே
கொண்டியல் பன்மொழி யாய்ச்சத்தி யாற்றலுங்
கொண்டெழுமே.

19. ஆக்கிய சொற்க டகுதி யவாய்நிலை யண்மைநிலை
நோக்கிய மூன்றும் பெறச்சேர் வதுதொகை நுண்புலவோர்
வாக்கிய மும்மது தூரான் வயச்சொல் மருஉத்தொகைச்சொ
னீக்கிய கட்டுரை சார்ந்தசொ லண்மை நிலைபெறுமே.

20. தற்புரு டன்துவி குப்பல நெற்கர்ம தாரயனோ
டுற்பல வாணெடுங் கட்பசுந் தேமொழி யொண்டொடியாய்
சொற்பயி லவ்வி யயீபாவ மேனைத் துவந்தனெனக்
கற்பவர் கூறுஞ் சமாசன்க ளேதொகைக் கட்டளையே.



21. தற்புரு டத்தொகை வேற்றுமை யெட்டனுட் சார்ந்தநஞ்னுச்
சொற்பொரு ளன்மை மறையின்மை காட்டுந் தொகைத்துவிகு
முற்பத மெண்பிற் பதந்தத்தி தார்த்த முடித்துமெழூஉம்
பற்பல வேகவற் பாவி யநேகவற் பாவியென்றே.

22. முன்மொழிப் பண்பிரு பண்பு விசேடிய முன்மொழிதன்
முன்மொழித் துல்லியம் பின்மொழித் துல்லிய மொய்குழலாய்
முன்மொழிச்சம்பா வனையவ தாரண முற்றுமிவை
நன்மொழிப் பண்புத் தொகைக்கன்ம தாரய னற்றமிழ்க்கே.

23. முன்மொழிப் பேர்ச்சொ லிடைச்சொ லிரண்டு முரணிநிற்குந்
தன்மொழி யவ்வி யயீபாவ மும்மைச் சகாரத்திலே
யின்மொழித் தொந்தன் சமாகாரத் தோடித ரேதரமா
மன்மொழித் தோற்றஞ் சமுச்சயத் தோடுமன் வாசயமே.

24. இருமொழி பன்மொழி பின்மொழி யெண்ணோ
டிருமொழியெண்
டருமொழி யொற்றொழி திக்கந் தராளஞ் சகமுனிற்கு
மொருமொழி யேனை விதிகார லக்கணத் தோடுவரும்
பெருமொழி யாகி வெகுவிரி யன்மொழிப் பேரடைந்தே.

25. தற்புரு டன்துவி குக்கர்ம தாரயன் தாமுதன்மை
பிற்பத மாயெழு வாயா மொரூஉத்தொகை பெண்ணணங்கே
முற்பத மவ்வி யயீபாவ மொப்பு முறைபிறழுஞ்
சொற்பதந் தொக்கவை யெல்லா முதன்மை துவந்தனுக்கே.

26. சொன்ன தொகைக்கு ளுருபும் பொருளுந் தொகுவதெல்லா
மின்னகை யாய்மத் தியபத லோப னியைந்தசொற்கள்
பின்னரு மாகம வாதேச லோபம் பெறும்பெறுமால்
வன்ன விகாரம் விபரிய நாசம்வன் னுகமமே.

27. நித்த மநித்த மலுக்குலுக் காந்தொகை நின்றநிலை
மெய்த்த கிடக்கை முறைத்தொகைப் பாத்தம் விபரியமாம்
பொய்த்தொகை யாறுமவ் வாறினுந் தோன்றும் பொருட்
பெயர்ப்பின்
வைத்த வினைப்பெயர் தானே யுபபதம் வாணுதலே.

28. சுட்டெழுத் தாதியந் தப்பத மாகத் தொகவவற்றி
னெட்டெழுத் தொன்றல் சவன்னத்தி னீட்சிபின் னீட்சிதலைப்
பட்டுமற் றேரச் சியைந்தாற் குணமுற் பதந்திரியக்
கட்டழித் தந்தம் புணர்ந்தால் விருத்தி கனங்குழையே.

## தத்தித படலம்

29. துன்னுந் தொடர்மொழி யெல்லா மொழித்துமுற்
சொற்றனைப்போய்
மன்னும் பிரத்திய மேதத்தி தாந்தம் வழாததனைப்
பன்னும் பொழுது வலையான் முயன்றுண் பவன்வலைய
னென்னும் பகுபதப் பேராங் குறிப்புமுற் றென்றறியே.

30. சாமா னியமவ் வியம்பாவ மூன்றெனத் தத்திதன்வே
ருமா லவற்றின் விகுதியு மூன்றென லாகிநிற்குஞ்
சோமா னனத்திரு வேனள ரட்டுறு தும்மசுட்டை
சாமா னியத்தன திங்கிருத் தோடுந் தலைப்படுமே.

31. உண்ணு மதனு லுரைக்கு மிதனை யுதனொடொக்கு
மெண்ணு மதனை யிதனுக்கு நாயக னீங்கிருக்கும்
பண்ணு மதனைப் பயிலு மிதற்பல வற்றினையு
நண்ணுமென் றுத லுடையவன் மேனிற்கு நன்னுதலே.

32. வல்லா ரிளங்கொங்கை மாதே யிவற்கு மகன்மகண்மற்
றல்லா முறைவருக் கங்கிளை பத்தனென் றுதல்புறஞ்
செல்லா துடைப்பொருண் மேனிற்கு மித்தத் திதப்பொருண்மை
யெல்லாம் விசிட்டங்கொள் சாமா னியமென் றியம்புவரே.



33. பேர்கொண்ட சுட்டுப் பெயரிற் பிளந்துநில் லாவிடனு
நேர்கொண்ட வெண்சுட் டெகாரங்க ளேழொடு நின்றனவு
மேர்கொண்ட வேழ னிடப்பொருள் காட்டு மிடைச்சொற்களாந்
தார்கொண்ட பூங்குழ லாயவை யவ்விய தத்திதனே.

34. முட்டாது கூறிய பல்வகைப் பண்பின் முதனிலையுங்
கட்டான வாண்பெண் முதலிய நாமமுங் கைகலந்து
மட்டார் மலர்க்குழ லாய்தன்மை காட்டிய மையுகரந்
தட்டாம னிற்பது வேபாவ தத்திதன் றண்டமிழ்க்கே.

## திங்குப் படலம்

35. முன்னிலை யேவ லொருமைச்சொற் போலு முதனிலைக
ளின்னிலைத் தாது பகுதியென் றுஞ்செப் பிளமுலையா
யங்நிலைத் தாது சகன்மகத் தோடு மகன்மகமாய்ப்
பின்னிலை விப்பி வரிற்கா ரிதமெனப் பேர்பெறுமே.

36. பன்னிய போதறி லாதேச மென்னும் பரப்பைபத
மின்னிய கர்த்தரி நீங்காதிங் ஙந்த வினைமுற்றிலே
முன்னிய கர்த்தரி கர்மணி பாவமிம் மூன்றிடத்து
மன்னிய தங்ஙெனச் சொல்லாற் பனேபதம் வந்தெய்துமே.

37. திருநுத லாய்கருத் தாவாதி யாதலிற் சேர்ந்திறுத
லொருபெயர்ச் சொல்லெனச் சுப்பேறி நீங்க லுருபுபெறல்
பொருவரு மீற்றயற் கேரூப பேதம் பொருந்தலொடு
வருவினை முற்றுப் பெயர்தாங் கிருதந்தம் வண்டமிழ்க்கே.

38. விரிக்கும் பெயரார்த்த தாதுக மான வினைக்குறையிற்
றெரிக்குந் துவாதுமுந் செய்தென்ப தோடு செயவென்பதாந்
தரிக்குந் திலக நுதால்சதிர் கானச்சுச் சானச்சென்று
பிரிக்கும் பிரத்தியய மேநிகழ் காலப் பெயரெச்சமே.

39. நிறக்குந் துணைவினை யோர்காலத் தெய்திடு நேர்ந்தநிலை
மறுக்கும் பலவடுக் குங்கால மூன்றொடு மன்னுமுன்பின்
பிறக்குந் துவாதி சமானகர்த் தாவைப் பெறுமுற்றுமாய்ச்
சிறக்கும் பிறபின்ன கர்த்தா வொடுஞ்சென்று சேருமன்றே.

40. எடுத்தல் படுத்தல் நலிதலென் றுகு மிசையனைத்துந்
தொடுத்த வுதாத்த மநுதாத்த மேனைச் சுவரிதமா
மடுத்த கிருத்துண் முற்றெல்லா மெடுத்த லருந்திஙந்தம்
படுத்த லிரண்டு முடைத்தாஞ் சரூபம் படுந்தொடரே.

41. பகுதிக் குரிய விகரணி யீரைந்தும் பாணி செப்புந்
தொகுதிக்குரிய லகார மிடைநிலை தோயிறுதி
விகுதிக் குரியலிங் லோட்டு வியங்கோள் விதிப்பொருட்டாந்
தகுதிக் குரிய கிருத்தியம் வேண்டும் தகும்படுமே.

42. அடைமொழி யாந்தொகை தத்திதன் காரக மாஞ்சுபந்த
நடைமயி லேவினை யெல்லாந் திஙந்தநற் றுதுவினை
புடைபரந் துந்தனைச் சொற்பெயர் பாவம் பொதுவினிற்கு
மிடைநிலை யாருண்டில் வேறெச்ச மவ்யய மென்றறியே.

43. காலத் திரயம் புருடத் திரயம் கலந்தலிங்கச்
சீலத் திரயம் வசனத் திரயஞ் சிறந்தவற்றுட்
கோலப்பெண் ணுணலி யென்றிவை யாகுங் குறிவசன
நீலத் தடங்கணல் லாயெழு வாய்க்கு நிகழ்த்தினவே.

44. பூதத் தொடுவர்த்த மானம் பவிடியம் போதுவயி
ஞேதத் தகைய பிரதம மத்திம முத்தமமா
மேதக்க சேட மிலேசம் பகுதிப் பொருள்விகுதி
மாதர்ச் சுவார்த்தமென் றேடாப வாதம் வழுவமைப்பே.



45. வினைப்பெய ரோடவ் யயமாங்கை யாதி மிடைந்துநின்ற
தனைப்பெய ரிட்ட துபசர்க்கஞ் சுட்டினுட் டானகரத்
தினைப்பெய ரிட்டது தற்சத்தம் யற்சத்தம் யாவெகர
முனைச்செயப் பாட்டு வினைபாவ கன்மணி மொய்த்தயக்கே.

46. ஆயு மலந்த மசந்த மலாதி யசாதியிவை
மாயுமெய் யீறுயி ரீறுயி ராதி மதிநுதலாய்
தோயுமெய் யாதி சமத்தம் வியத்தந் தொகைவிரிமற்
றேயும் பிரேரணை செய்யா யெனல்செய் யெனக்குன்றுமே.

47. சின்மயஞ் சார்ந்ததத் தம்பொரு ளின்றிச் சிலபதங்க
ளன்வயஞ் சம்பந்தந் தாற்பரி யத்தோ டநுபபத்திச்
சொன்மயந் தோன்றப் பொருள்வே றுணர்த்திற் றுடியிடையாய்
தன்மயஞ் சார்ந்த விலக்கணை யாமென்பர் தார்க்கிகரே.

48. மருளறு காரணங் காரியம் பேரொடு வந்துறழு
மிருளறு மொண்குணப் பேர்குணிப் பேர்வினை யோடியையும்
பொருள்வினை மற்றோர் பொருளினுந் தோன்றும் புலத்தொடுமாந்
தெருளுறு பண்பு புலனிவை மாறியுஞ் சேர்ந்திடுமே.

49. சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறிற் றிணைபா லுணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை பேர்க்கெழு வாயுருபுந்
தேற்றிய லிங்க மொருமூன்று மில்லை செழுந்தமிழ்க்கே.

50. ஆக்கும் பிரதி பதத்துட னேயழி யாநிருத்தி
நோக்கும் படியச் சனைய வுதாரண நோக்கினர்சீர்
தூக்கும் பொழுதரி தாவதொன் றில்லைசொல் லாதனவுங்
காக்குந் திறங்கண்டு காப்பது வேகடன் கற்றவர்க்கே.

51. *சீதள* சந்த்ர முகராம பத்திர தீக்கிதர்க்குப்
போதொடு சென்று புகல்வோ மவர்க்கும் பொழுதில்லையேன்
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்தன்னைப்
பேதமி லாத பதஞ்சலி பாற்சென்று பேசுவமே.

---

## நூல் அரங்கேற்றம்

பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்ரு – னேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கா லென்.

## நூலாசிரியர் பெருமை

உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை
யைம்பத் தொருகவிதை யாலுரைத்தான் – செம்பொற்சீர்
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப் பிரமணிய
னென்னு மொருவே தியன்.

பிரயோக விவேக மூலம் முற்றும்.

★

# உரை நூற்பாக்கள்

★

*[ பிரயோக விவேக நூலாசிரியர் தம் நூற்குத் தாமே இயற்றிய உரையில் பல உரைச் சூத்திரங்களை வரைந்துள்ளார். அவற்றை நன்கு உணரின் நூற்பொருளை எளிதின் அறியலாம் ஆதலின் அவை ஈண்டுத் தொடர் எண்ணும், அவை வந்துள்ள நூற்பா எண்ணும் இட்டுத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ]*

★

## காரக படலம்

| தொடர் எண் | | பி. வி. நூ. எண். |
|---|---|---|
| 1 | பிரதிக் கினைமேற் கோள்எனப் பெயர்பெறும் | 2 |
| 2 | சிறுபான்மை யேஏக தேசம் ஆகும் | 2 |
| 3 | பிராயிகம் பெரும்பான்மை பேசுங் காலே | 2 |
| 4 | தேசிகச் சொல்லொடு செறிவட மொழியினைத் தற்சமம் தற்பவம் தாமென மொழிப | 2 |
| 5 | பிராசீனர் முன்னோர்; ஆதுநிகர் பின்னோர் | 2 |
| 6 | பாயிரம் நாந்தி பதிகம் என்ப | 3 |
| 7 | குறியே சமிக்கை கூறுங் காலே | 4 |
| 8 | இயற்கை சகசம்; செயற்கைஆ கந்துகம் | 5 |
| 9 | அகர இகரம்ஏ காரம் ஆகும் | 5 |
| 10 | அகர உகரம்ஓ காரம் ஆகும் | 5 |

| தொடர் எண் | | பி. வி. நூ. எண். |
|---|---|---|
| 11 | இகார உகாரம் என்னும் இவற்றோடு<br>அகாரம் ஐஔ ஆகலும் உரித்தே | 5 |
| 12 | அருத்தவத் அதாது: அப் பிரத்தியயம் ஆகித்<br>திருத்தக நிற்பது பிராதி பதிகம் | 7 |
| 13 | ஏவுதற் கருத்தா பிரயோ சகனே ;<br>இயற்றுதற் கருத்தா பிரயோச் சியனே | 11 |
| 14 | நிலைத்திணை அசலம்; இயங்குதிணை சலமே | 11 |
| 15 | சொல்லப் படுநிலை சொல்லப் படாநிலை<br>அபிகிதம் அநபி கிதம்என மொழிப ;<br>தெரிநிலை தெரியா நிலையென வும்பெறாஉம் | 11 |
| 16 | ஈச்சிதம் தன்னோடு அநீச்சிதம் தாமே<br>கருத்துள் வழிஇல் வழிச்செயப் படுபொருள் | 12 |
| 17 | துணைநிலை அகதிதம், துகன்மகம் என்பர் | 12 |
| 18 | இயற்றப் படுவது நிருவர்த் தியமே | 12 |
| 19 | வேறு படுக்கப் படுவது விகாரியம் | 12 |
| 20 | பிராப்பியம் எய்தப் படுவதென்று இசைப்பர் | 12 |
| 21 | அப்பியந் தரமே, பாகியம் என்னச்<br>செப்பிய கரணம் அகம்புறம் ஆகும் | 12 |
| 22 | விடயம் உரிமை விளம்புங் காலே | 13 |
| 23 | ஒரோவழி மேவுதல் உபச்சி லேடம் | 13 |
| 24 | வேற்றுமை நயத்தால் வேறே ஆயினும்<br>ஒற்றுமை நயத்தால் ஒன்றுஅபி வியாபகம் | 13 |
| 25 | வீப்பிசை என்ன விளம்புவர் தொறுவே | 16 |
| 26 | கம்மிய மானம் குறிப்புஎனல் ஆகும் | 16 |
| 27 | சுரூய மாணம் தெரிநிலை ஆகும் | 16 |



| தொடர் எண் | | நூற்பா எண் |
|---|---|---|
| 28 | பிரதா னத்தோடு அப்பிர தானம்<br>தலைமைப் பொருளொடு தலைமைஇல் பொருளே | 16 |
| 29 | ஆக்கம் சன்என்று அறைந்தனர் புலவர் | 16 |
| 30 | விதிஅநு யோகி மறைபிரதி யோகி | 16 |
| 31 | பன்மை ஒருமைசம் புத்திசம் போதனம் | 17 |
| 32 | பேதம் சாமா னியம்பரி யாயம் | 17 |
| 33 | சமவாய சம்பந்தம் சினைகு ணம்தொழில்<br>சாதி விகாரம் எனஐந்து ஆகும் | 17 |
| 34 | சையோக சம்பந்தம் பொருள்இடம் காலம்<br>எனமூ வகையாம் என்மனார் புலவர் | 17 |
| 35 | கிழமைசம் பந்தம் கிளக்குங் காலே | 17 |
| 36 | இவ்விரண்டு அல்லவை சரூபம் ஆகும் | 17 |
| 37 | சரூபம்யா தானும்ஓர் நிமித்தம் ஆகும் | 17 |

## சமாச படலம்

| | | |
|---|---|---|
| 38 | நாநார்த்தகமே பலபொருள் ஒருசொல்<br>சமாநார்த் தகமே ஒருபொருட் கிளவி | 18 |
| 39 | சத்திசங் கேதம் போடம் ஆற்றல் | 18 |
| 40 | துன்னரும் எழுத்துச் சொற்றொடர் ஆற்றலை<br>வர்ணபத வாக்கிய போடம் என்பர் | 18 |
| 41 | தகுதி அவாய்நிலை அண்மைநிலை முறையே<br>யோக்கியதை ஆகாஞ் சிதைஆ சத்தி ;<br>சந்நிதி மற்றும்ஆ சத்தி யாகும் | 19 |
| 42 | தத்அபா வம்தத் அந்நியம் தத்விருத்தம்<br>எனமூன்று ஆகும் நஞ்ஞுதற் புருடன் | 20 |



ÉCOLE FRANÇAISE
BIBLIOTHÈQUE
PONDICHÉRY
D'EXTRÊME ORIENT

| தொடர் எண் | | நூற்பா எண் |
|---|---|---|
| 43 | பொருள் நிறை அளவொடு புணர்பின் மொழியுடன்<br>மருள்அறு துவிகு வழங்கவும் பெறுமே | 21 |
| 44 | முன்மொழிப் பண்பு விசேடண பூர்வம் | 22 |
| 45 | இருமொழிப் பண்பு விசேட ஞேபயம் | 22 |
| 46 | முன்மொழி விசேடியம் விசேடிய பூர்வம் | 22 |
| 47 | முன்மொழித் துல்லியம் உபமா பூர்வம் | 22 |
| 48 | பின்மொழித் துல்லியம் உபமோத் தரபதம் | 22 |
| 49 | சம்பா வனையவ தாரணம் முறையே<br>எண்ணம் தேற்றம் எனப்பெயர் பெறுமே | 22 |
| 50 | நீயான் என்னும் உம்மைத் தொகையினும்<br>நீஅவன் யான்எனும் உம்மைத் தொகையினும்<br>அவன்நீ என்னும் உம்மைத் தொகையினும்<br>இறுதி பன்மை எய்தி ஏனவை<br>இற்று நிற்பது ஏக சேடனும் | 23 |
| 51 | ஆதி உதாத்தம் அன்மொழித் தொகைபெறும் | 24 |
| 52 | அந்த உதாத்தம் அல்லவை பெறுமே | 24 |
| 53 | வத்திரு விவட்சை விவட்சா தீனம்<br>உரைப்போர் குறிப்புஎன்று உரைத்தனர் புலவர் | 26 |
| 54 | மிகலே ஆகமம், கெடமிகல் ஆதேசம்,<br>கெடுதலே லோபம் கிளக்குங் காலே | 26 |
| 55 | தானப் பிரயத் தினத்தால் ஒக்கும்<br>இனஎழுத்து எல்லாம் சவன்னம் என்ப | 26 |
| 56 | முயற்சி பிரயத் தினம்என மொழிப | 28 |



| தொடர் எண் | | நூற்பா எண் |
|---|---|---|
| | **தத்தித படலம்** | |
| 57 | உடையான் திரவிய விசிட்டன், விசேடியம் | 31 |
| 58 | உடைப்பொருள் விசிட்டத் திரவியம், விசேடம் | 32 |
| 59 | உடைமை விசிட்டம் ஒருபொருட் கிளவி | 32 |
| 60 | பாவம் தன்மை பகருங் காலே | 34 |
| | **திங்ஙுப் படலம்** | |
| 61 | வி–பி ணிச்அந்தம், காரிதம் ஆகும் | 35 |
| 62 | செயப்படு பொருள்குன் றுவினை, குன்றிய<br>வினைத்திறம் இரண்டும் சகன்மகம், அகன்மகம் | 35 |
| 63 | பெயர்அடி யாகப் பிறந்த வினையினைச்<br>சுப்புத் தாதுவெனச் செப்புவர் புலவர் ;<br>நாம தாதுவென நவில்வதும் அதுவே | 35 |
| 64 | அந்நிய கர்மணிக் கிரியா பலத்தைப்<br>பயப்பது பரப்பை பதம்என மொழிப | 36 |
| 65 | கர்த்திரு கர்மணிக் கிரியா பலத்தைப்<br>பயப்பது ஆற்பனே பதம்என மொழிப | ు6 |
| 66 | தனக்குப் பிறர்க்குஎனத் தான்வரும் நியமம்<br>ஏகபதிக்கு இன்மையின் இடுகுறி என்ப | 36 |
| 67 | ஸ்ரீத்துச் சுவரிதேத்து என்னும் இரண்டினும்<br>உபய பதிக்கும் ஒரோவழி நியமம்<br>மயங்கலின் காரணக் குறிஎனில் வழுவே | 36 |
| 68 | குற்றெழுத்து இறுதி, குற்றெழுத்து ஈற்றயல்<br>பரப்பை பதம்எனப் பகர்ந்தனர் புலவர் | 36 |
| 69 | நெட்டெழுத்து இறுதி நெட்டெழுத்து ஈற்றயல்<br>ஆற்பனே பதம்என்று அறைந்தனர் புலவர் | 36 |

| தொடர் எண் | | நூற்பா எண் |
|---|---|---|
| 70 | செயப்பாட்டு வினையொடு சேரில்ஈர் இறுதியும் | |
| | ஆற்பனே பதம்என்று அறைந்தனர் புலவர் | 36 |
| 71 | தனித்தனி வருவது ஏக பதியே ; | |
| | ஒருமுதல் நிலையில் ஈர்ஈற்று அயலும் | |
| | வரின்அஃது உபய பதிஎன மொழிப | 36 |
| 72 | அதிதேசம் விபதேசம் ஆம்மாட் டெறிதல் | 37 |
| 73 | உபதை ஈற்றயல் ஒருபொருட் கிளவி | 37 |
| 74 | செயப்பாட்டு எச்சமும் செயப்படு பொருளும் | |
| | நயக்காம் என்பர் நற்கிரு தந்தம் | 37 |
| 75 | வினைமுதல் கருவி அனைமுதல் இரண்டொடும் | |
| | மூன்றாம் வேற்றுமை தோன்றாது அதற்கே | 37 |
| 76 | ஒரோவழி யக்கும்அவ் வுருபும் வரப்பெறும் | 37 |
| 77 | ஆர்த்த தாதுகம் ஆம்ஈ ரெச்சமும் | 38 |
| 78 | சார்வ தாதுகம் தாம்வினை முற்றே | 38 |
| 79 | விச்சி ராந்திபெரு(து) ஆர்த்த தாதுகம் | 38 |
| 80 | சார்வ தாதுகம் தாம்அது பெறுமே | 38 |
| 81 | செய்யாச் செய்யூச் செய்புஎன் எச்சம் | |
| | கமுனோ ணமுலே அப்பெனல் ஆகும் | 38 |
| 82 | எனஎன் எச்சம் இதிஎனல் ஆகும் | 38 |
| 83 | செயின்செய் தாலெனச் செப்பும் இரண்டினை | |
| | யதிசேத் தென்பர் அறிந்திசி னோரே | 38 |
| 84 | நுவிலே செய்யிய என்னும் அதுவே | 38 |
| 85 | தப்பிரத் தியயமும் சப்பிரத் தியயமும் | |
| | இறப்புஎதிர்வு உணர்த்தும் பெயரெஞ்சு கிளவி | 38 |
| 86 | சமான கருத்தா ஒருவினை முதலே | |
| | பின்ன கருத்தா வேறுவினை முதலே | 39 |



| தொடர் எண் | | நூற்பா எண் |
|---|---|---|
| 87 | பிரசயம் விலங்கல் பேசுங் காலே | 40 |
| 88 | முதல்நிலைப் பின்னரும் இடைநிலை முன்னரும் | |
| | மேவிய எழுத்தே விகரணி என்ப | 41 |
| 89 | தவ்வியம் இக்குத் தவ்வியம் அநியம்என்று | |
| | இவ்வகை மூன்றும் கிருத்தியப் பிரத்தியயம் | 41 |
| 90 | அஆ உஈ எனும்நான்கு உயிரும் | |
| | தைகு என்னும் உயிர்மெய் மூன்றும் | |
| | விகரணி உயிர்சில மெய்ஊர்ந்து வருமே | |
| | ஏனை மூன்றும் ஈண்டில என்ப | 41 |
| 91 | குறியே லிங்கம் கூறுங் காலே | 43 |
| 92 | மிகுதி குறைஒப்பு எனவரூஉம் மூன்றும் | |
| | உபசயம் அபசயம் சமம்எனல் ஆகும் | 43 |
| 93 | இலேசம் மிகையே லவம்என மொழிப | |
| | வெகுளக் கிரகணம் என்பதும் அதுவே | |
| 94 | குறையே சேடம் கூறுங் காலே | 44 |
| 95 | பிரேரணை ஏவல் பேசுங் காலே | 46 |
| 96 | சேதனன் உயர்திணை அஃறிணை அசேதனம் | 49 |
| 97 | நிருவசனம் நிருத்தியென இருவகை வசனமும் | |
| | சொல்லின் முடியும் இலக்கணத் தனவே | 50 |
| 98 | ஈறு தோன்றிய சாதி ஒருமையும் | |
| | ஈறு தோன்றாத சாதி ஒருமையும் | |
| | எனஇரு திறப்படும் இருதிணை மருங்கினும் | 50 |

★

# நூலமைப்பு

★

தமிழின் சொல்லிலக்கணத்தை வடமொழியின் சொல்லிலக்கணத்தோடு ஆய்ந்து உணர்த்தும் **பிரயோக விவேகம்** என்ற அரிய நூல், **காரக படலம், சமாச படலம், தத்தித படலம், திங்குப் படலம்** என்ற நான்கு இயல்களை உடையதாய், ஐம்பத்தொரு கட்டளைக் கலித்துறைகளால் ஆக்கப்பெற்றது. வடமொழி மரபு பற்றிய இலக்கணப் பெயர்களே பெரும்பான்மையும் நூற்பாக்களில் சுட்டப்பட்டுள்ளன. வடமொழி மரபுச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்கள் முதலியன உரைநூற்பாக்களில் ஆங்காங்குத் தரப்பெற்றுள்ளன. செய்திகள் பெரும்பான்மையும் தொல்காப்பிய நூற்பாக்களையும், சிறுபான்மை நன்னூல், நேமிநாதம் இவற்றின் நூற்பாக்களையும் கொண்டு விளக்கப்பெற்றுள்ளன.

தொல்காப்பிய உரையாசிரியர்களில் **சேனாவரையரே** பல இடங்களிலும் குறிப்பிடப்படுகிறார். **நச்சினார்க்கினியர், உரையாசிரியர், கல்லாடர்** முதலியோர் கருத்துக்களும் இயைபுபட்டுழிச் சுட்டப்பட்டுள்ளன. **பரிமேலழகர்** கருத்துக்களும், திருக்கோவையாருக்கு உரைவரைந்த **பேராசிரியர்** கருத்துக்களும் ஆட்டாண்டு இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டுக்களில் **திருக்குறள், திருவாய்மொழி, திருக்கோவையார், சீவகசிந்தாமணி** என்பனவே பெரும்பான்மையும் உள்ளன. தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் தமிழ் எடுத்துக்காட்டுக்களோடு வடமொழி எடுத்துக்காட்டுக்களும் தரப்பெற்றுள்ளன. செய்திகள்



ஒரோவழி உலகியல் எடுத்துக்காட்டுக்களாலும் விளக்கப் பெறுகின்றன. வடமொழிக்கே உரிய செய்திகளும், தமிழுக்கே உரிய செய்திகளும் பல இடங்களில் வரையறுத்து உரைக்கப்பட்டுள்ளன. வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பெரும்பான்மையும் இலக்கணம் ஒன்றே என்ற எண்ணங்கொண்ட பெரும்புலவர்களுள் ஒருவராகிய இந்நூலாசிரியர், தாம் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் வளர்ந்துவந்த அக்கருத்தை இந்நூலில் பெரும்பான்மையும் விளக்கியுள்ளார்.

சொல்லிலக்கணமே வடமொழி வியாகரண நூல்களில் பரக்கக் கூறப்பட்டிருத்தலின், தாமும் வடமொழிச் சத்தசாத்திரத்தைத் தமிழோடு ஒட்டிக்கூறும் எண்ணம் கொண்டுள்ள ஆசிரியர், வடமொழியில் இலக்கணப் பேராசிரியர்களாகிய **பாணினி, வரருசி, பதஞ்சலி, இந்திரன்** இவர்களையும், தம் தமருகத்தின் ஒலியால் உயிர், மெய் ஆகியவற்றின் ஒலியை வெளிப்படுத்தி மாகேசுவர சூத்திரத்தை அருளிச்செய்த **சிவபெருமானையும், நாமகளாகிய தெய்வத்தையும்** வணங்கிப் பிரயோகவிவேக நூலினை இயற்றத் தொடங்குகிறார்.

தமிழ் இலக்கண ஆசிரியர்களாகிய தொல்காப்பியனார், நன்னூலார் முதலாயினார் தமிழில் வடமொழி இலக்கணத்தைத் தம் காலத்திற்கு ஏற்றவாறு கூறித் தம் நூலுள்ளே எழுத்திற்கும் சொல்லிற்கும் காரணக்குறி இடுகுறியாகிய வடசொற்களைச் சிறு பான்மை குறிப்பிட்டனர். ஆனால் ஆசிரியர் தம் நூலுள்ளே வடமொழிப் பெயர்களைப் பெரும்பான்மையும் பயன்படுத்தித் தமிழ்ப் பெயர்களைச் சிறுபான்மையே பயன்படுத்தும் தம் கருத்தை வெளியிடுகிறார். இந்நூற்பா உரையில் தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள வடமொழிப் பெயர்ச் சொல் பட்டியலும், நன்னூலார் எழுத்திலும் சொல்லிலும் குறிப் பிட்டுள்ள வடமொழித் தற்சம தற்பவக்கூறுகளும், பிற்காலத்தில் வடசொற்கள் தமிழ்ச் சிறப்பு எழுத்துக்களாகிய றனழளஒ என்ற ஐந்தானும் திரியுமாற்றிற்கு எடுத்துக்காட்டுக்களும், பாகதம்

தமிழில் வழங்குமாறும், புதியன புகுதல் இலக்கணத்தில் பயன் படுத்தப்பட்டவாறும் இடம் பெற்றுள்ளன. வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்யும் மரபை ஒட்டித் தாமே பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டும் ஆசிரியர், சம்பந்தர் சடகோபர் முதலாயினர் மரபினை ஒட்டித் தம்மைப் பிறர் போலக் கூறும் நாந்தியில் திருக்குருகூரில் போதாயனர் மரபில் தோன்றிய தாம் பிரயோக விவேகத்தைத் தமிழ் வல்லார் உணருமாற்றான் தமிழ் மொழியில் கரும்பும் கனியும் எனப் பாடியுள்ள செய்தியைக் குறிப்பிடுகிறார்.

உயிர் எழுத்துக்களெல்லாம் அச் என்றும் சுரம் என்றும், மெய் எழுத்துக்களெல்லாம் அல் என்றும் வியஞ்சனம் என்றும் பெயர்பெறும் என்று குறிப்பிடும் ஆசிரியர், உரையில் அச், அல் என்பன பிரத்தியாகாரம் என்பதனையும், மெய்யுட்சில மகாப் பிராணன் என்றும் சில அர்த்தப்பிராணன் என்றும் சில அற்பப் பிராணன் என்றும் பெயர் பெறும் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.

குறில் இரச்சுவம் என்றும், நெடில் தீர்க்கம் என்றும், அளபெடை புலுதம் என்றும், வன்மையும், மென்மையும் பரிசாக்-கரம் என்றும், இடையினம் ஆகிய யரலவ என்ற நான்கும் அந்தத் தாக்கரம் என்றும், ஏஓஐஔ நான்கும் சந்தியக்கரம் என்றும், இடைநிலை மெய்மயக்கம் சையுத்தம் என்றும் சையோகம் என்றும் பெயர் பெறும் என்பதனைக் குறிப்பிடும் ஆசிரியர், உரையில், 'மென்மை அநுநாசிகம் என்று பெயர்பெறும், சையோகம் ஒருமொழி தொடர்மொழி இரண்டினும் கொள்ளற்பாலது, வடமொழியில் புலுதம் மூன்று மாத்திரை கொண்ட தனி எழுத்து, அதற்குத் தனியே பொருள் இல்லை, அஃது ஓசையை நிரப்பவே வருகிறது, அஃது உலகவழக்கில் சேய்மைவிளி முதலியவற்றில் வருகிறது, குறில் நின்ற இடத்தும் அளபெடை வரும் என்பது தொல்காப்பியனருக்கும் உடன்பாடு, தமிழில் இசை விளி பண்ட மாற்று ஆதியில் வருவது இயற்கை அளபெடை, காரியம் உள்வழி



வரும் அசைநிலைஅளபெடை செயற்கைஅளபெடை, உவாஅப் பதினான்கு முதலிய எழுத்துப்பேறுகள் 'குன்றிசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்' காரியம் இல்வழி வந்த புலுதச்சந்தி, ஏஓஐஔ என்பன சந்தியக்கரமாதல் தொல்காப்பியனருக்கும் உடன்பாடு, போலி எழுத்துக்களாகிய ஐஔ எதுகை நிமித்தம் ஈரெழுத்துக்களாகக் கொள்ளத்தக்கன, போலி எழுத்துக்களையும் கொள்ளுதல் வேண்டும், இயற்கை ஆயிரம் என்ற சொல் இருக்கவும் தொள்ளாயிரம் என்புழி வருமொழி நூறு திரிந்த ஆயிரம் என்ற சொல்லும் கொள்ளப்பட்டமைபோல இயற்கை ஐகார ஔகாரங்கள் இருப்பவும் போலி ஐகார ஔகாரங்களும் கொள்ளத்தக்கனவே'--முதலிய கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

வேற்றுமை உருபுகள் ஐ, ஆன் – ஒடு, கு, இன், அது – அ, கண் என்பன எனவும், வேற்றுமை உருபின் பொருள்பட வருவன பொருட்டு, நின்று, மேல்நின்று, கு, (அது என்பதன் பொருளது) உடைய, கால், புறம், அகம் முதலியன எனவும் குறிப்பிடும் ஆசிரியர், உரையில், உவம உருபுகள் சார்த்தி எனப்படும் என்றும், உவம உருபுகளின் பொருள்பட வருவன ஆர்த்தி எனப்படும் என்றும், ஏழன் உருபுகள் உள்ஊர் – கீழ்நீர் என மாறி நிற்றலும் உண்டு என்றும், அவை இடைக்கண் என்றாற்போல ஓர் இடத்தின் பகுதியைச் சுட்டுதலும் உண்டு என்றும், உளி, மாறு, கொண்டு என்பன மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு என்றும், வடமொழியில் வேற்றுமை உருபுகளின் பொருளை ஒட்டிச் சகார்த்தம் – தாதர்த்தியம் – துமர்த்தம் என்று பெயரிடு வதும் உண்டு என்றும் விளக்கியுள்ளார்.

'பெயர்ப் பகாபதம் பிராதிபதிகம் என்று வழங்கப்பெறும். அது ஆண்பால், பெண்பால் அலிப்பால் என்ற பால்பெற்று, ஏக வசனம் துவிவசனம், வெகுவசனம் ஆகிய முதல் வேற்றுமை உருபோடு சேர்ந்து எழுவாயாகும். ஐ முதலிய ஆறு வேற்றுமை களும் இவ்வாறே ஒருமை இருமை பன்மை என மும்மூன்றாகிப் பிராதிபதிகத்தோடு சேர்ந்து தத்தம்வேற்றுமைகளை உண்டாக்கும்'

என்று வடமொழி வேற்றுமைச் செய்தியை விளக்கும் ஆசிரியர், உரையில், உருபு ஏற்குமாற்றைத் தமிழ்ச் சொற்களைக் கொண்டு விளக்கி, வடநூலார் நிலைமொழிப் பொருளை ஒருமை, இருமை பன்மையாக்க வேண்டி எழுவாய் முதலிய ஏழு வேற்றுமைகளையும் ஒன்று மூன்றாய் இருபத்தொன்றாக்குவர் என்றும், தமிழில் எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே எனினும் வடமொழியில் எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்பதனை அறிவித்தற்கே தொல்காப்பியனார், தாமே 'நீயிர்' என்பதனை இயற்கைச் சொல்லாகச் சொல்லதிகாரத்துள் ஈரிடங்களில் குறிப்பிட்டிருந்தும், ( *174*, *188* ) நும் என்பதே பிராதிபதிகமாக, அதன் திரிபாகிய நீயிர் என்பது எழுவாய் வேற்றுமையாம் என்ற செய்தியை 'அல்லதன் மருங்கின்' (தொ. எ. *326*) என்ற நூற்பாவில் விளக்குகிறார் என்றும் குறிப்பிடுகிறார்.

தமிழுக்கு எழுவாய் வேற்றுமை திரிபு இல்லாத பெயரே; ஏனைய இரண்டு முதல் ஏழு இறுதியாகிய ஆறு வேற்றுமைகளும் தாம் பெயர்ப் பின்வரச் சேர்ந்து பெயரின் வடிவை மாற்றிவிடும். கருத்தா - கருமம் - கரணம் - கொள்வோன் - அவதி - தொழிற்கு இடன் எனக் காரகவினைகள் ஆறு வகைப்படும். இவ்வாறு குறிப்பிடும் ஆசிரியர், உரையுள், சென்ற நூற்பா பிறர் மதம் கூறியது; இந்நூற்பா தம் துணிபு உரைத்தது என்பதனையும், 'பெயர் தோன்றிய துணையாய் நிற்றலாவது உருபும் விளியும் ஏலாது பிறிது ஒன்றனோடு தொடராது நிற்கும் நிலை' என்ற சேனாவரையர் கூற்றே ஏற்புடைத்து என்பதனையும், 'பெயர் தோன்று நிலை' (*65*) என்பதற்குப் பயனிலை தோன்ற நிற்கும் நிலை என்று நச்சினார்க்கினியர் உரையாசிரியரை ஒட்டிப் பொருள் கூறுவது பொருந்தாது என்பதனையும், உருபு ஏற்ற பெயரையும் உருபையும் வேற்றுமை என்பர் என்பதனையும் விளக்கியுள்ளார்.

வினைசெய்பவன் - கருத்தா, செயப்படுபொருள் - கருமம், கருமம் செய்வதற்கு உதவும் கருவி - கரணம், கொள்பவன் - சம்பிரதானம், எல்லை - அவதி, இடம் - அதிகரணம் என்பன காரகம் ஆறினுக்கும் உரிய வடமொழிச் சொற்களாம்.



கருத்தா, சொல்லப்படுநிலை - சொல்லப்படா நிலை என இரு வகைப்படும். அவற்றுள், சொல்லப்படுநிலை கருமகருத்தா - சுதந்திரகருத்தா - ஏதுகருத்தா என மூவகைப்படும்; சொல்லப் படாநிலை ஒன்றே. அபாதானம் என்னும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள், நிலைத்திணை - இயங்கு திணை என்று இருவகைப்படும். இவ்வாறு குறிப்பிடும் ஆசிரியர், உரையுள், கருமகருத்தாவைச் சேனாவரையர் கருத்தை உட்கொண்டு விளக்கி, குணிவிருத்திகாரர் செயப்படுபொருள் குன்றிய வினையோடு வரும் கருமத்தைக் கரும கருத்தா என்று கூறுவது பாடியகாரருக்கு உடன்பாடு அன்று என்பதைக் குறிப்பிட்டு, கருவிகருத்தா - சம்பிரதானங் கருத்தா - அதிகரணங்கருத்தா என்ற பாகுபாடு பொருந்தாது என்பதனைச் சுட்டி, தேவதத்தன் சோற்றை அட்டான் என்பது சுதந்திரகருத்தா என்பதனையும், ஆசாரியன் மாணாக்கனை அறிவித்தான் முதலியன ஏதுகருத்தா என்பதனையும், தச்சனால் எடுக்கப்பட்டது மாடம் என்பது சொல்லப்படாநிலைக்கருத்தா என்பதனையும் குறிப்பிட்டு நூற்பாவில் உள்ள 'ஏயும்' என்ற மிகையால் பாவகருத்தாவையும் ஏற்று, அபாதானம் சலம் - அசலம் என இரண்டன்கண்ணும் வருவதனை விளக்கி, 'சாயும்' என்ற மிகையால் புறப் பாட்டெல்லையில் வரும் அபாதானத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

செயப்படுபொருள் சொல்லப்படுநிலை சொல்லப்படாநிலை என இருவகைத்து; இவற்றுள் சொல்லப்படுநிலை ஒன்றேயாம்; சொல்லப்படாநிலை கருத்துண்டாதல் - கருத்து இன்றாதல் - இருமையும் ஆதல் - கருத்தா ஆதல் - ஈர்உருபு இணைதல் என ஐவகைப்படும் என்று குறிப்பிடும் ஆசிரியர், உரையில், இவற்றை விளக்கும்போது, ஈருருபு இணைதலில் உள்ள இருவகைகளையும் விளக்கி, 'அண்ணிய' என்ற மிகையால் அகநிலைச் செயப்படு பொருளையும் குறிப்பிட்டு, வடமொழி மரபுகொண்டு சேனாவரையர் இயற்றப்படுதல், வேறுபடுக்கப்படுதல், எய்தப்படுதல் என்று வகுத்து விளக்கியவாற்றையும், நன்னூலார் 'ஆக்கல் அழித்தல்' முதலாகப் பகுத்தவாற்றையும் நினைவுறுத்துகிறார், இதே

நூற்பாவுள் கருவியை அகக்கருவி புறக்கருவி என இருவகைப் படுத்திக்கூறும் தம் உரையுள் அவற்றை விளக்கிக் கருவிபோல வரும் சிலவற்றை ஏதுவில் அடக்கி, காரகஏது - ஞாபகஏது என்பனவற்றை விளக்கியுள்ளார்.

அதிகரணத்தை உரிமை - ஒரோவழிமேவுதல் - எங்கும் மேவுதல் என்று மூவகைப் படுத்தியும், கொள்பவனை அநிராகர்த்திருசம்பிரதானம் (கேளாது ஏற்றல்) பிரேரக சம்பிரதானம் (கேட்டே ஏற்றல்) அநுமந்திரு சம்பிரதானம் (விருப்பாய் ஏற்றல்) என மூவகைப்படுத்தியும் குறிப்பிடும் ஆசிரியர், உரையுள், இவற்றை எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக விளக்கும் செயல் கற்பாருக்குப் பெரிதும் தெளிவு தருவதாகும்.

காரகபதம் பல உருபுகளோடும் வருதலைக் கூறத்தொடங்கி, சொல்லப்படுநிலைக்கருத்தா முதல்வேற்றுமையோடும், சொல்லப் படாநிலைக்கருத்தா மூன்றுவதனோடும் ஆறுவதனோடும், சொல்லப்படுநிலைக்கருமம் முதல்வேற்றுமையோடும், சொல்லப் படாநிலைக்கருமம் இரண்டு மூன்று நான்கு ஆறு ஆம் வேற்றுமை களோடும் வருமாற்றை நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். உரையில், 'அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம்' என்புழிக் குகரம் ஆறன் உருபு என்றும், 'ஊர்க்குச் சென்றான்' என்ற நான்காம் வேற்றுமையை வடநூலார் கர்மணிசட்டி என்பர் என்றும், 'அநபிகிதம்' என்ற சேடத்தால் இரண்டாவதனோடு ஏழாவதும் 'தூணைச் சார்ந்தான் - தூணின்கட் சார்ந்தான்' என்பதுபோல மயங்கும் என்றும், நேரே முடிக்கும் சொல்லோடு முடியாமல் 'நூலைக் குற்றம் கூறினான்' என்றாற்போல இருசொற்களோடு முடியும் உபபத விபத்தியும் நூலை - நூலது என்றாற்போல வேற்றுமை மயங்கி வரும் என்றும், கருமகர்த்தா சுதந்திரகர்த்தா ஏதுகர்த்தா மூன்றும் தெரிநிலை எழுவாய் என்றும், தெரிநிலைக் கருமம் ஒழிந்த ஐந்து கருமமும் தெரியாநிலைச் செயப்படுபொருள் என்றும், தத்தம் பொருள் வேறுபாட்டால் வேறு குறியிட்டாளுதல்



வேண்டிக் கருத்தா ஐந்து எனவும் கருமம் ஏழு எனவும் கூறுவர் என்றும் குறிப்பிடுகின்றார். மயக்கம் பற்றிய எல்லாச் செய்திகளும் தக்க எடுத்துக்காட்டுக்களால் விளக்கப்பட்டுள்ளன.

கருவி - மூன்றுவதனோடும் ஐந்தாவதனோடும் ஆறுவதனோடும் மயங்கும்; கொள்வோன் மூன்றுவதனோடும் ஆறுவதனோடும் மயங்கும். எல்லை ஐந்தாம் வேற்றுமையிலும், இடம் ஏழாம் வேற்றுமையிலும் மாத்திரம்வரும் - என்ற கருத்துக்களை நூற்பாவில் கூறும் ஆசிரியர் உரையில் இவற்றைத் தக்க எடுத்துக்காட்டுக்களால் விளக்கியதோடு, 'படலொல்லா பேதைக்கு என்கண்' (கு. 1136) என்புழிக் குகரம் ஆறன் உருபான் கரணமாய் வந்தது எனவும் தமிழில் கொள்வோன் இரண்டாவதனோடும் மயங்கும், அவதி தமிழில் இரண்டாவதனோடும் நான்காவதனோடும் மயங்கும், ஐந்தாம் வேற்றுமை நீங்கல் ஒப்பு எல்லை ஏது என்ற நான்கு பொருள்களில் வரும், இடம் இரண்டாவதனோடும் மயங்கும் எனவும் குறிப்பிட்டுப் பொருள் மயக்கம் உருபுமயக்கம் என்பனவற்றைச் சேனாவரையர் கூற்றை உட்கொண்டு விளக்கி, ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் நான்கன் உருபு வரினும் ஐந்தாம் வேற்றுமையே என்பதனையும், உருபும் பொருளும் உடன் மயங்குதலையும், செயப்படுபொருளே ஏதுவாக மயங்குதலையும், ஏழன் பொருளில் நான்கன் உருபு வருதலையும் எடுத்துக்காட்டுக்களால் விளக்கியுள்ளார்.

ஒடு ஆன் என்ற மூன்றன் உருபுகள் உடன்நிகழ்ச்சிப் பொருளில் வருங்கால் சகார்த்தத்திருதியை எனவும், நான்கன் உருபு பொருட்டு என்னும் பொருளில் வருங்கால் தாதர்த்தியே-சதுர்த்தி எனவும், ஏழன் உருபு வினை தன்னைச் சொல்லும் பெயர்ப்பின் நிற்பின் சதிசத்தமி எனவும், உருபுஏற்ற சொற்கள் பெயரைக் கொண்டு முடியாது வினையைக் கொண்டு முடியின் காரகம் ஆம் எனவும் நூற்பாவுள் குறிப்பிடும் ஆசிரியர், உரையுள், வடமொழிக்கு மூன்றும் வேற்றுமை உருபு ஒன்றே, சதி சதிசத்தமியைத் தொல்காப்பியர் வினைசெய்இடமாகிய சந்தர்ப்பம்

என்பர், ஒடு என்பது போல ஆன் என்பதும் உடன்நிகழ்ச்சிப் பொருளில் வரும், இவ்வொடு என்னும் உருபு வினையின்மை–வேறு வினை – அதனொடு மயங்கல் – ஒப்பல் ஒப்புரை – ஒப்பு – வேற்றுமை இன்மை – கொண்டு என்னும் எச்சப்பொருள் இவற்றோடும் வரும், ஆன் என்பது தொறு என்பதன் பொருட்டாயும் வரும், தாதர்த் தியே சதுர்த்தியைத் தொல்காப்பியர் அதுவாகுகிளவி – அதற் பொருட்டாதல் என்பர், அவற்குப் பகை முதலிய எடுத்துக்–காட்டுக்கள் ஆறாவதன் பாற்படும், காரகம் குறிப்பு வினையோடும் முடியும், தலைமைப் பொருளின் வினையையே தலைமையில் பொருளும் கொண்டு முடியும், மறைவினையும் விதிவினையோடு ஒத்துக் காரகமாம், நன்னூலார் ‘எல்லை இன்னும்’ (*319*) என்ற நூற்பாவினால் காரகத்தை விளக்கியுள்ளார், வடநூல் மரபுக்கு மாறாக ‘ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே’ (சொ. *91*) என்பது தொல்காப்பியர் கருத்தே ஆயினும், ‘மகன்வினை கிளப்பின்’ (தொ. எ. *353*) என்ற நூற்பா அதற்கு மாறாக அமைந்தது முதலிய செய்திகளை விளக்கியுள்ளார்.

ஆறாம் வேற்றுமையோடு வரும் என்று கூறிய குகர உருபு வினையான் முடியும் எனின், அது வினைகொண்டு முடியும் ஆறாவதாய்க் காரகமாம், கிழமைப் பொருளில் வரும் ஆறாவது தற்கிழமை – பிறிதின்கிழமை என்ற இருகூற்றதாய்ப் பெயரையே கொண்டு முடியும், ஒருமைவிளி சம்புத்தி எனவும் பன்மைவிளி சம்போதனம் எனவும் கூறப்படும் – என்று நூற்பாவில் குறிப்பிடும் ஆசிரியர், ஆறாவதன் தற்கிழமை பிறிதின்கிழமைகளை எடுத்துக் காட்டுக்களுடன் உரையில் விளக்கியுள்ளார்.

இவ்வாறு காரக படலத்தில் *17* கலித்துறைகளில் தற்சிறப்புப் பாயிரம், ஆசிரியர் மேற்கோள், நாந்தி, முதலெழுத்துக்கள், அளபெடை, மெய்மயக்கம், வேற்றுமை உருபுகள், அவற்றின் பொருள்கள், காரகத்திற்கு எடுத்துக்காட்டு, காரகம் ஆறினுக்கும் பிரதிபதங்கள், ஏழு வேற்றுமைகளின் உருபுகளும் பொருள்களும்,



பொருள் மயக்கமும் உருபு மயக்கமும், ஆறாம் வேற்றுமை காரகம் ஆதலும் ஆகாமையும், விளி வேற்றுமை வகைகள் என்பன பற்றிய பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சமாச படலம்

பதினெண் திசைச்சொற்களும் வடசொல்லும் என வழக்கத்தில் உள்ள உரிச்சொற்கள் என்னும் தனி மொழிகள், பல பொருளில் வரும் ஒரு சொல் எனவும் ஒரு பொருளில் வரும் பல சொற்கள் எனவும் இரு பகுதிப்படும்; எனவே சொல்லெல்லாம் உரிச்சொல்லாம் என்று தொடங்கும் ஆசிரியர் இந்நூற்பா உரையில் ஆற்றல், உரிச்சொல் என்ற பெயர்க்காரணம், சொல் என்பதன் இலக்கணம் பற்றிய பல கருத்துக்கள், சொல் லிலக்கணம் பற்றிச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியோர் சொற்றவை, சொல் கட்டிய வழக்கு அன்று என்பது, சொல் லெல்லாம் உரிச்சொல் என்பதன் விளக்கம், செய்யுள் வழக்கு ஆகியவற்றை விளக்கியுள்ளார்.

தனிநிலைச் சொற்கள், தகுதி – அவாய்நிலை – அண்மை நிலை என்ற மூன்றும் தோன்ற, அவ்வழிப் பொருளிலோ வேற்றுமைப்பொருளிலோ அவ்வப் பொருள்மேல் பிளவுபட்டு இசையாது தம்முள் கூடுவது தொகைநிலையாம். பிளவுபட்டு விரிந்த தொகாநிலை வாக்கியங்களும் தகுதி முதலிய மூன்றும் தோன்ற வரும். தூரான்வயம் என்னும் – ஆற்றொழுக்கும் அடிமறி மாற்றும் அல்லாத – பொருள்கோள் இலக்கணம் பெற்ற செய்யுட்கள், மரூஉத்தொகை, கட்டிய சொல், சார்ந்த சொல் என்பன அண்மைநிலையோடல்லது வாரா என்று குறிப்பிடும் ஆசிரியர், உரையில் இவற்றை விளக்குவதோடு, தூரான்–வயத்தில் பதத்தொடு பதம் பிரித்துக் கூட்டலன்றி, விகுதி, உம்மை, வேற்றுமைஉருபு, பண்பு இவற்றைப் பிரித்துக் கூட்டு–தலையும், வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச்

சொற்கள் தம்முள் கூடுவது தொகை ஆகாமை, வடமொழியில் தொகை பற்றிய கருத்துக்கள், தொகை பற்றிச் சேனாவரையர் சொற்றவை முதலியவற்றையும் நன்கு விளக்கியுள்ளார்.

தற்புருடன் என்னும் வேற்றுமைத் தொகை, துவிகு என்னும் எண்ணொடு பொருள் புணர்ந்த எண்தொகை, வெகுவிரீகி என்னும் அன்மொழித்தொகை, கருமதாரயன் என்னும் பண்புத்தொகை, அவ்வியயீபாவம் என்னும் முன்னும் பின்னும் மொழி அடுத்து வரும் இடைச்சொல்தொகை, துவந்துவன் என்னும் உம்மைத் தொகை எனத் தொகைகளை ஆறு வகைகளாக ஆசிரியர் பகுத்துக் காட்டுகிறார்.

தற்புருடன் என்னும் வேற்றுமைத்தொகை முதல் வேற்றுமைத் தொகை முதலாக ஏழாம்வேற்றுமைத்தொகை ஈறாக ஏழாவதுடன், நஞ்ஞு என்ற மறைப்பொருளில் வரும் வேற்றுமையுடன் கூட எட்டு வகைப்படும்; நஞ்ஞு என்பது அன்மை, இன்மை, எதிர் மறை என மூவகைத்து; எண்தொகை ஒரே பொருளைக் குறிக்கும் ஏகவற்பாவி என்றும் பலபொருள்களைக் குறிக்கும் அநேகவற் பாவி என்றும் இருவகைத்தாய், முற்பதம் எண்ணாகவும், பிறபதம் தத்திதார்த்தம் – பொருள் – அளவு – நிறை ஆகியவற்றுள் ஒன்றாகவும் வரும்; எனக் குறிப்பிடும் ஆசிரியர், நுனிநா என்றாற் போல முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகையை வடநூலார் மதம்பற்றி முதல்வேற்றுமைத்தொகை என்று குறிப்பிட்டு, ஏனை வேற்றுமைத்தொகைகளைத் தமிழ் வடமொழி எடுத்துக்காட்டுக்களால் விளக்கி, நஞ்ஞுதற்புருடனை வடமொழி தமிழ் மேற்கோள்களால் நன்கு விளக்கி, எண்தொகைகளுக்கு உரிய எடுத்துக்காட்டுக்கள் தந்து, அறுகால் முதலிய அன்மொழித் தொகைகள் எண்தொகை ஆகா என்பதனைச் சுட்டி, இவ்வெண் தொகையைப் பண்புத்தொகையாகக் கூறுதலும் உண்டு என்பதனை விளக்கி உரை வரைந்துள்ளார்.



பண்புத்தொகையை முன்மொழிப் பண்பு – இருமொழியும் பண்பு – முன்மொழி அடைகொளி – முன்மொழி ஒப்பு – பின் மொழி ஒப்பு – முன்மொழி எண்ணம் – முன்மொழித் தேற்றம் என எழுவகைப்படுத்தி, உரையில் தமிழ் வடமொழி எடுத்துக் காட்டுக்கள் தந்து, இனமின்றிச் செய்யுட்கண் வந்த கருமதாரயன் – சிறப்பும் பொதுவுமாகிய பெயரான் அமைந்த பண்புத்தொகை – ஒரு பொருட்கு இரு பெயர் வந்த பண்புத்தொகை – பின்மொழி ஆகுபெயர்ப் பண்புத்தொகை – ஆகியவற்றைச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் கல்லாடர் தண்டியாசிரியர் ஆகியோர் கருத்துக் களுடன் விளக்குகிறார்.

இடைச்சொல்தொகை முன்மொழிப் பெயர்ச்சொல், முன் மொழி இடைச்சொல் என இரண்டாம்; உம்மைத்தொகை ஒருமை ஈற்றான் வரும் அஃறிணை உம்மைத்தொகை, பன்மை ஈற்றான் வரும் உயர்திணை உம்மைத்தொகை என இருவகைப்படும்; உம்மை விரி எச்சஉம்மை எனவும் எதிர்மறைஉம்மை எனவும் இருவகைப்படும் – என்று காரிகையில் குறிப்பிட்டு, உரையில் இடைச்சொல்தொகை உம்மைத்தொகை பற்றிய தொல் காப்பியனார் கருத்தினையும், உம்மைத்தொகையுள் ஏனைய சொற்கள் எஞ்ச ஒருசொல் மாத்திரம் ஈறு திரிந்து அவற்றின் பொருளை உணர்த்தும் ஏகசேடபதம் பற்றிய விளக்கத்தினையும் குறிப்பிட்டுள்ளார்.

அன்மொழித்தொகை இருமொழிஅன்மொழி – பன்மொழி அன்மொழி – பின்மொழிஎண்அன்மொழி – இருமொழி எண் அன்மொழி – திசைச்சொல் பற்றிய அன்மொழி – உபசர்க்கம் முன்மொழியாம் அன்மொழி – தடுமாற்றச்சொல் அன்மொழி என எழுவகைப்படும் என்று கூறி, உரையில் அன்மொழித்தொகை புறமொழியிலேயே பொருள் சிறக்கும், அது பெயரெச்சத்தொடர் முதலிய தொகாநிலைத்தொடரிலும் வரும், தடுமாற்றச்சொல் – அன்மொழி வடமொழிக்கே வரும், பலசொல்அன்மொழி தமிழில் அடையடுத்த இருசொல்லாகவே அடங்கும், தொகைகளை

அன்மொழிப் பொருளாக்க வேண்டின் படுத்துச் சொல்லல் வேண்டும், வடநூலார் உம்மைத்தொகையில் அன்மொழி வாராது என்பர், தமிழ்நூலார் காட்டும் 'தகரஞாழல் வந்தாள்' என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழிக்கு அன்மொழியாம், தொல்காப்பியனார் 'தத்தம் பொருள்வயின்' (தொ. சொ. *115*) என்ற நூற்பாவால் ஆகுபெயருக்குக் கூறிய இலக்கணத்தைப் பாணினியார் அன்மொழிக்கு இலக்கணம் ஆக்கியுள்ளார் என்ற கருத்துக்களை விளக்கி, 'பண்புதொக வரூஉம்' (தொ. சொ. *418*) என்ற நூற்பாவிற்குச் சேனாவரையர் உரைத்த உரையையும் குறிப்பிட்டுள்ளார்.

வேற்றுமைத்தொகை - எண்தொகை - பண்புத்தொகை என்பன பின்மொழியிலும், முதல்வேற்றுமைத்தொகை முன் மொழியிலும், இடைச்சொல்தொகையும் உவமைத்தொகையும் பின்மொழி முன்மொழி தடுமாறியும், உம்மைத்தொகை இரு மொழியிலும் பொருள் சிறந்து நிற்கும். இக்காரிகையில் முன்பு கூறாத உவமைத்தொகையைக் குறிப்பிட்டுள்ளார். அஃது இரண்டாம்வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையுள் அடங்கும் என்க.

வேற்றுமைத் தொகையுள் உருபும் பொருளும் உடன் தொக்க தொகைகளும் வருதல் உண்டு; அவை இடைப்பதங்கள் தொக்க தொகை எனப்படும். தொகைச்சொற்கண் தோன்றல் திரிதல் கெடுதல் மூன்றும் நிகழும், தனிமொழி தொடர்மொழி என்ற இரண்டும் காரணமின்றியும், எழுத்துத் திரிதல், எழுத்து மாறாட்டம், எழுத்துக்கேடு, எழுத்துத்தோன்றல் என்ற நான்கு நிலையும் பெறும் என்று குறிப்பிடும் ஆசிரியர், இவற்றிற் கெல்லாம் எடுத்துக்காட்டுக்கள் பல தந்து உரிய தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி, இயைந்த சொற்கள் என்பதற்கு நச்சினார்க்கினியர் தந்த விளக்கத்தை வரைந்து, 'கோடாதசெங் கோல்' (சீவக. 7) என்ற தொடரில் செங்கோல் என்ற சொல் கோல் என்ற சொற்பொருட்டாகவே நின்றது போன்ற எடுத்துக்காட்டுக்



களும் தந்து, ஒலி எழுத்து வடிவெழுத்துப் பற்றிய சில நூற் பாக்களையும் அவை பற்றிய தம் கருத்தையும் விளக்கி உரை வரைந்துள்ளார்.

இத்தொகைகளுள் புணர்ச்சி விகாரத்தால் திரிபின்மை, உறழ்ச்சி, உருபுவிரிதல், உருபுமறைதல், பாத்தம், சொல் முன்–பின் மாறிவருதல் என்ற ஆறும் நிகழுமாற்றைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக அவற்றை விளக்குகிறார்.

தொகைகளுக்கும் அடுத்துக் கூறப்பெறும் தத்திதனுக்கும் வரும் சந்திவிகற்பமும் அவற்றின் குறியும் கூறத் தொடங்கி, நிலைமொழிஈறும் வருமொழிமுதலும் சுட்டெழுத்துக்களாய் நின்று தொகச் சுட்டெழுத்துக்கு இனமாகிய நெட்டெழுத்தொன்று பத+அம்புயம் – பதாம்புயம் என்பது போல வருதல் சவன்னத்தீர்க்கம் என்றும், தத்தம் இனம் அல்லாத நெட்டெழுத்துக்கள் கங்கா + உதகம் – கங்கோதகம் என்பது போல வருதல் குணம் என்றும், நிலைமொழி திரியத் தத்திதப் பிரத்தியயம் வந்து தசரதன்மகன் – தாசரதி என்றாற்போலப் புணர்தல் ஆதிவிருத்தி என்றும் பெயர் பெறும் என்று கூறி, உரையில் எடுத்துக்காட்டுக்கள் பல தந்து விளக்கிச் சமாச படலத்தை முடித்து அடுத்த தத்தித படலத்-துக்குத் தோற்றுவாய் செய்துள்ளார்.

இப்படலத்தில், சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாம் என்பதும், அவை ஒன்றோடொன்று அவாய்நிலை – தகுதி – அண்மைநிலை என்ற முத்திறத்தின் ஒன்றான் இணையும் என்பதும், இரண்டு சொற்கள் ஒட்டி ஒருசொல் நீர்மைப்படுதலே தொகை என்பதும், அத்தொகைகள் வேற்றுமைத்தொகை – எண்தொகை– பண்புத்தொகை – உம்மைத்தொகை – இடைச்சொல்தொகை – அன்மொழித்தொகை என்று ஆறுவகைப்படும் என்பதும், அவற்றின் வகைகளும் எடுத்துக்காட்டுக்களோடு கூடிய விளக்கங்களும், அவை பொருள் சிறந்து நிற்குமாறும், இடைப் பதங்கள் தொக்கதொகை அமையுமாறும், தொகையில் ஏற்படும் புணர்ச்சி வேறுபாடுகளும் கூறப்பட்டுள்ளன.

## தத்தித படலம்

முதற்சொல் தன்னைச் சேர்ந்த ஏனைய சொற்கள் எல்லாவற்றையும் ஒழித்துப் போய்ச் சேரும் விகுதியை உடைய சொல்லே தத்திதாந்தத்தை உடைய சொல்லாம்; அதனை விரித்துத் தொகுத்து உதாரணம் காட்டும்போது, வலையான் முயன்று உண்பவன் வலையன் என்னும் பகுபதக் குறிப்பு முற்றாகவும் பெயராகவும் வரும் என்று விளக்கி – உரையில் சேனாவரையர் கூற்றைச் சுட்டித் தொகையுள்ளும் முன் நின்ற மொழியை விடுத்துப் பின் நின்ற மொழியைக் கெடுத்து விகுதி கூட்டி முடித்தலும், பின்நின்ற மொழியைக் கெடுக்காது முற்றும் முன்நின்ற மொழியாக நிறுத்தி விகுதி கூட்டி முடித்தலும் உண்டு என்பதனையும் தெரிவிக்கிறார்.

தத்திதன் – சாமானிய தத்திதன், அவ்வியய தத்திதன், பாவ தத்திதன் என்ற மூன்று வகைத்து; அவற்றுள் சாமானிய தத்திதனுக்கு னகர ஒற்றும், ளகர ஒற்றும், ரகர ஒற்றும் டுதுறு என்ற மூன்று உயிர்மெய்யும், மகர ஒற்றும், மூன்று சுட்டிடைச் சொற்களும் ஐகாரமும் விகுதியாகும்; இவ்விகுதிகள் வினைமுற்றுச் சொற்கும் வினைமுற்றுப்பெயர்க்கும் தொழிற்பெயர்க்கும் ஈறாதலும் உண்டு; இவ்விகுதிகள் சில இடைநிலைஎழுத்துக் களோடும் சாரியைகளோடும் சேர்ந்து வருதலும் உண்டு; இந்நிலை தனிமொழிக்கே அன்றித் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் உண்டு என்று குறிப்பிட்டு எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார்.

உடையான்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் – அதனால் உண்ணல், இதனை உரைத்தல், உதனொடுஒத்தல், அதனை எண்ணல், இதனுக்கு நாயகன், ஈங்கிருத்தல், அதனைப்பண்ணல், இதனைப் பயிறல் என்பன; இவையன்றி ஈண்டு எடுத்து உரையாத பொருள்களையும் குணத்தையும் எண்ணையும் சாதியையும் அவயவத்தையும் அவற்றோடியைந்த வினைகளையும் பற்றி வரும் பொருண்மை எல்லாம் சாமானிய தத்திதன் பாற்படும். இவை



பகுதி எடுத்தல் ஓசையாகவும் விகுதி படுத்தல் ஓசையாகவும் ஒலிக்கப்படும். உரையில் இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் தரப்பெற்றுள்ளன.

உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் – மகன், மகள், முறை, வருக்கம், கிளை, இவை அல்லாத முறை, பத்தன் என்ற பொருண்மைகளில் விகுதி எடுத்தல் ஓசையாகவும் பகுதி படுத்தல் ஓசையாகவும் ஒலிக்கப்படும். உடையான்மேல் நிற்கும் தத்திதன் விசேடியத்தின்மேல் நிற்பது என்றும், உடைப்பொருள் மேல் நிற்கும் தத்திதன் விசேடணத்தின்மேல் நிற்பது என்றும் கொள்ளப்படும். உரையுள் இவற்றிற்கு எடுத்துக்காட்டும், இத் தத்திதன் அஃறிணைக்கண்ணும் வருமாறும், 'தநநுஎ' (தொ. சொ. *410*) என்னும் நூற்பாவின் சேனாவரையர் உரைக்கு விளக்கமும், நச்சினார்க்கினியர் கருத்தும், எடுத்தல் படுத்தல் ஓசை பற்றிச் சேனாவரையர் குறிப்பிட்டுள்ளதும், (*215*) குழையன் சாத்தன் முதலிய சொற்பிரிப்புப் பற்றிய நச்சினார்க்கினியர் கருத்தும், விசிட்டங் கொளல் என்பதன் விளக்கமும் இடம் பெற்றுள்ளன.

அவ்வியய தத்திதனாவது – தமிழ்மொழியில் சுட்டுப்பெயருள் பிளந்து நில்லாத இடப்பெயர்களும், எண்முதலியவை ஏழாம் வேற்றுமைப் பொருளோடு நின்றனவும் ஆகி, ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாம் – என்று குறிப்பிடும் ஆசிரியர் உரையில் எடுத்துக்காட்டாக ஆங்கு, ஈங்கு, ஆன், ஈன், யாங்கு, யாண்டு, ஒருவயின், இருவயின், பலவயின், அவ்வயின் முதலியன; அங்கண், இங்கண், அவ்வாய், ஆயிடை அங்ஙனம் முதலியன; அணித்து சேய்த்து வடாது தனாது முதலிய வினைக்குறிப்புப் பெயர்கள் – என்பனவற்றைக் குறிப்பிட்டு விளக்குகிறார். அப்பொருள் இப்பொருள் முதலியன, இடைச்சொல் பெயர்ச்சொல்லோடு சேர்ந்த தொகைச்சொல் அல்லது அவ்வியய தத்திதன் ஆகா; ஆன் என்பது ஏழன்உருபாயும், இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல்லாயும் நிற்கும்– என்பனவும் விளக்கப்பட்டுள்ளன.

பாவ தத்திதனாவது - டண்பின் முதல்நிலையோடும் ஆண் பெண் முதலாகிய பெயரோடும் மகர ஐகாரமும் சிறுபான்மை உகரமும் பொருந்தி நிற்பதாம் என்றுகூறி, உரையில், வெண்மை-செம்மை - ஆண்மை - பெண்மை - அரசனது தன்மை என்று பொருள்படும் அரசு முதலிய சொற்கள் இதற்கு எடுத்துக்காட்டு என்பதனைச்சுட்டி, தச்சனது தொழில் தச்சு என்று கொண்டால் பாவதத்திதன் ஆகும், தச்சுத்தொழிலை உடையான் தச்சன் என்று கொண்டால் சாமானிய தத்திதன் ஆகும் எனவும் இவை சொல்லுவான் குறிப்பால் உணரப்படும் எனவும் கூறி விளக்கி, பெண்மை, ஆண்மை என்ற சொற்களுக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தைக் கொண்டு, பல கருத்துக்களையும் சுட்டி இப் படலத்தை முடிக்கின்றார். பாவம் என்பதன்கண் பண்பும் தொழிலும் அடங்கும் என்க.

இப்படலத்தில், விகுதிபெற்ற பொருட்பெயர்களும், பண்புப் பெயர்களும், எண்ணுப்பொருளிலும் இடப்பொருளிலும் வரும் இடைச்சொற்கள் போல்வனவும் தத்திதாந்தச் சொற்கள் என்ற தலைப்பின் மூவகையுள் அடக்கப்பட்டுள்ளன.

## திங்குப் படலம்

வினைமுற்று விகுதியே பெரும்பான்மையும் கூறப்பெறும் இப்படலம் திங்குப்படலம் என்னும் பெயர்த்து. இதன் தொடக்கக் காரிகையில், வினை முதல்நிலைகள் - முன்னிலைஏவல் ஒருமைச் சொல்போலும் 'நட, வா, மடி.' என்று நன்னூலில் கூறிய முதல் - நிலைத் தொழிற்பெயர்களே, இவை தாது எனவும் பிரகிருதி எனவும் பெயர்பெறும், அவை செயப்படுபொருள் குன்றாத வினைப்பகுதி, செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதி எனவும், பலவகைப்படும் - என்று குறிப்பிடும் ஆசிரியர், உரையில், 'வினையின் தொகுதி' (*415*) என்ற நூற்பா உரையில் சேனாவரையர் உரைத்ததனைச் சுட்டி, நட, வா முதலியன வினைப்பகுதிகளே அன்றி ஏவல் ஒருமை வினைமுற்று ஆகா - என்பதனை விளக்கி,



நடவாய் வாராய் முதலியன விகுதி குன்றியே நட வா முதலிய ஏவல் ஒருமை வினைகள் ஆயின என்பதனைக்காட்டி, 'வழங்கியல் மருங்கின்' (*113*) என்ற நூற்பாவினைக் காட்டிச் செயப்படுபொருள் குன்றா வினையைச் சுட்டி, ஏவற்கருத்தாவின் வினை பற்றிய பல வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக்களால் விளக்கி, பிறவினை விகுதி தொக்குநிற்பதும் தொல்காப்பியனாருக்கு உடன்பாடாதலை 'உப்பகாரம்' (எ. *76*) என்ற நூற்பாவால் நிறுவி, முதல்நிலைவினை, பலவகையாய்ப் பயன்பட்டு வருமாற்றை எடுத்துக்காட்டுக்கள் கொண்டு விளக்கி, பெயர் அடியாகப் பிறக்கும் வினைகளையும் தக்க எடுத்துக்காட்டுக்களால் விளக்கி, அம்மரபு வடமொழிக்கும் உண்டு என்பதனைத் தெரித்துப் பல செய்திகளையும் விளக்கி யுள்ளார்.

'காலம் உணர்த்தும் ஆற்பனேபதம் எனப்படும் நெட்டெழுத்து இறுதி, நெட்டெழுத்து ஈற்றயலாக உடைய தெரிநிலை முற்றுக்கள் கருத்தாவிலும், செயப்பாட்டு வினையோடு கருமத்திலும் பாவத்திலும் வரும்; ஆனால் காலம் உணர்த்தும் பரப்பைபதம் என்னும் குற்றெழுத்திறுதி குற்றெழுத்து ஈற்றயலாக உடைய தெரிநிலை முற்றுக்கள் கருத்தாவில் அல்லது வாரா' என்று குறிப்பிடும் ஆசிரியர், வடமொழிப் பெயராகிய திங் என்ற பெயரை வினைமுற்று விகுதிக்குத் தமிழிற்கும் கொண்டதன் பயனாகத் தாம் கருதுவனவற்றை விளக்கி, ஆற்பனேபதம் பரப்பைபதம் என்ற வடநூல் மரபு தமிழுக்கும் ஏற்றபெற்றி பயன்படுமாற்றைத் தொல்காப்பியம் கொண்டு அறிவித்து, இவற்றிற்கு உதாரணம் காட்டி, கர்மணி பிரயோகம் பாவப் பிரயோகம் இவற்றையும் விளக்கி, எழுவாய்க்குத் தெரிநிலை-குறிப்பு வினையாலணையும் பெயர்களும் வினாப்பெயர்களும் சுட்டுப் பெயர்களும் பொருண்மை சுட்டும் வினைகளும் முடிபாக வருமாற்றையும் தெரிவித்துள்ளார்.

தமிழில் வினைமுற்றுப்பெயர் எனப்பெறும் வினையாலணையும் பெயர், உயர்திணையிலும் அஃறிணையிலும் எழுவாயாயும்,

செயப்படுபொருளாயும் தொழிற்பெயராயும் கருவியாயும் இடமாயும் வரும். உயர்திணையிலும் அஃறிணையிலும் எழுவாயிலும் செயப்படுபொருளிலும் இகர விகுதி சேர்ந்து வினையாலணையும் பெயர் தோன்றுதலும் உண்டு. நெறிக்கண் நின்றார் என்று உருபு ஏறி அது நீங்கி நெறி நின்றார் என வருதலும், உருபு பெற்றே வருதலும், செறப்பட்டார் என்ற முற்று செறப்பட்டவர் என்று திரிந்து பெயராயினாற்போல ஈற்றயல் திரிந்து வினைமுற்றுப்பெயராதலும் உண்டு. வினையாலணையும்பெயர் சொல்லளவில் செய்வினையாய் இருந்தும் பொருள் அளவில் செயப்பாட்டு வினையாதலும் உண்டு. இச்செய்திகள் உரையில் எடுத்துக்காட்டுக்களாலும் உரைநூற்பாக்களாலும் விளக்கப்பட்டுள்ளன.

பெயரெச்சம் வினையெச்சம் என்ற இரண்டும் வடமொழியில் ஆர்த்ததாதுகம் எனப் பெயர் பெறும். அவற்றுள் செய்து, செய்ய என் வினையெச்சம் இரண்டும் துவா, துமுந் எனப் பெயர் பெறும். நிகழ்காலப் பெயரெச்சம் சதிர்ப் பிரத்தியயம் என்றும் கானச்சு என்றும் பெயர் பெறும். நிகழ்காலப் பெயரெச்சங்களுள் சதிர் கருத்தாவினும், கானச்சு கருத்தாவினும் கருமத்திலும் வரும். இவ்வாறு குறிப்பிடும் ஆசிரியர், உரையில் ஏனைய எச்ச வாய்பாடுகளுக்கும் வடமொழிப்பெயர் குறிப்பிட்டு, கிருத்துவா என்பதனை துவா என வடநூலார் வழங்குவது போன்ற மரபினைத் தொல்காப்பியரும் பின்பற்றியதனைக்காட்டி, எச்சங்களை எடுத்துக்-காட்டுக்களால் விளக்கி, எச்சம் பொருளினால் முற்றுதல் தொழிற்-பெயர் பொருளினால் எச்சமாதல் என்பனவற்றைக் குறிப்பிட்டு, செய் என்பதன் அடியாகத் தோன்றிய பல சொற்களுக்கும் கிரு என்ற சொல் அடியாகப் பிறந்த வடசொற்களை எடுத்துக்காட்டி விளக்கம் தந்துள்ளார்.

செய்து என் எச்சம் பற்றிய இலக்கணம் கூறப்புக்கு, அது தன் வினைமுதல் வினையையே கொண்டு முடியும் என்பதனையும், செய முதலியன பிற வினைமுதல் வினையையும் கொண்டு முடியும்



என்பதனையும், செய்து என் எச்சம் துணைவினை ஒருகாலத்து வந்து எய்துதல் - வினை எதிர்மறுத்தல் - ஒன்று பல அடுக்கல்-வேறுபல அடுக்கல் - முக்காலங்களுக்கும் உரித்தாதல் - முன் பின்னாகப் பொருள்படுதல் - முற்றாய்ச் சிறத்தல் என்ற ஏழிலக்கணங்களை உடைத்து என்பதனையும் குறிப்பிடும் ஆசிரியர், உரையில் இவற்றை எடுத்துக்காட்டுக்களான் விளக்கியதோடு, வினைமுற்று அடுக்குதல் - பெயர் அடுக்குதல் - இரட்டைக்கிளவி-செய்துஎன் எச்சம் செயஎன் எச்சமாய்த் திரிதல் - பெயரெச்சத்தில் பிறவினை விகுதி மறைந்து வருதல் - வினையெச்சங்கள் அடைமொழிகளாகி வருதல்-பெயர்கள் அடைகளாகி வருதல் - பெயர்பல அடுக்கி ஒருவினை கோடல் - பெயரெச்சங்கள் முற்றுப் பெயராதல் - முற்று எச்சமாய்த் திரிதல் முதலிய பலவற்றையும் விளக்கியுள்ளார்.

எடுத்தல் படுத்தல் நலிதல் என்ற ஓசைவேறுபாடுகளை வடநூலார் உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்பர். வினைச் சொற்கண் பகுதியை எடுத்தல் ஓசையாகவும் விகுதியைப் படுத்தல் ஓசையாகவும் ஒலிக்க; வினையாலணையும் பெயர் முதலியவற்றில் பகுதியைப் படுத்து விகுதியை எடுத்து ஒலிக்க; எடுத்தலும் படுத்தலும் எழுத்தியல் திரியாப் பொருள் திரி புணர்மொழிக்கண் இசைத் திரிபால் பொருள் தெளிவு ஏற்படப் பயன் படுத்தப்படும் - இவ்வாறு குறிப்பிடும் ஆசிரியர், உரையுள் எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழிகளோடு பொருள் வேறுபடாது சொல் வேறுபடுவனவற்றையும் எடுத்துக்காட்டுக்களால் விளக்கி, 'சொல் வேறுபடாது பொருள் வேறுபட்ட இரட்டுற மொழிதலையும் விவரித்து, ஒரேவகை எழுத்தானும் பலசொற்களே பலபொருள் ஒருசொல் என எழுத்தொப்புமையாற் கொள்ளப்பட்டவாற்றையும் தொல்காப்பியம் சேனாவரையம் இவற்றின் துணைகொண்டு விளக்கி, சுரிதகம் என்பதன் உண்மைப் பொருள் உணர்த்தி, ஓசை பற்றிய செய்திகளை முடித்துள்ளார்.

சில எழுத்திற்கும் சிலவிகுதிகளுக்கும் குறியீடு கூறத் தொடங்கி, முதல்நிலைக்கும் இடைநிலைக்கும் இடையே வரும் விகரணிஎழுத்துக்கள் அ, ஆ, உ, ஈ; த, தை, கு – என்ற ஏழும் என்பதனையும், த, ட், ற், இன், கிறு, கின்று, ஆநின்று, ப், வ், ஆ முதலியனவாகிய இடைநிலை தோய்இறுதி ன்–ள்–ர்–ப்–மார் – து – று – அ – ஆ – வ என்ற பத்தும் என்பதனையும், வாழ்த்துதல் வைதல் வேண்டிக்கோடல் ஏவுதல் விதித்தல் முதலிய பொருண்மைக்கண்வரும் உயிரீறு ஒற்றீருகிய வியங்–கோள்விகுதி லோட்டு எனவும், விதித்தல் முதலிய பற்றிவரும் வியங்கோள் விகுதி லிங் எனவும் பெயர் பெறும் என்பதனையும், வேண்டும் – தகும் – படும் என்ற குறிப்பு வினைகள் ஒரு வினையை வற்புறுத்தற்கண் வரும் வினைவிகுதிகளாம் என்பதனையும் எடுத்துக்காட்டுக்களுடனும், பரிமேலழகர் பேராசிரியர் முதலியோர் கூற்றுக்களுடனும் விளக்கியுள்ளார்.

தொகைச்சொற்கள், தத்திதன், காரகம் என்பன உருபுகள் ஏற்கும். வினைச்சொல் எல்லாம் வினைவிகுதி ஏற்கும். முதல்நிலைத் தொழிற்பெயரும் விகுதிபெற்ற தொழிற்பெயரும் பாவபதமாகும். பொதுவாய் வரும் இடைச்சொல்லும் யார் – உண்டு – இல் –வேறு என்னும் குறிப்பு முற்றுக்களும், இருவகை எச்சங்களும் இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகி அவ்வியயமாகும் – இவ்வாறு குறிப்பிடும் ஆசிரியர் இவற்றைத் தமிழ் வடமொழி எடுத்துக்காட்டுக்களால் உரையில் விளக்கியுள்ளார்.

இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற முக்காலங்களும் முறையே பூத காலம், வர்த்தமான காலம், பவிடியத் காலமாம். படர்க்கை-முன்னிலை-தன்மை என்ற மூன்றிடனும் முறையே பிரதமபுருடன், மத்திமபுருடன், உத்தமபுருடனும். ஆண் பெண் அலி என்ற மூன்று பால்களும் முறையே புல்லிங்கம், திரிலிங்கம், நபுஞ்சக லிங்கமாம். எழுவாய்க்குரிய ஒருமை இருமை பன்மை என்ற மூன்றெண்களும் முறையே ஏகவசனம், துவிவசனம், வெகுவசனமாம். சேடம் குறை எனவும், இலேசம் மிகை எனவும் கூறப்படும். பகுதிப்பொருள் விகுதி சுவார்த்தமாய் வரும். வழுக்-காத்தல் தோடாபவாதம் எனப்படும். இவ்வாறு காரிகை இரண்டானும் குறிப்பிட்டு, வடமொழியில் பால் பற்றிய சொற்பாகுபாட்டை விளக்கி உரைத்து, இலேசம் – லவம் – வெகுளக்கிரகணம் – மிகை – அதிகம் என்பன ஒரு பொருட்கிளவி எனவும் நூனம் – சேடம் – குறை என்பன ஒருபொருட்கிளவி எனவும் மிகுதி உபசயம் எனவும் குறை அபசயம் எனவும் ஒப்பு சமம் எனவும் கூறப்படும் எனவும் கூறி, வழுவற்க வழுக்காக்க என்பவற்றைச் சேனவரையர் சொற்கொண்டு விளக்கி, காலம் பற்றிய கருத்துக்களைக்கூறி உரை விளக்கம் தந்துள்ளார்.



வினைப்பெயரோடும் வினைச்சொல்லோடும் கை, கால், தலை மேல், மீ, ஒல்லை, வல்லை, புறம், அகம் முதலிய இடைச்சொற்கள் உபசர்க்கமாக வரும். அகரச்சுட்டு முதலியனவும், எகரவினு முதலியனவும் முன்சொன்ன கருத்தை உட்கொண்டு சொல்ல உதவும் சொற்களாம். படு என்ற சொல் பெயரை அடுத்து வந்தால் 'யக்கு' எனவும், தொழிற்பெயரை அடுத்துவந்தால் 'ய' எனவும் வடமொழியில் கூறப்படும்.

மெய்யீறு அலந்தம் எனவும், உயிர் ஈறு அசந்தம் எனவும், மெய்ம்முதல் அலாதி எனவும் உயிர்முதல் அசாதி எனவும் பெயர் பெறும்; தொகைச்சொல் சமத்த பதம் எனவும், தொகாநிலைச் சொல் வியத்த பதம் எனவும் பெயர் பெறும் – எனக்குறிப்-பிட்டுப்பின், செய்யாய் என்னும் முன்னிலைஏவல் ஒருமைச்சொல் செய் எனக் குறுகிப் பொருள்தரும் என்னும் காரிகை உரையில், தொகையாவது இருசொற்கள் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டி-சைத்தலேயன்றி உருபுகளும் உம்மைகளும் உவமங்களும் நின்று அழியா என்பதை அநுவதித்து, வடநூலார் கருத்துப் பற்றிச் சேனவரையர் 'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்' (450) என்ற நூற்பாவிற்குக் கூறிய உரையை விளக்கி, நச்சினர்க்கினியர் முதலாயினர் கருத்தை மறுத்து, செய என் எச்சமும் செய்து என் எச்சமும் ஈறு குன்றி வருதலையும் சுட்டித் தம் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

சில சொற்கள் தம் நேர் பொருளை உணர்த்தாது, அந்நுவயப் பொருளையும், சம்பந்தப் பொருளையும் தாற்பரியப் பொருளையும் அறிவித்தல் இலக்கணை என்று கூறப்பெறும் - என்று பிறநூல் முடிந்தது தாம்உடம்பட்டுக்கூறும் ஆசிரியர், அந்நுவயமே பயனாக நிற்றல் - தொடர்புடைய பொருளைக் காட்டல் - நேர்பொருளை விடுத்துப் போந்தபொருளைக் காட்டுதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக விளக்கி, இது சொல்லிலக்கணம் அன்மையின் தொல்காப்பியர் இதனைப் பொருளியலுள் 'நோயும் இன்பமும்" (தொ. பொ. பொ-2) என்ற நூற்பாவில் குறிப்பிட்டதைச் சுட்டி உரை வரைந்துள்ளார்.

காரணப்பெயர் காரியப் பெயராகியும், காரியப்பெயர் காரணப்பெயராகியும், பண்பு பண்பியாகியும், பண்பின் வினை பண்பியின்வினையாகியும், ஒரு பொருளின் தொழில் அதனொடு இயைந்த பிறிதொரு பொருளின் தொழிலாகியும், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் தொழிலாகியும் வருதலையும் பண்பும் செயலும் மாறி வருதலையும் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகிறார்.

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள வேறுபாடுகள் பலவற்றில் சிறப்பாகத் திணை உணர்த்தும் வினை விகுதியும் ஆண்பால் பெண்பால் உணர்த்தும் வினை விகுதியும் வடமொழிக்கு இல்லை என்பதனையும், தமிழ்மொழிக்கு முதல் வேற்றுமை உருபும் சொல் பற்றிய பாலமைப்பும் இல்லை என்பதனையும் நூற்பாவில் சுட்டும் ஆசிரியர், உரையில் தமிழ் மொழிக்கும் ஆண்பால் பெண்பால் உணர்த்தும் வினை விகுதிகள் ஒருபால் இல்லை என்பதனையும், வடநூல் மதம்பற்றிச் சொல் பற்றிய பால்களும் தமிழில் ஒரோவழி வருதலும் உண்டு என்பதனையும் நன்கு விளக்கி, 'பல்லோர்க் குறித்த திணை நிலைக்கிளவி' (165) பற்றிய சேனாவரையர் உரையை ஏற்று, வட மொழிப் பண்புத்தொகையின் பண்புச்சொல் அமைப்பைத் தமிழ்ப் பண்புத்தொகையின் பண்புச் சொல் அமைப்போடு



பொருத்தி, இரண்டன் வேறுபாட்டையும் தெரித்து, தமிழில் தொல்காப்பியனார் கருத்துக்கு நன்னூலார் கருத்து பண்புத் தொகை பற்றிய அளவில் மாறுபட்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

நூற்புறனடையாக அமைந்துள்ள ஐம்பதாம் காரிகையில், பிரதிபதம் - ஒரு சொற்கு வாக்கியத் தொடராகப் பொருள் உணர்த்தும் நிருவசனம் அல்லது நிருத்தி - உதாரணம் - இவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் அளவில் அரிதாய் அறியத் தக்கது இந்நூலுள் சிறிதாயினும் இல்லை; இந்நூலுள் கூறாதனவற்றைக் கூறியதன்பாற் சார்த்தி உணர்த்தி அவற்றை வழுவாமல் பாதுகாத்தல் எல்லார்க்கும் முறைமையாம் என்று கூறிமுடிக்கும் ஆசிரியர், உரையில், சொல்லாதவற்றுள் சிலவாகிய வெவ்வேறு முதலிய சொல்லமைப்பு - பிறிதின் இயைபு நீக்குதல் - தன்னொடு இயையின்மை நீக்குதல் - உயர்திணைச் சாதி ஒருமை - உயர்திணைச்சாதிப்பன்மை - அஃறிணைச்சாதி ஒருமை - அஃறிணைச்சாதிப்பன்மை - புரோவாதம் - அநுவாதம் - ஒரேவினை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் குன்றாத வினையாகவும் வருதல் - இசையெச்சம் - இலக்கணை அடியாகத் தோன்றும் குறிப்பு - மாறுபாட்டிலக்கணை - உடம்பொடு புணர்த்தல் - ஆகாரியாரோபம் - அதிகாரத்தால் வருவித்து முடித்தல் - அவாய் நிலையால் வருவித்து முடித்தல் - ஒரே சொல்லைத் தனித்தனிக் கூட்டி முடித்தல் - உறழ்ச்சி - எய்தியதன்மேல் சிறப்பு - செஞ் சொல் - இலக்கணைச்சொல் - குறிப்புச்சொல் - எடுத்தோத்து - போலி - ஒப்பில் போலி - வேண்டல் - புதியனபுகுதல் முதலியவற்றை வடமொழிப்பெயர்கொண்டு சிறிது விளக்கி.

இப்பிரயோக விவேக உரையில் தோன்றும் ஐயங்களை மாபாடியம் - கையடம் - சித்தாந்தகௌமுதி - சத்தகௌமுதி -

வாக்கியபதீபம் – தாதுவிருத்தி – பதமஞ்சரி – சத்தகௌத்துவம் கற்றவரைக் கேட்டுத்தெளியுமாறு குறிப்பிட்டு.

ஐம்பத்தொன்றுவதாகிய இறுதிக் காரிகையில் இந்நூலைத் தாம் கலியுக பதஞ்சலியாய் இலக்கணப் பெரும்புலவராய்த்தம் காலத்தில் இலங்கிய இராமபத்திர தீக்கிதர் முன்னிலையில் அரங்கேற்றவேண்டும் என்ற தம் எண்ணத்தை வெளியிட்டுள்ளார்.

தனிப்பாடலில் பிரயோகவிவேக நூல் இராமபத்திர தீக்கிதர் முன்னிலையில் சிறப்பாக அரங்கேறிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இலக்கணக்கொத்து நூலுக்கு முன் எழுந்த இந்நூல் அந் நூலின் தோற்றத்திற்குப் பெரிதும் துணையாய் அமைந்துள்ளது.

★

## நூலாராய்ச்சி

★

பதினேழாம் நூற்றுண்டில் வாழ்ந்த இலக்கணப் பெரும் புலவர் மூவருள் வைத்தியநாத தேசிகர் தம் இலக்கணவிளக்க நூலினையும், இவ்வாசிரியர் தம் பிரயோகவிவேக நூலினையும் யாத்த பின்னரே, இலக்கணக்கொத்து என்ற நூலைச் சாமிநாத தேசிகர் இயற்றினர் என்பது,

'நூல்செய் தவன்அந் நூற்குஉரை எழுதுதல்' – இ. கொ. 7

(உரை நூற்பா) என்ற நூற்பாவான் தெளிவாகிறது. ஆகவே, இவ்விரு நூல்களையும் நன்கு நோக்கும் வாய்ப்புச் சாமிநாத தேசிகருக்கு ஏற்பட்டமை தேற்றம். அவர்தம் நூலின்

'பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்க' – இ. கொ. 7

என்ற நூற்பாப் பகுதி, இப்பிரயோக விவேக நூல் உரையைக் கண்டு எழுதப்பட்டதோ என்று கருதும் அளவில், இந்நூல் உரை அமைந்துள்ளது. இப்பிரயோகவிவேக உரையில் விளக்கத்தின் பொருட்டாகவும், எடுத்துக்காட்டிற்-காகவும் தொல்காப்பிய நூற்பாக்கள் 133ம், திருக்குறள் 210ம், திருக்கோவையார் பாடல்கள் 12ம் கொள்ளப்பட்டுள்ளன. அவைபற்றி முதற்கண் நோக்குவோம்.

## தொல்காப்பியமும் பிரயோகவிவேக உரையும்

### சிறப்புப்பாயிரம்

**'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'**

*என்று வருதலின், தொல்காப்பியத்துக்கு முதல் நூல் ஐந்திரம் என்க.* —*பி. வி. 1*

**'வடவேங்கடம் தென்குமரி'**

**'நிலந்தரு திருவிற் பாண்டியன்'**

**'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'**

*தொல்காப்பியப் பாயிரத்துள் பனம்பாரனார் குமரி, பாண்டியன், ஐந்திரம் என்ற வடசொற்களைக் கூறியுள்ளார்.* —*பி. வி. 2*

**'அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து'**

*ஆசாரிய: என்ற வடசொல் தமிழில் ஆசான் எனத் திரிந்து தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய னகரஈற்றுச்சொல்லாயிற்று.* —*பி. வி. 2*

**'தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றி'**

*தோன்றி — தன்வினை; தோற்றி — பிறவினை. வி. பி. என்பன இயையாமலேயே பிறவினை தோன்றலாம். பிறவினைவிகுதி 'ணிச்' எனப்படும். ணிச்அந்தமாவது ஏவுவான் வினையும் இயற்றுவான் வினையும் உடனே தோன்றும் ஏவற்கருத்தாவின் வினை. தோற்றி என்பது வி. பி. இன்றித் திரிந்து வரும் சகச ணிச்அந்தம்.* —*பி. வி. 35*

### எழுத்ததிகாரம் – நூல் மரபு

**'கண்இமை நொடிஎன அவ்வே மாத்திரை'** — தொ. எ. 7

*தொல்காப்பியர் 'மாத்ரா' என ஆரியச்சொல்லை 'மாத்திரை' என்று தற்பவமாக்கிப் பயன்படுத்தியுள்ளார்.* *பி. வி. 2*



**'புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருஉரு வாகி அகரமொடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்**
**ஆயீ ரியல உயிர்த்த லாறே'** — தொ. எ. 17

*எழுத்துக்கள் தம்மொடு தாம் புணருமிடத்தும், நிலைமொழியோடு வருமொழி புணருமிடத்தும் முன்னர் ஒருவன் சொல்லச் செவி கருவியாக உணர்ந்து மனத்தின்கண் நிலைபெற்ற ஒலி எழுத்துக்களைப் பின்னரும் உணருமாற்றால் அகரமுதல் எழுத்துக் கெல்லாம் வேறுவேறு அடையாளமாக எழுதிய வடிவு-எழுத்திற்குப் 'புள்ளி யில்லா' என்று கூறிய இலக்கணம் செவிகருவியான் உணரும் ஒலிஎழுத்துப் பெருமையின், இவ்விலக்கணம் வேண்டாவோ எனின், தமிழ் எழுத்திற்கு எகரம் ஒகரம் மெய் புள்ளி பெறுதலின் வேண்டும் எனக் கொள்க.* —*பி. வி. 26*

*'உயிர்த்தல் ஆறே' என்பது பெயரெச்சத் தொடராம், அது உயிர்க்கும் நெறி என்று பொருள் விரிதலின் என்க.* —*பி.வி.38*

**'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே'** — தொ. எ. 18

*வடிவெழுத்து இலக்கணம் இன்றியமையாததன்று. 'மெய்யின் வழியது' என்பது ஒலி எழுத்திற்கு இலக்கணம் ஆகலின் வேண்டும் என்க.* —*பி. வி. 26*

**'ளஃகான் முன்னர் யவவும் தோன்றும்'** — தொ. எ. 24

**'னணஃகான் முன்னர்க் கச ஞப'** — தொ. எ. 26

*வடநூலார் இரண்டெழுத்திற்கு ஒரு காரப்பிரத்தியயம் கொடுத்துத் 'தலகாரம்' என்றாற்போலத் தொல்காப்பியர் 'ளஃகான்' 'ணனஃகான்' என்றார்.* —*பி. வி. 50*

**'அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்**
**உளஎன மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்'** — தொ. எ. 33

இயற்கையாவது பொருட்குப் பின் தோன்ருது உடன் நிகழும் தன்மை. இயற்கை அளபெடைக்கு விதி வடநூலார் சொன்னவண்ணமேயாம். 'அளபிறந்துயிர்த்தல்' என்னும் விதி சிறுபான்மை பொருந்தின் பொருந்தும் என்க. இரண்டு மாத்திரையாய்ப் பிறந்த நெட்டெழுத்துக்கள் மூன்று மாத்திரையாய் அளபெடுத்தலும் செயற்கையாம் ஆகலின் சிறுபான்மை என்ரும். –பி. வி. 5

'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்' – தொ. எ. 35.

தூரான்வயச்சொல்லாவது ஆற்ருெழுக்கும் அடிமறிமாற்றும் அல்லாத எழுவகைப் பொருள்கோள் இலக்கணம் பெற்ற செய்யுட்கள்; தூரான்வயத்துள் பதத்தோடு பதம்பிரித்துக் கூட்டலன்றி உம்மையைப் பிரித்தும் கூட்டுவர். 'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே' என்பதனைப் 'புணரியல் நிலையிடையும் குறுகல் உரித்து' எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் செய்க. – பி. வி. 19

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே' – தொ. எ. 41

செயற்கை ஒரு காரணத்தால் திரியும் தன்மை ஆதலின், 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்' என்னும் சூத்திர விதி செயற்கை அளபெடைக்கல்லது இயற்கை அளபெடைக்குப் பொருந்தாமை தெற்றென அறிக. 'உவாஅப்பதினன்கு', 'இராஅப் பகல்' என்னும் எழுத்துப்பேறுகள் 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்' காரியம் இல்வழி வந்த புலுதச்சந்தி. – பி. வி. 5

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' – தொ. எ. 46

மெய்யின் இயக்கம்' என்பது வடிவெழுத்து இலக்கணமன்றி ஒலி எழுத்து இலக்கணம் ஆதலின் வேண்டும் என்க. – பி. வி. 26



'அகர இகரம் ஐகாரம் ஆகும்' – தொ. எ. 54

'அகர உகரம் ஔகாரம் ஆகும்' – தொ. எ. 55

'அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' – தொ. எ. 56

இம்மூன்று சூத்திரங்களானும் தொல்காப்பியர் சந்திஅக்கரமாக நேரே கூறினர். 'ஐகாரம் ஆகும்' – 'ஔகாரம் ஆகும்' – 'ஐஎன்நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' என்புழி ஐகாரம் போல ஆகும், ஔகாரம் போல ஆகும், ஐஎன்நெடுஞ்சினை போல மெய்பெறத் தோன்றும் என விரித்து விகாரமாக்கி, நலிந்து பொருள்கொண்டு போலி எழுத்து என்று இடர்ப்படுவர். அவர் போலி எழுத்து என்ருல்,

'ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' – தொ. எ. 56

'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' – குறள் 169

முதலியனவாக வருவனவற்றுள் ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபடவரும் என்க. அதுபற்றி 'ஆயிருதொடை' (தொ. பொ. 406) என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலி வகையால் கிளைஎழுத்து எனப்படும் என்ருர். இனி, நச்சினர்க்கினியர் எழுத்ததிகாரத்துள் போலி எழுத்துக் கொள்ளற்க என்பார். கொள்ளா எழுத்திற்கு இலக்கணம்கூறின் அந்நூற்கு நின்று பயனின்மை என்ற குற்றம் தங்கும் என்க. நன்னூலாரும் போலியைத் தள்ளாது, எழுத்திலக்கணம் 'பன்னிருபாற்றுஅதுவே' (நன். 57) என்றலின், போலி எதுகை நிமித்தம் அங்கீகாரமாயிற்று. இளம்பூரணரும் 'போலி எழுத்தைக் கொள்ளற்க' என்று கூருமை அவர் உரையில் காண்க. தொல்காப்பியர் இயற்கை ஆயிரம் (435) என ஓர் எண்ணுங் கொண்டதன்றித் தொள்ளாயிரம் (463) என்பதன்கண் சந்தி நோக்கி நூறுதிரிந்த ஆயிரமும் கொண்டாற்போலவும், தாமரை என்பது செம்மொழியும் பிரிமொழியும் ஆனாற்போலவும்,

இயற்கையாய ஓரெழுத்து ஐகார ஔகாரங்கள் கொண்டதன்றி எதுகைநோக்கி ஈரெழுத்தியைந்த ஐகார ஔகாரங்களும் கொண்டார் என்க. உயிர்மெய்யின் ஒற்றுமை நயம் கருதி ஓரெழுத்தாகவும், வேற்றுமை நயம் கருதி ஈரெழுத்தாகவும் கொண்டாற்போல, ஐகார ஔகாரங்களையும் அவ்வாறு கொண்டார் என்பதும் ஒன்று. போலி எழுத்து என்பார், இலக்கணப் போலி ஒப்பில் போலி போல, எழுத்துப் போலியும் கைக்கொண்டு எதுகை கொள்வார் என்க. மியா – நுந்தை என்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக்காலத்து நின்றாற் போல, அஇ – அஉ என்பன இக்காலத்துப் பயன்படாமலே நின்றன எனினும் அமையும். – பி. வி. 5

'முதலா ஏன தம்பெயர் முதலும்' – தொ. எ. 66

பெயர் அடியாகப் பிறந்த வினைகளை வடநூலார் சுப்புத்தாது என்ப. முதல் என்ற பெயரடியாக முதலும் என்ற வினை தோன்றியமை சுப்புத்தாது என்னும் பெயரடியாகப் பிறந்த வினைக்கு உரிய எடுத்துக்காட்டுக்களுள் ஒன்றாகும். – பி. வி. 35

'உப்ப காரம் ஒன்றுஎன மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே' - தொ. எ. 76

'தபு' என்ற சொல் நீ சா என்றும் நீ ஒருவனைச் சாகச்செய் என்றும் தன்வினை பிறவினை இரண்டன்கண்ணும் வரும். பிறவினைக்கண் வரும் வழி, தபுவி என்பதன் விவ்விகுதி மறைந்திருப்பது வடமொழிக்கண் அந்தர்பாவிதணிச் என்று கூறப்படும். இந்நூற்பாவினுல் தொல்காப்பியருக்கு அந்தர்பாவிதணிச் உடன்பாடாதல் பெறப்படும்.

'உப்பகாரம்......இருவயின்நிலையும் பொருட்டாகும்மே'

என்பதற்குக் காட்டிய தபு என்பது அந்தர்பாவிதணிச். – பி. வி. 35

'உப்பகாரம்' என்புழி, தபு என்னும் சொல் கெடு எனவும் கெடுவி எனவும் அந்தர்பாவிதணிச் என்பர் தொல்காப்பியராகலின், ஈண்டும் எடுத்தும் படுத்தும் சொல்லுக. – பி. வி. 40



## பிறப்பியல்

'தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்' – தொ. எ. 93

'பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்' – 98

வடமொழிக்கு உரிய காரச்சாரியையைத் தொல்காப்பியனர் தற்சமமாகத் தமிழிலும் கொண்டுள்ளார். – பி. வி. 2

'மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்' – தொ. எ. 100

வன்மையும் மென்மையும் பரிசாக்கரம் எனினும், மென்மை அநுநாசிகம். இதுபற்றி 'மூக்கின் ... ... ... தோன்றும்' என்றார். – பி. வி. 5.

## புணரியல்

'மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர்என்று ஆயீ ரியல' – தொ. எ. 103

எண்நிறை அளவுகள் தம்மொடு புணர்ந்த தொகையைப் பாடியகாரரும் தொல்காப்பியரும் உம்மைத்தொகைத் துவந்துவன் என்பர். பதினொன்று என்பதனை ஒன்றை அதிகமாக உடைய பத்து என விரித்து, உருபும் பொருளும் உடன்தொக்க மத்திய பதலோபன் என்பர் காத்தியாயனர். பிறவும் அன்ன. இனித் தொல்காப்பியரும் முப்பத்துமூன்று என்பதனை முப்பதும் மூன்றும் என விரியாது, 'மூன்று தலையிட்ட முப்பது' என விரித்துக் காத்தியாயனர் மதமும் கொள்வர். 'அறுநான்கிரட்டி' (முருகு. 179) என்பது மத்தியபதலோபனய் ஆறல் பெருக்கிய நான்கு இரட்டி எனவும், வெகுவிரீகிப் பொருளால் இருபத்து நான்குஇரட்டி எனவும் விரியும். இனி, பண்புத்தொகை என்பாரும் உளர். – பி. வி. 21

**'மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்'** – தொ. எ. 104

இந்நூற்பாவில் கூறிய இலக்கணம் செவி கருவியான் உணரும் ஒலி எழுத்துப் பெருமையின், இவ்விலக்கணம் வேண்டா எனினும், தமிழ் எழுத்திற்கு எகரம் ஒகரம் மெய் புள்ளி பெறுதலின் வேண்டும் எனக் கொள்க.
– *பி. வி. 26*

**'நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு**
**குறித்துவரு கிளவியின் முதலெழுத்து இயைய'**–தொ. எ. 108

இனி, இயைந்த சொற்களாவது என்னை எனின், நிலைமொழி ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக, வருமொழி முதல் எழுத்துப் பின்னர்ப் பிறந்து கெடும்; இவ்விரண்டும் முறையிற் பிறந்து கெடுவன ஒருங்குநின்று புணருமாறு இன்மையின், புணர்ச்சி என்பது ஒன்று இல்லையாம் என்பார்க்கு, அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின்கண்ணே உணர்வார் ஆகலின், அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் பின்னர்க் கண்கூடாகப் புணரும் புணர்ச்சி போலப் புணரும் சொற்கள் என்க. கண்கூடு – காட்சியளவை. பூர்வ பதத்தின் ஈற்றெழுத்தும் உத்தர பதத்தின் முதல் எழுத்தும், தாப்பிசை என்னும் பாச பந்தம் போலப் புணர்வதன்றிப் பூர்வ பதமும் உத்தர பதமும் யோகாங்குலி நியாயம் போலப் புணரா ஆகலின், 'நிறுத்த...... இயைய' என்றார் தொல்காப்பியர். தருக்க நூலார் எழுத்துக்களைப் பிறந்து கெடும் என்பர். சத்தநூலார் கெடாது நித்தியமாம் என்பர்.
– *பி. வி. 26*

**'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்'** – தொ. எ. 110

சொற்கள் தகுதி அவாய்நிலை அண்மைநிலை என்ற மூன்றும் தோன்றத் தம்முள் புணரும். இக்கருத்தே பற்றித் தொல்காப்பியரும் 'நிறுத்த......கிளவியும்' என்றார்.
– *பி. வி. 19*



**'மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்'** – தொ. எ. 111

தனிநிலைச் சொற்கள் வேற்றுமையாக அவ்வழியாக அவ்வப் பொருள்மேல் பிளவுபட்டிசையாது தம்முட் கூடுவது தொகை எனவே, வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முள் கூடுவது தொகை அன்றோ எனின், நன்று சொன்னாய்; உயிரீற்று வேற்றுமை உருபும் உவம உருபும் உயிர் மயங்கியலினும், மெய்யீற்று வேற்றுமை உருபும் உவம உருபும் உம்மையும் மெய் மயங்கியலினும், நிலைமொழி ஈறாக வைத்துக் கெடுத்துப் பின் வருமொழியோடு புணர்த்தாமையின் அவ்வாறு உரைத்தல் மலை இடறு என்க. வடநூலாரும் அச்சுச் சந்தியினும் அல்லுச்சந்தியினும் அவ்வாறு உருபுகளையும் உவமையையும் உம்மையையும் ஈறாக வைத்துப் புணர்த்தார். இஃதன்றியும், தவளை வாய் – குவளை மலர் – அம்பிகாபதி என்பனவற்றை ஆரும் வேற்றுமை நிலைமொழி ஈறாக நின்று கெட்ட சந்தி என்றால் இயல்பு சந்தி ஆகாமையானும், 'மருவின் தொகுதி' 'மக்கட் பெயர்த் தொகுதி' முதலிய சொற்கள் எல்லாம் ஈறுகெட்டுத் தொகுவன அன்மையானும் வேற்றுமை உருபு முதலிய சொற்கள் தொகுதல் என்பது மலை இடறு என்க.
– *பி. வி. 19*

**'இன்னன வரூஉம் வேற்றுமை உருபிற்கு**
**இன்னென் சாரியை இன்மை வேண்டும்'** – தொ. எ. 131

வேண்டும் – தகும் – படும் என்னும் மூன்றும், இக்காரியம் செய்வது இன்றியமையாதது என்று குறிப்பிடும் கிருத்தியப் பிரத்தியயமாம். இவை செய்யும் என்னும் முற்றாகிய ஆற்பனேபதம் அன்றி, விதிப்பொருட்டாகிய கிருத்தியம் என்பது தெற்றென அறிக. 'இன்என......வேண்டும்' என்புழிச் செய்யும் என்னும் முற்று ஆகாமல் வேண்டும் என்னும் தவ்வியப் பிரத்தியயம் வந்தது.
– *பி. வி. 41*

## தொகைமரபு

**'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்'** - தொ. எ. 157

**'அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்'** ,,

**'சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்'** ,,

*புதல்வரைப்பெறுதல், மன்னரைச் சேர்ந்து ஒழுகல், நூற்றுவரைக் கொல்லி, சேர்ந்தாரைக் கொல்லி, நம்பியைக் கொணர்ந்தவன், நங்கையைக் கொணர்ந்தவன், கொற்றனைக் கொணர்ந்தவன், வண்டினைக் கொணர்ந்தவன் - என உருபு தொகாமலே அலுக்கு வரும். அது 'உயர்திணை......நிலையலும்' என்னும் சூத்திரத்தால் அறிக.*

*இகழ்வார்ப் பொறுத்தல், கேளிர்ப்பிரிப்பர் என விகாரத்தால் உயர்திணை மருங்கின் ஒழிந்து லுக்கு வரும்.* - *பி. வி. 27*

**'வேற்றுமை அல்வழி இஐ என்னும்'** - தொ. எ. 158

*'தத் - அபாவம் தத் - அந்நியம் தத் - விருத்தம்*
*எனமூன்று ஆகும் நஞ்ஞுதற் புருடன்'*

*எனவே, இன்மை - அன்மை - எதிர்மறை என்ற மூன்றினும் நஞ்ஞு வரும்.*

*'வேற்றுமை அல்வழி' என்பது தத்-அந்நியமான இனத்தில் வந்த நஞ்ஞு.* - *பி. வி. 21*

**'சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழியும்'** - தொ. எ. 159

*'ஆங்குக் கொண்டான்' - என்பது 'சுட்டுச்சினை' என்னும் சூத்திரத்தான் காட்டிய ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியயதத்திதன்.* - *பி. வி. 33*



**'பலர்அறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை**
**ஒன்றறி சொல்முன் யாதுஎன் வினவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியில் திரியும்மன் பயின்றே'** - தொ. எ. 172

*தனிமொழியும் தொடர்மொழியும் காரணமின்றி வன்னவிகாரம், வன்னவிபரியயம், வன்னநாசம், வன்ன ஆகமம் என்ற நான்கும் பெறும்; 'யாவர் - யார்' என வன்னநாசம் வரும். 'யாது - யாவது' என வன்ன ஆகமம் வரும். 'பலரறிசொல்......வருதலும்' என்னும் சூத்திரவிதி பெற்றதும் அது.* - *பி. வி. 26*

## உயிர் மயங்கியல்

**'ஆகார இறுதி அகர இயற்றே'** - தொ. எ. 221

*'குறையே சேடம் கூறுங் காலே' - ஆகார இறுதி அகரஇறுதி இயற்று' என்னது 'ஆகாரஇறுதி அகர இயற்றே' என்பது சேடமாம். இவ்வாறு உரைத்ததனல் பிறிது ஓர் இலக்கணமும் கொள்ளுதல் உரைகாரர் மதம் என்க.* - *பி. வி. 44*

**'ழகர உகரம் நீடிடன் உடைத்தே**
**உகரம் வருதல் ஆவயி ஞன'** - தொ. எ. 261

*வடநூலார் குறில் நின்ற இடத்தும் புலுதம் வரும் என்பது பற்றித் தொல்காப்பியர் 'ழகர......ஆவயினுன' எனச் சூத்திரம் செய்து, 'பழூஉப்பல் அன்ன பருவுகிர்ப் பாவடி' (குறுந். 180) என உதாரணம் காட்டுவர். அதுவே உபலக்கணமாக நாலடியில்*

*'விராஅஅய்ச் செய்யாமை நன்று'* - *246*

*எனவும்,*

*'நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல்வ தூஉம்'* - *124*

*எனவும் குற்றெழுத்து நிற்குமிடத்தும் சிறுபான்மை அசை நிலையாக அளபெடுத்து வந்தமை காண்க. குரீஇ, உடீஇ எனவரும் இறுதிநிலை அளபெடையும் அது.* - *பி. வி. 5*

**‘திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன’** – தொ. எ. 256

தொல்காப்பியனுர், ‘திங்களும் நாளும்’ என்னும் சூத்திரத்தால் ஆனி–ஆடி–தை ஒழிந்த திங்களும் நாள் இருபத்தேழும் தற்பவம் ஆகலின், அவை தமிழால் புணரும் புணர்ச்சியும் கூறினுர் – பி. வி. 2

## புள்ளி மயங்கியல்

**‘விண்என வரூஉம் காயப் பெயர்வயின்’** – தொ. எ. 305

தொல்காப்பியர் சிறுபான்மை ஆரியச்சொற்களையும் தற்பவமாகத் தமிழில் கொண்டமைக்குக் காயம் என்பது எடுத்துக்காட்டு.
– பி. வி. 2

**‘அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை**
**உ-கெட நின்ற மெய்வயின் ஈ வர**
**இ-இடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்’** – தொ. எ. 326

தமிழில் ‘எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே’ – (தொ. சொ. 65) என்றுராயினும், வடநூலில் எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று அறிதற்கு, நும் என்னும் ஒரு பெயரை மாத்திரம் எழுவாய்வேற்றுமை ஆக்காது பிராதி-பதிகமாக்கிப் பின்னர் நும்மை...... நுங்கண் என இரண்டு முதல் ஏழ் இறுதியும் வேறுபடுத்து வேற்றுமையாக்கினுற்போல, ‘அல்லதன் மருங்கின்’ என்னும் சூத்திரவிதி கொண்டு நீயிர் என வேறுபடுத்து எழுவாய் வேற்றுமை என்னும் பிரதமாவிபத்தி யாக்குவர். இவ்வாறு நின் – தன் – தம் – என் – எம் – நம் என்பனவற்றையும் பிராதிபதிகமாக்கி, பின் நீ – தான் – தாம் – யான் – யாம் – நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய் வேற்றுமை ஆக்காமையானும், ‘எல்லாம் நீயிர்நீ’ - (சொ. 174) எனவும், ‘நீயிர் நீஎன வரூஉம் கிளவி’ – (சொ. 188) எனவும் பெயரியலுள் பெயர்ப்பிராதி பதிகமாகச் சூத்திரம் செய்தலானும், ‘அல்லதன் மருங்கின்’ என்றும் சூத்திரத்தை வடமொழிக்கு



எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று தமிழ்நூலார் அறிதற்கே செய்தார் என்க. நிலைமொழி, விகாரமொழி எட்டாம் வேற்றுமையானுற்போல, நும் என்னும் நிலைமொழி விகாரம் முதல் வேற்றுமையாம் என்க. – பி. வி. 7

**‘மன்னும் சின்னும் ஆனும் ஈனும்**
**பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அன்ன இயல என்மனுர் புலவர்’** – தொ. எ. 333

ஆற்கொண்டான், ஈற்கொண்டான் என வருவன எல்லாம் ‘மன்னும் சின்னும்’ என்னும் சூத்திரத்தால் காட்டிய ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியய தத்திதன். – பி. வி. 33

**‘சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**
**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப’** – தொ. எ. 334

அவ்வயின், இவ்வயின், உவ்வயின், எவ்வயின் – இவை ‘சுட்டு முதல் வயினும்’ என்னும் சூத்திரத்தால் காட்டிய ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியய தத்திதன். ‘சுட்டு முதல் வயின்’ என்பது அவ்வயின் இவ்வயின் உவ்வயின் எவ்வயின் என்பனவற்றை ஒருமொழி யாக்கி, அவற்றொடு வருமொழி புணர்த்தலின், அவை அவ்வியய தத்திதன் என்க. சுட்டெழுத்துக்களையும் வினு எழுத்தையும் நிலைமொழியாக நிறுத்தி வயின் என்பதனைப் புணர்த்தாமை யானும், அவ்வயின், இவ்வயின் முதலாயின சொற்கள் அவ்வியய தத்திதன் ஆதல் தெளிக. – பி. வி. 33

**‘அப்பெயர் மெய்ஒழித்து அன்கெடு வழியும்**
**நிற்றலும் உரித்தே அம்என் சாரியை**
**மக்கள் முறைதொகூஉம் மருங்கி னுன’** – தொ. எ. 350

பொற்றொடி முதலியவற்றைக் காத்தியாயனர் மத்திய பதலோபன் என்பர். பாடியகாரர் இலக்கணை என்பர். இவை விரியுங்கால், கனலொடு புகையும் குடையொடு நிழலும் போல, உருபும்

பொருளும் உடன் விரியும் – 'மக்கள் முறைதொகூஉம்' என்னும் சூத்திரத்தால் காட்டிய சாத்தங்கொற்றன் [சாத்தன் என்ற இயற் பெயரின் அன் ஈறு கெட்டு அம்முச் சாரியை புணர்ந்து வரு மொழிக்கு ஏற்ப அஃது ஈறுதிரிந்து புணரச் சாத்தனுக்கு மகனாகிய கொற்றன் என்ற பொருளில் சாத்தங்கொற்றன் என்ற வேற்றுமைத் தொகைநிலைத் தொடராக அமைந்தது] என்பதும் அது. – *பி. வி. 26*

'**மகன்வினை கிளப்பின் முதல்நிலை இயற்றே**' - தொ. எ. 359

மூன்றன் உருபாகிய ஒடுச்சொல்லைத் தொல்காப்பியர் 'ஆசாரியனொடு மாணவகன் வந்தான்' எனக்காட்டி 'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே' – (சொ. *91*) என்பர். இனிப் பாணினி ஒடு என்னும் உருபு ஏற்ற சொல்லை அப்பிரதானம் என்றும், வந்தான் என்னும் வினையொடு முடிந்த சொல்லைப் பிரதானம் என்றும் கூறுவர்.

**'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை'** - குறள் 295

என்பதனுள், மொழியின், செய்வார் என வரும் வினைகளொடு முடிந்த வாய்மை, தானம் என்ற செயப்படுபொருள்களையே பிரதானம் என்பர். 'மகன்வினைகிளப்பின்' (*359*) என்னும் சூத்திரத்தில் மகன் தாயொடு கலாய்த்த காலம் என்பதும் அது. [கலாய்த்தல் என்ற வினையொடு முடிந்த மகன் என்பதே ஈண்டு உயர்ந்த பொருளாதலும், ஒடு என்பதனொடு சேர்ந்த தாய் என்பது உயர்பு இல் பொருளாதலும் காண்க] – *பி. வி.16*

**'இல்என் கிளவி இன்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐஇடை வருதலும்**
**இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்**
**கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே.'** – தொ. எ. 372

[எ-டு: இல்லைக் கொற்றன், இல்லை கொற்றன், எண்ணில் குணம், இல்லாக் கொற்றன் என்பன.]



நன்னூலார் வடிவெழுத்து இலக்கணமும் ஒலிஎழுத்து இலக்கணமும் 'புள்ளிவிட் டவ்வொடு' (ந. *89*) என்னும் சூத்திரத்தான் ஒருங்கு கூறினாற்போலத் தொல்காப்பியனாரும், 'இல்என்கிளவி' என்னும் ஒரு சூத்திரத்தால், தொகைநிலையாய் நின்ற அடைமொழிக்கும் [எண்ணில் பொருள்] தொகாநிலையாய் நின்ற எழுவாய்த்தொடர்க்கும் [இல்லை கொற்றன்] ஒருங்கு கூறினர் என்க. – *பி. வி. 21*

'**கடிநிலை யின்றே ஆசிரி யற்க**' – தொ. எ. 389

அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்றமையானும், 'கடியநிலை யின்றே ஆசிரி யற்க' எனப் பொதுப்பட ஓதியதல்லது பெயரெடுத்து ஓதாமையானும், தொல்காப்பியத்துக்கு முதல்நூல் ஐந்திரமாம் என்க. – *பி. வி. 1*

ஆசார்ய: என்ற வடசொல், 'கடிநிலை யின்றே ஆசிரியற்க' என, ஆசிரியன் என்ற னகரஈற்றுச் சொல்லாகத் தமிழில் திரிந்து வந்தது. – *பி. வி. 2*

## குற்றியலுகரப் புணரியல்

**'யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்.'** – தொ. எ. 422

மலர்க்குழல், தகரஞாழல், பவளவாய், கருங்கண், தாழ்குழல் – இவை தத்தம் பொருளாய் நில்லாது அன்மொழிப் பொருளாய் நிற்கின், படுத்துச் சொல்லுக. எடுத்தல் படுத்தல் உயிர்க்கல்லது மெய்க்கு இன்மையின், ஈண்டு ஈற்றயல் என்னும் உபதையைப் படுத்துச் சொல்லுக. 'சுட்டு முதலாகிய ஆய்த இறுதி' (*200, 422*) எனத் தொல்காப்பியரும் ஈற்றயலை இறுதி என்றார். – *பி. வி. 24*

'இருதிசை புணரின் ஏஇடை வருமே.' – தொ. எ. 431

*கிழக்கேமேற்கு என்பது உம்மைத்துவந்துவனில் வந்த நித்தியம். கீழ்மேற்கு என அநித்தியமாகாமை 'இருதிசை புணரின்' என்னும் சூத்திரவிதியால் அறிக.* – *பி. வி. 27*

'திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகரம் ஆகும்
தெற்கொடு புணருங் காலை யான' – தொ. எ. 432

*வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு எனத் திகந்தராளலக்ஷண வெகுவிரீகி வரும். இதற்கும் தொல்காப்பியர் இன்னதொகை எனக் குறியீடு கூறிலர். 'திரிபுவேறு கிளப்பின்' எனச் சந்தி இலக்கணம் சொன்னவர் குறியீடு கூறிலர். கிழக்கு மேற்கு என்பது துவந்துவன்.* – *பி. வி. 24*

'இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மா என் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரலும் உரித்தே' – தொ. எ. 480

*'இரண்டு முதல் ஒன்பான்' என்னும் சூத்திரவிதி பெற்ற இருமா இரண்டுமா; மூவுறுப்பு, மூன்றுறுப்பு, நாற்கடல் நான்குகடல், ஐயறிவு ஐந்தறிவு, அறுமுகம் ஆறுமுகம், எழுகடல் ஏழ்கடல், எண்டிசை எட்டுதிசை என அநித்தியம் வரும்.* – *பி. வி. 27*

'உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்' – தொ. எ. 482.

*கருஞ்சாத்தன் – சாத்தி – சாத்தர் – குதிரை – குதிரைகள் என்ற பண்புத்தொகைகளைப் பொருள்விரிக்குங்கால், கரு என்ற பண்பின் முதல்நிலையைக் கரியன் கரியள் கரியர் கரியது கரியன என ஈறுதிரித்து வருமொழி எந்தலிங்கம் அந்தலிங்கமாக்கித் தொகுப்பர் என்பது பற்றித் தொல்காப்பியரும் 'ஐம்பால்...... மொழி' என்றும், குணச்சொல் குணமுடையதனை உணர்த்தலான்*



*ஒன்றினை ஒன்று விசேடித்து இருசொல்லும் ஒருபொருள் மேல் வருமிடத்து 'இன்னது இதுஎன வரூஉம்' (சொ. 416) என்றும் பண்புத்தொகைச் சூத்திரம் செய்தது நேரே காண்க. கரிய சாத்தன் எனச் சாமானிய லிங்கமாகவும் விரிப்பர்.* – *பி. வி. 49*

## சொல்லதிகாரம் — கிளவியாக்கம்

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' – தொ. சொ. 1.

*இன்மை அன்மை எதிர்மறை மூன்றினும் நஞ்ஞுதற்புருடன் வரும். அவற்றுள் அஃறிணை என்பது தத்-அந்நியமான அன்மைப் பொருளில் வந்த நஞ்ஞு.* – *பி. வி. 21.*

*சொல்நிகழ்ச்சிக்குப் பொருள் இடம் ஆகலின் 'ஆயிரு...... சொல்லே' என்றார்.* – *பி. வி. 18.*

'இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே' – தொ. சொ. 4

*தொல்காப்பியனார் ஆரியச்சொற்களைத் தற்சமமாகத் தமிழில் கையாண்டமைக்கு 'அந்தம்' என்பதும் எடுத்துக்காட்டு.*
– *பி. வி. 2*

'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' – தொ. சொ. 5

'ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்' – தொ. சொ. 6

'ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலர்அறி சொல்லே' – தொ. சொ. 7

*ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல் எனச் சொல்லைக் கருத்தாவாகக் கூறுவது உபசார வழக்காம்.* – *பி. வி. 18*

தொல்காப்பியனாரும் 'னஃகான் ஒற்றே' 'ளஃகான் ஒற்றே' 'ரஃகான் ஒற்றே' எனக் கூறி, பின்னும் கூறவேண்டியவிடத்து அவ்வாறு கூறாது, அன் ஆன் - அள் ஆள் - அர் ஆர் (205, 6) என வேறுபடுத்து, வடநூலார் ஆற்பனேபதம் பரப்பைபதம் இரண்டினுக்கும் ஈறுவேறு கூறினாற்போலத் தமிழ் மொழிக்கும் கூறினார் என்க. - பி. வி. 36

'இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யுள் ஆறே' - தொ. சொ. 18

செய்யுள் வழக்காவது 'இனச்சுட்டு.........செய்யுளாறே' எனவரும். - பி. வி. 18

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' - தொ. சொ. 19

இந்நூற்பாவில் கிளத்தல் என்ற லோட்டு (ஈண்டு மெய்யீறாய் வந்தவியங்கோள்) விதிப்பொருட்டின்கண் வந்தது. - பி. வி. 41

'மன்னாப் பொருளும் அன்ன இயற்றே' - தொ. சொ. 34

இன்மை, அன்மை, எதிர்மறை மூன்றினும் வரும் நஞ்ஞு, இன்மையாகிய தத் - அபாவத்தில் வந்ததற்கு எடுத்துக்காட்டு.- பி. வி. 21

'சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்' - தொ. சொ. 41

விசேடிய பூர்வ பதமாவது (முன்மொழி விசேடியம்) தெய்வப் புலவன் திருவள்ளுவன் என்பது போல, 'சிறப்பினாகிய' என்னும் சூத்திர விதி பெற்றுத் தொகையாய் நிற்பது. இதனை மாறி, திருவீர ஆசிரியன், சங்கராசாரியன், அகத்திய முனிவன் என விசேடியோத்தர பதமும் (பின்மொழி விசேடியம்) ஆக்குவர். - பி. வி. 22.

'இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்து இசையா' - தொ. சொ. 48

'துடிதுடித்துத் துள்ளிவரும்',

'கலகல கூஉந்துணை' - நாலடி 140



'வற்றிய ஓலை கலகலக்கும்' - நாலடி 256

'சலசல மும்மதம் சொரியத் தத்தமுள்' - சீவக. 82

'பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்'

'புன்னம் புலரி'

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி' - புறநா. 188

'வயிறு மொடுமொடுத்தது'

'சிற்றஞ் சிறுகாலே' - திவ். பிர. 502

'செக்கச் சிவந்தது'

'கன்னங் கரிய'

என்பனவற்றை இலையிரட்டையும் பூவிரட்டையும் போல வந்தன 'இரட்டைக் கிளவி' என்னும் சூத்திர விதி பெற்றன என்பர். இவற்றை வடநூலார் தேதீவ்யமானம் என உதாரணம் காட்டியங் ஙுக்கு என்பர். - பி. வி. 39

'பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே' - தொ. சொ. 51

'தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரேல்' - சிலப். 7-42

'தானும் தேரும் பாகனும் வந்துஎன் நலன்உண்டான்'

'திங்களும் சான்றோரும் ஒப்பர்' - நாலடி 151

'தானும்தன் புரவியும் தோன்றினன்'

என்பன, தலைமைப் பொருள் வினையொடு முடிவதே தலைமையில் பொருளின் வினை முடிந்ததாய்க் காரகமாம். 'பலவயினானும்' (தொ சொ. 51) என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் இவ்வாறு உரைத்தார். - பி. வி. 16

'குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி' - தொ. சொ. 55

வியங்கோள் - கூற்றம் என்ற ஒற்றீற்றுச் சொல்லாய் விதிப் பொருட்டின்கண் வந்தது. - பி. வி. 41

'அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்' – தொ. சொ. 56

இடைக்கண் முரிந்தார், கடைக்கால், தலைக்கண்ணதாகி, 'அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்' என்பனவற்றுள் இடை – கடை – தலை – மருங்கு என்பன ஓரிடத்தின் ஏகதேச மாகியும் கண் – கால் – இல் என்பன உருபாகியும் மாறி, இரட்டித்தும் வருதலின் முன்நின்றவற்றை ஏகதேசமான இடம் ஆக்கியும் பின்நின்றவற்றை உருபாக்கியும் கூறுவர். இரட்டித்து வாராவிடத்து இல் என்னும் உருபு லுக்கு* ஆயிற்று என்பர் வடநூலார். கண் – கால் – புறம் – அகம் முதலாயின அவ்வியயம் (இடைச்சொல்) என்னும் உபசர்க்கமாயினும் (உருபு) அவை ஓர் இடத்தின் ஏகதேசமாகவும் பொருள்படும் என்பது பற்றி நன்னூலாரும் 'இடப்பொருள் உருபே' – (302) என விதந்து ஓதினர். இவற்றைத் தொல்காப்பியர் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' – (250) என்பர். – பி. வி. 6

## வேற்றுமையியல்

'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' – தொ. சொ. 65

தமிழில் பிராதிபதிகமே எழுவாய் வேற்றுமையாம் என்பது போதரத் தொல்காப்பியர் 'எழுவாய்...நிலையே' என்றார். – பி. வி. 7

பெயர்க்கு ரூபபேதம் காட்டும் வேற்றுமை உருபு வடமொழிக்கல்லது தமிழ்மொழிக்கு இல்லாமைகண்டு, 'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' எனத் தொல்காப்பியனார் கூறினர். இனி, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும், பெயர் தனித்து நின்றகாலை எழுவாய் வேற்றுமை ஆகாது எனவும், அது பெயர் தோன்றுநிலை' என்பதற்கு நலிந்து பயனிலை தோன்ற நிற்கும் நிலையாகிய அவசரத்தில் எழுவாய் வேற்றுமையாம் என்றும் உரைத்தார். பெயர்தாம் பயனிலை தோன்ற நின்றால், கர்த்திரு காரகம் என்னும் எழுவாய் ஆவதன்றி, ரூபபேதம் பெற்ற எழுவாய் வேற்றுமை ஆமோ என மறுக்க. அன்றியும் அவ்வாறே 'நிலங்கடந்தான்' முதல் 'குன்றக்கூகை' இறுதியாக ஆறு உருபும் வாராது தத்தம் பயனிலை தோன்ற நிற்கும் நிலையே



அமையும். அங்ஙனம் அமைவனவற்றை, 'ஐஎனப்பெயரிய' (71) 'ஒடு எனப்பெயரிய' (73) எனப் பெயர் ஒழிந்த ஆறு விபத்தியும் எடுத்து ஓதியது நின்று பயனின்மை என்னும் குற்றம் தங்குதற்கோ எனக் கூறி மறுத்து, அஃது உரையன்மையாதல் அறிக. சேனாவரையர் உரையும் நோக்குக. பின்னூல் செய்த குணவீரபண்டிதரும்,

'பெயர்எழுவாய் வேற்றுமையாம் பின்பதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப் படுதல் – கயல்விழியாய்
ஈற்றின் உருபாறும் ஏற்றல்முக் காலமும்
தோற்றுமை நிற்றல் துணிவு' – நே. சொ. 17

என நேமிநாதத்துள் கூறினர். – பி. வி. 8

'இரண்டாகுவதே,
ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' – தொ. சொ. 71

'மூன்றாகுவதே,
ஒடுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே' – தொ. சொ. 73

துதியை திருதியை என்றாற்போலத் தொல்காப்பியரும் 'இரண்டாகுவதே' 'மூன்றாகுவதே' என மொழிபெயர்த்துக் கூறுவர். – பி. வி. 6

'ஐஎனப் பெயரிய வேற்றுமை' என உருபையும் தொல்காப்பியனார் வேற்றுமைக் கிளவி என்பர். – பி. வி. 8

வடநூலார் சுப்புத்தாது என்னும் பெயரடியாகப் பிறக்கும் வினைகளும் உள. 'ஐஎனப் பெயரிய வேற்றுமை' (71) எனப் பெயரடியான் பிறந்த வினை வருதல் காண்க. – பி. வி. 35

அவர்க்குச் செய்பத்தகும் அக்காரியம்; அவரால் செய்பத்தகும் அக்காரிபம்-என அநபிகித கருத்தாவோடு ஆறும் மூன்றும் வரும். 'வினை முதல் கருவி அனைமுதற் றதுவே' (73) எனக் கருத்தா மூன்றன் உருபு பெறுதலோடு ஈண்டு ஆறு பெறுதலும் கொள்க. ஈண்டுக் குகரம் ஆறனுருபு. – பி. வி. 14

**'இன்ஆன்ஏது ஈங்கனம் வரூஉம்**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார்'** – தொ. சொ. 74

தொல்காப்பியனர் ஆரியச் சொற்கள் சிலவற்றைத் தமிழில் தற்பவமாகக் கொண்டமைக்கு ஏது என்பதும் எடுத்துக்காட்டு.
– பி. வி. 2

**'அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்**
**அதற்குயாப்பு உடைமையின் அதற்பொருட்டு ஆதலின்'**
– தொ. சொ. 76

தாதர்த்தியே சதுர்த்தியாவது, கொள்வோனைவிட்டு ஆதிகாரண காரியம் நிமித்த காரணகாரியம் என்னும் இரண்டன் பின்னரும் வரும் குகரவுருபாம். (உ–ம்) குண்டலத்துக்குப் பொன், யூபத்துக்கு மரம், சோற்றுக்கு அரிசி, ஆடைக்கு நூல், நூற்குப் பருத்தி, தயிர்க்குப் பால், எண்ணெய்க்கு எள்ளு – இவை ஆதி காரண காரியம். கூழிற்குக் குற்றேவல் செய்தான், சோற்றிற்குப் பணம் – இவை நிமித்த காரண காரியம். இவற்றைத் தொல்-காப்பியர் 'அதுவாகு கிளவி', 'அதற் பொருட்டாதல்' என்பர். இவற்றை விரிக்குங்கால், பொருட்டு என்னும் நிமித்தத்தை விரிக்க.

அவற்குப் பகை, நட்டார்க்குக் காதலன், வடுகர் அரசர்க்குச் சிறந்தார் சோழிய அரசர், இச்சொற்குப் பொருள், நினக்கு வலி, அவ்வூர்க்கு இவ்வூர் காதம், மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை, உற்றூர்க்கு உரியர் பொற்றொடி மகளிர் என வருவன எல்லாம் ஆறுவதன் பாற்படும்.
– பி. வி. 16

**'ஏழாகுவதே,**
**கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'** –தொ. சொ. 81

**'கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்'** –தொ. சொ. 82

நாநார்த்த பதம் எல்லாம் வர்ணவற்பாவம் என்னும் எழுத்தொப்புமையுடைய பலபொருள் ஒருசொல், பலசொல் அல்லது ஒருசொல் அன்று எனவும், ஒன்றல்லவை பல என்பதனாலும், பல என்பது அல்லது ஒருசொல் அன்று எனவும், இரு



சொல் ஆதலின் இருகால் உரைக்க எனவும், வடநூலார் கூறுவர். என்னை? பயக்ஷீரம், பயோம்புஜ (பயம் – பால்; பயம் – நீர்.) என அமரசிங்கத்துள் வருதலின் என்க, அதுபற்றித் தொல்காப்பியனாரும், கண் என்பது ஏழாம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமைப் பொருளும் ஆதலின், 'கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' எனவும், 'கண்கால் புறம்அகம்' எனவும் கூறுவர். அப்பைய தீக்ஷிதர் 'ஏகநாளாவலம்பி பலத் துவந்துவன்' போல – என்று திட்டாந்தம் கூறி, ஒருகால் உரைக்கவே, பல பொருளில் பிரவிருத்தி நிமித்தம் ஒருங்கு தோன்றும் என்றும் கூறுவர்.
– பி. வி. 40

## வேற்றுமை மயங்கியல்

**'கருமம் அல்லாச் சார்புஎன் கிளவிக்கு**
**உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை'**–தொ.சொ. 84

தொல்காப்பியனர் சிறுபான்மை ஆரியச் சொற்களைத் தமிழில் தற்பவமாகக் கூறுவர் என்பதற்குக் 'கருமம்' என்பதும் எடுத்துக் காட்டு.
– பி. வி. 2

இன்மை அன்மை எதிர்மறை மூன்றிலும் நஞ்ஞு வரும். 'கருமம்...கிளவி' என்பது இன்மைப் பொருளில் வந்த அன்மை.
– பி. வி. 21

**'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே'** – தொ. சொ. 91

முற்கூறிய ஒடுச்சொல்லைத் தொல்காப்பியனர் 'ஆசாரியனொடு மாணவகன் வந்தான்' எனக் காட்டி 'ஒருவினை...வழித்தே' என்பர். இனிப் பாணினி ஒடு என்னும் உருபு ஏற்ற சொல்லை அப்பிரதானம் என்றும், வந்தான் என்னும் வினையொடு முடிந்த சொல்லைப் பிரதானம் என்றும் கூறுவர்.
– பி. வி. 16

உடன் நிகழ்ச்சி எனினும் ஒருவினை எனினும் கூட எனினும் ஒக்கும். தொல்காப்பியரும் 'ஒருவினை ஒடுச்சொல்' என்பர்
– பி. வி. 16.

**'கு-தொக வரூஉம் கொடைஎதிர் கிளவி'** – தொ. சொ. 99

*'கொடை எதிர்கிளவி' எனச் சம்பிரதானமாகச் சொல்லைக் கூறுவர். அது உபசாரம் என்க.* – *பி. வி. 18*

**'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்**
**எச்ச மிலவே பொருள்வயி னுன'** – தொ. சொ. 100

*பழியை அஞ்சினன், பழியின் அஞ்சினன் - என்பது உருபும் பொருளும் உடன் மயக்கம், அச்சப் பொருளை இரண்டிற்கும் ஐந்திற்கும் 'எச்சமில' என மயக்கத்துள் விதித்தமையால் என்க.*
– *பி. வி. 15*

**'உருபுதொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி**
**ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே'** – தொ. சொ. 102

*'உருபு......கிளவி' என உருபு ஏற்ற பெயரையும் தொல்காப்பியனுர் வேற்றுமைக்கிளவி என்பர்.* – *பி. வி. 8*

**'உருபுதொக வருதலும், நெறிபட வழங்கிய வழிமருங்கு'**
– தொ. சொ. 104

*பாணினி பகவான் ஆரும் அத்தியாயத்துள் விபத்தி இல்லாமல் பதத்தொடு பதம் புணரும் சந்தி கூறுவர். 'உருபுதொக வருதல்' என்ருற்போல, இரண்டாம் அத்தியாயத்துள் சமாசனில் விபத்தியும் விதித்து லோபமும் விதித்தார்.* – *பி. வி. 19*

**'யாதன் உருபின் கூறிற் ருயினும்**
**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்'** – தொ. சொ. 106

*உருபு மயக்கமாவது தன்பொருளில் திர்ந்து பிறிது ஓர் உருபின் பொருட்டாதல். அவ்வாறு 'யாதன் உருபின்' என்னும் சூத்திரத்துள் சேனவரையர் முதலாயினர் கூறியதானும் தெளிக.*

உ-ம் :

*'கிளைஅரில் நாணற் கிழங்குமணற்கு ஈன்ற*
*முளைஓ ரன்ன முள்எயிற்றுத் துவர்வாய்'* – *அகநா. 212*
*'காலத்தினல் செய்த நன்றி'* – *குறள். 102*



*இவற்றுள் நான்கும் மூன்றும் ஏழன் பொருட்டாய் நின்று உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயையாமலேயே நின்றன. 'கொக்கினுக்கு இழிந்த தீம்பழம்' (நற். 280) 'நாகு வேயொடு நக்கு வீங்குதோள்' இவற்றுள் நான்கும் மூன்றும் ஐந்தாவதன் பொருட்டாயும் இரண்டாவதன் பொருட்டாயும் நின்றன. 'சிதல்எறும்பு ஆதிமூக் கறிவின்மூ வறிவுயிர்' (நன். 447) இதனுள் இன் ஒடுப்பொருட்டாதல் அவ்வுரையில் காண்க.* – *பி. வி. 15*

**'அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ**
**ஆயெட்டு என்ப தொழில்முதல் நிலையே'** – தொ. சொ. 112

*வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முள் கூடுவது தொகை அன்ரே எனின், 'அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ' என்புழி, மரபினை என்பது மரபின் என ஈறு கெட்டுத் தொகாமை அறிக.* – *பி. வி. 19*

**'முதலிற் கூறும் சினைஅறி கிளவியும்**
**சினையிற் கூறும் முதல்அறி கிளவியும்'** – தொ. சொ. 114

*முதலறிகிளவி சினையறிகிளவி எனக் கருத்தாவாகச் சொல்லைக் கூறுதல் உபசாரம் என்க.* – *பி. வி. 18*

*ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர், தாமரை முதலுக்கும் சினைக்கும் பெயர் என்பது புலப்பட 'முதலிற்......முதலறி கிளவியும்' என்பர் ஆதலின், இந்திரனும் இலக்கணை நேர்ந்தான் ஆயிற்று.* – *பி. வி. 26*

## விளிமரபு

**'இஈ ஆகும்; ஐஆய் ஆகும்'** – தொ. சொ. 121
**'ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்'** – தொ. சொ. 122
**'உகரம் தானே குற்றிய லுகரம்'** – தொ. சொ. 123
**'ஏனை உயிரே உயர்திணை மருங்கின்**
**தாம்விளி கொள்ளா என்மனர் புலவர்'** – தொ. சொ. 124

இவை எல்லாம் நியமச் சூத்திரம். இந்நியமம் தப்பி ஆடுவே, மகடுவே, திருவே, மகவே என விளி பெறுதல்போல, நெறியிற் சென்ருன், நெறியைச் சென்ருன் என அதிகரணத் துதியை (ஏழன் பொருள்படும் இரண்டாவது) நியமம் தப்பி அகன்கமத் (செயப்படுபொருள் குன்றிய) தாதுவில் வந்தது. - பி. வி. 15

## பெயரியல்

**'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனுர் புலவர்'** - தொ. சொ. 156

உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்துதற்கு உரிய சொல் அன்ருே எனின், 'பொருண்மை......புலவர்' எனச் சொல்லைக் காரணமாகக் கூறுவது உபசாரம் என்க. - பி. வி. 18

சொன்மைதெரிதல் பொருண்மை தெரிதல் என்பன எல்லாம் தன்மை உணர்த்தாது தன்மை உடைய பொருளையே உணர்த்தலின், பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவபதப் பிரத்தியயம். வடமொழியிலே திரிலோகி என்பதனைத் திரைலோக்கியம் என்பர் கர்ணுமிர்த ஆசிரியர். சதுர்வர்ணம் என்பதனைச் சாதுர்வர்ணியம் என்பர். - பி. வி. 34

**'அம்மூ வுருபின தோன்ற லாறே'** - தொ. சொ. 160

தோன்ற லாறே என்ற தொடருள், தோன்றல் என்பது பெயரெச்சமாம், அது தோன்றும் நெறி எனப்பொருள் விரிதலின் என்க.
- பி. வி. 38

**'பாலறி வந்த உயர்திணைப் பெயரே'** - தொ. சொ. 162

சாவ என் எச்சத்து இறுதி குன்றும் என்று தொல்காப்பியர் முதலாயினர் எடுத்து ஓதிய உபலக்கணத்தால் 'பாலறிவந்த' எனச் செயவென் எச்ச வாய்பாட்டின். ஏனைய ஈறு குறைந்து வருதலும் கொள்க.
- பி. வி. 46

**'ஆண்மை அடுத்த மகன்என் கிளவி'** தொ. சொ. 163

ஆண்மையடுத்த மகன் எனத் தன்மை உணர்த்தாது, ஆண் அடுத்த மகன் எனத் தன்மைஉடைய பொருளையே உணர்த்தலின் பகுதிப்



பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவ தத்திதப் பிரத்யயம். - பி. வி. 34

**'பல்லோர்க் குறித்த திணைநிலைப்பெயரே'** - தொ. சொ. 165

'ஆனையுள் அரசன்தன் அணிகிளர் வலமருப்பு'
- சீவக. 2445

எனப் பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயரின் ஒருமையீறு விரவுப்பெயர் ஆயினமையின் அஃறிணையைக் குறிக்கவும் வந்தது.
- பி. வி. 49

**'எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து'** - தொ. சொ. 174

**'நீயிர் நீஎன வரூஉம் கிளவி'** - தொ. சொ. 188

'அல்லதன் மருங்கின்' என்ற நூற்பாவால் நும் என்பதனைப் பிராதிபதிகமாக்கி, அதன் திரிபாகிய நீயிர் என்பதனைப் பிரதமா-விபத்தியாக்கியவர், நின் - தன் முதலாயினவற்றைப் பிராதி-பதிகமாக்கி நீ - தன் முதலாயினவற்றை எழுவாய் வேற்றுமை ஆக்காமையானும், 'எல்லாம் நீயிர் நீ' 'நீயிர்நீ என வரூஉம் கிளவி' எனப் பெயரியலுள் நீயிர் என்பதனைப் பிராதிபதிகமாகச் சூத்திரம் செய்தலானும், 'அல்லதன் மருங்கின்' என்னும் சூத்திரம் வடமொழிக்கு எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று தமிழ்நூலார் அறிதற்கே செய்தார் என்க. - பி. வி. 7

**'ஆஓ ஆகும் பெயருமார் உளவே**
**ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே'** - தொ. சொ. 195

இனிச் செய்யுள் வழக்காவது 'ஆஓ ஆகும்...செய்யுளுள்ளே' என வரும். - பி. வி. 18

## வினையியல்

**'அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்'**
- தொ. சொ. 213

ஆன் என்பது 'அதுச்சொல் வேற்றுமை உடைமையானும்' எனப் பெயரின் பின்நின்று ஏழன் உருபாய் வந்தது. - பி. வி. 33

'பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலம் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே' - தொ. சொ. 229

வடநூலார் செய்து என்பதற்குக் கிருத்துவா, செய்ய என்பதற்குக் கர்த்துமுந் என்னுது, துவா – துமுந் என ஈறு பற்றிப் பெயரிடுவர். அவர் மதம் பற்றித் தொல்காப்பியரும் சிறுபான்மை 'பின்முன் கால்கடை வழிஇடத்து' எனவும் ஈற்று வினையெச்சமாக்குவர். – பி. வி. 38

'அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர்' – தொ. சொ. 231

கோழி கூவிப் போது புலர்ந்தது – உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய யாமரம் – என்புழிக் கூவப் போது புலர்ந்தது – உண்ண எஞ்சிய யாமரம் – எனத் தமிழ்நூலார் பொருள் உரைத்து, செய என் எச்சம் செய்து என் எச்சமாய்த் திரிந்தது என்றும், 'அம்முக் கிளவி' என்ற சூத்திரத்தால் நச்சினார்க்கினியர் செய்து என் எச்சம் சமான கர்த்திருகமன்றிப் பின்ன கர்த்திருகமாகவும் வரும் என்றும் கூறுவர். – பி. வி. 39

'ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந்து இயையும் வினைநிலை யானும்
தாம்இயல் மருங்கின் முடியும் என்ப' –தொ. சொ. 232

ஆன் என்பது 'ஆன்வந்து இயையும்' என்புழி, ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல்லாய், ஆங்கு என்னும் பொருள் உணர்த்தி நின்று அவ்வியயத்திதனயிற்று. – பி. வி. 33

'செய்துஎன் எச்சத்து இறந்த காலம்
எய்துஇடன் உடைத்தே வாராக் காலம்' –தொ. சொ. 239

நேற்று உண்டு வந்தான் – இஃதோ உண்டு வருகிறுன் – நாளை உண்டு வருவான் – என்றும், உண்டு வந்தான் – உண்டு வருகிறுன் – உண்டு வருவான் என்றும் காலத்திரயமும் கொண்டது. 'செய்துஎன்......காலம்' என விதித்ததும் அது. – பி, வி. 39



'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே'-தொ.சொ. 246

உலக வழக்காவது 'செயப்படுபொருளை' என்னும் சூத்திரத்து உதாரணம் முதலாயின என்க. – பி. வி. 18

## இடையியல்

'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்'-தொ. சொ. 250

கண் கால் புறம் அகம் முதலாயின அவ்வியயம் என்னும் உபசர்க்கமாயினும், அவை ஓரிடத்தின் ஏகதேசமாகவும் பொருள் படும் என்பது பற்றி நன்னூலாரும் 'இடப்பொருள் உருபே' என விதந்து ஓதினர்.

'இயல்புளிக் கோலோச்சும்' – (கு. 545) 'மரபுளி வழாஅ' – (முருகு. 95) 'இதன் மாறு என்னும்', 'சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே' – (நற். 40), 'விழித்தகண் வேல்கொண்டு எறிய' – (கு. 775) என்பனவும் ஆன் என்னும் மூன்றும் வேற்றுமைப் பொருள் ஆயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' என்பர். – பி.வி. 6

'முன்னும் பின்னும் மொழிஅடுத்து வருதலும்
தம்ஈறு திரிதலும் பிறிதுஅவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப' – தொ. சொ. 251

வாள்மன், அதுமன் – என நாமபூர்வ பதமாய் வந்த அவ்வியயீபாவம் ஆகிய முன்மொழிப் பெயர்ச்சொல் வரும். மற்றை ஆடை, கொன் ஊர் – என அவ்வியயபூர்வ பதமாய் வந்த அவ்வியயீபாவமாகிய முன்மொழி இடைச்சொல்வரும். அவ்வியயம் ஈண்டு இடைச்சொல். தொல்காப்பியரும் 'முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதலும்' எனச் சூத்திரம் செய்தார். ஆண்டுச் சூத்திரத்தால் பெற்றனமாயினும் தொகை என்பது ஈண்டுப் பெற்றும். – பி. வி. 23

'கொல்லே ஐயம்' – தொ. சொ. 268
'எல்லே விளக்கம்' – தொ. சொ. 269
'அம்மகேட் பிக்கும்' – தொ. சொ. 276

உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்துதற்கு உரிய சொல் அன்றோ எனின், 'அம்ம கேட்பிக்கும்' எனக் கருத்தாவாகச் சொல்லைக் கூறுவது உபசாரம் என்க. 'எல்லே விளக்கம்' 'கொல்லே ஐயம்' எனச் சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாகக் கூறுதலின், உரிச்சொல்லாவது பொருளும் தானும் பேதமின்றி அபேதமாதற்குரிய சொல் என்பதே தொல்காப்பியனுருக்கும் கருத்து என்க. – *பி. வி. 18*

## உரியியல்

'**பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தி**' – தொ. சொ. 297

உரிச்சொல் என்பது பதினெண் தேசிகச்சொல் வடசொல் எனத் தொகையால் பத்தொன்பதாம். அவற்றுள் ஒவ்வொன்றும் நாநார்த்த பதமும் பரியாய பதமும் ஆகிய வகையான் முப்பத்தெட்டாம். ஆதலின், திசைச்சொல்லும் வடசொல்லுமல்லது இயற்சொல்லும் திரிசொல்லும் வேறே இல்லை என மறுக்க. நாநார்த்த பதங்களுள் சிலபதம் பிரசித்தமாகியும், சிலபதம் அப்பிரசித்தமாகியும் வருதல்பற்றிப் 'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி' என்றார் ஆதலானும், இயற்சொல்லும் திரிசொல்லும் தனியே இல்லை என மறுக்க. சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாம். – *பி. வி. 18*

'**உரு உட்காகும்**' – தொ. சொ. 300
'**செல்லல் இன்னல் இன்னா மையே**' – தொ. சொ. 302
'**அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்**' – தொ. சொ. 316
'**கமநிறைந் தியலும்**' – தொ. சொ. 355

'அதிர்வும் விதிர்ப்பும்' எனச் சொல்லைக் கருத்தாவாகச் கூறுதல் உபசாரம் என்க. 'கம நிறைந்தியலும்' 'உரு உட்காகும்' 'செல்லல் இன்னல் இன்னா மையே' எனச் சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாகக் கூறுதலின், தொல்காப்பியனுருக்கும் சொல்லும் பொருளும் அபேதம் என்பதே கருத்து என்க.



'**தெவ்வுக் கொளற் பொருட்டே**' – தொ. சொ. 345
'**தெவ்வுப் பகை யாகும்**' – தொ. சொ. 346

நாநார்த்த பதத்தை எல்லாம் வர்ணவற்பாவம் என்னும் எழுத்தொப்புமையுடைய பலபொருளொடு சொல், பலசொல் அல்லது ஒருசொல் அன்று எனவும், ஒன்றல்லவை பல என்பதனுும் பல என்பதல்லது ஒருசொல் அன்று எனவும், இருசொல் ஆதலின் இருகால் உரைக்க எனவும் வடநூலார் கூறுவர். அது பற்றித் தொல்காப்பியனுரும் 'தெவ்வுக் கொளற் பொருட்டே' 'தெவ்வுப் பகை ஆகும்' என இரட்டித்துக் கூறுவர். – *பி. வி. 40*

## எச்சவியல்

'**வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே**' – தொ. சொ. 401
'**சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்**' – 402

தொல்காப்பியர், 'வடசொற் கிளவி' என்னும் சூத்திரத்தாலே தற்சமம் என்னும் பாகுபாடு ஒன்றற்கே விதி கூறி, மற்றை இரண்டும் திரிந்து தற்பவமாய் நின்றனவற்றைச் 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என்னும் சூத்திரத்தால் உரைத்தார். (உ–ம்) கீர்த்தி, மணி, வாரி, மேரு, வாயு, ஊரு, வேணு - இவை தற்சமம்; சித்தி, புத்தி, சந்தி, தச - இவை வடசிறப்பெழுத்தே வந்தன. ஆதி, விரோதி - இவை பொதுவும் சிறப்பும் கலந்தன. இவற்றை வட எழுத்தாலே எழுதி மூன்று பாகுபாடும் அறிக. வட எழுத்தாக, தமிழ் எழுத்தாக, வடிவு எழுத்தைக் கொள்ளாது ஒலி எழுத்தே கொள்க. ஆஞை, விருத்தம், நிருத்தம், விக்கியானம் என்பன - ஆணை, வட்டம், நட்டம், விண்ணணம் எனத் தற்பவமாம். இவற்றைப் பிராகிருதம் என்பாரும் உளர். ஆக்கினுபயதி, விக்கினுபயதி என்பன-வற்றை ஆணவேதி, விண்ணவேதி என்பர். பிறபாடையுள்ளும் காண்க. – *பி. வி. 2*

ஒடு என்னும் மூன்றன் உருபு அபேதத்தோடும் வரும் என்று கூறி, 'எழுத்தொடு......கும்மே' என்பதனை எடுத்துக்காட்டாகத் தருவர். – *பி. வி. 16*

**'தநுள என்னும் அவைமுத லாகிய**
**கிளைநுதல் பெயரும் பிரிப்பப் பிரியா'** – தொ. சொ. 410

இனி, தனது தமது என அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல, உயர்திணைக்கண் தனன் தனள் தனர் என வாராமையானும், சிவன் தமர் – மணிவண்ணன் தமர் – நமன் தமர் – 'கல்லாமா அன்னர் தமர்' – (கு. 814) என வருதலானும், 'தநுள என்னும் அவைமுத லாகிய – கிளைநுதற் பெயர் பிரிப்பப் பிரியா' – (தொ. சொ. 410) என்றார். 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை' – (கு. 70) – நல்லிளங்கோசர் தந்தை – என வருதலின் தந்தை என்பதும் இருமைக்கும் பொதுவாம்.
– *பி. வி. 32*

**'இருபெயர் பலபெயர் அளவின் பெயரே'** – தொ. சொ. 417

அறம் பொருள், புலிவிற் கெண்டை, சேர சோழ பாண்டியர் என வரும் உம்மைத் தொகைகள் ஒன்றினுக்கு ஒன்று அடை என்னும் விசேடணமாகாது தொகும் என்க. அது பற்றித் தொல்காப்பியர் 'இருபெயர் பலபெயர்' எனச் சூத்திரம் செய்தார். மற்றைக் 'கற்சுனைக் குவளை இதழ்' என்னும் வேற்றுமைத்தொகை முதலியன எல்லாம் இரு மொழித் தொகையாம் என்க.
– *பி. வி. 23*

**'முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்**
**இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்'** – தொ.சொ.419

உரிச்சொல் எனப்படுவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்துதற்குரிய சொல் அன்றோ எனின், 'முன்மொழி நிலையல், பின்மொழி நிலையல், இருமொழி மேலும் ஒருங்கு உடன்நிலையல்' என அதிகரணமாகச் சொல்லைக் கூறியது உபசாரம் என்க.
– *பி. வி. 18*

**'கடிசொல் இல்லை காலத்துப் படினே'** – தொ. சொ. 452

'கடிசொல்......படினே' என்பதனுல், தற்பவம் – தற்சமம் – தற்புருடன் – உற்பலம் எனத் தகரத்தை றகரமாக்கிக் கூறினும்.
– *பி. வி. 2*



**'ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்'** -தொ. சொ. 460

இனிச் செந்நிறம், வெண்ணிறம், மார்கழித்திங்கள், மாசித் திங்கள், வாளைமீன், கயல்மீன், சாரைப்பாம்பு, விரியன்பாம்பு – இவை சிறப்பும் பொதுவும் ஆகிய பெயர். கந்நியாகுமரி – கும்பகடம் – மருதந்வா என முறையே வேதத்தினும் வான் மீகத்தினும் வியாசபாரதத்தினும் வந்தன. புட்டகப்புடைவை – பெருமலைச் சிலம்பு – அராஅப் பாம்பு – வடுக்குற்றமாகிவிடும் – 'உவகை மகிழ்ச்சியில் சோர்வு' – (கு. 532) 'ஆடகச் செம்பொற் கிண்ணம்' – (சீவக. 512) – 'அலறுமுந்நீர்த் தடங்கடல்' – (சீவக. 2851) – என இவை ஒருபொருட்கு இருபெயர் பிரியாது நின்றன. இவை போல்வன வருஞ்சொல்பற்றி 'ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார்' – என்று சூத்திரம் செய்தார்.
– *பி. வி. 22*

**'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்**
**செய்என் கிளவி ஆகிடன் உடைத்தே'** – தொ. சொ. 450

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை' – குறள் *1151*

என்புழி உரையாய் என்பது உரை என நின்றது. வடநூலுள்ளும் பசகி என்பது பச எனக் குறைந்து நின்று பசகி எனப் பொருள்படும். பஜ, தியச, திச என்பனவும் அது. வடநூலார் இவ்வாறு உரைக்கும் கருத்தே பற்றித் தொல்காப்பியரும் 'செய்யாய்......உடைத்தே' என்றார்.
– *பி. வி. 46*

## பொருளதிகாரம்

**'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே'** – தொ. பொ. 93

இரண்டாம் வேற்றுமையில் கருமமும் கருத்தாவும் தடுமாறி நிற்றலும் உண்டு – 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்ற தொடரில் கிழவன் கிழத்தியைக் காண்டலும், கிழத்தி கிழவனைக் காண்டலும் என எழுவாயும் செயப்படுபொருளும் தடுமாறிநிற்றல் காண்க.
– *பி. வி. 11*

'நோயும் இன்பமும் இருவகை நிலையின்
காமம் கண்ணிய மரபுஇடை திரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபி னவற்றோடு கெழீஇச்
செய்யா மரபின்] தொழில்படுத்து அடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோல் சேர்த்தியும்' - தொ. பொ. 196

'சென்றதுகொல் போந்ததுகொல் ......... நெஞ்சு' எனவும் 'வைகல் பூங்கழி வாய்வந்து மேயும் குருகினங்காள்' (திவ். பிர. 3227) எனவும் 'வீதி உளங் கிழித்து உருவச் சென்றான்' (சீவக. 2138) எனவும் முதலாக வரும் இவ்விலக்கணங்கள் சத்தநூல் இலக்கணம் அன்மையின், தொல்காப்பியர் பொருளியலுள் 'நோயும் இன்பமும்' என்னும் சூத்திரத்துள் 'உறுப்புடை...... மறுத்துரைப்பது போல்' எனச் செய்யாமரபின் தொழிற்படுத்து அடக்குவர். வடமொழியில் காளிதாசனும் மேக சந்தேசத்தினுள் இவ்வாறு கூறுதல் காண்க. இவ்விலக்கியங்களே இலக்கணமாகப் பிற்காலக் கவிகளும்,

'முல்லையெனும்
மென்மாலை தோள்அசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது' – நளவெண்பா

எனவும்,

'வால்வளை வாய்விட்டு ஆர்ப்ப'
'கண்களே சொல்லும் வாய்திறந்தே'

எனவும் கூறுவர். – பி. வி. 47

'புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்' - தொ. பொ. 261

தூரான்வயத்துள் பதத்தொடு பதம் பிரித்துக் கூட்டலன்றி விகுதியைப் பிரித்தும் கூட்டுதலுக்குப் 'பொறிநுதல் வியர்த்தல்' என்பது - வியர் பொறித்த நுதலாதல் என்பது எடுத்துக்காட்டு. – பி. வி. 19



'ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப' - தொ. பொ. 330

இது அநுவாதத்தால் புரோவாதம் கூறாமலும் சித்திக்க நின்ற மாட்டேறும்; ஒற்று அளபெடுத்தல் பற்றி முன்னர்க் குறிப்பிடாமல், முன்பு குறித்தது போன்று பின்னர் மாட்டெறிதலின் என்க. – பி. வி. 50

'அதாஅன் றென்ப வெண்பா யாப்பே' – தொ. பொ. 394

தனிமொழியும், தொடர்மொழியும், காரணமின்றி வன்ன விகாரம் – வன்ன விபரியயம் – வன்ன நாசம் – வன்ன ஆகமம் – என்ற நான்கும் பெறும். அவற்றுள் 'அதா அன்று' – பூர்வபத விகாரம். – பி. வி. 26

'ஆயிரு தொடைக்கும் கிளைஎழுத்து உரிய' – தொ. பொ. 406

'ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' – நன். 29

'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' – குறள் 169

முதலாக வருவனவற்றுள், ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலில் கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க. அதுபற்றி 'ஆயிருதொடை' என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலி வகையால் கிளை எழுத்து எனப்படும் என்றார். – பி. வி. 5

'நூல்எனப் படுவது நுவலுங் காலை' – தொ. பொ. 478

'நூல்எனப் படுவது' எனத் தொல்காப்பியத்துள் ஈறு தோன்றிய சாதி ஒருமை வரும். – பி. வி. 50

'அம்போ தரங்கம் அறுபதிற் றடித்தே' – தொ. பொ. 463
'ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்' - 480
'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை' - 574
'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை' - 632

தொல்காப்பியனார் தம் நூலுள் ஆரிய மொழிகளைச் சிறுபான்மை அம்போதரங்கம், சூத்திரம், குஞ்சரம், வைசிகன் என்றாற்போலத் தற்சமம் தற்பவமாகக் கூறினர். – பி. வி. 2

★

## சேனாவரையமும் - பிரயோகவிவேக உரையும்

தமிழுக்கும் வடமொழிக்கும் பெரும்பான்மையும் இலக்கணம் ஒன்றே என்று கொள்ளும் இவ்வாசிரியர், வடநூற்கடலை நிலை கண்டுணர்ந்து வடமொழி மரபினை ஏற்குமிடங்களிலெல்லாம் கொண்டு தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த சேனாவரையரிடத்தில் மிகவும் ஈடுபாடுடையவர். தாம் வரைந்த 51 நூற்பாக்களின் உரையிடையே 27 இடங்களில் சேனாவரையர் உரைச்செய்தியை எடுத்துக்காட்டியுள்ளார். சிற்சில இடங்களில் சேனாவரையர் உரைக்கு விளக்கமும் வரைந்துள்ளார். அவற்றை நிரலே காண்பாம்.

### கிளவியாக்கம்

**'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'** – தொ. சொ. 1

ஆண்டகை, பெண்டகை, மக்கட்சுட்டு – இவை பின்மொழி ஆகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். மக்கட்சுட்டு என்பதனைக் கல்லாடரும் பின்மொழி ஆகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். அதனைச் சேனாவரையர் அன்மொழித்தொகை என்பர். நச்சினார்க்கினியர் ஆகுபெயர் என்பர். அவ்விரண்டும் இருமொழி மேலுமன்றி வேறு ஒருமொழிமேல் நில்லாமையின் அவ்வுரை பொருந்தாமை அறிக. (இவ்விடம் ஒன்றே சேனாவரையர் கருத்து இவ்வாசிரியரால் மறுக்கப்படும் இடமாகும்). – *பி. வி. 22*

**'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே'** –தொ. சொ. 1
**'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்'** ,, 4
**'திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன'** ,, 80
**'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'** ,, 394

உரிச்சொல்லாவது பொருளும் தானும் பேதமின்றி அபேதமாதற்குரிய சொல். அர்த்தநாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன் போலச் சொல்லும் பொருளும் பேதாபேதமாய் வரும் என்பாரும் உளர். காளிதாசனும் 'வாகர்த்தாவிவ' என்னும் சுலோகத்தால்



அவ்வாறு கூறுவன். பல நூற்பாக்களில் சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாகக் கூறுதலின், தொல்காப்பியனாருக்கும் சொல்லும் பொருளும் அபேதம் என்பதே கருத்து என்க. இனிச் சேனாவரையரும் சத்தநூலார் உரைத்தாங்கு உரைப்பர். என்னை? 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' என்னும் சூத்திரத்தினும், 'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்' என்னும் சூத்திரத்தினும் முறையே 'செலவினும் வரவினும்' என வருதலானும் 'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி' (*12*) என ஒற்றுமைப்பட்டு வருதலானும் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாம் என்றும், ஆறுவதன் சூத்திரத்துத் 'திரிந்து வேறுபடூஉம்' என்பதற்கு உதாரணம் எள்ளதுசாந்து, கோட்டதுநூறு என்பனவற்றோடு ஒருங்கு 'சொல்லது பொருள்' என்பதனையும் காட்டி முழுவதூஉம் திரிந்த என்றும், 'மொழிப் பொருள் காரணம்' எனனும் சூத்திரத்தில் பொருளொடு சொற்கு இயைதல் இயற்கை ஆதலான் என்றும் கூறுவர். – *பி. வி. 18*

**'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்**
**பகுதிக் கிளவி வரைநிலை யிலவே'** – தொ. சொ. 17

சேனாவரையர் வெள்யாடு வெண்களமர் என்பன முன்மொழிக் குணம் பற்றி வாராது சாதிபற்றி வந்த என்பர். அவ்வாறு 'கிருஷ்ண சர்ப்பம்' என்பதனைக் காசிகாவிருத்திகாரரும் கூறுவர். – *பி. வி. 22*

**'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'** – தொ. சொ. 19
**'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்'** – தொ. சொ. 20

இயற்கையாவது பொருட்குப் பின் தோன்றாது உடன் நிகழும் தன்மை; செயற்கை ஒரு காரணத்தாலே திரியும் தன்மை – [இவை சேனாவரையர் உரைத்தவை]. – *பி. வி. 5*

**'பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்**
**அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே'** – தொ. சொ. 51

'தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டனரேல்' – சிலப். 7 – 32

'தானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்'
– பழம்பாடல்

'திங்களும் சான்றோரும் ஒப்பர்' – நாலடி. 151

'தானும்தன் புரவியும் தோன்றினன்'

என்பன தலைமைப்பொருள் வினையொடு முடிவதே தலைமையில் பொருளின் வினையும் முடிந்ததாய்க் காரகமாம்; 'பலவயினானும்' (சொ. 51) என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் இவ்வாறு உரைத்தார். – பி. வி. 16

'குடிமை ஆண்மை இளமை மூப்பே.........
அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்' –தொ. சொ. 56

சொன்மை தெரிதல், பொருண்மை தெரிதல் – சொல்தெரிதல், பொருள் தெரிதல்; இளமைத்தன்மைக்கு உளம்மெலிந்து இரங்கல் – இளந்தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்; முப்பத்து மும்மைத்தேவர் – முப்பத்து முத்தேவர்; இருமைவகை தெரிந்து– (கு. 23) இருவகை தெரிந்து; இம்மைப்பிறப்பில் பிரியலம் (கு. 1315) – இப்பிறப்பில்பிரியலம்; குறுமை எழுத்தின் இயல்பே ஐகாரம் – குற்றெழுத்தின் இயல்பே ஐகாரம்; இரு பேராண்மை செய்த பூசல் (குறுந். 43) இரு பேராண்மையர் செய்த பூசல்; மடிமை குடிமைக்கண் தங்கின் (கு. 608) குடிமையான்கண் தங்கின்; ஆண்மை அடுத்த மகன் என்கிளவி – ஆண் அடுத்த மகன் என்கிளவி (அஃதாவது ஆண்மகன் என நிற்கும்), வல்லது அரசு, (கு. 385) வல்லது அமைச்சு. (கு. 633)

'செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்அடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து' – தண்டி. எ–டு

என வருவன எல்லாம் தன்மை உணர்த்தாது தன்மை உடைப் பொருளையே உணர்த்தலின், பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்தியப் பிரத்தியயம். இனிக் 'குடிமை ஆண்மை' என்னும் சூத்திரத்தினும் திருவள்ளுவரினும் இளம்பூரணர் சேனாவரையர் பரிமேலழகர் ஆகியோர் இவற்றை ஆகுபெயராகிய இலக்கணை என்பர். – பி. வி. 34



'காலம் உலகம் உயிரே உடம்பே.........
பால்பிரிந் திசையா உயர்திணை மேன' – தொ. சொ. 56

நாநார்த்த பதம் எல்லாம் இருசொல் ஆதலின் இருகால் உரைக்க என வடநூலார் கூறுவர். அதுபற்றிச் சேனாவரையரும் 'காலம் உலகம்' என்னும் சூத்திரத்துள் உலகம் என்பதற்கு அவ்வாறு உரைப்பர். – பி. வி. 40

## வேற்றுமையியல்

'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' – தொ. சொ. 65

'பொருண்மை.........பெயர்ப்பய னிலையே' – தொ. சொ. 66

சேனாவரையர் 'எழுவாய் வேற்றுமை' என்னும் சூத்திரத்திற்கு முதல் வேற்றுமையாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமை என்றும், பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாமையும் பிறிது ஒன்றனோடு தொடராமையும் நிற்கும் நிலைமை என்றும் கூறி, 'பொருண்மை சுட்டலுள்' (66) உருபு ஏற்றல் பெயர்க்கு இலக்கணமாயினும் உருபு ஏலாதவழியும் பெயர் ஆமாறுபோல எழுவாய் வேற்றுமை கிரியாசமாத்தியாகிய பயனிலை கொள்ளாதவழியும் எழுவாய் வேற்றுமையேயாம் என்றும், செயப்படுபொருள்முதலியவற்றிற்கும் கருத்தாவிற்கும் பொருள் மாத்திரமே ரூபபேதம் காட்டும் வேற்றுமை என்றும், பன்மை பற்றிய வழக்காலே ரூபபேதம் காட்டாத கருத்தா ஆகிய பெயரையும் எழுவாய் வேற்றுமை என்றார் என்றும் கூறி உரையாசிரியர் முதலாயினாரை மறுத்த-லானும், யாம் உரைத்ததே பூருவாசிரியருக்கும் கருத்தாயிற்று.
– பி. வி. 8

'இரண்டாகுவதே
ஐஎனப் பெயரிய......தோன்றும் அதுவே' – தொ. சொ. 71

இனி, வாக்கியபதியத்துள்ளும் கையடத்துள்ளும் நிர்வர்த்-தியம் – விகாரியம் – பிராப்பியம் எனக் கூறியவண்ணம் சேனா வரையர் முதலாயினர் இயற்றப்படுவதும் – வேறுபடுக்கப்

படுவதும் - எய்தப்படுவதும் எனச் செயப்படுபொருளை மூன்றாக்குவர். இயற்றுதலாவது முன் இல்லதனை உண்டாக்குதல்; வேறுபடுத்தலாவது முன் உள்ளதனைப் பிரித்தல்; எய்தப்படுதலாவது அவ்விரண்டும் இன்றித் தொழிற் பயனை உறுந்துணையாய் நிற்றல் என நிருத்தியும் கூறி, எயிலை இழைக்கும் - மரத்தைக் குறைக்கும் - பொருளைப் பெறும் என உதாரணம் காட்டுவர்.

— பி. வி. 12

## வேற்றுமை மயங்கியல்

**'கருமம் அல்லா.........வேற்றுமை'** — தொ. சொ. 84

இந்நூற்பாத் தொடக்கத்தில் சேனாவரையர் பொருள் மயக்கம் உருபு மயக்கம் என்பனவற்றிற்குக் கூறிய விளக்கமே இந்நூலுள் இடம்பெற்றுள்ளது.

பொருள் மயக்கம் - அஃதாவது தன் பொருளின் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் சென்று உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் சிறுபான்மை தம்முள் இயைபுடையவாதல்; உருபு மயக்கமாவது தன் பொருளில் தீர்ந்து பிறிது ஓர் உருபின் பொருட்டாதல் - என்று சேனாவரையர் முதலாயினார் கூறியதானும் தெளிக.

— பி. வி. 15

**'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்**
**எச்சம் இலவே பொருள்வயி னான'** — தொ. சொ. 100

'அச்சக்கிளவிக்கு' என்னும் சூத்திரத்துள் பழியின் அஞ்சும் - பழியை அஞ்சும் என இரண்டும் ஒத்த கிழமையவாய் நின்றன என்றும், அஃதேல் ஒரு பொருட்கண் வரின் அன்றே மயக்கமாவது? இவை செயப்படுபொருளும் ஏதுவும் ஆகிய பொருள் வேறுபாடு உடைய ஆகலின் மயக்கம் யாது என்றும், அற்றன்று, ஈண்டு ஏதுவாதலே அஞ்சப்படுதலாய் வேறன்றி நிற்றலின் ஒரு பொருட்கண் வந்தனவேயாம் என்றும் சேனாவரையர் உரைத்ததனானும் அறிக. — பி. வி. 15



**'எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்**
**பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே'**

— தொ. சொ. 107

மரத்தைக் குறையான் - வேலான் எறியான் என்பனவற்றுள் குறையான் எறியான் என்பன வினை அன்மையின் மரமும் வேலும் கருமமும் கருவியும் ஆமோ எனின், இவையும்,

'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்' — கு. 258

என்பது போலக் கொள்க. இவ்வாறு 'எதிர்மறுத்து மொழியினும்' என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் உரைத்தார்.

— பி. வி. 16

**'வினையே செய்வது......தொழில்முதல் நிலையே'**

— தொ. சொ. 112

'வினையே செய்வது' என்னும் சூத்திரத்துச் சேனாவரையரும் அவ்வெட்டினையும் காரகம் என்பர். — பி. வி. 8

**'வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்'** — தொ. சொ. 113

நெறியிற் சென்றான், நெறியைச் சென்றான் என அதிகரணத்-துதியை நியமம் தப்பி அகன்மகதாதுவில் வந்தது. வடமொழி நளன் கதையில் 'வனத்தில் அரமனையைச் சென்றான்' என்னும் கதிதாதுவும் அது. அத்துவாநங் கச்சதி, அத்துவநி கச்சதி - என வடமொழியில் வரும். சேனாவரையரும் 'வழங்கியல் மருங்கின்' என்னும் சூத்திரத்துச் செயப்படுபொருள் குன்றிய வினையை உணர்த்தும் சொல் இரண்டாவதனோடு இயையாது என்றார்.

— பி. வி. 15

**'முதலிற்கூறும்......ஆகுபெயர்க் கிளவி'** — தொ. சொ. 114

தொல்காப்பியம் - காபிலம் என்பன ஈறு திரிந்த ஆகுபெயர் அன்றோ எனின், 'முதலிற் கூறும்' என்னும் ஆகுபெயர்ச் சூத்திரத்துள் சேனாவரையர், வெற்பன் - சேர்ப்பன் என்பன போல வந்த வினைக்குறிப்புப்பெயர் என்பராகலானும், ஈறு திரிதல் ஆகுபெயர்க்கு ஆகாமை அறிக. — பி. வி. 30

## பெயரியல்

'பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே.........
அன்றி அனைத்தும் அவற்றியல் பினவே' - தொ. சொ. 165

இனி, 'பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயரே' என்னும் சூத்திரத்துள், சேனாவரையர், அந்தணர் – அரசர் என்னும் பன்மையீற்றுச் சாதிப்பெயரை உயர்திணைப்பெயர் என்றும், அந்தணன் – அரசன் என்னும் ஒருமை ஈற்றுச் சாதிப்பெயரை விரவுப்பெயர் என்றும் கூறுவர். அதுவும் ஒக்கும். – பி. வி. 49

## வினையியல்

'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே' - தொ. சொ. 215

'காலக்கிளவி' என்னும் சூத்திரத்தில், குழையன் என்புழி உடைப் பொருள் மேற்பட உடையான் கீழ்ப்பட அன்ஈறு குழை என்னும் மேலைக்கிளவியொடு வேறுபாடு இலதாய் நின்றது என்பர் சேனாவரையர். அஃது ஒக்கும். [இன்னும் 'மேலைக் கிளவியொடு வேறுபாடு இல' என்றதனன், வந்தனன் எனத் தொழின்மை மேற்படத் தொழில் உடைப்பொருள் கீழ்ப்பட முற்றாய்நின்று உணர்த்தியவாறு போல, உடையன் எனக் குறிப்பு வினையும் உடைமை மேற்பட உடையான் கீழ்ப்பட முற்றாய் நின்று உணர்த்துதலும் கொள்க. வந்தான், உடையான் எனப் பெயராயவழித் தொழிலுடைப் பொருளும், உடையானும் மேற்பட்டுத் தோன்றுமாறு அறிக – என்பதே இப்பொழுது கிடைக்கும் சேனாவரையர் உரைப்பகுதி.] – பி. வி. 32.

'இன்று இல உடைய என்னும் கிளவியும் .........
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்' – தொ. சொ. 220

'அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே' (புறநா. 173) வடாது வேங்கடம், தெனாது குமரி, குணாது கடல், குடாது குடகம் என்பன – குடக்கு உள்ளது குடாது, தெற்கு உள்ளது தெனாது,



வடக்கு உள்ளது வடாது, குணக்கு உள்ளது குணாது, சேய்மைக் கண்ணது சேய்த்து, அணிமைக்கண்ணது அணித்து எனப்படும். இவற்றைச் சேனாவரையரும் 'இன்றுஇல' என்னும் சூத்திரத்துள், ஏழாம் வேற்றுமைப் பொருட்கண்வந்த வினைக் குறிப்புப் பெயர் என்பர். வினைக்குறிப்புப் பெயரெல்லாம் தத்திதனும். – பி. வி. 33

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே'
– தொ. சொ. 246

கூரைமேய்ந்தது, கன்று விட்டுக்கொண்டது, பசுக் கறந்தது, திண்ணை மெழுகிற்று. சோறு அட்டது, கறி பொறித்தது எனக் கர்த்திருவற்பாவம் என்னும் கருமகருத்தா வரும். 'செயப்படு பொருளை' என்றும் சூத்திரத்துள் சேனாவரையர் அரிசிதானே அட்டது என உதாரணம் காட்டி, அத்துணை எளிதின் அடப்படும் எனவும் கூறுவர். – பி. வி. 11

## இடையியல்

'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும் .........
அப்பண் பினவே நுவலுங் காலை' – தொ. சொ. 250

உருபுகள் பிறிது ஓர் உருபு மாத்திரையாய் நிற்பனவற்றையும் வேற்றுமைப் பொருட்டு எனவும், பொருள் எனவும், சேனாவரையர் முதலாயினரும் உரைப்பர். 'இயல்புளிக் கோலோச்சும்' (கு. 545) 'மரபுளி வழாஅ' (முருகு. 95) 'இதன்மாறு என்னும்' 'சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே' (நற். 95) 'வேல் கொண்டு எறிய' (கு. 775) என்பனவும் ஆன் என்னும் மூன்றும் வேற்றுமைப் பொருள் ஆயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுநவும்' என்பர். அது சேனாவரையர் உரையானும் காண்க. – பி. வி. 6

## எச்சவியல்

'தநநுஎ என்னும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா' – தொ. சொ. 410

தனது - தமது என்று அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல உயர்திணைக்கண் தனன் - தனள் - தனர் என வாராமையானும், சிவன்தமர், மணிவண்ணன்தமர், நமன்தமர், 'கல்லாமா அன்னார்தமர்' (கு. 814) என இருமையினும் வருத லானும், 'தநநுஎ' என்னும் சூத்திரத்துள் சேனாவரையர் இவற்றை இருமைக்கும் பொது என்றும், முதலும் ஈறும் பிரிக்கப் படா என்றும் கூறுவர்.
— பி. வி. 32

'வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே.........
அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே' - தொ. சொ. 412

காத்தியாயனர் சமாசனில் விபத்தி இல்லை என்று சித்தாந்தம் பண்ணினர். அவர் உரைத்தாங்கு உரைப்பர் சேனாவரையரும். அது காட்டுதும்......இவ்வுரை 'வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே' என்னும் சூத்திரத்தில் சேனாவரையர் எழுதிய உரை என்றவாறு - என்று அவர் உரைத்த உரை முழுதும் எழுதப் பட்டுள்ளது.
— பி. வி. 19

'வினையின் தொகுதி காலத் தியலும்' - தொ. சொ. 415

'வினையின் தொகுதி' என்னும் சூத்திரத்துள் உண் - தின் - செல் என்னும் முதல்நிலைகளை வடநூலார் தாது என்பர் என்று சேனாவரையரும் உரைப்பர்.
— பி. வி. 35

'பண்புதொக வரூஉம் கிளவி யானும்.........
ஈற்றுநின்று இயலும் அன்மொழித் தொகையே'
- தொ. சொ. 418

இச்சூத்திரத்திற்குப் 'பண்புச்சொல் தொகும் சொல்லினும்......... திரிந்த தாயை உடையான் என விரியும். பிறவும் அன்ன'. இது சேனாவரையர் கருத்து - எனச் சேனாவரையர் உரை முழுதும் எழுதப்பட்டுள்ளது.
— பி. வி. 24

'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே' - தொ. சொ. 450



இச்சூத்திரத்திற்கு வடநூலார் மதம் பற்றிச் சேனாவரையர் செய்யாய் என்னும் முன்னிலை ஏவல் வினைச்சொல் செய் எனக் குன்றும் என்று உரைப்பர்.
— பி. வி. 46

'வினைஎஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' - தொ. சொ. 457

இச்சூத்திரத்தால் சேனாவரையர் செய்து என் எச்சம் சமான கர்த்திருகம் அன்றிப் பின்ன கர்த்திருகமாக்வும் வரும் என்று கூறுவர்.
— பி. வி. 39

'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்.........
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்' - தொ. சொ. 468

'பிரித்தனர் காட்டல்' என்னும் சூத்திரத்தில் சேனாவரையரும் அருவாள நிலத்தான் அருவாளன், சோழ நிலத்தான் சோழியன் எனவரும் - என்பர்.
— பி. வி. 29

★

## நச்சினார்க்கினியமும் பிரயோக விவேக உரையும்

இவ்வாசிரியர் நச்சினார்க்கினியர் உரைப் பகுதிகளைச் சிறுபான்மை ஏற்றுப் பெரும்பான்மை மறுத்துத் தம் நூற்பாக் களுக்கு உரை வரைந்துள்ளார். ஈண்டு வரும் நச்சினார்க்கினியர் உரை பற்றிய செய்திகளை நிரலே காண்பாம்.

### எழுத்ததிகாரம் - நூன்மரபு

'ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே' - தொ. எ. 27

இந்நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் 'இனி, உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என இரு மொழிக்கண் வருவன உதாரணம் காட்டினாராலெனின், ஆசிரியர் ஒருமொழியாமாறு ஈண்டுக் கூறி, இருமொழி புணர்த்தற்குப்

புணரியல் என்று வேறோர் இயலும் கூறி அதன்கண் 'மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும்' (*107*) என்று கூறினர்; கூறியவழிப் பின்னும் 'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி' (*163*) என்றும் பிறண்டும் ஈறுகள் தோறும் எடுத்தோதிப் புணர்ப்பர் ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டில் கூறியது கூறல் என்னும் குற்றமாம். அதனால் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க' என்று விளக்கி மெய்மயக்கத்தை ஒருமொழிக்கண்ணேயே கொள்வர்.

வட நூலார் சையோகம் ஒருமொழியினும் புணர்மொழியினும் கொள்வர். அதுபற்றிச் சூத்திரம் செய்தபடி இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறு கொள்வர். அக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் ஒருமொழியிற் கொண்டு, இருமொழியிற் கொள்ளாது உதாரணம் இறந்த என்பர். – *பி. வி. 5*

## மொழி மரபு

'அகர இகர ஐகாரம் ஆகும்' – தொ. எ. 54

'அகர உகரம் ஔகாரம் ஆகும்' – தொ. எ. 55

'அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' –தொ. எ. 56

அகரமும் இகரமும் கூட்டிச்சொல்ல ஐகாரம் போல இசைக்கும், அது கொள்ளற்க; அகரமும் உகரமும் கூட்டிச்சொல்ல ஔகாரம் போல இசைக்கும், அது கொள்ளற்க; அகரத்தின்பின் இகரமேயன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும் ஐ எனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவுபெறத் தோன்றும் என்றவாறு – என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

இம்மூன்று சூத்திரங்களானும் சந்தியக்கரமாக நேரே கூறினர். அவ்வாறு கொள்ளாது உரைகாரர் 'ஐ ஒத்து இசைக்கும்...ஔ ஓரன்ன' (*125*) என நன்னூலார் மதம் பற்றி விரித்து, விகாரமாக்கி, நலிந்து பொருள்கொண்டு போலி எழுத்து என்று இடர்ப்படுவர். அவர் போலி எழுத்து என்றால்,



'ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' – *நன். 29*

'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' – *குறள் 169*

முதலாக வருவனவற்றுள் ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால் செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க. அது பற்றி 'ஆபிருதொடை' என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலி வகையால் கிளை எழுத்து எனப்படும் என்றார். இனி, நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்துள் போலி எழுத்துக் கொள்ளற்க என்பர். கொள்ளா எழுத்திற்கு இலக்கணம் கூறின் அந்நூற்கு நின்று பயனின்மை என்னும் குற்றம் தங்கும் என்க. நன்னூலாரும் போலியைத்தள்ளாது எழுத்திலக்கணம் 'பன்னிரு பாற்றதுவே' (நன். *57*) என்றலின், போலி எதுகை நிமித்தம் அங்கீகாரம் ஆயிற்று. இளம்பூரணரும் போலி எழுத்தைக் கொள்ளற்க என்று கூறாமை அவர் உரையில் காண்க. – *பி. வி. 5*

## புணரியல்

'நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
ஆங்கஅந் நான்கே மொழிபுணர் இயல்பே' – தொ. எ. 108

நிலைமொழியது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையான் முறையே பிறந்து கெடுவன ஒருங்கு நின்று புணருமாறு இன்மையின், புணர்ச்சி என்பது ஒன்று இன்றாம் பிற எனின், அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வர் ஆதலின், அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம்; ஆகவே பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க – என்று இந்நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்தனவற்றை உட்கொண்டு, இவ்வாசிரியர் அத்தொடர்களைக் குறிப்பிட்டு,

விளக்கமாகக் கண் கூடு காட்சியளவை பூர்வபதத்தின் ஈற்றெழுத்தும் உத்தரபதத்தின் முதல் எழுத்தும் தாப்பிசை என்னும் பாசபந்தம் போலப் புணர்வதன்றிப் பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங்குலிநியாயம் போலப் புணரா ஆகலின் 'நிறுத்தசொல்லின்.........இயைய' என்றார் தொல்காப்பியர் என்றும் குறிப்பிட்டுள்ளார். – *பி. வி. 26*

## சொல்லதிகாரம் – கிளவியாக்கம்

**'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'** – தொ. சொ. 1

சொல் என்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருள் தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை எனவும், மக்கட்சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என இருபெயரொட்டுப் பண்புத்தொகை; சுட்டு – நன்குமதிப்பு; அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்தி நின்றது எனவும் இந்நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் சத்தநூலாரொடு மாறுபடச் சொல்லைப் பொருள் உணர்த்தற்குக் கருவி என்பர். – *பி. வி. 15*

மக்கட்சுட்டு என்பதனை நச்சினார்க்கினியர் ஆகுபெயர் என்பர். – *பி. வி. 22*

**'குடிமை ஆண்மை இளமை மூப்பே...........**
**அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்'** – தொ. சொ. 57

நச்சினார்க்கினியர் குடிமை ஆண்மை என்பனவற்றைப் பண்பின் மேலும் பண்புடைப் பொருளின் மேலும் நிற்கும் என்பர்.

பெண்மை ஆண்மைகளுக்குப் பொருள் கட்புலனாகிய அமைதித் தன்மை, ஆளுந்தன்மை என்பர் நச்சினார்க்கினியர். அது பொருந்தும். – *பி. வி. 34*

## வேற்றுமையியல்

**'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே'**
– தொ. சொ. 66



உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் பெயர் தனித்துநின்ற காலை எழுவாய் வேற்றுமை ஆகாது என்றும், அது 'பெயர் தோன்று நிலை' என்பதற்கு நலிந்து பயனிலை தோன்ற நிற்கும் நிலையாகிய அவசரத்தில் எழுவாய் வேற்றுமையாம் என்றும் உரைத்தனர். பெயர்தாம் பயனிலை தோன்ற நின்றால், கர்த்திருகாரகம் என்னும் எழுவாய் ஆவதன்றி, ரூபபேதம் பெற்ற எழுவாய் வேற்றுமை ஆமோ என மறுக்க. அன்றியும், அவ்வாறே நிலங்கடந்தான் முதல் குன்றக்கூகை இறுதியாக ஆறு உருபும் வாராது தத்தம் பயனிலை தோன்ற நிற்கும் நிலையே அமையும்; அங்ஙனம் அமைவனவற்றை 'ஐஎனப் பெயரிய' (சொ. *71*), 'ஒடுஎனப் பெயரிய' (சொ. *73*) எனப் பெயர் ஒழிந்த ஆறு விபத்தியும் எடுத்து ஓதியது நின்று பயனின்மை என்னும் குற்றம் தங்குதற்கோ என மறுத்து, அஃது உரையன்மையாதல் அறிக. பின்னூல் செய்த குணவீர பண்டிதரும்,

'பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப் படுதல் – கயல்விழியாய்
ஈற்றின் உருபாறும் ஏற்றல்முக் காலமும்
தோற்றாமை நிற்றல் துணிவு' – நே. சொ. *17*

என நேமிநாதத்துள் கூறினர். – *பி. வி. 8*

## வேற்றுமை மயங்கியல்

**'கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்**
**கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே'**
– தொ. சொ. 119

பிற என்றது வேறு என்றதனால், அவை தொல்காப்பியம், கபிலம், வில்லி, வாளி என ஈறு திரிதலும் கொள்க என்றார் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியம் – காபிலம் என்பன ஈறு திரிந்த ஆகுபெயர் அல்லவோ எனின், 'முதலிற் கூறும்' என்னும் ஆகுபெயர்ச் சூத்திரத்துள், சேனாவரையர், வெற்பன்–சேர்ப்பன் என்பன போல

வந்த வினைக்குறிப்புப் பெயர் என்பர் ஆகலானும், ஈறு திரிதல் ஆகுபெயர்க்கு ஆகாமை அறிக. - பி. வி. 30

## வினையியல்

'அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர்' - தொ. சொ. 233

'அம்முக் கிளவி' என்னும் சூத்திரத்தால் நச்சினார்க்கினியர் செய்து என் எச்சம் சமான கர்த்திருகம் அன்றிப் பின்ன கர்த்திருகமாகவும் வரும் என்று கூறுவர். - பி. வி. 39

## எச்சவியல்

'தநநுஎ என்னும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா' - தொ. சொ. 410

சேனாவரையர் இவற்றை இருமைக்கும் பொது என்றும், முதலும் ஈறும் பிரிக்கப்படா என்றும் கூறுவர். இக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் தாம் நாம் என்பன குறுகி நின்று ஈறுபெற்ற என்று மாறுபடக் கூறுவர். - பி. வி. 32

'வேற்றுமைத் தொகையே உவமத் தொகை' - தொ. சொ. 412

சேனாவரையர் தம்பொருள் ஒட்டிய சொல்லால் தோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாது நிற்றலே தொகை என்பர். இனி, நச்சினார்க்கினியர், வேற்றுமை உருபு முதலிய சொற்களின் ஈறு தொகுதலின் அவ்வாறு தொகை ஆயின என்பார் மதம்பற்றி, அவர் உரைத்தாங்குத் தாமும் உரைப்பர். [ஆறு உருபும் வெளிப்படல் இல்லது (ந. 363) 'உவமஉருபுஇலது' (ந. 366) 'உம்இலது' (ந. 368) என்றவற்றை ஈற்றிலே நின்று கெட்ட அழிவுபாட்டபாவமாகக் கொள்ளாது முன் உள்ளதன் அபாவமாகக்கொள்க.] - பி. வி. 19



'மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்' - தொ. சொ. 449

'இல்வாழ்வான் என்பான்' - குறள் 41

'தினைத்துணையும், தேரான் பிறன் இல் புகல்' - குறள் 144

'நட்புஅரண் ஆறும் உடையான்' - குறள் 381

'வறியவன் இளமைபோல்' - கலி. 10-1

என்றாற்போல்வன எல்லாம், ஒருமைப்பொருள் கூறினவேனும் பன்மைப்பொருளை உணர்த்தலின், மெய்ந்நிலை மயக்கம் ஆயிற்று; மெய் - பொருள்; என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

சாதி ஒருமையைச் சாதி ஏகவசனம் என்பர். அஃதாவது ஒரு சொல் ஒருமை ஈறு தோன்ற நின்றும், தோன்றாது நின்றும், பின் ஒருமைப்பன்மை வினை ஈறாக மேல்வந்து முடிக்கும் சொற்களும் இன்றித் தானே பன்மைப்பொருள் உணர்த்துவது. 'சிவிகை, பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' (குறள் 37) என உயர்திணைக்கண் வரும். இதனைத் தொல்காப்பியத்துள்,

'மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்' - தொ. சொ. 449

என்பதனால் அடக்குவர் நச்சினார்க்கினியர் என்க. - பி. வி. 50

'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே.' - தொ. சொ. 450

ஒரு தொழிலினைச் செய்யாய் என்னும் மறையாகிய முன்னிலை வினைச்சொல் அத்தொழிலினைச் செய் என்னும் உடன்பாட்டு முன்னிலை வினைச்சொல்லாம் இடத்தினை உடைத்து என்றவாறு என்று உரை கூறுவார் நச்சினார்க்கினியர்.

இனி, நச்சினார்க்கினியர் செய்பாய் என்னும் எதிர்மறைச் சொல் செய் என்னும் உடன்பாட்டுச் சொல்லாம் என்றும், அது குன்றினது அன்று என்றும் உரைப்பர். செய்யீர் என்பதும் அவ்வாறு பொருள் படுதலின்,

'செய்யீர் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யும் என் கிளவி ஆகிடன் உடைத்தே'

என வேறு ஒரு சூத்திரம் செய்யவேண்டும்.

'மகன்எனல், மக்கட் பதடி எனல்' – குறள் 196

என்பதும் உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு விதியும் பெறும். அதற்கும் சூத்திரம் வேறு வேண்டும். தொல்காப்பிய னுருக்கு, உடன்பாடும் எதிர்மறையுமாய் நிற்கும் என்பது கருத்தாயின்,

'செய்யாய் என்னும் எதிர்மறை வினைச்சொல்
செய்வாய் என்னும் உடன்பா டாகும்'

எனச் சூத்திரம் செய்வர். அவ்வாறு சூத்திரம் செய்யாமையானும் அஃது உரையன்மையறிக. இனி, முதல்நிலைகளைத் தொல்காப்பியர் 'ஒற்றுஇறு தொழிற்பெயர்' (நன். 207) 'உயிர்இறு தொழிற் பெயர்' என்றதல்லது முன்னிலை ஏவல் வினைச்சொல் என விதியாமையானும், அம் முதல்நிலைகள் பெயராய் நின்றே பின் மூன்று இடத்திற்கும் உரிய இடைநிலை தோய் இறுதிகளைச் சேர்ந்து வினைச்சொல் ஆவது அன்றித் தனியே நின்று வினைச் சொல் ஆகாமையானும், தனியே நின்று முன்னிலை வினைச்சொல் ஆயிற்று என்றால் தனியே நின்று படர்க்கை வினைச்சொல் ஆதலும் தன்மை வினைச்சொல் ஆதலும் வேண்டும், அவ்வாறு ஆகாமையானும், நச்சினார்க்கினியர் உரை வடநூலோடு மாறுபட்டதாம் என்க. – பி. வி. 46

'ஒருபொருள் இருசொல் பிரிவில வரையர்' – தொ. சொ. 460

இஃது ஒருசொல் இருபொருள் உணர்த்துவதொரு மரபுவழு அமைக்கின்றது. இதனை 'ஒரு சொல் இருபொருள் பிரிவில வரையர்' என மாறுக. ஒரு சொல் ஒருகால் கூறுதற்கண்ணே இரண்டு பொருளைப் புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவிலவாய் நிற்றலைச் சிறப்புடைய என்று கொள்வர் ஆசிரியர் என்றவாறு. 'பிரிவில' என்றது இரண்டற்கும் ஒப்ப நிற்றலை. இஃது ஒரு சொல் ஒருகால் கூறுதற்கண் இரண்டு பொருளை உணர்த்துதல் வழுவேனும், அமைக என அமைத்தார். 'வரையார்' என்றதனால் இவை விகாரப்பட்டு நிற்பனவும் கொள்க – என்று நச்சினார்க் கினியர் இந்நூற்பாவிற்கு உரை வரைந்து எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார்.



நாநார்த்த பதத் தொடரை எல்லாம் தொல்காப்பியர் 'இரட்டுறமொழிதல்' (தொ. பொ. 666) என்பர். அதுபற்றிப் பரிமேலழகரும் 'பெரியாரைப் பிழையாமை' என்பதனை இரட்டுற மொழிதல் என்பர். இக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் 'ஒருபொருள் இருசொல்' என்னும் சூத்திரத்தை 'இருபொருள் ஒருசொல்' என நலிந்து பொருள் கொண்டு இச்சிலேடை உதாரணத்தைக் காட்டி இடர்ப்படுவர் என்க. – பி. வி. 40

★

## நன்னூலும் - பிரயோகவிவேக உரையும்

தொல்காப்பியத்தின் பின் நூல்களான நன்னூல் சின்னூல் என்னும் இவற்றுள், சின்னூல் நூற்பாக்களை மிக அருகியே எடுத்துக் காட்டும் இவ்வாசிரியர், நன்னூல் நூற்பாக்களைப் பெருவாரியாக எடுத்தாண்டுள்ளார். அவற்றை நிரலே காண்பாம்.

பாயிரம்

'பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி' – ந. 7

'தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்' – ந. 21

'பகுதி விகுதி இடைநிலை சாரியை' – ந. 133

'பாந்தம் செலவொடு வரவும்' – ந. 145

'கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன்பொருள்' – ந. 297

'இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சு ஐவருக்கம் முதலீறு' – ந. 146

தொல்காப்பியனார் ஆரியச் சொற்கள் சிலவற்றைத் தற்சமம் தற்பவமாகத் தம் நூலுள் எடுத்தாண்டமை போலவே, விகற்பம் – உதாரணம் – பகுதி – விகுதி – அச்சு – ஐவருக்கம் – கருவி – கருத்தா – பாந்தம் என இன்னும் பிறவும் நன்னூலார் கூறினர். – பி. வி. 2

'ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' – ந. 29

என வருவதனுள் ஐகாரத்தை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால் செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க.
– பி. வி. 5

## எழுத்ததிகாரம் - எழுத்தியல்

'எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதல்ஈறு இடைநிலை போலி என்றாப்
பதம்புணர்ப் பெனப்பன் னிருபாற்று அதுவே' – ந. 57

நன்னூலாரும் போலியைத்தள்ளாது எழுத்திலக்கணம் 'பன்னிரு பாற்று' என்றலின், போலி எதுகை நிமித்தம் அங்கீகாரம் ஆயிற்று.
– பி. வி. 5

'புள்ளிவிட்டு அவ்வொடு முன்உரு வாகியும்
ஏனை உயிரோடு உருவு திரிந்தும்
உயிரள வாய்அதன் வடிவுஒழித்து இருவயின்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய்' – ந. 89

நன்னூலார் வடிவெழுத்து இலக்கணமும் ஒலியெழுத்து இலக்கணமும் 'புள்ளிவிட் டவ்வொடு' என்னும் சூத்திரத்தான் ஒருங்கு கூறினர்.
– பி. வி. 21

இரு பெயரொடும் என்பது 'இருவயின் பெயரொடும்' என அவ்வியயதத்திதனில் வரும்.
– பி. வி. 44

'சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே' – ந. 106

'ஙவ்வொற்றும் ஙகர அகரமும் பயன்படுதலன்றி, மற்றைப் பதினோரெழுத்தும் தமிழ்மொழியின் நின்றுபயன் இன்மை என்னும் குற்றம் தங்க வரும் என்று விளங்கக்கூறுது, மொழிக்கு முதலெழுத்துக் கூறுவார் போல, 'சுட்டியா......கும்மே' எனச் சூத்திரம் செய்து நன்னூலார் காட்டிய உதாரணத்தால் ஙவ்வரியில்



பதினோரெழுத்தும் பயன்படாமை ஒக்கும். மொழி முதல் இடையில் நின்று பயன்படா எழுத்துக்களெல்லாம் ஈற்றிலே ஒற்றாய் நின்று உயிர் முதலிய சொல்லோடு புணர்ந்து பயன்படும். – பி. வி. 36

'அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐஒத்து இசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் அவ்வோ ரன்ன' – ந. 125

'ஐஒத்து இசைக்கும்' 'ஔ ஓரன்ன' என்ற நன்னூலார் மதம் பற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்கள், 'அகர இகரம்' முதலிய மூன்று நூற்பாக்களையும் நலிந்து பொருள் கொண்டு போலி எழுத்து என்று இடர்ப்படுவர். – பி. வி. 5

'இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்' – ந. 146

'அவற்றுள்
ஏழாம் உயிர் இய்யும் இருவும்' – ந. 147
'ரவ்விற்கு அம்முதலாம் முக்குறிலும்' ,, 148
'இணைந்தியல் காலை யரலக்கு இகரமும்' ,, 149
'றனழள ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு' ,, 150

நன்னூலார் எழுத்ததிகாரத்துள், 'இடையில் நான்கும்' என்னும் சூத்திரம் முதல் ஐந்து சூத்திரத்தான், முழுதும் பொது எழுத்தான் வரும் தற்சமம் ஒழித்து மற்றை இரண்டினுள்ளும் புணர்ந்த வடசிறப்பெழுத்துக்கள் இன்ன எழுத்து இன்ன பொது எழுத்தாய்த்திரியும் என்றும், குங்கும – குங்குமம்; மலைய – மலையம்; மாலா – மாலை; சிலா – சிலை; கலா – கலை எனப் பொது எழுத்துள்ளும் இன்ன பொது எழுத்து இன்ன பொது எழுத்தாய்த் திரியும் என்றும் தற்பவச் சொல்லிலக்கணம் கூறினர். தமிழ்ச் சிறப்பெழுத்தால் திரியாமை நன்னூலார்க்கும் தொல்காப்பியனருக்கும் ஒக்கும். இவ்வாறு இவ்விலக்கணம் பகுத்து அறியாதார் மூன்று பாகுபாட்டிற்கும் தமிழ் எழுத்தால் உதாரணம் காட்டினவற்றை நோக்கி நன்னூலைப் புனருத்தி என்பு. – பி. வி. 2

ÉCOLE FRANÇAISE
BIBLIOTHÈQUE
PONDICHÉRY
D'EXTRÊME ORIENT

## உயிரீற்றுப்புணரியல்

**'மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்**
**இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே'** – ந. 151

*தனிநிலைச் சொற்கள் வேற்றுமையாக அவ்வழியாக அவ்வப் பொருள்மேல் பிளவுபட்டு இசையாது தம்முள் கூடுவது தொகை-நிலை எனவே, வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முள் கூடுவது தொகை அன்றோ எனின், நன்று சொன்னாய்! 'அல்வழி வேற்றுமைப் பொருளில் பொருந்துழி' (ந. 151) 'வேற்றுமை முதலிய பொருளின்' (ந. 361) எனவும்,*

*'உருபுஉவமை உம்மை விரியின் அடைவே*
*உருபுஉவமை உம்மைத் தொகையாம்'* – *நேமி. சொ. 17*

*எனவும் நன்னூலாரும் நேமிநாதத்தாரும் கூறினர்.* – *பி. வி. 19*

## சொல்லதிகாரம் – பெயரியல்

**'முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை**
**அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே'** – ந. 258

*அறைகுவன் என்புழி, கு என்பது விகரணி எழுத்து* – ***பி. வி. 41***

**'பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்**
**ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'** – ந. 274

*நன்னூலார், சொல்லதிகாரத்துள் 'பொது எழுத்தானும்' என்னும் சூத்திரத்தால், முழுதும் பொது எழுத்தானே வருவனவும், முழுதும் வடசிறப்பு எழுத்தானே வருவனவும், இவை இரண்டும் அன்றி வடசிறப்பு எழுத்தானும் பொது எழுத்தானும் கலந்து வருவனவும் என இயற்கையாய் நிற்கும் வடமொழிப் பாகுபாடு கூறினர்.* – *பி. வி. 2*



*'பொது எழுத்தானும்' என்னும் நன்னூல் சூத்திரம் வடமொழிப் பாகுபாட்டின் இலக்கணம் கூறிற்று.* – *பி. வி. 7*

**'வினையின் பெயரே படர்க்கை வினையால்**
**அணையும் பெயரே யாண்டும் ஆகும்'** – ந. 286

*பாவபதமும் சுபந்தமாம். நன்னூலாரும் 'வினையின் பெயரே' என்புழி, வினை தன்னைச் சொல்லும் பெயர் என்றார்.* – *பி. வி. 42*

**'ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும்ஈ றாய்ப்பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை'** – ந. 291

*நன்னூலார் பொருள் வேற்றுமைப்படும் உருபு ஏற்ற பெயரையும் வேற்றுமை என்னாது, வேற்றுமை செய்யும் உருபை மாத்திரம் வேற்றுமை என்பர்.* – *பி. வி. 8*

**'எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே'** – ந. 295

*பெயர்க்கு ரூபபேதம் காட்டும் வேற்றுமைஉருபு வடமொழிக்கு அல்லது தமிழுக்கு இல்லாமை கண்டு 'எழுவாய் உருபு திரிபு இல் பெயரே' என நன்னூலாரும் கூறினர் என்க.* – *பி. வி. 8*

*'எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே' என்றதனானே, தமிழுக்குப் பிரதமாவிபத்தி இல்லை என்பது முன்னே கூறினாம்.* – *பி. வி. 49*

**'இரண்டா வதன்உருபு ஐயே அதன்பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆதி ஆகும்'** – ந. 296

*நன்னூலாரும் ஆக்கல் அழித்தல் அடைதல் முதலாகச் சைநேந்திரன் மதம் பற்றிப் பலவாக்குவர்.* – *பி. வி. 12*

**'கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்**
**.....................................................**
**உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே'** – ந. 302

*கண் – கால் – புறம் – அகம் முதலாயின அவ்வியயம் என்னும் உபசர்க்கமாயினும், அவை ஓரிடத்தின் ஏகதேசமாகவும் பொருள்*

படும் என்பது பற்றி நன்னூலாரும் 'இடப்பொருள் உருபே' என விதந்து ஓதினர். – பி. வி. 6

'முதல்இவை சினைஇவை எனவேறு உளஇல
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்' – ந. 316

செங்கமலத்து அலர் போலும் கண் – கை – கால் – செங்காந்தட் போது எனவும் வருமால் எனின், அவயவ விசேடணம் அவயவியோடு ஒட்டி வந்தன என்க; ஆதலின் சொல்லுவான் குறிப்பு எப்படி அப்படி என்க. நன்னூலாரும் 'உரைப்போர் குறிப்பு' என்றார். – பி. வி. 26

'எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனர் புலவர்' – ந. 319

இவ்வாறு நன்னூலார் சித்தாந்தம் செய்த சூத்திரத்துள், 'அல்ல வினைகொளும்' என்பதனால், இரண்டும் மூன்றும் காரகமேயாம். பெயரொடு முடியும் எல்லைஇன்னும் அதுவும் அன்றி, மற்றை இன்னும் கிரியாசட்டியாகிய குவ்வும் காரகமாம். பெயரொடு முடிவன அன்றி, மற்றை வினையோடு முடியும் நான்கும் ஏழும் காரகமாம் என்பர். – பி. வி. 16

## வினையியல்

'செய்த செய்கின்ற செய்யும்என் பாட்டில்' – ந. 340

வாய்பாட்டில் என்னது 'பாட்டில்' என்பது குறை என்னும் சேடமாம். இவ்வாறு உரைத்ததனால் பிறிது ஓர் இலக்கணமும் கொள்ளுதல் உரைகாரர் மதம் என்க. – பி. வி. 44

'சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை' – ந. 346

நன்னூலார் எச்சத்திரிபுகளை 'சொல்......குறை' என்று சத்தவிகாரம் ஆக்குவர். – பி. வி. 39

## பொதுவியல்

'எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்' – ந. 357



அவயவமே பயனாக நின்றதனைப் பொருள் வேறு உணர்த்துமவற்றோடு ஒருங்கு நிறுத்தி முடிப்பது கூடுமாலோ எனின், 'எச்சப்......ஈற்றினும்' என்னும் சூத்திரம் போலக் கடாவுரை காட்டி மறுக்கக் கிடந்தது. – பி. வி. 47

'இரண்டு முதலாம் இடைஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே' – ந. 363

'உவம உருபுஇலது உவமத் தொகையே' – ந. 366

'எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை' – ந. 368

'ஆறுஉருபும் வெளிப்படல் இல்லது' 'உவம உருபு இலது' 'உம் இலது' – என்றவற்றை ஈற்றிலே நின்று கெட்ட அழிவுபாட்டு அபாவமாகக் கொள்ளாது, முன் உள்ளதன் அபாவமாகக் கொள்க. வடநூலார் அழிவுபாட்டு அபாவத்தைப் பிரத்துவஞ்சாபாவம் என்பர். முன் உள்ளதன் அபாவத்தைப் பிராகபாவம் என்பர். – பி. வி. 19

'பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை' – ந. 365

கருங்குதிரை என்பதனைக் கரிதுகுதிரை – கரியதுகுதிரை என விரித்தால் எழுவாயும் பயனிலையும் ஆவது அல்லது, தொகை ஆகாது என்று மறுத்த நன்னூலார் கூறிய வண்ணம், கருமை செம்மை என்பனவற்றோடு புணர்ந்ததன்றோ எனின், அவர் வாமனன் சிநேந்திரன் செய்த சத்தநூல் பற்றி அவ்வாறு கூறுவர். – பி. வி. 49

## உரியியல்

'சிதல்எறும்பு ஆதி மூக்குஅறிவின் மூவறிவுயிர் – ந. 447

இதனுள், இன் – ஒடுப் பொருட்டாதல் அவ்வுரையில் காண்க. – பி. வி. 15

'இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்றுஇசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' – ந. 460

*திசைச் சொல்லும் வடசொல்லுமல்லது இயற்சொல்லும் திரி சொல்லும் வேறே இல்லை : சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாம். நன்னூலாரும் 'பிங்கலம் முதலா......கொளலே' என்றார்.*
*– பி. வி. 18*

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே' – ந. 462

*இச்சூத்திரத்தை நன்னூலார் பாணினி கூறியவாறு கூறினர்.*
*– பி. வி. 50*

★

## திருக்குறளும் - பிரயோக விவேக உரையும்

*[ இந்நூலுள் இலக்கிய மேற்கோள்களில் திருக்குறளே மிகுதியும் பயின்று வந்துள்ளது. ஆதலின், குறட்பாக்களை நிரலே அமைத்து, அவை எடுத்துக்காட்டுக்கள் ஆன பொருத்தத்தையும் சுட்டுவது பெரும்பயன் தருவதாகலின் அச்செய்தியை இனிக் காண்பாம்.]*

### அறத்துப்பால் - பாயிரவியல்

'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்' – 3

*சேர்ந்தார் என்னும் கிருத்தை உதாத்தமாக எடுத்து உச்சரிக்க; வாழ்வார் என்னும் திஙந்தமாகிய ஆற்பனேபதத்தை அநுதாத்தமாகப் படுத்து உச்சரிக்க. – பி. வி. 40*

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்' – 6

*நெறிநின்றார் – என உருபுஏறி நீங்கல் வரும். – பி. வி. 37*



*நெறிநின்றார் என்னும் கிருத்தை உதாத்தமாக எடுத்து உச்சரிக்க. வாழ்வார் என்னும் திஙந்தமாகிய ஆற்பனேபதத்தை அநுதாத்தமாகப் படுத்து உச்சரிக்க. – பி. வி. 40*

'அறவழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது' – 8

*பிறவாழி நீந்த லரிது – என்பது தத்–அந்நியமான அன்மைப் பொருளில் வரும் நஞ்ஞு. – பி. வி. 21*

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை' – 9

*தலை குணமிலவே எனக் கருவி கருத்தாவாகி வந்தது – பி. வி. 11*
*கோள் இல் பொறி – உண்மைக்கு எதிர்மறையான தத்–விருத்தத்தில் வந்த நஞ்ஞு. – பி. வி. 21*

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை' – 12

*துப்பாயதும் எனக் குற்றெழுத்து நிற்குமிடத்தும் அசைநிலையாக அளபெடுத்து வந்தது. – பி. வி. 5*

'விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்(று) உடற்றும் பசி' – 13

*விரிநீர் வியன் உலகம் – எனத் தொகைநிலைத்தொடருள் மத்திய பதலோபன் வரும். – பி. வி. 26*

'ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்' – 14

*ஏரின் உழாஅர் – ஏரான் உழுதலைச்செய்யார்.*

*அகநிலைச் செயப்படுபொருள் என்னும் அந்தர்பாவித கருமமும் கொள்க. அது 'வந்தான்' என்றால் வருதலைச் செய்தான் எனக் கருமபாவத்தின்மேல் துதியை விரிந்து நிற்கும் என்க. 'ஏரின் உழாஅர்' என்புழிப் பரிமேலழகியாரும் இவ்வாறு விரித்தல் காண்க. வடமொழியினும், ஆகச்சதி – ஆகமனம்கரோதி என வரும். – பி. வி. 12*

‘சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு’ - 18

*உடன்நிகழ்ச்சி எனினும் ஒருவினை எனினும் கூட எனினும் ஒக்கும். ஆதலின் தொல்காப்பியனாரும் ‘ஒருவினை ஒடுச்சொல்’ என்பர். ‘சிறப்பொடு பூசனை செல்லாது’ என்பது சகார்த்தத் திருதியை என்னும் அதனொடியைந்த ஒருவினைக்கிளவி. இவ்வொடுச்சொல் கருவி கருத்தாவில் வந்து வேற்றுமையும் வேற்றுமைப் பொருளும் ஆகாது, கூட என்னும் சகார்த்தப் பொருளாய் நின்றது காண்க.* *– பி. வி. 16*

‘இருமை வகைதெரிந்(து) ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு’ – 23

*இருமை வகை தெரிந்து என்பது இருவகை தெரிந்து என்னும் பொருளதாய், தன்மை உணர்த்தாது தன்மை உடைப்பொருளையே உணர்த்தலின், பகுதிப்பொருள்விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்திதப் பிரத்தியயமாம். வடமொழியிலே திரிலோகி என்பதனைத் திரைலோக்கியம் என்பர், கர்ணமிர்தாசாரியர்; சதுர்வர்ணம் என்பதனைச் சாதுர்வர்ணியம் என்பர்.* *– பி. வி. 34*

‘ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி’ - 25

*அகல் விசும்புளார் கோமான் இந்திரன் என ஒரு பொருள்மேல் பல பெயர் வந்து ஒருவினை கொள்வதனைக் கர்த்திரு விசேடணம் என்பர்.* *– பி. வி. 39*

‘சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு’ - 27

*உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் அஃறிணையினும் ‘வகைதெரிவான் கட்டே’ எனவரும்.* *– பி. வி. 32*

*உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியை நிபாதம் என்பர். அது ‘வகைதெரிவான் கட்டே உலகு’ எனவரும். வகை தெரிவான் என்ற பெயரால் தெரிகின்ற புருடன் ஒருவன் உளன் என்று உணர்வது.* *– பி. வி. 50*



‘குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்தல் அரிது’ – 29

*குணம் என்பது ஈறு தோன்றாச் சாதி ஒருமை.* *– பி. வி. 50*

‘சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு’ – 31

‘அறத்தினூங்(கு) ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு’ – 32

*ஒரு பொருளை முன்னர் எடுத்துக் கூறுவது புரோவாதம். அதனை ஒரு நிமித்தத்தால் பின்னரும் எடுத்துக்கூறுவது அநுவாதம். ‘அறத்தின் ...... உயிர்க்கு’ ‘அறத்தின் ...... இல்லை’ என வரும்.* *– பி. வி. 50*

‘அறத்தா(று) இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை’ – 37

*சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் என உயர்திணைக்கண் சாதி ஒருமை வந்தது.* *– பி. வி. 50*

‘அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல’ – 39

*புறத்த புகழும்இல என்பது தத் - விருத்தமான நஞ்ஞுவுக்கு எடுத்துக்காட்டு.* *– பி. வி. 21*

## இல்லறவியல்

‘இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை’ – 41

*இல்வாழ்வான் என்பான் – இல்வாழ்வான் எனப்படுவான் என நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள்படுமாறு காண்க.* *– பி. வி. 37*

‘பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்’ - 44

*பழியஞ்சி என்பது பழியை அஞ்சி என்றும், பழியின் அஞ்சி என்றும், உருபும்பொருளும் உடன்மயக்கம்.* – *பி. வி. 15*

*இல்வாழ்க்கை வழி என்பது வாழ்க்கை வழி என வந்தமை குறை என்னும் சேடமாம்.* – *பி. வி. 44*

**'ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து'** – 48

*ஒழுக்கி என்பது வி – பி இன்றி ஒற்றுப்பெற்று வரும் சகசணிச் அந்தம்.* – *பி. வி. 35*

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்'** – 50

*இனி, வடநூலார் உள் என்னும் சத்தமி விபத்தி ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தல் என்னும் யோகவிபாவத்தினும் ஒருபொருளைப் பிரித்துக்கூட்டல் என்னும் விபாகயோகத்தினும், ஆதாரமின்றி வருவதனை நிர்தாரணே சத்தமி என்பர். பிரித்துக் கூட்டல் 'வையத்துள்......வைக்கப்படும்' எனவரும். இஃது அதிகரணம் அன்மை அறிக.* – *பி. வி. 13*

**'இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்**
**இல்லவள் மாணக் கடை'** – 53

*மாண்பானல் – மாண்புடையாள் ஆனல்; இது குணம் குணியானது.* – *பி. வி. 48*

**'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'** – 55

*பெய் எனப் பெய்யும் – பெய் என்று பெய்யும்.* – *பி. வி. 38*

*தொழுது எழுவாள் என்பது எழுந்து தொழுவாள் என முன்பின்னாக நின்றது. பரிமேலழகர் தொழாநின்று எழுவாள் எனத் துணைவினையாய் உரைப்பர். எழுதல் துயில் ஒழிதல் ஆகலின், எழுந்து தொழுவாள் என முன்பின்னாகப் பொருள்படுதலன்றி, நகுபு வந்தான், ஓடிவந்தான் என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாது என்க.*



*'வைகறை யாமம் துயிலெழுந்து தாள்செய்யும்*
*நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்*
*தந்தையும் தாயும் தொழு தெழுக'* – *ஆசார. 4*

*என்பது துயிலொழிந்து பின் தந்தையும் தாயும் தொழுது பின் காரியத்தில் செல்க எனப் பொருள்பட்டு வருதலானும் அவர் உரை அசம்பாவிதம் என்க.* – *பி. வி. 39*

**'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்'** – 64

*அமிர்தினும் ஆற்ற இனிதே என்பது அமிழ்தினும் ஆற்ற இனிதே எனத் தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய ழகரமாகத் திரிந்தது.* – *பி. வி. 2*

**'அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு'** – 75

*தூரான்வயத்துள் பதத்தோடு பதம் பிரித்துக் கூட்டலன்றி விகுதியைப் பிரித்தும் கூட்டுவர். அன்புற்றமர்ந்த வழக்கு- அன்புற்றார் அமர்ந்த வழக்கு என விகுதி பிரித்தல் வரும். 'அன்புற்றார்......இன்புற்று எய்தும் சிறப்பு' எனக் கொள்க.* – *பி. வி. 19*

**'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை'** – 76

*மறத்திற்கும் – மறம் நீக்குதற்கும் என நடுவே பெய்து பொருளுரைத்துத் துமர்த்தம் என்பது கொள்க.* – *பி. வி. 16*

**'சிறுமையின் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்'** – 98

*சிறுமையின் நீங்கிய இன்சொல் எனப் புறப்பாட்டு எல்லை என்னும் வெகிச்சீமைக்கண் வருவது அபாதனம்.* – *பி. வி. 11*

*சிறுமையின் நீங்கிய இன்சொல் என அபாதனம் என்னும் நீக்கம் ஐந்தன்கண்ணே வந்தது.* – *பி. வி. 15*

'இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது' - 99

இன்சொல் வன்சொல் என்னும் உபசாரங்கள் எல்லாம் பண்பு (விடயம்) மாறி வந்தன. *– பி. வி. 48*

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று' - 100

தூரான்வயத்துள் இனிய கனி, இன்னாத காய் எனப் பண்பும் பிரித்தல் வரும். *– பி. வி. 19*

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது' - 102

காலத்தினால் செய்த நன்றி என மூன்றாவது ஏழன் பொருட்டாய் நின்று உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயையாமலேயே நின்றன. *– பி. வி. 15*

'கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்' - 109

ஒன்றுநன்று உள்ளக்கெடும் – நன்றுஒன்று உள்ளக்கெடும் என உரைத்த பரிமேலழகர் உரையானும், ஒருநன்று என்று வரற்பாலது ஒன்று நன்று என்று விகாரம் ஆகாமை காண்க. *– பி. வி. 27*

'தக்கார் தகவிலர் என்ப(து) அவரவர்
எச்சத்தால் காணப் படும்' - 114

அவரவர் எச்சத்தால் காணப்படும் என்புழி அவரவர் எனப் பெயர் அடுக்கி மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போல வந்தது. *– பி. வி. 39*

'கெடுவாக வையா(து) உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு' - 117

முதல்நிலைவினை முன்னிலை ஏவல் மாத்திரையாய் நில்லாது புடைபரந்து வினைதன்னைச் சொல்லும் பெயர்ப்பொருட்டாய்



வரும் என்பதற்குக் கெடுவாக வையாது என்பது கெடுதலாக வையாது என்று பொருள்பட்டு எடுத்துக்காட்டாயினவாறு. *– பி. வி. 35*

'கெடுவாக வையாது' கெடுதலாக வையாது என்று பொருள் விரிந்து சொல் விரியாத திங்பாவ பதமாம். *– பி. வி. 42*

'அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்' - 142

உள் என்றும் சத்தமி விபத்தி ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தல் என்னும் யோகவிபாகத்தில் வரும் நிர்தாரணே சத்தமிக்கு 'அறன்கடை......இல்' என்பது எடுத்துக்காட்டு. *– பி. வி. 13*

'எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்' - 144

தேரான் பிறன்இல் புகல் என்பது தேராத பிறன்இல் புகல் எனப் பொருள்பட்டாற் போலக் குர்வன் தேவதத்தன் என்பது குர்வத் தேவதத்தன் எனப் பொருள்படும். *– பி. வி. 38*

தேரான் பிறன் – தம்மை ஐயுறாத பிறன்.

தேரான் பிறன் இல் புகல் – தேராத பிறன் இல் புகல் என முற்றுப் பெயரெச்சமாய் – அர்த்த விகாரமாய்ப் பொருள் திரிந்தது. *– பி. வி. 39*

'அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்' - 147

பெண்மை என்பது பெண்ணினது தன்மை எனப் பாவத் தன்மையை உணர்த்தும் பாவதத்திதனம். வடமொழியிலும் ஸ்திரீத்துவம் என வரும். *– பி. வி. 34*

இல்வாழ்வான் என்பது உயர்திணையில் கருமமான கிருதந்தம். இதனைத் தொல்காப்பியனார் 'தொழில்நிலை ஒட்டும் ஒன்று' (சொ. 70) என்பர். *– பி. வி. 37*

நயவாதான் என நேரே வினைமுற்று வினையாலணையும் பெயர் ஆகாமல், பெண்மை நயவாதவன் என ஈற்றயற்கே ருபபேதம் பெற்ற வினையாலணையும் பெயர் வரும். - பி. வி. 37

'நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்' - 149

நாமநீர் வைப்பு எனத் தொடர்மொழியினும் மத்திய பத லோபன் வரும்.
- பி. வி. 26

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை' - 151

அகழ்வாரைத் தாங்கும் நிலம் என அதிகரணம் கருத்தாவாகி வந்ததாலோ எனின், அன்று என்க; `என்னை? தெரிநிலைக் கருத்தாவும் தெரிநிலைக் கருமமும் பிரதமையோடே வரும் எனவும், ஒழிந்த கரணமும் சம்பிரதானமும் அவதியும் அதிகரணமும் ஆகிய மூன்றும் நான்கும் ஐந்தும் ஏழும் பிரதமையோடு வாரா எனவும் விதித்தமையால் என்க.
- பி. வி. 11

இகழ்வார்ப் பொறுத்தல் - உயர்திணை மருங்கின் ஒழியாது வருதல் என்பதனை விடுத்து, விகாரத்தால் உயர்திணை மருங்கின் ஒழிந்து லுக்கு வரும்.
- பி. வி. 27

'ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பார்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து' - 155

நெறி நின்றார் என உருபு ஏறி நீங்கல் போல, வினையாலணையும் பெயர் 'ஒறுத்தாரை ஒன்றாக வையாரே' என உருபு பெறல் வரும்.
- பி. வி. 37

'கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்' - 166

கொடுப்பது அழுக்கறுப்பான் எனப் பெயரடியாற் பிறந்த வினை வருதல் காண்க.
- பி. வி. 35



உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் என்பது கிருதந்தம். - பி. வி. 37

உடுப்பதூஉம் - உண்பதூஉம் என்னும் கருமமாய் நின்ற வினைமுற்றுப்பெயர் என்னும் கிருதந்தம், உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் எனச் செயப்பாட்டு வினையொடு பொருள் தந்து, நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள்படுமாறு காண்க.
- பி. வி. 37

'அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்' - 167

தவ்வையைக் காட்டிவிடும் எனச் சம்பிரதானம் வடநூலார் கூறாத இரண்டாவதனோடு வந்தது. - பி. வி. 15

அவ்வித்து அழுக்காறு உடையானை - அவ்வித்து எனச் சுப்புத்தாது எனும் பெயரடியால் வினை பிறந்தமை காண்க.
- பி. வி. 35

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' - 169

ஔவியம் என்ற சொல்லின் ஔகாரத்தை அவ் என ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபட வரும். - பி. வி. 5

'நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்' - 171

குடிபொன்றி என்பது குடியைப் பொன்றுவித்து என அந்தர் பாவித ணிச். குடி பொன்றி என்புழிக் குடி பொன்றுவித்து என்னும் பொருள் விளங்கக் குடியைப் பொன்றச்செய்து என உரைப்பர் பரிமேலழகரும். - பி. வி. 39

**'கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்இன்று பின்நோக்காச் சொல்'** - 184

இது ஒரு பொருளின் வினை மற்றொரு பொருளின் வினையானது. [சொல்லுவான் தொழில் சொல்மேல் ஏற்றப்பட்டது] *- பி. வி. 48*

**'அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையால் காணப் படும்'** - 185

தூரான்வயத்துள் பதத்தோடு பதம் பிரித்துக் கூட்டலன்றி விகுதியைப் பிரித்தும் கூட்டுவர். அறஞ்சொல்லும் நெஞ்சத்தான்– நெஞ்சோடு அறம் சொல்வான் என விகுதி பிரித்தல் வரும். *- பி. வி. 19*

**'பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்ரு தவர்'** - 187

உயர்திணை மருங்கின் ஒழியாது வருதல் என்னும் விதியை விடுத்துக் கேளிர்ப் பிரிப்பர் என விகாரத்தால் உயர்திணை மருங்கின் ஒழிந்து லுக்கு வரும். *- பி. வி. 27*

நட்பாடல் தேற்ருதவர் என்புழித் தேருதவர் எனப் பொருள் படுமால் எனின், இதனைப் பகுதிப் பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த காரிதம் என்பர். *- பி. வி. 35*

**'அறனேக்கி ஆற்றுங்கொல் வையம் புறனேக்கிப்**
**புன்சொல் உரைப்பான் பொறை'** - 189

ஆற்றுங்கொல் வையம் என அதிகரணம் கருத்தாவாகி வந்ததன்ருேவெனின், அன்றென்க; என்னை? தெரிநிலை எழுவாயும் தெரிநிலைச் செயப்படுபொருளும் எழுவாயோடு வரும் எனவும், ஒழிந்த கருவியும் கொடையும் நீக்கமும் இடமும் எழுவாயோடு வாரா எனவும் விதித்தமையான். *- பி. வி. 11*



**'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்**
**மக்கட் பதடி எனல்'** - 196

பயனில் சொல் பாராட்டல் – இது உண்மைக்கு எதிர்மறையான தத் - விருத்தத்தில் வந்த நஞ்ஞு. *- பி. வி. 21*

மகன் எனல் மக்கட் பதடி எனல் என்பது உடன்பாடும் எதிர்மறையும் என்னும் இரண்டு விதியும் பெறும். *- பி. வி. 46*

**'தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்'** - 209

தன்னைத்தான் காதலன் என்பது கன்மவற்பாவமான கர்த்திரு கருமமாம். வடநூலார் 'ஆத்மாநஞ் சிநத்தி' என்பதனைத் தமிழார் 'தன்னைக் குத்தினன்' என்பர். இதுவும் அது. *- பி. வி. 12*

**'அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்**
**தீவினை செய்யான் எனின்'** -210

தூரான்வயத்துள் பதத்தோடு பதம் பிரித்துக் கூட்டலன்றி விகுதியைப் பிரித்துங் கூட்டுவர். அருங்கேடன் என்பது கேடு அரியன் என விகுதி பிரித்தல் வரும். *- பி. வி. 19*

'மருங்கோடித் தீவினை செய்யான் எனின்' என்னும் குறளில் பரிமேலழகர் செய்தலோடு முடியும் என்பர். [ஓடி என்னும் வினையெச்சம் செய்யான் என்னும் எதிர்மறைவினையுள் செய்தலோடு முடிந்தது]. *- பி. வி. 39*

**'ஒத்த(து) அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்'** - 214

உள் என்னும் சத்தமி விபத்தி ஒரு பொருளைப் பிரித்துக் கூட்டல் என்னும் விபாக யோகத்தில் ஆதாரமின்றி வருவதனை வடநூலார் நிர்தாரணே சத்தமி என்பர். இது 'ஒத்தது...... வைக்கப்படும்' என வரும். *- பி. வி. 13*

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு' - 215

ஊருணி - கருமத்தில் வந்து இகரம் சேர்ந்து இறும் கிருதந்தம்.
- பி. வி. 37

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்' - 216

வடமொழியுள் பரிபௌஷி - அநுகரி - பரிகரகம் என்பன சத்தமி அர்த்தம் ஆனாற்போல, உள்ளூர் - கீழ்நீர் - மிகண் என மாறி நின்றும் வருவது காண்க.
- பி. வி. 6

'வறியார்க்கொன்(று) ஈதலே யீதல்மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து' - 221

வறியார்க்கு ஒன்று ஈதலே ஈதல் - இது பிரேரக சம்பிரதானம்.
- பி. வி. 13

குறியெதிர்ப்பை நீரது உடைத்து - என அஃறிணையில் சாமானிய தத்திதனில் வரும். [நீர் என்ற சொல் நீரது எனச் சாமானிய தத்திதன் பகுதிப் பொருள் விகுதி பெற்று ஆயவாறு.]
- பி. வி. 44

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு' - 231

ஈதல் இசைபட வாழ்தல் - ஈதலால் இசைபட வாழ்தல் எனத் தம்மினுகிய தொழிற்சொல் அல்லாத பிறிதினும் திருதியா-தற்புருடன் வரும்.
- பி. வி. 21

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்(று)
ஈவார்மேல் நிற்கும் புகழ்' - 232

நெறி நின்றார் என வினையாலணையும் பெயர் உருபு ஏறி நீங்கலே யன்றி, இரப்பார்க்கு ஒன்று என உருபு பெறலும் வரும்.
- பி. வி. 37



'நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது' - 235

நந்து என்றசொல் நத்தம் எனச் சாமானிய தத்திதனில் வரும்.
- பி. வி. 44

'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்' - 239

யாக்கை பொறுத்த நிலம் என இடம் கருத்தாவாகியும் வந்த-தன்றோ எனின், அன்று என்க; தெரிநிலை எழுவாயும் தெரிநிலைச் செயப்படுபொருளுமே பிரதமையோடு வரும் எனவும் ஏனைய வாரா எனவும் விதித்தமையின்.
- பி. வி. 11

[எனவே யாக்கை பொறுத்த நிலத்தில் பயன் குன்றும் என்க]

## துறவறவியல்

'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள' - 241

அருட்செல்வம் - முன்மொழி எண்ணம் என்னும் சம்பாவனு பூர்வபத கருமதாரயன் வரும். இது துணியப்படும் காலத்துத் தேற்றம் என்னும் அவதாரண பூர்வபத கருமதாரயனும்.
- பி. வி. 22

'பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு' - 252

வினைமுற்றுத் திரிந்த வினையாலணையும் பெயர் தின்பார் என நேரே நில்லாமல் 'ஊன் தின்பவர்' என ஈற்றயற்கே ருபபேதம் பொருந்தல் வரும்.
- பி. வி. 37

'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்' - 258

மரத்தைக் குறையான் - வேலான் எறியான் - என்பனவற்றுள்

*குறையான் – எறியான் என்பன வினை அன்மையின், மரமும் வேலும் கருமமும் கருவியும் ஆமோஎனின் இவையும் 'செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணுர்' – என்பது போலக் கொள்க.*
*– பி. வி. 16*

*உயிரின் தலைப்பிரிந்த – தலை என்பது உபசர்க்கம்.*

*[தலைப்பிரிவு என்பது ஒரு சொல் – பரி]* *– பி. வி. 45*

**'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்'** – 282

*உள்ளத்தால் உள்ளல் – அகக்கரணம்.* *– பி. வி. 12*

**'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை'** – 295

*'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே' என்பதற்கு மாருகப் பாணினி ஒடு என் உருபு ஏற்ற சொல்லை அப்பிரதானம் என்றும், வினையொடு முடிந்த சொல்லைப் பிரதானம் என்றும் கூறுவர். 'மனத்தொடு......தலை' என்பதனுள், மொழியின் – செய்வார் என்னும் வினைகளொடு முறையே முடிந்த வாய்மை – தானம் என்ற செயப்படு பொருள்களையே பிரதானம் என்பர். – பி. வி. 16*

**'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்'** – 298

*அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் எனச் செய்யுட்கண் கர்மணிப் பிரயோகம் வந்தது.* *– பி. வி. 36*

**'சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்'** – 306

*சேர்ந்தாரைக் கொல்லி – என உருபு தொகாமலே அலுக்கு வந்தது.* *– பி. வி. 27*



*சேர்ந்தாரைக் கொல்லி – அஃறிணைக்கண் இகரம் சேர்ந்து இறுதலாகிய கிருதந்தம். இவை உபயபத சமாசனுமாம்.*
*– பி. வி. 37*

**'பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன**
**பிற்பகல் தாமே வரும்'** – 319

*'பிறர்க்கின்ன......தமக்கின்ன பிற்பகல் தாமே வரும்' – என்னும் இதனுள், 'தாமே' என்னும் சுயமேவ பதம் தொடர்ந்த 'வரும்' என்னும் அகன்மக பரஸ்மைபதம் என்னும் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச்சொல்லோடு வரும் கருமத்தைக் கரும கருத்தா என்பர். இவை சகன்மக பரஸ்மைபதம் என்னும் செயப்படுபொருள் குன்ருத வினைமுற்றுச் சொல்லோடு வாராமையின், பாடியகாரர் கருமகருத்தா ஆகா என்பர்.*
*– பி. வி. 11*

*பரிமேலழகர் முற்பகல் பிற்பகல் என்பனவற்றை முன்-பின்னகத் தொக்க ஆரும்வேற்றுமைத் தொகை என்பர். வடநூலார் முன்நின்ற மொழி பிரதமை ஆகலின் பிரதமாதற் புருடன் என்பர்.* *– பி. வி. 21*

**'அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்'** – 321

*கோறல் பிறவினை எல்லாம் தரும் – இது பாவ கருத்தா.*
*– பி. வி. 11*

**'நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாள(து) உணர்வார்ப் பெறின்'** – 334

*'நாளென' – என எனவென் எச்சம் பெயரொடு புணர்ந்து 'காட்டி' என்ற வினைகொண்டு முடிந்தது.* *– பி. வி. 38*

**'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே**
**உடம்போ(டு) உயிரிடை நட்பு'** – 338

*நட்பு என்பது குறிப்பு மொழி. இவ்வாறு பெயர் அடியாகத் தோன்றிய குறிப்பை அபிதா மூலத்தொனி என்றும், விருத்த-லக்கணை என்றும் கூறுவர். அரக்கரைப் புண்ணிய சனம் என்பதும் அது.* *– பி. வி. 50*

'உறங்குவது போலும் சாக்கா(டு) உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு' - 339

உறங்குவது, விழிப்பது என்பன பாவமான கிருதந்தம். - *பி. வி. 37*

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்' - 341

யாதனின் யாதனின் என யத்-சத்தம் வந்தபின், அதனின் அதனின் எனத் தத் - சத்தம் வருதல் ஆகிய நியமம் வடநூலார் மதம் ஆதலின், திருவள்ளுவரும் அவ்வாறு செய்யுள் செய்தார் என்க. - *பி. வி. 45*

'யான்எனத் தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும்' - 346

எனது - என்பது அஃறிணைக்கண் உடைப்பொருள்மேல் வரும் சாமானிய தத்திதனம். - *பி. வி. 32*

'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு' - 352

மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு என்புழிக் காட்சியவர் என்னும் சாமானிய தத்திதனில் காட்சி என்னும் பதம் பிரிந்து எழுவாயாய் நிற்பதும் கொள்க. இவ்வாறு வருதல் வைதிகப் பிரகிரியை. - *பி. வி. 35*

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய(து) உடைத்து' - 353

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் என அபாதானம் என்னும் நீக்கம் ஐந்தன்கண் வந்தது. - *பி. வி. 15*

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு' - 358

பிறப்பு என்னும் பேதைமை - பிறப்பிற்கு ஏதுவாகிய பேதைமை. இது காரியம் காரணமானது. - *பி. வி. 48*



ஊழியல்

'பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம' - 376

போகா தம - என உடைப்பொருள் மேல் நிற்கும் சாமானிய தத்திதன் அஃறிணைக்கண் வந்தது. - *பி. வி. 32*

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' - 377

கோடி தொகுத்தார்க்கும் - கோடி முதலிய சொற்களெல்லாம் வேற்றுமை உருபாகிய ஈறு கெட்டுத் தொகுவான அன்மையான், தொகைச் சொற்களில் வேற்றுமை உருபு முதலியன தொகுதல் மிலையிடறு என்க. - *பி. வி. 19*

## பொருட்பால் - அரசியல்

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு' - 381

வடநூலார் உள் என்னும் சத்தமி விபத்தி ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தல் என்னும் யோகவிபாவத்தினுள் ஆதாரம் இன்றி வருவதனை நிர்தாரணேசத்தமி என்பர். இதற்கு 'உடையான் அரசருள் ஏறு' - என்பது எடுத்துக்காட்டு. - *பி. வி. 12*

'காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்' - 386

மீக்கூறும் மன்னன் நிலம் என்புழி மீ என்பது உபசர்க்கம். மீக்கூறு என்பதனை ஒரு சொல்லாகக் கொள்க. - *பி. வி. 45*

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறைஎன்று வைக்கப் படும்' - 388

நிர்தாரணேசத்தமியில் 'மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' எனப் பிரித்துக் கூட்டல் என்னும் விபாக யோகம் வந்தது. - *பி. வி. 13*

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை மன்னன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு' – 389

*செவிகைப்பச் சொற்பொறுக்கும் என்னும் உபசாரங்கள் எல்லாம் பண்பு புலன் (விடயம்) மாறி வந்தன. – பி. வி. 48*

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' – 391

*கற்பவை போன்றவற்றையும் வடநூலார் சாதிப்பன்மை என்பர். – பி. வி. 50*

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு' – 392

*எண், எழுத்துப் போன்றவற்றையும் வடநூலார் சாதிப் பன்மை என்பர். – பி. வி. 50*

'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று' – 407

*சாவ என் எச்சத்து இறுதி குன்றும் எனத் தொல்காப்பியர் முதலாயினோர் எடுத்தோதிய உபலக்கணத்தால் 'மண்மாண் புனைபாவை' மண்மாணப் புனைபாவை என வருவதும், நுண்மாண் நுழை புலம் என வரும் செய்து என் எச்சத்து ஈறும் வினைத் தொகையாய்க் குன்றிய பெயரெச்சத்தீறும் நுண்மாண்டு நுழைந்த புலம் என வருவதும் கொள்க. – பி. வி. 46*

'நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு' – 408

*ஏழாம் வேற்றுமையில் ஆதார ஆதேயங்கள் அருவாயும் உருவாயும் வரும் என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டு. – பி. வி. 13*

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரொ(டு) ஏனை யவர்' – 410

*மூன்றும் வேற்றுமை 'விலங்கொடு மக்களனையர்'– என அதனொடு ஒப்பு அல் ஒப்புரையோடு வந்தது. – பி. வி. 16*



'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை' – 411

*தூரான்வயத்துள் பதத்தொடு பதம் பிரித்துக் கூட்டலன்றிப் பண்பைப் பிரித்தும் கூட்டுவர். செல்வத்துள் எல்லாம் தலை என்பது செல்வம் எல்லாவற்றுள்ளும் தலை என வரும். – பி. வி. 19*

'கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி' – 418

*'செயப்பாட் டெச்சமும் செயப்படு பொருளும்
நயக்காம் என்பர் நற்கிரு தந்தம்'*

*'வினைமுதல் கருவி அனைமுதல் இரண்டொடும்
மூன்றும் வேற்றுமை தோன்றுது அதற்கே'*

*'ஒரோவழி யக்கும் அவ்வுருபும் வரப்பெறும்'*

*ஆதலின் அரம் பொருத பொன், தாம் வீழ்வார் மென்தோள் என்பன போலக் கேள்வி தோளாத செவி என வாராது சிறுபான்மை 'கேள்வியால் தோட்கப்படாத செவி' என வரும். – பி. வி. 37*

'செவியின் சுவையுணரா வாயுணவின் மாக்கள்
அவியினும் வாழினும் என்' –420

*வாய் உணவின் மாக்கள் எனத் தொடர்மொழியில் மத்திய பதலோபன் வரும். – பி. வி. 26*

*'அவியினும் வாழினும் என்' எனச் செயின் என்னும் வினையெச்ச வாய்பாடு அமைந்தமை காண்க. – பி. வி. 38*

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' – 423

*அப்பொருள், எப்பொருள் என்பன சுட்டெழுத்து வினா எழுத்துக்களை இடைச்சொல்லாக்கி நிலைமொழியாக நிறுத்தி உயிர் மயங்கியலில் வருமொழியோடு புணர்த்தலின் அவை தொகைச்சொல் என்னும் சமஸ்தபதமல்லது அவ்வியய தத்திதன் ஆகா என்க. – பி. வி. 33*

எப்பொருள் யார்யார்வாய் எனப் பெயர் அடுக்கி மக்கள் இரட்டையும் விலங்கிரட்டையும் போல வரும். – *பி. வி. 39*

'எப்பொருள்' என்று யற்சத்தம் வந்தபின் 'அப்பொருள்' என்று தற்சத்தம் வரும் நியமம் வடநூலார் மதமாதலின், திருவள்ளுவரும் அவ்வாறு செய்யுள் செய்தார் என்க. – *பி. வி. 45*

**'அஞ்சுவ(து) அஞ்சாமை பேதைமை அஞ்சுவ(து)**
**அஞ்சல் அறிவார் தொழில்'** – 428

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' – எனத் திருவள்ளுவரினும் அஃறிணைக்கண்ணும் ஈறு தோன்றிய சாதி ஒருமை வரும்.
– *பி. வி. 50*

**'பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்(று) அன்று'** – 438

இவறன்மை என்பது இவறல் என்ற பொருளில் விகுதிமேல் விகுதி பெற்று வந்த பாவதத்திதன். – *பி. வி. 34*

**'இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்'** – 447

'அரியானை அந்தணர் தம் சிந்தையானை' என்னும் பாட்டினைக் கரும விசேடணம் என்பர். இடிக்குந் துணையாரை ஆள்வாரை எனத் தொடர்ந்து வருவதூஉம் அது. – *பி. வி. 39*

**'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்'** – 448

சதிர்ப் பிரத்தியயத்துக்கு மறையும் அடுக்குதலும் கொள்க. 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்' என வரும். –*பி. வி. 39*

**'சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்'** – 451

'சிற்றினம் அஞ்சும் பெருமை' – இது குணவினை குணிவினை ஆனது.
– *பி. வி. 48*



**'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்'** – 466

சாவ என் எச்சத்து இறுதி குன்றும் எனத் தொல்காப்பியர் முதலாயினோர் எடுத்தோதிய உபலக்கணத்தால், செய்யத்தக்க என்பது செய்தக்க என வந்தது. – *பி. வி. 46*

**'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு'** – 467

எண்ணித் துணிக கருமம் என்பதனால் ஒரு பொருளை எண்ணும் பொழுது ஒன்றாகவும் துணியும் பொழுது வேறாகவும் கொள்க.
– *பி. வி. 22*

**'ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்'** – 468

பொத்துப்படும் எனப் பெயர்அடுத்து வரும் படுவை யக்கு என்பர். – *பி. வி. 45*

**'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்'** – 471

சீர்தூக்கிச் செயல் என்பது தூக்கிச்செயல் என, குறை என்னும் சேடம் பெற்று வந்தவாறு. – *பி. வி. 44*

**'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்'** – 473

'இடைக்கண் முரிந்தார் பலர்' – என்புழி, இடை என்பது ஓர் இடத்தின் ஏகதேசமாகியும், கண் என்பது உருபாகியும் வந்தன.
– *பி. வி. 6*

**'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்(து) ஊக்கின்**
**உயிர்க்கிறுதி யாகி விடும்'** – 476

நுனிக்கொம்பர் – பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை என்பர். வடநூலார் முன் நின்ற மொழி பிரதமை யாகலின் பிரதமாதற்புருடன் என்பர். – *பி. வி. 21*

நுனிக்கொம்பர் எனப் பிரதமாதற்புருடன் தத்திதகை வரும். – பி. வி. 27

'உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்' – 480

வல்லைக் கெடும் என்புழி, வல்லை என்பது உபசர்க்கம். – பி. வி. 45

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' – 481

பகல்வெல்லும் கூகையைக் காக்கை – இது விடய ஆதாரம்.

[ஏழாம் வேற்றுமை காலத்தின்கண் வந்தது] விடயம்–உரிமை. – பி. வி. 13

'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்' – 484

ஞாலம் கருதினும் கைகூடும் எனக் 'கை' என்பது உபசர்க்கமாய் வினைச்சொல்லோடு வந்தது. (கைகூடும் ஒருசொல்) – பி. வி. 45

'ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து' – 486

முதனிலைவினை முன்னிலை ஏவல் மாத்திரையாய் நில்லாது, பொருதகர் – பொருத தகர் எனப் பெயரெச்சப் பொருட்டாயும் வரும். – பி. வி. 35

'நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற' – 495

'விடயம் உரிமை விளம்புங் காலே' ஆதலின் நெடும்புனலுள் வெல்லும் முதலை என்புழி, ஏழாம் வேற்றுமை இடம் விடயாதாரமாய் வந்தது. – பி. வி. 13

'கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து' – 496

இதுவும் விடயாதாரமாய் வந்தது. – பி. வி. 13



கடல் ஓடா நெடுந்தேர் – நாவாய் ஓடா நிலத்து – என்புழிப் பன்மை வினைச்சொல்லோடு முடிந்தன ஆயினும், அவற்றின்கண் சாதி ஒருமை என்னுமை காண்க. – பி. வி. 50

'காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு' – 500

வேலாண் முகத்த களிறு என்புழிப் பன்மை வினைக்குறிப்புப் பெயரோடு முடிந்ததாயினும், அதன்கண் சாதி ஒருமை என்னுமை காண்க. – பி. வி. 50

'அறம்பொருள் இன்பம் உயிரெச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்' – 501

அறம் பொருள் என்னும் உம்மைத்தொகையிலுள்ள சொற்கள் ஒன்றினுக்கு ஒன்று அடை என்னும் விசேடணமாகாது தொகும். – பி. வி. 23

'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு' – 502

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி என வரும் புறப்பாட்டெல்லை எனும் வெகிச்சீமைக்கண் வருவது அபாதானம். – பி. வி. 11

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி – எனவரும் அபாதானம் என்னும் நீக்கம் ஐந்தன்கண்ணே வந்தது. – பி. வி. 15

'காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்' – 507

காதன்மை – காதல் என்ற பெயர் பகுதிப்பொருள் விகுதியாகிய மை யீறு பெற்றுக் காதன்மை என்றாகிக் காதல் என்ற பொருளில் வந்த பாவதத்திதன். – பி. வி. 34

'தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்' – 508

'தேரான்......தரும்' என்புழித் தெளிந்தான் என்னும் முற்றுவினைப்பெயரின்கண் நின்ற முதனிலை தெளிதலாய் எழுவாயானது காண்க. – பி. வி. 35

'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்' - 510

தெளிவும் ஐயுறவும் இடும்பை தரும் - தெளிவு, ஐயுறவு - என்பன பாவ கருத்தா. - பி. வி. 11

'வினைக்கண் வினையுடையான் கேண்மை வேருக
நினைப்பானை நீங்கும் திரு' - 519

ஐந்தன் கண்ணே வரும் அபாதானம் என்னும் நீக்கம், நியமம் தப்பி 'நினைப்பானை நீங்கும் திரு' எனத் துதியையோடு வந்தது.
- பி. வி. 15

'அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று' - 523

குளவளாக் கோடின்றி நீர்நிறைந்தற்று - இது புலம் என்னும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.
- பி. வி. 48

'இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு' - 531

உவகை மகிழ்ச்சி - இது ஒரு பொருட்கு இரு பெயர் பிரியாது நின்றது. இவை போல்வன வருஞ்சொல் பற்றி 'ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார்' (சொ. 460) எனச் சூத்திரம் செய்தார்.
- பி. வி. 22

'அரியஎன் ருகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்' - 537

பொச்சாவாக் கருவி (மறவாத மனம்) என்பது அகக் கரணம்.
- பி. வி. 12

'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு' - 545

இயல்புளிக் கோலோச்சும் என்புழி, உளி என்பது ஆன் என்னும் மூன்ரும் வேற்றுமைப் பொருளாயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர், 'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்' (சொ. 250) என்பர். - பி. வி. 6



'வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்' - 546

வேலன்று வென்றி தருவது - இது கரணமான கிருதந்தம்.
- பி. வி. 37

'இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்' - 547

இறை முதலிய பெயர்ப் பகாப்பதங்களைப் பிராதிபதிகம் என்றும், அவை பிராதிபதிகமாவதன்றி முதல் வேற்றுமை உருபு பெற்றன அல்ல என்றும், அவை எழுவாய் ஆகா என்றும், பின்னர் அன் அர் என்னும் பிரதமாவிபத்தி ஆகிய முதல் வேற்றுமை உருபோடு புணர்ந்து இறைவன் இறைவர் என நிற்கும் என்றும், 'இறை காக்கும்' என அன் ஈறு பெருது நின்றவழி அன் ஈறு என்னும் சுப்பிரத்தியயம் முதலாயினவந்து லோபமாயின என்றும் கூறுவர்.
- பி. வி. 7

'வேலொடு நின்ருன் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு' - 552

வேலொடு நின்ருன் என்பது வேல் கொண்டு நின்ருன் எனக் கொண்டு என்னும் எச்சப் பொருளொடு வரும். - பி. வி. 16

'இறைகடியன் என்றுரைக்கும் இன்ஞச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்' - 564

இறை என்பது அன் என்னும் சுப்புத்தாது பெற்று எழுவாய் வேற்றுமையாகிப் பின் அன் கெட்டது என்ப. - பி. வி. 7

'கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்' - 567

கடுமொழியும்......அரம் - என்புழி அரம் என்னும் ஒருமைப் பெயரை வாக்கிய பேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வடம் இழுப்பார்போலப் பிரத்யேக பந்தாந்நுவயம் என்பர். இதுவும் தூரான்வயத்துள் அடக்கிக் கொள்க. - பி. வி. 50

'பெயக்கண்டும் நஞ்சுண்(டு) அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' - 580

நஞ்சை உண்டான் - இது அநபிகிதத்துள் ஈச்சித கருமம். இதனைக் கருத்துள்வழிச் செயப்படுபொருள் என்பர் கல்லாடர் முதலாயினர். - பி. வி. 12

'உடையர் எனப்படுவ(து) ஊக்கமஃ(து) இல்லார்
உடைய(து) உடையரோ மற்று' - 591

அஃதிலார் உடையது உடையரோ - என அஃறிணையிலும் உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் வரும். - பி. வி. 32

'பரியது கூர்ங்கோட்ட(து) ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்' - 599

பரியது, கூர்ங்கோட்டது என அஃறிணையிலும் உடைப்பொருள்-மேல் நிற்கும் சாமானிய தத்திதன் வரும். - பி. வி. 32

'மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும்' - 608

மடிமை குடிமைக்கண் தங்கின் - மடிமை குடிமையான்கண் தங்கின் என வருவன எல்லாம், தன்மை உணர்த்தாது தன்மை-யுடைப் பொருளையே உணர்த்தலின், பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்திதப் பிரத்தியயம். - பி. வி. 34

'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய(து) எல்லாம் ஒருங்கு' - 610

அடியளந்தான் - அடியால் அளந்தான் எனத் தம்மினாகிய தொழிற் சொல்லினும் திருதியா தற்புருடன் வரும். - பி. வி. 21

'தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்' - 614

தாளாண்மை: தாள் - முயற்சி; இது நாமத்தின்கண் வந்த பாவ தத்திதன். - பி. வி. 34



அங்கவியல்

'அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்' - 638

அறிகொன்று - அறிதலைக் கொன்று என முதல்நிலைவினை வினை-தன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாய் நின்றது. - பி. வி. 35

அறிகொன்று அறியான் என்னும் முதல்நிலை அறிதல் எனப் பொருள்விரிந்து சொல்விரியாத திங்பாவ பதமாம். - பி. வி. 42

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து' - 645

சொல்லுக - சொல் என்பதனோடு 'க' என்னும் வியங்கோள் விகுதி சேரும்போது உகரம் விகரணி எழுத்தாக வந்தது. - பி. வி. 41

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது' - 647

அவனை இகல் வெல்லல் - அவனது இகல் வெல்லல் என்பது இரண்டாவது ஆறுவதனோடு வந்தது. - பி. வி. 12

'ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்' - 653

ஓஒதல் வேண்டும் என்புழி, செய்யும் என்னும் முற்றாகாமல் வேண்டும் என்னும் தவ்வியப் பிரத்தியயம் வந்தது. - பி. வி. 41

'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்' - 698

ஒளியோடு ஒழுகப்படும் என்பது செய்யுட்கண் வந்த பாவப் பிரயோகம். என்னை? ஒளியால் ஒழுகப்படும் என்பது ஒளியால் ஒழுகுதல் செய்யப்படும் எனவிரிந்து, 'ஊசியொடு குயின்ற தூசு' என்றாற்போல ஓடு என்னும் மூன்றன் உருபு உடன்நிகழ்ச்சி

ஆகாது ஆன் பொருட்டாய், ஒழுகப்படும் என்பதன்கண்ணே திங்பாவமான (முதல்நிலைத் தொழிற்பெயர்) ஒழுகு என்னும் முதல்நிலை பிரிந்து கிருற்பாவமாய் (விகுதிபெற்ற தொழிற்பெயர்) ஒழுகுதல் எனத் தல் ஈறு பெற்று எழுவாயாய், படு என்பதன் முன் செய் என்னும் முதல்நிலையோடு அகரம் பெற்றுச் செய்ய என்று நின்ற அகன்மகச் செயப்பாட்டு ஒருமை முற்றாய் நிற்பது எனக் கொள்க. ஒளியோடு ஒழுகப்படும் என்றாலும் ஒளியால் ஒழுகப்படும் என்றே பொருள்படும். இவ்வாறு பரிமேலழகர் உரையாலும் காண்க. 'வஞ்சரை அஞ்சப்படும்' (*824*) என்னும் குறளில் பரிமேலழகர் முதல்நிலையைப் பிரித்து எழுவாயாக்கி முடித்தலும் காண்க. – *பி. வி. 36*

'பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்' – 700

கெழுதகைமை – சகபூர்வபத சமாசன் என்னும் இடைச்சொல் தொகை. கெழு, சக என்பன உபசர்க்கம். கெழுதகைமையாவது கூடின தகைமையினை உடையான் எனப் பொருள்படுமிடத்துச் சகபூர்வபத வெகுவிரீகியாம். – *பி. வி. 24*

'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்(கு) அணி' – 701

மாறாநீர் வையம் என்னும் பெயரெச்சத் தொகாநிலைத் தொடரில் மத்தியபதலோபன் வந்தது. – *பி. வி. 26*

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்' – 706

'கடுத்தது காட்டும் முகம்' – என வடமொழியார் சுப்புத்தாது என்னும் பெயரடியாகப் பிறந்த வினை வருதல் காண்க. – *பி. வி. 35*

'பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்' – 709

பகைமை – கேண்மை என்பன எல்லாம் பகை – கேள் என்னும் நாமத்தின்கண் வந்த பாவ தத்திதன். – *பி. வி. 34*



'வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்' – 721

இனி, அலங்காரநூலார் அபிதை – இலக்கணை – வியஞ்சனா விருத்தி என மூன்று வகையாக்குவர். அவர் மதம் பற்றிப் பரிமேலழகரும் 'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்' – என்னும் திருவள்ளுவர் குறளுள் செஞ்சொல் – இலக்கணைச் சொல் – குறிப்புச் சொல் என்பர். – *பி. வி. 50*

'பெரும்பொருளால் பெட்டக்க(து)ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு' – 732

ஆற்ற விளைவது நாடு என்பது அதிகரணமான கிருதந்தம். – *பி. வி. 37*

'கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த்(து)ஆகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர(து) அரண்' – 745

கொண்ட கூழ்த்தாகி எனப் பிரதமாதற்புருடன் தத்திதனாக வரும். – *பி. வி. 27*

'எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடைய(து) அரண்' – 746

நல்லாள் உடையது அரண் என அஃறிணையினும் உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் வரும். – *பி. வி. 32*

'முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்' – 748

பற்றியார் வெல்வது அரண் – என்பது அதிகரணமான கிருதந்தம். – *பி. வி. 37*

'தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து' – 76

தார்தாங்கிச் செல்வது தானை – என்பது அஃறிணையில் கருத்தாவான கிருதந்தம் என்னும் வினைமுற்றுப்பெயர். – *பி. வி. 37*

'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு' - 775

விழித்தகண் வேல்கொண்டு எறிய - கொண்டு என்பது ஆன் என்னும் மூன்றாம் வேற்றுமைப் பொருளாயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' (சொ. 250) என்பர். - பி. வி. 6

'விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து' - 776

வழுக்கினுள் வைக்கும்தன் நாளை எடுத்து-தன் நாளை வழுக்கினுள் வைத்து எடுக்கும் என முன்பின் பிறந்ததாகக் கொள்க. - பி. வி. 39

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தற் பொருட்டு' - 784

பொருட்டு என்பது நான்காம் வேற்றுமைப் பொருளாகிய சதுர்த்தி அர்த்தமாம். இவற்றைத் தொல்காப்பியர் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' (சொ. 250) என்பர். - பி. வி. 6

'உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்' - 813

நேர் என்னும் முதல்நிலைத்தாது நேர்வர் என்று பொருள்படும் முற்றாய்ப் பொருள்பட்டு முடிந்தது. - பி. வி. 35

'அமரகத்(து) ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை' - 814

தனது, தம என அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற் போல உயர்திணைக்கண் தனன் தனள் தனர் என வாராது, சிவன் தமர், மணிவண்ணன் தமர், நமன் தமர், என ஒருமையினும் 'கல்லா மாஅன்னார் தமர்' - எனப் பன்மையினும் தமர் என்ற சொல்லே வருதலின், தமர் முதலிய சொற்கள் இருமைக்கும் பொதுவாகலின் முதலும் ஈறும் பிரிக்கப்படா. - பி. வி. 32



'முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்' - 824

'அஞ்சப்படும்' - என்னும் குறளில், பரிமேலழகர் முதல்நிலையைப் பிரித்து எழுவாக்கி முடித்தது காண்க. - பி. வி. 36

'வஞ்சரை அஞ்சப்படும்' என்பதற்கு அஞ்சத்தகும் என்பர் பேராசிரியர்; பரிமேலழகர் அஞ்சவேண்டும் என்பர்; ஆதலின் படும் - தகும் - வேண்டும் என்னும் கிருத்தியப் பிரத்தியயம் மூன்றும் ஒன்றற்கொன்று பிரதிபதமாய் இருதிணை ஐம்பால் மூவிடத்தினும் நிற்றலின், அநவ்வியகிருத்தாம் என்க. - பி. வி. 41

'நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்' - 826

ஒல்லை உணரப்படும் - ஒல்லை என்பது உபசர்க்கம். - பி. வி. 45

'ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு' - 835

ஒருமை, எழுமை - ஒரு பிறப்பு, எழு பிறப்பு என நாமத்தின்கண் வந்த பாவதத்திதன். - பி. வி. 34

'கல்லாத மேற்கொண்(டு) ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்' - 845

மேற்கொண்டு ஒழுகல் - மேல் என்பது உபசர்க்கம். - பி. வி. 45

'அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு' - 847

'அறிவிலான் செய்யும் தானே தனக்கு' - என எழுவாயும் நான்காவதும் அபேதத்தினும் வரும். - பி. வி. 13

'உலகத்தார் உண்டென்ப(து) இல்லென்பான் வையத்(து)
அலகையா வைக்கப் படும்' - 850

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் - உயர்திணையில் கருத்தாவான கிருதந்தம் என்னும் வினைமுற்றுப் பெயர். - பி. வி. 37

'அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு(து)
உட்பகை உற்ற குடி' – 888

அரத்தால் பொரப்பட்ட பொன், உரம் பொரப்பட்டு – என நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள்படுமாறு காண்க.
– பி. வி. 37

'யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்' – 895

வேந்து செறப்பட்டவர் – தம்மினுகிய தொழிற்சொல்லில் திருதியா தற்புருடன் வந்தது. – பி. வி. 21

வேந்து செறப்பட்டார் என்ற வினைமுற்றுத் திரிந்த வினையாலணையும் பெயர் செறப்பட்டவர் என ஈற்றயற்கே ருபபேதம் பெற்று வந்தது. – பி. வி. 37

'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்' – 899

வேந்தனும் வேந்து கெடும் – இதனுள் வேந்து என்பது, வேந்தனது தன்மை என, பாவத்தன்மையை உணர்த்தும் உகர ஈற்றுப் பாவ தத்திதனம். – பி. வி. 34

'பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து' – 907

ஆண்மை என்பது ஆண் என்ற நாமத்தின்கண் வந்த பாவ தத்திதன். நாணுடைப் பெண்ணே பெருமையுடைத்து என்பதனைப் பரிமேலழகர் ஆகுபெயர் என்பர். [பெண் – பெண்மை] – பி. வி. 34

பெண் ஏவல் செய்தொழுகும் ஆண்மை என்பதனுள், ஒழுகுவான் ஆண்மை எனப் பெயரெச்சம் முற்றுப்பெயராய், அருத்த விகாரமாய்ப் பொருள் திரிந்தது. – பி. வி. 39



'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு' – 920

திருநீக்கப்பட்டார் எனத் தம்மினுகிய தொழிற்சொல்லில் திருதியா தற்புருடன் வந்தது. – பி. வி. 21

'நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணப் பெருங்குற்றத் தார்க்கு' – 924

நாண் என்னும் நல்லாள் – என்னும் திருக்குறளில் பரிமேலழகர் நாண் என்னும் நன்மை எனற்பாலதனை நல்லாள் எனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி பற்றி என்றூராதலின், வடமொழியுள் லச்சை என்பது பெண்பாற் சொல் என்க.
– பி. வி. 49

'ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு' – 932

ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர் – இஃது அநபிகிதத்துள் அபீச்சித கருமம். இதனைக் கல்லாடர் முதலாயினர் கருத்தில் – வழிச் செயப்படுபொருள் என்பர். – பி. வி. 12

'அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார்' – 936

'செயப்பாட்டெச்சமும் செயப்படுபொருளும்
நயக்காம் என்பர் நற்கிரு தந்தம்'

'வினைமுதல் கருவி அனைமுதல் இரண்டொடும்
மூன்றும் வேற்றுமை தோன்றாது அதற்கே'

'ஒரோவழி யக்குவும் உருபும் வரப்பெறும்'

யக்குவும் உருபும் ஒரோவழி வந்தமைக்கு முகடியான் மூடப்பட்டார் என்பது எடுத்துக்காட்டு. – பி. வி. 37

'பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்கும் சூது' - 933

ஏதுகருத்தா காரணகாரியத் தொடரின் அஃறிணைக்கண்ணும் வரும் என்பதற்கு அல்லல் உழப்பிக்கும் சூது என்பது எடுத்துக் காட்டு. - *பி. வி. 11*

'அற்ற(து) அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. - 944

துவரப் பசித்துத் துய்த்தான்-இஃது அநபிகிதத்துள் ஈச்சிதகருமம். இதனைக் கல்லாடர் முதலாயினர் கருத்துள்வழிச் செயப்படு பொருள் என்பர். - *பி. வி. 12*

## ஒழிபியல்

'குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து - 957

மதிக்கண் மறுப்போல் உயர்ந்து எனச் சமவாயமாக ஒரோவழி மேவுதல் என்னும் உபச்சிலேடம் ஏழாவதன்கண் வந்தது. - *பி. வி. 13*

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படல்' - 958

ஐயப்படல் - என வியங்கோள் விதிப்பொருட்டின் வந்தது. - *பி. வி. 41*

'நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு' - 960

நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் என்னும் பாட்டில், பரிமேலழகரும், வேண்டும் என்பதனைச் செய்யும் என்னும் வாய் பாட்டு முற்று என்னது விதிப்பொருட்டு என்றார். - *பி. வி. 41*



'நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்' - 1017

நாணால் உயிரைத் துறப்பர் என்பது ஏதுவின்கண் வந்த மூன்றும் வேற்றுமை. - *பி. வி. 12*

'நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று' - 1020

மரப்பாவை என்பதன்கண் மகரம் லோபமாகப் பகரம் மிக்குக் கெடமிகலாகிய ஆதேசம் வந்தது. - *பி. வி. 26*

'கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய தில்' - 1921

கைதூவேன் என்பதன்கண், கை என்பது உபசர்க்கம். கைதூ– என்பது ஒருசொல். - *பி. வி. 45*

'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு' - 1029

குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் – குடும்பத்தினது குற்றம் மறைப்பான் என இரண்டாவது ஆறுவதனோடு வந்தது. - *பி. வி. 14*

'உழுவார் உலகத்தார்க்(கு) ஆணிஅஃது ஆற்று(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து' - 1032

உழுவார் என்பது அநுபபத்தி தோன்றியவிடத்து உழுவிப்பார் என்று பொருள்படுவது அந்தர்பாவித ணிச்சாம் - *பி. வி. 35*

'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்' - 1037

பிடித்துஎருவும் – ஒரு பிடி அளவினதாகிய எருவும்; இஃது அஃறிணையில் உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதனுக்கு எடுத்துக்காட்டு. *பி. வி. 32*

'இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று' – 1058

தத் அபாவம் என்னும் இன்மைப் பொருள் 'இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மாஞாலம்' என அடையடுத்துத் தொகைமொழியாய் நின்றது. – *பி. வி. 21*

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' – 1062

பரந்து கெடுக – என வியங்கோள் சாபத்தின்கண் வந்தது. – *பி. வி. 41*

'இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்குப் படும்' – 1068

தத்அபாவம் என்னும் இன்மைப் பொருள் 'ஏமாப்பில் தோணி' என அடையடுத்துத் தொகைமொழியாய் நின்றது. – *பி. வி. 21*

காமத்துப்பால் – களவியல்

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு' – 1081

கனங்குழை மாதுகொல் எனற்பாலது, மாதர்கொல் என்றாகிச் சாமானிய தத்திதன் வந்தது. – *பி. வி. 44*

'பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு' – 1083

பெண்டகை என்பது பின்மொழிஆகுபெயராய் நின்ற இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். – *பி. வி. 22*

'கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்(கு) அமர்த்தன கண்' – 1084

வடமொழியார் சுப்புத்தாது என்னும் பெயரடியாகப் பிறக்கும் வினைகளும் உள. பேதைக்கு அமர்த்தன கண் – அமர் என்னும் பெயரடியால் பிறந்த வினை வருதல் காண்க. – *பி. வி. 35*



'கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்' – 1087

கடாஅ, படாஅ – எனக் காரியம் உள்வழி வரும் அசைநிலை அளபெடையைச் செயற்கை அளபெடை என்று கூறுவர். – *பி. வி. 5*

'உண்டார்கண் அல்லது அடுநறுக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று' – 1090

அடு நறு – அடப்பட்ட நறு என நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க. – *பி. வி. 37*

'கண்டுகேட்(டு) உண்டுயிர்த்(து) உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள' – 1101

'அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' என்பது ஒன்று பல அடுக்கினற் போல, 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று' என்புழி வேறுபல அடுக்கல் வந்தது. – *பி. வி. 39*

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து' – 1102

பிணிக்கு மருந்து என்ற தொடரில் நீக்குதல் என நடுவே பெய்து பிணி நீக்குதற்கு மருந்து என்று பொருளுரைத்துத் துமர்த்தம் என்பது கொள்க. – *பி. வி. 16*

'தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு' – 1103

தாம்வீழ்வார் மென்தோள் எனக் கருமமாய் நின்றவினைமுற்றுப் பெயர் என்னும் கிருதந்தம், தம்மால் விழப்படுவார் எனச் செயப்பாட்டு வினையோடு தோன்றிப் பொருள்தருதல், நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க. – *பி. வி. 37*

'நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணெனுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள்' - 1104

நீங்கின் தெறூஉம் எனக் குற்றெழுத்து நிற்குமிடத்தும் சிறுபான்மை அசைநிலையாக அளபெடுத்து வந்தது காண்க.
- பி. வி. 5

'தம்மில் இருந்து தமதுபாத்(து) உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' - 1107

அஃறிணையினும் தமது என உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதன் வரும். - பி. வி. 32

'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை' - 1115

தூரான்வயத்துள், நல்ல படாஅ பறை என்பதனை நல்ல பறை படாஅ என மாற்றிக் கூட்டிப் பொருள் செய்க. - பி. வி. 19

நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை என இலக்கணை அடியாய்த் தோன்றிய குறிப்பை இலக்கணா மூலத்தொனி என்பர் - பி. வி. 50

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்' - 1121

'பாலொடு தேன் கலந்தற்றே' என்பது எண்ணொடு விராய அரிசி என்பது போல, மூன்றன் உருபு அதனொடு மயங்கலுக்கு எடுத்துக்காட்டு. - பி. வி. 16

'கருமணியின் பாவாய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்(கு) இல்லை இடம்' - 1123

யாம்வீழும் திருநுதற்கு என்புழி, எம்மால் வீழப்பட்ட திருநுதற்கு என நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள்படுமாறு காண்க.
- பி. வி. 37



'நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து' - 1128

அஞ்சுதும் வேபாக்கறிந்து என்புழி, தும் ஈறு ஈண்டு ஈறு வேறுபடுதலே அன்றி உளப்பாட்டுத் தன்மை ஆகாமை காண்க.
- பி. வி. 36

'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்' - 1133

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் என்புழி ஆண்மை புங்ஸதுவம் என்னும் ஆண் தன்மையை உணர்த்தும் மை ஈற்றுப் பாவ தத்திதனும். - பி. வி. 34

'மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்' - 1136

படல்ஒல்லா பேதைக்கு எண்கண் என்பது, பேதையால் என் கண் படல் ஒல்லா என்று பொருள்பட்டுக் கரணம் ஆறன் உருபோடு வந்து ஏதுவின் கரணமாய் அடங்கும். ஈண்டுப் பேதை கருத்தா ஆகாது கரணமாய்க் குகரம் ஆறன் உருபான் வந்தது.
- பி. வி. 15

செவிக்குக் கேட்கலாம்-செவியால் கேட்கலாம்; கண்ணிற்குக் காணலாம் - கண்ணால் காணலாம்; வாய்க்குத் தக்கது வாய்ச்சி - வாயால் தக்கது வாய்ச்சி, கோடாலியது வெட்டு - கோடாலியால் வெட்டும் வெட்டு என்பனவும் அன்ன. - பி. வி. 15

'கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க(து) இல்' - 1137

'மடலேறாப் பெண்ணின் பெருந்தக்கதில்' - என்புழி, மடலேறாதவள் பெண்மை எனப் பெயரெச்சம் முற்றுப்பெயராய் அருத்த விகாரமாய்ப் பொருள் திரிந்தது. - பி. வி. 39

'நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்' - 1138

மன்றுபடும் என, பொத்துப்படும் சோர்வுபடும் - என்பன போலப் பெயர் அடுத்து வரும் படுவை யக்கு என்பர். - பி. வி. 45

'யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு' - 1140

'யாம் கண்ணின் காண நகுப' எனப் - பஞ்சமியால் கரணம் வந்தது. - *பி. வி. 15*

'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்' - 1148

கௌவையால் காமம் நுதுப்பேம் என்பது ஏதுவின்கண் வந்த மூன்றாம் வேற்றுமை. - *பி. வி. 12*

நெய்யால் எரிநுதுப்பேம், கௌவையால் காமம் நுதுப்பேம்- என்பனவற்றில் திருதியையால் கரணம் வந்தது. - *பி. வி. 15*

## கற்பியல்

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்(கு) உரை' - 1151

'எனக்கு உரை' 'வாழ்வார்க்கு உரை' - என்புழி, உரையாய் என்பது உரை என நின்றது. வடநூலுள்ளும் பசகி என்பது பச எனக் குறைந்து நின்று பசகி எனப் பொருள்படும். பஜ தியச திச என்பனவும் அது. வடநூலார் இவ்வாறுரைக்கும் கருத்தே பற்றித் தொல்காப்பியரும், 'செய்யாய் என்னும் ...... உடைத்தே' (சொ. 450) என்றார். - *பி. வி. 46*

'அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு' - 1154

தெளித்த சொல் தேறியார் - தெளிவித்த சொல் தேறியார் எனப் பொருள்பட்டு, அநுபபத்தி தோன்றியவிடத்து இவ்வாறு பொருள்படுவதனை அந்தர்பாவிதணிச் என்பர். - *பி. வி. 35*

'துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை' - 1157

துறந்தமை தூற்றாகொல் என, ஏதுகருத்தா காரணகாரியத் தொடரின் அஃறிணைக்கண்ணும் வரும். - *பி. வி. 11*



'உறுஅர்க்(கு) உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு' - 1200

செறாஅய் வாழிய நெஞ்சு என, காரியம் உள்வழி வரும் அசை- நிலை அளபெடையைச் செயற்கை அளபெடை என்று கூறுவர். - *பி. வி. 5*

செறாஅய் வாழிய நெஞ்சு என்புழி, வாழிய என்பது வாசகாவ்வியயம். (வெளிப்படைச் சொல்லாகி இசை நிறைக்கும் இடைச்சொல்) - *பி. வி. 42*

'நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர்' - 1213

அபேத சட்டியாவது கருமகருத்தாவும் கர்த்திரு கருமமும் போல ஒரு பொருள் தானே உடையானும் உடைப்பொருளுமாம். நனவினால் காண்டலின் உண்டு என் உயிர் - எனது உயிர் எனத் தானும் உயிரும் வேறன்றி நிற்கும் அபேதசட்டி வந்தவாறு. - *பி. வி. 17*

'தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்' - 1233

ஏதுகருத்தா காரணகாரியத்தொடரில் அஃறிணைக்கண்ணும், தோள் அறிவிப்பபோலும் என வரும். - *பி. வி. 11*

'கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்' - 1235

தொடிக்கு வாடுதல் இன்மையின், தொடியொடு தொல்கவின் வாடிய தோள் என்பது, காவொடு அறக்குளம் தொட்டான் என்பதுபோல, மூன்றாவது வேறுவினை என்னும் பின்னக் கிரியையோடு வந்தது. - *பி. வி. 16*

'கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ(டு) ஏறும்என் நெஞ்சு' - 1264

கூடிய காமம் என்புழிக் கூடிய என்பது உபசர்க்கம். கூடிய காமம் வடமொழி மரபில் அவ்வியயீபாவ சமாசன். கூடிய

என்பது உபசர்க்கம் என்னும் முன்னடை. கூடிய காமம் என்பது, கூடிய காமத்தை உடையான் என்று பொருள்படின், சகபூர்வபத வெகுவிரீகியாம்; சக, கெழு, கூடிய என்பன உபசர்க்கமாதலின்.
– *பி. வி. 24*

'வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட' - 1266

பருகுவன் பைதல்நோய் எல்லாம் கெட என்பது, பருகிப் பைதல் நோய் எல்லாம் கெடுவன் என முன்பின் பிறந்ததாக வைக்க.
– *பி. வி. 39*

'வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து' – 1268

வென்றீக என்புழி, ஈகாரம் விகரணி எழுத்து. வெல்க என்பது பொருளாயிற்று.
- *பி. வி. 41*

'துன்பத்திற்(கு) யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி' – 1299

துன்பத்திற்கு யாரே துணையாவார் என்பது துன்பத்தைப் பறித்தற்கு யாரே துணையாவார் எனப் பறித்தல் என்பதனை நடுவேபெய்து பொருளுரைத்துத் துமர்த்தம் என்பது காண்க.
– *பி. வி. 16*

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று' - 1314

'இம்மைப் பிறப்பில் பிரியலெம் என்றேனா
கண்ணிறை நீர்கொண் டனள்' - 1315

'கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று' - 1313

'உள்ளினேன் என்றேன்மற்(று) என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்' - 1316

'வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று' - 1317



புலவி நுணுக்கத்துள், 'யாரினும் காதலம்' 'இம்மைப் பிறப்பில் பிரியலெம்' என்புழி, அம் ஈறும் எம் ஈறும், ஈண்டு அன் ஈறும் என் ஈறும், அம்ஈறுயும் எம்ஈறுயும் வேறுபடுதலே யன்றி உளப்பாட்டுத்தன்மை ஆகா; சூடினீர் – என மறந்தீர் – தும்மினீர் என்பனவும், ஈண்டு ஆய் ஈறு ஈர் ஈறாக வேறுபடுதலே யன்றி, ஏகசேடம் என்னும் படர்க்கை கூடிய முன்னிலை ஆகா. இவைபோல, ஆற்பனேபதமும் பரப்பைபதமும் தனக்கு – பிறர்க்கு எனப் பொருள்படாது, ஈறு வேறுபடுதலே கொள்க. – *பி. வி. 36*

இம்மைப் பிறப்பில் பிரியலெம் என்பது இப்பிறப்பில் பிரியலெம் எனப் பொருள்பட்டுத் தன்மை உணர்த்தாது தன்மை யுடைப்பொருளையே உணர்த்தலின், பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்திதப் பிரத்தியயம்.
– *பி. வி. 34*

'தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று' – 1318

'தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல் எம்மை மறைத்திரோ' – என்பது அலங்கார நூலார் இசையெச்சம் என்னும் 'காகு' வுக்கு எடுத்துக்காட்டாம். அது சொல்லுங்கால் முகவிகாரமாதல் சொல்விகாரமாதல் தோன்ற நிற்கும்.
– *பி. வி. 50*

[எம்மை என்பது நும்மோடு யாதும் இயைபில்லாத எம்மை என்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகு என்ப – பரி.]

'புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை' – 1324

புலவியுள் – புலவா நிற்கும் அளவில் எனப் பொருள்பட்ட சதி சத்தமி என்னும் வினைநிகழ்ச்சியாம். அது பரிமேலழகர்

உரையானும் காண்க. [புலவியுள் என்னும் ஏழாவது வினை நிகழ்ச்சிக்கண் வந்தது. - பரி. வினை நிகழ்ச்சியை வினை செய் இடம் என்பர் தொல்காப்பியர்] - பி. வி. 16

'ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு' - 1328

பெறுகுவம் என்புழி, கு என்னும் விகரணி எழுத்து இடை-நிலையாய் வந்து பெறுவம் என்பதன் பொருட்டாயினவாறு.
- பி. வி. 41

★

## திருக்கோவையாரும் பிரயோகவிவேக உரையும்

[பிரயோகவிவேக ஆசிரியர் திருக்கோவையார் என்னும் நூலிடத்தும் அதற்குப் பேராசிரியர் வரைந்த உரையிடத்தும் பெரிதும் ஈடுபாடுடையவர். ஆகவே, சேனவரையர், நச்சினார்க் கினியர், பரிமேலழகர் ஆகியோர் கூற்றுக்கள் இந்நூல் உரையுள் இடம் பெற்றுள்ளமை போலவே, திருக்கோவையாரின் உரையாசிரியரான பேராசிரியர் கூற்றுக்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றை நிரலே காண்பாம்.]

'சொற்பால் அமுதுஇவள் யான்சுவை எனத் துணிந்துஇங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று' - கோவை 8

முதல்நிலைவினை முன்னிலை ஏவல்வினை மாத்திரையாய் நில்லாது வினையெச்சப் பொருட்டாயும், பெயரெச்சப் பொருட்டாயும், புடைபரந்து வினை தன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாயும், முற்றுச் சொல்லாய் நின்றவிடத்து அம் முதல்நிலை பிரிந்து நின்று வினைதன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாயும் நிற்கும் என்று கூறி, பெயரெச்சமாதற்கு எடுத்துக்காட்டாகச் 'சொற்பால் - சொல்லும் பகுதி' என்பதனைக் காட்டியுள்ளார், - பி. வி. 35



'விலங்கலைக் கால்விண்டு மேன்மே லிடவிண்ணும் [மண்ணும்முந்நீர்க்
கலங்கலைச் சென்றஅன் றும்கலங்காய்' - கோவை 24

விண்டதாமரை என்புழி, விண்ட என்பது செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், 'விலங்கலைக் கால் விண்டு மேன்மேலிட' என்புழிக் காற்றுப் பிளந்து என்று பொருள்படுதலின், விண்டு என்பது செயப்படுபொருள் குன்றாத வினையாகவும் வரும்.
- பி. வி. 50

'ஆலத்தி னால்அமிர் தாக்கிய கோன்தில்லை அம்பலம்போல்
கோலத்தினாள்' - கோவை 27

ஆலத்தினால் என்னும் மூன்றாவது பாலால் தயிராக்கினன் என்பது போல நின்றது. - பேரா.

ஆலத்தினால் அமிர்தாக்கிய கோன் என, அநபிகித கன்மம் திருதியையால் வந்தது. 'ஆலத்தினால்' என்னும் திருக்கோவை-யாருள் பேராசிரியர் சொற்சோதனை காட்டிய 'பாலால் தயிராக்கினன்' என்பதும் அது. [இவை ஆலத்தை அமிர்தாக்கினன், பாலைத் தயிராக்கினன் என்னும் பொருளன.]
- பி. வி. 14

'தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய்
[வரும்இன்பத் துன்பங்களே' - கோவை 71

இன்பத்துன்பம் - இருமொழிப் பண்பு என்னும் விசேடணோபய பத கருமதாரயன் வரும். - பி. வி. 22

'யாழும் எழுதி எழில்முத்(து) எழுதி இருளின் மென்பூச்
சூழும் எழுதிஒரு தொண்டையும் தீட்டி...... இளமாம்
போழும் எழுதிற்றொரு கொம்பருண் டேல்கொண்டு போதுகவே'
- கோவை 79

எழுதிற்று என்னும் செயப்படுபொருளைச் செய்தது போலக் கொள்க. - பேரா.

*திருக்கோவையாருள் 'யாழும் எழுதி எழில் முத்தெழுதி' என்புழி, யாழும் எழுதப்பட்டு எழில் முத்தும் எழுதப்பட்டு என்று நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க.* – *பி. வி. 37*

**'உள்ளப் படுவன உள்ளி உரைத்தக் கவர்க்குரைத்து**
**மெள்ளப் படிறு துணி; துணி யேல்; இது வேண்டுவல்யான்;**
**கள்ளப் படிறர்க்(கு) அருளா அரன்தில்லை காணலர்போல்**
**கொள்ளப் படாது மறப்ப(து) அறிவில்என் கூற்றுக்களே'**
– *கோவை.* 87

*கொள்ளப்படாது என்பது வினைமுதல் மேலும் செயப்படுபொருள் மேலுமன்றி வினைமேல் நின்ற முற்றுச்சொல், 'அகத்தினை வஞ்சரை அஞ்சப்படும்' என்பது போல. மறப்பது என்பது வியங்கோள்.*

*'ஒளியோடு ஒழுகப்படும்' என்பது ஒளியால் ஒழுகுதல் செய்யப்படும் என்றே பொருள்படும். 'கொள்ளப்படாது மறப்பது அறிவில் என் கூற்றுக்களே' என்னும் திருக்கோவையாரில்' பேராசிரியர் முதல் நிலையைப் பிரித்து எழுவாயாக்கி முடித்தலும் காண்க. [அறிவில்லாதேன் சொல்லிய சொற்களை உள்ளத்துக் கொள்ளல் தகாது].* – *பி. வி. 36*

*'கொள்ளப்படாது மறப்பது அறிவில்என் கூற்றுக்களே' என்புழி, மறப்பது என்னும் வியங்கோள் விதிப்பொருட்டின்கண் வந்தது.* – *பி. வி. 41*

**'கற்றில கண்டுஅன்னம் மென்னடை; கண்மலர்**
**[நோக்கு அருளப்**
**பெற்றில மென்பிணை; பேச்சுப் பெருகிள்ளை'** – *கோவை* 97

*கண்டு என்பது கற்றலோடும், அருள என்பது பெறுதலோடும் முடிந்தன* – *பேரா.*

*'கற்றில கண்டு அன்னம்' என்னும் திருக்கோவையாரில், பேராசிரியர் கண்டு என்பது கற்றலோடு முடியும் என்பர்.* – *பி. வி. 39*



**'ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்று அவன் வாங்கியஎன்**
**பாசத்தில் காரென்று'** – *கோவை* 109

*ஈச: என்பது ஈசன் எனத் தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய னகரம் பெற்றுத் தற்பவமாயினமைக்கு 'ஈசற்குயான் வைத்த அன்பு' என்பது எடுத்துக்காட்டு.* – *பி. வி. 2*

**'தினைவளம் காத்துச் சிலம்புஎதிர் கூஉய்ச்சிற்றில்**
**[முற்றி ழைத்துச்**
**சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதுஎழுவார்]**
**வினைவளம் நீறெழ நீறணி அம்பல வன்தன்வெற்பில்**
**புனைவளர் கொம்பரன் னாய்! அன்ன காண்டும் [புனமயிலே'**
– *கோவை* 118

*தொழுது எழுவார் – தொழா நின்று துயில் எழுவார். தொழுது எழுவார் என்றது, துயில் எழுங்காலத்தல்லது முன் உணர்வு இன்மையான், உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு.*

*தொழுதெழுவார் வினைவளம் என்புழி, எழுந்து தொழுவார் என முன்பின்னாகப் பிறந்தது. 'தொழுதெழுவார் வினைவளம் நீறெழ' என்னும் திருக்கோவையாரில், பேராசிரியர் தொழா நின்று எழுவார் எனத் துணைவினையாய் உரைப்பர். எழுதல் துயில்ஒழிதலாதலின், எழுந்து தொழுவார் என முன்பின்னாகப் பொருள்படுதலன்றி, நகுபு வந்தான் ஓடி வந்தான் – என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாது என்க.*
– *பி. வி. 39*

**'குறப்பாவை! நின்குழல் வேங்கையம் போதொடு**
**[கோங்கம் விராய்**
**நறப்பா டலம்புனை வார்நினைவார்'** – *கோவை* 205

*'புனைய நினைவார்' என்னும் செய என் எச்சம் புனைவார் நினைவார் என முற்றாய்த் திரிந்தது. இவ்வாறு வரும் முற்றுக்களை முற்றாகவே பொருள் உரைக்கின், ஏகவாக்கியமாகாது பின்ன வாக்கியமாகிப் பொருள் சித்தியாது என்க.* – *பி, வி. 39*

'மயிலெனப் பேர்ந்(து)இள வல்லியின் ஒல்கிமட மான்விழித்துக்
குயிலெனப் பேசும்எம் குட்டன்எங்(கு) உற்றது' – கோவை 224

'மயிலெனப் பேர்ந்து' எனத் திருக்கோவையாரில் மயிலை நடைக்கு உவமையாக்கலின், 'நடைமயிலே' என்றும்.
– பி. வி. 42

'வேயின மென்தோள் மெலிந்(து)ஒளி வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டையள் அல்லள் பவளச்செல்வி
ஆயின ஈசன் அமரர்க்(கு) அமரன்சிற் றம்பலத்தான்
சேயின(து) ஆட்சியில் பட்டன ளாம்இத் திருந்திழையே'
– கோவை 282

பாயினமேகலை என்னும் சொற்கள் ஒருசொல்நீர்மைப் படுதலின் ஆகுபெயர் எனப்படும் – பேரா.

உண்ணு முலை, முற்று முலை, பாயின மேகலை, பரசு பாணி, ஆருட வானரம், நிட்கிராந்த சனம் என உபயபத வெகுவிரீகி வரும். திருக்கோவையாரில் 'பாயினமேகலை' யைப் பெயரெச்சம் ஒரு சொல்லாகலின் ஆகுபெயர் என்பர் பேராசிரியர். பெயரெச்சம் நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாகப் புணர்ந்தது நோக்காமையின், மறந்து அவ்வாறு உரைத்தார். – பி. வி. 24

★

## பிரயோக விவேகம் குறிப்பிடும் அருஞ்செய்திகள்

முற்பட்ட நூல்களாகிய தொல்காப்பியம், நன்னூல், சின்னூல் என்பன பெரும்பாலும் தமிழ்மொழி இலக்கணம் வடமொழி இலக்கணத்தின் வேறுபட்டது என்று முடிந்த முடிபை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டன. வீரசோழியம் என்பது ஒன்று மாத்திரம், தமிழ்ச் சொல்லிற்கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழும் பெறும் (வீ. 60 உரை) என்ற எண்ணத்தில், வடமொழி



இலக்கணத்தைத் தமிழ் இலக்கணத்தோடு கலந்து வரையப்பட்ட நூலாகும். தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூலுள்ளும் வீரசோழியம் ஆகிய வடமொழி இலக்கணம் சிவணிய நூலுள்ளும் குறிப்பிடப்பெறாத பல அரிய செய்திகள் பிரயோக விவேக உரையில் திறம்பட விளக்கப்பட்டுள்ளன. அவற்றை நிரலே காண்பாம்.

### காரகபடலம்

தமிழ்மொழியின் இலக்கணம் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்ற ஐந்து பிரிவினதாக அமைந்திருப்பினும், இந்நூலாசிரியர் பிரயோகவிவேகம் என்னும் வடமொழிச் சத்த சாத்திரத்தை மாத்திரம் கூறத்தொடங்குகிறார். வடமொழியில் சொல்லிலக்கணமே வியாகரண சாத்திரம் எனப்படுவதனை உட்கொண்டு, வடமொழிப் பிரயோகவிவேகத்தினும் சொல்-லிலக்கணமல்லது எழுத்திலக்கணம் கூறாமையின், சொற் பிரயோக விவேகம் என்றார்.

'ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரம்என்று
ஓதிய புலவனும் உளன்;ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்'

என அகத்தியத்தின்கண்ணும்,

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'

எனத் தொல்காப்பியப் பாயிரத்தின்கண்ணும் வருதலின், இவர்கட்கு முதல்நூல் பாணினீயமும் ஐந்திரமுமாம் என்க. 'அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன்' என்னாமையானும், 'கடிநிலையின்றே ஆசிரியற்க' (தொ. எ. 389) எனப் பொதுப்பட ஓதியதல்லது பெயரெடுத்து ஓதாமையானும் அதுவே பொருள் என்க. – 1

இரண்டாம் காரிகை உரையுள், "பண்டு உணர்ந்தோராவார் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் என்க. அவர் கூறிய

வடமொழி இலக்கணம் பெற்ற தற்சமம் தற்பவமாகத் தத்தம் நூலுள்ளே எழுத்திற்கும் சொல்லிற்கும் காரணக்குறி இடுகுறியாகிய யோகரூட நாமங்களைச் சிறுபான்மை கூறினர். அவ்வாறு சிறுபான்மை கூறாது, யாம் இந்நூலுள் பெரும்பாலும் தற்சமம் தற்பவங்களால் கூறினும். இப்பெரும்பான்மையும் கூறியது யாதுபற்றி எனின், வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒன்று என்பது அறியாது குறியீட்டு வேறுபாட்டானும் மொழி வேற்றுமையாலும் இகழ்ந்து வேறு என்பாரை நோக்கி என்க. இந்நூல் செய்ததற்கும் இதுவே பயன்.

நன்னூலார் சொல்லதிகாரத்துள்,

**'பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்**
**ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'** – 274

என முழுதும் பொது எழுத்தானே வருவனவும், முழுதும் வட சிறப்பெழுத்தானே வருவனவும், இவ்விரண்டுமன்றி வட சிறப்பெழுத்தானும் பொது எழுத்தானும் கலந்து வருவனவும் என இயற்கையாய் நிற்கும் வடமொழிப் பாகுபாடே கூறி, எழுத்ததிகாரத்துள் 'இடையில் நான்கும்' (146–150) என்னும் சூத்திரம் முதல் ஐந்து சூத்திரத்தான் முழுதும் பொது எழுத்தான் வரும் தற்சமம் ஒழித்து, மற்றை இரண்டனுள்ளும் புணர்ந்த வட சிறப்பெழுத்துக்கள் இன்ன எழுத்து இன்ன பொதுஎழுத்தாய்த் திரியுமென்றும், இன்ன பொதுஎழுத்து இன்ன பொது எழுத்தாய்த் திரியும் என்றும் தற்பவச்சொல் இலக்கணம் கூறினர்.

தமிழ்ச் சிறப்பெழுத்தால் திரியாமை நன்னூலாருக்கும் தொல்காப்பியனருக்கும் ஒக்கும்.

**'கடிசொல் இல்லை காலத்துப் படினே'** – தொ. சொ. 452

என்பதனல், தற்பவம் – தற்சமம் – தற்புருடன் – உற்பலம் எனத் தகாரத்தை றகாரமாக்கிக் கூறினும்.



இனி,

'எந்திர ஊர்தி இயற்றுமின் என்றான்' – சீவக. 234

என யகாரம் எகாரம் என்னும் குற்றெழுத்தாயும்,

'தெய்வ மால்வரைத் திருமுனி அருளால்' – சிலப். 3–1
'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி' – தொ. சொ. 4

என ஐகாரம் எகரம் என்னும் குற்றெழுத்தாயும்,

'கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும்'

என்பதில் கோங்கணம் என்னும் நெட்டெழுத்துக் குற்றெழுத்தாயும்,

'அமிழ்தினும் ஆற்ற இனிதே' – கு. 64
'சோழ வளநாடு சோறுடைத்து'

என ரகார ளகாரம் இரண்டும் தமிழில் சிறந்த ழகரமாயும்,

'அற்புதன் நாரா யணன்அரி வாமனன்
நிற்பது மேவி இருப்பதுஎன் நெஞ்சகம்
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றுஅதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே' – திவ். பிர. 3511

எனத் தகாரமும் லகாரமும் றகாரமாயும்,

'ஈசற்கு யான்வைத்த அன்பு' – கோவை 109
'கடிநிலை யின்றே ஆசிரி யற்க' – தொ. எ. 389
'அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து' – தொ. சி. பா.
'சிவன்தமர்'
'திருநாரா யணன்தாள் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மினோ'
– திவ். பிர. 3617

என அகரஈறு னகரமாயும், திரிந்து பண்டையோராகிய சான்றோர் செய்யுட்கண் வருதலின், திரியாது என்ற ஐந்தும் தமிழ்ச் சிறப்பெழுத்துக்களாய்த் திரிதலும் கொள்க. திரமிளம் என்பது தமிழ் எனத் திரிதலும் அது.

மணலூர்புரம் என்னும் தமிழ் வியாசபாரதத்தில் சென்றது, தேசியமல்லது தற்சமம் தற்பவம் ஆகாது என்க.

நிலம் – நீர் – தீ - வளி – விண் என்றும்,

என்று – எறி – ஒன்று – ஒறு – கொன்றை – கொறி – வென்றி வெறி என்றும்,

வாழை – மழை – சோறு – கூறை என்றும்

தமிழ் இம்மூன்று பாகுபாடும் பெறும் ஆயினும், இவை வடமொழிக்கண் சென்று வழங்கித் திரியாதும் திரிந்தும் பொருள் ஒன்று ஆகாமையின் தற்பவம் தற்சமம் ஆகா என்க" என்று கூறியுள்ளார்.

மூன்றும் பாடலில், தன்னைப் பிறன்போல் கூறும் நாந்திகூறி அதற்கு விளக்கமாக "வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினும். தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல, யாமும் உரை எழுதியதல்லது மூலோதாரணமும் காட்டினும். இனி, சம்பந்தர் சடகோபர் முதலாயினாரும், திவாகரரும், பதினெண்கீழ்க் கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகம் செய்வதும் காண்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் பாடலில், உயிரெழுத்தெல்லாம் அச்சு எனவும் சுரம் எனவும் பெயர் பெறும் எனவும், மெய்யெழுத்தெல்லாம் அல் எனவும் வியஞ்சனம் எனவும் பெயர் பெறும் எனவும், அச்சு அல் என்பன பிரத்தியாகாரம் செய்த பெயர் எனவும் கூறி விளக்கியுள்ளார். மெய்யெழுத்துக்களில் மகாப்பிராணன், அர்த்தப் பிராணன், அற்பப் பிராணன் என்ற பாகுபாட்டைச் சுட்டியுள்ளார்.



ஐந்தாம் பாடலில், குறில் இரச்சுவம் எனவும், நெடில் தீர்க்கம் எனவும், அளபெடை புலுதம் எனவும், வன்மையும் மென்மையும் பரிசாக்கரம் எனவும், யரலவ என்ற நான்கும் அந்தத்தாக்கரம் எனவும், ஏஓஐஔ என்னும் நான்கும் சந்தியக்கரம் எனவும் மயக்கம் சையோகம் சையுத்தம் எனவும் பெயர் பெறும் என்று கூறி, 'வடநூலார் சையோகம் ஒரு மொழியினும் புணர்மொழியினும் கொள்வர். அதுபற்றிச் சூத்திரம் செய்தபடி இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறு கொள்வர். அக்கருத்தறியாத நச்சினார்க்கினியர் ஒரு மொழியில் கொண்டு இரு மொழியில் கொள்ளாது உதாரணம் இறந்த என்பர்' என்ற கருத்தையும் சுட்டியுள்ளார்.

அதே ஐந்தாம் பாடல் உரையில், இனி வடநூலார் குறில் தனியே ஒரு மாத்திரையாய்ப் பிறப்பதோரெழுத்தும் நெடில் தனியே இரண்டு மாத்திரையாய்ப் பிறப்பதோரெழுத்தும் ஆனாற் போல, புலுதமும் தனியே மூன்று மாத்திரையாய்ப் பிறப்பதோ ரெழுத்து என்று கூறி, வேதத்துள் ஒலிக்குறை வாராமல் குறில் நின்ற இடத்தும் நெடில் நின்ற இடத்தும் அளபெடை கெடமிகலாய் வருவதல்லது குறிலும் நெடிலும் போலப் பொருள் வேறுபடுக்க வாராது என்றும், உலக வழக்கில் ஒருமைவிளி பன்மைவிளி இவற்றில் வரும் என்றும், அண்மைவிளிஒருமையில் குறிலும் நெடிலும் இயல்பாய் நிற்கும் என்றும், சேய்மை விளியிலே தாளஓசை மணிஓசை என்கின்ற ஓசை விகற்பம் போலும் என்றும் கூறுவர். அவர் குறில் நின்ற இடத்தும் அளபெடை வரும் என்பது பற்றித் தொல்காப்பியர்,

'ழகர உகரம் நீடுஇடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான' - தொ. எ. 261

எனச் சூத்திரம் செய்து 'பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி' (குறுந். 180) என உதாரணம் காட்டுவர். அதுவே உபலக்கணமாக, நாலடியில்,

'விராஅய்ச் செய்யாமை நன்று' - 246

'நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல்வ தூஉம்' - 124

என்றும்,

திருவள்ளுவர் குறளில்,

'துப்பார்க்குத், துப்பாய தூஉம் மழை' - 12

'நீங்கில் தெறூஉம் குறுகுங்கால்' - 1104

என்றும் குற்றெழுத்து நிற்குமிடத்தும் சிறுபான்மை அசைநிலையாக அளபெடுத்து வந்தமை காண்க. குரீஇ, உடீஇ என வரும் இறுதிநிலை அளபெடையும் அது.

தமிழ் நூலார் இசை விளி பண்டமாற்று ஆயினவற்றை இயற்கை அளபெடை என்றும், காரியம் உள்வழி வரும் அசைநிலை அளபெடையைச் செயற்கை யளபெடை என்றும் கூறுவர்.

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்'-தொ.எ. 41

என்னும் சூத்திரவிதி செயற்கை அளபெடைக்கல்லது இயற்கை யளபெடைக்குப் பொருந்தாமை தெற்றென அறிக. இயற்கை அளபெடைக்கு வடநூலார் சொன்ன வண்ணமேயாம். 'அளபிறந்துயிர்த்தல்' (தொ. எ. 33) என்னும் சூத்திரவிதி சிறுபான்மை பொருந்தில் பொருந்தும் என்க.

'உவாஅப் பதினன்கு' 'இராஅப் பகல்' என்னும் எழுத்துப் பேறுகள்' 'குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்' காரியம் இல்வழி வந்த புலுதச்சந்தி. வடமொழியினும் 'அக்கிநீஇஇ இதி' என வரும்.

சந்திக்கரமாவது –

'அகர இகரம் ஏகாரம் ஆகும்'

'அகர உகரம் ஓகாரம் ஆகும்'



'இகரம் உகரம் என்னும் இவற்றோடு
அகரம் ஐஔ ஆகலும் உரித்தே'

இவ்வுரைச் சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சத்தியக்கரம் என்றும் ஓரெழுத்தாகிய ஏகாக்கரம் என்றும் அறிக. அம்முறை பற்றித் தொல்காப்பியரும்,

'அகர இகரம் ஐகாரம் ஆகும்' - தொ. எ. 54

'அகர உகரம் ஔகாரம் ஆகும் - தொ. எ. 55

'அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' - தொ. எ. 56

எனச் சந்தியக்கரமாக நேரே கூறினர். அவ்வாறு கொள்ளாமல் உரைகாரர் 'ஐ ஒத்து இசைக்கும்' (125) 'ஔஓரன்ன' (125) என நன்னூலார் மதம்பற்றி, ஐகாரம் போல ஆகும் – ஔகாரம் போல ஆகும் – ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும் – என விரித்து விகாரமாக்கி நலிந்து பொருள் கொண்டு போலி எழுத்து என்று இடர்ப்படுவர். அவர் போலி எழுத்து என்றால் .........

'ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' - ந. 29

எனவும்,

'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' - கு. 169

எனவும் வருவனவற்றுள், ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க. அதுபற்றி,

'ஆயிருதொடை' - தொ. சொ. 406

என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலி வகையால் கிளை எழுத்து எனப்படும் என்றார். இனி நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்துள் 'போலி எழுத்துக் கொள்ளற்க' என்பர். கொள்ளா எழுத்திற்கு இலக்கணம்

கூறின், அந்நூற்கு நின்று பயனின்மை (ந. 12) என்னும் குற்றம் தங்கும் என்க. நன்னூலாரும் போலியைத் தள்ளாது எழுத்திலக்கணம் 'பன்னிருபாற்றதுவே' (ந. 57) என்றலின், போலி எதுகை நிமித்தம் உடன்பாடாயிற்று. இளம்பூரணரும் போலி எழுத்தைக் கொள்ளற்க என்று கூறுமை அவர் உரையில் காண்க. தொல்காப்பியர் இயற்கை ஆயிரம் என ஓரெழுத்துக் கொண்ட- தன்றித் தொள்ளாயிம் என்பதன்கண் சந்திநோக்கி நூறு திரிந்த ஆயிரமும் கொண்டாற்போலவும், தாமரை என்பது செம் மொழியும் பிரிமொழியும் ஆயினாற்போலவும், இயற்கையாகிய ஓரெழுத்து ஐகார ஔகாரங்கள் கொண்டதன்றி எதுகை நோக்கி ஈரெழுத்து இயைந்த ஐகார ஔகாரங்களும் கொண்டார் என்க. உயிர்மெய்யை ஒற்றுமை நயம் கருதி ஓரெழுத்தாகவும் வேற்றுமை நயம் கருதி ஈரெழுத்தாகவும் கொண்டாற்போல, ஐகார ஔகாரங் களையும் அவ்வாறு கொண்டார் என்பதும் ஒன்று. போலி எழுத்தென்பார், இலக்கணப்போலி ஒப்பில்போலி போல எழுத்துப்போலியும் கைக்கொண்டு எதுகை கொள்வார் என்க. மியா, நுந்தை என்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக் காலத்து நின்றாற்போல, அஇ, அஉ என்பனவும் இக்காலத்துப் பயன்படாமலே நின்றன எனினும் அமையும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆறும் பாடல், 'வடநூலார் துதியை திருதியை சதுர்த்தி என்றாற்போலத் தொல்காப்பியரும்,

'இரண்டா குவதே' - சொ. 71

'மூன்றா குவதே' - சொ. 73

'நான்கா குவதே' - சொ. 75

என மொழிபெயர்த்துக் கூறுவர்.

சதுர்த்தி அர்த்தமாகிய பொருட்டு நான்காம் வேற்றுமைப் பொருளாம். பஞ்சமி அர்த்தமாகிய மேனின்று, நின்று என்பன ஐந்தாம் வேற்றுமைப் பொருளாம். சட்டி அர்த்தமாகிய கு, உடைய என்பன ஆறும் வேற்றுமைப் பொருளாம். சத்தமியும் சத்தமி அர்த்தமும் ஆகிய கண் ஏழாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமைப் பொருளுமாம். கால், அகம், புறம் முதலாயின சத்தமி அர்த்தம் என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளும், ஏழாம் உருபு ஏற்ற சொல்லின் ஏகதேசமுமாம்.' என்றும்,



'ஆசாரியதண்டிகள் உவம உருபுகளைச் சார்த்தி என்றும், ஒப்பில்வழியால் பொருள் செய்வனவற்றை ஆர்த்தி என்றும் கூறுவர். அவ்வாறு சேனாவரையர் முதலாயினரும் பொருள் என்றும் பொருட்டு என்றும் கூறுவர்' என்றும்,

'வடமொழியில் பரிமௌளி – அநுகரி – அதிகரகம் என்பன சத்தமி அர்த்தம் ஆனாற்போல, உள்ளூர் – கீழ்நீர் – மீகண் எனத் தமிழிலும் மாறி வரும்' என்றும்,

'இடைக்கண் முரிந்தார்' (கு. 473) கடைக்கால் – தலைக் கண்ணதாகி – 'அஃறிணை மருங்கில் கிளந்தாங் கியலும்' (தொ. சொ. 56) என்பனவற்றுள் இடை – கடை – தலை – மருங்கு என்பன ஓரிடத்தின் ஏகதேசமாகியும், கண், கால் என்பன உருபாகியும் மாறி இரட்டித்தும் வருதலின், முன்நின்றவற்றை ஏகதேசமான இடமாக்கியும் பின் நின்றவற்றை உருபாக்கியும் கூறுவர்' என்றும்,

'அவை ஓரிடத்தின் ஏகதேசமாகவும் பொருள்படும் என்பது பற்றி நன்னூலாரும் 'இடப்பொருள் உருபே' (302) என விதந்தோதினர்' என்றும் கூறுவர்.

ஏழாம் பாடலில் 'வடமொழியில் சுப் என்னும் எழுவாய் வேற்றுமை உருபு பெற்ற பின்னரே பெயர்ப்பகாப்பதம் எழுவாய் வேற்றுமை ஆகும் என்பர்; ஆனால் தொல்காப்பியர்,

'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே'

- தொ. சொ. 65

என்றாராயினும், வடநூலில் எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று அறிதற்கு, நும் என்னும் ஒரு பெயரை மாத்திரம்

எழுவாய் வேற்றுமை ஆக்காது பெயர்ப்பகாப்பதமாக்கிப் பின்னர் நும்மை.........நுங்கண் என இரண்டுமுதல் ஏழ் இறுதியும் வேறு படுத்து வேற்றுமையாக்கினற்போல,

'அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை' - தொ. எ. 326

என்னும் சூத்திரவிதிகொண்டு நீயிர் என வேறுபடுத்து எழுவாய் வேற்றுமையாக்குவர். இவ்வாறு நின் - தன் - தம் - என் - எம் - நம் என்பனவற்றையும் பெயர்ப்பகாபதமாக்கி, நீ - தான் - தாம் யான் - யாம் - நாம் எனத் திரிந்தவற்றை எழுவாய் வேற்றுமை ஆக்காமையானும்,

'எல்லாம் நீயிர் நீ' - தொ. சொ. 174

'நீயிர் நீ என வருஉம் கிளவி' - சொ. 188

என நீயிர் என்பதனைப் பெயர்ப் பகாப்பதமாகச் சூத்திரம் செய்த லானும், 'அல்லதன் மருங்கின்' (எ. 326) என்னும் சூத்திரத்தை வடமொழிக்கு எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று தமிழ் நூலார் அறிதற்கே செய்தார் என்க' எனக் கூறினர்.

எட்டாம் பாட்டில், 'பெயர்க்கு வடிவு வேற்றுமை காட்டும் வேற்றுமை உருபு வடமொழிக்கல்லது தமிழுக்கு இல்லாமை கண்டு 'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' (தொ. சொ. 65) என்றார் தொல்காப்பியனர். அதற்கு உரை-யாசிரியரும் நச்சினர்க்கினியரும் பெயர் தனித்து நின்ற காலை எழுவாய் வேற்றுமை ஆகாது என்றும், பெயர் தோன்றுநிலை என்பதன் பொருள் பெயர் பயனிலை தோன்றநிற்கும் நிலை என்றும் கூறுவர். பெயர்தாம் பயனிலை தோன்ற நின்றால் வினை கொண்டு முடியும் எழுவாய் ஆவதன்றி, வடிவு வேற்றுமை பெற்ற எழுவாய் ஆகா. அன்றியும், அவ்வாறே, நிலங்கடந்தான் முதல் குன்றக் கூகை இறுதியாக ஆறு உருபும் வாராது தத்தம் பயனிலை தோன்ற நிற்கும் நிலைமையே அமையும். அங்ஙனம் அமைவனவற்றை,

'ஐஎனப் பெயரிய' - சொ. 71

'ஒடுஎனப் பெயரிய' - சொ. 73

முதலாகப் பெயர் ஒழிந்த ஆறு வேற்றுமை உருபும் எடுத்து



ஓதியது நின்று பயனின்மை என்னும் குற்றம் தங்குதற்கோ என மறுத்து, அஃது உரையன்மையாதல் தெளிக. இச்சூத்திரத் திற்குச் சேனவரையர் உரைத்ததே உரையாதல் தெளிக' எனவும், 'நன்னூலார்,

'எட்டே வேற்றுமை' - 291

என வேற்றுமை செய்யும் உருபை மாத்திரம் வேற்றுமை என்பர்;

'உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி' - 102

'ஐ-எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' - 71

எனத் தொல்காப்பியனர் உருபு ஏற்ற பெயரையும் உருபையும் வேற்றுமை என்பர்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பதினொன்றாம் பாடலில், 'குணிவிருத்திகாரர்,

'பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்' - கு. 319

'வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு' - நா. 125

என்னும் இவற்றுள், தாமே - தானே என்னும் தேற்றச்சொல் தொடர்ந்து 'வரும் - தேயும்' என்னும் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச் சொல்லோடு வரும் செயப்படுபொருளைக் கரும கருத்தா என்பர். இவை செயப்படுபொருள் குன்றாத வினை முற்றுச் சொல்லோடு முடியாமையின் பாடியகாரர் கருமகருத்தா ஆகா என்பர்' என்றும்,

இனி, 'எழுத்தாணி எழுதும்' எனக் கருவிகருத்தாவாகியும், 'இரப்பவர் என்பெறினும் கொள்வர்' எனக் கோளிகருத்தா வாகியும், 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல' என இடம் பற்றிய கருத்தாவாகியும் வந்தன அல்லவோ எனின், அல்ல என்க; என்னை ? தெரிநிலைக் கருத்தாவும் தெரிநிலைக் கருமமும் முதலா-வதோடு வரும் எனவும், ஒழிந்த செயப்படுபொருளும் கருவியும் கொள்வோனும் நீக்கமும் இடமும் எழுவாயோடு வாராவெனவும் விதித்தமையால் என்க' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பன்னிரண்டாம் பாடலில், 'மாணுக்கனை ஊர்க்குப் போக்கினன் ஆசிரியன் - மகட்போக்கிய தாய் என்புழி, மாணுக்கன் - மகள் என்னும் இருவரும் போக்கப்படுந் தொழிற்குச் செயப்படு பொருளாகவும், போகும் தொழிற்கு எழுவாயாகவும் இருத்தலின், இவை எழுவாய் செயப்படுபொருளாயினவாம். 'தன்னைத் தந்த கற்பகம்' (திருவாய் 2, 8, 11) 'தன்னைத் தான் காதலன்' (கு. 209) 'நாணுல் உயிரைத் துறப்பர்...நாண் ஆள்பவர்' (கு. 1017) 'நன்-னிலைக்கண் தன்னை நிறுப்பானும்...தான்' (நாலடி. 248) எனவரும் செய்யுட்களும் செயப்படுபொருளும் எழுவாயும் ஒரே பொருளாக அமையும் கர்மவற்பாவமான கர்த்திருகருமம். வடநூலார் 'ஆத்மாநஞ் சினத்தி' என்பதனைத் தமிழார் 'தன்னைக் குத்தினன்' என்பர். இதுவுமது;' எனவும்,

"வாக்கியபதீயத்துள்ளும் கையடத்துள்ளும் நிர்வர்த்தியம், விகாரியம், பிராப்பியம் எனக் கூறிய வண்ணம் சேனுவரையர் முதலாயினர் செயப்படுபொருளை இயற்றப்படுவதும், வேறுபடுக்கப் படுவதும், எய்தப்படுவதும் என மூன்ருக்குவர்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பதின்மூன்ரும் பாடலில், 'வடநூலார் உள் என்னும் ஏழன் உருபின் பொருள்பட வரும் சொல் ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தலினும், ஒரு பொருளைப் பிரித்துக் கூட்டலினும் ஆதாரம் இன்றி வருவதனை நிர்தாரணேசத்தமி என்பர்.

'உடையான் அரசருள் ஏறு' — கு. 381

'அறன்கடை நின்ருருள் எல்லாம் பிறன்கடை
நின்ருரிற் பேதையார் இல்' — கு. 142

எனவும்,

'வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்' — கு. 50



'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்' — கு. 214

எனவும் வரும். இவை இடப்பொருளன்மையறிக.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறைஎன்று வைக்கப் படும்' — கு. 388

இது சத்தமி வருமிடத்துச் சட்டி வருதலின் நிர்தாரணே சட்டி எனப்படும்" எனவும்,

'நான்காம் வேற்றுமைக்குரிய கொடைப்பொருள்,

'அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு' — கு. 847

எனக் கொடுப்போனும் கொள்வோனும் வேறுபடாது ஒருவரே யாகும் நிலையினும் வரும்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பதினன்காம் பாடல் உரையில், 'கிராமமகச்சத் - கிராமாயா கச்சத் - என்பதற்கு ஊரைச் சென்ருன் - ஊர்க்குச் சென்ருன் என வடமொழியில் இருந்தவண்ணமே தமிழ் உரைகாரரும் மொழி பெயர்த்து உதாரணம் காட்டினர்' எனவும், 'இவற்றை வடநூலார் கர்மணி சட்டி எனச் செயப்படுபொருட்கண் வந்த ஆருவது என்பர்" எனவும் கூறியுள்ளார்.

பதினைந்தாம் பாடலில், செவிக்குக் கேட்கலாம் - கண்ணிற்குக் காணலாம் - வாய்க்குத் தக்கது வாய்ச்சி - 'படல் ஒல்லா பேதைக்கு என்கண்' - (கு. 1136) என்பனவற்றிற்கு மூன்ருவது விரித்துக் குகரத்தை ஆறனுருபு என்று கூறி கருவி ஆறன் உருபோடு வந்து ஏதுவின் கருவியாய் அடங்கும்' எனவும்,

" 'அறிவுடை அந்தணன் அவனைக்காட்டு என்ருளே' - (கலி. 72-18) 'செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்' (கு. 167) என்று நான்காவது வடநூலார் கூருத இரண்டனேடு வந்தது" எனவும்,

" 'நினைப்பானை நீங்கும் திரு' - கு. 519

'ஊர்க்குத் தீர்ந்தான்' எனத் தமிழில் ஐந்தாவது இரண்டாவதனோடும் நியமம் தப்பி வந்தது" எனவும், "நெறியிற் சென்றான் - நெறியைச் சென்றான் என ஏழாவது நியமம் தப்பி இரண்டாவதன்கண் செயப்படுபொருள் குன்றிய வினையோடு வந்தது" எனவும், "வடமொழி நளன் கதையில் வனத்தில் அரமனையைச் சென்றான் என்னும் கதிதாதுவும் அது. அத்துவாநங் கச்சதி அத்துவநி கச்சதி என வடமொழியில் வரும். சேனாவரையரும்

'வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்' - தொ. சொ. 113

என்னும் சூத்திரத்துச் செயப்படுபொருள் குன்றிய வினை இரண்டாவதனோடு இயையாது என்றார்" எனவும்,

"சாத்தற்கு நெடியன் - கருவூர்க்குக் கிழக்கு - மனை வாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் என ஐந்தாவதன்கண் நான்காவது வரினும் அவை வினைகொண்டு முடியும் ஐந்தாவதல்லது வேறாகா' எனவும், "காலைக்கு வரும் - மாலைக்கு வரும் - ஊர்க்குச் சென்றான் என ஏழாவதன்கண் நான்காவது வரினும் அவை வினைகொண்டு முடியும் ஏழாவதாகவே கொள்ளப்படும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பதினாறும் பாடலில், 'ஏழன் உருபுகள் தன்வினையும் பிற வினையுமாய் நின்ற தொடருள் வினை தன்னைச் சொல்லும் பெயரின் பின் நின்ற ஏழாம் வேற்றுமை வினைசெய்யிடம் என்னும் சதிசத்தமி எனப்படும். வடநூலுள் மூன்றும் விபத்தி ஒன்றல்லது இரண்டில்லை. தமிழ் நூலுள் ஆன், ஒடு என மூன்றாவதற்கு வருமாயினும் பொருள் வேறுபாடின்மையின் ஒன்றேயாம் எனச் சேனாவரையரும் கூறுவர். ஒடுப் போல ஆன் உருபு கூட என்னும் பொருளில் வருமதூஉமன்றித் தொறு என்னும் பொருளாயும் வரும். ஒருவினை ஒடுச்சொல் கருவிகருத்தாவில் வந்த வேற்றுமையும் வேற்றுமைப்பொருளும் ஆகாது கூட என்னும் சகார்த்தப் பொருளாய் நிற்கும். இவ்வொடு என்



உருபு 'ஆன்றோரோடு ஒப்பர் நிலத்து' (கு. 413) என ஒப்புப் பொருளிலும், 'எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' (தொ. சொ. 401) என்று வேற்றுமையின்மை ஆகிய அபேதத்தோடும், 'வேலொடு நின்றான்' (கு. 552) எனக் கொண்டு என்னும் எச்சப்பொருளோடும் வரும்.

தாதர்த்தியே சதுர்த்தியாவது கொள்வோனைவிட்டு ஆதி காரணகாரியம் - நிமித்த காரணகாரியம் என்னும் இரண்டன் பின்னரும் வரும் குகர உருபாம். இவற்றைத் தொல்காப்பியர் 'அதுவாகு கிளவி' (சொ. 76) 'அதற் பொருட்டாதல்' (சொ. 76) என்பர்.

'அவற்குப்பகை, நட்டார்க்குக் காதலன், வடுகர் அரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர், இச்சொற்குப் பொருள், நினக்கு வலி, அவ்வூர்க்கு இவ்வூர் காதம், 'மனைக்குப்பாழ் வாணுதலின்மை' (நான்மணி. 22) உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர் என வருவன எல்லாம் ஆறாவதன்பாற்படும்.

'புல்லி விடாஅப் புலவியுள்' (கு. 1324) புலவியுள் என்பது புலவா நிற்கும் அளவில் எனப் பொருள்படுதலானும், தட்டுப்புடையுள் வந்தான் - தட்டுப்புடையாநிற்கும் அளவில் எனப் பொருள் படுதலானும் இவை வினைசெய்யிடம் என்னும் சதிசத்தமியாம்.

வேற்றுமைஉருபு ஏற்ற பெயர் கொண்டுமுடியும் வினை தெரிநிலை வினையேயன்றிக். குறிப்புவினையாகவும் இருக்கலாம்.

தொல்காப்பியர்,

'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே' - சொ. 91

என்ற நியமம்தப்பி 'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு - தானம் செய்வாரின் தலை' (கு. 295) 'மகன் தாயொடு கலாய்த்த கலாம்' (எ. 359) என்பன வந்தன. பாணினி ஒடு ஏற்ற சொல் சிறப்பில்லது எனவும், வினையொடு முடிந்த சொல்லே சிறப்புடையது என்றும் கூறுவர்" ஆகிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

## சமாசபடலம்

பதினெட்டாம் பாடலில், ‘திசைச்சொல்லும் வடசொல்லும் என வழக்கொடு நிகழ்த்தும் உரிச்சொற்கள், பலபொருளொரு சொல்லாகவும் ஒருபொருட் கிளவிகளாகவும் ஆற்றலோடு வரும். ஆற்றலாவது சொல் பொருளை உணர்த்தும் இயற்கைச்சத்தி.

உரிச்சொல்லாவது பொருளும் தானும் வேறுபடாது ஒன்றுதற்குரிய சொல். திசைச்சொல்லும் வடசொல்லுமல்லது, இயற்சொல்லும் திரிசொல்லும் எனத் தனியே இல்லை. தமிழும் திசைச்சொல்லேயாம். சொல் எல்லாம் உரிச்சொல்லேயாம்’ என்றும்,

‘சொல்லை அழிவற்றது என்றும், பரந்திருப்பது என்றும், சத்தநூலார் கூறுவர். அம்மையப்பன் போலச் சொல்லும் பொருளும் ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாய் வரும் என்பாரும் உளர். காளிதாசனும் ‘வாகர்த்தாவிவ’ என்னும் சுலோ-கத்தால் அவ்வாறு கூறுவன். உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய்நின்று உணர்த்தற்குரிய சொல்அன்றோ எனின்,

‘பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும்’ — தொ. சொ. 156

எனக்காரணமாகவும்,

‘கொடைஎதிர்கிளவி’ — சொ. 99

என நான்கன் பொருளதாகவும்,

‘முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழிமேலும் ஒருங்குடன் நிலையலும்’ - சொ. 419

என ஏழாவதன் பொருட்டாகவும்,

‘ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்’ — சொ. 2
‘முதலறி கிளவி’ ‘சினைஅறி கிளவி’ — சொ. 114
‘அம்ம கேட்பிக்கும்’ - சொ. 276

என எழுவாயாகவும் சொல்லைக் கூறுவர். அவையெல்லாம் உபசாரம் என்க.



‘கம நிறைந்தியலும்’ — சொ. 355
‘உருஉட் காகும்’ — 300
‘செல்லல் இன்னல் இன்னா மையே’ - 302
‘எல்லே விளக்கம்’ — 269
‘கொல்லே ஐயம்’ — 268

எனச் சொல்லும் பொருளும் வேறுபாடின்றி ஒன்றுகக்கூறுதலின், தொல்காப்பியருக்கும் அதுவே கருத்தென்க. இனிச் சேனா வரையரும் சத்தநூலார் உரைத்தாங்கு உரைப்பர். என்னை? ‘ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே’ (சொ. 1) என்னும் சூத்திரத்தினும், ‘பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்’ (சொ. 4) என்னும் சூத்திரத்தினும் முறையே ‘செலவினும் வரவினும்’ என வருதலானும், ‘ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி’ (சொ. 12) என ஒற்றுமைப்பட்டு வருதலானும் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாம் என்றும், இரண்டும் ஒன்றேயாம் என்றும், ‘மொழிப்பொருட் காரணம்’ (சொ. 394) என்னும் சூத்திரத்தில் பொருளொடு சொற்கு இயைதல் இயற்கை ஆகலான் என்றும், ஆறுவதன் சூத்திரத்துத் ‘திரிந்து வேறுபடூஉம்’ (80) என்பதற்கு உதாரணம் எள்ளது சாந்து-கோட்டது நூறு என்பனவற்றோடு ஒருங்கு சொல்லது பொருள் என்பதனையும் காட்டி, முழுவதூஉம் திரிந்த என்றும் கூறுவர். இனி நச்சினார்க்கினியர் சத்தநூலாரோடு மாறுபடச் சொல்லைப் பொருள் உணர்தற்குக் கருவி என்பர். தார்க்கிகர் சுவரூப சம்பந்தம் என்பர்” என்றும், “ஆற்றலைச் சொல் இயற்கையாக உடையது என்றது, இறைவனால் ஏற்பட்ட ஆற்றல் - சமய ஆற்றல் எனவும், பல பொருளொரு சொற்களையும் ஒரு பொருட் கிளவிகளையும் கட்டியவழக்கெனவும் வடநூலார் சிலர் கூறுவர். அது பொருந்தாது; சுவயம்புவாகிய வேதபுருடன்கண்ணும் பல பொருளொரு சொற்களும் ஒருபொருட் கிளவிகளும் வழங்கலின், ஆற்றல் சொல்லியற்கையேயாம்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் பாடலில் “தனிநிலைச் சொற்கள், தகுதி-அவாய்நிலை - அண்மைநிலை என்ற மூன்றும் தோன்ற அல்வழியாக

*வேற்றுமையாக அவ்வப் பொருள்மேல் பிளவுபட்டிசையாது தம்முள் கூடுவது தொகையாம். தூரான்வயம், மருத்தொகை, கட்டிய சொல், சார்ந்த சொல் என்பன அண்மைநிலையோடல்லது வாரா" எனவும்,*

*"தூரான்வயத்துள், பதத்தோடு பதம் பிரித்துக் கூட்டலன்றி, விகுதியை பிரித்தும் உம்மையைப் பிரித்தும் விபத்தியைப் பிரித்தும் பண்பைப் பிரித்தும் கூட்டுவர்.*

*'பொறிநுதல் வியர்த்தல்' (பொ. 261) — வியர்ப்பொறித்த நுதலாதல்;*

*'அறம் சொல்லும் நெஞ்சத்தான்' (கு. 185) — நெஞ்சோடு அறம் சொல்வான்;*

*'அருங்கேடன்' (கு. 210) — கேடு அரியன்;*

*'அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்(து) — அற்புற்றார் ...*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு' (கு. 75) — இன்புற்று எய்தும் சிறப்பு;*

*செய்த வேள்வியர் — வேள்வி செய்தவர்;*

*'உயர்கொடிச் சேவலோயே' (பரிபா. 3) — உயர்சேவல் கொடியோயே;*

*என விகுதி பிரித்தல் வரும்.*

**'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே'** - தொ. எ. 35

*இது புணரியல் நிலையிடையும் குறுகல் உரித்தே என உம்மை பிரித்தல் வரும்.*

*'இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று'* — கு. 100

*இனிய கனி, இன்னாத காய் எனப் பண்பு பிரித்தல் வரும்.*

*மீகண் - கீழ்நீர் - 'செல்வத்துள் எல்லாம் தலை' (கு. 411) இவற்றுள் கண்மீ - நீர்க்கீழ் - செல்வம் எல்லாவற்றுள் என உருபு பிரித்தல் வரும். எழுவகைப் பொருள்கோளும் செய்யுள்*



*விகாரமும் விருத்தரத்திற்குரிய விதியாதலின் வடநூலார் சத்தநூலுள் கூறார் என்க" எனவும்,*

*"வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முள் கூடுவது தொகையன்றோ எனின், நன்று சொன்னாய்! 'அவ்வழி வேற்றுமைப் பொருளில் பொருந்துழி' (ந. 151) 'வேற்றுமை முதலிய பொருளின்' (ந. 361) எனவும், 'உருபுவமை உம்மை விரியின் அடைவே - உருபுவமை உம்மைத் தொகையாம்' (நே. சொ. 62) எனவும் நன்னூலாரும் நேமிநாதத்தாரும் கூறினர்; அன்றியும், உயிரீற்று வேற்றுமை உருபும் உவமஉருபும் உயிர்மயங்கியலினும், மெய்யீற்று வேற்றுமைஉருபும் உவமஉருபும் மெய்மயங்கியலினும் நிலைமொழி ஈறாக வைத்துக் கெடுத்துப் பின் வருமொழியோடு புணர்த்தாமையின் அவ்வாறு உரைத்தல் மலைஇடறு என்க. வடநூலாரும் உயிர்மயங்கியலினும் புள்ளிமயங்கியலினும் அவ்வாறு உருபுகளையும் உம்மையையும் உவமையையும் ஈறாக வைத்துப் புணர்க்கமாட்டார். இஃதன்றியும் தவளைவாய் குவளை மலர், அம்பிகாபதி என்பனவற்றை ஆறும் வேற்றுமை நிலைமொழி ஈறாக நின்று கெட்டசந்தி என்றால் இயல்புசந்தி ஆகாமையானும்,*

*'கோடி, தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'* — கு. 377

*'பெயலும் விளையுளும் தொக்கு'* — கு. 545

**'மருவின்தொகுதி'** - தொ. எ. 111

*'மக்கட்பெயர்த் தொகுதி'*

**'அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ'** - தொ. சொ. 112

*என்புழிக் கோடி முதலிய சொற்களெல்லாம் ஈறு கெட்டுத் தொகுவன அன்மையானும், உவாஅப்பதினான்கு என்னும் உம்மைத்தொகையும் பொற்றொடி என்னும் அன்மொழித் தொகையும் வருமொழிஈற்றில் உம்மையும் உடையாள் என்னும் சொல்லும் கெட்ட எனல் வேண்டும்; அவ்வாறு ஆகாமையானும் வேற்றுமை உருபு முதலிய சொற்கள் தொகுதல் மலைஇடறு என்க. பாணினி பகவான் ஆறும் அத்தியாயத்துள் விபத்தி*

இல்லாமல் பதத்தொடு பதம் புணரும் சந்தி கூறுவர். 'உருபு தொகவருதல்' என்றாற்போல இரண்டாம் அத்தியாயத்துள் சமாசனில் விபத்தியும் விதித்து லோபமும் விதித்தார். காத்தியாயனர் சமாசனில் விபத்திஇல்லை என்று சித்தாந்தம் பண்ணினார். அவர் உரைத்தாங்கு உரைத்தார் சேனாவரையரும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

21-ஆம் பாடலில், முதல்வேற்றுமைத்தொகை, மறைபற்றிய நஞ்ஞுத்தொகை என்பனவற்றைச் சுட்டி, உரையில் பிரதமா தற்புருடனுக்கு உதாரணம் நுனிநா, நுனிக்கொம்பர், கடைக்கண், அரைக்காசு, அரைமா, அரைக்கால், அரைக்காணி, முற்பகல், பிற்பகல் என வரும். பரிமேலழகர் முற்பகல், பிற்பகல் என்பன - வற்றை முன் பின்னாகத் தொக்க ஆறும்வேற்றுமைத் தொகை என்பர் எனவும்,

'நேர்ந்த மொழிப்பொருளை நீக்கவரும் நகரம்
சார்ந்த துடலாயின் தன்னுடல்போம் - சார்ந்ததுதான்
ஆவியேல் தன் ஆவி முன்ஆகும்' – நே. 11

என்பதனான், அகளங்கன் – அகங்கன் என இன்மையிலும், அப்பிராமணன் – அநச்சுவம் என அன்மையிலும், அதன்மம் என எதிர்மறையிலும் நஞ்ஞு வரும்.

'தத் - அபாவம் தத் - அந்நியம் தத் - விருத்தம்
எனமூன் றாகும் நஞ்ஞுதற் புருடன்.'

தமிழிலும் இல்பொருளுவமை இன்மைப்பொருளிலும், வேற்றுமை அல்வழி – அஃறிணை என்பன அன்மைப் பொருளிலும், பயனில் சொல் பாராட்டல் (கு. 196) கோளில் பொறி (கு. 9) என்பன எதிர்மறையிலும் வந்த நஞ்ஞு.

'கருமம் அல்லாச் சார்பென் கிளவி – தொ. சொ. 84

இன்மைப் பொருளில் வந்த அன்மை.

'மன்னாப் பொருளும் அன்ன இயற்றே' – தொ. சொ. 34



'பிறவாழிநீந்தல் அரிது' (கு. 8) 'புறத்த புகழும் இல' (கு. 39) என்புழி முறையே இன்மை, அன்மை, மறை ஆன நஞ்ஞு. இன்மைப்பொருள் நிர்க்குணம் என வடமொழிக்கண்ணும் வரும்' எனவும், எண்ணொடு பொருள்புணர்ந்த எண்தொகையில் அஃறிணைக்கண் ஒருமையீற்றான் முடியும் பன்னிருபடலம் முதலியன ஏகவற்பாவி என்றும் பன்மையீற்றின் முடியும் பஞ்ச பாண்டவர் முதலியன அநேகவற்பாவி என்றும் வழங்கப்படும் எனவும், தொல்காப்பியரும் முப்பத்துமூன்று என்பதனை முப்பதும் மூன்றும் என விரியாது மூன்று தலையிட்ட முப்பது என விரித்தது காத்தியாயனர் மதம் எனவும், பதினொன்று என்பதனை ஒன்றை அதிகமாக உடைய பத்து என விரித்துக் காத்தியாயனர் உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகக் கொள்வர் எனவும், எண் நிறை அளவுகள் தம்மொடு தாம் புணர்ந்த தொகையைத் தொல்காப்பியரும் பாடியகாரரும் உம்மைத்தொகை என்பர் எனவும் கூறியுள்ளனர்.

22ஆம் பாடலில், பண்புத்தொகை செந்நிறம் - மாசித் திங்கள் - வாளைமீன் - சாரைப்பாம்பு எனச் சிறப்பும் பொதுவுமாகிய பெயராக வருவதனோடு அமையாமல், வேதத்தில் கன்னியாகுமரி எனவும் வான்மீகத்தில் கும்பகடம் எனவும் வியாசபாரத்தில் மருதங்வா எனவும் ஒரே பொருளில் இரு சொல் ஒட்டிப் பண்புத்தொகையாய் வருவதுபோலவே, தமிழிலும், பெருமலைச்சிலம்பு – அராஅப்பாம்பு – 'வடுக் குற்ற மாகி விடும்' – 'உவகை மகிழ்ச்சியில் சோர்வு' (கு. 531) 'ஆடகச் செம்பொற் கிண்ணம்' (சீவக. 512) 'அலறுமுந்நீர்த் தடங்கடல்' (சீவக. 2851) என ஒருபொருட்கு இருபெயர் பிரியாது நின்று பண்புத்தொகையாம் என்றும் கூறியுள்ளார்.

23ஆம் பாடலில், "நன்னூலார் கூறும் மரபு பற்றிய இடைச்சொல்தொடர் ஆகிய அவ்வழித் தொகாநிலைத்தொடர் வடமொழியாளர் மரபு பற்றி அவ்வியயீபாவம் எனப்படும் முன்னும் பின்னும் மொழியடுத்துவரும் இடைச்சொல் தொகை" என்றும், "ஒருமையீறாய் வந்த அஃறிணை உம்மைத்தொகை

சமாகாரத் துவந்துவன் எனப் பெயர்பெறும்; இஃது ஏவகற்பாவி போல்வது; பன்மையீறாக வரும் உயர்திணை உம்மைத்தொகை இதரேதரத் துவந்துவன் எனப் பெயர்பெறும்; இஃது அநேகவற்பாவி போல்வது. இருபெயர் ஒருவினை கொள்ளும் எச்ச உம்மை சமுச்சயம் எனப்படும். ஒருபெயர் இருவினை கொள்ளும் எதிர்மறை உம்மை அன்வாசயம் எனப்படும்" என்றும், "நீயான் என்பது யாம் எனவும், அவன்நீயான் என்பது யாம் எனவும், நீஅவன் என்பது நீயிர் எனவும் தொகுவது ஏகசேடபத துவந்துவன்" என்றும், "உயர்த்தற்கண் வரும் ஒருமைப் பொருளவாகிய யாம் நீயிர் என்பன ஏகசேட மாகாது உபசாரமாம்" என்றும் கூறியுள்ளார்.

24-ஆம் பாடலில், "'கைபரந்து வண்டிசைக்குக் கூந்தல்' என்பது பன்மொழித்தொகை என்ப; இவை அடையடுத்து இரு சொல்லேயாதலின், பன்மொழி உம்மைத்தொகைக்கன்றிப் பிற தொகைக்கு வாரா என்பது தமிழ் நூலார் கருத்து; வரும் என்பது வடநூலார் கருத்து" என்றும், "'பாயின மேகலை' (கோவை. 282) என்னும் தொடர் அன்மொழித்தொகையேயன்றி ஆகுபெயர் அன்று ஆதலின், அன்மொழித் தொகை ஏனைய தொகைகளின் புறத்தன்றித் தொகாநிலைத்தொடர்ப் புறத்தும் தோன்றும்" என்றும், 'வடமொழியாளரில் பலர் உம்மைத்தொகையின் புறத்து அன்மொழித்தொகை பிறக்கும் என்று கொள்ளார்' என்றும், 'தமிழ் நூலுள்ளும் அதற்கு எடுத்துக்காட்டு 'தகரஞாழல் வந்தாள்' என்பது ஒன்றே" என்றும், 'அதுவும் அன்மொழிக்கு அன்மொழியாம்' என்றும், 'தொல்காப்பியர் கூறும் ஆகுபெயரிலக்கணத்தைப் பாணினி பகவான் அன்மொழிக்கு இலக்கணமாகக் கூறியுள்ளார்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

27ஆம் பாடலில், தொகைகளுக்குப் புணர்ச்சி விகற்பத்தால் மருவலுறுங் குறி கூறுவான் தொடங்கி,

ஒரு கலம், ஒரு பொருள் – இவை எண் தொகையில் வந்த நித்தியம்; இருமா, இரண்டுமா – இவை எண் தொகையில் வந்த அநித்தியம்.



சேர்ந்தாரைக் கொல்லி – உருபு தொகாமை;

புதல்வற் பெறுதல் – உருபு தொகுதல்;

சூத்திரகாரன் – பொருட் பெயரை ஒட்டி வினைப்
[பெயர் வந்த உபபதசமாசன்;

பலாக்காய் மாங்காய், நாநுனி, நாவிளிம்பு – பாத்தம்

நுனிக்கொம்பர், கடைக்கண் – விபரியயம்;

ஆக, நித்தம் முதல் விபரியயம் ஈறாகிய ஆறும், வேற்றுமைத் தொகை – எண்ணொடு பொருள் புணர்ந்த எண்தொகை – அன்மொழித்தொகை – பண்புத்தொகை – உம்மைத்தொகை – முன்னும் பின்னும் மொழியடுத்து வரும் இடைச்சொல் தொகை என்ற ஆறு தொகையினும் ஏற்புழித் தோன்றி அப்பெயர் பெறும் என்பதனை விளக்கியுள்ளார்.

## தத்தித படலம்

29-ஆம் பாடலில், "முற்சொல் தன்னைச் சேரும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச் சேரும் விகுதியை உடைய சொல்லே தத்திதாந்தத்தை உடைய சொல்லாம். அதனை விரித்துத் தொகுத்து உதாரணம் காட்டும் பொழுது வலையான் முயன்று உண்பவன் வலையன் என்னும் பகுபதக் குறிப்புப் பெயராம்; தொகையுள்ளும் முன்நின்ற மொழியை விட்டுப் பின்நின்ற மொழியைக் கெடுத்துப் பிரத்தியயத்தைக் கூட்டி முடித்தலும், பின்நின்ற மொழியைக் கெடாது முற்றும் முன்நின்ற மொழியாக நிறுத்திப் பிரத்தியயத்தைக் கூட்டி முடித்தலும் தத்திதாந்தத்தை உடைய சொல்லாம்" என்றும்,

30-ஆம் பாடலில், "சாமானிய தத்திதன், அவ்விய தத்திதன், பாவ தத்திதன் எனத் தத்திதன் மூன்று வகைப்படும். அவற்றின் விகுதியும் மூன்றாம். சாமானிய தத்திதனுக்கு ன், ள், ர், து, று, டு, அ, இ, உ, ஐ என்பன விகுதிகளாம்;

இவ்விகுதிகளே வினைமுற்றுச்சொற்கும் வினையாலணையும்; பெயர்களுக்கும் கூட விகுதிகளாகும்; சிறுபான்மை தொழிற் பெயர்க்கும் விகுதிகளாகும்; இவ்விகுதிகளிடையே இடைநிலை களும் சாரியைகளும் வருதலும் உண்டு; பெயரியலுள் தொல்காப்பியர் கூறிய பெயர்களில் சில ஒழித்துப் பெரும் பான்மையும் வரும் பெயர்களெல்லாம் தத்திதன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*31*-ஆம் பாடலில், சாமானிய தத்தினனின் ஒரு கூருகிய உடையான்மேல் நிற்கும் தத்திதனை விளக்கி, "கச்சினை உடுத்தவன் - கழலினைக் கட்டினவன் என்னும் தொடர்மொழிகள் கச்சு - கழல் என்னும் முற்சொல் ஒழிய, மற்றை உருபும் வினைச்சொல்லும் போய், அன் என்னும் ஈறு வந்து சாரியை பெற்று முற்சொல்லோடு புணர்ந்து கச்சினன் கழலினன் என உடையான்மேல் நிற்கும் தத்திதனுகிப் பொருள்பட்டு, உடைப் பொருள் மேற்பட உடையான் கீழ்ப்பட நின்றன" எனவும்,

*32*-ஆம் பாடலில், உடைப்பொருள்மேல் நிற்கும் தத்திதனை விளக்கி, "கார்த்திகையின் மகன் கார்த்திகேயன் - என்பதில் உடையான் மேற்பட உடைப்பொருள் கீழ்ப்பட நின்றது" எனவும்,

"தனது, தமது என அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல உயர்திணைக்கண் தனன், தமன் என வெவ்வேறு வாராமையானும், சிவன்தமர் - மணிவண்ணன்தமர் - 'கல்லா மாவன்னுர்தமர்' (கு. *814*) என ஒருமையிலும் பன்மையிலும் தமர் என்பது முதலாகிய சொற்கள் வருதலானும், தொல்காப்பியனுர்,

**'தநநுஎ என்னும் அவைமுத லாகிய**
**கிளைநுதல் பெயரும் பிரிப்பப் பிரியா'** - சொ. 410

என்று சூத்திரம் செய்தார்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.



*33*-ஆம் பாடலில், "அவ்வயின் - இவ்வயின் - உவ்வயின் ஆங்கு - ஆன் - ஈன் எனச் சுட்டுப்பெயருள் பிளந்து நில்லாத இடப்பெயர்களும், எவ்வயின் என வினுப்பெயருள் பிளந்து நில்லா இடப்பெயரும், அங்கண் - இங்கண் - அவ்வாய் - ஆயிடை எனக் கண் முதலாயவை ஏழாம் வேற்றுமை இடப் பொருளோடு நின்றனவும் தமிழ்மொழியில் அவ்வியய தத்திதனும்; இவற்றை ஒருமொழியாகக் கொண்டு அவற்ருேடு வருமொழி புணர்த்தப்படும்; சுட்டெழுத்துக்களையும் வினுவினையும் நிலை மொழியாக நிறுத்தி அவற்ருேடு கண் வயின் முதலியவற்றைப் புணர்த்தாமையானும், அவ்வயின் - இவ்வயின் முதலிய சொற்கள் அவ்வியய தத்தினன் ஆதல் தெளிக" என்று விளக்கியுள்ளனர்.

*34*-ஆம் பாடலில், "பண்பின் முதல்நிலையோடும் ஆண் பெண் முதலிய பெயரோடும் மகர ஐகாரமும் சிறுபான்மை உகரமும் பொருந்திப் பாவ தத்திதனும். சொன்மைதெரிதல், 'இருமை வகைதெரிந்து' முதலாயினவற்றில் மை பகுதிப்பொருள் விகுதியாய்த் தன்மையை உணர்த்தாது, தன்மை உடைய பொருளையே உணர்த்தலின் அவை பாவ தத்திதனும். தச்சனது தொழில் தச்சு எனக் கொண்டால் பாவ தத்திதனும். தச்சுத் தொழிலை உடையான் தச்சன் எனப் பொருள் கொண்டால் சாமானிய தத்திதனும். இவை சொல்லுவான் குறிப்புப் பற்றியன" என விளக்கியுள்ளார்.

## திங்குப்படலம்

*35*-ஆம் பாடலில், "முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் போலும் நட-வா-மடி என்னும் நன்னூலில் கூறிய தொழிற்பெயர்கள் தாது எனப் பெயர்பெற்று, செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதி செயப்படுபொருள் குன்ருத வினைப்பகுதி என இருவகைப்படும் தன்வினையும் பிறவினையுமாக வரும். பகுதியோடு வி - பி என்ற பிறவினை விகுதிகள் இணைந்து வருவன காரிதம் எனவும், ணிச்- அந்தம் எனவும் பெயர்பெறும். முதல்நிலை என்னும் தாதுக்களும்

வேறு; முன்னிலை ஒருமை ஏவற் சொற்களும் வேறே என்க. நட, வா முதலிய தாதுக்கள் நடத்தல் வருதல் எனப் பொருள்பட்டு ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான தொழிற்பெயராய் நின்று பின் காலம் காட்டும் இடைநிலை எழுத்துக்களோடும் வரும் விகுதிகளை அடைந்து நடந்தேன் - நடந்தாய் - நடந்தான் என வரும். முன்னிலை ஏவல் ஒருமைச்சொல்லாவது நடவாய் - வாராய் என ஆய் என்னும் ஈறு குன்றி நட - வா என முன்னிலை ஏவல் ஒருமைச்சொல்லாவதன்றி, நட வா என்பன தாமே முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் ஆகா என்க. அம் முதனிலைகளெல்லாம் ஏவல் வினையாயின் முன்னிலைவிகுதி ஒழியத் தன்மைவிகுதியோடும் படர்க்கை விகுதியோடும் கூடி நடந்தேன் நடந்தான் என வருதல் இடவழுவாதலின் பொருந்தா என்க" என்றும்,

"பிறவினை விகுதியாவது, ஏவுவான் வினையும் இயற்றுவான் வினையும் உடனே தோன்றும் ஏவல் கருத்தாவின் வினை. ஒழுக்கி, பிரிப்பர், தோற்றி, ஊட்டு, தீற்று, ஆட்டு, கூட்டு, தேற்று என்பன வி - பி இன்றித் திரிந்தும் ஒற்றுப்பெற்றும் வந்த பிறவினையாம். 'தேற்றா ஒழுக்கம்', 'நட்பாடல் தேற்றாதவர்' (கு. 187) என்புழித் தேறா ஒழுக்கம், தேறாதவர் எனப் பொருள்படுமாலெனின், இதனைப் பகுதிப்பொருள்விகுதியாக வந்த பிறவினைவிகுதி என்பர்" என்றும்,

"தெளித்த சொல் தேறியார், (கு. 1154) அரசன் எடுத்த ஆலயம் என்பன தெளிவித்த சொல், எடுப்பித்த ஆலயம் எனப் பொருள்படுதலின் இவற்றில் பிறவினைவிகுதி மறைந்தமை காண்க.

'உப்ப காரம் ஒன்றெனை மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே' - தொ. எ. 76

என்று தொல்காப்பியர் காட்டிய தபு என்பதும் அது.

"நட வா முதலியன ஏவல்வினையாங்கால், எடுத்து உச்சரிக்க; முதல்நிலைத் தொழிற்பெயராங்கால், படுத்து உச்சரிக்க.



முதல்நிலைவினை முன்னிலை ஏவல் வினைமாத்திரையாய் நில்லாது, வினையெச்சப் பொருட்டாயும், பெயரெச்சப் பொருட்டாயும், முற்றுச்சொல்லாயும், முற்றுச்சொல்லாய் நின்றவிடத்து அம் முதல்நிலை பிரிந்து நின்று வினை தன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாயும் வரும்; பெயரடியாகவும் வினைபிறக்கும்" என்றும் விளக்குகிறார்.

36-ஆம் பாடலில், சடகோபர் 'பத்மநாபன்' என்பதனைப் பற்பநாபன் எனத் தற்பவமாக்கியது போல, ஆத்மனேபதத்தை ஆற்பனேபதம் எனவும் பரஸ்மைபதத்தைப் பரப்பைபதம் எனவும் தற்பவமாகக் குறியிட்டு, வடமொழியில் தனக்கு எனவும் பிறர்க்கு எனவும் பொருள்படும் அம்மரபு தமிழில் வழங்குதல் இன்மையில், நெட்டெழுத்துஇறுதி நெட்டெழுத்து ஈற்றயலைப் பெரும்பாலும் ஆற்பனேபதம் எனவும் குற்றெழுத்திறுதி குற்றெழுத்தீற்றயலைப் பெரும்பாலும் பரப்பைபதம் எனவும், ஒரு பகுதி இவ்விருதிற விகுதியும் பெறின் அச்சொல் உபயபதி எனப்படும் எனவும், 'ஒளியோடு ஒழுகப்படும்' (குறள் 698) என்ற தொடரை ஒளியால் ஒழுகுதல் செய்யப்படும் என்று பொருள்விரித்து ஒழுகுதலை எழுவாய் ஆக்குதல் வேண்டும் எனவும் இவை போல்வனவற்றைக் குறிப்பிடுகிறார்.

37ஆம் பாடலில், "வினையாலணையும் பெயர். எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் தொழிற்பெயராகவும் கருவியாகவும் இடப்பொருட்டாகவும் வரும். வினைமுற்று வினையாலணையும் பெயராய் எழுவாய் ஆகிய வழி எழுவாயுருபு சேர்ந்து நீங்குதல் வேண்டும் என்ற வடமொழி மரபைக் கோடல் வேண்டும். ஏனைய வேற்றுமை ஏற்கும்போது வினையாலணையும் பெயர் உருபு வெளிப்பட்டும் மறைந்தும் வரும். தின்பார் என்பது தின்பவர் என்றாற்போல ஈற்றயல் திரிந்தும் வரும். தாம் வீழ்வார் என்பது தம்மால் வீழப்பட்டவர் என்று பொருள்படுவது போலச் செய்வினையாய் அமைந்து செயப்பாட்டுவினையாய்ப் பொருள்படுதலும் உண்டு. வினைத்தொகையும் அடு நறா - அடப்பட்டநறா

என்றூற்போலவும், வினையெச்சமும் யாழும் எழுதி – யாழும் எழுதப்பட்டு என்றூற்போலவும் படுசொல் அற்றுப் படுபொருளாய் வரும். மூன்றும்வேற்றுமை உருபு விரியின் செயப்பாட்டுவினை விரிந்தே வரும்; முகடியான் மூடப்பட்டார், கேள்வியால் தோட்கப்படாத செவி என்பன போல. மூன்றும் வேற்றுமை உருபு மறைந்திருப்பின் தாம் வீழ்வார் எனப் படுசொல் அற்றுப் படுபொருளாயும், வேந்து செறப்பட்டார் எனப் படுபொருள் விரிந்தும் வரும்'' என்பன விளக்கப்பட்டுள்ளன.

38-ஆம் பாடலில் வடநூலார் செய்து என்பதற்குக் கிருத்துவா – செய்ய என்பதற்குக் கர்த்துமுந் – என்னுது, துவா– துமுந் என்று பெயரிடுவது போல, தொல்காப்பியரும் சிறுபான்மை,

'பின்முன் கால்கடை வழியிடத்து' – தொ. சொ. 229

என ஈற்று வினையெச்சமாக்கியமையும், 'தேரான்பிறன்' (கு. 144) என்ற வினைமுற்று தேராத பிறன் எனப் பெயரெச்சமாகியமையும், 'தோன்றலாறு' எனத் தொழிற்பெயர் தோன்றுமாறு எனப் பெயரெச்சமாகியமையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

39-ஆம் பாடலில், வேர்த்து வெகுளார் – தொழுதெழுவாள் முதலியன வெகுண்டு வேரார் – எழுந்து தொழுவாள் என முன்-பின்னுகப் பிறந்த செய்தியும், 'ஒடித்துண் டெஞ்சிய யா' (குறுந். 232) என்பதில் எஞ்சுவித்த என்று பொருள்படும் பிறவினை விகுதி மறைந்திருத்தலும், 'பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மை' என்பது ஒழுகுவான் ஆண்மை எனப் பொருள்பட்டுப் பெயரெச்சம் வினையாலணையும் பெயர் ஆதலும் போல்வன குறிக்கப்பட்டுள்ளன.

40-ஆம் பாடலில், "பல பொருளொருசொல் என்பது இன்று; ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒருபொருளே தரும்; ஒவ்வொரு பொருள் தரும்போதும் ஒவ்வொரு சொல்லே; எழுத்தொற்றுமை பற்றியே பலபொருளொருசொல் எனப்படுகிறது. இதனை உட்கொண்டு தொல்காப்பியரும்,



'தெவ்வுக் கொளற் பொருட்டே' – சொ. 345

,தெவ்வுப் பகையாகும்' – சொ. 346

என்று குறிப்பிட்டுள்ளார். சுரிதகம் என்பது நலிதல் ஓசையை ஈறும் ஈற்றயலுமாக உடைய செய்யுளுறுப்பு. அதனைத் தமிழ் நூலார் சுரிந்திறுதலின் சுரிதகம் எனல் பொருந்தாது'' என்ற செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

41-ஆம் பாடலில் அ ஆ ஈ உ த தை கு என்பன பகுதிக்குப் பின்னர் வரும் விகரணிகள் என்பதும், வேண்டும் தகும் படும் என்ற மூன்றும் விதிப்பொருளில் வரும் விகுதிகள் என்பதும் விளக்கப்பட்டன.

42-ஆம் பாடலின், "தொகை தத்திதன் காரகம் என்பன பெயர்விகுதிகள் பெறும். வினையெல்லாம் வினைவிகுதிகள் பெறும். தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினை விகுதி பெறும். திணை பால் இடம் மூன்றற்கும் பொதுவாய் வருகின்ற இடைநிலை, யார், உண்டு, இல், வேறு, பெயரெச்சம் வினையெச்சம் என்பன அவ்வியயமாம்'' என்பது குறிப்பிடப் பட்டுள்ளது.

43-ஆம் பாடலில், வடமொழியிலுள்ள சொல்பற்றிய பால் அமைப்புப்பற்றிய சிறுவிளக்கமும், 44ஆம் பாடலில், 'சீர்தூக்கிச் செயல்' என்பது தூக்கிச்செயல் என வருவது போன்ற 'குறை' என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

45-ஆம் பாடலில், "கை – கைமிகல்; கால் – நூல்கால்யாத்த; தலை – உயிரின் தலைப்பிரிந்த ஊன்; மேல் – கல்லாதமேற்கொண்டு; மீ – மீக்கூறும் மன்னன் நிலம்; ஒல்லை – ஒல்லை உணரப்படும்; வல்லை – வல்லைக் கெடும்; புறம் – புறந்தருதல்; அகம் – அகப்படல்; இலம் – இலம்படு புலவர்; பரி – பரிமாறுதல் எனவரும் கை, கால் முதலிய அவ்வியயங்கள் உபசர்க்கமாம். அதி – அதிலோபம், அதிசயம் என்பனவற்றில் வடமொழிஉபசர்க்கம். இவ்வுபசர்க்கங்கள் வினைப்பெயரோடும் வினைச்சொல்லோடும் வரும்; எனவே, அதிநுட்பம் என்புழி வினைப்பெயரோடும்

வினைச்சொல்லோடும் வாராமையின் அவ்வியயீபாவமாம். எப்பொருள்.........அப்பொருள் (கு. 423) யாதனின்......அதனின்... (கு. 345) என வினுச்சொல் வந்தபின் சுட்டுச்சொல் வருவது வடநூலார் மதம்; பொத்துப்படும் என்றூற்போலப் பெயர் அடுத்து வரும் படு யக் எனவும், இயற்றப்படுதல் என வினையடுத்து வரும் படு ய எனவும் கூறுவர்'' என்பன சுட்டப்பட்டுள்ளன.

46-ஆம் பாடலில், ''செய்யாய் என்பது செய் என்றூதல் வடநூலார் மதம் என்பது விளக்கப்பட்டது; வடநூலுள்ளும் பசகி என்பது பச எனக் குறைந்து பசகி எனப் பொருள்படுதல் போல, இனி உபலக்கணத்தால் பாலறியவந்த – நுண்மாண்டு நுழைந்த புலம், வரிந்து புனைந்த பந்து எனச் செய்து என்னும் எச்சத்து ஈறும் பெயரெச்சத்து ஈறும் வினைத்தொகைகளாய்க் குன்றும்.'' என்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

47-ஆம் பாடலில் இலக்கணையாவது பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தத்தம் பொருளை உணர்த்தாது பொருளின் சம்பந்தப் பொருளையும் தாற்பரியப் பொருளையும் அறிவித்தல் என்பதும், இவ்விலக்கணம் சத்தநூலிலக்கணம் அன்மையின், தொல்காப்பியர் பொருளியலில் கூறினர் என்பதும் குறிக்கப் பட்டுள்ளன.

48-ஆம் பாடலில், 'பிறப்பென்னும் பேதைமை' (கு. 358) எனக் காரியம் காரணம் ஆதலும், 'தீவினை என்னும் செருக்கு' (கு. 20) எனக் காரணம் காரியம் ஆதலும், 'இல்லதென் இல்லவள் மாண்பானல்' (கு. 53) எனப் பண்பு பண்பி ஆதலும், 'சிற்றினம் அஞ்சும் பெருமை' (கு. 451) எனப் பண்பின்வினை பண்பியின்வினை ஆதலும், 'முன்இன்று பின்நோக்காச்சொல்' (கு. 184) என ஒரு பொருளின் வினை மற்றொரு பொருளின் வினை ஆதலும், 'இப்பானை நாழிஅடும்' என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நிற்றலும், 'சாகாடும் அச்சு இறும்' (கு. 475) எனச் சினை வினை முதல்வினையாதலும், இன்சொல் வன்சொல் எனப் பண்பு விடயம் மாறி வருதலும் விளக்கப்பட்டன. இவையே உபசார வழக்கு என்பனவாம்.



49-ஆம் பாடலில், 'நாண் என்னும் நல்லாள்' (கு. 924) 'தென்றலஞ்செல்வன்' (சிலப் 4-4) 'திங்களஞ் செல்வன்' – 'இன்னிளவேனில் வந்தன ளுகை' (சிலப். 8-7) என அஃறிணைச் சொற்களை உயர்திணை ஆண்பாலாகப் பெயரானும் வினையானும் குறிப்பிடுதலும், மேற்றிசைப்பெண் – குமரி மட நல்லாள் – எனப் பெண்பாலாக்குவதும், 'ஆனையுள் அரசன்' (சீவக. 2445) என்பதும் போல்வனவும், வடநூலார் பண்புத்தொகைக்குக் கூறிய அநித்தியலிங்கத்தைத் தொல்காப்பியனுர் பின்பற்றியதும், நன்னூலார் பண்புத்தொகையை வாமனன்சைநேந்திரன் மதம் பற்றிக் கூறியதும் சுட்டப்பட்டுள்ளன.

50-ஆம் பாடலில், ஒரு சொல் ஒருமையீறு தோன்றநின்றும் தோன்றூது நின்றும், பின் ஒருமைப்பன்மை ஈறுக மேல்வந்து முடிக்குஞ்சொற்களும் இன்றித் தானே பன்மைப்பொருள் உணர்த்துவதாகிய இருதிணைமருங்கினும் காணப்படும் சாதி ஒருமையும், முன்கூறுமலேயே கூறியது போலப் பின்னர்க் கூறும் மரபும் அநுவாதத்தில் உண்டு என்பதும், இலக்கணை அடியாகத் தோன்றிய குறிப்பாகிய இலக்கணை மூலத்தொனியும் பெயரடியாகத் தோன்றிய குறிப்பாகிய அபிதா மூலத்தொனியும், ஆகாரியாரோபமும், தேர்வடம் இழுப்பார் போல்வதாகிய பிரத்தியேக பந்தாந்நுவயமும் போல்வன சுட்டப்பட்டுள்ளன. இந்நூலுள் தோன்றும் ஐயங்கள் வடமொழி வல்லவராகிய தமிழறிஞராலேயே களையப்படும்என்பதும்குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமொழியை அடியொற்றி வரையப்பட்ட இந்நூல் வடமொழி எழுத்துக்களாகிய உயிரும் மெய்யும் ஆகியவற்றின் தொகை ஐம்பத்தொன்றூதலின் ஐம்பத்தொரு கட்டளைக் கலித்-துறையில் அமைக்கப்பட்டுள்ளதும் உணரத்தகும்.

இனி, இதனை அடுத்துத் தோன்றிய இலக்கணக்கொத்து இதன்கண் காணப்படும் அருஞ்செய்திகள் பலவற்றையும் தன்கண் அமைத்துக் கொண்டுள்ள திறத்தை நோக்குவோம்.

★

# இலக்கணக் கொத்தும் பிரயோக விவேகமும்

★

பிரயோக விவேகம் ஆரியச் சொற்கள் பலவற்றையும் தற்சமதற்பவ வடசொற்களாக்கிக் குறியிட்டு விளக்கிய செய்திகள் பலவும், ஓரளவு வடமொழி மரபையும் உட்கொண்டு வரையப் பெற்ற இலக்கணக் கொத்து நூலில் நல்ல தமிழில் வரையப் பட்டுள்ளன. வடமொழி தமிழ்மொழி என்னும் இருமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்ற அடிப்படைக் கருத்தோடு வரையப் பெற்ற இவ்விரு நூல்களுள்ளும், பிரயோக விவேகத்தின் செய்திகள் பலவும் சுருக்கமாகவும் விரிவாகவும் இலக்கணக் கொத்துள் இடம்பெற்றுள்ளமை இந்நூல் கற்பார்க்குப் பெரிதும் பயன்தரும் ஆதலின் அவற்றையும் நிரலே காண்பாம்.

இந்நூலின் காரகபடலச் செய்திகள் பலவும் இலக்கணக் கொத்தின் வேற்றுமையியலிலும் ஒழிபியலிலும், சமாசபடலம் தத்திதபடலம் ஆகியவற்றின் செய்திகள் பலவும் ஒழிபியலிலும், திங்ஙுப்படலச் செய்திகள் பலவும் வினையியலிலும் ஒழிபியலிலும் அந்நூலமைப்பிற்கு ஏற்ப முறையே கூறப்பட்டிருத்தலின், அவற்றையும் சுருக்கமாக நோக்குவாம்.

இந்நூல் இரண்டாம் காரிகையில் கூறப்படும்

'பொற்பார் தெய்வமொழிப் பாகுபாடும் பொதுஎழுத்தாய்ப்
பற்பல வாகித் திரிவதும்'

என்பதன் விளக்கமாக,



'பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைந்தும்மொழி பெயர்த்தும்
பொதுஎழுத் துள்ளும் பொதுவாய்த் திரிந்தும்
தமிழ்ச்சிறப் பெழுத்துஐந் தானும் திரிந்தும்
மொழிமுதல் இடைகடை எனும்மூன்று இடத்தும்
தோன்றல் முதலா விகாரம் தோன்றியும்
வருமே தமிழில் வடமொழி என்ப' - இ. கொ. 87

என்ற நூற்பா அமைந்துள்ளது.

இந்நூல் ஐந்தாம் காரிகையில் கூறப்பெறும் அளபெடைக்கு விளக்கமாக, இலக்கணக்கொத்துள்,

'இயற்கை அளபெடை செயற்கை அளபெடை
எழுத்துப்பேறு அளபெடை இசைநூல் அளபெடை
ஒற்றுப்பேறு அளபெடை ஓரோவழிக் கூடில்
ஐந்துஎன மொழிப அளபெடை; அவைதாம்,
குற்றெழுத்து அளபெடை நெட்டெழுத்து அளபெடை
ஒற்றெழுத்து அளபெடை எனஒரு மூன்றாய்
மொழிமுதல் இடைகடை மூன்றினும் வருமே'
- இ. கொ. 90

என்ற நூற்பா அமைந்துள்ளது.

அதே காரிகையில் கூறப்படும் சந்தியக்கரங்களாகிய ஐ–ஔ என்பனவற்றின் விளக்கமாக,

'போலி எழுத்தைப் போற்றுதல் கடனே' - இ. கொ. 91

என்ற நூற்பாவும் அதன் உரையும் அமைந்துள்ளன.

ஆறும் காரிகையில் கூறப்பெறும் வேற்றுமையும், வேற்றுமைப் பொருளும்

'உருபு வேறுஉருபு சொல்லுருபு என்ன
வேற்றுமை உருபு மூன்றுஎன விளம்புவர்' - இ. கொ. 16

என்ற நூற்பாவில் சுட்டப்பட்டுள்ளன,

அதே காரிகையின் உரையில் ஏழாம் வேற்றுமை உருபுகள் பற்றிச் சொல்லப்படும் செய்திகளுக்கு விளக்கமாக,

'உருபுவேறு உருபு சொல்லுருபு ஆகியும்
உருபினை ஏலாப் பெயரே ஆகியும்
உருபினை ஏற்ற பெயரே ஆகியும்
உருபு தொக்க பெயரே ஆகியும்
இரண்டுஉருபு இணைந்தால் ஒன்றுஉருபு ஆகியும்
மாறி நின்றும் வரும்இட உருபே' - இ. கொ. 18

என்ற நூற்பா அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

ஏழாம் காரிகையில் வடமொழி எழுவாய்வேற்றுமை பற்றிக் குறிப்பிடப்படும் செய்தி,

'எழுவாய் வேற்றுமை...........விகாரப் பெயரே
பேயர்ப்பின் விகுதி பெறுதலே............' - இ. கொ. 25

என்ற நூற்பா அடிகளில் இடம்பெறுகிறது.

எட்டாம் காரிகையில் கூறப்பெறும் அறுவகைக் காரகங்களும் பதினாறும் நூற்பாவில் கூறப்பெறும் காரகத்தின் இலக்கணமும், பதினேழாம் நூற்பாவில் கூறப்பெறும் காரகமாம் கிரியாசட்டியும் ஒருசேர,

'விளிகுறை இரண்டையும் விட்டவேற் றுமைகள்
வினையான் முடியின் காரகம் எனப்பெறும்;
குறையும் வினைகொளின் ஓரோவழிக் கூடும்' - இ. கொ. 14

என்ற நூற்பாவில் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் பத்தாம் காரிகை அறுவகைக் காரகத்திற்கும் உதாரணக் காரிகையாய் அமைவது போல,

'நாரா யணன்பூ ஓரா யிரத்தைக்
கரத்தால் கொய்துஓர் அரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவைப்



பாற்கடல் கண்ணே பள்ளிகொண் டானெனக்
காரகம் முழுதும் வந்தன காண்க;
இவற்றினுள் ஒன்றே இயம்பினும் காரகம்' - இ. கொ. 15

என்ற இலக்கணக் கொத்து நூற்பா எடுத்துக்காட்டுப் பாடலாக அமைந்துள்ளது.

பதினோராம் காரிகையிலும் உரையிலும் குறிப்பிடப்படும் எழுவாய் வேற்றுமை வகைகள், இலக்கணக் கொத்துள்,

'இருவகைச் செயப்படு பொருளே ஏது
தன்வசம் தெரியா நிலைதடு மாற்றம்
தொழிற்பெயர் ஏழில் தோன்றும் வினைமுதல்;
கருவி இடம்கொள் வானினும் கருதுவர்' - இ. கொ. 26
'இருவினை முதலால் ஒருவினை யும்உள' " 27
'ஏவுதல் இயற்றுதல் இவையின்வேறு ஆதல்
எனவினை முதல்மூ வகையாம் என்ப' " 28

என விளக்கப்பெறுகின்றன.

அதே காரிகையிலும் உரையிலும் விளக்கப்பெறும் ஐந்தாம் வேற்றுமை வகைகள், இலக்கணக் கொத்துள்,

'நிலைத்திணை இயங்கு திணைபண்பு ஆதியின்
நீக்கம் வரும்என நிகழ்த்தினர் புலவர்' - இ. கொ. 38

என்ற நூற்பாவில் சுட்டப்படுகின்றன.

பன்னிரண்டாம் காரிகையிலும் உரையிலும் கூறப்படும் செயப்படுபொருளின் வகைகள், இலக்கணக்கொத்துள்,

'கருத்துஉண் டாதல் கருத்துஇன் றுதல்
இருமையும் ஆதல் ஈருருபு இணைதல்
கருத்தா ஆதல் அகநிலை ஆதல்
தெரிநிலை ஆதியாய் வரும்செயப் படுபொருள்;
இயற்றப் படுதல் எய்தப் படுதல்
வேறு படுக்கப் படுதல் ஆதியும்
அவ்வெழு வகையுள் அடங்கும் என்ப' - இ. கொ. 31

என்ற நூற்பாவில் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளன.

அதே காரிகையில் கூறப்படும் மூன்றும் வேற்றுமையின் வகைகளை இன்னும் விரித்து, இலக்கணக்கொத்து,

'அகம்புறம் ஒன்றுமை ஆகும் கருவி' — இ. கொ. 33

'முதல்துணை ஞாபகம் காரகம் ஏது
வினையே நிமித்தம் வேற்றுமை வினைமுதல்
காலம்ஆ திகளைஇம் மூன்றனுள் கருதுவர்' — இ. கொ. 34

என்று குறிப்பிடுகிறது.

பதின்மூன்றும் காரிகையில் கூறப்பெறும் ஏழாம் வேற்றுமை வகைகளும் உரையில் கூறப்பெறும் நிர்தாரணேசத்தமியும் பதினறும் காரிகை உரையில் கூறப்பெறும் சதிசத்தமியும், ஒரு சேர, இலக்கணக்கொத்துள்,

'உரிமை இருவகை ஓரிடம் எங்கும்
எனநான்கு என்றே இயம்புவர் இடனே;
காலம் திக்குஆ காயம் வெயில்இருள்
நிலம்அரு உருமுதல் நிகழ்த்தப் படும்இடம்;
கூட்டிப் பிரித்தல் பிரித்துக் கூட்டல்
இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயர்
எனமூ வகைப்படும் இடம்அல் லாஇடம்;
இடத்தின் நிகழ்பொருள் இருவகை; அருஉரு' — இ. கொ. 42

என்று இணைத்துக் கூறப்பட்டுள்ளன.

அதே காரிகையிலும் உரையிலுமாகக் கூறப்படும் நான்காம் வேற்றுமையின் நான்கு வகைகள் இலக்கணக்கொத்துள் விரிக்கப் பெற்று,

'கேளாது ஏற்றல் கேட்டே ஏற்றல்
ஏலாது ஏற்றல் ஈவோன் ஏற்றல்
உயர்ந்தோன் ஏற்றல் இழிந்தோன் ஏற்றல்
ஒப்போன் ஏற்றல் உணர்வுஇன்றி ஏற்றல்
விருப்பாய் ஏற்றல் வெறுப்பாய் ஏற்றல்
ஆதியாப் பலவும் அறைந்தனர் கொள்வோன்'
— இ. கொ. 36

என்று விளக்கப்பட்டுள்ளன



பதினேழாம் காரிகையில் குறிக்கப்படும் சம்பந்த சட்டியின் அபேதம் பேதம் என்ற இருவகைகளும், இலக்கணக்கொத்துள்,

'ஒற்றுமை வேற்றுமை உரைக்கப் படும்குறை;
ஒற்றுமை யாவதுஓர் பொருளே ஆகும்;
ஒன்றுய்த் தோன்றல் உரிமையாய்த் தோன்றல்
வேறுய்த் தோன்றல் எனவேற் றுமையாம்;
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் சினைகுணம் தொழில்என
ஓர்அறு வகையாம் ஒன்றுய்த் தோன்றல்;
பொருள்இடம் காலம் இருவகை நூல்என
உரிமையாய்த் தோன்றல் உரைக்கப் படுமே;
வேறுய்த் தோன்றல் வேறிடத் தும்செலும்
நிலைமையில் உடைமைகள் பலவும் ஆகும்' — இ. கொ. 40

என முன்னூல் பலவற்றையும் உட்கொண்டு விளக்கப்பட்டுள்ளன.

பதினன்கு பதினைந்தாம் காரிகைகளிலும் உரையிலும் ஒரு காரகபதம் பல உருபுகளோடு வருதல் கூறப்பட்டுள்ளது.

இஃது, இலக்கணக்கொத்துள் 44-ஆம் நூற்பா முதல் 61-ஆம் நூற்பா முடியத் தெளிவாக எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் காரிகையில் கூறப்பெறும் தொடர்மொழி இணைப்புமுறையும் தூரான்வயம் முதலிய நான்கு நிலையும், இலக்கணக்கொத்துள்,

'தகுதி அவாய்நிலை அண்மைநிலை மூன்றும்
புணரப் புணர்வது புணர்ப்புஎனப் புகல்வர்' — இ. கொ. 105

'ஆற்றெழுக்கு அடிமறி மாற்றுஇரண்டு அல்லா
எழுவகைப் பொருள்கோள் மருஉமொழி பொய்யுரை
சிலஇடைப் பிறவரல் பண்புஅதி காரம்
ஆதியாம் பதங்கள் அவையும் அன்றி
விகுதிஉருபு உம்மை முதலினுள் சிலவும்
பொருத்தம்இல் புணர்ச்சி எனப்புகன் றனரே'
— இ. கொ. 108

என்ற நூற்பாக்களிலும் உரையிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இருபத்தொன்றும் காரிகையில் கூறப்பெறும் நஞ்சு, இலக்கணக்கொத்துள்,

'அ-அந் ந-நி-கு-வி வருமொழிப் பொருளை
இன்மை பிறிதுமறை யினுள்ஒன்று ஆக்கும்' - இ. கொ. 100

'அவற்றுள் இன்மை ஐவகை ஆகும்' - இ. கொ. 101

என்ற நூற்பாக்களிலும் உரையிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

இருபத்திரண்டாம் காரிகையில் கூறப்பெறும் பண்புத் தொகையின் வகைகளும், அதன் உரையில் கூறப்பெறும் ஒருபொருட்பன்மொழிகளும், இருபத்தேழாம் காரிகையில் கூறப் பெறும் தொகைகளுக்குப் புணர்ச்சி விகாரத்தால் மருவலுறும் குறியும் இலக்கணக்கொத்துள்,

'பண்புத் தொகைவிரி பகரின் பெருகும்,
ஆயினும் சிலவிதி அறைகுவன் கேள்நீ!
பண்புமுன் வருதலும் இருபண்பு அடுத்தலும்
இருபண் பொடுபொருள் இயைதலும் அவ்விரு
பண்புகள் தாமே பொருளை விளைத்தலும்
இயற்பெயர் சிறப்புப் பெயர்மா றுதலும்
சிறப்புப் பொதுப்பெயர் முறையே சிறத்தலும்
பொதுச்சிறப் புப்பெயர் முறையே பொருந்தலும்
பின்மொழி ஆகு பெயராய்ப் பிறத்தலும்
முன்மொழி ஆகு பெயராய் முடிதலும்
இருமொழி ஆகு பெயராய் இருத்தலும்
ஒருபொருட்கு இருபெயர் ஆகி ஒட்டலும்
முற்பதம் தமிழ்மொழி முற்பதம் வடமொழி
இருபதம் தமிழ்மொழி இருபதம் வடமொழி
ஆகி வருதலும் ஆதியாப் பலவே' - இ. கொ. 98

என்ற நூற்பாவிலும்,

'காரணம் அதனையே இடுகுறி யாகவும்
இடுகுறி அதனையே காரணம் ஆகவும்



பலசொல் வினையே ஒருசொல் லாகவும்
ஒருசொல் வினையே பலசொல் லாகவும்
கருதுவர் ஓரோவழிக் கற்றறிந் தோரே' - இ. கொ. 116

என்ற நூற்பா உரையிலும் முறையே கூறப்பட்டுள்ளன.

இருபத்தாறும் காரிகையில் தொகைச் சொற்களுள் உருபும் பொருளும் தொகுவது மாத்திரம் கூறப்படவும், இலக்கணக் கொத்துள்,

'அறுவகைத் தொகையும் அறையுங் காலை
ஒன்றே தொகுதலும் பலவே தொகுதலும்
ஆறு வகையும் அடங்கத் தொகுதலும்
உருபே தொகுதலும் பொருளே தொகுதலும்
உருபும் பொருளும் ஒருங்கே தொகுதலும்
உருபும் பொருளும் ஒருங்குபல தொகுதலும்
பொருளும் உருபும் பொருளும் தொகுதலும்
முதல்இடை கடைஎன மூன்றினும் தொகுதலும்
கடைஇடை இரண்டினும் காணத் தொகுதலும்
ஆதியாப் பலவும் அறைந்தனர் புலவர்' - இ. கொ. 97

எனத் தொகையுள் காணப்படும் தொகுத்தல் யாவும் ஒருசேரக் கூறப்பட்டுள்ளன.

அக்காரிகையிலேயே கூறப்பெறும் தனிமொழியும் தொடர் மொழியும் பெறும் விகாரங்கள், இலக்கணக்கொத்துள்,

'புணர்ச்சி விகாரம் புணர்ச்சிஇல் விகாரம்
எனஇரண்டு ஆகும் எழுத்து விகாரம்' - இ. கொ. 111

'தோன்றல் திரிதல் கெடுதல்நிலை மாறுதல்
எனநான்கு ஆகும் புணர்ச்சிஇல் விகாரம்' - இ. கொ. 113

'இந்நான்கு இயல்பும் இயம்புவர் மொழிக்கும்' ,, 114

என்ற நூற்பாக்களிலும் உரையிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் தத்திதபடலச் செய்திகளுள் பெரும்பாலன (29-34) இலக்கணக் கொத்துள்,

'பகுபதத்து இலக்கணம் பகருங் காலைப்
பகாப்பதம் தொடர்மொழி இரண்டினுள் படாமல்
ஒருமொழி ஈற்றினும் தொடர்மொழி ஈற்றினும்
பின்மொழி கெட்ட முன்மொழி ஈற்றினும்
முன்மொழி கெட்ட பின்மொழி ஈற்றினும்
அளவிலை யாகி வரும்விகு திகளில்
பொருந்தும் விகுதிகள் பொருந்தல் அன்றியும்,
வேற்றுமை உவம உருபுகள் இடைநிலை
சாரியை நான்கும் தனித்தும் பொருந்தியும்
வேற்றுமைப் பொருள்களை ஏற்று நின்றும்
ஒவ்வொரு வேற்றுமை வெவ்வே ருகியும்
இதனை உடையது இதுஎன நின்றும்,
இதனது உடைமை இதுஎன நின்றும்
இடப்பொருள் உணர்த்தும் வினு-சுட்டு எண்பெற
இடைச்சொல் லாகவே எழுந்து நின்றும்
தன்மை மாத்திரம் தாஞய் நின்றும்
பெயர்ச்சொல் முதலா நான்கினும் பிறந்தும்
பெயர்தான் அறுவகை யாகப் பிரிந்தும்
பகுபதம் ஆயினும் பலகுணப் படலால்
பகாப்பதம் என்னப் பெயர்படல் அன்றியும்
வினைக்குறிப்பு முற்று வினைக்குறிப் புப்பெயர்
இருவகை எச்சம் எனப்பெயர் பெற்றும்
பகாப்பதப் பொருள்படப் பகுபதம் ஆகியும்
பகாப்பதச் சொல்படப் பகுபகும் ஆகியும்
பகுத்தலை ஏற்றும் பகாமையை ஏற்றும்
இவ்விரு குணத்தையும் ஒருங்கே ஏற்றும்
பலசொல் ஒருபொரு ளாகப் பட்டும்
பலபொருள் ஒருசொல் லாகப் பட்டும்
இன்னும் பலவாய் இயலும் என்ப' – *இ. கொ. 117*

*என்னும் நூற்பா உரையுள் விளக்கப்பட்டுள்ளன.*



*முப்பத்தைந்தாம் காரிகை உரையில் முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் போலும் நட, வா முதலிய முதல்நிலைகள் வினையெச்சம் முதலிய பல பொருள்களில் வருமாறு தொகுத்து விளக்கப்பட்டுள்ளது. அச்செய்தி இலக்கணக் கொத்துள்,*

'முதல்நிலைத் தனிவினைக் குணம்மொழி குறினே,
முதல்நிலைத் தொழிற்பெயர் முன்னிலை ஏவல்
ஒருமைமுற்று அன்றியும் வேறுவினை முற்ருேடு
இருவகை எச்சம்அவ் வெச்சம்முற் றுக்களுள்
முதல்நிலை பிரிந்தஅம் முதல்நிலைத் தொழிற்பெயர்
வினைமுதல் ஆதியா வெவ்வேறு ஆதல்
எட்டுஉருபு ஏற்றே எண்பொருள் ஆதல்
செயப்படு பொருள்குன் ருமையும் குன்றலும்
பொதுவும் இடம்குன் ருமையும் ஆதல்
பலபொருட்டு ஒன்றும்ஓர் பொருட்கே பலவும்
ஆதலும் பகாப்பதம் ஆதலும் அன்றி
இயல்பினும் திரிபினும் பகுதிஎன்று ஆதல்
ஆதியாப் பலவே ஆகும் என்ப' – *இ. கொ. 66*

*என்று விரித்து விளக்கப்பட்டுள்ளது.*

*அதே காரிகை உரையில் பெயரடியாகப் பிறக்கும் வினைகளே குறிப்பிடப்படவும், இலக்கணக் கொத்து, பெயர் வினை இடை உரி என்ற நான்கு அடியாகவும் பிறக்கும் வினைகளை,*

'பெயர்வினை இடைஉரி நான்குஅடி யானும்
பிறக்கும் வினைஎனப் பேசுவர் புலவர் ;
பண்புஅடி முதலாப் பலவும் பகர்வர் ;
அவைஇவை யுள்ளே அடங்கும் என்க' – *இ. கொ. 68*

*என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறது.*

*முப்பத்தேழாம் காரிகையில் கூறப்பெறும் வினையாலணையும் பெயரின் ஒன்பது இலக்கணமும், இலக்கணக்கொத்தில்,*

'வினைமுற் றுப்பெயர் விரிக்குங் காலை
வினைமுதல் செயப்படு பொருளே கருவி
இடமே தொழிற்பெயர் இவ்வைந்து அன்றியும்
எட்டுஉருபு ஏற்றே எண்பொருள் ஆதல்
ஈற்றயல் திரிதல் ஈரெச்சம் ஆதல்
ஈறுஇகரம் ஆதல்அவ் ஈறுஇகரம் ஆயவை
வினைமுதல் செயப்படு பொருளொடு கருவி
இடம்வினை யெச்சமாய் இயங்குதல் அன்றியும்
இன்னும் பலவகை எனவிளம் புவரே' - இ. கொ. 83

என்று விளக்கப்பட்டுள்ளமை காண்க.

நாற்பதாம் காரிகையில் கூறப்பெறும் சுரம் என்னும் ஓசையும், அவை பயன்படுமாறும், சருபசிலிட்டமும், இலக்கணக் கொத்துள்,

'எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை;
நலிதல் விலங்கலொடு நான்குஎன் பார்சிலர்;
மூன்று எனத் துணிந்தே மொழிகுவர் பலரே' - இ. கொ. 127

'பலபொருட்கு ஒருவடிவு ஆகும் பதங்களை
ஓசையொடு கூறுவர் உயர்ந்தோர்; அவைதாம்,
தனிமொழி தொடர்மொழி எனும்இரண் டினும் வரும்;
தனிமொழி வினைமொழி தனியே சாரும்;
சொல்வேறு படாது பொருள்வேறு படுதலும்
பொருள்வேறு படாது சொல்வேறு படுதலும்
பொருள்சொல் ஒருங்கே போய்வேறு படுதலும்
என்மூன்று என்பர் தொடர்மொழி இயல்பே' - இ. கொ. 126

என்ற நூற்பாக்களானும் உரையானும் விளக்கப்பட்டுள்ளன.

நாற்பத்தொன்றும் காரிகையில் கூறப்பெறும் கிருத்தியப் பிரத்தியயம்

'வேறில்லை உண்டியார் வேண்டும் தகும்படும்' - இ. கொ. 85

என்னும் நூற்பாவில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.



ஐம்பதாம் காரிகை உரையில் கூறப்பெறும் சாதி ஒருமை முதலியன, இலக்கணக்கொத்துள்,

'உயர்திணை இயற்பெயர் அஃறிணை இயற்பெயர்
உயர்திணைப் பொருளில் சாதி ஒருமை
அஃறிணைப் பொருளில் சாதி ஒருமை
உயர்திணைப் பொருளில் சாதிப் பன்மை
அஃறிணைப் பொருளில் சாதிப் பன்மை
ஒருசொல் நின்றே தனித்தனி உதவுதல்
எனப்பிரிவு ஏழ்என்று இயம்புவர் புலவர்' - இ. கொ. 130

என்ற நூற்பாவானும் அதன் உரையானும் விளக்கப்பெறுகின்றன.

இவற்றால் பிரயோகவிவேகம் குறிப்பிடும் அருஞ்செய்திகளுள் பல இலக்கணக் கொத்துள் வடசொல் சிவணுத் தமிழ்நடையில் தெளிவாக விளக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.

இவையன்றி, இவ்விருநூல்களுக்கும் உரிய தனிச் சிறப்புக்களை நூலைப் பயிலுங் காலத்திலேயே காண்டல் இயலும். அடுத்தடுத்துத் தோன்றிய இவ்விரு நூல்களையும் ஒருங்கு கற்றல் சொல்லிலக்கணம் நன்கு உணர்தற்குப் பெரிதும் பயன்தரும்.

இனி, பிரயோகவிவேகம் குறிப்பிடும் வடமொழி இலக்கண நூல்கள் பற்றிய குறிப்பும், அவற்றில் உள்ளனவாகக் குறிப்பிடப் படும் செய்திகளும் பிற்சேர்க்கையாக எடுத்து இயம்பப்பெறும்.

★

## பிரயோக விவேகம் — காரிகைச் செய்திகள்

### காரகபடலம்


செய்தி — காரிகை எண்

தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் இயம்பும் தற்சிறப்புப் பாயிரம் கூறுதல் ... 1

ஆசிரியர் தம் மேற்கோளும் பயனும் கூறுதல் ... 2

தம்மைப் பிறர்போலக் கூறும் பதிகம் கூறுதல் ... 3

முதலெழுத்துக்களுக்குக் குறியீடுகளும் மெய்ம்மயக்கமும் கூறுதல் ... 4–5

வேற்றுமையும் வேற்றுமைப் பொருளும் கூறுதல் ... 6

வடமொழியின் எழுவாய் வேற்றுமை அமைப்பைக் கூறுதல் ... 7

தமிழின் எழுவாய் வேற்றுமையும், பெயர்கள் பிறஉருபு ஏற்றலும், காரகமாதலும் கூறுதல் ... 8

காரகம் ஆறனுக்கும் வடமொழிப் பெயர் கூறுதல் ... 9

அறுவகைக் காரகங்களுக்கும் ஒரே காரிகையில் உதாரணம் கூறுதல் ... 10

எழுவாய் வேற்றுமை வகையும் ஐந்தாம் வேற்றுமை வகையும் கூறுதல் ... 11

இரண்டாம் வேற்றுமை வகையும் மூன்றும் வேற்றுமை வகையும் கூறுதல் ... 12

ஏழாம் வேற்றுமை வகையும் நான்காம் வேற்றுமை வகையும் கூறுதல் ... 13

முதல் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் பிற வேற்றுமைகளோடு மயங்குமாறு கூறுதல் ... 14





செய்தி — காரிகை எண்

மூன்றும் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையும் பிற வேற்றுமைகளோடு மயங்கும் மயக்கமும், நீக்கம், இடம் என்பன பற்றிய வேற்றுமையும் கூறுதல் ... 15

மூன்றன் உருபும் நான்கன் உருபும் ஏழன் உருபும் சிறப்புப்பெயர் பெறுமாறும், காரகம் என்பதன் விளக்கமும் கூறுதல் ... 16

ஆறும் வேற்றுமை வகையும் விளிவேற்றுமை வகையும் கூறுதல் ... 17


### சமாசபடலம்


உரிச்சொற்களின் இலக்கணமும் சொல்லாற்றலும் கூறுதல் ... 18

தனிமொழி, தொடர்மொழி இவற்றின் பொதுவான மூவகை இணைப்புமுறை பற்றிக் கூறுதல் ... 19

தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் கூறுதல் ... 20

வேற்றுமைத்தொகை, எண்ணொடு பெயர் புணர்ந்த எண்தொகை இவற்றிற்கு விளக்கம் கூறுதல் ... 21

பண்புத்தொகையின் வகைகளைக் கூறுதல் ... 22

இடைச்சொல்தொகை, உம்மைத்தொகை இவற்றின் வகைகளைக் கூறுதல் ... 23

அன்மொழித் தொகையின் வகைகளைக் கூறுதல் ... 24

தொகைகளுள் பொருள்சிறக்கும் சொற்களைக் கூறுதல் ... 25

தொகைகளுள் இடை நின்ற சொற்கள் தொகுதலும் புணர்ச்சி விகாரமும் பற்றிக் கூறுதல் ... 26

தொகைகளுக்குள் ஏற்படும் புணர்ச்சி வேறுபாடுகளுக்குப் பெயர் கூறுதல் ... 27

தொகைகளுக்கும் தத்தித பதங்களுக்கும் வரும் சந்தி விதியும், அச்சந்திகளின் பெயர்களும் கூறுதல் ... 28

## தத்திதபடலம்

செய்தி காரிகை எண்

தத்திதன் என்பதற்கு இலக்கணமும் உதாரணமும் கூறுதல் ... 29

தத்திதனின் மூன்று வகைகளும், சாமானியதத்திதன் பெறும் விகுதிகளும் கூறுதல் ... 30

உடையான்மேல் நிற்கும் சாமானிய தத்திதனை விளக்கிக் கூறுதல் ... 31

உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதனை விளக்கிக் கூறுதல் ... 32

அவ்வியய தத்திதனை விளக்கிக் கூறுதல் ... 33

பாவ தத்திதனை விளக்கிக் கூறுதல் ... 34

## திங்குப்படலம்

வினைப்பகுதிகள் செயப்படுபொருள் குன்றுதன, செயப்படுபொருள் குன்றியன என இருபகுதிப் படுமாறும் பிறவினைப்பகுதி ஆமாறும் கூறுதல் ... 35

பரப்பைபதம் ஆற்பனேபதம் இவற்றை விளக்கிக் கூறுதல் ... 36

வினையாலணையும் பெயரின் ஒன்பதுவகை இலக்கணம் கூறுதல் ... 37

வினையெச்சம் பெயரெச்சம் ஆகியவைகளுக்கும் அவற்றின் வகைகளுக்கும் வடமொழிக் குறியீடு கூறுதல் ... 38

செய்து என்னும் எச்சத்தின் எழுவகை இலக்கணமும் ஏனைய செய முதலியவற்றின் இலக்கணமும் கூறுதல் ... 39

மூவகை ஓசையும் அவை பயன்படுத்தப்படும் இடங்களும் கூறுதல் ... 40



செய்தி காரிகை எண்

விகரணி – இடைநிலை தோய் இறுதி – வியங்கோள்வகை-கிருத்தியப் பிரத்தியயம் இவற்றைக் கூறுதல் ... 41

சுபந்தம், திஙந்தம், பாவபதம், அவ்வியயம் இவற்றைத் தொகுத்துக் கூறுதல் ... 42

முக்காலம், மூவிடம், முப்பால், மூவகை எண், மிகைச் சொல், குறைச்சொல், பகுதிப்பொருள் விகுதி – இவற்றிற்கு வடமொழிப்பெயர் கூறுதல் 43, 44

உபசர்க்கம், சுட்டு, வினா, படுவிகுதி இவற்றைக் கூறுதல் ... 45

மெய்ம்முதல், மெய்யீறு, உயிர்முதல், உயிரீறு, தொகைநிலை தொகாநிலை இவற்றிற்கு உரிய வடமொழிப் பெயர், செய்யாய் என்பது செய் எனக் குறுகுதல் – ஆகியவற்றைக் கூறுதல் ... 46

இலக்கணை என்பதன் இலக்கணம் கூறுதல் ... 47

காரணம், காரியம்; குணம், குணி; இடம், பண்பு – இவை மாறி வருதலைக் கூறுதல் ... 48

தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கண முறையில் அமைந்துள்ள அருகிய சில வேறுபாடுகளைக் கூறுதல் ... 49

பிரதிபதம், சொற்பொருள் விளக்கம், எடுத்துக்காட்டு- இவற்றை நோக்கிக் கூறுதனவும் உய்த்துணர்க என்பதும் அவையடக்கமும் கூறுதல் ... 50

இந்நூலை இராமபத்திர தீக்கிதர் முன்னிலையில் ஆசிரியர் அரங்கேற்ற விரும்பும் தம்விருப்பம் கூறுதல் ... 51

★

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME ORIENT BIBLIOTHÈQUE PONDICHÉRY

## இப்பதிப்பில் சுட்டப்பட்டுள்ள நூல் முதலியவற்றின் சுருக்கெழுத்து விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். | — | அகத்தியம் |
| அகநா. | — | அகநானூறு |
| ஆசார. | — | ஆசாரக்கோவை |
| இ. கொ. | — | இலக்கணக்கொத்து |
| எ. | — | தொல்காப்பிய எழுத்ததிகாரம் |
| கலி. | — | கலித்தொகை |
| கு, குறள். | — | திருக்குறள் |
| குறுந். | — | குறுந்தொகை |
| கோவை. | — | திருக்கோவையார் |
| சிலப். | — | சிலப்பதிகாரம் |
| சிற. பாயி. | — | சிறப்புப் பாயிரம் |
| சிறுபாண். | — | சிறுபாணாற்றுப்படை |
| சீவக. | — | சீவகசிந்தாமணி |
| சே, சேனா. | — | சேனாவரையருரை |
| சொ, சொல். | — | தொல்காப்பியச் சொல்லதிகாரம் |
| தண்டி. | — | தண்டியலங்காரம் |
| திருவா. | — | திருவாசகம் |
| திவ். பிர. | — | திவ்வியப்பிரபந்தம் |
| தேவா. | — | தேவாரம் |



| | | |
|---|---|---|
| தொ. எ. | — | தொல்காப்பிய எழுத்ததிகாரம் |
| தொ. சி. பா. | — | தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் |
| தொ. சொ. | — | தொல்காப்பியச் சொல்லதிகாரம் |
| தொ. பொ. | — | தொல்காப்பியப் பொருளதிகாரம் |
| ந. அக. | — | நம்பிஅகப்பொருள் |
| நச். | — | நச்சினார்க்கினியர் உரை |
| நற். | — | நற்றிணை |
| நன். | — | நன்னூல் |
| நாலடி. | — | நாலடியார் |
| நான்மணி. | — | நான்மணிக்கடிகை |
| நெடுநல். | — | நெடுநல்வாடை |
| நே. | — | நேமிநாதம் |
| நேமி. மேற். | — | நேமிநாத மேற்கோள் |
| பட்டின. | — | பட்டினப்பாலை |
| பரி. | — | பரிமேலழகர் உரை |
| பரிபா. | — | பரிபாடல் |
| பு. வெ. மா. | — | புறப்பொருள் வெண்பாமாலை |
| புறநா. | — | புறநானூறு |
| பேரா. | — | பேராசிரியர் உரை |
| பொ. | — | தொல்காப்பியப் பொருளதிகாரம் |
| பொருந. | — | பொருநராற்றுப்படை |
| யா. கா. | — | யாப்பருங்கலக்காரிகை |
| வீ. | — | வீரசோழியம் |

★

# பிரயோக விவேகம்

—o—

இந்நூலும் உரையும் செய்த ஆசிரியர் சுப்பிரமணிய தீக்கிதர். இந்நூல் வடமொழிச் சத்தசாத்திரத்தைக் காரகபடலம், சமாசபடலம், தத்திதபடலம், திங்ஙுப்படலம் என நான்கு படலங்களாக வகுத்து அவைதம்மைத் தென்மொழி இலக்கணத்தோடு ஒப்பித்துக் கூறும் முகத்தானே வடமொழிக்கும் தென்மொழிக்கும் இலக்கணம் ஒன்று என்று நிலையிட்டு உரைக்கும். இவ்வாற்றால் வடமொழிவல்லார் தென்மொழி இலக்கணம் அறிதற்கும், தென்மொழி வல்லார் வடமொழி இலக்கணம் அறிதற்கும் கருவியாய்ச் சிறப்பது இந்நூல் என்று உணர்க.

*– திராவிடப் பிரகாசிகை.*

# பிரயோக விவேகம்

★

## முதலாவது காரக படலம்

★

### தற்சிறப்புப்பாயிரம்

1. நீர்கொண்ட சென்னி மகேச்சுரன்,
      பாணினி, நீள்கடல்சூழ்
   பார்கொண்ட கீர்த்தி வரருசி,
      ஞான பதஞ்சலி,பூந்
   தார்கொண்ட வானவர் கோன்,பாரதி
      இவர் தாள்வணங்கி
   ஏர்கொண்ட சொல்பிரயோக
      விவேகம் இயம்புவனே.

இது தற்சிறப்புக் கூறுகின்றது. மகேச்சுரன் ஆதியாகப் பாரதி ஈறுகச் சொல்லப்பட்ட இவர்கள் பாதங்களைத் தொழுது, பிரயோக விவேகம் என்னும் வடமொழிச் சத்த சாத்திரத்தை யான் கூறுவேன் என்றவாறு.

வடமொழிப் பிரயோக விவேகத்தினும் சொல்லிலக்கணம் அல்லது எழுத்திலக்கணம் கூருமையின், சொற் பிரயோகவிவேகம் என்ரும். காத்தியாயனர் எனினும் வரருசி எனினும் ஒக்கும். பதஞ்சலி எனினும் பாடியகாரர் எனினும் ஒக்கும். மகேச்சுரன் பாணினிக்கு ஆசாரியன்.

'ஏழ்இயல் முறையது எதிர்முக வேற்றுமை
வேறுஎன விளம்பான் பெயரது விகாரம்என்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' — அகத்தியம்

என அகத்தியத்தின் கண்ணும்,

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'

எனத் தொல்காப்பியப் பாயிரத்தின்கண்ணும் வருதலின், இவர்கட்கு முதல்நூல் பாணினீயமும் ஐந்திரமுமாம் என்க.

'அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன்'

என்ணுமையானும்,

'கடிநிலை யின்றே ஆசிரி யற்க' — தொல். எ. 389

எனப் பொதுப்பட ஓதியதல்லது பெயர் எடுத்து ஓதாமை யானும், அதுவே பொருள் என்க. பின்னூல் செய்தார் தத்தம் பாயிரத்துள் வேண்டியவாறு ஓதினர்; அதுபற்றி உரைகாரரும் அவர் உரைத்தாங்கு உரைத்தார்; அது பொருளன்மை அறிக. (1)

விளக்கம்

பிரயோக விவேகம் – மொழியைப் பயன்படுத்தும் அறிவு பற்றிக் கூறும் நூல்.

விளிவேற்றுமை நீங்கலாக ஏனைய ஏழு வேற்றுமைகளையும் ஏற்கும் சொற்கள் வினைகொண்டு முடியுங்கால் காரகம் எனப்படும். அவை பற்றிக் கூறும் இவ்வியல் காரகபடலம் ஆயிற்று.

வீரசோழியம் காரகப்படலம் என ஒற்று மிகுத்துக் கூறவும் இவர் இவ்வடசொற்சந்தி இடையொற்று மிகுதல்கூடாது என்ற கருத்தினர். சமாசபடலம், தத்திதபடலம் என்பனவற்றிலும் இடையே ஒற்றுமிகுத்தலை இவர் கொள்ளார். திங் என்பது திங்ஙு என்ருயகாலை அதற்கு ஒற்று இடைமிகாதாயின் விட்டிசைக்கும் என்ற கருத்தான் திங்ஙுப்படலம் என இடையே ஒற்று மிகுத்துள்ளார்,



'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்புப் பாயிரம்'

ஆதலின், இம் முதற்பாடலில் மகேச்சுரன் முதலாகப் பாரதி ஈருகக் கூறப்பட்டுள்ள தெய்வங்கள் சான்ருேர் ஆகியவரை வணங்கி, வடமொழிச் சொல்லிலக்கணத்தை ஆசிரியர் தமிழியல்போடு ஒட்டிக்கூறும் தம் கருத்தைக் குறிப்பிடுகின்ருர்.

வடமொழியில் சொல்லிலக்கணமே வியாகரணம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. தமிழிலக்கணம் எழுத்து சொல் பொருள் என்ற முப்பெரும் பிரிவிற்ருகியது. பின் பொருள் இலக்கணமே பொருள் யாப்பு அணி என முக்கூறுபட்டது. தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம்போல் எழுத்ததிகாரம் பெரும்பயன்படாமையின் சேனவரையர் எழுத்திற்கு உரை செய்தாரல்லர் என்று சிவஞானமுனிவர் சூத்திரவிருத்தியுள் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாராய்ச்சி வடமொழியில் பிரமம் என்ற தனி அங்கமாகக் குறிக்கப்படுகிறது. "ஆறங்கமாவன, உலகியல் சொல்லை ஒழித்து வைதிகச்சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடன் ஆராய்ந்த ஐந்திரத்தொடக்கத்து வியாகரணமும், போதாயனியம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்" என்பர் நச்சினர்க்கினியர். (கலி. கடவுள் வாழ்த்து. உரை) பிரயோக விவேகத்தினுள் சொல்லிலக்கணமே கூறப்படும் என்பது சுட்டிய, சொற்பிரயோகவிவேகம் எனப்பட்டது.

காத்தியாயனர், பாணினி வியாகரணத்தில் கூறப்படாது விடுபட்ட பல செய்திகளை விளக்கி வார்த்திகம் என்ற உரை வரைந்துள்ளார். பதஞ்சலியார் பாணினி வியாகரணத்துக்கு மாபாடியம் எனப்படும் பேருரை வரைந்துள்ளார்.

மகேச்சுரனைப் பாணினிக்கு ஆசிரியன் என்றது, ஆதியில் சிவபெருமானுடைய தமருகத்தினின்று தோன்றிய பதினன்கு ஒலிகளாகிய பதினன்கு சூத்திரங்களையும் முதனூலாகக்கொண்டு பாணினியார் வியாகரணம் செய்தமையின்.

ஓதியபுலவனும் உளன் – புலவன் என்றது ஈண்டுப் பாணினியை. இனிச் சண்முகனார் தம்பாயிரவிருத்தியின் 96-ஆம் பக்கத்தில் "மகேச்சுர சூத்திரத்தை முதனூலாகக் கொண்டு பிருகற்பதி ஒருநூல் செய்தான். அதன் வழித்தாக இந்திரன் ஐந்திரம் என்னும் பெயரியதொரு நூல் செய்தான். இவ்வாறே பின்னும் சில தோன்றின. அவையெல்லாம் கலியுக ஆரம்பத்து அழியவே, பாணினி தன்பெயரான் ஒரு நூல் செய்யவே, அதற்குப் பதஞ்சலியும் வரருசியும் உரை செய்தனர்" என்று குறிப்பிடு வதால், புலவன் பிருகற்பதி என்ற கருத்தும் உண்மை போதரும். சண்முகனாருக்குத் தொல்காப்பியம் பாணினீயத்துக்கு மிக முற் பட்டது என்பது கருத்து.

'ஏழியன் முறையது' என்ற அகத்திய நூற்பாவால் அகத்தியத்திற்கு முதல்நூல் பாணினீயமும் ஐந்திரமும் என்பதும் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற தொடரால் தொல்காப்பியத்திற்கு முதல்நூல் ஐந்திரம் என்பதும் இவர் கருத்தாகும். அகத்தியனாரைப் பற்றிப் பாயிரத்திலோ, தொல்காப்பிய நூலிலோ யாதும் கூறப்படாமையின் அகத்தியம் தொல்காப்பியத்திற்கு முதல்நூல் அன்று என்றார்.

பின்னூல் செய்தார் – புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் முதலாயினர். உரைகாரர் – உரையாசிரியர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலாயினர். இவர்கள் எல்லோருக்கும் தொல்காப்பியத்துக்கு அகத்தியமும் முதனூல் என்பதும் ஐந்திரம் முதனூல் அன்று என்பதும் கருத்தாகும்.

"இனிப் பிரயோக விவேக நூலார் வடமொழி தென்மொழி களின் வேறுபாடும், முதல்நூல் வழிநூல்களின் இலக்கணமும், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் முந்துநூல் கண்டு தொகுத்தான்' எனப் பாயிரத்துள் முதனூலை வேறுகூறியிருத் தலும், ஐந்திரம் பெயரை விசேடித்து நிற்றலும் நோக்காது, தமக்குள்ள வடநூல் அபிமானம் ஒன்றே தலைக்கொண்டு ஐந்திரம்



நிறைந்த தொல்காப்பியன்' என்றமையால் ஐந்திரமே தொல்காப்பியத்துக்கு முதல்நூலாம் எனவும், 'எதிர்முக வேற்றுமை பெயரது விகாரம் என்று ஓதிய புலவனும் உளன்' என்றமையான் அகத்தியத்திற்குப் பாணினீயம் முதல்நூலாம் எனவும், இருமொழிக்கும் வேறுபாடு பெரிதாகவும் சிறுபான் மையே உளது எனவும் தம்கருத்துச் சென்றுழிச் சென்று உரைத்தார். அவர் கூறியவாறு சிறிது வேறுபாடு இருப்பினும், முதல் நூலுக்குச் சிறிதும் வேறுபாடின்றிக் கூறலே வழி நூலிலக்கணம் ஆதலின், ஐந்திரம் முதல்நூலும் தொல்காப்பியம் வழிநூலும் ஆதற்கு ஏலாமையானும், ஐந்திரத்தின் வழித்தாகத் தொல்காப்பியம் செய்யப்படின் ஐந்திரத்துள்ளன முழுதும் கூறுவிடினும் அதற்கு மாறின்றியேனும் இருத்தல் வேண்டும், அவ்வாறு இன்று என்பது எழுத்ததிகாரத்துள் வடமொழி எழுத்துப் பலஇன்றி, அவ்வடமொழி எழுத்துள் இல்லா தன்வாகிய ற ன ழ எ ஒ என்பனவும், சார்பெழுத்து மூன்றும் என எட்டெழுத்தொடு முப்பத்து மூன்றே எழுத்து என்பதும், குறில் நெடில் முதலாகப் பலகாரணக் குறியும், பிறவும் கூறுமாற்றான் அறியப்படலானும், அவ்வாறே சொல்லினும், பொருளினும் பல இருத்தலானும், வேற்றுமை முதலாய சில ஒத்திருத்தலின் அதுவும் முதல் நூலாமெனின், பல இவ்விரு மொழிக்கே அன்றி ஏனைய மொழிக்கும் ஒத்தலின் அவை பொதுவியல்பு ஆதலேயன்றி முதல் எனப்படாமையானும், 'முந்து நூல் நிறைந்த தொல்காப்பியன் ஐந்திரம் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோன்' எனக் கூறாமல், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் முந்துநூல் கண்டு தொகுத்தோன்' என்றதனானே ஐந்திரம் முதல்நூல் ஆகாது என்றல் விளங்குதலானும், அகத்தியத்தை அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல் என முன்னோர் கூறினாரன்றி வழிநூல் என்னாமையானும், அகத்தியன் இறைவன் அருள்பெற்று அந்நூல் செய்தான் என்றாரன்றிப் பாணினீயம் கண்டு செய்தான் எனக் கூறாமையானும், பாணினி அகத்தியருக்கு மிகப் பிற்பட்டவர் ஆதலானும், தொல்காப்பியன் ஐந்திரத்தையும் முந்து நூல்களையும்

கண்டு தொகுத்தான் எனின், 'ஐந்திரமும் முந்துநூலும் கண்டு தொகுத்தான்' எனக் கூறல் வேண்டும், அவ்வாறு கூருமையானும், முந்து நூலுள் ஐந்திரமும் அடங்குமெனின், பின்னர் 'ஐந்திரமும் நிறைந்த தொல்காப்பியன்' என வேறு கூறல் அமையாமையானும் பிரயோக விவேக நூலார் கூறியது பொருந்தாது என்க".

– பா. வி. 235, 236 ப.

"முந்துநூல் அகத்தியம் என்க. அற்றேல், 'முந்து நூல்கண்டு' எனப் பொதுப்படக் கூறுதலானும், அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்ஞமையானும், நுலுள்ளும் 'கடிநிலையின்றே ஆசிரியற்க' எனப் பிருண்டும் பொதுப்படக் கூறுதலானும் அகத்தியமே முதல் நூல் என்பது துணியப் படாதாம் பிற எனின், முந்து நூல் எனப் பொதுப்படக் கூருது நிலத்தொடு முந்துநூல் என விசேடித்தலின், செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங்காலத்து உடன் தோன்றிய நூல் அகத்தியம் ஒன்றே ஆகலானும், ஏனைய நூல்களெல்லாம் அகத்தியத்தின் வழித் தோன்றியனவே ஆகலானும், ஐந்திரம் நோக்கித் தொகுத்தான் எனின், தமிழ்மொழிப் புணர்ச்சிக்கண் படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும் அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும் குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியில் பெறப்படாமையானும், இவையெல்லாம் தாமே படைத்துக்கொண்டு செய்தார் எனின், 'முந்து நூல் கண்டு' என்பதனேடு முரணுதலானும், முற்காலத்து முதல் நூல் அகத்தியம் என்பதூஉம் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதூஉம் துணியப்படும்.

கடைச்சங்கத்தாருள் களவியல் பொருள்கண்ட கணக்காயனர் மகனர் நக்கீரனர் இடைச்சங்கத்தாருக்கும் கடைச்சங்கத்



தாருக்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்று உரை செய்தாராகலின், இடைச்சங்க நாள் முதல் இன்று காறும் வழங்கி வருதலானும்,

'கூறிய குன்றினும் முதல்நூல் கூட்டித்
தோமின்று உணர்தல் தொல்காப் பியன்தன்
ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே'

– பல்காப்பியப் புறனடை

எனவும்,

'வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனப் புலமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
பொருந்தங் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்......'

– பன்னிருபடலப் பாயிரம்

எனவும்,

'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்தமிழ் தாவின்று உணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும்.........................'

– பு. வெ. மா. பாயிரம்

எனவும் எல்லா ஆசிரியரும் அகத்தியனுருக்கு முதல் மாணக்கர் ஆயினர் என்பது பற்றியே தொல்காப்பியனுருக்குப் பெருமை கூறி, அகத்தியமே தொல்காப்பியத்துக்கு முதல் நூல் எனக் கூறினர்.

அற்றேல், அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னது 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்றது என்னையெனின், அகத்தியம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமையின்,

ECOLE FRANÇAISE BIBLIOTHÈQUE PONDICHÉRY D'EX... ORIENT

வடமொழியினும் வல்லனுயினன் என்பது விளக்கிய அங்ஙனம் கூறினர் என்பது. இவ்வாறன்றி 'ஐந்திரத்தின் வழித் தோன்றிய நூல் என்பது விளக்கிய, ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றுர்' என்பாரை, ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனவே ஐந்திரம் முதல்நூல் என்பது அமைந்திருப்ப, முந்து நூல்கண்டு என்பது எற்றுக்கு எனவும் கூறி மறுக்க" என்று சிவஞானமுனிவர் சூத்திரவிருத்தியில் கூறியுள்ளார். இவற்ருல் தொல்காப்பியத்துக்கு முதல்நூல் ஐந்திரம் என்றகூற்று ஆராயத் தக்கது. *1.*

## ஆசிரியரின் மேற்கோள்

2. பொற்புஅமர் தெய்வமொழிப் பாகுபாடும்,
  பொதுஎழுத்தாய்ப்
பற்பலவாகித் திரிவதும் சாற்றினர்
  பண்டு உணர்ந்தோர்;
முற்பகர் நூலுள் சிறுபான்மை பேர்க்கு
  மொழிபெயர்த்தாம்;
தற்பவம் தற்சமமே பெரும்பான்மையும்
  சாற்றினமே.

இது பிரதிக்கினையும் பயனும் கூறுகின்றது.

**'பிரதிக் கினேமேற் கோளெனப் பெயர்பெறும்'**

இஃது உரைச்சூத்திரம். இவ்வாறு கவிதோறும் உரைக்கு முன்னகப் பின்னக உரைச்சூத்திரமும் செய்தாம்; அது கண்டு கொள்க. பண்டு கற்றேர், முன்னூலுள் ஏகதேசம் வடமொழிக் கூறுபாடும், அது தற்சமம் தற்பவமாகப் பொதுவெழுத்தாய்த் திரிவதும் கூறினர். யாம் இந்நூலுள் சொற்களின் பெயரை ஏகதேசம் தமிழாகவும் பிராயிகம் தற்சமம் தற்பவமாகவும் கூறினும் என்றவாறு.



**'சிறுபான்மை யேயேக தேசம் ஆகும்'**

**'பிராயிகம் பெரும்பான்மை பேசுங் காலே'**

**'தேசிகச் சொல்லொடு செறிவட மொழியினைத்
தற்சமம் தற்பவம் தாம்என மொழிப'**

இவை உரைச்சூத்திரம்.

இனிப் பண்டு உணர்ந்தோராவார் தொல்காப்பியனரும் நன்னூலாரும் என்க. அவர் கூறிய வடமொழி இலக்கணம் பெற்ற தற்சமம் தற்பவமாகத் தத்தம் நூலுள்ளே எழுத்திற்கும் சொல்லிற்கும் காரணக்குறி இடுகுறியாகிய யோகரூட நாமங்களைச் சிறுபான்மை கூறினர். அவ்வாறு சிறுபான்மை கூருது, யாம் இந்நூலுள் பெரும்பான்மையும் தற்சமம் தற்பவங்களால் கூறினம். இப்பெரும்பான்மையும் கூறியது யாதுபற்றி எனின், வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்று என்பது அறியாது, சம்ஞாபேதத்தாலும் பாடை வேற்றுமையாலும் இகழ்ந்து வேறு என்பாரை நோக்கி என்க. இந்நூல் செய்த-தற்கும் இதுவேபயன்.

இனி, அவர் சிறுபான்மை கூறிய தற்சமம் தற்பவமாவன – சூத்திரம், உதாரணம், தகாரம், நகாரம், வகாரம்,

**'இவ்வென அறியும் அந்தம் தமக்குஇலவே'** – தொ. சொ. 4

**'கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை'** – தொ. எ. 7

**'விண்ணென வரூஉம் காயப் பெயர்வயின்'** – தொ. எ. 305

**'கருமம் அல்லாச் சார்புஎன் கிளவிக்கு'** – தொ. சொ. 84

**'இன்னன் ஏது ஈங்கனம்'** – தொ. சொ. 74

**'அம்போத ரங்கம் அறுபதிற் றடித்தே'** – தொ. பொ. 463

**'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை'** – தொ. பொ. 574

**'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை'** – தொ. பொ. 632

எனவும், பாயிரத்துள் குமரி, ஐந்திரம், பாண்டியன் எனவும் கூறினர்.

'திங்களும் நாளும்' - தொ. எ. 286

என்னும் சூத்திரத்தால், ஆனி, ஆடி, தை ஒழிந்த திங்களும், நாள் இருபத்தேழும் தற்பவமாகலின், அவை தமிழால் புணரும் புணர்ச்சியும் கூறினர். விகற்பம், (4) 'பகுதி, விகுதி', (133) அச்சு, (146) ஐவருக்கம், (146) சருவி, கருத்தா, (297) பாந்தம் (145) என இன்னும் பிறவும் நன்னூலார் கூறினர். பிறர் புலுதம் எனவும் கூறினர்.

பகுதி, விகுதி, பாத்தம், விகற்பம், புலுதம், மதம், சூத்திரம், உதாரணம் என்னும் வடமொழிக்கு உரிய குறி எல்லாம் வடமொழிக்கே அன்றித் தமிழ்மொழிக்கும் உரிமையானாற்போல, யாம் இந்நூலுள் கூறிய வடமொழிக்குறி எல்லாம் தமிழ் மொழிக்கும் ஆம் என்க.

இனி, அவர் கூறிய வடமொழிப் பாகுபாடும் திரிவும் யாவை எனின், நன்னூலார், சொல்லதிகாரத்துள்,

'பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்
ஈர்எழுத் தானும் இயைவன வடசொல்' - 274

என முழுதும் பொது எழுத்தானே வருவனவும், முழுதும் வடசிறப்பு எழுத்தானே வருவனவும், இவ்விரண்டும் அன்றி வடசிறப்பு எழுத்தானும் பொது எழுத்தானும் கலந்து வருவனவும் என இயற்கையாய் நிற்கும் வடமொழிப் பாகுபாடே கூறி, பின் எழுத்ததிகாரத்துள்,

'இடையில் நான்கும்' - 146-50

என்னும் சூத்திரம் முதல் ஐந்து சூத்திரத்தான், முழுதும் பொது எழுத்தான் வரும் தற்சமம் ஒழித்து, மற்றை இரண்டனுள்ளும் புணர்ந்த வட சிறப்பு எழுத்துக்கள் இன்ன எழுத்து இன்ன பொது எழுத்தாய்த் திரியும் என்றும், குங்கும குங்குமம் - மலய மலயம் - மாலா மாலை - சிலா சிலை - கலா கலை எனப் பொது எழுத்துள்ளும் இன்ன பொது எழுத்து இன்ன பொது



எழுத்தாய்த் திரியும் என்றும் தற்பவச் சொல்லிலக்கணம் கூறினர். தமிழ்ச் சிறப்பு எழுத்தால் திரியாமை நன்னூலார்க்கும் தொல்காப்பியனாருக்கும் ஒக்கும். இவ்வாறு இவ்விலக்கணம் பகுத்து அறியாதார், மூன்று பாகுபாட்டிற்கும் தமிழ் எழுத்தால் உதாரணம் காட்டினவற்றை நோக்கி நன்னூலைப் புனருத்தி என்ப.

இனித் தொல்காப்பியர்,

'வடசொற் கிளவி' - சொ. 401

என்னும் சூத்திரத்தாலே தற்சமம் என்னும் பாகுபாடு ஒன்றற்கே விதி கூறி, மற்றை இரண்டும் திரிந்து தற்பவமாய் நின்றன-வற்றை,

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' -சொ. 402

என்னும் சூத்திரத்தால் உரைத்தார்.

(உ-ம்) கீர்த்தி, மணி, வாரி, மேரு, வாயு, ஊரு, வேணு இவை தற்சமம். சித்தி, புத்தி, சந்தி, தச இவை வடசிறப்பு எழுத்தே வந்தன. ஆதி, விரோதி இவை பொதுவும் சிறப்பும் கலந்தன. இவற்றை வட எழுத்தாலே எழுதி மூன்று பாகுபாடும் அறிக. வடஎழுத்தாக, தமிழ் எழுத்தாக, வடிவு எழுத்தைக் கொள்ளாது ஒலி எழுத்தே கொள்க. ஆக்கினை, விருத்தம், நிருத்தம், விக்கியானம் என்பன ஆணை, வட்டம், நட்டம், விண்ணணம் எனத் தற்பவமாம். இவற்றைப் பிராகிருதம் என்பாரும் உளர். ஆக்கினபயதி, விக்கினபயதி என்பனவற்றை ஆணவேதி, விண்ணவேதி என்பர். பிறபாடையுள்ளும் காண்க.

'கடிசொல் இல்லை காலத்து படினே' - சொ. 452

என்பதனல், தற்பவம் - தற்சமம் - தற்புருடன் - உற்பலம் எனவும் தகாரத்தை றகாரம் ஆக்கிக் கூறினம். இனி,

'எந்திர ஊர்தி இயற்றுமின் என்றான்' - சீவக. 234

என யகாரம் எகாரம் என்னும் குற்றெழுத்தாயும்,

**'தெய்வ மால்வரைத் திருமுனி'** – *சிலப். 3-1*

**'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி'** – *தொ. சொ. 4*

*என ஐகாரம் எகாரம் என்னும் குற்றெழுத்தாயும்,*

**'கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும்'**

*என்பதில் கோங்கணம் என்னும் நெட்டெழுத்துக் குற்றெழுத்தாயும்,*

**'அமிர்தினும் ஆற்ற இனிதே'** – *குறள்*

**'சோள வளநாடு சோறுஉடைத்து'**

*எனற்பாலனவற்றை,*

**'அமிழ்தினும் ஆற்ற இனிதே'** – *குறள் 64*

**'சோழ வளநாடு சோறுடைத்து'** – *பழம்பாடல்*

*என ரகார ளகாரம் இரண்டும் தமிழில் சிறந்த ழகாரமாயும்,*

**'அற்புதன் நாரா யணன்அரி வாமனன்**
**நிற்பது மேவி இருப்பதுஎன் நெஞ்சகம்**
**நற்புகழ் வேதியர் நான்மறை நின்று அதிர்**
**கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே'** – *திவ். பிர. 3511*

*எனத் தகாரமும் லகாரமும் றகாரமாயும்,*

**'ஈசற்கு யான் வைத்த அன்பு'** – *கோவை. 109*

**'கடிநிலை இன்றே ஆசிரி யற்க'** – *தொல். எழு. 389*

**'அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து'** – *தொ. பாயிரம்*

**'சிவன் தமர்'**

**'திருநா ராயணன்தாள் காலம்பெறச் சிந்தித் துய்ம்மினோ'**
– *திவ். பிர. 3017*

*என அகர ஈறு னகரமாயும் திரிந்து பிராசீனராகிய சான்றோர் செய்யுட்கண் வருதலின், திரியாது என்ற ஐந்தும் தமிழ்ச் சிறப்பு எழுத்துக்களாய்த் திரிதலும் கொள்க. திரமிளம் என்பது தமிழ் எனத் திரிதலும் அது.*



**'பிராசீனர் முன்னோர் ஆதுநிகர் பின்னோர்'**

*இஃது உரைச் சூத்திரம்.*

*நிலம் நீர் தீ வளி விண் – எனவும்,*

*என்று எறி ஒன்று ஒறு கொன்றை கொறி வென்றி வெறி எனவும்,*

*வாழை மழை சோறு கூறை எனவும் தமிழ் இம்மூன்று பாகுபாடும் பெறும் ஆயினும், இவை வடமொழிக்கண் சென்று வழங்கித் திரியாதும் திரிந்தும் பொருள் ஒன்றாகாமையின் தற்பவம் தற்சமம் ஆகா என்க. மணலூர்புரம் என்னும் தமிழ் வியாச பாரதத்தில் சென்றது தேசிகம் அல்லது, தற்சமம் தற்பவம் ஆகாது என்க.* (2)

விளக்கம்

*பிரதிக்கினை – கூறுவதற்கு மேற்கொண்ட செய்தி.*

*முன்னவர், வடமொழிச் செய்தியையும் ஆரியச் சொற்கள் தமிழில் இயல்பாயும் திரிந்தும் வருமாற்றையும் தம்நூலுள் சிறுபான்மையே கூறவும், வடமொழி தமிழ்மொழி எனும் இரு மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்ற கருத்துடைய இவர், ஆரியச் சொற்களைத் தமிழில் இயல்பாயும் திரித்தும் பெரும் பான்மையும் பயன்படுத்தி இந்நூல் செய்துள்ளார். குறியீட்டு வேறுபாடுகளையும் மொழி வேறுபாட்டையும் கொண்டு, இரு மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்பதனை மறத்தல் கூடாது என்பது இவர் கருத்து.*

*தற்சமம் – தனக்குச் சமமாவது; வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் உரிய பொது எழுத்தான் ஆவது.*

*தற்பவம் – தன்னிடமிருந்து திரிந்து தோன்றுவது; வட சிறப்பெழுத்துக்கள் தமிழ்மொழிக்குரிய எழுத்துக்களாகத் திரிந்து அமைவது.*

ரூடி – இடுகுறிப்பெயர்; யோகம் – காரணப்பெயர்; பாயிரம் செய்தார் வேறொருவரெனினும், அதனையும் நூலொடு சேர்த்து, அதில் காணப்படுவனவற்றையும் நூலாசிரியர் கூற்றாகக் கொள்வது உபசார வழக்காம்.

'திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன' – 286

என்பது தொல்காப்பிய உயிர்மயங்கியலில் ஐகார இறுதி என்னும் அதிகாரத்தில் உள்ள நூற்பா.

'நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன் இடை வருதல் ஐய மின்றே' – 247

'திங்கள் முன்வரின் இக்கே சாரியை' – 248

என்ற இரு நூற்பாக்களும் 'முந்துகிளந்தன்ன' என்னும் மாட்டேற்றுக்கு உரிய நூற்பாக்களாம்.

'நாட்பெயர்க் கிளவி மேற்கிளந்தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்றுமெய் கெடுதல் என்மனர் புலவர்' – 331

என்பது மகரஈற்று நூற்பா.

இந்நூற்பாக்களால் தமிழில் திங்களின் பெயர்கள் இகர ஐகார ஈற்றனவாயும், நாளின் பெயர்கள் இகர ஐகார மகர ஈற்றனவாயும் அமைந்திருத்தல் புலனாகிறது.

திங்கட் பெயரும் நாட்பெயரும் சோதிடம் முதலிய பிற கலைகளுக்கும் உரியன; அவை ஆரியத்தினும் தமிழினும் ஏனைய மொழிகளினும் வேறுபாடின்றியே நிகழ்வன; (சூத்திரவிருத்தி) ஆதலின், திங்கட்பெயர்களும் நாட்பெயர்களும் வடமொழிப் பெயர்களைப் பெரும்பாலும் தற்பவமாகக் கொள்ளப்பட்டன,



## திங்கள் பெயர்

| ஆரியச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| சைத்ரம் | — | சித்திரை |
| வைசாகம் | — | வைகாசி |
| ஜேஷ்டம் | — | ஆனி |
| ஆஷாடம் | — | ஆடி |
| ச்ராவணம் | — | ஆவணி |
| பாத்ரபதம் | — | புரட்டாசி |
| ஆஜ்வீஜம் | — | ஐப்பசி |
| கார்த்திகம் | — | கார்த்திகை |
| மார்க்க சீர்ஷம் | — | மார்கழி |
| புஷ்யம் | — | தை |
| மாகம் | — | மாசி |
| பால்குனம் | — | பங்குனி |

## விண்மீன்கள் பெயர்

| | | |
|---|---|---|
| அச்விநீ | — | அசுவினி |
| அபபரணீ | — | பரணி |
| க்ருத்திகா | — | கார்த்திகை |
| ரோகிணீ | — | ரோகினி |
| ம்ருகசிரோ | — | மிருகசீரிடம் |
| ஆருத்ரா | — | திருவாதிரை |
| புனர்வஸு | — | புனர்பூசம் |
| புஷ்யம் | — | பூசம் |
| ஆச்லேஷா | — | ஆயில்யம் |
| மகா | — | மகம் |
| பூர்வபல்குனீ | — | பூரம் |
| உத்தரபல்குனீ | — | உத்தரம் |
| ஹஸ்த | — | அத்தம் |

| ஆரியச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| சித்ரா | — | சித்திரை |
| சுவாதீ | — | சுவாதி |
| விசாகா | — | விசாகம் |
| அநுராதா | — | அனுஷம் |
| ஜ்யேஷ்டா | — | கேட்டை |
| மூலா | — | மூலம் |
| பூர்வாஷாடா | — | பூராடம் |
| உத்ராஷாடா | — | உத்திராடம் |
| ச்ரவணா | — | திருவோணம் |
| ச்ரவிஷ்டா | — | அவிட்டம் |
| சதபிஷங்க | — | சதயம் |
| பூர்வப்ரோஷ்ட பதா | — | பூரட்டாதி |
| உத்ரப்ரோஷ்ட பதா | — | உத்திரட்டாதி |
| ரேவதீ | — | ரேவதி |

இவ்வாறு ஆரியச்சொற்களாகிய திங்கட்பெயர்களும் நாட்பெயர்களும் தற்பவமாகத் திரிந்து தமிழில் வந்துள்ளமை காண்க. இவற்றுள் ஆனி, ஆடி, தை என்பன தற்பவச் சொற்களல்ல என்பது இவர் கருத்து. ஆதலின் ஆனி, ஆடி, தை ஒழிந்த திங்கட்பெயர்களும், நாட்பெயர்களும் தமிழில் தற்பவமாக வந்த ஆரியச் சொற்களே என்றார். இச்செய்திகள் தொல்காப்பியத்தில் நான்கு நூற்பாக்களால் நுவலப்பட்டிருத்தலின் உரையில் " திங்களும் நாளும் என்னும் சூத்திரத்தான் " என்று காணப் படும் தொடர், "திங்களும் நாளும் முதலிய சூத்திரங்களான்" என்றிருத்தல் வேண்டும்.

'அளபெடை புலுதம் ஆயிரு பெயரும்
அளபெடை என்ப அறிந்திசி னோரே'

என்பது பழைய நூற்பா.



முன்னவர் நூல்களுள் வடமொழிக் குறியீடுகள் சில தமிழில் வழங்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு இவர் வடமொழிக் குறியீடுகள் பலவற்றைத் தமிழிற்குக் கொண்டுள்ளார்.

'பொது எழுத்தானும் ......... வடசொல்' - இஃது ஆரியச் சொல் தமிழில் தற்சமமாகவும், தற்பவமாகவும் வரும் செய்தி முழுதையுங் சுட்டுகிறது. 'இடையில் நான்கும்' முதலிய ஐந்து நூற்பாக்களும் தற்பவத்தில் ஏற்படும் திரிபுகளையே விளக்குகின்றன. ஆதலின், இவை கூறியது கூறல் ஆகாமை தெளிக. ஆரியச் சொற்கள் தமிழில் தற்பவமாக வருங்கால், தமிழ்ச் சிறப்பெழுத்துக்களாகிய ற ன ழ எ ஒ என்பனவாகத் திரிதல், இலக்கியம் கண்டு இந்நூலாசிரியரும் இலக்கணக்கொத்து ஆசிரியரும் இயம்பிய செய்திகளாம்.

'பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைந்தும்மொழி பெயர்த்தும்
பொதுஎழுத் துள்ளும் பொதுவாய்த் திரிந்தும்
தமிழ்ச்சிறப் பெழுத்தைந் தானும் திரிந்தும்
மொழிமுதல் இடைகடை எனுமூன் றிடத்தும்
தோன்றல் முதலா விகாரம் தோன்றியும்
வருமே தமிழில் வடமொழி என்க' - இ. கொ. 87

| | | |
|---|---|---|
| பொது எழுத்து | — | மணி |
| சிறப்பெழுத்து | — | ததி |
| ஈரெழுத்து | — | ஆதி |
| மொழிபெயர்த்தல் | — | பிறிதின் இயைபுநீக்கம் (அந்நியயோகவியவச்சேதம்) |
| பொதுவுள்பொது | — | மாலை, நாரி. (மாலா, நாரீ) |
| தமிழ்ச்சிறப்பெழுத்தாகத் திரிதல் | — | அற்புதம், விகற்பம் (அத்புதம், விகல்பம்) - ற் |
| | | சிவன், நாராயணன் (சிவ:, நாராயண:) - ன் |

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME-ORIENT BIBLIOTHÈQUE PONDICHÉRY

தமிழ், அமிழ்தம்
(திரமிளம், அமிர்தம்) – ழ்

தெய்வம், எந்திர ஊர்தி
(தைவம், யந்திர ஊர்தி) – எ

கொங்கணம் (கோங்கணம்) – ஒ

| | | | | |
|---|---|---|---|---|
| தோன்றல் | — | உலகம் – | லோக: | (முதல்) |
| | | தத்துவம் – | தத்வம் | (இடை) |
| | | வாக்கு – | வாக் | (கடை) |
| திரிதல் | — | இடபம் – | ரிஷபம் | (முதல்) |
| | | விடம் – | விஷம் | (இடை) |
| | | இராமன் – | ராம: | (கடை) |
| கெடுதல் | — | பரிசம் – | ஸ்பரிசம் | (முதல்) |
| | | முக்தி – | முக்த்தி | (இடை) |
| | | தநு – | தநுஸ் | (கடை) |

என எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். (இ. கொ. 87) தற்பவத்தின் இருவகை – முழுதும் வடசிறப்பெழுத்தாயினவும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாயினவும். விக்கியானம் என்பதனை விஞ்ஞானம் என்று எழுதுவர் இலக்கணக்கொத்து நூலார். (87)

ஆணை முதலியவற்றைப் பாகதம் என்பார் சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலாயினார். (சொ. 402. சே; ந.)

| | | |
|---|---|---|
| ஆக்கினாபயதி, ஆணவேதி | — | ஆணையிடுகிறான் |
| விக்கினாபயதி விண்ணவேதி | — | விண்ணப்பம் செய்கிறான் |
| ஆக்கினை ஆணை | — | கட்டளை |
| நிருத்தம், நட்டம் | — | கூத்து |
| விருத்தம், வட்டம் | — | வட்டம் |
| விக்கியானம், விண்ணாணம் | — | விஞ்ஞானம் |



விக்கியாபனம் — வேண்டுகோள்

புதிய சொற்களும் காலத்துக்கேற்பத் தோன்றலாம் என்பதற்கு ஒத்து 'கடிசொல் இல்லை' (தொ. சொ. 452) என்பது.

ஈச: ஆசாரிய: சிவ: நாராயண: என அகர ஈற்று ஆரியச்சொற்கள் தமிழில் ஈசன், ஆசிரியன், ஆசான், சிவன், நாராயணன் என னகர ஈற்றுச் சொற்களாயின. நிலம்......... விண் – தமிழ் ஆரியம் இரண்டற்கும் பொது எழுத்தான் எழுதப் பெறலாம். என்று......வெறி – தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தாலேயே எழுதப்படும். வாழை......கூறை – இச்சொற்களின் முதலெழுத்து இருமொழிக்கும் பொதுவும், இறுதி எழுத்துத் தமிழுக்கே சிறப்பும் ஆம்.

தேசியம் – அவ்வந்நாட்டு வழக்கில் பயிலும் சொல். 'மண்டலத்துப் பதினெண் தேசிகச்சொல்' (பி. வி. 18) என்ற நூற்பாவினுள்ளும் காண்க. 2

## பதிகம்

3. பெரும்புங்கவர் புகழ் போதாயனி
சுப்பிரமணியன்,
அரும்பும் குருகையில் கோதில்
குலோத்துங்கன், ஆரிடமாய்
விரும்பும் பொருளைத் தரும்
பிரயோகவிவேகந் தன்னைக்
கரும்பும் கனியும்எனப் பாடினான்
தமிழ் கற்பவர்க்கே.

இது தன்னைப் பிறன்போலும் நாந்தி கூறுகின்றது. குருகையில் அரும்பும் எனக் கூட்டுக.

வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து, உதாரணமும் காட்டினும். தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல, யாமும் உரை எழுதியதல்லது மூலோதாரணமும் காட்டினும். இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினாரும் திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகம் கூறுவதும் காண்க.

பிரதீகம் என்பது பதிகம் என நின்றது.

'பாயிரம் நாந்தி பதிகம் என்ப'

இஃது உரைச்சூத்திரம். (3)

விளக்கம்

'தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே'

என்னும் கொள்கையை உடையார் தமிழ்நூலார். வடநூலுள் மகாகவியாகிய காளிதாசனும் 'ஆபரி தோடாத் தேசகா' என்னும் சுலோகத்துள், 'இந்நூலைக் கற்றோர் கேட்டுக் களிப்புறும் அளவும் இதனை இயற்றிய என் அறிவைக் குற்றமற்றதாக யான் நினைக்கவில்லை' என்னும்.

சான்றோர் புகழும் போதாயனர் என்ற இருடியின் மரபில் வந்தவனும், சுப்பிரமணியன் என்ற இயற்பெயர் உடையவனும், குருகை நகரில் தோன்றித் தான் பிறந்த குடியை உயர்த்தி நிற்பவனும் ஆகியவன், முனிவர் அருளிய சொற்கள் போலக் கற்போர் விரும்பிய பொருளைத் தரும் பிரயோக விவேகம் என்ற நூலைக் கரும்பும் கனியும் போலத் தமிழ் கற்போர் சுவைக்கும் வண்ணம் பாடினான் - என்ற இப்பாடலில் ஆசிரியர், தம்மைப் பிறன்போல வைத்துப் பாடியமைக்குச் சான்றோர் வழக்கத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். வடமொழி காவியாதர்சத்து உதாரணப் பாடல்கள் அவ்வாசிரியரே யாத்தமைபோலத் தமிழ்த் தண்டியலங்கார உதாரணப் பாடல்கள் பெரும்பான்மையும்



அவ்வாசிரியரே யாத்தவை என்பது அறியப்படுகிறது. சம்பந்தரும் சடகோபரும் ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக் காப்பிலும் தம்மைப் பிறர்போல் கூறுவது காணப்படும்.

'நான்முகன் ஆதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்',

'சோராத எப்பொருட்கும் ஆதியாஞ் சோதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்'

முதலிய தொடர்களைக் காண்க.

**திவாகரர் பாடிய பதிகம்**

'தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காம் திவாகரத்துள் - வந்த
தொகுதிஒரு பன்னிரண்டும் சோராமல் நேரே
பகுதி உறமனமே பற்று'

**கார்நாற்பது - சிறப்புப் பாயிரம்**

'முல்லைக் கொடிமகிழ மொய்குழலார் உள்மகிழ
மெல்லப் புனல்பொழியும் மின்எழிற்கார் - தொல்லைநூல்
வல்லார் உளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
சொல்ஆய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து'

**ஏலாதி - சிறப்புப் பாயிரம்**

'இல்லறநூல் ஏற்ற துறவறநூல் ஏயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து - நல்ல
அணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியும்
கணிமேதை செய்தான் கலந்து'

**ஐந்திணை ஐம்பது - சிறப்புப் பாயிரம்**

'பண்புள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்
செந்தமிழ் சேரா தவர்'

**பழமொழி நானூறு - சிறப்புப்பாயிரம்**

*‘பிண்டியின் நீழல் பெருமான் அடிவணங்கி*
*பண்டைப் பழமொழி நானூறும் - கொண்டினிதா*
*முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்*
*இன்துறை வெண்பா இவை’*

**திணைமாலை நூற்றைம்பது - சிறப்புப்பாயிரம்** (*இறுதியில்*)

*‘முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்*
*கனிந்தார் களவியல் கொள்கைக் - கணிந்தார்*
*இணைமாலை ஈடிலா இன்தமிழாய் யாத்த*
*திணைமாலை கைவரத் தேர்ந்து’*

**சிறுபஞ்ச மூலம் - சிறப்புப்பாயிரம்** (*இறுதியில்*)

*‘மல்லிவர்தோள் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்*
*பல்லவர் நோய்நீக்கும் பாங்கினல் - கல்லா*
*மறுபஞ்சம் தீர்மழைக்கை மாக்காரி ஆசான்*
*சிறுபஞ்ச மூலஞ்செய் தான்’*

*இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் சிறப்புப்பாயிரங்களை அவ்வவ்வாசிரியரே யாத்தார் என்பது இவர் கருத்து.* *3*

## முதலெழுத்துக்குக் குறியீடு

4. ஆவி எழுத்து அச்சொடு சுரம் ஆகும்;
அவற்றின் பின்னே
மேவிய மெய்கள் விளம்பும் அல்லோடு
வியஞ்சனம் ஆம்;
தாவி எதிர்த்து மதர்த்து அரிபாய்ந்து
இரு தாழ்குழைதோய்
காவி நெடுங்கண் கதிர்மதி
வாள்நுதல் காரிகையே!

*இது முதலெழுத்திற்குக் குறியீடு கூறுகின்றது.*



**‘குறியே சமிக்கை கூறுங் காலே’**

*இஃது உரைச்சூத்திரம். உயிரெழுத்தெல்லாம் அச்சு எனவும் சுரம் எனவும் பெயர் பெறும். மெய்யெழுத்தெல்லாம் அல் எனவும் வியஞ்சனம் எனவும் பெயர்பெறும் என்றவாறு.*

*அச்சு அல் என்பன பிரத்தியாகாரம் செய்த பெயர். பிரத்தியாகரித்தலாவது ககரம் முதல் னகரம் இறுவாய்ப் பதினெண் எழுத்திற்கும் ஆதியிலே நின்ற ககரத்தையும் அந்தத்திலே நின்ற னகரத்தையும் கூட்டிக் கன எனப் பெயரிட்டாற் போல்வது; ய ர ல வ ழ ள என்னும் ஆறு எழுத்திற்கும் ய ள எனப் பெயரிட்டாற் போல்வது.*

*மெய்யுள் சில எழுத்தை மகாப்பிராணன் என்றும், சில எழுத்தை அர்த்தபிராணன் என்றும், சில எழுத்தை அற்பப் பிராணன் என்றும் கூறுவர்.* (4)

### விளக்கம்

மகேசுவர சூத்திரம் பதினன்கு. அவற்றுள் **அஇஉணு - ருலு - ஏஓ - ஐஔச்** என்ற நான்கும் உயிர்பற்றியன ஆதலின், முதலையும் இறுதி எழுத்தையும் சேர்த்துப் பெயரிடும் முறையான் அவை அச் எனப்பட்டன. எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் என்ற ஒலி உயிருக்கே உண்மையின் (பி. வி. 24 உரை) அவை சுரம் (ஒலி) எனவும் பட்டன. இனி, **ஹயவரட் - லண் - ஞமஙணநம - ஜபஞ் - கடதசு - ஜபகடதசு - கபசடத - சடதவ் - கபய் - ஶஷஸர் - ஹல்** என்ற பத்துள்ளும் முதல் எழுத்தாகிய ‘ஹ’ என்பதும் இறுதி எழுத்தாகிய ‘ல்’ என்பதும் சேர ஹல் என்பது மெய் எழுத்தின் பெயர் ஆயிற்று. உயிரின்றித் தாம் இயங்காவாதலானும், இவையின்றி உயிர்களும் சிறவா ஆதலானும், தாமே தனித்தியங்கும் ஆற்றலற்ற மெய்கள் வியஞ்சனம் எனப்பட்டன.

| | | |
|---|---|---|
| மகாப்பிராணன் | — | ஐவருக்கத்தின் 2-4 ஆம் எழுத்துக்கள், ஶ ஷ ஸ ஹ என்பன. |
| அர்த்தபிராணன் | — | ய ர ல வ ள என்பன. இவை மகாப் பிராணனுக்கும் அற்பப்பிராணனுக்கும் இடைநிகரன. |
| அற்பப்பிராணன் | — | ஐவருக்கத்தின் 1, 3, 5 ஆம் எழுத்துக்கள். |

இப்பகுப்பு எல்லோருக்கும் உடன்பாடன்று. 4

## எழுத்துக்களின் குறியீடும் மயக்கமும்

5. கூரும் இரச்சுவம் தீர்க்கம் புலுதம்
குறில் நெடிலோடு
ஆரும் அளபெடை, வல்லினம்
மெல்லினம் ஆம் பரிசம்,
தேரும் யரலவ ஆம் அந்தத்த
அக்கரம், சீர்த்த சந்தி
சாரும் ஐ ஔ உடன் ஏஓ;
மயக்கங்கள் சையுத்தமே.

இதுவும் அது. குறில் இரச்சுவம் என்றும், நெடில் தீர்க்கம் என்றும், அளபெடை புலுதம் என்றும், வன்மையும் மென்மையும் பரிசாக்கரம் என்றும், ய ர ல வ நான்கும் அந்தத்தாக்கரம் என்றும், ஐ ஔ ஏ ஓ என்னும் நான்கும் சந்தியக்கரம் என்றும், மயக்கம் சையுத்தம் என்றும் பெயரவாம் என்றவாறு. சையோகமும் அது.

வடநூலார் சையோகம் ஒருமொழியினும் புணர்மொழியினும் கொள்வர். அதுபற்றிச் சூத்திரம் செய்தபடி, இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறு கொள்வர். அக்கருத்து அறியாத நச்சினர்க்கினியர் ஒரு மொழியில் கொண்டு, இரு மொழியில் கொள்ளாது உதாரணம் இறந்த என்பர்.



'கூறும்' என்ற இலேசத்தால் மென்மை அநுநாசிகம். இது பற்றி,

**'மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்'** -தொல். எ. 100

என்றார்.

இனி, வடநூலார் குறில் தனியே ஒரு மாத்திரையாய்ப் பிறப்பது ஓர் எழுத்தும், நெடில் தனியே இரண்டு மாத்திரையாய்ப் பிறப்பது ஓர் எழுத்தும் ஆறைற்போலப் புலுதமும் தனியே மூன்று மாத்திரையாய்ப் பிறப்பது ஓர் எழுத்து என்று கூறி, வேதத்துள் சந்தோபங்கம் வாராமல் குறில் நின்ற இடத்தும் நெடில் நின்ற இடத்தும் புலுதம் ஆதேசமாக வருவதல்லது குறிலும் நெடிலும் போலப் பொருள் வேறுபடுக்க வாராது என்றும், உலகவழக்கில் சம்புத்தி சம்போதனத்தில் வரும் என்றும், சுலோகபதமான சம்புத்தியில் குறிலும் நெடிலும் இயல்பாய் நிற்கும் என்றும், சேய்மை விளியிலே தாளஓசை மணிஓசை என்கின்ற அநுகரணத் தொனிபோலும் என்றும் கூறுவர். அவர் குறில் நின்ற இடத்தும் புலுதம் வரும் என்பது பற்றித் தொல்காப்பியர்,

**'ழகர உகரம் நீடுஇடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான'** – தொ. எ. 261

எனச் சூத்திரம் செய்து,

**'பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாவடி'** – குறுந். 180

என உதாரணம் காட்டுவர். அதுவே உபலக்கணமாக நாலடியில்,

**'விராஅஅய்ச் செய்யாமை நன்று'** – நாலடி. 246

**'நெருப்புஅழல் சேர்ந்தக்கால் நெய்போல்வ தூஉம்'** – நாலடி. 124

என்றும்,

திருவள்ளுவர் குறளில்,

**'துப்பாய தூஉம் மழை'** – குறள் 12

**'நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்'** – குறள் 1104

என்றும் குற்றெழுத்து நிற்கும் இடத்தும் சிறுபான்மை அசைநிலையாக அளபெடுத்து வந்தது காண்க. குரீஇ, உடீஇ எனவரும் இறுதிநிலை அளபெடையும் இது.

இனித் தமிழ்நூலார்

'நூரேஒஒஒநூ றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலேக்கும்
மாரேமால் அன்றளந்த மண்' - பழம்பாடல்

'உப்போஒஒ எனஉரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்(கு)
ஒப்போநீர் வேலி உலகு' - பழம்பாடல்

என இசை விளி பண்டமாற்று ஆயினவற்றை இயற்கை அளபெடை என்றும்,

'கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலேமேல் துகில்' - குறள் 1087

'செருஅஅய் வாழிய நெஞ்சு' - குறள் 1200

எனக் காரியம் உள்வழி வரும் அசைநிலே அளபெடையைச் செயற்கை அளபெடை என்றும் கூறுவர்.

இயற்கை என்பது சகசம். செயற்கை என்பது ஆகந்துகம்.

'இயற்கை சகசம் செயற்கைஆ கந்துகம்'

இஃது உரைச் சூத்திரம். இயற்கை அளபெடை செயற்கை அளபெடை என இருவகைப்படும் எனவே, இயற்கையாவது பொருட்குப் பின்தோன்ருது உடன் நிகழும் தன்மை; செயற்கை ஒரு காரணத்தாலே திரியும் தன்மை ஆகலின்,

'குன்றுஇசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்'
- தொ. எ. 41

என்னும் சூத்திரவிதி செயற்கை அளபெடைக்கு அல்லது இயற்கை அளபெடைக்குப் பொருந்தாமை தெற்றென அறிக. இயற்கை அளபெடைக்கு வடநூலார் சொன்ன வண்ணமேயாம்.

'அளபுஇறந்து உயிர்த்தல்' - தொ. எ. 33

என்னும் சூத்திரவிதி சிறுபான்மை பொருந்தின் பொருந்தும் என்க. இரண்டு மாத்திரையாய்ப் பிறந்த நெட்டெழுத்துக்கள் மூன்று மாத்திரையாய் அளபெடுத்தலும் செயற்கையாம் ஆதலின், 'சிறுபான்மை' என்றும்.



'உவாஅப் பதினன்கு' 'இராஅப் பகல்' என்னும் எழுத்துப் பேறுகள்

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்' - எ. 41

காரியம் இல்வழி வந்த புலுதச்சந்தி. வடமொழியினும்,

'அக்கிநீஇஇ இதி'

என வரும்.

இனிச் சந்தி அக்கரமாவது,

'அகர இகரம் ஏகாரம் ஆகும்'

'அகர உகரம் ஓகாரம் ஆகும்'

'இகார உகாரம் என்னும் இவற்ரோடு
அகாரம் ஐஔ ஆகலும் உரித்தே'

இவ்வுரைச் சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரம் என்றும் ஓரெழுத்தாகிய ஏகாக்கரம் என்றும் அறிக.

அம்முறைமை பற்றித் தொல்காப்பியரும்,

'அகர இகரம் ஐகாரம் ஆகும்' - தொல். எ. 54

'அகர உகரம் ஔகாரம் ஆகும்' - தொல். எ. 55

'அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினே மெய்பெறத் தோன்றும்' - தொல். எ. 56

எனச் சந்தியக்கரமாக நேரே கூறினர். அவ்வாறு கொள்ளாது உரைகாரர்,

'ஐஒத்து இசைக்கும்' - ந. 125

'ஔ ஓரன்ன' - ந. 125

என நன்னூலார் மதம்பற்றி,

'ஐகாரம் ஆகும்'

'ஔகாரம் ஆகும்'

'ஐஎன் நெடுஞ்சினே மெய்பெறத் தோன்றும்'

என்புழி 'ஐகாரம் போல வாகும்', 'ஔகாரம் போல வாகும்'

'ஐஎன் நெடுஞ்சினை போல மெய்பெறத்தோன்றும்' என விரித்து, விகாரமாக்கி நலிந்து பொருள்கொண்டு, போலி எழுத்து என்று இடர்ப்படுவர். அவர் போலி எழுத்து என்றால்,

'வைகிற்று எம்அனை வாழிய போதுஎனக்
கையி ருல்அடி தைவரக் கண்மலர்ந்து' – சீவக. 345

என்றும்,

'மெய்அணி பசும்பொன் சுண்ணம் மேதகு நான நீரில்
ஐதுபட்டு ஒழுகி யானை அளிமதம் கலந்து சேருய்'
– சீவக. 117

என்றும்,

'ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' – தொல். எ. 56

என்றும்,

'ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' – ந. 29

என்றும்,

'கையி ருல்சொலக் கண்ணினில் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேம்'
– சீவக. 1004

என்றும்,

'கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி' - சிலப். 13-90-1

என்றும்,

'கௌவைஅங் கடும்புனல் ஒலியும் காப்பவர்
செவ்வன்நூ ருயிரம் சிலைக்கும் பம்பையும்
எவ்வெலாத் திசைதொறும் ஈண்டிக் காரொடும்
பௌவம் நின்று இயம்புவ ஒத்த என்பவே' – சீவக. 42

என்றும்,

'வெவ்வினை வெகுண்டு சார விழுநிதி அமுத மன்னீர்
கௌவிய எஃகின் நின்ற கயக்கம்இல் நிலைமை நோக்கி
ஔவியம் அகன்று பொங்கும் அழல்படு வெகுளி நீக்கி
இவ்வியல் ஒருவற்கு உற்றது இற்றுஎன விளம்பு கின்ருன்'
– சீவக, 394

என்றும்,



'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' – குறள் 169

என்றும் வருவனவற்றுள் ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலுள் கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க.

அதுபற்றி,

'ஆயிரு தொடை' – தொல். பொ. 406

என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலிவகையால் கிளை எழுத்து எனப்படும் என்ருர். இனி, நச்சினர்க்கினியர், எழுத்ததிகாரத்துள், போலி எழுத்துக் கொள்ளற்க என்பர்; கொள்ளா எழுத்திற்கு இலக்கணம் கூறின், அந்நூற்கு 'நின்று பயன் இன்மை' (ந. 12) என்னும் குற்றம் தங்கும் என்க. நன்னூலாரும் போலியைத் தள்ளாது எழுத் திலக்கணம்

'பன்னிருபாற் றதுவே' - 57

என்றலின், போலி எதுகைநிமித்தம் அங்கீகாரம் ஆயிற்று. இளம்பூரணரும் 'போலி எழுத்தைக் கொள்ளற்க' என்று கூருமை அவர் உரையில் காண்க. தொல்காப்பியர் இயற்கை ஆயிரம் என ஓர் எண்ணுக் கொண்டதன்றித் தொள்ளாயிரம் என்பதன்-கண் சந்திநோக்கி நூறு திரிந்த ஆயிரமும் கொண்டாற்போலவும், தாமரை என்பது செம்மொழியும் பிரிமொழியும் ஆனுற்போலவும், இயற்கையாகிய ஓரெழுத்து ஐகார ஔகாரங்கள் கொண்டதன்றி, எதுகை நோக்கி ஈரெழுத்து இயைந்த ஐகார ஔகாரங்களும் கொண்டார் என்க. உயிர்மெய்களை ஒற்றுமை நயம் கருதி ஓரெழுத்தாகவும் வேற்றுமை நயம் கருதி ஈரெழுத்தாகவும் கொண்டாற்போல, ஐகார ஔகாரங்களையும் அவ்வாறு கொண்டார் என்பதும் ஒன்று. போலி எழுத்து என்பார், இலக்கணப்போலி ஒப்பில்போலி போல, எழுத்துப்போலியும்

கைக்கொண்டு எதுகை கொள்வார் என்க. மியா - நுந்தை என்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக்காலத்து நின்றாற்போல, அஇ - அஉ என்பனவும் இக்காலத்துப் பயன்படாமலே நின்றன எனினும் அமையும். (5)

விளக்கம்

வல்லினமும் மெல்லினமும் பரிசாக்கரம் என்பதை விளக்குவார் போல, நேமிநாத உரையாசிரியர், வல்லினம் கல்மேல் விரல் வைத்தாற் போலவும், மெல்லினம் மணல்மேல் விரல் வைத்தாற் போலவும் இருக்கும் என்று குறிப்பிடுகிறார்.

- நே. 2 உரை

சந்தியக்கரம் - தனி எழுத்தின் சேர்க்கையால் அமையும் எழுத்து. நச்சினார்க்கினியர் மயக்கத்தை ஒரு மொழியிலேயே கொண்டு, இருமொழியில் ஏற்படும் மயக்கத்தைப் புணர்ச்சி விதி கொண்டு அறியவேண்டும் என்பர். - தொ. எ. 24-27 நச்.

மெல்லெழுத்தும் வல்லெழுத்திற்குரிய முயற்சியால் பிறக்கு-மேனும் மூக்கின் வளியால் தோன்றலின் ஒலி வேறுபடும் தன்மை,

'மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்' - தொ. எ. 100

என்ற நூற்பாவான் வலியுறும். மெல்லெழுத்தின் பிறப்பிடம் மூக்காதலின் அவை அநுநாசிகம் எனப்பட்டன.

ஆதேசம் - கெடமிகல்; குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் கெட, அவ்விடங்களில் அளபெடை வரும் என்பது. வடமொழியில் அளபெடை பொருள் வேறுபாடு காட்டாது. தமிழில் அளபெடை என்பது தொல்காப்பியனார் கருத்துப்படி இசை நிறைத்தற்கு வரும் குற்றெழுத்தே.



'மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே' - எ. 5

'நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்' - எ. 6

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே'
- தொ. எ. 41

'ஐஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கும்
இகர உகரம் இசைநிறைவு ஆகும்' - தொ. எ. 42

என்ற தொல்காப்பிய நூற்பாக்களைக் காண்க. தமிழில் அளபெடை பொருள் வேறுபாடும் காட்டும். எழு - தன்வினை. எழூஉ - பிறவினை; எழுப்பு என்னும் பொருளது.

'ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையும் காலத் தானும்
அளபெடை நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரு காலையும்
உளவெனப் படுப பொருள்வேறு படுதல்'
- தொ. சொ. 281

என்பதனால், அளபெடை பொருள் வேறுபடுப்பது நூற்பா வாயிலானும் விளக்கப்பட்டது.

சம்புத்தி - ஒருமைவிளி; சம்போதனம் - பன்மை விளி;
சுலோகபதம் - செய்யுட் சொல்.
அநுகரணத்தொனி - ஒலிக்குறிப்பு (போலச்செய்யும் ஒலி)
உபலக்கணம் - மொழிந்தபொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்.

'**விராஅஅய்ச் செய்யாமை நன்று**' - நாலடி 246

என ஈரளபு எடாக்கால் செப்பலோசை பிழைக்குமாறு அறிக. துப்பாய தூஉம்: - தூஉம் - நேர் நேர்; அளபெடை எழுத்துத் தனியே ஓரசையாய் நெட்டெழுத்தோடு ஈரசையாய் ஈரசைச்சீர் ஆயினமை காண்க.

குருவி, உடுத்து என்பன குரீஇ, உடீஇ என இறுதிநிலை அளபெடை ஆயின.

இயற்கை அளபெடை உலக வழக்கில் காணப்படுவது. 'படாஅ முலைமேல்', 'செரூஅஅய் வாழிய' என அளபெடாக்கால் ஓரசைச்சீராய் வெண்பா ஓசை பிழைக்கும் ஆதலின், இசை நிறைத்தலாகிய காரியம் பற்றி இவ்வளபெடைகள் வந்தன.

இயற்கை, செயற்கை என்பனவற்றின் விளக்கம் சேனவரையர் உரையை ஒட்டி எழுதப்பட்டது.

– தொ. சொ. *19, 20*, சே.

'அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்' – தொ. எ. *33*

என்பது இசையில் ஏற்படும் அளபெடை பற்றிய நூற்பா. நன்னூலார்,

'ஆவியும் ஒற்றும் அளபிறந்து உயிர்த்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்' – நன். *101*

என்பர். இரண்டு மாத்திரை உடைய எழுத்துக்கள் உலக வழக்கில் நீண்டு ஒலித்தலும் ஒரு விதத்தில் செயற்கையே ஆதலின், அவற்றை இசை முதலியவற்றில் இயற்கை அளபெடை என்றல் உபசார வழக்காம்.

தொல்காப்பியனார் புணர்ச்சியில் எழுத்துப்பேறளபெடைகளைச் சுட்டுகிறார்.

'உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே' – தொ. எ. *223*

'குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி' – எ. *226*



'குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி – எ. *267*

'ஏ என் இறுதிக்கு எகரம் வருமே' – எ. *277*

'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஒகரம் வருதல் ஆவயி னான' – எ. *292*

என்ற நூற்பாக்கள் எழுத்துப்பேறளபெடை பற்றியன. இவை இசை நிறைக்க வந்தன அல்ல. இவற்றை இவ்வாசிரியர் அளபெடைச்சந்தி என்றார். நன்னூலார் எழுத்துப் பேறளபெடையின் பயனின்மை கருதி அதனைக் கூறாது விடுத்தார்.

அக்கிநீஇஇ இதி — ஏ! அக்நியே என்ற விளி.

வடநூலார் கூறும் இயற்கை அளபெடை – வடநூலாருக்குச் சம்போதனம் சம்புத்தியில் வருவனவே இயற்கை யளபெடை. இதைத் தொல்காப்பியனாரும்,

'உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்,
அளபிறந் தனவே விளிக்குங் காலை,
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான' – சொ. *152*

என்ற விளி மரபு நூற்பாவால் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளபெடையைப் பற்றி இலக்கணக்கொத்துநூலார்,

'இயற்கை யளபெடை செயற்கை யளபெடை
எழுத்துப்பே றளபெடை இசைநூ லளபெடை
ஒற்றுப்பே றளபெடை ஒரோவழிக் கூடின்
ஐந்தென மொழிய அளபெடை; அவைதாம்,
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
ஒற்றெழுத் தளபெடை எனஒரு மூன்றாய்
மொழிமுதல் இடைகடை மூன்றிலும் வருமே' – *90*

என்று நூற்பா யாத்து, விளி – பண்டமாற்று – புலம்பல் – முறையிடுதல் ஆதியிடத்துச் சொற்குப் பின் தோன்றாது கூடப் பிறப்பது இயற்கை யளபெடை என இயற்கையளபெடையை விளக்கியுள்ளார்.

இந்நூலாசிரியர் குறில் நெடில் அளபெடை என்பன பற்றிக் கூறிய கருத்தினையே சிவஞான முனிவரும் தம் முதற்சூத்திரவிருத்தியில் "அ - என்னும் ஓரெழுத்தே ஒரு மாத்திரையால் உச்சரிக்குங்கால் குற்றெழுத்து என்றும், இரண்டு மாத்திரையாய் உச்சரிக்குங்கால் நெட்டெழுத்து என்றும், மூன்று மாத்திரையாய் உச்சரிக்குங்கால் அளபெடை எழுத்து என்றும் மூவகைப்படும் என்றும், அம்மூன்றும் எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் ஓசை வேறுபாட்டால் ஒன்று மூன்றாய் ஒன்பது வகைப்படும் என்றும், அவ்வொன்பதும் மூக்கின்வளியொடு சார்த்தியும் சார்த்தாதும் உச்சரிக்குமாற்றால் ஒவ்வொன்று இவ்விருவகைத்தாய்ப் பதினெட்டாம் என்றும் கூறுப" - என விளக்கியுள்ளார்.

சந்தியக்கரங்கள் தனி எழுத்து இரண்டினால் ஆகியவை என்கிறார். வய்கிற்று, கய்யினால்; மெய்யணி, அய்துபட்டு; அய்என், மெய்பெற; கய்யினால், மொய்கொள்; கய்யறு, பொய்தீர்; கவ்வையம், செவ்வன், எவ்வெலா, பவ்வம்; வெவ்வினை, கவ்விய, அவ்வியம், இவ்வியல்; அவ்விய, செவ்வியான் - என ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொண்டால்தான் எதுகை அமையும்.

நன்னூலார்,

'அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐஒத்து இசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔஓ ரன்ன' - நன். 135

என்ற நூற்பாவில் ஐகார ஔகாரப் போலிகளைக் குறிப்பிட்டு அவற்றையும் 'பன்னிரு பாற்றதுவே' என்று எழுத்திலக்கணத்தில் தழுவிக்கொண்டது, செய்யுளில் எதுகையின் பொருட்டாகவே என்க.

இயற்கையாகிய ஆயிரம் இருக்கவும் தொள்ளாயிரம் என நூறு திரிந்த ஆயிரம் கொள்ளப்பட்டது போலவும், தாமரை



என்பது ஒரு சொல்லும் தாம் + மரை என இரு சொல்லுமாகக் கொள்ளப்பட்டது போலவும், உயிர்மெய் ஓரெழுத்தாகவும் ஈரெழுத்தாகவும் கொள்ளப்படுமாறு போலவும் ஐகார ஔகாரங்கள் ஓரெழுத்தாகவும் ஈரெழுத்தாகவும் கொள்ளப் பட்டன.

'உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா' - தொ. எ. 60

என்ற நூற்பாவில் உயிர்மெய் ஓரெழுத்தாம்.

'சாவ என்னும் செயஎன் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே' - எ. 209

என்ற இடத்து, இறுதியாகிய உயிரும் அதனை அடுத்த வகரமும் என, உயிர்மெய் ஈரெழுத்தாகக் கொள்ளப்பட்டது.

நுந்தை என்பது இக்காலத்து நகரம் கெட்டு உந்தை என்றே வழங்கப்படுகிறது. மியா என்பது வழக்கு விழுந்து விட்டது. அஇ, அஉ என்பனவும் வழக்கிறந்தன என்பர் இவ்வாசிரியர்.

'போலி எழுத்தைப் போற்றுதல் கடனே' - இ. கொ. 91

என்ற நூற்பா உரையுள், இலக்கணக்கொத்து நூலார், இந் நூலாரைப் போலவே, போலி எழுத்து எதுகை மோனைகளின் பொருட்டுக் கொள்ளப்படல் வேண்டும் என்பதனை விளக்கி, "வடநூலார் இவ்விலக்கணத்தைத் தள்ளாது சமானாக்கரம் எனப் பெயரிட்டு இவ்விரண்டனையும் தழுவினார். அதுபற்றித் தமிழ் நூலார் இணை எழுத்து என்று மொழிபெயர்க்காது, போலி எழுத்து என்று மொழிபெயர்த்ததனால் போலிச்சரக்கு - போலி இலக்கணம் - போலியுரை என்னும் சொற்களைப் போல இதனையும் கருதி, முன்னும் பின்னும் பாராது தள்ளினார்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அஇ - எ; அஉ - ஒ; இவை நரமடங்கல் போல்வன; இவற்றுள் அகரக்கூறு குறைவு இகரக்கூறும் மிகுதியும் என்க. (சூ-வி)

அஇ, அய் - ஐ; அஉ, அவ் - ஔ; என்று இவ்வாசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களின் நேரிய உரையைப் பின்பற்றி எழுதி விளக்கம் தந்துள்ளார். சிவஞானமுனிவர் 'அகர இகரம்'

முதலிய நான்கு நூற்பாக்களுக்கும் தாம் விரும்பியவாறு பொருள் கொண்டு, அய்இ - ஐ; அவ்உ - ஔ என்று குறிப்பிட்டுத் தம் கருத்திற்கு 'அம்முன் இகரம் யகரம்' என்ற நன்னூல் நூற்பா-வினையும் நலிந்து பொருள் செய்துள்ளார். இச்செய்திகள் நன்னூல் விருத்தியிலும் சூத்திர விருத்தியிலும் காணப்படும்.

## வேற்றுமை உருபுகளும் சொல்லுருபுகளும்

6. கூறிய ஐ-இரண்டு; ஆன்-ஒடு மூன்று;
குவ்வோடு பொருட்டு
ஏறிய நான்கு; மற்று ஏழொடுகூடி
இயைந்த நின்றேடு
ஆறிய இன் ஐந்து; அது-கு-உடைய-
அ-ஆறு; இல்-கண்ஏழ்;
தேறிய சத்தம்; இவற்றுள்ளும்
அத்தம் சிலஉளவே.

இது விபத்தி என்னும் வேற்றுமையும் விபத்தி அர்த்தம் என்னும் வேற்றுமைப் பொருளும் கூறுகின்றது. துதியை திருதியை என்றாற்போலத் தொல்காப்பியரும்,

'இரண்டா குவதே' – சொ. 71
'மூன்ரு குவதே' – 73
'நான்கா குவதே' – 75

என மொழி பெயர்த்துக் கூறுவர். துதியை ஆகிய ஐ-இரண்டாம் வேற்றுமையாம். திருதியை ஆகிய ஆன், ஒடு – மூன்றாம் வேற்றுமையாம். சதுர்த்தி ஆகிய கு – நான்காம் வேற்றுமையாம்; சதுர்த்தி அர்த்தமாகிய பொருட்டு நான்காம் வேற்றுமைப் பொருளாம். பஞ்சமி ஆகிய இன் – ஐந்தாம் வேற்றுமையாம். பஞ்சமி அர்த்தமாகிய மேல்நின்று என்பது ஐந்தாம் வேற்றுமைப் பொருளாம். 'மற்று' என்ற மிகையானே, 'மேல்நின்று' என இயைந்து வருதலுமன்றித் தனியே 'நின்று' எனவும் வரும்.



சட்டியாகிய அது, அ – என்பன ஒருமைக்கும் பன்மைக்கும் ஆறாம் வேற்றுமையாம். சட்டி அர்த்தமாகிய கு, உடைய – என்பன ஆறாம் வேற்றுமைப் பொருளாம். சத்தமியாகிய இல் – ஏழாம் வேற்றுமையாம். சத்தமியும் சத்தமி அர்த்தமும் ஆகிய 'கண்' ஏழாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமைப் பொருளும் ஆம். கால், புறம், அகம் முதலாயின சத்தமி அர்த்தம் என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளும், ஏழாம் வேற்றுமை ஏற்ற சொல்லின் ஏகதேசமும் ஆம்.

இதனுள் கூறுதன உளி – மாறு என்னும் இடைச்சொற்களும் கொண்டு என்னும் எச்சமும், திருதியை அர்த்தமாகிய ஆன் என்னும் வேற்றுமைப்பொருளாம். ஆசாரிய தண்டிகள் உவம உருபுகளைச் 'சார்த்தி' என்றும், ஒப்பில் வழியால் பொருள் செய்வனவற்றை 'ஆர்த்தி' என்றும் கூறுவர். அவ்வாறு சேனவரையர் முதலாயினரும் பொருள் என்றும் பொருட்டு என்றும் கூறுவர்.

(உ-ம்) நிலத்தைக் கடந்தான் என்றும்,

தச்சனல் இயற்றப்பட்டது மாடம் – வேலான் எறிந்தான் – கொடியொடு துவக்குண்டான் – ஊசியொடு குயின்ற தூசு என்றும், இரப்பானுக்குச் சோறு இட்டான்.

'நகுதல் பொருட்டு அன்று நட்டல்' – கு. 784

என்றும்,

கள்ளரின் அஞ்சும்,

'போதுஆர் அமளியின் மேல்நின்றும் புரண்டு இங்ஙன்'
– திருவாசகம் 155

'சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவண் நின்றும் வருதும்' – சிறுபாண். 142-3

என்றும், சாத்தனது கை – சம்பந்தன செந்தமிழ் – நம்பிக்கு மகன் –

'தம்முடைய தண்ணளி' - சிலப். 7-32

என்னுடைய தோழி - என்றும், ஊரிலே இருந்தான் - என்றும் வரும்.

வடமொழியுள் பரிமௌலி, அநுகரி, அதிகரகம் என்பன சத்தமி அர்த்தம் ஆனற்போல, உள்ளூர் (கு. 216) கீழ்நீர் (முருகு. 29) மீகண் - என மாறி நின்றும், ஊர்க்கண் இருந்தான்,

'ஊர்க்கால் நிவந்த பொதும்பர்' - கலி. 56

'ஊர்ப்புறத்து இருந்தான்' என மாறி நில்லாதும் முறையே வருவது காண்க.

'இடைக்கண் முரிந்தார்' - கு. 473

'கடைக்கால்'

'தலைக்கண்ண தாகி'

'அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்'
- தொல். சொ. 56

என்பனவற்றுள் இடை - கடை - தலை - மருங்கு என்பன ஓர் இடத்தின் ஏகதேசம் ஆகியும், கண் - கால் - இல் என்பன உருபு ஆகியும், மாறி இரட்டித்தும் வருதலின், முன்நின்றனவற்றை ஏகதேசமான இடம் ஆக்கியும் பின் நின்றனவற்றை உருபு ஆக்கியும் கூறுவர். இரட்டித்து வாரா இடத்து இல் என்னும் உருபு 'லுக்கு' ஆயிற்று என்பர் வடநூலார். கண் - கால் - புறம் - அகம் முதலாயின அவ்வியயம் என்னும் உபசர்க்கம் ஆயினும், அவை ஓரிடத்தில் ஏகதேசமாகவும் பொருள்படும் என்பது பற்றி நன்னூலாரும்,

'இடப்பொருள் உருபே' - 302

என விதந்து ஓதினர். உருபுகள் பிறிது ஓர் உருபு மாத்திரையாய் நிற்பனவற்றையும் 'வேற்றுமைப் பொருட்டு' என்றும், பொருள் என்றும் சேனாவரையர் முதலாயினரும் உரைப்பர்.



'இயல்புளிக் கோலோச்சும்' - கு. 545

'மரபுளி வழாஅ' - முருகு. 95

'இதன் மாறு என்னும்'

'சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே' - நற். 40-12

'விழிந்தகண் வேல்கொண்டு எறிய' - கு. 775

என்பனவும் ஆன் என்னும் மூன்றும் வேற்றுமைப் பொருள் ஆயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர்

'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' - தொ. 250

என்பர்; அது சேனாவரையர் உரையானும் காண்க.

இனிச் சகார்த்தமாய் வந்த திருதியைச் சகார்த்தத்திருதியை என்றும், சகார்த்தம் என்றும், தாதர்த்தியமாய் வந்த சதுர்த்தியைத் தாதர்த்தியே சதுர்த்தி என்றும், தாதர்த்தியம் என்றும், தும் என்பதின் அர்த்தமாய் வந்த சதுர்த்தியைத் துமர்த்தம் என்னும், சத்தமி அர்த்தமாய் வந்த கண் கால்-முதலிய உபசர்க்கத்தைச் சத்தமி அர்த்தம் என்றும், துமுன் என்பதின் அர்த்தமாய் வந்த துவா என்பதைத் துமுனர்த்தம் என்றும், ணிச் என்பதின் அர்த்தமாய் வந்த சொல்லை ணிச் அர்த்தம் என்றும், தத்திதார்த்தமாய் வந்த துவிகுசமாசனைத் தத்திதார்த்தம் என்றும், சுவார்த்தமாய் வந்த பிரத்தியயத்தைச் சுவர்த்தப் பிரத்தியயம் என்றும், அதுவே பிரகிருதி அர்த்தம் என்றும் இன்னும் பல கூறுவர். இனிச் சகார்த்த பதத்தை உத்தரத்திலே உடைய திருதியையைச் சகார்த்தத்திருதியை என்றும், ஒன்றன் நிமித்தத்தைத் தாதர்த்தியம் என்றும் கூறுவாரும் உளர். அவையெல்லாம் மேல் ஆண்டாண்டுக் காண்க. (6)

## விளக்கம்

விபத்தி அர்த்தம் - தமிழில் வழங்கப்படும் சொல்லுருபுகள்;

ஏழொடு கூடி இயைந்த நின்று - ஏழாம் வேற்றுமை உருபின் பொருள்பட வரும் 'மேல்' என்ற சொல்லோடு சேர்ந்து 'மேல்-நின்று' எனவும், அச்சொல்லோடு கூடாது தனித்து 'நின்று' எனவும் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபாக வரும்.

ஆறும் வேற்றுமை உருபின் பொருளில் கு என்பது வரும் என்பது இவ்வாசிரியர் கருத்து. தொல்காப்பியனாரும்,

'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே' – தொ. சொ. 94

என உயர்திணையில் முறைப் பெயரிடத்து நம்பிக்கு மகன் என வருமாற்றைக் குறிப்பிட்டுள்ளார். கண் ஏழாம் வேற்றுமை உருபாயும் உருபின் பொருளாயும் வரும் என்பதனை 'ஏழாகுவதே' 'கண்கால் புறம்அகம்' என்ற நூற்பாக்களின் உரையில் சேனவரையரும் குறிப்பிட்டுள்ளார்,

உவம உருபுகள் – போல, ஒப்ப என்பன.

ஒப்பில் வழியால் பொருள் செய்குந – உவமப் பொருளில் வரும் ஏனைய சொற்களாகிய அன்ன, ஆங்க, மான, விறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்க, எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ, கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப, மறுப்ப, காய்ப்ப, நேர, வியப்ப, நளிய, நந்த, ஆர, அமர, ஏர, ஏர்ப்ப, செத்து, அற்று, கெழுவ, கொண்ட முதலியன.

இச்செய்தியை 'அவைதாம், புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதநவும்' (250) என்ற நூற்பா உரையுள் சேனவரையரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளனர். அதே நூற்பாவில் 'வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்' என்ற தொடருக்கு, வேற்றுமை உருபாகுநவும் என உருபுகளையும், வேற்றுமைப் பொருள்வயின் ஆகுநவும் என உருபின் பொருளில் வரும் பிற சொற்களையும் சேனவரையர் முதலாயினர் கொண்டுள்ளனர்.

வேலான் எறிந்தான் – ஆன் கருவிப் பொருளில் வந்தது.

கொடியொடு துவக்குண்டான் – ஒடு கருவிப் [பொருளில் வந்தது.



ஊசியொடு குயின்ற தூசு – என்பதும் கருவிப் பொருட்டு.

கள்ளரின் அஞ்சும் – ஐந்தாம் வேற்றுமை [ஏதுப்பொருளில் வந்தது.

சாத்தனது கை – ஆறும் வேற்றுமைத் தற்கிழமை.

சம்பந்தன செந்தமிழ் – ஆறும் வேற்றுமைச் [செய்யுட்கிழமையாகிய பிறிதின்கிழமை.

நம்பிக்கு மகன் – ஆறும் வேற்றுமை முறைப்பொருளில் [வந்த பிறிதின்கிழமை.

தம்முடைய தண்ணளி – ஆறும் வேற்றுமைத் தற்கிழமை.

என்னுடைய தோழி – ஆறும் வேற்றுமைப் பிறிதின்கிழமை.

பரிமௌலி – தலையைச்சுற்றி;

அநுகரி – யானைக்கு அருகே;

அதிகரகம் – கும்பத்தில்;

என்ற பொருளுடைய இவற்றில் பரி, அநு, அதி என்பன பெயருக்குப் பின் வாராது முன் வந்துள்ளமை காண்க.

உள்ளூர் முதலிய எடுத்துக்காட்டுக்களில் உருபுகள் பெயர்க்கு முன் வந்துள்ளன.

இடைக்கண், கடைக்கால், தலைக்கண், அஃறிணை மருங்கில் என்பனவற்றில், இடை – கடை – தலை – மருங்கு என்பன ஓர் இடத்தின் பகுதியை உணர்த்தும் பெயராகும். இடைக்கண் என ஏழன் உருபுகள் இரண்டு வரும் இடத்து, முதலது பெயர்; அடுத்தது உருபு. 'அஃறிணை மருங்கு கிளந்தாங் கியலும்' என வரும் இடத்து ஏழன் உருபாகிய கண் மறைந்துள்ளது என்பர் வடநூலார்.

கண் கால் முதலியன பெயர்ப் பின் வரும் இடைச் சொல்லாயினும் அவை பெயர்த்தன்மைப் பட்டவழி ஒரு பொருளின் கூற்றினை உணர்த்தும் என்பதனால் 'இடப்பொருள் உருபே' இடப்பொருளில் உருபாகவும் வரும் என்பது.

'அதற்பொருட்டாகலின்' என உருபின் பொருள்பட வரும் பிறமொழி (தொ. சொ. 82 சே.), வேற்றுமைப் பொருளவாய் வருவன பிறசொல்லும் உள. (தொ. சொ. 250 சே.) எனச் சேனவரையர் சொல்லுருபுகளைப் பொருட்டு எனவும் பொருள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உளி, மாறு, கொண்டு என்பனவும் ஆன் என்ற உருபின் பொருள்பட வருதற்கு எடுத்துக்காட்டுக்கள் தரப் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| சகார்த்தத்திருதியை | — | உடன் நிகழ்ச்சிப் பொருளில் வரும் மூன்றுவது. |
| தாதர்த்தியே சதுர்த்தி | — | பொருட்டு என்ற பொருளில் வரும் நான்காவது. |
| துமர்த்தம் | — | செயற்கு என்ற வினையெச்சப் பொருளில் வரும் நான்காவது. |
| சத்தமி அர்த்தம் | — | ஏழாம் வேற்றுமைச் சொல் லுருபுகள். |
| துவா | — | செய்து என்ற வினையெச்ச வாய்பாடு. |
| துமுந் | — | செய என்ற வினையெச்ச வாய்பாடு. |
| துவா துமுனர்த்தமானது | — | செய்து செய என் பொருளில் வருவது. |
| ணிச் அந்தம் | — | பிறவினை விகுதி பெற்ற வினைச்சொல். |
| தத்திதார்த்தம் | — | விகுதி பெற்ற பெயர். |
| துவிகு சமாசன் | — | உம்மைத்தொகை. |
| சுவார்த்தப் பிரத்தியயம் | — | பகுதிப்பொருள் விகுதி. |
| பிரகிருதி அர்த்தம் | — | விகுதி பெறுவதன்முன் பகுதிக்கு உரிய இயற்கைப் பொருள். |



| | | |
|---|---|---|
| சகார்தத்திருதியை | — | ஒடு என்ற உடன்நிகழ்ச்சி பற்றிய மூன்றன் உருபு ஏற்ற சொல். |
| தாதர்த்தியம் | — | அதுவாகு கிளவி, அதற்பொருட் டாதல் என்ற பொருளில் நான் கன் உருபை ஏற்று வரும் சொற்கள். |

தாதர்த்தியே சதுர்த்தியாவது கொள்வோனைவிட்டு ஆதிகாரண காரியம், நிமித்த காரணகாரியம் என்னும் இரண்டன் பின்னரும் வரும் குகர உருபாம். (உ-ம்) குண்டலத்துக்குப் பொன் - ஆதிகாரணகாரியம்; கூழிற்குக் குற்றேவல் - நிமித்த காரண காரியம். இவற்றைத் தொல்காப்பியர் முறையே 'அதுவாகுகிளவி' 'அதற்பொருட்டாதல்' என்பர். இவற்றை விரிக்குங்கால் பொருட்டு என்னும் நிமித்தத்தை விரிக்க. (பி. வி. 16 உரை) 6

## வடமொழியில் வேற்றுமை

7. பன்னும் பகாப்பதப் பேரே
 பிராதிபதிகம்; அது
துன்னும் குறிபெற்று ஒருமை
 இருமை தொலைவுஇல் பன்மை
என்னும் பிரதமை சேர்ந்து எழுவாய்
 எனல்ஆம்; இவைபோய்
மன்னும் பிறஉருபு ஆறெடு;
 அவ்வாறும் வடமொழிக்கே;

குறி – லிங்கம்; 'துன்னும் குறி' பொருளை நீங்காத குணம் என்னும் சாத்திரலிங்கம், உபசாரத்தால் அச்சொல் மேல்நின்றது.

இது,

'பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்' – 274

என்னும் நன்னூல் சூத்திரம் வடமொழிப் பாகுபாட்டின் இலக்கணம் கூறினற்போல, வடமொழி அகண்ட பதத்திற்குப்

பெயரும், மேல் பிரதமாவிபத்தி என்னும் முதல் வேற்றுமை-உருபு முதலிய உருபு பெறுமாறும் கூறுகின்றது. பெயர்ப் பகாப் பதம் பிராதிபதிகமாம். அது குறி பெற்று, ஏகவசனமும் துவி வசனமும் வெகுவசனமும் ஆகிய பிரதமா விபத்தியோடு சேர்ந்து கருத்தா என்னும் எழுவாயாம். இம் மூன்று வசனமும் போக, ஒன்று மூன்றாகிய ஐமுதலிய விபத்திகள் ஆறோடும் பொருந்தும் (எ-று),

> ' அருத்தவத் தாதுரப் பிரத்திய மாகித்
> திருத்தக நிற்பது பிராதி பதிகம் '

இஃது உரைச் சூத்திரம். மன்னும் என்பது வினைமுற்று.

உ-ம்: இறை - உமை - தையல் - கோ - வேள் - பெண்டு - நாய் - நரி - நிலம் - நீர் என்னும் பெயர்ப் பகாப்பதங்களைப் பிராதி பதிகம் என்றும், அவை பிராதிபதிகம் ஆவது அன்றி முதல் வேற்றுமை உருபு பெற்றன அல்ல என்றும், அவை எழுவாய் ஆகா என்றும், பின்னர் அன் அர் ஆள் ஆர் கள் என்னும் பிரதமாவிபத்தி ஆகிய முதல் வேற்றுமை உருபோடு புணர்ந்து இறைவன், இறைவர், உமையாள், தையலாள், தையலார் என நிற்கும் என்றும், இறை கடியன் (கு. 564) இறை காக்கும் (கு. 547) உமை அமர்ந்து விளங்கும் (முருகு. 153) தையல் வரும் என அன் ஈறும் ஆள் ஈறும் பெறாது நின்றவற்றை, அன் ஈறு ஆள் ஈறு என்னும் சுப்பிரத்தியயம் முதலாயின வந்து லோபம் ஆயின என்றும் கூறுவர்; அன்றியும், கோ - வேள் - பெண்டு என்னும் உயர்திணை இயற்பெயரும், நாய் - நரி முதலிய அஃறிணை இயற் பெயரும், அவன் அவர் அவள் அது அவை என்பனபோல ஒருமை ஈறும் பன்மை ஈறும் காட்டாது நின்று பின் கள் ஈறு பெற்றுக் கோக்கள் - வேள்கள் - பெண்டுகள் - நாய்கள் - நரிகள் என வெகு வசனம் ஆனாற்போல என்று கூறுவர்.

இவ்வாறு ஒருமைக்கும் பன்மைக்கும் அன்றி இருமைக்கும் வேறு விபத்தி வந்து பிரதமா விபத்திஆம் என்றும், இம்மூன்று



விபத்தியும் போக இறை என நிறுத்தி, வனை வரை - வனோடு வரோடு - வற்கு வர்க்கு - வனின் வரின் - வனது வரது - வன்கண் வர்கண் என வருவித்து, இறைவனை இறைவரை - இறைவனோடு இறைவரோடு - இறைவற்கு இறைவர்க்கு - இறைவனின் இறைவரின் - இறைவனது இறைவரது - இறைவன்கண் இறைவர்கண் என நின்றாற்போல, ஐ முதலிய விபத்திகள் ஆறும் ஒன்று மூன்றாகி அவ்வாறு புணர்ந்து சகண்ட பதம் இருபத்தொன்றும் என்றும் கூறுவர். ஒருமை பன்மை என்னாமல் இருமை என வகுக்குமாறு என்னோ எனின், பன்மையுள் சில பல என்னும் சுருக்கப்பெருக்கம் பற்றிய வழக்குப் போல என்க. இருமைக்கு உதாரணம் வடமொழிக்கு அல்லது தமிழ்மொழிக்கு இல்லை என்க. வருமொழிப்பொருளை ஒருமை பன்மை ஆக்கவேண்டி அது - அ என ஆறன் உருபு இரண்டாய் வந்தாற்போல, வடநூலார் நிலைமொழிப்பொருளை ஒருமை இருமை பன்மை ஆக்கவேண்டி எழுவாய் விபத்தி முதல் ஏழு விபத்தியும் ஒன்று மூன்றாய் இருபத்தொன்றும் என்பர். இனி, ஏகம் என்னும் பதத்தில் ஒருமை ஈறாய் வரும் ஏழ் உருபும் அன்றி, இருமை பன்மை ஈறாய் வரும் பதினான்கு உருபும் வடமொழிக்கும் இல்லை. பாணினி பிராதிபதிகத்தையும் தாது நிட்பன்னம் என்றாரால் எனின், எழுத்து மாறாட்டம் என்னும் அக்கரப்பிரஞ்சம் வாராமை பற்றி அவ்வாறு உரைத்தார் என்பர் பாடியகாரர். இனித் தொல்காப்பியரும் தமிழில்,

**' எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே '** - சொ. 65

என்றாராயினும், வடநூலில் எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று அறிதற்கு, நும் என்னும் ஒரு பெயரை மாத்திரம் எழுவாய் வேற்றுமை ஆக்காது பிராதிபதிகமாக்கிப் பின்னர் நும்மை ...... நுங்கண் என இரண்டு முதல் ஏழ் இறுதியும் வேறுபடுத்து வேற்றுமை ஆக்கினாற் போல,

**' அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை '** - தொல். எ. 326

என்னும் சூத்திரவிதி கொண்டு நீயிர் என வேறுபடுத்து, எழுவாய் வேற்றுமை என்னும் பிரதமாவிபத்தி ஆக்குவர். இவ்வாறு

நின் – தன் – தம் – என் – எம் – நம் என்பனவற்றையும் பிராதிபதிகம் ஆக்கி, பின் நீ – தான் – தாம் – யான் – யாம் – நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய் வேற்றுமை ஆக்காமையானும்,

**'எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து'** – தொ. சொ. 174

என்றும்

**'நீயிர் நீஎன வரூஉம் கிளவி'** – தொ. சொ. 188

என்றும் பெயரியலுள் பெயர்ப்பிராதிபதிகமாகச் சூத்திரம் செய்தலானும்,

**'அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை'** – எ. 326

என்னும் சூத்திரத்தை வடமொழிக்கு எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று தமிழ்நூலார் அறிதற்கே செய்தார் என்க. நிலைமொழி விகாரமொழி எட்டாம் வேற்றுமையானற் போல, நும் என்னும் நிலைமொழி விகாரம் முதல்வேற்றுமையாம் என்க. மேல்வரும் சமத்தபதம், தத்திதன், கிருதந்தம், பாவபதம் என நான்கும் பிராதிபதிகம் எனப் பெயர்பெற்று, வேற்றுமை ஏழும் ஏற்றுச் சுபந்தம் என நிற்கும் என்க. (7)

### விளக்கம்

இந்நூற்பா வடமொழிக்கு முதல் வேற்றுமை அமையுமாறு கூறுகின்றது. பெயர்ப் பகாப்பதமாகிய பிராதிபதிகம் பால் காட்டிப் பின் ஒருமை இருமை பன்மை விகுதி சேர்ந்து எழுவாய் ஆகும் என்பர் வடநூலார். குணமாவது பொருட்குப் பின் தோன்ருது உடன் தோன்றும் பண்பு ஆதலின், அது துன்னும் குறி எனப்பட்டது. இதனை வடநூலார் சாத்திரலிங்கம் என்ப. குணம் – குணம் பெற்ற சொல்லைக் குறிப்பிடுவது. 'பொது எழுத்தானும்' என்னும் நன்னூல் நூற்பா வடமொழிச் சொல் எல்லாவற்றிற்கும் இலக்கணம் கூறுகிறது. அகண்டபதம் – பகுதி விகுதிகளாகப் பிரிக்கப்படாத பகாப்பதம்.

முதல் வேற்றுமை முதல் ஏழு வேற்றுமைகளும், ஒருமை – இருமை – பன்மை எனப் பகுக்கப்பட்டு 21 வகையவாகும்.



பொருளுடையதும், வினைமுதல்நிலை ஆகாததும், விகுதி இடைநிலை உருபுகளாகிய பிரத்தியயம் ஆகாததும் ஆகிய பெயர்ப் பகாபதமே பிராதிபதிகமாம் என்பது.

வடநூலார் 'இறைகடியன்' என்புழி, இறை என்பது தனித்துநின்ற நிலையில் எழுவாய் வேற்றுமை ஆகாது ஆதலின், அன் என்ற எழுவாய் உருபு புணர்ந்து கெட்டது எனக் கோடல் வேண்டும் என்பர். கோ வேள் நாய் நரி என்பன ஒருமையீறு காட்டாது வந்தன என்பர். அவன் அவள் முதலியன ஒருமை ஈறு காட்டும்.

கோ முதலியன கள் ஈறு பெற்றுப் பன்மை காட்டும். வடமொழியில் ஒருமை உருபு வேறு; இருமை உருபு வேறு; பன்மை உருபு வேறு; இவற்றை ஏழு வேற்றுமையோடும் முரண, வேற்றுமை உருபுகள் 21 ஆகும். சகண்டபதம் – பகுபதம்; ஏகம் என்ற ஒருமையை உணர்த்தும் சொல் ஏழு வேற்றுமைகளுக்கும் உரிய ஏழு ஒருமை உருபுகளையே ஏற்கும். இவ்வாறே இரண்டு, மூன்று முதலியவற்றுக்கும் முறையே ஒருமை பன்மை உருபுகளும், ஒருமை இருமையுருபுகளும் வாராமை கொள்க.

தாது நிட்பன்னம் — தாது என்ற வினைப்பகுதியிலிருந்து உண்டானது. தொல்காப்பியனர் நும் என்பதனை இயற்கைச் சொல்லாக நிறுத்தி அதனை நீயிர் என எழுவாய் வேற்றுமையாக்கினற்போல ஏனை இடப்பெயர்களிடத்து அவ்வாறு குறிப்பிடாமையானும், நீயிர் என்பதனையே பெயர்ப்பகாபதமாக நூற்பாக்களில் எடுத்து ஆளுதலானும், நும் என்பதனை அடிப்படைச் சொல்லாகக் கொண்டு நீயிர் என்பதனை எழுவாய் வேற்றுமையாக்கியமை வடமொழி மரபைத் தமிழ் நூலார் அறிதற்கே செய்யப்பட்டதாகும்.

எழுவாய்வேற்றுமை ஈற்றில் ஓரெழுத்து மிகுதலும் ஈறு திரிதலும், ஈறுகெடுதலும் ஈற்றயல் மிகுதலும் போல்வனவாகிய

விகாரமொழிகள் எட்டாம் வேற்றுமை ஆயின; அதுபோல, நும் என்னும் நிலை மொழியின் விகாரமாகிய நீயிர் முதல் வேற்றுமை ஆக்கப்பட்டது.

சமத்தபதம் — தொகைநிலைச்சொற்கள்.

தத்திதன் — பெயர்விகுதி ஏற்ற சொற்கள்.

கிருதந்தம் — வினையாலணையும் பெயர்.

பாவபதம் — தொழிற்பெயர், பண்புப்பெயர்.

சுபந்தம் — வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச் சொற்கள்.

வடமொழி எழுவாய் வேற்றுமையை ஒட்டி வீரசோழியம்,

'கூறிய சொற்பின் பொருள் மாத்திரத்தில் குலவு எழுவாய்,
விறுடை வேற்றுமை எய்தும் ஒருவன் ஒருத்தி ஒன்றின்
ஏறிய சு - பலவில் சு - வும் கள்ளும் எங்கும் அழியும்'
- வீ. சோ. 33

எனக் குறிப்பிட்டதும் நோக்கத்தக்கது.

வேற்றுமை பற்றிய செய்திகளை இலக்கணக்கொத்து நூலார் தொகுத்து,

'வினைமுதல் விளியே செயப்படு பொருளே
கருவி கொள்வோன் நீக்கம் குறையே
இடம்என எட்டும் வடமொழி வேற்றுமை
ஏழ்ஆறு என்ன இயம்பும் தமிழ் நூல்' - இ. கொ. 13

'உருபுவேறு உருபு சொல்லுருபு என்ன
வேற்றுமை உருபு மூன்றென விளம்புவர்' - இ. கொ. 16

'அவைதாம்,
உரிமையாய் நிற்றல் ஒப்பாய் நிற்றல்
மாறுபட நிற்றல் எனவழங் குவரே' - இ. கொ. 17



'உருபுவேறு உருபு சொல்லுருபு ஆகியும்
உருபினை ஏலாப் பெயரே ஆகியும்
உருபினை ஏற்ற பெயரே யாகியும்
உருபு தொக்க பெயரே ஆகியும்
இரண்டுருபு இணைந்தால் ஒன்றுஉருபு ஆகியும்
மாறி நின்றும் வரும்இட உருபே' - இ. கொ. 18

'வேற்றுமை உருபுகள் அல்லா தனவும்
வேற்றுமை உருபுகள் போல்வெளிப் படுமே'
- இ. கொ. 20

'ஒருவேற் றுமைக்கோர் உருபே வருதலும்
ஒருவேற் றுமைக்குப் பலவுருபு வருதலும்
எனஇரு கூறாய் வரும்உரு புகளே;
ஐ கு - ஒன்றே; அல்லன பலவே' - இ. கொ. 22

'ஓர்உரு பிற்கே பலபொருள் வருதலும்
ஒருபொருட் கேபல உருபுகள் வருதலும்
எனஇரண் டாகும் வேற்றுமை இயல்பே' - இ. கொ. 23

'பகுபதம் பகாப்பதம் இருவகைத் தொடர்ப்பதம்
வினைமுற் றுப்பெயர் குறிப்புமுற் றுப்பெயர்
தொழிற்பெயர் ஆதியின் தோன்றும் எட்டு உருபே'
- இ. கொ. 24

என்று குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளுள் பலவும் பிரயோக விவேகத்திலும் காணப்படுமாறு உணர்க. 7

## தமிழில் எழுவாயும் காரகமும்

8. தேற்றும் தமிழுக்கு எழுவாய்
விபத்தி திரிபுஇல்பெயர்;
தோற்றும் பிறஉருபு ஓர்ஆறும்
வேற்றுமை தோன்றிநிற்கும்;
ஆற்றும் கருத்தா, கருமம், கரணம்,
அவதி, கொள்வோன்,
சாற்றும் தொழிற்கு இடம் என்று
அறுகாரகம்தாம் உளவே.

இது தமிழ்ப்பெயர் உருபு ஏற்றலும், காரகம் ஆதலும் கூறுகின்றது. தமிழுக்கு எழுவாய் வேற்றுமை ரூபபேதம் இன்றித் திரிபுஇல்பெயராம். அஃது அல்லாத உருபுகள் ஆறும் ரூபபேதம் தோன்ற வரும். கருத்தா முதலாகக் காரகம் ஆகிய வினை ஆறு உள என்றவாறு.

**'வினையே செய்வது'** - சொ. 112

என்றும் சூத்திரத்துள், சேனாவரையரும் அவ்வெட்டினையும் காரகம் என்பர். செய்யுள் ஆதலின் அவதியை முன் வைத்தாம். 'பன்னும் பகாப்பதம்' (7) என்னும் பாட்டுப் பிறர்மதம் கூறி இப்பாட்டுத் தம் துணிபு உரைத்தல்.

பெயர்க்கு ரூபபேதம் காட்டும் வேற்றுமைஉருபு வடமொழிக்கு அல்லது தமிழ்மொழிக்கு இல்லாமை கண்டு 'எழுவாய் விபத்தி திரிபு இல்பெயர்' (8) என்றும்.

**'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே'** – தொ.சொ. 65

**'எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே'** – ந. 295

எனத் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் கூறினர் என்க.

இனி, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும், பெயர் தனித்து நின்றகாலை எழுவாய் வேற்றுமை ஆகாது என்றும், அது 'பெயர் தோன்று நிலை' என்பதற்கு நலிந்து பயனிலை தோன்ற நிற்கும் நிலையாகிய அவசரத்தில் எழுவாய் வேற்றுமை ஆம் என்றும் உரைத்தார். பெயர் தாம் பயனிலை தோன்ற நின்றால் கர்த்திருகாரகம் என்னும் எழுவாய் ஆவது அன்றி, ரூபபேதம் பெற்ற எழுவாய் வேற்றுமை ஆமோ என மறுக்க. அன்றியும் அவ்வாறே நிலங்கடந்தான் முதல் குன்றக்கூகை இறுதியாக ஆறு உருபும் வாராது தத்தம் பயனிலை தோன்ற நிற்கும் நிலைமையே அமையும். அங்ஙனம் அமைவனவற்றை 'ஐ எனப் பெயரிய' (71) 'ஒடு எனப் பெயரிய' (73) எனப் பெயர் ஒழிந்த ஆறு விபத்தியும் எடுத்து ஓதியது நின்று பயன்இன்மை என்னும் நூற் குற்றம்



தங்குதற்கோ எனக் கூறி மறுத்து, அஃது உரையன்மையாதல் அறிக. இனிச் சேனாவரையர் அச்சூத்திரத்திற்கு 'முதல் வேற்றுமையாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமை' என்றும், 'பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாமையும், பிறிது ஒன்றனோடு தொடராமையும் நிற்கும் நிலைமை' என்றும் கூறிப் 'பொருண்மை சுட்டலுள்' (66) உருபு ஏற்றல் பெயர்க்கு இலக்கணம் ஆயினும் உருபு ஏலாத வழியும் பெயராமாறுபோல எழுவாய் வேற்றுமை கிரியாசமாத்தி ஆகிய பயனிலை கொள்ளாத வழியும் எழுவாய் வேற்றுமையே-யாம் என்றும், செயப்படுபொருள் முதலியவற்றிற்கும் கருத்தா-விற்கும் பொருள் மாத்திரமே ரூபபேதம் காட்டும் வேற்றுமை என்றும், பன்மை பற்றிய வழக்காலே ரூபபேதம் காட்டாத கருத்தா ஆகிய பெயரையும் எழுவாய் வேற்றுமை என்றார் என்றும் கூறி, உரையாசிரியர் முதலாயினாரை மறுத்தலானும், யாம் உரைத்ததே பூருவாசிரியருக்கும் கருத்தாயிற்று. பின்னூல் செய்த குணவீரபண்டிதரும்,

**'பெயர்எழுவாய் வேற்றுமையாம் பின்பதுதான் ஆறு**  
**பயனிலையும் ஏற்கப் படுதல் – கயல்விழியாய்**  
**ஈற்றின் உருபாறும் ஏற்றல்முக் காலமும்**  
**தோற்றாமை நிற்றல் துணிவு'** – நேமி. சொ. 17

என நேமிநாதத்துள் கூறினர்; ஆதலால் பெயர் ஒழிந்த பிற உருபு ஓர் ஆறும் வேற்றுமை தோன்ற நிற்கும் என்றும்.

**'விபத்தி வேற்றுமை உருபுஎன விளம்புவர்'**

இஃது உரைச்சூத்திரம்.

**'ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்**  
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை'** – ந. 291

எனப் பொருள் வேற்றுமைப்படும் உருபு ஏற்ற பெயரையும் வேற்றுமை என்னாது, வேற்றுமை செய்யும் உருபை மாத்திரம் வேற்றுமை என்பர் நன்னூலார். தொல்காப்பியர்,

'உருபுதொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி'
– சொ. 102

'ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' – சொ. 71

என உருபு ஏற்ற பெயரையும் உருபையும் வேற்றுமைக்கிளவி என்பர். (8)

விளக்கம்

தமிழ்மொழியின் வேற்றுமை மரபு இந்நூற்பாவில் சுட்டப்பட்டுள்ளது. ரூபபேதம் – வடிவு வேற்றுமை;

'வினையே செய்வது' என்ற நூற்பாவில் வினை எனப்படும் சங்கற்பம், எழுவாய், செயப்படுபொருள், நிலன், காலம், கருவி, இன்னதற்கு, இது பயன் என்ற எட்டும் சேனாவரையரால் காரகம் எனப்பட்டன. வனைந்தான் – வனைதலைச் செய்தான்; வனைதல் வினை; செய்தல் தொழில்.

தமிழில், எழுவாய் வேற்றுமைக்கு வடிவு வேற்றுமை காட்டும் உருபு இன்று.

பெயர் தனித்து நின்ற நிலையில் எழுவாய் வேற்றுமை ஆகாது; பயனிலை தோன்ற நிற்கும் போதே எழுவாய் வேற்றுமை ஆகும் – என உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறினர். பெயர் பயனிலை தோன்ற நின்றால் எழுவாய் ஆகுமே யன்றி, எழுவாய் வேற்றுமை ஆகாது. பயனிலை தோன்ற நிற்றலே வேற்றுமை ஆகும் எனின், ஏனைய வேற்றுமைகளுக்கும் உருபு வாராது, பயனிலை தோன்ற நிற்றலே அமையும்; அப்பொழுது வேற்றுமை உருபுகளைக் குறிப்பிட்டமை நின்றுபயன் இன்மை என்னும் குற்றமாகும். சேனாவரையர் பெயர் நின்றாங்கு நின்று எழுவாய் வேற்றுமை ஆகும் என்றும், பெயர் உருபு ஏலாதவழியும் பெயரா மாறுபோலப் பயனிலை கொள்ளாதவழியும் பெயரேயாம் என்றும், எழுவாய் வேற்றுமை உருபு ஏற்று வடிவு வேறுபட்டுச் செயப்படு பொருள் முதலியவற்றை உணர்த்தும் என்றும், பன்மை பற்றிய



வழக்கால் உருபுவேறுபாடு இல்லாத எழுவாயும் வேற்றுமையாம் என்றும் முறையே 66, 63-ஆம் நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் வேற்றுமை உருபை மாத்திரம் வேற்றுமை என்பர்; தொல்காப்பியனார் வேற்றுமை உருபையும், வேற்றுமை உருபு ஏற்ற பெயரையும் வேற்றுமை என்பர்.

இனி, இலக்கணக்கொத்து நூலார் எழுவாய் வேற்றுமை பற்றிப் பலரும் கூறும் கருத்துக்களை,

'எழுவாய் வேற்றுமைக்கு உருபே இன்று;
பெயரே, பயனிலை கொள்ளும் தன்மையே
பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே
வினைமுத லாதலே விகாரப் பெயரே
பெயர்ப்பின் விகுதி பெறுதலே ஆயவன்
ஆனவன் ஆவான் ஆகின் றவன்முதல்
ஐம்பால் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே
உருபென வெவ்வேறு உரைத்தனர் பலரே' – இ. கொ. 25

என்று குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

வேற்றுமை என்பதன் பொருளாக,

'உருபுஏற் றதனையும் உருபையும் உருபு
நோக்கிவந் ததனையும் வேற்றுமை என்பர்' – இ. கொ. 20

என, வேறுபடுதலால் வேற்றுமை, வேறுபடுத்தலால் வேற்றுமை, வேற்றுமையை முடித்தலால் வேற்றுமை என்று பொருள் உரைப்பர் என்றும் குறிப்பிட்டுள்ளார். 8

## காரகத்தின் பிரதிபதங்களும் முடிபும்

9. பழியாவினை செய்பவன் கருத்தா;
செயப்பட்டபொருள்
அழியாது நிற்கும் கருமம்;
கருவி அருங்கரணம்;

ஒழியாது கொள்பவன் சம்பிரதானம்;
ஒழிபு அவதி;
இழியா அதிகரணம்தான் இடம்
என்பர்; ஏந்திழையே!

இது காரகம் ஆறினுக்கும் பிரதிபதமும் பன்மைபற்றிய வழக்கால் நிருத்தியும் கூறுகின்றது. (9)

விளக்கம்

எழுவாய் கருத்தா எனவும், செயப்படுபொருள் கருமம் எனவும், கருவி கரணம் எனவும், கொள்பவன் சம்பிரதானம் எனவும், எல்லை அவதி எனவும், இடம் அதிகரணம் எனவும் வடமொழி நூல்களுள் கூறப்பெறும். வீரசோழியம் சம்பிர தானத்தைக் கோளி (40) எனவும் அதிகரணத்தை ஆதாரம் (41) எனவும் குறிப்பிடும்.

பிரதிபதம் என்பது அதே பொருளைத்தரும் வேற்றுச் சொல்லாகிய பரியாயப் பெயர். நிருவசனம் அல்லது நிருத்தி என்பது ஒருசொற்கு வாக்கியத் தொடராகப் பொருள் உணர்த்து வதாகும். (பி. வி. 50 உரை) வேற்றுமை எட்டனுள் ஆறனுக்கே பரியாயப் பெயர் கூறி விளக்கம் தருவது பன்மை பற்றிய வழக்காம். அன்றியும் அவதி, அதிகரணம் இரண்டனை விடுத்து ஏனைய நான்கு காரகங்களை விளக்கியது பன்மை பற்றிய வழக்கால் நிருத்தி கூறியது என்றும் ஆம். 9

## காரகங்களுக்கு எடுத்துக்காட்டு

10. இந்திரன் தாமரையைக் கரத்தால்
கொய்து இறைவனுக்குத்
தந்து இருங்குற்றத்தின் நீங்கி
விண்மேல் இருந்தான் எனலும்



வந்து அருங்காரகம் எல்லாம்
பிறக்கும் ஓர்வாக்கியத்துள்;
சிந்துர வாள்நுதல் செவ்வாய்க்
குறுநகைத் தேமொழியே!

இஃது அறுவகைக் காரகத்திற்கும் உதாரணக்காரிகை. (10)

விளக்கம்

இந்திரன் (1) தாமரையைக் (2) கரத்தால் (3) கொய்து, இறைவனுக்குத் (4) தந்து, குற்றத்தின் (5) நீங்கி, விண்மேல் (7) இருந்தான் என அறுவகைக் காரகமும் ஒரே வாக்கியத்தில் சுட்டப்பட்டன.

'வரைநின் றிழிந்தங்கு ஓர் வேதியன் வாவியின்கண் மலிந்த
விரைநின்ற பூவைக் கரத்தால் பறித்து விமலனுக்குத்
துரைநின்ற தீவினை நீங்க இட்டான் என்று சொல்லுதலும்
உரைநின்ற காரகம் ஆறும் பிறக்கும் ஒளியிழையே'

என்ற வீரசோழியத்தின் 39-ஆம் காரிகையையும்,

'நாரா யணன்பூ ஓரா யிரத்தைக்
கரத்தால் கொய்துஓர் அரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டானெனக்
காரகம் முழுதும் வந்தன காண்க;
இவற்றுள் ஒன்றே இயம்பினும் காரகம்' – இ. கொ. 15

என்ற இலக்கணக்கொத்து நூற்பாவையும் நோக்குக. 10

## கருத்தாவும் நீக்கமும்

11. ஏயும் கருமம் சுதந்திரம்
ஏது என்று எண்ண விரிந்து
ஆயும் கருத்தன் அபிகிதம்;
ஒன்றே அநபிகிதம்;

சாயும் பிரிவின் அபாதானம்
ஆகும் சலம் அசலம்;
காயும் கதிர்வடிவேல் விழித்
தேமொழிக் காரிகையே!

இது கர்த்திருகாரகபேதமும் அபாதான காரகபேதமும் கூறுகின்றது. கருத்தாவுள் கருமம் முதலாக ஏது ஈருக அபிகித கருத்தா மூன்று வகைப்படும். அநபிகித கருத்தா ஒன்றேயாம். அபாதானம், சலம் - அசலம் என இருவகைப்படும் என்றவாறு.

(உ-ம்) கூரைமேய்ந்தது, கன்றுவிட்டுக்கொண்டது, பசுக் கரந்தது, திண்ணை மெழுகிற்று, சோறு அட்டது, கறிபொரித்தது - எனக் கர்த்திருவற்பாவம் என்னும் கரும கருத்தா வரும்.

'செயப்படு பொருளைச் செய்தது போல' - சொ. 246

என்னும் சூத்திரத்துள், சேனாவரையர் 'அரிசி தானே அட்டது' என உதாரணம் காட்டி, அத்துணை எளிதின் அடப்படும் எனவும் கூறுவர். இனிக் குணிவிருத்திகாரர்,

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்' - குறள் 319

'பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வான்ஊர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு' - நாலடி. 125

என்னும் இவற்றுள், 'தாமே' 'தானே' என்னும் சுயமேவபதம் தொடர்ந்த வரும் - நந்தும் - தேயும் என்னும் அகன்மக பரஸ்மை பதம் என்னும் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச் சொல்லோடு வரும் கருமத்தைக் கருமகருத்தா என்பர். இவை சகன்மக பரஸ்மை பதம் என்னும் செயப்படுபொருள் குன்றாத வினைமுற்றுச் சொல்லோடு முடியாமையின், பாடியகாரர் கருமகருத்தா ஆகா என்பர். பாடியகாரருக்குமுன் குணிவிருத்தி, பாடியகாரருக்குப்பின் காசிகாவிருத்தி என அறிக.



இனி, எழுத்தாணி எழுதும்,

'கண்அவனை அல்லது காணா செவி அவன(து)
எண்ணருஞ்சீர் அல்லது இசைகேளா — அண்ணல்
கழல்அடி அல்லது கைதொழா அஃதால்
அழல்அங்கைக் கொண்டான்மாட்(டு) அன்பு',

'கோள்இல் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை' - குறள் 4

எனக் கருவி கருத்தா ஆகியும்,

'இரப்பவர் என்பெறினும் கொள்வர்' - தனிப்பாடல்

எனச் சம்பிரதானம் கருத்தா ஆகியும்,

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல' - குறள் 151

'அறம்நோக்கி ஆற்றுங்கொல் வையம்' - குறள் 189

'வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்' - குறள் 239

என அதிகரணம் கருத்தா ஆகியும் வந்தனவாலோ எனின், அல்ல என்க; என்னை? அபிகிதகருத்தாவும் அபிகித கருமமும் பிரதமை யோடேவரும் எனவும், ஒழிந்த கரணமும் சம்பிரதானமும் அவதியும் அதிகரணமும் பிரதமையோடு வாரா எனவும் 'ஆதியது என்பது' (14) என்னும் பாட்டினும், 'ஆறொடும் ஐந்தொடும்' (15) என்னும் பாட்டினும் விதித்தமையால் என்க.

தேவதத்தன் சோற்றை அட்டான், சோற்றை அட்டான் தேவதத்தன் இவை சுதந்திர கருத்தா.

தேவதத்தன் எஞ்ஞதத்தனை அஞ்சுவித்தான், ஆசாரியன் மாணக்கனை அறிவித்தான் - இவை ஏது கருத்தா.

'ஏவுதற் கருத்தாப் பிரயோ சகனே
இயற்றுதற் கருத்தாப் பிரயோச் சியனே'

இஃது உரைச் சூத்திரம்.

இனிக் காரிய காரணத் தொடரின் அஃறிணைக்கண்ணும் வரும்.

உ-ம் :

'அல்லல் உழப்பிக்கும் சூது' - குறள் 938
'அம்ம கேட்பிக்கும்' - தொ. சொ. 276
'தோள் அறிவிப்ப போலும்' - குறள் 1233
'வளை,துறந்தமை தூற்றுகொல்' - குறள் 1157

என வரும்.

தச்சனல் எடுக்கப்பட்டது மாடம், மாடம் தச்சனல் எடுக்கப் பட்டது - இவை அநபிகித கருத்தா.

'ஏயும்' என்ற மிகையால் பாவ கருத்தாவும் உண்டு. கருமமும் கருத்தாவும் தடுமாறி நிற்றலும் உண்டு.

உ-ம் :

'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்' - குறள் 510
'கோறல் - பிறவினை எல்லாம் தரும்' - குறள் 321

இவை பாவகருத்தா.

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' - தொ. பொ. 93

இது தடுமாறி நிற்றல்.

சலம் - குதிரையின் இழிந்தான்.

அசலம் - மலையின் இழிந்தான்.

'நிலைத்திணை அசலம் இயங்குதிணை சலமே'

'சொல்லப் படுநிலை சொல்லப் படாநிலை
அபிகிதம் அநபி கிதம்என மொழிப;
தெரிநிலை தெரியா நிலையென வும்பெறூஉம்'

இவை உரைச் சூத்திரம்.



'சாயும்' என்ற மிகையால், சலமும் அசலமும் அன்றி,

'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி' - குறள் 502

என்றும்,

'சிறுமையின் நீங்கிய இன்சொல்' - குறள் 98

என்றும் வரும் புறப்பாட்டு எல்லை என்னும் வெகிச்சீமைக்கண் வருவது அபாதானம். (11)

## விளக்கம்

இந்நூற்பாவில் வினைகொண்டு முடியும் எழுவாயின் வகைகளும், வினைகொண்டு முடியும் ஐந்தாம் வேற்றுமையின் வகைகளும் கூறப்படுகின்றன.

கருத்தா : கருமம் - சுதந்திரன் - ஏது என மூவகைத்தாய்த் தெரிநிலை எழுவாயும், பகுப்பு எதுவும் இன்றித் தெரியாநிலை எழுவாயும் வரும். நீக்கம் - இயங்குதிணை நிலைத்திணை என இருவகைத்தாய் வரும்.

கூரை மேயப்பட்டது முதலாகச்செயப்படுபொருள் ஆகற்பாலன கூரைமேய்ந்தது என்றாற்போல எழுவாயாக வந்தமை, எழுவாய்த்தன்மைப்பட்டுச் செயப்படுபொருள் எழுவாய் ஆயினமைக்கு உதாரணம்.

"இன்று தாமே வரும், கேண்மை தானே நந்தும், தொடர்பு தானே தேயும் எனச் செயப்படுபொருள் தேற்றத்தோடு வினைமுதலாய்ச் செயப்படுபொருள் குன்றிய வினைகொண்டது. திண்ணை மெழுகிற்று எனச் செயப்படுபொருள் தேற்றமின்றிச் செயப்படுபொருள் குன்றாத வினைகொண்டது. இவ்விருவகையும் வடமொழி விதி ஆகலின் விரிக்கிற்பெருகும்" என்பது இலக்கணக்கொத்து 26ஆம் நூற்பா உரை. சுயமேவபதம் என்பன தாமே தானே என்னும் தேற்றச் சொற்கள்.

செயப்படுபொருள் குன்றிய வினையைக் கருமகருத்தா கொள்ளும் என்னும் குணி விருத்திகாரர் கூற்றுப் பாடியகாரருக்கு ஒவ்வாதது என்பர் இவ்வாசிரியர்.

கருவிகருத்தா – கண் காணும் என்ற தொடரில் கண்ணாகிய கருவி காண்டலாகிய தொழிலைச் செய்தல் போல்வன.

இரப்பவர் என்பெறினும் கொள்வர் – கொள்வோராகிய இரப்போரை, நான்காம் வேற்றுமைக்குரிய கோடற்பொருளை விட்டுக் கொள்ளுதல் தொழிலைச் செய்யும் கருத்தாவாகக் கூறுதல் சம்பிரதானக் கருத்தா.

அகழ்வார் இருத்தற்கு இடனாகும் நிலத்தை அகழ்வாரைத் தாங்குதற்றொழிலைச் செய்யும் கருத்தாவாகக் கூறுதல் அதிகரணங் கருத்தா.

இவை இவ்வாசிரியருக்கு உடன்பாடல்ல.

“கண் காணும் (கருவி) இரப்பவர் என்பெறினும் கொள்வர் (கோளி) குன்று குவட்டைத் தாங்கும் (இடம்) எனக் கருவி முதல் மூன்றும் முறையே காண்க. இவை இலக்கணமல்ல” என்பது இலக்கணக்கொத்து 26 ஆம் நூற்பா உரை.

தேவதத்தன் சோற்றை அட்டான் – சோற்றை அடும் தொழில் தேவதத்தன் செய்கைக்குள் அமைவது ஆதலின், இது தன்வசக் கருத்தா என்னும் சுதந்திர கருத்தாவாம். மற்றும் சிலரால் இயற்றப்படும் தன்மை இன்றித் தானே கருத்தாத்தன்மை எய்தி நிற்றலின் தலைமைக் கருத்தா என்னும் வீரசோழியம். (40) தேவதத்தன் எஞ்ஞதத்தனை அஞ்சுவித்தான் – எஞ்ஞதத்தன் அஞ்சுவதற்குத் தேவதத்தன் ஏதுவாயினமையின், தேவதத்தன் ஏதுகருத்தா. இம் மூன்றனுள்ளும் கருத்தா வெளிப்படையாய்ப் புலப்பட்டமையின், இவை தெரிநிலைக் கருத்தா ஆயின.



சூது அல்லலை உழப்பிக்கும், அம்ம கேட்பித்தலைச் செய்யும், வீங்கியதோள் அறிவித்தலைச் செய்யும், வளை, தலைவன் துறந்த செயலைத் தூற்றுதலைச் செய்யும் என அஃறிணைக்கண்ணும் சூது முதலியன ஏதுகருத்தா ஆயினவாறு; உழத்தலுக்கும் கேட்டலுக்கும் அறிதலுக்கும் அவை முறையே காரணம் ஆயினமையின்.

தச்சனால் எடுக்கப்பட்டது மாடம் – மாடம் கருத்தா என்று தெரியப்படாமலேயே, செயப்படுபொருள் நிலைமாறிக் கருத்தா வாக வருதலின், தெரியாநிலைக் கருத்தா ஆயிற்று.

தேரான்......தரும் – தெளிவு, ஐயுறவு என்ற தொழிற் பெயர்கள் எழுவாயாயின. பாவம்-தொழில் பண்பு இரண்டினையும் காட்டும் வடசொல்லாம்.

‘ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப’ – கிழவன் கிழத்தியைக் காண்பான், கிழத்தி கிழவனைக் காண்பாள் எனப் பொருள்பட்டு, ஓரிடத்துக் கிழவனும் ஓரிடத்துக் கிழத்தியும் கருத்தாவாதல் காண்க. தடுமாற்றமாவது ஒருபொருளே ஒருகால் வினைமுதலாயும் ஒருகால் செயப்படுபொருளாயும் நிற்றல். இவையாவும் இலக்கணக்கொத்து நூலுள்ளும் விளக்கப்பட்டன.

‘இருவகைச் செயப்படுபொருளே ஏது
தன்வசம் தெரியா நிலைதடு மாற்றம்
தொழிற்பெயர் ஏழில் தோன்றும் வினைமுதல்;
கருவி இடம்கொள் வானினும் கருதுவர்’ – இ. கொ. 26

என்ற நூற்பாவினையும் உரையையும் நோக்குக.

காரணகருத்தாவும், தான்தெரி கருத்தாவும், தான்தெரியாக் கருத்தாவும், கருமக் கருத்தாவும் தலைமைக் கருத்தாவும் என ஐவகைப்படும் கருத்தாக் காரகம் என்று வீரசோழியம் சற்று மாற்றிக்கூறி விளக்கம் கூறும். (40)

*‘குறியெனப் படுவது இரவினும் பகலினும்*
*அறியக் கிளந்த இடம்என மொழிப’* இறை. கள. *19*

*“அறியக் கிளக்கப்பட்ட இடம் என்றது, கிளந்த இடம் என்றது எற்றிற்கோ எனின், வினைச்சொற்கள் நான்கு விகற்பம் உடைய; யாவை அவ்விகற்பம் எனின், கருத்தன், ஏதுகருத்தன், கருவிக் கருத்தன், கருமக் கருத்தன் என இவை. அவற்றுள், கருத்தன் என்பது தச்சன் எடுத்த மாடம், கொல்லன் வடித்த வாள்; ஏதுகருத்தன் என்பது ஏவினானைக் கருத்தாவாகச் செய்வது. அரசர் தொட்ட குளம், அரசர் எடுத்த தேவகுலம் இத்தொடக்-கத்தன. இனி, கருவிக்கருத்தன் என்பது வாள் எறியும், சுரிகை குத்தும், இம்மிடா நாற்குறுணி அரிசிச்சோறு அடும் என இத்தொடக்கத்தன. இனி, கருமக்கருத்தன் என்பது திண்ணை மெழுகிற்று, கலம் கழுவிற்று, மரம் குறைத்தது என்று சொல்லுவது. ‘அறியக் கிளந்த இடம்’ என்னும் அச்சொல் கரும கருத்தனைய் நின்றது என்பது” என்ற இறையனாரகப் பொருள் உரைப்பகுதி (19) கூறும் வேறுபாடும் காண்க.*

*குற்றத்தின் நீங்கி – குற்றத்தின் எல்லையினின்றும் நீங்கி ;*
*சிறுமையின் நீங்கிய – சிறுமையின் எல்லையிலிருந்து நீங்கிய ;*

*என நீக்கம் எல்லைப்பொருளை ஒட்டியும் வரும் என்பது விளக்கப் பட்டது. சிறுமையின் நீங்கிய என்பதனைப் பண்புச்சொல்லை அடுத்து நீக்கம் வந்ததற்கு இலக்கணக்கொத்து நூலார் எடுத்துக் காட்டாக்குவர். (38)*

*‘நிலைத்திணை இயங்கு திணைபண்பு ஆதியின்*
*நீக்கம் வரும்என நிகழ்த்தினர் புலவர்.’* – இ. கொ. *38*

*(உ-ம்) மலையின் இழிந்தான், யானையின் இழிந்தான், சிறுமையின் நீங்கிய – என முறையே காண்க. ஆதி – என்றதனால் குற்றத்தின் நீங்கி, ஐயத்தின் நீங்கி எனவும் வரும். (38)*

* *பஹிஸ்ஸீமா — வெகிச்சீமை – வெளிஎல்லை.* - *11*



## செயப்படுபொருளும் கருவியும்

12. அண்ணிய கர்மத்து அபிகிதம்
ஒன்றே; அநபிகிதம்
தண்ணிய ஈச்சிதம் தன்னோடு,
அநீச்சிதம்,தான் இருமை,
எண்ணிய நற்கருத்தாவொடு, அகதிதம்-
என்று ஓர் ஐந்தாம்;
கண்ணிய காலை அகம்,புறம்
ஆகும் கரணங்களே.

*இது கருமகாரகபேதமும் கரணகாரகபேதமும் கூறுகின்றது. கருமத்துள் அபிகிதகருமம் ஒன்றேயாம். அநபிகிதகருமம் ஐந்து வகைப்படும். அகம் புறம் எனக் கரணம் இருவகைப்படும். என்றவாறு. கள் – அசை.*

*(உ-ம்) மாடம் தச்சனால் இயற்றப்பட்டது; தச்சனால் இயற்றப்பட்டது மாடம். இவை அபிகித கன்மம்.*

*பாயை நெய்தான், பொன்னை ஆசைபட்டோர் வறியர், சோற்றை உண்டான் துவரப்பசித்தான், வேலியைப்பிரித்தான், நஞ்சை உண்டான் – இவை அநபிகிதத்துள் ஈச்சித கருமம்.*

*சோற்றைக் குழைத்தான், தீக்கனவைக்கண்டான், வழி செலப் புகுந்தான் வாணியனைக்கண்டான்,*

**‘ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்’** – குறள் 932

*இவை அநபிகிதத்துள் அநீச்சித கருமம். இவற்றைக் கல்லாடர் முதலாயினர் கருத்துள்வழிச் செயப்படுபொருள், கருத்துஇல்வழிச் செயப்படுபொருள் என்பர்.*

'ஈச்சிதம் தன்னோடு அநீச்சிதம் தாமே
கருத்துஉள் வழிஇல் வழிச்செயப் படுபொருள்'

இஃது உரைச் சூத்திரம்.

ஊரைச் செல்வான் பசும்புல்லை மிதித்தான், பாற்சோறு உண்கின்ற சிறுவன் அதன்கண் வீழ்ந்த தூளியைத் தின்றான் - இவை அநபிகிதத்துள் ஈச்சிதாநீச்சித கருமம். பசும்புல்லை மிதித்தலும் தூளியைத் தின்றலும் அநீச்சிதம்; ஊரைச்சேறலும், பாற்சோற்றை உண்டலும் ஈச்சிதமாம் என்க.

மாணைக்கனை ஊர்க்குப் போக்கினன் ஆசிரியன் - மகட் போக்கிய தாய் என்புழி, மாணைக்கன் மகள் என்னும் இருவரும் தனித்தனியே போவாரும் போக்கப்படுவாரும் ஆகலின், கர்த்திரு கருமமாம்.

'தன்னைத் தந்த கற்பகம்' – திருவாய்மொழி 2-8-11

'தன்னைத்தான் காதலன்' – குறள் 209

'நாணால் உயிரைத் துறப்பர்' – குறள் 1017

'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைக்கலக்கிக் கீழிடு வானும் — நிலையினும்
மேன்மேல் உயர நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்' - நாலடி 248

என வரும் செய்யுட்களும் கர்மவற்பாவமான கர்த்திரு கருமமாம். வடநூலார் 'ஆத்மானஞ் சிநந்தி' என்பதனைத் தமிழார் 'தன்னைக் குத்தினன்' என்பர். இதுவும் அது.

பசுவினைப் பாலினைக் கறந்தான், ஆனையைக் கோட்டையைக் குறைத்தான் – இவை கதிதம் அல்லாத அகதிதம்.

'துணைநிலை அகதிதம் துகன்மகம் என்பர்'

இஃது உரைச் சூத்திரம்.



ஆசாரியனை ஐயுற்ற பொருளை வினவினன் என்பது, பசுவினது – ஆனையினது எனப் பொருள்படுதல் போல, ஆசாரியனது எனப் பொருள் படாது வந்த அகதிதம்.

'அண்ணிய' என்ற மிகையால், அகநிலைச் செயப்படுபொருள் என்னும் அந்தர்ப்பாவித கருமமும் கொள்க. அது 'வந்தான்' என்றால் வருதலைச் செய்தான் எனக் கருமபாவத்தின்மேல் துதியை விரிந்து நிற்கும் என்க.

'ஏரின் உழாஅர்' – குறள் 14

என்புழிப் பரிமேலழகியாரும் இவ்வாறு விரித்தல் காண்க. வடமொழியினும் 'ஆகச்சதி – ஆகமனம் கரோதி' என வரும்.

இனி, வாக்கியபதீயத்துள்ளும் கையடத்துள்ளும் நிர்வர்த்தியம் – விகாரியம் – பிராப்பியம் எனக் கூறிய வண்ணம், சேனாவரையர் முதலாயினர் இயற்றப்படுவதும் வேறுபடுக்கப் படுவதும் எய்தப்படுவதும் எனச் செயப்படுபொருளை மூன்றாக்குவர். இயற்றுதலாவது முன் இல்லதனை உண்டாக்குதல். வேறுபடுத்தலாவது முன் உள்ளதனைப் பிரித்தல். எய்தப் படுதலாவது அவ்விரண்டும் இன்றித் தொழிற்பயனை உறும் துணையாய் நிற்றல் என நிருத்தியும் கூறி, எயிலை இழைக்கும் – மரத்தைக் குறைக்கும் – பொருளைப் பெறும் என உதாரணம் காட்டுவர். நன்னூலாரும் ஆக்கல் அழித்தல் அடைதல் முதலாகச் சைநேந்திரன் மதம் பற்றிப் பலவாக்குவர்.

'இயற்றப் படுவது நிருவருத் தியமே'
'வேறு படுக்கப் படுவது விகாரியம்'
'பிராப்பியம் எய்தப் படுவதுஎன்று இசைப்பர்'

இவை உரைச் சூத்திரம்.

பத்துத் திசையும் மனத்தான் மறைத்தபின்,
'மனத்தான் மறுவில ரேனும்' – நாலடி 180

'மனத்தான்ஆம் மன்உயிர்க்கு ஆக்கம்' – குறள் 453

'பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின்' – குறள் 537

'உள்ளத்தால் உள்ளல்' – குறள் 282

இவை எல்லாம் அகக்கரணம்.

காலால் நடந்தான், கண்ணால் கண்டான், ஊசியால் குயின்றான்.

'நெய்யால் எரி நுதுப்பேம்' - கு. 1148

எனப் புறக்கரணம் வரும்.

'நாணால் உயிரைத் துறப்பர்' - கு. 1017

சாத்தன் கைஎழுதுமாறு வல்லன்; அதனால் தந்தை உவக்கும் –

'கௌவையால் காமம் நுதுப்பேம் எனல்' - கு. 1148

என வருவன எல்லாம் ஏதுவின்கண் வந்த மூன்றும் வேற்றுமை.

இனி, ஏது காரகம் ஞாபகம் என இருவகைப்படும்.

உ–ம்: வாணிகத்தான் ஆயினான் என்பது காரகம்.

முயற்சியால் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது ஞாபகம்.

'அப்பியந் தரமே பாகியம் என்னச்
செப்பிய கரணம் அகம்புறம் ஆகும்'

இஃது உரைச்சூத்திரம். (12)

விளக்கம்

அபிகிதம் – தெரிநிலை; அநபிகிதம் – தெரியாநிலை. தெரியாநிலைச் செயப்படுபொருள் கருத்துண்டாதல், கருத்து இன்றாதல், இருமையும் ஆதல், கருத்தா ஆதல், ஈருருபு இணைதல் என ஐந்தாம். கருவி அகக்கருவி புறக்கவி என இரண்டாம்.



தெரிநிலைச் செயப்படுபொருளாவது, வினைமுதலாகி வந்தவிடத்தும் செயப்படுபொருளே என்பது தெரியநிற்றல். மாடம் தச்சனால் இயற்றப்பட்டது என்ற இடத்து, மாடம் எழுவாயாகி வந்தும் தச்சனால் இயற்றப்பட்ட செயப்படுபொருளாகவே மாடம் கருதப்படுவது காண்க.

பாயை நெய்தல், வறியர் பொன்னை ஆசைப்படுதல், துவரப் பசித்தவன் சோற்றை உண்ணுதல், தன் எல்லையை அகப்படுத்திப் பிறன் கோலிய வேலியைப் பிரித்தல், நாகரிகம் வேண்டுபவர் நஞ்சை உண்ணுதல் (கு. *580*) என்பன கருத்துள்வழிச் செயப்படுபொருளாமாறு காண்க.

சோற்றைக் குழைத்தல் முதலியன கருத்தின்றாகிய செயப்படுபொருள்.

சோற்றைக் குழைத்தல் வேண்டும் என்ற எண்ணமின்று; ஆனால் சற்றுக் காலம் தாழ்த்திச் சோற்றை அட்டதனால் அது குழைந்துவிட்டது;

நிம்மதியாக உறங்குதல் வேண்டும் என்பது ஒருவன் விருப்பமாகுமேயன்றி, நிம்மதியை உறக்கத்திலும் கெடுத்துக் கொள்ளத் தீக்கனாக் காண்டலை ஒருவன் விரும்பான்;

வெளியே புறப்படும்போது நல்ல சகுனம் ஏற்படல் வேண்டும் என்பதனையே ஒருவன் விரும்புவான்; புறப்படும்போது எதிர்த் திசையிலிருந்து வாணியன் வருதல் தீய சகுனம். அதனை ஒருவனும் விரும்பான்.

சூதாடுபவன் அதனால் பொருள் ஈட்டுதலை விரும்புவானே யன்றி அது காரணமாகப் பொருளை இழத்தலை விரும்பான்– ஆதலின் இவை கருத்தின்றாகிய செயப்படுபொருளாயின.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குக் கல்லாடர் என்பார் இயற்றிய உரை *260* நூற்பாக்களுக்குக் கிடைத்துள்ளது.

பெரும்பாலும் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரையை மேற்கொண்டு சிறுபான்மை வேண்டும் விகற்பம் கூறி அவ்வுரை செல்கிறது. கல்லாடர் உரையில் 'காப்பின் ஒப்பின்' (தொ. சொ. 73) என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் உரையை ஒட்டிச் செயப்படுபொருள் கருத்து உள்வழி செயப்படுபொருளும் கருத்து இல்வழிச் செயப்படு பொருளும் என்று இரு வகையாகவும் பிரிக்கப்பட்டு முறையே சோற்றை அட்டான், சோற்றைக் குழைத்தான் என்ற எடுத்துக் காட்டுக்களால் விளக்கப்பட்டுள்ளது, கல்லாடருக்கு முற்பட்ட நச்சினார்க்கினியரை இவ்வாசிரியர், 'முதலாயினார்' என்ற சொல்லால் தழுவிக் கல்லாடருக்கு முதலிடம் கொடுப்பது புதுமையாக உள்ளது.

ஊரைச்செல்வான் பசும்புல்லை மிதித்தான் முதலியன கருத்துண்மையும் கருத்தின்மையும் கலந்த செயப்படுபொருள்.

மாணாக்கனை ஊருக்கு போக்கினான் ஆசிரியன் - மாணாக்கன் போக்கப்படுதலுக்குச் செயப்படுபொருளாயும், போதலுக்கு எழுவாயாயும் அமைதலின் செயப்படுபொருள் கருத்தாவுமாயிற்று. மகட்போக்கிய தாய் என்பதும் அது.

தன்னைத் தான் காதலன் - காதலிப்பானும் காதலிக்கப் படுவானும் தானே ; நாணால் உயிரைத் துறப்பர். துறப்பாரும் துறக்கப்படுவாரும் தாமே. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் - நிறுப்பவனும் நிறுக்கப்படுபவனும் தானே. இவை எழுவாயே செயப்படுபொருளாயின. இவ்வாறு கர்த்திருகருமம் இருவகைத் தாதல் காண்க.

சுயமேவபதம் - தன்னையே குறிக்கும் சொல்; தானே தாமே போல்வன.

பசுவினைப் பாலினை கறந்தான் - துவிகன்மகம் எனப்படும் ஈருருபு இணைந்தன. இதற்கும் ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினவினான் என்பதற்கும் உள்ள வேறுபாடு விளக்கப்பட்டது.



படவே ஈருருபு இணைதல் இருவகைத்தாயிற்று. இதனை வீரசோழியம் தீபகக்கருமம் என்னும். துவிகன்மகம் - அகதிதம் - துணைநிலை - இவை இரு செயப்படுபொருள் அணைதல் என்னும் பொருளன. அகதிதத்திற்கு மறுதலை கதிதம் எனவே, அது ஒரே செயப்படுபொருளைக் கொள்வதைக் குறிப்பதாகும்.

கருத்துண்டாதல் முதலிய ஐந்தும் தெரியாநிலைச் செயப்படு பொருள் எனப்பட்டன. தெரிநிலை, தெரியாநிலை என்பது வடமொழி வழக்கு. தெரிநிலை - செயப்படுபொருள் எனச் சொல்லப்படவேண்டிய நிலை எனவும், தெரியாநிலை செயப்படு பொருள் என்று சொல்லப்படாமலேயே இயல்பாகப் புலப்படும் நிலை எனவும் கொள்ளலாம். வீரசோழிய உரை தெரிநிலை தெரியா நிலைகளை மாற்றிக் கூறி அதற்கேற்ப விளக்கமும் கூறும். (*41*)

வந்தான் என்பது வருதலைச் செய்தான் என இரண்டன் உருபு அடுத்து வரும் தொழிற்பெயராகக் கொள்ளப்படுதலின், செய்தலுக்கு வருதல் செயப்படுபொருளாய் உள்ளே அமைந்திருத்தலின், இஃது அகநிலைச் செயப்படுபொருளாயிற்று. வருதலைச் செய்தான் என்பதன்கண், வருதல் வினை என்பதும் செய்தல் தொழில் என்பதும் சேனாவரையர் உரையானும் (தொ. சொ. *112*) தெளியப்படும்.

உழாஅர் என்பது உழுதலைச் செய்யார் என விரிக்கப்படும்.

ஆகச்சதி — வருகிறான்.

ஆகமனம் கரோதி — வருதலைச் செய்கிறான்.

பொருளைப் பெறும் என்ற தொடரில், எழுவாயின் தொழில் பெறுதல்; அப்பெறுதல்தொழிலின் பயனை உறுவது பொருள். ஆதலின், எய்தப்படுதல் - கருத்தாவின் தொழிற்பயனைச் செயப்படு பொருள் உறும் துணையாய் நிற்றல் எனப்பட்டது. இயற்றப்படுதல் முதலியவற்றின் விளக்கம் ஆகிய நிருத்தி சேனாவரையர் உரைத்ததே.

இக்கருத்துக்களை இணைத்து இலக்கணக்கொத்து நூலார்,

'கருத்துஉண் டாதல் கருத்துஇன் றாதல்
இருமையும் ஆதல் ஈருருபு இணைதல்
கருத்தா ஆதல் அகநிலை ஆதல்
தெரிநிலை ஆதியாய் வரும்செயப் படுபொருள்
இயற்றப் படுதல் எய்தப் படுதல்
வேறு படுக்கப் படுதல் ஆதியும்
அவ்வெழு வகையுள் அடங்கும் என்ப' – இ. கொ. *31*

என்று குறிப்பிட்டுள்ளார்.

மனம் வெளிப்படையாகக் காணப்படுவது ஒன்றன்று ஆதலின், மனம் அகக்கரணம் எனப்பட்டது.

கால் முதலியன வெளிப்படையாகக் காணப்படுவன ஆதலின், புறக்கரணம் எனப்பட்டன.

உயிர்துறத்தலுக்கு நாணும், தந்தை உவத்தலுக்குச் சாத்தன் கை எழுதுமாறு வல்லனுதனும், காமத்தை நுகுத்தலுக்குக் களவையும் ஏதுவாவன. இவற்றை மூன்றாம்வேற்றுமை ஏதுப் பொருளில் வந்தமைக்கு எடுத்துக்காட்டுக்களாகக் கொள்க.

காரகம் – செயலோடு தொடர்புடையது.

ஞாபகம் – அறிவோடு தொடர்புடையது.

வாணிகமாகிய செயல் – காரக ஏது.

பிறப்பன யாவும் அழியும் என்பது அறிவான் அறியப் படுதலின் பிறத்தல் ஞாபக ஏது. இலக்கணக்கொத்து,

'அகம்புறம் ஒற்றுமை ஆகும் கருவி' – *33*

'முதல்துணை ஞாபகம் காரகம் ஏது
வினையே நிமித்தம் வேற்றுமை வினைமுதல்
காலம்ஆ திகளைஇம் மூன்றனுள் கருதுவர்' – *34*

என மூன்றாம் வேற்றுமை பற்றிக் கூறும். *12*



## இடமும் கொள்வோனும்

13. விடையம், ஒரோவழி மேவுதல்,
எங்கும் வியாபகம் என்று
அடைய இம்மூன்று வகையான்
விரியும் அதிகரணம்;
பெடை மயிலே! அநிரா கருத்தாவும்,
பிரேரகமும்,
கொடைஎதிர் கூற்று அநுமந்தாவும்,
ஆம்என்பர் கொள்பவனே.

இது அதிகரண பேதமும் சம்பிரதான பேதமும் கூறுகின்றது. விடயம் முதல் மூன்றும் அதிகரணம் எனப்படும். அநிரா கருத்தா முதல் மூன்றும் சம்பிரதானம் எனப்படும்.

'விடயம் உரிமை விளம்புங் காலே'
'ஒரோவழி மேவுதல் உபச்சி லேடம்'
'வேற்றுமை நயத்தால் வேறே ஆயினும்
ஒற்றுமை நயத்தால் ஒன்றுஅபி வியாபகம்'

இவை உரைச் சூத்திரம். கொடை எதிர் கூற்றாகிய கொள்பவன் எனக் கூட்டுக. எங்கும் வியாபகம் – அபிவியாபகம்.

உ-ம்:

கடலுள் மீன் திரிகின்றது; காட்டுள் நரி திரிகின்றது.

'நெடும் புனலுள் வெல்லும் முதலை' – கு. 495
'பகல் வெல்லும் கூகையைக் காக்கை' – கு. 481

இவை விடயாதாரம்.

'கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து' – கு. 496

'ஆலத்தின் மேல குவளை குளத்துஉள
வாலின் நெடிய குரங்கு' – பழம்பாடல்

இவ்வெதிர்மறையானும் விடயம் உரிமை என்பது அறிக.

'மதிக்கண் மறுப்போல் உயர்ந்து' - கு. 957

குன்றின்கண் குவடு – கையின்கண் விரல் – ஆண்டின்கண் இருது என்றும், பாயின்கண் இருந்தான் – தேர்க்கண் இருந்தான் என்றும் சமவாயமும் சையோகமுமாக வந்த உபச்சிலேடம்.

எள்ளின்கண் நெய், தயிரின்கண் நெய், அரணிக்கண் தீ, மணியின்கண் ஒளி, உயிரின்கண் உணர்வு - இவை ஒரு பொருளின்கண் பிறிது ஒரு பொருள் வேற்றுமையின்றி ஒற்றுமைப் பட்டுக் கலந்த அபிவியாபகம்.

இவ்வுதாரணங்களுள் சில ஆதார ஆதேயங்கள் அருவாயும் உருவாயும் வரும்.

உ–ம்: வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி, ஆகாயத்தின் கண் பருந்து, மகத்தில் பிறந்தான்,

'நல்லார்கண் பட்ட வறுமை' – கு. 408

என வரும்.

இனி, வடநூலார் உள் என்னும் சத்தமி விபத்தி ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தல் என்னும் யோக விபாகத்திலும், பிரித்துக் கூட்டல் என்னும் விபாக யோகத்திலும் ஆதாரம் இன்றி வருவதனை நிர்த்தாரணே சத்தமி என்பர்.

உ–ம்:

'உடையான் அரசருள் ஏறு' - குறள் 381

'அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரில் பேதையார் இல்' - குறள் 142

என்றும்,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்' - குறள் 50

'ஒத்த(து) அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்' - குறள் 214

என்றும் வரும். இவை அதிகரணம் அன்மை அறிக.



'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்' - குறள் 388

இது சத்தமி வருமிடத்துச் சட்டி வருதலின், நிர்த்தாரணே சட்டி எனப்படும்.

'முக்கண் மூர்த்திக்குப் பூ இட்டான்'

'கள்ளார் துழாயும் கணவாலும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்முன் கண்டக்கால்
புள்ளாய்ஓர் ஏனமாய்ப் புக்குஇடந்தான் பொன்னடிக்குஎன்று
உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே'
– திவ். பிர. 2017

இவை அநிராகர்த்திரு சம்பிரதானம்.

'வறியார்க்கு ஒன்று ஈதலே ஈகை' - குறள் 221

'இரப்பார்க்கு ஒன்று ஈதல்' இவை பிரேரக சம்பிரதானம்.

ஆசாரியன் மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தான் – இது அநுமந்திரு சம்பிரதானம்.

இஃது,

'அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு' - குறள் 841

என அபேதத்தினும் வரும். (*13*)

## விளக்கம்

உரிமை – ஒற்றுமை எனவும் கூட்டம் எனவும் இருவகைப் படும் ஓரிடம் – எங்கும் பரந்திருத்தல் என இடம் மூன்று வகைப் படும். கிடப்புக்கோளி, இரப்புக்கோளி, ஆர்வக்கோளி எனக் கோளி மூவகைப்படும்.

புனல் முதலைக்கும், பகல் காக்கைக்கும், கடல்நாவாய்க்கும், நிலம் தேருக்கும் உரிமை.

கையின் விரலும், மதியின் மறுவும், ஆண்டின்கண் இருதுவும் ஒற்றுமை மேவுதல். சமவாயம் - ஒற்றுமை.

பாயின்கண் இருத்தலும், தேர்க்கண் இருத்தலும் கூட்டம் மேவுதல்.

சையோகம் - கூட்டம். சமவாயம் தற்கிழமைப் பொருட்டு. சையோகம் பிறிதின்கிழமைப் பொருட்டு.

என்னின்கண் நெய் முதலியன எங்கும் மேவுதலாம். அபிவியாபகம் - எங்கும் பரந்திருத்தல்.

வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி - ஆதாரம் உரு. ஆகாயத்தின்கண் பருந்து, மகத்தில் பிறந்தான். இவை ஆதாரம் அரு. நல்லார்கட்பட்டவறுமை - ஆதேயம் அரு. நிர்தாரணே சத்தமி - நிலையிடுதற்கண்வரும் ஏழாவது. ஒருவனை அரசருள் கூட்டிப் பின் ஏறு எனப் பிரித்தலும், ஒருவனை அறன் கடை நின்றாருள் கூட்டிப் பின் பிறன்கடை நின்றான் எனப் பிரித்தலும், வாழ்பவனை வையத்தாரிடமிருந்து பிரித்துத் தெய்வத்தோடு கூட்டலும், ஒத்தது அறியாதானை உயிருடையாரிடமிருந்து பிரித்துச் செத்தாருள் கூட்டலும் இடப்பொருள அன்மை அறிக.

முறைசெய்து...... வைக்கப்படும் என்புழி, மக்களுள் என ஏழன் உருபுவாராது, மக்கட்கு என ஆறன் உருபு வந்தமையால், இது நிர்தாரணே சட்டி எனப்பட்டது. நிர்தாரணம் - நிலையிடுதல்.

இச்செய்திகளை இலக்கணக்கொத்து நூலார் 42-ஆம் நூற்பாவில்,

'உரிமை இருவகை ஓரிடம் எங்கும்
எனநான்கு என்றே இயம்புவர் இடனே;
காலம்திக்கு ஆகாயம் வெயில்இருள்
நிலம்அரு உருமுதல் நிகழ்த்தப் படும் இடம்;



கூட்டிப் பிரித்தல் பிரித்துக் கூட்டல்
இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயர்
எனமூ வகைப்படும் இடம்அல் லாவிடம்;
இடத்தின் நிகழ்பொருள் இருவகை அருஉரு' என்பர்.

இவற்றுள் இருவரின் முடியும் ஒரு வினைத் தொழிற் பெயராகும் சதிசத்தமி இந்நூலுள் 16-ஆம் காரிகையுள் கூறப்படும். ஏனைய ஈண்டுக் கூறப்பட்டன.

முக்கண் மூர்த்திக்குப் பூவிடுதல், ஏனமாய்ப் புக்கு இடந்தான் பொன்னடிக்கு என்று உள்ளுதல் - இறைவன் தனக்குப் பூ வேண்டும் என்றும், தன் அடிகளை வழிபடுதல் வேண்டும் என்றும் இரந்திலாமையானும், மக்கட்கு அவனைப் பூவிட்டு வழிபடுதல் இயல்பாகலானும் இது கிடப்புக்கோளி என்னும் கேளாது ஏற்றலாயிற்று. அநிராகர்த்திரு சம்பிரதானம் — கேளாது ஏற்றல். (மருவிடத்துக் கொடை)

வறியார் 'வேண்டும்' என்று இரந்து பெறுதலின், வறியார்க்கு ஈதல் இரப்புக்கோளி என்னும் கேட்டே ஏற்றலாயிற்று. பிரேரக சம்பிரதானம் — கேட்டே ஏற்றல்; இரப்புக்கோளி.

ஆசிரியன் மாணாக்கனை ஒறுத்தல் - ஆசிரியன் மாணாக்கன் திருந்துதல் வேண்டும் என்ற விருப்பத்தோடு கொடுத்தமையானும், மாணாக்கனும் தன் நலன் கருதி விருப்பத்தோடு கொண்டமையானும், ஆர்வக்கோளி என்னும் விருப்பாய் ஏற்றலாயிற்று.

அநுமந்திரு சம்பிரதானம் - அனுமதிக்கப்பட்ட நான்காவது; ஆர்வக்கோளி;

அறிவிலான் தனக்குத் தானே தீங்கு செய்து கொள்ளுதல் - கொடுப்பானும் ஏற்பானும் தானே யாதலின், ஈவோன் ஏற்றல் என வேறுபாடின்மைக்கண் வந்தது.

இந்நான்காம் வேற்றுமைப் பொருளை இலக்கணக்கொத்து நூலார் பலவாக விரித்து,

'கேளாது ஏற்றல் கேட்டே ஏற்றல்
ஏலாது ஏற்றல் ஈவோன் ஏற்றல்
உயர்ந்தோன் ஏற்றல் இழிந்தோன் ஏற்றல்
ஒப்போன் ஏற்றல் உணர்வின்று ஏற்றல்
விருப்பாய் ஏற்றல் வெறுப்பாய் ஏற்றல்
ஆதியாப் பலவும் அறைந்தனர் கொள்வோன்' - 36

என்று நூற்பா யாத்து,

"ஆவிற்கு நீர் விட்டான் – கேளாது ஏற்றல்;
வறியார்க்கு ஈந்தான் – கேட்டே ஏற்றல்;
மாணக்கனுக்கு அறிவு கொடுத்தான் – ஏலாது ஏற்றல்;
தனக்கு அரிசி கொடுத்தான் – ஈவோன் ஏற்றல்;
அரனுக்குக் கண் அலர் கொடுத்தான் அரி – உயர்ந்தோன் ஏற்றல்;
அரிக்குச் சக்கரம் கொடுத்தான் அரன் – இழிந்தோன் ஏற்றல்;
சோழற்கு விருந்து கொடுத்தான் சேரன் – ஒப்போன் ஏற்றல்;
சோற்றிற்கு நெய் விட்டான் – உணர்வு இன்றி ஏற்றல்;
மாணக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசான் – விருப்பாய் ஏற்றல்;
கள்ளனுக்குக் கசையடி கொடுத்தான் அரசன் – வெறுப்பாய் ஏற்றல்;
'ஆதி' என்றதனல்,
மருகனுக்கு மகட் கொடுத்தான் – வழக்கு;
மகனுக்கு அரசு கொடுத்தான் – உரிமை;
அரசற்குத் திறை கொடுத்தான் – அச்சம்;
தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான் – பாவனை –
எனவும் வரும்" என எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். 13



## காரகச்சொல் பல உருபுகளோடு வருதல்

14 ஆதியது என்பர் அபிகித
கர்த்தா; அநபிகிதம்
ஆதிவிட்டு ஆரெடுமூன்றும் பெறும்
என்பர் ஆய்ந்து உணர்ந்தோர்;
ஆதியது என்பர் அபிகித
கன்மம்; அநபிகிதம்
ஆதிஐந்து ஏழ்ஒழிந்த அல்லாதன
பெறும்; ஆரணங்கே!

இஃது ஒரு காரகபதம் பல உருபுகளோடு வருதல் கூறுகின்றது. அபிகித கருத்தாப் பிரதமையோடு வரும். அநபிகித கருத்தாத் திருதியை, சட்டி என்னும் இரண்டோடும் வரும். அபிகித கருமம் பிரதமையோடு வரும். அநபிகித கருமம் துதியை, திருதியை, சதுர்த்தி, சட்டி என்னும் இந்நான்கோடும் வரும்.

உ-ம்: திண்ணை மெழுகிற்று, தேவதத்தன் சோற்றை அட்டான், விழுமியோர் நன்மையினைச் செய்வர் – என அபிகித கருத்தா பிரதமா விபத்தியால் வந்தது.

அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம், அவரால் செய்யத் தகும் அக்காரியம் – என அநபிகித கருத்தாவோடு ஆறும் மூன்றும் வரும்.

**'வினைமுதல் கருவி அனைமுதற்று அதுவே'** - தொ. சொ. 73

என்பதனல், கருத்தா மூன்றன் உருபு பெறுதலோடு ஈண்டு ஆறு பெறுதலும் கொள்க. ஈண்டுக் குகரம் ஆறன் உருபு.

சோறு தேவதத்தனல் அடப்பட்டது என அபிகித கருமம் பிரதமையோடு வந்தது.

நூலை அறிந்தான், மரத்தைக் குறைத்தான் - என அநபிகித கருமம் துதியையோடு வந்தது.

பாலை ஓமம் செய்தான், பாலால் ஓமம் செய்தான் ;

தயிரை ஓமம் செய்தான், தயிரால் ஓமம் செய்தான் ;

**'ஆலத்தினால் அமிர்து ஆக்கிய கோன்'** - கோவை. 27

என அநபிகிதகருமம் திருதியையால் வந்தது. 'ஆலத்தினால் என்னும் திருக்கோவையாருள் பேராசிரியர் சொற்சோதனை காட்டிய 'பாலால் தயிராக்கினான்' என்பதும் அது.

அவளைக் கொள்ளும் இவ்வணிகலம், அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம் - இது அநபிகித கருமம் சதுர்த்தியோடு வந்தது. நூலைக் குற்றம் கூறினான், நூலது குற்றம் கூறினான் -

**'தாயைக் குடர்விளக்கம் செய்தான்'** - திவ். பிர. 478

- தாயது குடர் விளக்கம் செய்தான்.

**'அவனை இகல் வெல்லல்'** - கு. 647

- அவனது இகல் வெல்லல்

**'குடும்பத்தைக் குற்றம் மறைப்பான்'** - கு. 1029

- குடும்பத்தது குற்றம் மறைப்பான் - இவை சட்டியோடு வந்தது.

கிராம மகச்சத், கிராமாய கச்சத் என்பதற்கு ஊரைச் சென்றான், ஊர்க்குச் சென்றான் என வடமொழியில் இருந்த வண்ணமே தமிழ் உரைகாரரும் மொழிபெயர்த்து உதாரணங் காட்டினர். இவற்றை வடநூலார் கர்மணி சட்டி என்பர்.

'அநபிகித கன்மம்' என்னுமலே 'அநபிகிதம்' என்ற சேடத்தாலே,

தூணைச் சார்ந்தான், தூணின்கண் சார்ந்தான் -

கண்ணைக் குத்தினான், கண்ணுள் குத்தினான் -

கோட்டைக் குறைத்தான், கோட்டின்க்ண் குறைத்தான் -

என ஏழோடும் வரும்.



இனி, இவ்வாறு நேரே முடிக்கும் சொல்லோடு வந்த மயக்கங்களைக் காரகவிபத்தி என்பர். நூலைக் குற்றம் கூறினான், பாலைத் தயிர் ஆக்கினான், குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் என்பன உபபதத்தோடு முடிதலின் உபபதவிபத்தி என்பர்.

**'ஆதியது என்ப அபிகித கர்த்தா'**

**'ஆதியது என்ப அபிகித கன்மம்'**

எனவே, கரும கருத்தாவும் சுதந்திர கருத்தாவும் ஏதுகருத்தாவும் அபிகிதமேயாம். அபிகிதகன்மம் ஒழிந்த ஐந்து கருமமும் அநபிகிதமாம். ஆயினும், தத்தம் பொருள் வேறுபட்டால் வேறு குறியிட்டு ஆளவேண்டிக் கருத்தா ஐந்து என்றும் கருமம் ஏழ் என்றும் கூறுவர். (14)

## விளக்கம்

வேற்றுமை உருபுகளை விளக்கி, இனி, ஒரு வேற்றுமை உருபு தன் பொருளில் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் சேரும் பொருள் மயக்கம் கூறத் தொடங்குகிறார்.

அபிகித கருத்தா - வினைமுதல் என்று தெரியப்பட்டு வினை முதலாய் நிற்பது; திண்ணை மெழுகிற்று முதலியன. அநபிகித கருத்தா - வினைமுதல் என்று தெரியப்படாமல் வினைமுதலாயே நிற்பது ; அவற்குச் செய்யத்தகும் அக்காரியம் முதலியன. தெரியாநிலைக் கருத்தாவோடு குவ்வுருபும் ஆன் உருபும் வருதல் 'இதனது இது இற்று என்னும் கிளவியும்' (தொ. சொ. 110) என்ற நூற்பாவில் கூறப்பட்டுள்ளது. அங்குக் குகரம் நான்கன் உருபு. இவ்வாசிரியர் அதனை ஆறன் உருபு என்பர்.

அபிகித கருமம் - சோறு தேவதத்தனால் அடப்பட்டது - என்பழிச் சோறு வினைமுதலாகி வந்தும் செயப்படுபொருளே என்று தெரியப்பட்டது.

பாலை ஓமம் செய்தான், பாலால் ஓமம் செய்தான் என இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கின.

அவளைக் கொள்ளும் இவ்வணி, அவட்குக் கொள்ளும் இவ்வணி என இரண்டும் நான்கும் மயங்குதல் 'இதனது இது இற்று' (தொ. சொ. 110) என்னும் நூற்பாவினுள் சுட்டப் பட்டுள்ளது.

அவனை இகல் வெல்லல், அவனது இகல் வெல்லல் – என இரண்டாவது ஆறாவதனோடு மயங்கிற்று.

ஊரைச் சென்றான், ஊர்க்குச் சென்றான் என இரண்டாவது நான்காவதனோடு மயங்கிற்று. இக்குகரம் வடமொழிக்கு ஆறன் உருபின் பொருளதாம்.

தூணைச்சார்ந்தான், தூணின் கண் சார்ந்தான் – முதலிய மூன்றும் முறையே தொல். சொல். 84க்கு மாறுபட்டும், 93-ஆம் சூத்திர உரையில் சேனாவரையரால் விளக்கப்பட்டும், 85-ஆம் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாகவும் அமைந்தன.

நூலை என்பது கூறினான் என்ற ஒரு சொல்லோடு முடியாமல் குற்றங்கூறினான் என்ற இரு சொல்லோடும், பாலை என்பது தயிராக்கினான் என்ற இருசொல்லோடும், குடும்பத்தை என்பது குற்றம் மறைப்பான் என இருசொல்லோடும் முடிதலின், இவை இருசொற்கொண்டு முடியும் வேற்றுமைஏற்றசொற்களாம்.

இவ்வாசிரியர் கருத்தா ஆறு எனவும், கருமம் ஏழ் எனவும் கொண்டார். இலக்கணக்கொத்து நூலார் கருத்தா ஏழ் என்றும் கருமம் ஏழ் என்றும் கூறி விளக்குவர். கருத்தாவை ஐந்தாகவும், கருமத்தை ஏழாகவும் பகுப்பர் வீரசோழிய நூலார். (40, 41) எனவே, எழுவாய் செயப்படுபொருள் இவற்றின் பகுப்புப்பற்றி நூல்களிடையே வேறுபாடுண்மை தேற்றம்.





## பொருள் மயக்கம்

15. ஆறொடும் ஐந்தொடும் மூன்றொடும்
 தோன்றும் அருங்கரணம்;
ஆறொடும் நான்கொடும் மூன்றொடும்
 தோன்றும் அளித்தல் கொள்வோன்;
வீறொடும் தோன்றும் ஐந்துஅன்றிப்
 பெறாது விடும் அவதி;
ஈறொடும் தோன்றும் கண் அன்றிப்
 பெறாது இடம்; ஏந்திழையே!

இதுவும் அது. கரணம் சட்டி, பஞ்சமி, திருதியை என்னும் மூன்றோடும் வரும். சம்பிரதானம் சட்டி, சதுர்த்தி, திருதியை என்னும் மூன்றோடும் வரும். அபாதானம் பஞ்சமியோடு வரும். அதிகரணம் சத்தமியோடு வரும் என்றவாறு. ஈறொடும் என்றது செய்யுள் விகாரம்.

உ–ம் :

செவிக்குக்கேட்கலாம், செவியால் கேட்கலாம் –
கண்ணிற்குக்காணலாம், கண்ணாற்காணலாம் –
வாய்க்குத் தக்கது வாய்ச்சி, வாயால் தக்கது வாய்ச்சி –
கோடாலியது வெட்டு, கோடாலியால் வெட்டும் வெட்டு –

'படல்ஒல்லா பேதைக்கு என்கண்' – குறள் 1136

பேதையால் என்கண் – எனக் கரணம் ஆறன் உருபோடு வந்து ஏதுவின் கரணமாய் அடங்கும். ஈண்டுப் பேதை கருத்தா ஆகாது, கரணமாய்க் குகரம் ஆறன் உருபான் வந்தது.

'யாம்கண்ணிற் காண நகுப' – கு. 1140

எனப் பஞ்சமியால் கரணம் வந்தது.

'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால்' – கு. 1148

இது திருதியையால் வந்தது.

நாகரதுபலி, நாகர்க்குப்பலி,

'வரைவின் மகளிரான் மாலை வழங்கியோன்'

எனச் சம்பிரதானம் இம் மூன்றனோடும் வந்தது.

'அறிவுடை அந்தணன் அவளைக்காட்டு என்றானே' – கலி. 72–18

'தவ்வையைக் காட்டி விடும்' - கு. 167

எனச் சம்பிரதானம் வடநூலார் கூறாத இரண்டனோடும் வந்தது.

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' – கு. 353

'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி' – கு. 502

'சிறுமையின் நீங்கிய இன்சொல்' – கு. 98

என அபாதானம் என்னும் நீக்கம் ஐந்தன்கண்ணே வந்தது.

'நினைப்பானை நீங்கும் திரு' – கு. 519

'ஊர்க்குத் தீர்ந்தான்' –

எனத் தமிழில் அபாதானம் துதியையோடும் சதுர்த்தியோடும் நியமம் தப்பி வந்தது. உவமை, சீமை, ஏது என்பனவற்றின்-கண்ணும் பஞ்சமி விபத்தி வரும். நீக்கம் பஞ்சமியிலேயே வரும் என்பது ஆசிரியர் கருத்து. குற்றத்தினின்றும் ஐயத்தினின்றும் என விரிக்க. வாணிகத்தின் ஆயினான் என்பதனை வாணிகத்தின் கண் நின்றும் ஆயினான் எனவிரிக்கின் குற்றமாம் என்க.

தேரிலே இருந்தான், தேர்க்கண் இருந்தான் என அதிகரணம் ஏழின்கண் வந்தது. நெறியிற் சென்றான், நெறியைச் சென்றான் – என அதிகரணத் துதியை நியமம் தப்பி அகன்மக தாதுவில் வந்தது. வடமொழி நளன் கதையில், 'வனத்தில் அரமனையைச் சென்றான்' என்னும் கதி தாதுவும் அது. 'அத்துவானங்கச்சதி, அத்துவ நிகச்சதி' என வடமொழியில் வரும். சேனாவரையரும்,



'வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்' – தொ. சொ. 113

என்னும் சூத்திரத்துச் செயப்படுபொருள் குன்றிய வினையை உணர்த்தும் சொல் இரண்டாவதனோடு இயையாது என்றார்.

இனி,

'இஈ ஆகும் ஐஆய் ஆகும்' – தொ. சொ. 121
'ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்' ,, 122
'உகரம் தானே குற்றிய லுகரம்' ,, 123
'ஏனை உயிரே உயர்திணை மருங்கின்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்' ,, 124

இவையெல்லாம் நியமவிதிச் சூத்திரம். இந்நியமம் கடந்து ஆடுவே, மகடுவே, திருவே, மகவே என விளி பெறுதல் போலக் கொள்க. இவ்வாறு வருவன பொருள் மயக்கம். அஃதாவது தன் பொருளில் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் சென்று உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் சிறுபான்மை தம்முள் இயைபு உடையவாதல்.

உருபு மயக்கமாவது தன் பொருளில் தீர்ந்து பிறிது ஓர் உருபின் பொருட்டாதல். அவ்வாறு,

'யாதன் உருபில் கூறிற்று ஆயினும்' – சொ. 106

என்னும் சூத்திரத்துள் சேனாவரையர் முதலாயினார் கூறியதானும் தெளிக.

உ–ம் :

'கிளைஅரி நாணல் கிழங்குமணற்கு ஈன்ற
முளைஓ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்' – அகநா. 212

'காலத்தினால் செய்த நன்றி' – கு. 102

இவற்றுள் நான்கும் மூன்றும் ஏழன் பொருளவாய் நின்று, உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயையாமலே நின்றன.

'கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம்' – நற். 280

'நாகு வேயொடு நகுபு வீங்குதோள்'

இவற்றுள் நான்கும் மூன்றும் ஐந்தாவதன் பொருட்டாயும் இரண்டாவதன் பொருட்டாயும் நின்றன.

**'சிதல்எறும்பு ஆதிமூக்கு அறிவின்மூ வறிஉயிர்'** – நன். 447

இதனுள் இன் ஒடுப்பொருட்டாதல் அவ்வுரையில் காண்க.

'பழியை அஞ்சினான் – பழியின் அஞ்சினான்' என்பது உருபும் பொருளும் உடன் மயக்கம், அச்சப் பொருளை 'இரண்டிற்கும் ஐந்திற்கும் எச்சம்இல' என்று மயக்கத்துள் விதித்தமையால் என்க. 'புலிகொல் யானை' 'வாளைமீன் உள்ளல் தலைப்படல்' இவற்றுள் புலி கருத்தா ஆகியும் கருமம் ஆகியும், யானை கருத்தா ஆகியும் கருமம் ஆகியும் நிற்பதும், வாளைமீன் கருத்தா ஆகியும் கருமம் ஆகியும் உள்ளல் என்னும் குருவி கருத்தா ஆகியும் கருமம் ஆகியும் நிற்பதும் தடுமாறு தொழில் என்னும் இதரேதரக் கிரியையால் வரும் என்க.

சாத்தற்கு நெடியன், கருவூர்க்குக் கிழக்கு, மனை-வாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் – இவை பஞ்சமியில் சதுர்த்தி வந்தது. இவ்வாறு வந்தாலும் அபாதான காரகம் ஆவது அல்லது வேறு ஆகாது என்க.

**'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்'** – சொ. 100

என்னும் சூத்திரத்துள், பழியின் அஞ்சும் – பழியை அஞ்சும் என இரண்டும் ஒத்த கிழமையவாய் நின்றன என்றும், 'அஃதேல் ஒரு பொருட்கண் வரின் அன்றே மயக்கம் ஆவது? இவை செயப்படுபொருளும் ஏதுவும் ஆகிய பொருள் வேறுபாடு உடைய ஆதலின் மயக்கம் யாது என்றும், அற்றன்று; ஈண்டு ஏது ஆதலே அஞ்சப்படுதலாய் வேறன்றி நின்றலின் ஒரு பொருட்கண் வந்தனவேயாம் என்றும் சேனாவரையர் உரைத்ததனானும் அறிக.

மாலைக்கு வரும், காலைக்கு வரும், ஊர்க்குச் சென்றான் – இவை சத்தமியில் சதுர்த்தி வந்தது. இவ்வாறு காரக பதப் பொருளில் பல உருபு வருதல் காண்க. (15)



விளக்கம்

இக்காரிகையும் தன் பொருளில் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் சேரும் பொருள் மயக்கம் கூறுகின்றது. தன் பொருளில் தீர்ந்து பிறிது ஒன்றன் பொருட்கண் சேரும் உருபு மயக்கமும் உரையில் விளக்கப்பட்டுள்ளது.

செவிக்குக் கேட்கலாம் முதலியவற்றில் குகரம் ஆறன் உருபு எனவும், செவி முதலியன ஏதுப் பொருளன என்றும் இவ்வாசிரியர் கருதுகிறார்.

ஏது மூன்றும் வேற்றுமையினும் ஐந்தாம் வேற்றுமையினும் வருதலைத் தொல்காப்பியனார் வேற்றுமை மயங்கியலுள் 'மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய' (தொ. சொ. 92) என்ற நூற்பாவால் குறிப்பிட்டுள்ளார்.

கொள்வோன் ஆறனோடும், மூன்றனோடும் மயங்கும் என்கின்றார் இவர். 'கு-தொக வரூஉம் கொடைஎதிர் கிளவி' (99) என்ற நூற்பாவால் கொள்வோன் ஆறனொடு மயங்குமாற்றைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

கதி தாது – செயப்படுபொருள் ஒன்று கொள்ளும் வினைப் பகுதி;

அத்வானம் கச்சதி – வழியைச் சென்றான்;

அத்துவநி கச்சதி – வழியில் சென்றான்;

விளி மரபில் 'இ ஈ ஆகும்' முதலாக நான்கு நியமச் சூத்திரங்களும் விதிக்கும் விதியைக் கடந்தும் விளியேற்றல் வருமாறு போல, கூறிய நியமங் கடந்தும் பொருள்மயக்கம் நிகழும் என்பதனை விளக்கியுள்ளார்.

பொருள் மயக்கத்திற்கு இவர் கூறும் விளக்கம் சேனாவரையர் உரைத்ததே. உருபு மயக்கமும் அது.

மணற்கு ஈன்ற – மணலின் கண் ஈன்ற – 4 – 7

காலத்தினால் செய்த – காலத்தின்கண் செய்த – 3 – 7

வேயொடு நகுபு – வேயினை நகுபு – 3 – 2

கொக்கினுக்கு ஒழிந்த – கொக்கினின்றும் ஒழிந்த – 4 – 5

மூக்கு அறிவின் மூவறிவுயிர் – மூக்கறிவினோடு – 5 – 3

மூக்கு அறிவின் என்புழி ஐந்தாம் வேற்றுமையின் நீக்கப் பொருளதாகிய இன், அப்பொருளில் தீர்ந்து மூன்றாம் வேற்றுமையின் உடன் நிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

பழியை அஞ்சினான் – இரண்டாவது
செயப்படுபொருட்கண் வந்தது;

பழியின் அஞ்சினான்–ஐந்தாவது ஏதுப் பொருட்கண் வந்தது;

இரண்டாவதாகிய செயப்படுபொருள் ஐந்தாவதாகிய ஏதுப் பொருளதாதல் உருபும் பொருளும் உடன் மயக்கம். இதற்கு விதி 'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்' (தொ. சொ. 100) என்பது. புலி கொல் யானை – புலியைக் கொன்ற யானை – புலியால் கொல்லப்பட்ட யானை. இதற்கு விதி 'தடுமாறு தொழிற் பெயர்க்கு இரண்டும் மூன்றும்' (தொ. சொ. 95) என்பது. புலியைக் கொன்ற யானை என்புழி யானை எழுவாய்; புலி செயப்படுபொருள். புலியாற் கொல்லப்பட்ட யானை என்புழிப் புலி எழுவாய்; யானை செயப்படுபொருள். இங்ஙனம் ஒரு பொருளே ஒரு கால் எழுவாயாயும் ஒரு கால் செயப்படு பொருளாயும் தடுமாறி வந்தமை காண்க.

சாத்தற்கு, கருவூர்க்கு, மனைவாழ்க்கைக்கு என்பன நான்கன் உருபு ஏற்ற பெயராயினும் சாத்தனின், கருவூரின், மனை வாழ்க்கையின் என ஐந்தாவதன் ஒப்பு, எல்லை, நீக்கம் ஆகிய பொருட்கண் வந்தவாறு காண்க. (தொ. சொ. 110) பழியின் அஞ்சும், பழியை அஞ்சும் – முதல் தொடரில் பழி ஏது;



இரண்டாம் தொடரில் பழி செயப்படுபொருள். ஒரு சொல்லே ஏதுவாகவும், செயப்படுபொருளாகவும் வருகின்றமை மயக்கமாம் என்பர் சேனாவரையர். – சொ. 100

காலைக்கு வரும் – காலையில் வரும் – தொ. சொ. 110

அவளைக் காட்டு – அவளுக்குக் காட்டு; தவ்வையைக் காட்டிவிடும் – தவ்வைக்குக் காட்டிவிடும். இவ்வாறு நான்காவது இரண்டாவதனோடு மயங்குதல் வடநூலார்க்கு உடன்பாடன்று என்கிறார்.

நினைப்பானை நீங்கும் – நினைப்பானின்நின்று நீங்கும்; ஊர்க்குத் தீர்ந்தான் – ஊரினின்று தீர்ந்தான் என ஐந்தாம் வேற்றுமை இரண்டனோடும் நான்கனோடும் மயங்கி வருதல் வடநூலார்க்கு உடன்பாடன்று.

ஐந்தாவது நான்காவதனோடு மயங்கி வருதலை,

'இதனது இது இற்று என்னும்' – சொ. 110

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாவது நீக்கப்பொருட்டாய் வருதலே அன்றி ஒப்பு, எல்லை, ஏது என்ற பொருள்களிலும் வரும்.

குற்றத்தின் நீங்கி – ஐந்தாவது நீக்கப்பொருட்டு; வாணிகத்தின் ஆயினான் – ஐந்தாவது ஏதுப்பொருட்டு.

நெறியிற் சென்றான், நெறியைச் சென்றான் என ஏழாவது இரண்டாவதனோடு செயப்படுபொருள் குன்றிய வினைக்கண் மயங்குதல் வரையறையைக் கடந்ததாகும். செயப்படுபொருள் குன்றிய வினையை இரண்டன் உருபு ஏற்ற சொல் சென்று இயையாது என்பதே வரையறை.

'ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்' – சொ. 72

எனத் தொல்காப்பியனார் செலவை இரண்டாவதன் முடிக்குஞ் சொல்லாகக் குறிப்பிட்டுள்ளமை வரையறையை நெகிழ்த்துக் கூறுவதற்கு ஆதாரமாகும்.

இம் மயக்கங்கள்பற்றி இலக்கணக்கொத்து ஆசிரியர்,

'ஒன்று மூன்றுநான்கு ஆறுஎனும் உருபொடு
வருமே வினைமுதல் எனவகுத் தனரே' – 44

'எல்லா உருபொடும் செயப்படு பொருள்எழும்' – 45

'ஒன்று மூன்றுநான்கு ஐந்துஆறு உருபொடு
கருவி வரும்எனக் கருதினர் புலவர்' – 46

'எல்லா உருபொடும் கொள்வோன் எழுமே' – 47

'இரண்டுநான்கு ஐந்தொடு நீக்கம் எழுமே' – 48

'நான்குஐந்து ஆறுஏ ழொடுகுறை நடக்கும்' – 49

'ஒன்றுஇரண்டு நான்கு ஏழோடு இடம் எழும்' – 50

என்று நூற்பாக்கள் யாத்து எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். (இவற்றுள் பெரும்பாலான இந்நூலாசிரியருக்கு உடன்பாடாம்.)

'நீக்கம் இன்றியும் நிகழ்த்தும் இன்னே' – 56

'குறையே அன்றியும் கூறும்ஆ றுவது' – 57

'உரிமை முதல் மூன்றும் ஒருங்கே தோன்ற
நிற்கும் உருபுகள் சிலஉள நினைக்கின்' – 60

'தடுமாறு உருபுகள் தாம்சில உளவே' – 61

என்பனவும் பொருள் மயக்கம் பற்றியனவே.

உருபு மயக்கம் பற்றி,

'மாறுபட நிற்றல் வரம்பிலை என்ப' – 59

என்று நூற்பாயாத்து எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். 15



## உருபுகளின் சிறப்புப் பெயர்களும், காரகமுடிபும்

16. உடன்நிகழ்கின்ற சகார்த்தாதி ஆகும்
ஒடுச்சொல்; கொள்வோன்
விடல்நிகழ்கின்ற - கு – தாதர்த்தி
ஆதி; வினைநிகழ்ச்சி
படல் நிகழ்கின்ற கண்ணே
சதிசத்தமி; பால்மொழியாய்!
கடன்நிகழ் வேற்றுமைதாம்
வினையான்முற்றல் காரகமே.

இது மூன்றன் உருபும் நான்கன் உருபும் ஏழன் உருபும் சிறப்புப்பெயர் பெறுமாறும், காரகங்கள் முடிவு பெறுமாறும் கூறுகின்றது.

ஒடுவும் ஆனும் 'கூட' என்னும் பொருளாய்ச் சகார்த்தத் திருதியை என்றும், குகர உருபு தாதர்த்தியமாய் வந்து தாதர்த்தியே சதுர்த்தி என்றும், ஏழன் உருபுகள் தன்வினையும் பிறவினையுமாய் நின்ற தொடருள் வினைதன்னைச் சொல்லும் பெயரின்பின் நின்று சதிசத்தமி என்றும் பெயர்பெறும். உருபு ஏற்ற சொற்கள் பெயரால் முடியாது ஆத்மநேபதத்தோடும் பரஸ்மை பதத்தோடும் முடிந்தால் காரகமாம் என்றவாறு.

வடநூலுள் மூன்றும் விபத்தி ஒன்று அல்லது இரண்டு இல்லை. தமிழ் நூலுள் ஆன் ஒடு என மூன்றுவதற்கு வரும் ஆயினும், பொருள் வேறுபாடு இன்மையின் ஒன்றேயாம் எனச் சேனாவரையரும் கூறுவர். – சொ. 74 சே.

சதிசத்தமியைத் தொல்காப்பியர் வினைசெய் இடம் என்பர். (சொ. 81) பரிமேலழகர் வினைநிகழ்ச்சி என்பர்.

உடன்நிகழ்வு எனினும் ஒருவினை எனினும் கூட எனினும் ஒக்கும் ஆதலின், தொல்காப்பியரும் ஒருவினை ஒடுச்சொல் என்பர். ஒடுப் போலே ஆன் உருபு சகார்த்தமாய் வருவதூஉம் அன்றித் தொறு என்னும் பொருளாயும் வரும்.

உ-ம் :

மாணவகனெடு ஆசிரியன் வந்தான், ஆசிரியனெடு மாணவகன் வந்தான், தாயொடு மகள் வந்தாள், மகளொடு தாய் வந்தாள்,

'சிறப்பொடு பூசனை செல்லாது' – கு. 18

இவை சகார்த்தத் திருதியை என்னும் அதனெடு இயைந்த ஒருவினைக் கிளவி. இவ்வொடுச்சொல் கருவி கருத்தாவில் வந்த வேற்றுமையும் வேற்றுமைப் பொருளும் ஆகாது, கூட என்னும் சகார்த்தப் பொருளாய் நின்றது காண்க.

'அறத்தான் வருவதே இன்பம்' – கு. 39

'தூங்கு கையான் ஓங்கு நடைய' – புறநா. 22

என்றும்,

'ஊரான் ஒரு தேவகுலம்'

என்றும், ஆன் உருபு சகார்த்தப் பொருளாயும் தொறு என்னும் பொருளாயும் வந்தது காண்க.

'வீப்பிசை என்ன விளம்புவர் தொறுவே'

இஃது உரைச்சூத்திரம்.

'ஆதி' என்ற ஆகிருதி கணத்தால், வினையின்மை என்னும் கிரியா அபாவத்தோடும், வேறுவினை என்னும் பின்னக் கிரியை போடும், இதரேதரம் என்னும் அதனெடு மயங்கலோடும், அதனெடு ஒப்பு அல் ஒப்புரையோடும், ஒப்போடும், அபேதத் தோடும், கொண்டு என்னும் எச்சப் பொருளோடும் வரும்.

உ-ம் :

'மலையொடு பொருத மால்யானை'

என்றும்,

கருப்பத்தொடு கழுதை பாரம் சுமந்தது,



காவொடு அறக் குளம் தொட்டான்,

'தொடியொடு தொல்கவின் வாடியதோள்' – கு. 1235

என்றும்,

எண்ணெடு விராய அரிசி,

'பாலொடு தேன்கலந் தற்றே' – கு. 1121

என்றும்,

பொன்னெடு இரும்பு அனையர் நின்னெடு பிறரே,

'விலங்கொடு மக்கள் அனையர்' – கு. 410

என்றும்,

'ஆன்றாரொடு ஒப்பர் நிலத்து' – கு. 413

மதியொடு ஒக்கும் முகம் என்றும்,

'எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' – தொ. சொ. 401

என்றும்,

'வேலொடு நின்ளுன்' – கு. 552

என்றும் முறையே வருவது காண்க.

தாதர்த்தியே சதுர்த்தியாவது கொள்வோனைவிட்டு, ஆதி காரணகாரியம் நிமித்த காரணகாரியம் என்னும் இரண்டன் பின்னரும் வரும் குகர உருபாம்.

(உ-ம்) குண்டலத்துக்குப் பொன், யூபத்திற்கு மரம், சோற்றுக்கு அரிசி, ஆடைக்கு நூல், நூற்குப் பருத்தி, தயிர்க்குப் பால், எண்ணெய்க்கு எள்ளு – இவை ஆதிகாரணகாரியம்.

கூழிற்குக் குற்றேவல் செய்தான், சோற்றிற்குப் பணம் – இவை நிமித்த காரணகாரியம். இவற்றைத் தொல்காப்பியர்,

'அதுவாகு கிளவி' – சொ. 76

'அதற்பொருட்டு ஆதல்' – சொ. 76

என்பர். இவற்றை விரிக்குங்கால் பொருட்டு என்னும் நிமித்தத்தை விரிக்க.

அவர்க்குப் பகை, நட்டார்க்குக் காதலன், வடுகர் அரசர்க்குச் சிறந்தார் சோழிய அரசர், இச்சொற்குப் பொருள், நினக்கு வலி, அவ்வூர்க்கு இவ்வூர் காதம்,

'மனைக்குப் பாழ் வாள்நுதல் இன்மை' — நான்மணி. 22

'உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர்' (பழம்பாடல்)

என வருவன எல்லாம் ஆறுவதன் பாற்படும்.

'பொருட்டு நிமித்தம் சமான அர்த்தகமே'

இஃது உரைச்சூத்திரம். அது,

'நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்' — கு. 1017

என வருதலானும் அறிக.

'ஆதி' சத்தத்தால், பூவிற்குச் சென்றான்,

'துன்பத்திற்கு யாரே துணையாவார்' — குறள் 1299

'மறத்திற்கும் அஃதே துணை' — கு. 76

'பிணிக்கு மருந்து' — கு. 1102

என்பவற்றின்கண் பறித்தல் நீக்குதல் என நடுவே பெய்து பொருள் உரைத்துத் துமர்த்தம் என்பதும் கொள்க.

'புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும் என்
உள்ளம் உடைக்கும் படை' — கு. 1324

புலவியுள் – புலவாநிற்கும் அளவில் எனப் பொருள்பட்ட சதி சத்தமி என்னும் வினைநிகழ்ச்சியாம். அது பரிமேலழகர் உரையானும் காண்க. தட்டுப்புடையுள் வந்தான் என்றால், பிறன் ஒருவன் தட்டுப்புடையாநிற்கும் அளவில் வந்தான் என்று பொருளாம். கட்டுரைத்தல் கட்டுரை என நின்றாற்போலத் தட்டுப்புடைத்தல் தட்டுப்புடை என நின்றது. ஓஒஒ இனித் தட்டுப்புடையலம் என்னும் உளப்பாட்டுத் தன்மை எதிர்மறை-முற்று வினையாலும் அறிக.



'கடன் நிகழ் வேற்றுமைதாம் வினையான் முற்றல் காரகம்'

என்றதனானும்,

'கிரியாங் குர்வந்தி காரகம்'

என்றதனானும், தேவதத்தன் வந்தான் – செல்க – வேண்டும் – படும் – தகும் என்பனவற்றோடு முடிவதே கர்த்திரு காரகமாவ-தன்றி, உண்டு – இல்லை – வேறு – யார் என்பனவற்றோடு முடிவன கர்த்திருகாரகம் அன்றோ எனின், இவையும் சுரூயமாணக் கிரியையோடு ஒக்கும் கம்மியமானக்கிரியை என்பர்.

'கம்மிய மானம் குறிப்பு எனல் ஆகும்'

'சுரூய மாணம் தெரிநிலை ஆகும்'

இவை உரைச் சூத்திரம்.

'தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரேல் விட்டுஅகல்க' – சிலப். 7, 32

'தானும் தேரும் பாகனும் வந்துஎன் நலன்உண்டான்' – பழம்பாடல்

'திங்களும் சான்றோரும் ஒப்பர்' – நாலடி. 151

'தானும்தன் புரவியும் தோன்றினான்'

என்பன தலைமைப் பொருள் வினையொடு முடிவதே தலைமையில் பொருளின் வினையும் முடிந்ததாய்க் காரகம் ஆம்.

'பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்' – சொ. 51

என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் இவ்வாறு உரைத்தார்.

'பிரதா னத்தோடு அப்பிர தானம்
தலைமைப் பொருளொடு தலைமைஇல் பொருளே'

இஃது உரைச்சூத்திரம். இன்னும் வடநூலார், தேவதத்தன் நெடியன், தேவதத்தன் ஒருவன் என்னும் தத்திதனோடும் எண்ணோடும் முடிவனவற்றை நெடியன் ஆயினான், ஒருவன் ஆயினான் எனச் சன் கொடுத்துக் காரகம் ஆக்குவர்.

**'ஆக்கம் சன் - என்று அறைந்தனர் புலவர்'**
இஃது உரைச்சூத்திரம்.

**'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்'** - குறள் 258

என்பதனுள், உண்ணார் என்ற எதிர்மறைவினை உண்பார் என்ற விதிவினையோடு ஒத்துக் காரகம் ஆம் என்பர்.

**'விதி அநுயோகி மறை பிரதியோகி'**
இஃது உரைச் சூத்திரம். இவ்வாறு அன்றியும்,

**'எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்**
**அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்**
**புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்'** - நன். 319

எனச் சித்தாந்தம் செய்த சூத்திரத்துள், 'அல்ல வினை கொளும்' என்பதனால், இரண்டும் மூன்றும் காரகமேயாம். பெயரொடு முடியும் எல்லைஇன்னும் அதுவும் அன்றி, வினையொடு முடியும் மற்றை இன்னும் கிரியாசட்டியாகிய குவ்வும் காரகமாம். பெயரொடு முடிவன அன்றி, மற்றை வினையொடு முடியும் நான்கும் ஏழும் காரகம் ஆம் என்பர்.

மரத்தைக் குறையான், வேலான் எறியான் - என்பன-வற்றுள் குறையான் எறியான் என்பன வினை அன்மையின் மரமும் வேலும் கருமமும் கருவியும் ஆமோ எனின், இவையும்,

**'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்'** - குறள் 258

என்பது போலக் கொள்க. இவ்வாறு,

**'எதிர்மறுத்து மொழியினும்'** - சொ. 107

என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் உரைத்தார்.

இனி, முற்கூறிய ஒடுச்சொல்லைத் தொல்காப்பியர்,
'ஆசாரியனொடு மாணவகன் வந்தான்' எனக் காட்டி,

**'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே'** - சொ. 91

என்பர். இனிப் பாணினியார், ஒடு என்னும் உருபு ஏற்ற சொல்லை அப்பிரதானம் என்றும், வந்தான் என்னும் வினையொடு முடிந்த சொல்லைப் பிரதானம் என்றும் கூறுவர்.



**'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம் செய்வாரின் தலை'** - குறள் 295

என்பதனுள் மொழியின் - செய்வார் என வரும் வினையொடு முடிந்த செயப்படுபொருளையே பிரதானம் என்பர்.

**'மகன் வினை கிளப்பின்'** - தொ. எ. 359

என்னும் சூத்திரத்தில், 'மகன் தாயொடு கலாய்த்த கலாம்' என்பதும் அது. (*16*)

விளக்கம்

*சகார்த்தத் திருதியை - உடன் நிகழ்ச்சிப் பொருளில் வரும் மூன்றாவது;*

*தாதர்த்தியே சதுர்த்தி - பொருட்டு என்னும் பொருளில்வரும் நான்காவது;*

*சதி சத்தமி - வினைசெய் இடமாகிய கரும நிகழ்ச்சியினைக் கூறும் ஏழாவது;*

*'ஒருநெறிப் பட்டாங்கு ஓரியல் முடியும்*
*கரும நிகழ்ச்சி இடம்என மொழிப'* - தொ. பொ. *513*

என்பதனால் இடம் என்பது சந்தர்ப்பம் என்னும் பொருளது ஆதல் காண்க.

ஆசிரியனொடு மாணவன் வந்தான், தாயொடு மகள் வந்தாள்– என ஒருவினை ஒடுச்சொல் உயர்ந்த சொல்லோடு கூடி வருவது தமிழ் மரபு. மாறி வருவது வடமொழி மரபு.

சிறப்பொடு பூசனை செல்லாது - ஒடு என் உருபு மூன்றும் வேற்றுமைக்குரிய கருவி கருத்தா என்பனவற்றின் பொருளில் வாராது, கூட என்னும் உடன் நிகழ்ச்சிப் பொருளதாய் வந்தமை காண்க.

அறத்தான் வருவதே - அறத்தொடு வருவதே;

தூங்கு கையான் ஓங்குநடைய - தூங்கு கையொடு ஓங்கு நடைய என ஆன் ஒடு என்பதன் பொருளில் வந்தது.

ஊரான் ஒரு தேவகுலம் - ஊர்தொறும் ஒரு தேவகுலம் என ஆன் என்பது தொறு என்ற இடைச்சொல்லின் பொருளாகிய தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமாதலும் உணர்த்தி நின்றது.

வீப்பிசை - தொறு.

ஆகிருதி கணம்: ஆதி, முதலிய - போன்ற சொற்கள். இவை குறிப்பிட்டவற்றோடு வெளிப்படையாகக் குறிப்பிடப் படாதனவாய்த் தொடர்ந்து வருவனவற்றைக் குறிக்கும்.

கிரியா அபாவம் - வினையின்மை.

'மலையொடு பொருத மால்யானை'

'கருப்பத்தொடு கழுதை பாரம் சுமந்தது' -

பொருதல்வினை யானைக்கு அல்லது மூன்றன் உருபு ஏற்ற மலைக்கு இல்லை; பாரம் சுமத்தல்வினை கழுதைக்கல்லது மூன்றன் உருபு ஏற்ற கருப்பத்திற்கு இல்லை.

பின்னக்கிரியை - வேறுவினை.

'காவொடு அறக்குளம் தொட்டான்', 'தொடியொடு தொல்கவின் வாடிய தோள்'

தொடப்படுதல் குளத்திற்கே உரிய வினை; காவிற்கு உரிய வினை வளர்க்கப்படுதல்; அஃது ஈண்டு இன்று. கவின்வாடுதல் தோளிற்கே உரிய வினை; தொடிக்கு உரிய வினை நெகிழ்தல்; அஃது ஈண்டு இன்று. எனவே காவொடு, தொடியொடு என்பன தமக்கு உரிய அல்லா வேறுவினை கொண்டு முடிந்தவாறு.

இதரேதரம் - அதனொடு மயங்கல்.



எண்ணொடு விராய அரிசி - எள்ளிலிருந்து பிரித்து எடுக்கும்-ஆற்றான் அரிசி அதனோடு கலந்தது.

பாலொடு தேன் கலந்தது - பாலிலிருந்து பிரித்து எடுக்க முடியாதபடி தேன் கலந்தது.

ஒப்பு அல் ஒப்பு உரை - ஒப்புமை உடையன அல்லாத பொருள்களை இணைத்து ஒப்பாகக் கூறுவது.

தம்முள் ஒப்பில்லாத பொன்னையும் இரும்பையும், விலங்கையும் மக்களையும் இணைத்து, பொன்னோடு இரும்பு - விலங்கொடு மக்கள் - என்று கூறுவது இதற்கு எடுத்துக்காட்டு.

ஆன்றாரொடு கேள்வியுடையார் ஒப்பர், மதியொடு முகம் ஒக்கும் என்பனவற்றில் ஒடு ஒப்புப்பொருளில் வந்தது.

அபேதம் - வேற்றுமையின்மை.

எழுத்தினால் சொல் ஆக்கப்படுதலான் - எழுத்து சொல்லது உறுப்பாதலின், எழுத்தின்றிச் சொல் அமையாது ஆதலான் எழுத்தொடு புணர்ந்த சொல் என்பது வேற்றுமையின்றி ஒற்றுமைக்கண் ஒடு உருபு வந்தது; சொல்லிலிருந்து எழுத்தைப் பிரித்தால் சொல் தன்மை கெடும் ஆதலின், எழுத்துச்சொல்லோடு பிரிக்கமுடியாத் தொடர்புடையதாதல் காண்க.

வேலொடு நின்றான் என்பது வேல் கொண்டு நின்றான் எனப் பொருள்படுதலின், ஈண்டு ஒடு என்பது கொண்டு என்ற வினையெச்சப் பொருளதாதல் காண்க.

ஆதிகாரணமாவது காரியத்தோடு நேரே தொடர்புடையது. பொன்குண்டலத்தோடும், மரம் யூபத்தோடும், அரிசி சோற்றோடும், நூல் ஆடையோடும், பருத்தி நூலோடும் பால் தயிரோடும் எள்ளு எண்ணெயோடும் நீக்கமில்லாத் தொடர்புடையன ஆதலின், இவை ஆதிகாரணம் ஆயின. யூபம் - வேள்விச் சாலையில் நடப்படும் மரம்.

கூழ் கிடைத்தற்குக் குற்றேவலும், சோறு பெறுதற்குப் பணமும் காரணமாக அமைதலின் இவை பொருட்டு என்னும் நிமித்த காரணமாயின.

குற்றேவல் செய்தலால் பணமும், அதனுல் மாவும், அதனுல் கூழும் எனக் காரணம் அமைதலால் நிமித்த காரணமாதல் காண்க. பணத்தால் அரிசியும், அதனுல் சோறுமெனக் கண்டு கொள்க.

அவர்க்குப் பகை முதலியன ஆருவதன் பொருளன என்பது இவர் கருத்து. வடுகர் அரசரது சிறப்பினையுடையார், அவ்வூரது சேய்மை இவ்வூர்க்குக் காதம், உற்ருரது உரிமையுடையார் என வலிந்து விரித்துப் பொருள் கோடல் வேண்டும்.

உயிர்ப்பொருட்டால் என்பது உயிர் நிமித்தமாக எனப் பொருள்படும்.

பூவிற்குச் சென்ருன் – பூப் பறித்தலுக்குச் சென்ருன் ;

துன்பத்திற்குத் துணை – துன்பம் நீக்கற்குத் துணை ;

மறத்திற்குத் துணை – மறம் நீக்கற்குத் துணை ;

பிணிக்கு மருந்து – பிணி நீக்கற்கு மருந்து ;

இவ்வாறு இடையே வினைச்சொல் வந்து குவ்வுருபின் பொருள் விரிந்தவாறு காண்க.

புலவி – புலவி நிகழும் சந்தர்ப்பம் ;

தட்டுப்புடை – இருவர் செய்யும் போர் நிகழும் சந்தர்ப்பம் ;

தட்டுப்புடையலம் – இருவர் நிகழ்த்தும் போரினை நிகழ்த்தோம் ;

கிரியாம் குர்வந்தி காரகம் – காரகம் வினையைச் செய்கின்றன. வேண்டும், தகும், படும் என்பன விதிப்பொருளில் வரும் வினைகள். இவை எதிர்காலம் காட்டும்.



உண்டு, இல்லை, வேறு, யார் – இவை குறிப்பு வினைமுற்று.

சுருயமாணக்கிரியை - தெரிநிலை வினைமுற்று.

கம்மியமானக்கிரியை – குறிப்பு வினைமுற்று.

'தம்முடைய தண்ணளி' முதலிய மேற்கோள்கள் தலைமைப் பொருளின் வினையே தலைமையில் பொருளுக்கும் முடிக்குஞ்சொல் ஆதற்கு எடுத்துக்காட்டு. இச்செய்தியைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் கூறியுள்ளனர். சிவஞான முனிவரும் சூத்திரவிருத்தியுள் குறிப்பிட்டுள்ளார்.

வடநூலார், நெடியன் – ஒருவன் – என்பனவற்றை நெடியன் ஆயினுன், ஒருவன் ஆயினுன் என ஆக்கம் கொடுத்து விரிப்பர். வினையெச்சம்கொண்டு முடியும் வினைக்குறிப்புக்கு ஆக்கம் கொடுத்தல் வேண்டும் என்பதனைத் தொல்காப்பியர்,

'வினை எஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்' - தொ. சொ. 432

என்ற நூற்பாவானும், 'செயற்கைப் பொருளது வினையாக வரும் குறிப்பு முற்றும் ஆக்கம் பெறும் என்பதனை,

'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' – தொ. சொ. 20

என்ற நூற்பாவானும் தெரிவித்துள்ளார்.

விதிவினையோடு மறைவினை ஒக்கும் என்பது இலக்கண முடிபு. – தொ. சொ. 108 நச்.

மனத்தொடு வாய்மை மொழியின் -வாய்மை சிறப்புடைய சொல், மனம் அத்துணைச் சிறப்பில்லாச் சொல்.

தவத்தொடு தானம் செய்வார் – தானம் சிறப்புடைய சொல் ; தவம், அத்துணைச் சிறப்பில்லாச் சொல்.

வினையொடு முடிந்த செயப்படுபொருள்களாகிய வாய்மை, தானம் என்பனவே சிறப்புடையன எனல் வடமொழி மரபு.

'தாய்என் கிளவி இயற்கை யாகும்' - தொ. எ. 358

'மகன்வினை கிளப்பின் முதல்நிலை இயற்றே'
- தொ. எ. 359

என்பதற்கு எடுத்துக்காட்டு 'மகன் தாயொடு கலாய்த்த கலாம்' என்பது. மகன் என்ற சொல் கலாய்த்தல் என்ற வினையொடு முடிவது. அதுவே சிறப்புடையது. இதுவும் வடமொழி மரபு.

'கருவி கருத்தா உடன்நிகழ்வு அன்றியும்
மூன்றும் உருபுகள் தோன்றும் பலவினும்' - இ. கொ. 54

'கொள்வோனை விட்டும் கு-பல பொருளாம்' - இ. கொ. 55

'விளிகுறை இரண்டையும் விட்ட வேற்றுமை
வினையான் முடியின் காரகம் எனப்படும்
குறையும் வினைகொளின் ஒரோவழிக் கூடும்'
- இ. கொ. 14

என்ற இலக்கணகொத்து நூற்பாக்கள் இக்காரிகைக் கருத்தை இயம்புவனவாம். 16

## ஆறுவதும் எட்டாவதும்

17. முற்றிய காரகம்ஆம் கிரியாசட்டி;
மொய்குழலாய்!
பற்றிய பேதம்அபேதம் என்று
ஆன சம்பந்தசட்டி
ஒற்றிய காரகம் ஆகாது;
பன்மை ஒருமை விளி
துற்றிய சம்புத்தி, சம்போதனம்
எனத் தோன்றிடுமே.

இஃது ஆறன் உருபின் விகற்பமும் எழுவாய் விகற்பமும் கூறுகின்றது. கிரியாசட்டி என்னும் குகரம் காரகங்களோடு வரும்.



சம்பந்தசட்டி அபேதம் பேதம் என இரண்டாய் நிற்பது அல்லது காரகங்களோடு வாராது. ஒருமை விளியும் பன்மை விளியும் சம்புத்தி சம்போதனமாம் என்றவாறு.

'பன்மை ஒருமை சம்புத்தி சம்போதனம்'

என்பது எதிர் நிரல்நிறை.

'பேதம் சாமானியம் பரியாயம்'

இஃது உரைச்சூத்திரம். மேல், வேற்றுமை மயக்கம் கூறிய 'ஆதியது என்பர்' (14) என்னும் பாட்டு முதலியவற்றுள் அநபிகித கருத்தாவும், அநபிகித கருமமும், கரணமும், சம்பிர தானமும் ஆறொடு வரும் எனக் கூறிய குகர உருபு வினையான் முடிதலின், அது கிரியாசட்டியாய்க் காரகமாம். அதற்கு உதாரணம் ஆண்டுக் காட்டினும்.

இனிச் சம்பந்தசட்டியிலே அபேதம் ஒரு வகையேயாம். பேதசட்டி சமவாயசம்பந்தம், சையோகசம்பந்தம், சுரூபசம்பந்தம் என மூவகையாம்.

'சமவாய சம்பந்தம் சினைகுணம் தொழில்
சாதி விகாரம் என ஐந்துஆகும்'

'சையோக சம்பந்தம் பொருள்இடம் காலம்
எனமூ வகையாம் என்மனார் புலவர்'

'கிழமை சம்பந்தம் கிளக்குங் காலே'

'இவ்விரண்டு அல்லவை சுரூபம் ஆகும்'

'சுரூபம் யாதானும்ஓர் நிமித்தம் ஆகும்'

இவை உரைச் சூத்திரம்.

சாத்தனது கண், நிலத்தது அகலம், சாத்தனது வரவு, எள்ளது குப்பை, எள்ளது சாந்து என்றும்,



ÉCOLE FRANÇAISE D'EXTRÊME ORIENT BIBLIOTHÈQUE PONDICHÉRY

முருகனது வேல், முருகனது குறிஞ்சி, வெள்ளியது ஆட்சி என்றும்,

சாத்தனது செய் என்றும் வரும்.

வடநூலார் 'எள்ளது சாந்து' என்பதனை விகார சட்டி என்பர். விறகது சாம்பர், சொல்லது பொருள், நெல்லது பொரி, கோட்டது நூறு என்பனவும் அது.

இனி, அபேத சட்டியாவது கரும கருத்தாவும் கர்த்திரு கருமமும் போல, ஒரு பொருள் தானே உடையானும் உடைப் பொருளும் ஆம்.

உ–ம்:

இராகுத் தலை;

**'கனவினால் காண்டலின் உண்டு என்உயிர்'** – கு. 1213

**'தன்உடம்பு தாரம் அடைக்கலம் தன்உயிர்க்கு'**

என வரும்.

இம்மூன்று வகையாய் நின்ற பேத சம்பந்த சட்டி நூற்றொரு பேதமாய் விரியும் என்று பாடியகாரர் சீட்டுக் கொடுப்பர். காசிகாவிருத்தி உரைகாரர் முப்பத்தாறு பேதம் காட்டினர். இனிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத்துள் இருபத்திரண்டு பேதம் காட்டினர். இந்தச் சம்பந்தசட்டி - வேற்றுமை வினையான் முற்றாமல் அடை அடுத்த பெயராய் நின்றவின், காரகம் ஆகாமை காண்க.

ஆடை சாத்தனது – சாத்தனது ஆடை என நின்றாற்போல – புருஷோ ராஜ்ஞ: – ராஜ்ஞ: புருஷ: என நிற்கும்.

வணிகீர் குருகீர் என்பன சம்போதனம். வண்டே, சாத்தா என்பன சம்புத்தி. *(17)*

காரக படலம் முடிந்தது.



விளக்கம்

வினைகொண்டு முடியும் ஆறாவது அது, அ என்னும் உருபுகள் ஏலாது, குகரமே பெற்று வரும் என்று கூறுகிறார்.

'உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர்' என்பது போல்வன எடுத்துக்காட்டு.

'பன்மை ஒருமை சம்புத்தி சம்போதனம்'

பன்மை சம்போதனம், ஒருமை சம்புத்தி என மாற்றிப் பொருள்கோடல் எதிர் நிரல்நிறைப் பொருள்கோளாம்.

அநபிகித கருத்தாத் திருதியை சட்டி என்ற இரண்டோடும் வரும்.

அநபிகித கருமம் துதியை, திருதியை, சதுர்த்தி, சட்டி என்னும் இந்நான்கோடும் வரும். – பி. வி. 14

கரணம் சட்டி பஞ்சமி திருதியை என்னும் மூன்றோடும் வரும்.

சம்பிரதானம் சட்டி சதுர்த்தி திருதியை என்ற மூன்றோடும் வரும். – பி. வி. 15

இவ்வாறு வரும் ஆறன் உருபே காரகமாகும்.

அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம் – அநபிகித கருத்தா;

நூலது குற்றம் கூறினான் – அநபிகித கருமம்;

கண்ணிற்குக் காணலாம் – கரணம்;

நாகர்க்குப் பலி – சம்பிரதானம்;

குகரம் ஆறன் உருபாய்க் காரகமாயிற்று என்பது இவர் கருத்து. சமவாய சம்பந்தம் – தற்கிழமைப் பொருள்; சினை, குணம், தொழில், சாதி, விகாரம் என்பன பற்றியது.

சையோக சம்பந்தம் - பிறிதின் கிழமைப் பொருள் ; பொருள், இடம், காலம் என்பன பற்றியது.

சுரூபசம்பந்தம் - யாதானுமொரு காரணம் பற்றிய தொடர்பு.

சாத்தனது கண் - சினை ; நிலத்தது அகலம் - குணம் ; சாத்தனது வரவு - தொழில் ; எள்ளது குப்பை - சாதி (குழூஉ) எள்ளது சாந்து - விகாரம் ; இவை தற்கிழமை.

முருகனது வேல் - பொருள் ; முருகனது குறிஞ்சி - இடம் ; வெள்ளியது ஆட்சி - காலம் ; இவை பிறிதின் கிழமை.

சாத்தனது செய் : சுரூபசம்பந்தம் பற்றி இலக்கணக் கொத்து நூலார் விளக்குமாறு இந்நூற்பா விளக்கவுரை யிறுதிக்கண் காண்க.

சொல் தன்னை விடுத்துப் பொருளையே காட்டலின் அதுவும் விகார சட்டியாம். சேனாவரையருக்கும் இஃது உடன்பாடு. எள்ளது சாந்து முதலாயினவும் அன்ன.

தன்னைத் தந்தான் என்புழி, தானே எழுவாயாயும் செயப்படுபொருளாயும் வேறுபாடின்றி ஒன்றே அமையுமாறு போல, இராகுத் தலை - தன் உயிர் - என் உயிர் என்பனவற்றில் இராகுவும் தலையும் - தானும் உயிரும் - யானும் உயிரும் தற்கிழமை பிறிதின்கிழமைப் பொருளாகிய வேறுபாடு காட்டாது ஒன்றாய் அபேதசட்டி ஆமாறு காண்க.

இவ்வாறுவது, பெயருக்கு அடையாய்ப் பெயரைக்கொண்டே முடிதலின் காரகம் ஆகாது. 'எல்லை இன்னும் அதுவும் பெயர் கொளும்' (ந. 319) என்றார் நன்னூலாரும்.



'இயற்கையின் உடைமையின்' (தொ. சொ. 80) என்ற தொல்காப்பிய நூற்பாவில், இயற்கை, உடைமை, முறைமை, கிழமை 2, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழி உறுப்பு, குழு 2, தெரிந்து மொழிச் செய்தி 2, நிலை, வாழ்ச்சி 2, முழுதும் திரிந்தது, ஒரு வழித் திரிந்தது - எனச் சேனாவரையர் முதலியோர் 22 வேறுபாடு காட்டினர்.

புருஷோ ராஜ்ஞ : - ஆள் அரசனுடையவன் ;

ராஜ்ஞ : புருஷ : - அரசனுடைய ஆள் ;

இனி, இலக்கணக்கொத்து நூலார் ஆறும் வேற்றுமை பற்றி,

'ஒற்றுமை வேற்றுமை உரைக்கப் படுகுறை ;
ஒற்றுமை யாவதுஓர் பொருளே யாகும் ;
ஒன்றாய்த் தோன்றல் உரிமையாய்த் தோன்றல்
வேறாய்த் தோன்றல் எனவேற் றுமையாம் ;
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் சினைகுணம் தொழில்என
ஓர்அறு வகையாம் ஒன்றாய்த் தோன்றல் ;
பொருள்இடம் காலம் இருவகை நூல்என
உரிமையாய்த் தோன்றல் உரைக்கப் படுமே ;
வேறாய்த் தோன்றல் வேறிடத் தும்செலும்
நிலைமையில் உடைமைகள் பலவும் ஆகும்' - 40

என இக்கருத்தையே விளக்கியுள்ளார்.

சுரூப சம்பந்தத்தை வேறாய்த் தோன்றல் என்று குறிப்பிட்டு, அதற்குச் சாத்தனது பசு என எடுத்துக்காட்டுத் தந்து, 'பசப் போல்வன முன் ஒருவருக்கு உரிமையாய்ப் பின் வேறு ஒருவருக்கு உரிமையாய் வருதலின், நிலைமையில் உடைமை என்றும்' என விளக்கமும் தந்தார் ;

'குறையும் வினைகொளின் ஒரோவழிக் காரகம்' – 14
எனவும் குறிப்பிட்டார்;

வடநூலார் சட்டியை நூற்றொரு பேதமாக்கியதனையும் சுட்டினர்;

'அழைத்தல் என்றுஒன்று அன்றிவேறு இன்மையின்
விளிக்குச் சூத்திரம் விளம்பிலம் என்க' – 30

எனவும் கூறினர்.

'வடமொழியாளருள் ஒரு சாரார் வேற்றுமையை எட்டாகப் பகுத்து விளி வேற்றுமையைத் தனி வேற்றுமையாகக் கொண்டனர்.

வேறொரு சாரார் விளி வேற்றுமையை விளித்தற்பொருளில் வரும் முதல் வேற்றுமை என்று பெயரிட்டு முதல் வேற்றுமையில் அடக்கினர். இம்மரபைச் சேர்ந்தவர் பாணினியார். இவ்வாசிரியரும் இம்மரபை யொட்டி விளிவேற்றுமையை எழுவாய் விகற்பம் என்றார். வடமொழியில் ஒருமை விளி, பன்மை விளி இவற்றுக்குத் தனித்தனிப் பெயர் வழங்கப்படுகிறது. தமிழ் மொழியில் அம்மரபு இன்று. ஆதலின் இலக்கணக் கொத்து நூலார் விளி பற்றி விகற்பம் எதுவும் குறிப்பிடவில்லை' என்பது அறியத்தக்கது. 17

காரகபடல விளக்கம் முடிந்தது

— ★ —

# இரண்டாவது சமாச படலம்

★

## சொல்லின் இயல்

18. மண்டலத்துப் பதினெண் தேசிகச்சொல்
வடசொல் எனப்
பண்டை வழக்கொடு பாராட்டு
உரிச்சொல், பலபொருட்கே,
ஒண்தொடியாய்! பின் ஒருமொழியாய்,
மற்று ஒருபொருட்கே
கொண்டு இயல் பன்மொழியாய்ச்
சத்தி ஆற்றலும் கொண்டு எழுமே.

இஃது உரிச்சொற்களின் பகுதியும் அவற்றின் பொது இலக்கணங்களும் கூறுகின்றது திசைச்சொல்லும் வடசொல்லும் என வழக்கொடு நிகழ்த்தும் உரிச்சொல் என்னும் தனி மொழிகள் நாநார்த்த பதம் ஆகியும், சமாநார்த்த பதம் ஆகியும் ஆற்றலோடு வரும்.

ஆற்றல் ஆவது விரல் என்னும் சொல் உகிரை உணர்த்தாது விரலையே உணர்த்தி நிற்றலாம், அதுபோலச் சொல் இயற்கையாய் நிற்றல் என்பது.

'நாநார்த் தகமே பலபொருள் ஒருசொல்
சமாநார்த் தகமே ஒருபொருட் கிளவி'

'சத்தி சங்கேதம் போடம் ஆற்றல்'

'துன்னரும் எழுத்துச் சொல்தொடர் ஆற்றலை
வர்ணம் பதம்வாக்கியம் போடம் என்பர்'

இவை உரைச் சூத்திரம்.

வழக்கு ஆவது உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என இருவகைப்படும். அவற்றை வட நூலார் லௌகிகப் பிரகிரியை, வைதிகப் பிரகிரியை என்பர்.

உம்மையான், மொழிப்பொருட் காரணமும் கொண்டு எழும் என்க. அதனை வடநூலார் பிரவிருத்தி நிமித்தம் என்றும், வியுற்பத்தி என்றும் கூறுவர்.

உரிச்சொல் ஆவது பொருளும் தானும் பேதம் இன்றி அபேதம் ஆதற்குரிய சொல். குடம் அறியாதானுக்குக் குடத்தைக் காட்டி இது குடம் என்றால், இது என்னும் சுட்டுப்பெயரும் குடம் என்னும் பொருளும் பேதம் இன்றி அபேதமாய்த் தோன்றும் என்றும், சொல்லை நித்தியம் என்றும், விபு என்றும், திரவியம் என்றும் சத்தநூலார் கூறுவர். அர்த்தநாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன் போல, சொல்லும் பொருளும் பேதா பேதமாய் வரும் என்பாரும் உளர். காளிதாசனும் 'வாகர்த்தா விவ' என்னும் சுலோகத்தால் அவ்வாறு கூறுவன். உரிச்சொல் ஆவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்துதற்கு உரிய சொல் அன்றோ எனின்,

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும்' – தொ. சொ. 156

எனக் காரணமாகவும்,

'கொடை எதிர் கிளவி' – தொ. சொ. 99

எனச் சம்பிரதானமாகவும்,

'முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குஉடன் நிலையலும்' – சொ. 419

என அதிகரணமாகவும்,



'அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்' – சொ. 316

'ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்' – சொ. 2

'முதலறி கிளவி' 'சினையறி கிளவி' – சொ. 114

'அம்ம கேட்பிக்கும்' – சொ. 276

எனக் கருத்தா ஆகவும் சொல்லைக் கூறுவர். அவை எல்லாம் உபசாரம் என்க.

'கம நிறைந்து இயலும்' – சொ. 355

'உரு உட்கு ஆகும்' – சொ. 300

'செல்லல் இன்னல் இன்னா மையே' – சொ. 302

'எல்லே விளக்கம்' – சொ. 269

'கொல்லே ஐயம்' – சொ. 268

எனச் சொல்லும் பொருளும் பேதம் இன்றி அபேதமாகக் கூறுதலின், தொல்காப்பியருக்கும் அதுவே கருத்து என்க. இனிச் சேனாவரையரும் சத்தநூலார் உரைத்தாங்கு உரைப்பர். என்னை?

'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' - சொ. 1

என்னும் சூத்திரத்தினும்,

'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்' - சொ. 4

என்னும் சூத்திரத்தினும் முறையே, "செலவினும் வரவினும் என வருதலானும், 'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி' (சொ. 12) என ஒற்றுமைப்பட்டு வருதலானும் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாம்" என்றும், "இரண்டும் ஒன்றேயாம்" என்றும்,

'மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்றா' - சொ. 394

என்னும் சூத்திரத்தில், "பொருளொடு சொற்கு இயைதல் இயற்கை ஆகலான்" என்றும், ஆறாவதன் சூத்திரத்துத் (80) 'திரிந்து வேறு படூஉம்' என்பதற்கு உதாரணம் எள்ளது சாந்து-கோட்டது நூறு என்பனவற்றோடு ஒருங்கு 'சொல்லது பொருள்' என்பதனையும் காட்டி, "முழுவதூஉம் திரிந்த" என்றும் கூறுவர்.

இனி, நச்சினார்க்கினியர் சத்தநூலாரோடு மாறுபடச் சொல்லைப் பொருள் உணர்தற்குக் கருவி என்பர். தார்க்கிகர் சுவரூப சம்பந்தம் என்பர்.

இனி, ஆற்றலைச் சொல் இயற்கையாக உடையது என்னாது, ஈசுரசங்கேதம் எனவும், சமயசங்கேதம் எனவும், நாநார்த்த பதங்களையும் சமாநார்த்த பதங்களையும் கட்டிய வழக்கு எனவும், சில வடநூலார் கூறுவர். அது பொருந்தாது. வடமொழியுள் வழங்கும் இருவகைப்பதமும் ஒருவரால் சொல்லப்படாமல் சுயம்புவாய் நிகழ்கின்ற வேதபுருடன்கண்ணும் வழங்கலின், ஆற்றல் சொல் இயற்கையேயாம் என்க;

'செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்உரைத்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே — செய்யா
அதற்குரியர் அந்தணரே' - திருவள்ளுவமாலை 28

எனச் சங்கத்தாரும் வேதபுருடனைச் சுயம்பு என்றார்.

இனி, உரிச்சொல் என்பது பதினெண்தேசிகச்சொல் வடசொல் எனத் தொகையால் பத்தொன்பதாம். அவற்றுள் ஒவ்வொன்றும் நாநார்த்த பதமும் பரியாய பதமும் ஆகிய வகையான் முப்பத்தெட்டாம். ஆதலின், திசைச்சொல்லும் வடசொல்லும் அல்லது இயற்சொல்லும் திரிசொல்லும் வேறே இல்லை என மறுக்க. நாநார்த்த பதங்களுள் சிலபதம் பிரசித்தமாகியும் சில பதம் அபிரசித்தமாகியும் வருதல் பற்றிப்

'பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தி' – சொ. 297

என்றார் ஆகலானும், இயற்சொல்லும் திரிசொல்லும் தனியே இல்லை என மறுக்க. சொல் எல்லாம் உரிச்சொல்லேயாம். நன்னூலாரும்,

'பிங்கலம் முதலா,
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' – 460

என்றார்.



'முட்டிலா மூவறு பாடை மாக்களும்'
'முனிவுஅற அருளிய மூஅறு மொழியுளும்'
- நன். சிற. பாயிரம்

என வருதலின் தமிழும் திசைச்சொல்லேயாம் என்க.

இனிச் செய்யுள் வழக்காவது,

'ஆ ஓ ஆகும் ............ செய்யு ளுள்ளே' - சொ. 195

'இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை' – சொ. 18

என வரும். உலகவழக்காவது,

'செயப்படு பொருளைச் செய்தது போல' – சொ. 246

என்னும் சூத்திரத்து உதாரணம் முதலாயின என்க. தொல்காப்பியர்,

'வெளிப்பட வாரா உரிச்சொல்' - சொ. 298

எனவே, ஏனைய வெளிப்பட வந்த உரிச்சொல் என்பது பெற்றாம். இதனால் சொல் எல்லாம் உரிச்சொல்லேயாம் எனத்துணிக. (*1*)

விளக்கம்

| | | |
|---|---|---|
| சமாசபடலம் | — | தொகைகளைப் பற்றிக் கூறும் இயல். |
| ஆற்றல் | — | சொல்லுக்குப் பொருளை உணர்த்துவதற்குரிய இயற்கையான சக்தி. |
| வர்ணம் | — | எழுத்து; |
| பதம் | — | சொல்; |
| தொடர் | — | வாக்கியம்; |
| போடம் | — | ஆற்றல். |

இவ்வாசிரியர் சொற்களெல்லாம் உரிச்சொற்களே என்றும், அச்சொற்களெல்லாம் திசைச்சொல், வடசொல் என்ற இரண்டன் கூறுபாடுகளே என்றும், தமிழும் பதினெண் திசைச் சொற்களில் ஒன்றே என்றும்,

‘ இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே’ – சொ. 397

என்பதனை வட இயற்சொல் வட திரிசொல், திசை இயற்சொல் திசைத் திரிசொல் எனப் பகுத்துக் கோடலே தக்கது அன்றித் தனியே இயற்சொல் திரிசொல் என்பன இல்லை என்றும், அச் சொற்களெல்லாம் ஒரே பொருளில் வரும் பலசொற்களாகவும் பல பொருள்களில் வரும் ஒரு சொல்லாகவும் பகுக்கப்படும் என்றும், அவற்றுள் உலகவழக்கில் இல்லாத சொற்களை உலக வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டு விளக்குதல்வேண்டும் என்றும் கொள்ளும் கொள்கை உடையார்.

| | | |
|---|---|---|
| உம்மை | — | சத்தி ஆற்றலும் என்னும் உம்மை; |
| மொழிப்பொருட் காரணம் | — | சொற்கள் பொருளவாதற்குரிய காரணம்; |
| பிரவிருத்தி நிமித்தம் | — | ஈடுபடுதலின் காரணம்; |
| வியுற்பத்தி | — | பகுத்தறிதல்; |
| நித்தியம் | — | அழிவில்லாதது; |
| விபு | — | வியாபித்திருப்பது; |
| திரவியம் | — | பொருள்; |
| பேதாபேதம் | — | வேற்றுமையும் ஒற்றுமையும். |

‘வாகர்தாவிவ’ – சொல்லும் பொருளும் போல அம்மையும் அப்பனுமாய்ப் பார்வதி பரமேசுவரர் உள்ளனர்.

சொல்லைக் காரணமாகவும், கொள்வோனாகவும், இடமாகவும், கருத்தாவாகவும் கூறுவதெல்லாம் உபசார வழக்காம். சொல்லும் பொருளும் அபேதம் என்பதே தொல்காப்பியர் கருத்து. சேனாவரையர் சொல்லாவது எழுத்தொடு புணர்ந்து பொருள் குறித்து வருவது என்றார்.



‘ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே’ – சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாம். ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி - சொல்லோடு பொருட்கு ஒற்றுமை உண்மையின் ஆண்மை திரிந்த பெயர் என்றார். சொல்லது பொருள் – சொல் தன்னைச் சுட்டாது பொருளைச் சுட்டுதலின், சொல் பொருளாதல் ஆகிய திரிந்து வேறுபடுதல்.

நச்சினார்க்கினியர் ‘சொல்லாவது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருள் தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை’ என்றார்.

ஈசுரசங்கேதம் – சொல் இறைவனுடைய நியமத்தால் பொருள் உணர்த்துவது; சமயசங்கேதம் – சமய ஆற்றல்; “சமௌ சமய சங்கேதௌ” ஆதலின், சமயம் என்ற சொல் சங்கேதம் எனப் பொருள்தரும். சமய ஆற்றல் – இச்சொல் இப்பொருளை உணர்த்துக என்னும் இறைவனுடைய உடன்பாட்டால் உண்டாய சக்தி.

கட்டிய வழக்கு – சான்றோர் பின்னர் உண்டாக்கியது.

வேதம் ஒருவரால் உண்டாக்கப்பட்டதன்று என்ற கொள்கை-யுடைய இவர் சொல்லுக்குப் பொருள் உணர்த்தும் ஆற்றல் இயற்கையில் அமைந்தது என்ற கருத்தினர். சேனாவரையர் சொல் சமய ஆற்றலால் பொருள் விளக்குவது என்ற கருத்தினர்.

பயிலாதன – திரிசொற்கள்; பயின்றவை – இயற்சொற்கள். பிங்கலம் சொற்கள் எல்லாவற்றையும் குறிப்பிடும் நிகண்டு. எனவே ‘உரிச்சொலின் நயந்தனர் கொளலே’ என்பதற்குப் பொருளும் தாமும் பேதமின்றி அபேதமாதற்குரிய சொற்களைக் கண்டு கொள்க என்பதே பொருள்.

உரிச்சொல் என்பது பிறிதின் இயைபு நீக்காது, தன்னோடு இயைபின்மை மாத்திரை நீக்கி, ‘அஃறிணை விரவுப் பெயர்’ என்றாற்போலச் சொல்லின் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறியது என்பதே இவர் கருத்து.

## தொகையும், தொகாநிலையும்

19. ஆக்கிய சொற்கள் தகுதி
அவாய்நிலை அண்மைநிலை
நோக்கிய மூன்றும் பெறச் சேர்வது
தொகை; நுண்புலவோர்
வாக்கியமும் அது; தூரான்வயச்சொல்,
மருஉத்தொகைச்சொல்,
நீக்கிய கட்டுரை, சார்ந்தசொல்,
அண்மைநிலை பெறுமே.

*இது. தொகைநிலை தொகாநிலை என்னும் இரண்டற்கும் பொது இலக்கணம் கூறுகின்றது. தனிநிலைச் சொற்கள் தகுதி முதலாகிய மூன்றும் தோன்ற அல்வழியாக வேற்றுமையாக அவ்வப் பொருள்மேல் பிளவுபட்டு இசையாது தம்முள் கூடுவது தொகைநிலையாம். பிளவுபட்டு விரிந்தது தொகாநிலை. வாக்கியங்களும் தகுதி முதலிய மூன்றும் தோன்ற வரும். தூரான்வயம் முதலாகிய நான்கும் அண்மைநிலையோடல்லது வாரா - என்றவாறு.*

*தகுதி யோக்கியதை எனவும், அவாய்நிலை ஆகாங்க்ஷை எனவும், அண்மைநிலை ஆசத்தி அல்லது சந்நிதி எனவும் படும்.*

**'தகுதி அவாய்நிலை அண்மைநிலை முறையே**
**யோக்கியதை ஆகாங்கிசை ஆசத்தி**
**சந்நிதி மற்றும் ஆசத்தி ஆகும்'**

*இஃது உரைச் சூத்திரம். இக்கருத்தே பற்றித் தொல்காப்பியரும்,*

**'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்'** - எ. 110

*என்றார்.*

*வாக்கியம் ஆவது, தேவதத்தன் அறத்தைச் செய்தான் - என வரும் கர்த்திருகாரகம் முதலாகிய தொகாநிலைத்தொடர் மொழிகள்.*



*தூரான்வயச்சொல் ஆவது, ஆற்றொழுக்கும் அடிமறி மாற்றும் அல்லாத,*

**'சுரைஆழ அம்மி மிதப்ப'** - பழம்பாடல்

**'நல்ல படாஅ பறை'** - கு. 1115

*முதலிய எழுவகைப் பொருள்கோள் இலக்கணம் பெற்ற செய்யுட்கள்.*

*மருஉத்தொகை ஆவது, பின்மாலை - அரைக்காசு என்பன.*

*கட்டிய சொல் ஆவது, முயற்கோடு - கூர்மரோமகம்பலம் - கரதலரோமபாசம் - துன்னூசிக்குடர் என்பன.*

*சார்ந்த சொல் ஆவது, இடைப்பிறவரல் சூத்திரத்து உதாரணங்களாம்.*

*இனித் தூரான்வயத்துள் பதத்தோடு பதம் பிரித்துக்கூட்டல் அன்றி, விகுதியைப் பிரித்தும் உம்மையைப் பிரித்தும் விபத்தியைப் பிரித்தும் பண்பைப் பிரித்தும் கூட்டுவர்.*

*உ-ம்:*

**'பொறிநுதல் வெயர்த்தல்'** - தொ. பொ. 261

**'அறம்சொல்லும் நெஞ்சத்தான்'** - கு. 185

**'அருங்கேடன் என்பது அறிக'** - கு. 210

**'அன்புற்(று) அமர்ந்த வழக்(கு)என்ப வையகத்(து)**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு'** - கு. 75

**'செய்த வேள்வியர்'**

**'பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்**
**நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலோயே'** - பரி. 8-17, 8

*இவற்றுள் வெயர்ப்பொறித்த நுதலாதல், நெஞ்சோடு அறம் சொல்வான், கேடு அரியன், அன்புற்றார், வேள்வி செய்தவர், கொடியோய் என விகுதி பிரித்தல் வரும்.*

'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே' – தொ. எ. 35

இதனுள் புணரியல் நிலையிடையும் குறுகல் உரித்து என்றும்,

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று' – கு. 100

இதனுள் – இனிய கனி, இன்னாத காய் எனவும்,

மீகண், கீழ்நீர், (கு. 929)

'செல்வத்துள் எல்லாம் தலை' – கு. 411

இவற்றுள் – கண்மீ, நீர்க்கீழ், செல்வம் எல்லாவற்றுள்ளும் தலை- என்றும்,

'நடுவூருள் நச்சுமரம்' – கு. 1008

இதனுள் ஊர்நடுவுள் என்றும், முறையே உம்மையும் பண்பும் உருபும் பிரித்தல் வரும். அநுஷங்கம் என்னும் அதிகாரத்தால் பிரித்தலும் கொள்க. எழுவகைப் பொருள்கோளும் செய்யுள் விகாரமும் விருத்தரத்நாகரவிதி ஆகலின், வடநூலார் சத்த நூலுள் கூறார் என்க. நன்னூலாரும் பொருள்கோள் சூத்திரத்துள் இவ்வாறு எழுதுவர்.

இடைப்பிறவரலுள், சிறுபான்மை பொருந்துவனவும் முழுதும் பொருந்தாதனவும் உள.

உ–ம்:

அறத்தை அழகுபெறச் செய்தான்.

வாளான் மருவாரை மாய வெட்டினான்.

'பாடினான் தேவகீதம் பண்ணினுக்கு அரசன்' – சீவக. 2061

'குளன்ஆர் கழனிசூழ் கண்ணன் குறுங்குடி' – திவ். பிர. 2986

'அடும் செந்நெல் சோறு'

'உப்பின்று புற்கை உண்க' – பழம்பாடல்

'அளமரு குயில்இனம் அழுங்கிப் பூம்பொழில்
உளம்மெலி மகளிரின் ஒடுங்கும்' – சீவக. 49



இவை சிறுபான்மை பொருந்துவன. அளமரும் என்பது லளயோரபேதமாம். அலமரும் என்பது அளமரும் என்றாயிற்று. நிலம் நிலன், கோவில் கோயில் – என அபேதம் மிக வரும்.

'காமனை எரித்த கணபதி தந்தை
வாம தேவன் மலர்அடி பணிவாம்'

என்றால், காமனை எரித்தல் கணபதிக்கு இன்மையின் இது பொருந்தாது.

'காமனை எரித்த வாம தேவன்
கணபதி தந்தை மலர்அடி பணிவாம்'

இது பொருந்தும்.

'வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் தந்தை
மல்லல் யானைப் பெருவழுதி'

என்றால் வல்லம் எறிதல் நல்லிளங் கோசர்க்கு இன்மையின் பொருந்தாது.

'வல்லல் எறிந்த மல்லல் யானைப்
பெருவழுதி நல்லிளங் கோசர் தந்தை'

என்றால் பொருந்தும். இவை எல்லாம் அண்மைநிலை யல்லது பெறாமை காண்க.

தனிநிலைச் சொற்கள் வேற்றுமையாக அல்வழியாக அவ்வப்பொருள்மேல் பிளவுபட்டு இசையாது தம்முள் கூடுவது தொகைநிலை எனவே, வேற்றுமை உருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச் சொற்கள் தம்முள் கூடுவது தொகை அன்றோ எனின், நன்று சொன்னாய்!

'அல்வழி வேற்றுமைப் பொருளில் பொருந்துழி' – ந. 151

'வேற்றுமை முதலிய பொருளின்' – ந. 361

எனவும்,

**‘உருபு உவமை உம்மை விரியின் அடைவே**
**உருபு உவமை உம்மைத் தொகையாம்’** – நே. சொ. 62

எனவும் நன்னூலாரும் நேமிநாதத்தாரும் கூறினர். அன்றியும், உயிர்ஈற்று வேற்றுமை உருபும் உவமஉருபும் உயிர்மயங்கியலினும், மெய்யீற்று வேற்றுமை உருபும் உவம உருபும் உம்மையும் மெய்மயங்கியலினும், நிலைமொழி ஈறாக வைத்துக் கெடுத்துப் பின் வருமொழியோடு புணர்த்தாமையின், அவ்வாறு உரைத்தல் மலை இடறு என்க. வடநூலாரும் அச்சுச்சந்தியினும் அல்லுச்சந்தியினும் அவ்வாறு உருபுகளையும் உம்மையையும் உவமையையும் ஈறாக வைத்துப் புணர்த்தார்.

இஃது அன்றியும் ‘தவளைவாய்’ ‘குவளைமலர்’ ‘அம்பிகாபதி’ என்பனவற்றை ஆறும் வேற்றுமை நிலைமொழி ஈறாக நின்று கெட்ட சந்தி என்றால் இயல்புசந்தி ஆகாமையானும்,

**‘கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது’** – கு. 377

**‘பெயலும் விளையுளும் தொக்கு’** – கு. 545

**‘மருவின் தொகுதி’** – தொ. எ. 111

**‘மக்கட் பெயர்த் தொகுதி’**

**‘அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ’** – தொ. சொ. 112

என்புழிக் கோடி முதலிய சொற்கள் எல்லாம் ஈறு கெட்டுத் தொகுவன அன்மையானும்,

‘உவாஅப் பதினான்கு’ ‘பொற்றொடி’ என்னும் உம்மைத் தொகையும் அன்மொழித்தொகையும் வருமொழி ஈற்றில் உம்மையும் உடையாள் என்னும் சொல்லும் கெட்ட எனவும் வேண்டுமாகலானும், வேற்றுமைஉருபு முதலிய சொற்கள் தொகுதல் என்பது மலை இடறு என்க.

பாணினி பகவான் ஆறும் அத்தியாயத்துள் விபத்தி இல்லாமல் பதத்தொடு பதம்புணரும் சந்தி கூறுவர்; ‘உருபு தொக வருதல்’ என்றாற்போல இரண்டாம் அத்தியாயத்துள் சமாசனில்



விபத்தியும் விதித்து லோபமும் விதித்தார். காத்தியாயனர் சமாசனில் விபத்தி இல்லை என்று சித்தாந்தம் பண்ணினார். அவர் உரைத்தாங்கு உரைப்பர் சேனாவரையரும். அது காட்டுதும்:

“வேற்றுமை உருபும் உவம உருபும் உம்மையும் வினைச் சொல் ஈறும் பண்புச்சொல் ஈறும் தொகுதலின் தொகைஆயின என்பாரும், அவ்வப் பொருள்மேல் இரண்டும் பலவும் ஆகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைபடத் தம்முள் இயைதலின் தொகை ஆயின என்பாரும் என இருதிறத்தார் ஆசிரியர்; செய்தான் பொருள் – இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒரு சொல் நீர்மைப்படாதனவும் தொகைஆவான் சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக்கரும்பு – கேழற்பன்றி என்புழித் தொக்கன இல்லை எனினும் தொகை என வேண்டப் படும் ஆகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலின் தொகை என்பாருக்கும் ஒட்டி ஒரு சொல் நீர்மைப் படுதலும் தொகை இலக்கணம் எனல் வேண்டும். அதனால் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினும் செல்லாமையான், எல்லாத் தொகைக்கண்ணும் செல்லுமாறு ஒட்டி ஒருசொல் ஆதல் தொகை இலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியருக்கு இதுவே துணிவு எனப்படும் என்பது.

அற்றாயின்,

**‘உருபு தொக வருதல்’** – சொ. 104

எனவும்,

**‘வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்’** – சொ. 418

எனவும்,

**‘உம்மை தொக்க பெயர்வயி னானும்’** ,,

எனவும்,

**‘உவமை தொக்க பெயர்வயி னானும்’** ,,

எனவும்,

ஓதலான், அவை ஆண்டுத் தொக்கன எனப்படும் அன்றோ எனின், அற்றன்று ;

அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்'
– சொ. 94

என்புழி, அது என்னும் உருபு நின்று கெட்டதாயின் நின்ற காலத்துத் திணை வழுவாம். அத் திணைவழு அமைவுஉடைத்து எனின், விரிக்கின்றுழி நான்காம் உருபு தொடராது அது-தன்னையே விரிப்பினும் அமைவு உடைத்து. அதனல் முறைப் பொருள் தோன்ற 'நம்பி மகன்' என இரண்டு சொல் தொக்கன என்பதே ஆசிரியர் கருத்து எனல் வேண்டும். அல்லதூஉம், வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை என்பனவற்றின்கண் வினையும் பண்பும் அன்மொழியும் தொக்கு நில்லாமையானும், அஃதே கருத்துஆதல் அறிக. அதனல் உருபும் உவமையும் உம்மையும் தொகுதலாவது தம் பொருள் ஒட்டிய சொல்லால் தோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாது நிற்றலேயாம். வேற்றுமைத்தொகை என்பது வேற்றுமைப் பொருளை உடைய தொகை என்றானும், வேற்றுமைப் பொருள் தொக்க தொகை என்றானும் விரியும். உவமைத்தொகை உம்மைத்தொகை அன்மொழித்தொகை என்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொகைச்சொல் அல்லாத மொழி. வினைத்தொகை, பண்புத்தொகை என்பன வினையினது தொகை பண்பினது தொகை என விரியும். வினை பண்பு என்றது அவற்றை உணத்தும் சொல்லை. ஒரு சொல்லால் தொகை இன்மையின், பிறிதொரு சொல்லொடு தொகுதல் பெறப்படும். இச்சூத்திரத்தால் தொகைச்சொல் இனைத்து என வரையறுத்தவாறு." இவ்வுரை,

'வேற்றுமைத் தொகையே உவமத்தொகையே' - சொ. 413

சூத்திரத்தில் சேனவரையர் எழுதிய உரை என்றவாறு. இனி நச்சினர்க்கினியர் வேற்றுமை உருபு முதலிய சொற்களின் ஈறு தொகுதலின் அவ்வாறு தொகை ஆயின என்பார் மதம் பற்றி அவர் உரைத்தாங்கு உரைப்பர்.



'ஆறு உருபும் வெளிப்படல் இல்லது' – ந. 363
'உவம உருபு இலது' – ந. 366
'உம் இலது' – ந. 368

என்றவற்றை ஈற்றிலே நின்று கெட்ட அழிவுபாட்டு அபாவமாகக் கொள்ளாது, முன் உள்ளதன் அபாவமாகக் கொள்க. வடநூலார் அழிவுபாட்டு அபாவத்தை 'பிரத்துவஞ்சாபாவம்' என்பர். முன் உள்ளதன் அபாவத்தைப் 'பிராகபாவம்' என்பர். (2)

## விளக்கம்

தகுதி – இந்நிலை மொழிக்கு இவ்வருமொழி வருதலே தகுதி என்ற பொருளில் சேர்ப்பது.

உ–ம் :

நீரான் நனை ; தீயான் எரி ;

அவாய்நிலை – ஒரு சொல் தன்பொருள் முடிய வேறு ஒரு சொல்லை அவாவி நிற்கும் நிலை.

'உயர்திணை என்மனார்' என்புழி என்மனார் என்ற வினை, புலவர் என்னும் தோன்றா எழுவாயை அவாவி நிற்பது போல்வன இதற்கு எடுத்துக்காட்டு.

அண்மை நிலை – முடிக்கப்படும் சொல்லும் முடிக்கும் சொல்லும், இடையே பொருளை மாற்றுதற்குரிய பிற சொற்கள் வாராது, இணைந்து வருவது.

உ–ம்: சாத்தன் உணவை உண்டான். உணவை என்ற சொல் தன்னை முடிக்கும் சொல்லாகிய உண்டான் என்ற சொல்லை அண்மையில் கொண்டிருப்பது காண்க.

இரு சொற்கள் பிளவுபடாமல் இசைப்பது தொகை எனவும், பிளவுபட்டிசைப்பது தொகாநிலை எனவும் இவர் கொண்டுள்ளார். சேனவரையர் கருத்தும் இதுவே.

எழுவாய்த்தொடர் முதலாயின தொகாநிலைத் தொடர்களாம். இத்தொகாநிலைத் தொடர்களின் எண்ணிக்கை பற்றி இலக்கண ஆசிரியரிடையே கருத்து வேறுபாடுண்டு. நன்னூலார் தொகாநிலைத்தொடர் பதினான்கு என்பர். பிறர் வேறு கூறுவர்.

தூரான்வயத்தை இலக்கணக்கொத்து நூலார் பொருத்தமில் புணர்ச்சி எனப் பெயரிட்டு 108-ஆம் நூற்பாவில் விளக்கி எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார்.

'ஆற்றொழுக்கு அடிமறி மாற்றுஇரண்டு அல்லா
எழுவகைப் பொருள்கோள் மரூஉமொழி பொய்யுரை
சிலஇடைப் பிறவரல் பண்புஅதி காரம்
ஆதியாம் பதங்கள் அவையும் அன்றி
விகுதிஉருபு உம்மை முதலினுள் சிலவும்
பொருத்தம்இல் புணர்ச்சி எனப்புகன் றனரே'
— இ. கொ. 108

என்பர். 'அதிகாரம் ஆதி' என்பதனை,

'அதிகா ரத்தால் அவாய்நிலை தன்னால்
ஓர்சொற் பொருளை உறுத்தல் பொருட்டால்
செய்யுள் விகாரத் தால்சிதைந் ததனால்
அறுவகைப் பொருளின் அத்தொகை தன்னால்
இடையில் உள்ளன எல்லாம் மறைதலால்
இன்னும் பலபல ஏதுவி னானும்
மொழிவரு வித்து முடித்தனர் கொளலே' — இ. கொ. 89

என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார். இச் செய்திகளுள் பெரும்பாலான இவரும் குறிப்பிட்டுள்ளார்.

தூரான்வயம் – சேய்மைச் சொல்லோடு பொருள் பொருத்த முறச் சேர்வது. பொருள்கோள் ஒன்பது. அவற்றுள் ஆற்றொழுக்கும், அறமறிமாற்றும் அண்மைநிலை உடையன. ஏனைய தூரான்வயத்தன,



ஆற்றொழுக்கு, சுண்ண மொழிமாற்று, அடி மொழிமாற்று, நிரல் நிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறி பாம்பு, கொண்டு கூட்டு, அடிமறி மாற்று என்பன ஒன்பதுவகைப் பொருள்-கோளாம்.

'சுரையாழ அம்மி மிதப்ப' 'நல்ல படாஅ பறை' என்பன ஓரடிக் கண்ணேயே, 'சுரைமிதப்ப அம்மி ஆழ' 'நல்ல பறை படாஅ' என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டன.

மரூஉத் தொகை – இலக்கணப்போலி போல முன்பின்னாக மாறி, பின்மாலை என்பது முதலாக வருவன.

இவற்றை மாலையின் பின் – என்பது முதலாக மாற்றிப் பொருள் கொள்க. நுனிக்கொம்பர், கடைக்கண், முன்றில் என்பனவும் மரூஉத் தொகைகளே. இவற்றைப் பின்வந்த நன்னூலார் இலக்கணப்போலி எனப் பிரித்து வழங்குவர்.

கட்டிய சொல்லைப் பொய்யுரை எனப் பெயரிட்டு, இலக்கணக் கொத்து நூலார்,

'ஒப்பிலா மலடி பெற்ற மகன்ஒரு முயற்கொம்பு ஏறித்
தப்பில்ஆ காயப் பூவைப் பறித்தமை சாற்றி னாரே'

என்ற பாடலைச் சுட்டி, மலடி மகன் – முயற்கொம்பு – ஆகாயப்பூ என்ற பொய்ப் பொருள்களை எடுத்துக்காட்டாகத் தந்தார்.

| | | |
|---|---|---|
| கூர்மரோம கம்பலம் | — | ஆமை மயிர்க்கம்பளி; |
| கரதல ரோமபாசம் | — | உள்ளங்கையில் வளரும் மயிரால் ஆகிய கயிறு; |
| துன்னூசிக்குடர் | — | குத்தூசி போன்ற குடர். |

[உள்ளே பொந்து இல்லாத ஊசியை உள்ளே தொளை உடையதாய்க் கொள்கலனாய் அமையும் குடருக்கு உவமை கூறியது]

இவை பொய்ப் பொருளாகிய கட்டிய வழக்கிற்கு எடுத்துக் காட்டுக்களாம்.

இடைப்பிற வரலாவது – உருபு ஏற்ற சொற்களும், முற்றுச் சொற்களும், பெயரெச்சச் சொற்களும், வினையெச்சச் சொற்களும் நிலைமொழிகளாய் அமைய, அவற்றுக்கும் அவை கொண்டுமுடியும் வருமொழிச் சொற்களுக்கும் இடையே வேற்றுச் சொற்கள் பொருள் பொருத்தமுற வருதலாம்.

பதத்தோடு விகுதி பிரித்துக் கூட்டும் பொருத்தமில் புணர்ச்சிக்கு, பொறிநுதல் வியர்த்தல் முதல் கொடிச்சேவலோய் முடிய எடுத்துக்காட்டுக்கள் தரப்பெற்றுள்ளன.

இலக்கணக்கொத்து நூலார் இவற்றுள் சில காட்டி, மேலும் கொண்ட பகைவன் (பகை கொண்டவன்) உடைமரவுரியன் (மரவுரி உடையன்) என்பனவும் காட்டினர்.

'புணரியல் ...... உரித்தே' என்பது உம்மையைப் பிரித்துக் கூட்டுவதற்கு எடுத்துக்காட்டு. இதனோடு, சாத்தன் வருதற் குரியனுமாவன் (வருதற்கும் உரியனவன்) என்பதனையும் இலக்கணக்கொத்து நூலார் குறிப்பிடுவர். – *108 உரை*

'இனிய......தற்று' என்பது பண்பினைப் பிரித்துக் கூட்டு வதற்கு எடுத்துக்காட்டு. இதனுள் இனிய கனி, இன்னாத காய் எனப் பண்புகள் பின்னும் பிரித்துக் கூட்டப்பட்டவாறு. மீகண், கீழ் நீர் முதலியன உருபினைப் பிரித்துக் கூட்டுதலுக்கு எடுத்துக் காட்டு. – *இ. கொ. 108 உரை*

அதிகாரத்தால் பிரித்து வருவித்து முடித்தலாவது, 'அவற்றுள்', அஇ உஎ ஒ-குறில் ஐந்தே' (ந. 64) என்புழி நின்ற அவற்றுள் என்னும் சொல்லைப் பிரித்துப் பத்துச் சூத்திரத் திற்குத் தனித்தனியே வருவித்தல் போல்வது. இதுவே அநுஷங்கம் எனப்படும். – *இ. கொ. 89 உரை*



வடமொழியில் சொல்லிலக்கணம் கூறுவதே வியாகரணம். செய்யுளிலக்கணம் கூறுவது வேறு சாத்திரம் என்க. அஃது ஆறு அங்கங்களுள் ஒன்றாகிய 'சந்தம்' ஆகும்.

மதில் மதிள் என்று ஆவதுபோல, அலமரும் என்பது செய்யுளில் எதுகை நோக்கி அளமரும் என்றாயிற்று. இவ்விடத்து லகர ளகரங்களால் பொருள் வேறுபாடின்று.

சிறுபான்மை பொருந்தும் என்றது, அருகித் தேவைப்படும் இடங்களிலன்றி இடைப்பிறவரலை வாக்கியங்களில் யாண்டும் பயன்படுத்துதல் கூடாது என்னும் கருத்துப் பற்றி என்க.

காமனை எரித்தல் கணபதிக்கும் அடையாயினமையின் அது பொருந்தாது எனவும், வல்லம் எறிதல் நல்லிளங்கோசருக்கும் அடையாயினமையின் அதுவும் பொருந்தாது எனவும், அடை கொளியை அண்மை நிலையில் புணர்த்துச் சொற்றொடர் அமைத்-தால்தான் பொருந்தும் எனவும் விளக்கியுள்ளார்.

இரு சொற்கள் பிளவுபடாது ஒட்டி ஒருசொல் நீர்மைப் படுதலே தொகை என்பர் ஒரு சாரார். வேற்றுமை உருபு முதலியன தொக்கு நிலைமொழியும் வருமொழியும் கூடுவனவே தொகை என்பர் ஒருசாரார். அவருள் இவர் முன்னைய கருத்தினர். உருபு முதலியன தொக்குத்தொகையாம் எனின், உருபு முதலியன வெளிப்படையாக நிலைமொழிகளின் உறுப்பாக அமைந்து வருமொழியோடு புணர்தலே இயல்பான புணர்ச்சியாதல் வேண்டும். அவ்வாறாயின், விளக்குறுமை என்பதனை விளவது என உகரஈறாக்கி, அது என்பதனைக் கெடுத்துப் பின் விளக்குறுமை என ஒற்று மிகுத்தலுக்கு விதி கூறல் வேண்டும்.

நாடுரி என்பதனை நாழியும் உரியும் என மகரஈற்று நிலைமொழி வருமொழிகளாகக் கொண்டு உம்மையைக் கெடுத்து நாழி உரி எனக் கொண்டு பின் நாடுரி என்றாதலுக்கு விதி கூறல் வேண்டும். பிறவும் அன்ன. தொல்காப்பியம் முதலிய தமிழ்

நூல்களிலும் வடமொழி நூல்களிலும் உருபுகளையும் உம்மையையும் உவமையையும் நிலைமொழி ஈறாக வைத்துக் கெடுத்துப் பின் புணர்ச்சி விதி கூறப்படவில்லை.

விளக்குறுமை முதலியவற்றில் உருபுதொகப் பொருள் நிற்கும் இயல்பறிந்து, விள என்பதனையே நிலைமொழியாகக் கொண்டு புணர்த்தவாறு காண்க. உருபுகெட்டே தொகை அமையும் எனின், தவளை வாய் என்பது – தவளையது வாய் என்பது தவளை வாய் என்றாயினமையின், இயல்பு புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு ஆதல் இயலாது.

கோடியைத் தொகுத்தார்க்கும், பெயல் வினையுள் இரண்டும், மருவினது தொகுதி, மக்கட் பெயரது தொகுதி, மரபினை உடைய இரண்டு என்பன ஈறு கெட்டுக் கோடி தொகுத்தார்க்கும் முதலியனவாக ஆயின என்று கொள்ளும் வழக்கம் இன்று. உவாஅப் பதினான்கு என்பதனை உவாவும் பதினான்கும் என்ற நிலைமொழி வருமொழிகளாக வைத்துப் புணர்க்கமாட்டார். பொற்றொடி வந்தாள் என்ற தொடரில், பொற்றொடி உடையாள் வந்தாள் என்பதன்கண், உடையாள் என்ற சொல் கெட்டது என்று கூறுவாரிலர். ஆதலின் வேற்றுமை உருபு முதலிய சொற்கள் இருந்து பின் மறைந்து நிலைமொழியும் வருமொழியும் தொகையாயின என்பது, வெளிப்படையாக மலை இருப்பது தெரிந்தும் அதன்மீது நாட்டமின்றி மோதிக்கொள்வது போல்வதாம்.

பாணினியார் உருபு இன்றிச் சொற்கள் நிலைமொழி வருமொழியாகப் புணர்தலையும், உருபு கெட்டு நிலைமொழி வருமொழியாகப் புணர்தலையும் கூறியுள்ளார். ஆதலின் இலக்கணக்கொத்து நூலார், தொகைக்கு இலக்கணம் கூறும்போது,

"'தொகைநிலைக் குணத்தைச் சொல்லுங் காலை
வேற்றுமை உருபு முதலிய இடைநிலை
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்,
நிலைமொழி வருமொழி நீக்கம் இன்றி
ஈறும் முதலும் இயைந்து நின்று
விட்டிசைப்பு இன்றிஓர் நிலைமொழி விதிபெறத்
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்,
பலசொல் கூடிஓர் சொல்லே யாகிப்
பிளவுபட்டு இசைக்கவும் பிரிக்கவும் படாமல்
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்
கூறுவர்; தொகாநிலை கூறுங் காலை
உருபு முதலிய இடையே உரைத்தல்
விட்டிசைத்து உரைத்தல் வெவ்வேறு உரைத்தல்
என்றே கூறுவர்; இவர்மதம் மறுபடா' – இ.கொ. 96

இம்மூவரும் ஒருவர்க்கொருவர் எளியரல்லர்; அதனால் மதம் மறுபடா என்றாரும்" என்று குறிப்பிட்டுள்ளார்.



பாணினியார் போல இருநிலையும் கூறாது, காத்தியாயனர் தொகையுள் உருபு இல்லை என்று நிறுவியதைச் சேனாவரையர் பின்பற்றித் தொகைக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

**'பரஸ்பரா பேக்ஷாணாம் பூர்வோத்தர பதானாம்
சுபந்தானாம் கதம்சித் ஏகபத்யம் சமாச:'**

என்ற கருத்தே சேனாவரையருடையது.

பெயரோடு வினை சேர்ந்து நிலங்கடந்தான் என்பது போலத் தொகைச் சொற்கள் உண்டாகும். வினையொடு பெயர்–செய்தான் பொருள் என்பது போலச் சேர்ந்துழி, விட்டிசைத்–தலான் உருபு மறைந்திருந்தும் இவை போல்வன தொகை ஆகா. உருபு மறைந்திருத்தல் தொகைக்கு இலக்கணம் என்பார் கருத்துக்கு இந்நிலை ஒவ்வாததாகும்.

வேழக் கரும்பு முதலியவற்றில் எதுவும் தொகுக்கப்படவில்லை, ஆயின், அவை ஒட்டி ஒரு சொல் நீர்மையவாதலின் தொகையாம். இதுவும் உருபு முதலியன தொகுதலின் தொகை என்பார் கருத்துக்கு ஒவ்வாததாகிவிடும்.

செய்தான் பொருள் என்பது தொகாநிலை என்பதனையும், வேழக்கரும்பு என்பது தொகை என்பதனையும் அவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆதலின் அவர்கள் கூறும் தொகை இலக்கணம் நிரம்பா இலக்கணமாகும். ஒட்டி ஒருசொல் நீர்மைப்படுதலே தொகை இலக்கணம் எனக் கொள்ளின் தொகைகள் யாவும் அவ்விலக்கணத்துள் அடங்கும்.

**'அதுவென்......குகரம் வருமே'** - தொ. சொ. 94

சாத்தனது புதல்வன் என இருந்து, பின் அது என்ற அஃறிணைப் பொருளில் வரும் ஆறன் உருபு புதல்வன் என்ற உயர்திணைப் பெயர்க்கு ஏலாமையின் நீக்கப்படவே, நான்கன் உருபு வந்து சாத்தற்குப் புதல்வன் என்றாயிற்று எனின், சாத்தனது புதல்வன் என இருந்த காலத்தில் அது திணைவழுவே. சிறிது காலம் திணைவழு அமையும் என்றால், எக்காலத்தும் அத் திணைவழுவை வழுவமைதியாகவும் கொண்டுவிடலாம். அதனை நீக்கவேண்டிய தேவைக்கே இடன் ஏற்படாது.

ஆதலின், சாத்தனது புதல்வன் என்றிருந்து பின் சாத்தற்குப் புதல்வன் என ஆயிற்று என்று கூறாமல், ஆறும் வேற்றுமை உடைப்பொருள் தோன்றச் சாத்தற்குப் புதல்வன் என வந்தது என்று கோடலே ஏற்றது. 'கெட' என்பதற்கு இருந்து பின்கெட என்று பொருள் செய்யாது, வரவேண்டியது வாராது போக - எனப் பொருள் செய்யவேண்டும். அஃது அழிவுபாட்டு அபாவம் அன்று; உள்ளதன் அபாவமேயாம். ஆதலின் 'உருபு தொக வருதல்' முதலியவற்றிற்கு, அப்பொருள் தோன்ற இரு சொற்கள் ஒட்டி ஒரு சொல் நீர்மைப்படச் சேர்தல் என்பதே பொருளாகக் கொள்க.

மேலும் வினைத் தொகையில் வினையும், பண்புத் தொகையில் பண்பும், அன்மொழித் தொகையில் அன்மொழியும் மறையவில்லை. [மறைதலாவது முன்னர் இயல்பாகவே இருந்து பின்னர்ப் புணர்ச்சியின்போது மறைதலாம்.]



வேற்றுமைத்தொகை முதலிய சொற்களை விரித்துப் பொருள் கூறியுள்ளார்.

வெளிப்படல் இல்லது என்பதற்கு, இருந்து கெட்டது என்று பொருள் செய்யாது, இருக்கவேண்டியது இல்லாதிருப்பது என்றே பொருள் செய்க. 2

## தொகையின் வகைகள்

20. தற்புருடன், துவிகு, பலநெல்,
 கர்மதாரயனோடு,
உற்பல வாள் நெடுங்கண்
 பசுந்தேமொழி ஒண்டொடியாய்!
சொல்பயில் அவ்வி யயிபாவம்,
 ஏனைத் துவந்தன் எனக்
கற்பவர் கூறும் சமாசன்களே
 தொகைக் கட்டளைக்கே.

இது தொகைக்குத் தொகை கூறுகின்றது. தற்புருடன், துவிகு, வெகுவிரீகி, கருமதாரயன், அவ்வியயீபாவம், துவந்துவன் எனச் சமாசன் ஆறும் என்றவாறு.

தற்புருடன் - வேற்றுமைத் தொகை; துவிகு - எண்ணொடு பொருள் புணர்ந்த எண்தொகை; வெகுவிரீகி - அன்மொழித் தொகை; கருமதாரயன் - பண்புத்தொகை; அவ்வியயீபாவம் - முன்னும் பின்னும் மொழி அடுத்து வரும் இடைச்சொல் தொகை; துவந்துவன் - உம்மைத் தொகை.

நேமிநாதத்தார் வருக்கத்து ஒற்று - வருக்கம் அளபெடைகள் என்னாது, வடமொழியில் பிறந்த வண்ணமே,

**'வர்க்கத்து ஒற்று'** - நே. 16

**'வர்க்கம் அளபெடைகள்'** - நே. 3

என்றாற் போல, யாமும் கருமதாரயன் என்னாது கர்மதாரயன்

எனத் தற்சமமாகக் கூறினும். அன்றியும் நருமதை என்னுது நன்மதை என்ருற்போலக் கன்மதாரயன் எனினும் அமையும். அஃதன்றித் தண்டியாசிரியரும், சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்த வண்ணமே,

'யுத்த மயுத்தமும்' — தண்டி. 62

'ராசமாபுரி' — சீவக. 541

† 'ரவிகுல திலகன்'

என முறையே கூறுதல் காண்க. (3)

விளக்கம்

வடமொழியார் கூறும் துவிகு சமாசனைப் பண்புத் தொகையுள்ளும், அவ்வியயிபாவத்தை இடைச்சொல் தொகாநிலைத் தொடருள்ளும் கொள்ளும் தமிழ் நூலார், வினைத்தொகை உவமத் தொகைகளையும் கூட்டித் தமிழில் தொகை ஆறு என்பர். வேற்றுமை, பண்பு, உம்மை, அன்மொழித் தொகைகள் இருமொழிக்கும் பொது. பல - வெகு; நெல் - விரீகி; பல நெல் - வெகுவிரீகி.

'ஓங்குயிர்கள் ஒற்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்
ஆங்கிரு நூற்ருெருபத் தாருகும் - பாங்குடைய
வல்லொற்று மெல்லொற்று 'வர்க்கம் அளபெடைகள்'
சொல்லொற்றி நீட்டத் தொகும்' — நே. 3

'வாய்ந்த உயிர்ப்பின் வருமெழுத்தின் 'வர்க்கத்தொற்(று)'
ஏய்ந்து புகுதும் இயல்புமாம்—ஆய்ந்த
இறுதி வருமெழுத்தாம் ஈறராம் ஓரோர்
மறுவில்பதங் கெட்டு வரும்' — நே. 16

என்ற நேமிநாத நூற்பாக்களை நோக்குக.

† இத்தொடர் வந்துள்ள சிந்தாமணிப்பாடலடி புலப்பட்டிலது.



'ஆவோடு அல்லது யகரம் முதலாது' — தொ. எ. 65
என்ற தமிழ்விதிக்கு மாருக வடமொழிச் சொற்கள் தமிழில் வருங்கால்,

'ரவ்விற்கு அ - முதலாம் முக்குறிலும் லவ்விற்கு
இ - முதல் இரண்டும் யவ்விற்கு உவ்வும்
மொழிமுத லாகி முன்னர் வருமே' — ந. 148

என்ற விதியை விடுத்து, தண்டியலங்காரத்தில்,

'தூரகா ரியமும் ஒருங்குடன் தோற்றமும்
காரணம் முந்துறூஉம் காரிய நிலையும்
யுத்தமும் அயுத்தமும் முத்தையோ டியலும்' — தண்டி 26

என வந்துள்ளது.

சிந்தாமணியில் - 'ரவ்விற்கு அம்முதலாம்' என்ற விதிக்கு மாருக, இராசமாபுரம் (சீவக. 541) இரவிகுலதிலகன் எனற் பாலனவற்றை வடமொழியில் இருந்தவாறே ராசமாபுரம், ரவிகுல திலகன் என்று அமைத்தாற்போல - கருமதாரயன் என்று கூறவேண்டியதனை, வடமொழியில் உள்ளவாறே கர்மதாரயன் என்று குறிப்பிட்டுள்ளார். வர்க்கத்தொற்று முதலிய மேற்கோள் இவர்தம் செயலுக்கு முன்னேர் ஆட்சியாம் எடுத்துக்காட்டுக்கள். கன்மதாரயன் என்பார் வீரசோழிய நூலார்.

'தற்புருடன் பலநெல் கன்ம தாரயந் தாங்கருஞ்சீர்
நற்றுவி குத்தொகை நாவார் துவந்துவம் நல்லதெய்வச்
சொற்பயன் மாந்தர்கள் அவ்விய பாவமி தென்றுதொன்மைக்
கற்பக மாப்பகர்ந் தார்தொகை ஆறும் கனங்குழையே'
— வீ. சோ. 45

என்ற காரிகையும் இங்ஙனமே அறுவகைத் தொகைகளையும் 3
குறிப்பிடுதல் காண்க.

## வேற்றுமைத் தொகையும் எண் தொகையும்

21. தற்புருடத்தொகை வேற்றுமை எட்டனுள்,
        சார்ந்த நஞ்ஞுச்
    சொற்பொருள் அன்மை மறை இன்மை
        காட்டும்; தொகைத்துவிகு,
    முற்பதம் எண், பிற்பதம் தத்திதார்த்தம்
        முடித்தும் எழூஉம்;
    பற்பல ஏகவற்பாவி
        அநேகவற்பாவி என்றே.

*இது தற்புருடனும் துவிகுவும் ஆமாறு கூறுகின்றது. பிரதமா தற்புருடன், துதீயா தற்புருடன், திருதீயா தற்புருடன், சதுர்த்தி தற்புருடன், பஞ்சமீ தற்புருடன், சட்டீ தற்புருடன், சத்தமீ தற்புருடன், நஞ்ஞு தற்புருடன் எனத் தற்புருட சமாசன் எட்டு. அவற்றுள் நஞ்ஞு தற்புருடன் அன்மை முதலாக மூன்றும். இனித் துவிகு சமாசன் ஏகவற்பாவி, அநேகவற்பாவி என இரண்டாகி முற்பதம் எண்ணாகியும் பிற்பதம் தத்திதார்த்த மாகியும் வரும்.*

*உம்மையால், தத்திதார்த்தமாய் வருதலும் அன்றிப் பொருள் அளவு நிறை என்னும் மூன்றோடு வருதலும் கொள்க. மறை என்றது எதிர்மறை.*

*பிரதமா தற்புருடனுக்கு உதாரணம்: நுனிநா - நுனிக் கொம்பர் - கடைக்கண் - அரைக்காசு - அரைக்கால் - அரைமா - அரைக்காணி - முற்பகல் - பிற்பகல் என வரும். வடமொழியில் அர்த்தபிப்பலி - பூர்வகாயம் - பிராத்த சீவிகன் - ஆபந்ந சீவிகன் என வரும். பரிமேலழகர் முற்பகல் பிற்பகல் என்பனவற்றை முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை என்பர். வடநூலார் முன்நின்ற மொழி பிரதமை ஆகலின், பிரமதா தற்புருடன் என்பர்.*



*நிலங்கடந்தான் என்றும், வடமொழியில் காந்தாராதீதன் என்றும் துதியா தற்புருடன் வரும்.*

*நாய்க் கோட்பட்டான் –*

| | |
|---|---|
| **'திருநீக்கப்பட்டார் தொடர்பு'** | - கு. 920 |
| **'வேந்து செறப்பட்டவர்'** | – கு. 895 |
| **'அடி அளந்தான்'** | – கு. 610 |
| **'ஈதல் இசைபட வாழ்தல்'** | – கு. 231 |

*வடமொழியில் 'சங்குலாகண்டம்' என்றும், தம்மினாகிய தொழிற் சொல்லினும் பிறிதினும் திருதீயா தற்புருடன் வரும்.*

*மணைப் பலி – குண்டலப் பொன் என்றும், வடமொழியில் பூத பலி – நாக பலி – யூப தாரு என்று சதுர்த்தி தற்புருடன் வரும்.*

*கருவூர்க் கீழ்த்திசை – மருவூர் மேற்றிசை என்றும், வடமொழியில் சோர பயம் என்றும் பஞ்சமீ தற்புருடன் வரும்.*

*நாநுனி (தொ. எ. 93) நாவிளிம்பு (தொ. எ. 96) கட்கடை – சாத்தந்தை – கொற்றந்தை என்றும், வடமொழியில் சூதாக்கிரம் என்றும் சட்டீ தற்புருடன் வரும்.*

*எண்ணெய் – கைவிரல் என்றும், வடமொழியில் பர்வத சிகரம் – சரோசலம் என்றும் சத்தமீ தற்புருடன் வரும்.*

**'நேர்ந்த மொழிப்பொருளை நீக்கவரும் நகரம்**
**சார்ந்த(து) உடலாகின் தன்உடல்போம் - சார்ந்ததுதான்**
**ஆவியேல் தன்ஆவி முன்ஆகும்'** – நே. 11

*என்பதனான் அகளங்கன் – அகங்கன் என்றும்,*

*அப்பிராமணன் – அநச்சுவம் என்றும்,*

*அதன்மம் என்றும் முறையே இன்மை – அன்மை – எதிர்மறை மூன்றினும் நஞ்ஞு வரும்.*

'தத்அபாவம் தத்அந்நியம் தத்விருத்தம்
எனமூன்று ஆகும் நஞ்சு தற்புருடன்'

இஃது உரைச் சூத்திரம்.

இனிப் பாணினி பகவான் இவ்வுதாரணங்கட்கு முன்நின்ற நகாரம்கெட்டு வேறொரு நகாரம் வந்தது என்பர். தமிழிலும், 'இல்பொருள் உவமை' - இது இயற்கையான தத்அபாவத்தில் வந்த நஞ்சு.

'வேற்றுமை அல்வழி' - தொ. எ. 158

'அஃறிணை' - என்பன தத்அந்நியமான இனத்தில் வந்த நஞ்சு.

'பயன்இல் சொல் பாராட்டல்' - கு. 96

'கோள்இல் பொறி' - கு. 9

இவை உண்மைக்கு எதிர்மறையான தத்விருத்தத்தில் வந்த நஞ்சு.

'கருமம் அல்லாச் சார்புஎன் கிளவி' - தொ. சொ. 84

இஃது இன்மைப் பொருளில் வந்த அன்மை.

'மன்னுப் பொருளும் அன்ன இயற்றே' - தொ. சொ. 34

'பிறஆழி நீந்தல் அரிது' - கு. 8

'புறத்த புகழும் இல' - கு. 39

என்புழி முறையே தத்அபாவமும், தத்அந்நியமும், தத்விருத்தமும் ஆன நஞ்சு.

தத்அபாவம் என்னும் இன்மைப்பொருள் 'நிர்க்குணம்' என வடமொழியின்கண்ணும் வரும்.

இனி, 'இல்பொருள்' இல்லாப் பொருள்,

'இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மா ஞாலம்' - கு. 1058

'ஏமாப்புஇல் தோணி' - கு.1068

என அடை அடுத்துத் தொகை மொழியாய் நிற்கும் என்க.



இல்லைப் பொருள் - இல்பொருள் என்பன, பொருள் இல்லை-பொருள்இல் என்பன போல எழுவாய்க்குப் பயனிலை ஆவது அன்றி, ஒருபொருட்கு அடையாய் நில்லா இவ்விரண்டும் என்க.

நன்னூலார் வடிவெழுத்து இலக்கணமும் ஒலி எழுத்து இலக்கணமும்,

'புள்ளிவிட்டு அவ்வொடு' - ந. 89

என்னும் சூத்திரத்தான் ஒருங்குகூறினற்போல, தொல்காப்பியரும்,

'இல்என் கிளவி இன்மை செப்பின்' - 372

என்னும் ஒரு சூத்திரத்தால் தொகைநிலையாய் நின்ற அடைமொழிக்கும் தொகாநிலையாய் நின்ற எழுவாய்த் தொடர்க்கும் ஒருங்கு கூறினர் என்க.

இனித் துவிகு சமாசனுக்கு உதாரணம்:

பன்னிரு படலம் - பஞ்ச கபாலம் - ஏகாதச கபாலம் என இருமொழியினும் தத்திதார்த்தமாக ஏகவற்பாவி வரும்; பன்னிரு படலத்தால் செய்தநூல், பஞ்ச கபாலத்தில் வறுத்த புரோடாசம் முதலாகப் பொருள்படுதலின் என்க.

பஞ்சவடி - ஏகவற்பாவி; பஞ்சபாண்டவர் - அநேகவற்பாவி;

'இரு தேவர் பார்ப்பார்' - ஆசார. 31

மூவேந்தர் - முப்பத்துமும்மைத் தேவர் எனத் தத்திதார்த்தம் அல்லாத அநேகவற்பாவி வரும்.

இருகண் முச்சுடர் என்றும், இருகலம் முந்நாழி என்றும், இருபலம் முத்தொடி என்றும் முறையே பொருள் அளவு நிறை-யோடும் ஏகவற்பாவி வரும்.

'பொருள்நிறை அளவொடு புணர் பின்மொழியுடன்
மருள்அறு துவிகு வழங்கவும் பெறுமே'

இஃது உரைச் சூத்திரம்.

அறுகால், சட்பதம், துவிரேபம், சதுர்ப்புசம், சண்முகம் இவை துவிகு சமாசன்மேல் வந்த வெகுவிரீகி.

முக்காலி, நாற்காலி, அட்டபதி, உபயபதி இவை துவிகு சமாசன்மேல் வந்த தத்திதன்.

இனிப் பதினென்று பன்னிரண்டு – என்றும்,

தூணிப்பதக்கு, நாடுரி – என்றும்,

தொடியேகஃக – என்றும், எண் அளவு நிறைகள் தம்மொடு-தாம் புணர்ந்த தொகையைப் பாடியகாரரும் தொல்காப்பியரும் உம்மைத்தொகைத் துவந்துவன் என்பர். பதினென்று என்பதனை ஒன்றை அதிகமாக உடைய பத்து எனவிரித்து, உருபும் பொருளும் உடன்தொக்க மத்தியபதலோபன் என்பர் காத்தியாயனர்.

பிறவும் அன்ன.

இனித் தொல்காப்பியரும் முப்பத்துமூன்று என்பதனை முப்பதும் மூன்றும் என விரியாது,

'மூன்று தலையிட்ட முப்பது' – எ. 103

எனவிரித்துக் காத்தியாயனர் மதமும் கொள்வர்.

இனி, இருபது – முப்பது – இருநூறு – முந்நூறு என்பன எல்லாம் மத்தியபத லோபனும். என்னை? இரண்டாற்பெருக்கிய பத்து, இரண்டாற் பெருக்கிய நூறு முதலாக விரிதலின். பிறவும் அன்ன.

'அறுநான்கு இரட்டி' – முருகு. 179

என்பது ஆறால் பெருக்கிய நான்கு இரட்டி எனவும், வெகுவிரீகிப் பொருளால் இருபத்துநான்கு இரட்டி எனவும், பதிற்றுப்பத்து என்னும் ஒருதொகைச்செய்யுள் பத்தால் பெருக்கிய பத்து எனவும், வெகுவிரீகிப் பொருளால் நூறு எனவும் விரியும்.



'நூற்றுப்பத்து அடுக்கிய' – முருகு. 155

என்பது நூற்றால் பெருக்கிய பத்து எனவும், வெகுவிரீகிப் பொருளால் ஆயிரம் எனவும், நூறும் பத்தும் எனவும் விரியும். இனிப் பண்புத் தொகை என்பாரும் உளர். வடமொழியினும் ஏகாதசம் – துவாதசம் – ஏகவிஞ்சதி – பஞ்சவிஞ்சதி – சதுச்சதம் – அட்டசதம் – அட்ட சகச்சிரம் எனவும், நவத்துவய தீபம் எனவும் வரும்.

அறுகால் – சட்பதம் முதலாக ஈண்டுக்காட்டிய உதாரணங்கள் எல்லாம் எவற்றுக்கு எனின், அவை துவிகு சமாசன் அல்ல என்பதற்கும், அப்பிரதிபத்தி, விப்பிரதிபத்தி, அந்யதாப்பிரதிபத்தி வாராமைக்கும் என்க. (4)

விளக்கம்

தமிழில் வேற்றுமைத்தொகை இரண்டாம் வேற்றுமைத் தொகை முதல் ஏழாம் வேற்றுமைத் தொகை ஈறாகிய ஆறாகும். வடமொழியில் முதல் வேற்றுமைத்தொகை, இன்மைப் பொருளதாம் தொகை என்ற இரண்டும் சேர வேற்றுமைத்தொகை எட்டாகும். ஒரே பொருளைக் குறிப்பது ஏகவற்பாவி. பல பொருள்களைக் குறிப்பது அநேகவற்பாவி.

அர்த்த பிப்பலி — பாதி அரிசித்திப்பிலி. (அரிசித்திப்பிலியது பாதி)

பூர்வ காயம் — முன் உடம்பு, (உடம்பினது முன்னிலை)

பிராத்த சீவிகன் — வந்தடைந்த உயிரை உடையவன்.

ஆபந்த சீவிகன் — விபத்துக்குள்ளான உயிரை உடையவன்.

முற்பகல் முதலிய சொற்கள் பகலினது முன் என்றாற்போலப் பொருள்படுதலின், இவை முன் பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை என்பதே தமிழ் நூலார் கருத்து. முன் என்பது முதலியன எழுவாய் வேற்றுமை ஆதலின், இவை முதல் வேற்றுமைத் தொகை என்பது வடநூலார் கருத்து.

காந்தாராதீதன் – காந்தாரம் – காடு, அதீதன் – கடந்தவன்.

சங்குலாகண்டம் – கத்தரிகையால் வெட்டப்பட்ட துண்டு. தம்மினாகிய தொழிற்சொல் – மூன்றாவதற்குரிய வினைமுதற் பொருளான் உளவாகிய தொழிலைக் குறிக்கும் வினை, நாய்க்கோட் பட்டான்......... அடியளந்தான் – எடுத்துக்காட்டு.

ஈதல் இசைபட வாழ்தல் – ஈதலால் புகழுண்டாக வாழ்தல்;

இது தொழிற்பெயர் மூன்றன் தொகையாக வந்ததற்கு எடுத்துக்காட்டு.

மணைப்பலி - வீட்டிற்குப் பூசை.

குண்டலப் பொன் – குண்டலத்துக்குப் பொன்.

பூதபலி – பூதங்களுக்குப் பூசை.

யூபதாரு – யூபத்தம்பத்திற்கு மரம். (யூபம் வேள்விக் களத்தில் நடப்படும் மரம்.)

கருவூர்க் கீழ்த்திசை, மருவூர் மேற்றிசை, கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்கு – ஐந்தாம் வேற்றுமைத்தொகை எல்லைப் பொருளில் வந்தது.

சோர பயம் – கள்ளரின் பயம் – ஐந்தாம் வேற்றுமைத் தொகை ஏதுப் பொருளில் வந்தது.

நா நுனி முதலியன நாவினது நுனி முதலாக விரியும்.

சாத்தந்தை, கொற்றந்தை - சாத்தனுக்குத் தந்தை, கொற்றனுக்குத் தந்தை என வரும் ஆறன்தொகை. இதற்கு 'அதுவென்......வருமே' (தொ. சொ. 94) என்பது விதி.

சூதாக்கிரம் – மாவிலை நுனி. சூதம் – மாவிலை; அக்கிரம் – நுனி.

எண்ணெய் – எள்ளின்கண் நெய் என விரியும்.

பர்வத சிகரம் – மலையின்கண் உச்சி.

சரோசலம் – குளத்தின் கண் நீர்.



எதிர்மறைப் பொருளில் வரும் நகரம், முன்மொழியாக, வருமொழி மெய்முதல் மொழியாயின் நகரத்தில் உள்ள நகர ஒற்று நீங்க அகரமே எஞ்சி வருமொழியோடு புணரும். ந + நியாயம் – அநியாயம்.

வருமொழி உயிர்முதல் மொழியாயின், ந என்ற உயிர்மெய் எழுத்து, ந் + அ எனப் பிரிந்து எழுத்து முறைமாறி அந் என்றாகி வருமொழியோடு புணரும். ந + அபாயன் – அநபாயன்.

அகளங்கன் – களங்கம் இல்லாதவன்
அகங்கன் – மரணமில்லாதவன்; கங்கம் – மரணம் } இன்மை

அப்பிராமணன் – பிராமணன் அல்லாதவன்
அநச்சுலம் – குதிரை அல்லாதது } அன்மை

அதன்மம் – தன்மத்துக்கு மாறானது – மறை

இல்பொருள் உவமை,
மன்னுப் பொருள் } – இன்மைக்கு எடுத்துக்காட்டு

வேற்றுமை அல்வழி,
அஃறிணை,
பிற ஆழி நீந்தல் } – அன்மைக்கு எடுத்துக்காட்டு

பயன் இல்சொல்,
கோள் இல்பொறி,
புகழும் இல } – மறைக்கு எடுத்துக்காட்டு

கருமம் அல்லாச் சார்பு – கருமம் இல்லாச் சார்பு எனப் பொருள்படுதலின், அன்மை இன்மைப் பொருளில் வந்தது.

இல் பொருள், இல்லாப் பொருள், இல்லாத ஞாலம், இல் தோணி என இன்மை அடையாகப் பெயரை அடுத்துத் தொகையாய் நிற்றல் இன்மைத் தொகையாம்.

நிர்க்குணம் – குணமின்மை.

இன்மை, என்றும் அபாவம் – இன்மையது அபாவம் – ஒன்றினொன்று அபாவம் – உள்ளதன் அபாவம் - அழிவுபாட்டு அபாவம் என ஐ வகைப்படும்.

'இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐஇடை வருதலும்
இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே'- தொ. எ. 372

இல்லைப் பொருள் – ஐ இடை வந்து வல்லெழுத்து மிக்கது.

இல் பொருள் – இயற்கை ஆயிற்று;

இவை இரண்டும் பொருள் இல்லை, பொருள்இல் என்று பொருள்படும் எழுவாய்த் தொடர்.

இல்லாப் பொருள் – ஆகாரம் வந்தது. இதனைத் தொகையாய் வரும் அடைமொழி என்பர். இது பெயரெச்சத் தொகாநிலைத் தொடர்.

இந்நூற்பாவில் தொல்காப்பியனுர் தொகாநிலை, தொகை நிலை இரண்டற்கும் விதிகளைச் சேர்த்துக் கூறியுள்ளார்.

இந் நஞ்ஞு தற்புருடன் என்னும் மறைத்தொகை தமிழிற்கும் பயன்படுதலான், தமிழ் நூலாரும் இதனைக் குறிப்பிடல் வேண்டும் என்ற கருத்தினர் இலக்கணக் கொத்து ஆசிரியரும். அவர் கூறுவன பின் வருமாறு:

"'அ - அந் ந-நி-கு-வி வருமொழிப் பொருளை
இன்மை பிறிதுமறை யினுள்ஒன்று ஆக்கும்'
– இ. கொ. 100

இவ்வகை ஆறும் வருமொழிப் பொருளை மூன்றனுள் ஒன்ருக்கும்.

அருபம், அப்பிராமணன், அதன்மம் — அ – இன்மை, பிறிது, மறை.

அநந்நியம், அநங்கன் — அந்
நாத்தி (ந + அத்தி) — ந
நிமலன் (நி + மலன்) — நி



குதர்க்கம் (கு + தர்க்கம்) — கு
விதிக்கு (வி + திக்கு) — வி

முறையே ஆறும், மூன்றும் வந்தன.

'அவற்றுள் இன்மை ஐவகை ஆகும்' – இ. கொ. 101

அவை, சிவஞானசித்தியாரின் அபாவ அளவையுள்ளும், தண்டியலங்காரத்தில் அபாவவிரிச் சூத்திரத்துள்ளும் காண்க. ஆயின், வடமொழி இலக்கணத்தை இங்ஙன் விரிக்கின் பயன் என்னை எனின்,

'இல்என் கிளவி இன்மை செப்பின்' – தொ. எ. 372

'இல்என் இன்மைச் சொற்குஐ அடைய' – ந. 233

'இல்பொருள் உவமை' எனவும்,

அல்வழி, அஃறிணை, அவனல்லன், குற்றியல்லன்மகன், மகன் அன்று எனவும்,

கோளில்பொறி, பயனில்சொல் எனவும்,

முறையே அம்மூன்றினையும் மொழிபெயர்த்துத் தமிழிற்குரிய இலக்கண இலக்கியம் ஆக்கினர். அன்றியும், பிறகாலத்தார்,

'நேர்ந்த மொழிப்பொருளை நீக்கவரும் நகரம்' நே. 11

'என்றும் அபாவமும் இல்லதன் அபாவமும்' – தண்டி. 61

'அபாவம் பொருள் ஒப்பு ஆறு என்பர்' – சி. சி. சி. பர 7

என்றும்,

'அத்துவிதம் ஒன்றையும் ஆங்கு'

'அநாதி முத்த சித்துரு'

'அபேதப் பிறப்பில தாம்'

என்றும்,

மொழிபெயராமலே தமிழுக்குரிய இலக்கண இலக்கியம் ஆக்கினர். ஆகையால், அம்மூன்றனையும் அவற்றுள் ஒன்ருகிய (அபாவம்) ஐந்தனையும் விரித்து அறியாக்கால், தமிழ் இலக்கியங்கட்குப் பொருள் கொள்கை கூடாது; பொருள்கொள்ளும் கருவியாய் விரித்ததனல் மிகவும் பயனுண்டே என்க.

இவ்வறுவகையுமன்றி, அபகீர்த்தி, அதிக்கிரமம், அபவாதம் துந்நிமித்தம் முதலிய பல உள. அவையெல்லாம் தமிழிற்குப் பயன்படுதல் சிறுபான்மையாதலின், உரைத்திலம் என்க." – இ. கொ. *101* உரை.

பன்னிரு படலத்தால் செய்த நூல் பன்னிருபடலம் எனப் பட்டது தத்திதார்த்தமாம். தத்திதார்த்தத்தின் விளக்கம் அடுத்த படலத்தில் காண்க. ஏகவற்பாவி – ஒருமொழி ஒப்பு எண் தொகை அல்லது அன்மொழி ஒப்பு எண்தொகை. – வீ. *46*

புரோடாசம் – வேள்வி ஓமத்துக்குரிய பொருள்.

பஞ்சவடி – ஐந்து ஆல மரங்களின் தொகை.

பாண்டுவின் புதல்வர் பாண்டவர் என்பது தத்திதார்த்தம்.

இருதேவர் பார்ப்பார் முதலியன, தத்திதார்த்தம் அல்லாத பெயர்ச் சொற்களாம். அநேகவற்பாவி – பன்மொழி ஒப்பு எண் தொகை. – வீ. *46*

இருகண், முச்சுடர் — பொருட்பெயர் பின்மொழி.

இருகலம், முந்நாழி — அளவுப்பெயர் பின்மொழி.

இருபலம், முத்தொடி — நிறைப்பெயர் பின்மொழி.

அறுகால் — ஆறுகால்களை உடைய வண்டு;

சட்பதம் — ஆறுகால்களை உடைய வண்டு;

துவிரேபம் — ப்ரமரம் என்ற இரண்டு ரகரங்களைப் பெயரில் உடைய வண்டு;



சதுர்ப்புசம் — நான்கு கைகளை உடையது;

சண்முகம் — ஆறுமுகங்களை உடையவன்.

இவை எண்ணெடு பொருள் புணர்ந்த எண்டொகைகளின் மேல் வந்த அன்மொழித்தொகைகளாம்.

முக்காலி — மூன்று கால்களை உடையது – தத்திதாந்த பதம்.

அட்டபதி — எட்டு அடிகளை உடைய பாடல் – தத்திதாந்த பதம்.

உபயபதி — ஆற்பனேபதம், பரஸ்மை பதம் இரண்டிலும் வரும் வினைச்சொல்.

எண்தொகையில் நிலைமொழியும் வருமொழியும், எண்ணுகவோ அளவாகவோ நிறையாகவோ இருப்பின், அவை உம்மைத் தொக்கை ஆகும் என்பது தொல்காப்பியனர் பதஞ்சலியார் என்னும் இவர் கருத்தாகும். அவற்றை உருபும் பொருளும் உடன் தொக்க வேற்றுமைத்தொகையாகக் கோடல் காத்தியாயனர் கருத்தாகும். காத்தியாயனர் விரித்துக் கொள்ளும் பொருளும் தொல்காப்பியனருக்கு உடன்பாடாதல், முப்பத்துமூன்று, இருபத்திரண்டு என்பனவற்றை,

'மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது' – எ. *103*

என்று தொல்காப்பியனர் விரித்து உரைத்தவாற்ருன் உணரலாம்.

இருபது – இரண்டால் பெருக்கப்பட்ட பத்து என மூன்ரும் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகை. முப்பது, இருநூறு, முந்நூறு முதலாயினவும் அன்ன. தமிழ் நூலார் இவற்றைப் பண்புத் தொகை என்பர்.

அறுநான்கிரட்டி – நாற்பத்தெட்டு என்பது அன்மொழிப் பொருள்.

நூற்றுப் பத்து என்பது அன்மொழித்தொகையாயின் ஆயிரம் ; உம்மைத் தொகையாயின் நூறும் பத்தும் என விரியும்.

ஏகாதசம், துவாதசம் – ஒன்று கூடிய பத்து – பதினொன்று ; இரண்டு கூடிய பத்து – பன்னிரண்டு.

ஏக விஞ்சதி – ஒன்று கூடிய இருபது – இருபத்தொன்று.

பஞ்ச விஞ்சதி – ஐந்து கூடிய இருபது – இருபத்தைந்து.

சதுச்சதம் – நான்கால் பெருக்கிய நூறு – நானூறு.

அட்டசதம் – எட்டால் பெருக்கிய நூறு – எண்ணூறு.

அட்டசகச்சிரம் – எட்டால் பெருக்கிய ஆயிரம் – எண்ணாயிரம்.

நவத்துவயதீபம் – ஒன்பதிற்றிரட்டி தீவம் – பதினெட்டுத் தீவம். (ஒன்பதனுடைய இரட்டி ஆகும் தீவம் என்க.)

அறுகால் – சட்பதம் முதலாயின வண்டு முதலியவற்றைக் குறிப்பதால் அவை எண்தொகையல்ல எனவும், எண்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனவும் கொள்க.

அப்பிரதிபத்தி – குன்றக் கோடல்.

விப்பிரதிபத்தி – மாறுகொளக் கோடல்.

அந்யதாப் பிரதிபத்தி – போலியைக் கோடல்.

வேற்றுமைத்தொகை எண்தொகை என்பனபற்றி, வீரசோழியம்,

'எழுவாய் முதலெழு வேற்றுமை யோடும் எழுந்தடையில்
வழுவாத நஞ்ஞொ டெட்டாம் தற்புருடன் ; வளர்திவிகு
தழுவார்ந்த எண்மொழி முன்னாய் வரும் தத்திதப் பொருள்மேல்
குழுவார் ஒருமை ஒப்புப் பன்மை ஒப்புக் குறியிரண்டே'

என்று குறிப்பிடுவதும் காண்க. – வீ. 46





## பண்புத் தொகை

22. முன்மொழிப் பண்பு, இருபண்பு,
விசேடியம் முன்மொழிதல்,
முன்மொழித் துல்லியம், பின்மொழித்
துல்லியம், மொய்குழலாய் !
முன்மொழிச் சம்பாவனை,
அவதாரணம், முற்றும்இவை
நன்மொழிப் பண்புத் தொகைக்
கர்மதாரயன் நற்றமிழ்க்கே.

இது கருமதாரயன் ஆமாறு கூறுகின்றது. முன்மொழிப் பண்பு, இருமொழிப் பண்பு, முன்மொழி விசேடியம், முன்மொழி ஒப்பு, பின்மொழி ஒப்பு, முன்மொழி எண்ணம், முன்மொழித் தேற்றம் என எழுவகையாம் கருமதாரயன்.

'முன்மொழிப் பண்பு விசேடண பூர்வம்'

'இருமொழிப் பண்பு விசேட ஞேபயம்'

'முன்மொழி விசேடியம் விசேடிய பூர்வம்'

'முன்மொழித் துல்லியம் உபமா பூர்வம்'

'பின்மொழித் துல்லியம் உபமஉத் தரபதம்'

'சம்பா வனைஅவ தாரணம் முறையே
எண்ணம் தேற்றம் எனப்பெயர் பெறுமே'

இவை உரைச் சூத்திரம்.

கருங்குவளை – செங்குவளை என்றும், வடமொழியில் நீலோற்பலம் – இரத்தோற்பலம் என்றும் முன்மொழிப்பண்பு என்னும் விசேடண பூர்வபத கருமதாரயன் வரும்.

பெருவெள்ளை – சிறுவெள்ளை – இன்பத்துன்பம் என்றும், வடமொழியில் சீதோட்டணம் – சுகதுக்கம் என்றும் இருமொழிப் பண்பு என்னும் விசேடண உபயபத கருமதாரயன் வரும்.

தெய்வப் புலவன் திருவள்ளுவன் என்றும், வடமொழியில் வையாகரண கசூசி – ஆசாரியதண்டி என்றும் முன்மொழி விசேடியம் என்னும் விசேடிய பூர்வபத கருமதாரயன் வரும்.

சங்கு வெள்ளை – முத்து வெள்ளை என்றும், வடமொழியில் சங்க பாண்டு என்றும் முன்மொழி ஒப்பு என்னும் உபமா பூர்வபத கருமதாரயன் வரும்.

அடிமலர் – பெண் அணங்கு என்றும், வடமொழியில் புருட வியாக்கிரம் என்றும் பின்மொழி ஒப்பு என்னும் உபம உத்தரபத கருமதாரயன் வரும்.

சங்கபாண்டு – புருட வியாக்கிரம் – மயூரவியஞ்சகம் என்னும் உதாரணம் மூன்றிற்கும் மூன்று சூத்திரம் செய்வர் பாணினி என்க.

அறச்சுற்றம் – அருட் செல்வம் – கல்விப் பொருள் என்றும், வடமொழியில் விநயதநம் – குணபுத்தி – சுகிர்தபெந்து என்றும் முன்மொழி எண்ணம் என்னும் சம்பாவனா பூர்வபத கருமதாரயன் வரும். இவையே துணிப்படுங் காலத்துத் தேற்றம் என்னும் அவதாரண பூர்வபத கருமதாரயனும். திருவள்ளுவரும் தொல்காப்பியரும்,

**‘எண்ணித் துணிக கருமம்’** - கு. 467

என்றும்,

**‘ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்’** – தொ. சொ. 337

என்றும் கூறினர் ஆகலின், ஒரு பொருளை எண்ணும் பொழுது ஒன்றாகவும் துணியும் பொழுதும் வேறொன்றாகவும் கொள்க.



விசேடிய பூர்வ பதமாவது,

**‘சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்’** – தொ. சொ. 41

என்ற சூத்திரவிதி பெற்றுத் தொகையாய் நிற்பது. இதனை மாறித் ‘திருவீர ஆசிரியன்’ ‘சங்கராசாரியன்’ ‘அகத்திய முனிவன்’ என விசேடியோத்தர பதமும் ஆக்குவர்.

வெண்திங்கள் – செஞ்ஞாயிறு என்பன இனம் இன்றிச் செய்யுளில் வந்த கருமதாரயன். தண்டியாசிரியரும் தவளசந்திரன் என்பர். இனி, சேனாவரையர் வெள்ளாடு வெண்களமர் என்பன முன்மொழிக் குணம் பற்றி வாராது சாதி பற்றி வந்த என்பர். (சொல். 17) அவ்வாறு கிருஷ்ண சர்ப்பம் என்பதனைக் காசிகாவிருத்திகாரரும் கூறுவர்.

சிறுவெள்ளை – பெருவெள்ளை என்பனவற்றை நெல்மேல் ஏற்றிக் குணநாமங்களே குணிகட்கும் ஆகலின் இவை அன்மொழி அல்ல எனச் சிறுமை பெருமைகளை வெள்ளைக்கு அடை ஆக்காது நெல்லுக்கு அடை ஆக்குவர். இனிச் செந்நிறம், வெண்ணிறம், மார்க்கழித்திங்கள், மாசித்திங்கள், பலா மரம், மாமரம், பரணி நட்சத்திரம், மக நட்சத்திரம், வாளை மீன், கயல் மீன், சாரைப்பாம்பு, விரியன் பாம்பு இவை சிறப்பும் பொதுவும் ஆகிய பெயர்.

கந்நியாகுமரி – கும்பகடம் – மருதந்வா என முறையே வேதத்தினும் வான்மீகத்தினும் வியாச பாரதத்தினும்,

புட்டகப் புடைவை – பெருமலைச் சிலம்பு – அராஅப் பாம்பு –
**‘வடுக்குற்றம் ஆகி விடும்’**
**‘உவகை மகிழ்ச்சியில் சோர்வு’** – குறள் 531
**‘ஆடகச் செம்பொற் கிண்ணம்’** – சீவக. 512
**‘அலறு முந்நீர்த் தடங்கடல்’** – சீவக. 2851

என இவை ஒரு பொருட்கு இரு பெயர் பிரியாது நின்றன. இவை போல்வன வரும் சொல் பற்றி,

**'ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்'** - சொ. 460
எனச் சூத்திரம் செய்தார்.

ஆண்தகை - பெண்தகை - மக்கட்சுட்டு (சொ. 1) இவை பின்மொழி ஆகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர். மக்கட்சுட்டு என்பதைக் கல்லாடரும் பின்மொழி ஆகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர். அதனைச் சேனவரையர் அன்மொழித்தொகை என்பர். நச்சினார்க்கினியர் ஆகுபெயர் என்பர். அவ்விரண்டும் இருமொழி மேலும் அன்றி வேறு ஒரு மொழிமேல் நில்லாமையின், அவ்வுரை பொருந்தாமை அறிக.

'கருஷபாஷாணம்' 'கருஷோபலம்' இவை உரைகல் என்னும் வினைத்தொகையாம். அதனை வடநூலார் இடம் உணர்த்தும் வினைப்பெயர் என்பர். (5)

விளக்கம்

தமிழில், தாமரைமுகம் என்பதனை உவமத்தொகை என்று கூறி, முகத்தாமரை என்ற உருவகத்தைப் பண்புத்தொகையாக்குவர். வடமொழியில் உவமத்தொகையும் பண்புத்தொகையுள் அடங்கும். தமிழில் உவம உருபாகிய இடைச்சொல் தொக்கதனை உவமத்தொகை என்றும், உம்மையாகிய இடைச்சொல் தொக்கதனை உம்மைத்தொகை என்றும், இடைச்சொல் தொகாது நிற்கும் அவ்வியயீபாவசமாசனை இடைச்சொல் தொடர் என்றும் கூறுவது காண்க.

எண்ணுகின்ற அளவில் எண்ணத்தொகையாகவும், எண்ணித் தெளிந்து முடிவு செய்கின்ற அளவில் தேற்றத்தொகையாகவும் பண்புத்தொகை வகைகளைக் கொண்டுள்ளனர்.

கருங்குவளை - நீலோற்பலம்; செங்குவளை - இரத்தோற்பலம் - கருமை செம்மை என்ற முன்மொழிகள் பண்பு.



பெருவெள்ளை, சிறுவெள்ளை - அழுத்தமான வெளுப்பு, மங்கலமான வெளுப்பு என்னும் பொருளன. பெருவெள்ளை, சிறுவெள்ளை என நெல் வகைகளுக்கு உரிய இயற்பெயர்களை ஈண்டுக் கொள்ளற்க.

இன்பத்துன்பம், சீதோஷ்ணம், சுகதுக்கம் என்பன தமிழில் உம்மைத்தொகைகளாகக் கொள்ளப்படும்.

தெய்வப்புலவன் திருவள்ளுவன் - முன்மொழி சிறப்பினாகிய பெயராய்ப் பின்மொழியாகிய இயற்பெயருக்கு அடையாயிற்று.

வையாகரண கசூசி - விண்ணேக்கும் இலக்கணப் புலவன் - முன்பின்னாகத் தொக்கது. ஒரு சொற்றொடரைச் செவிமடுத்தவுடன், அதன் இலக்கண அமைதியை ஆராயத் தொடங்கும் இலக்கணப் புலவனை - வையாகரண கசூசி என்று பொதுமக்கள் எள்ளி நகையாடும் சொற்றொடர் இது.

சங்கு வெள்ளை, முத்து வெள்ளை - இவை தமிழில் உவமைத் தொகை.

சங்க பாண்டு - சங்கு வெள்ளை என்னும் பொருட்டு.

அடிமலர், பெண் அணங்கு, புருஷவியாக்கிரம் (புலி யன்ன ஆடவன்) என்ற உருவகங்களில் பின்மொழி உவமைச்சொல்லாம்.

'உபமிதம் வ்யாக்ராதிபிஹி ஸாமான்ய அப்ரயோகே'
என்பதனை நோக்குக.

மயூர வியஞ்சகம் - வஞ்சமுடைய மயில்.

'மயூர வியம் சகாதயஶ்ச - சாத்ர வ்யம்ஸக'
- என்பதனை நோக்குக.

அறத்தைச் சுற்றமாகவும், அருளைச் செல்வமாகவும், கல்வியைப் பொருளாகவும் எண்ணினால் முன்மொழி எண்ணம்; தெளிந்தால், முன்மொழித் தேற்றம்.

விநய தனம் – பணிவுச் செல்வம்; சுகிர்த பெந்து – நல்வினைச் சுற்றம்; துணிவு வேறு, எண்ணம் வேறு என்பது விளக்கப் பட்டுள்ளது. தமிழில் ஏற்றம் என்னும் சொல் எண்ணம், துணிவு என்ற இரு பொருளிலும் வருமாறும் குறிக்கப்பட்டுள்ளது.

திருவீரவாசிரியன் – திருவீரன் இயற்பெயர்; ஆசிரியன் சிறப்புப்பெயர்; சங்கராசாரியனும் அது. இச்செய்தியைச் 'சிறப்பினாகிய' (சொ. 41) என்னும் நூற்பா வுரையுள் சேனாவரையர் முதலாயினரும் குறிப்பிட்டுள்ளனர்.

'இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா று அல்ல செய்யு ளாறே' – சொ. 18

என்ற விதிப்படி, வெண் திங்கள், செஞ்ஞாயிறு – எனத் தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேடணம் வந்தது.

தவள சந்திரன் – வெண் திங்கள்.

'தகுதியும் வழக்கும்' (சொ. 17) என்ற நூற்பாவில், வெள்ளாடு – வெண்களமர் என்பனவற்றில் வெண்மை பண்பு பற்றி வாராது சாதி பற்றி வந்தது என்று சேனாவரையர் குறிப்பிட் டுள்ளார். வெள்ளாடு – ஆட்டின் ஒருசாதி; வெண்களமர் – வேளாளர். கிருஷ்ணசர்ப்பம் – கருநாகம்; இதுவும் பண்பு குறியாது பாம்பின் ஒருசாதியைக் குறித்தது.

சிறுவெள்ளை, பெருவெள்ளை – நெல்லின் இயற்பெயர்கள். இச்செய்தி விளக்கப்பட்டுள்ளது.

கந்நியாகுமரி – கன்னியாகிய குமரி.

கும்ப கடம் – கும்பமாகிய பாத்திரம்.

மருதந்வா – மரு + தந்வா – இரண்டும் பாலை நிலம் என்னும் பொருளன.



புட்டகப் புடைவை முதலியன ஒரு பொருட்கு இரு பெயர் வந்து அப்பொருளைச் சிறப்பித்தன.

ஆண் தகை – ஆணாகிய தகைமையை யுடையான்;

பெண் தகை – பெண்ணாகிய தகைமையை உடையாள்;

மக்கட்சுட்டு – மக்களாகிய சுட்டப்படும் பொருள்;

'மக்கட் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு; என்பதன் பொருள் நன்மதிப்பு. அஃது ஆகுபெயரான் மக்கள்மேல் நின்றது. மக்கள் என்னாது சுட்டு என்றது தான் உயர்திணை என இடுகின்ற குறியீட்டுக்குக் காரணம் இது என்பது விளக்கவேண்டிப் போலும்' (தொ. சொ. 1) என்பதே இப்பொழுது கல்லாடர் உரையில் காணப்படும் செய்தி ஆகும்.

சேனாவரையருக்கு இரு பெயரொட்டு ஆகுபெயரே அன்மொழித்தொகை என்பது கருத்து. – தொ. சொ. 114

இவ்வாசிரியர் இவற்றை ஆகுபெயர் என்றே கொள்வர்.

கருஷ பாஷாணம் – தேய்க்கும் கல் (பாஷாணம் – கல்) – உரைகல்.

கருஷோபலம் – தேய்க்கும் கல் (உபலம் – கல்) – உரைகல்.

வடநூலார் வினைத்தொகையைக் கொள்ளவில்லை ஆதலின், வினைத்தொகையை இடத்தை உணர்த்தும் வினைப்பெயர் என்றனர். உரைக்கப்படுவதாகிய கல் என்று வடநூலார் விரிப்பர்.

இப்பண்புத்தொகை பற்றி இலக்கணக்கொத்து நூலார் சற்று விரித்துப் பல செய்தியும் கூறியுள்ளதை நோக்குவோம்.

'பண்புத் தொகைவிரி பகரின் பெருகும்;
ஆயினும் சிலவிதி அறைகுவன் கேள், நீ!
பண்புமுன் வருதலும் இருபண்பு வருதலும்
இருபண் பொடுபொருள் இயைதலும் அவ்விரு

பண்புகள் தாமே பொருளை விளைத்தலும்
இயற்பெயர் சிறப்புப் பெயர்மா றுதலும்
சிறப்புப் பொதுப்பெயர் முறையே சிறத்தலும்
பொதுச்சிறப் புப்பெயர் முறையே பொருந்தலும்
பின்மொழி ஆகு பெயராய்ப் பிறத்தலும்
முன்மொழி ஆகு பெயராய் முடிதலும்
இருமொழி ஆகு பெயராய் இருத்தலும்
ஒருபொருட்கு இருபெயர் ஆகி ஒட்டலும்
முற்பதம் தமிழ்மொழி முற்பதம் வடமொழி
இருபதம் தமிழ்மொழி இருபதம் வடமொழி
ஆகி வருதலும் ஆதியாய்ப் பலவே' — இ. கொ. *98*

" வெண்கரும்பு என இனம் பற்றியும்,

வெண்திங்கள் என இனம் பற்ருமலும்,

வெண்டாமரை எனத் தனக்குரிய சினையை விட்டு உரிமையில்லாத முதலைப் பற்றியும்,

வெள்ளாடு என எதிர்வு பற்றியும், [பின்னர் வேள்விக்குப் பயன்படும் ஆடு என்னும் பொருட்டு]

'விலங்கன்னர் வெள்ளறிவினர்' (நாலடி *375*) என இழிவு பற்றியும்,

வெண்களமர் - வெள்ளாளர் எனச் சாதி பற்றியும்,

வெள்ளோட்டம் எனப் புதுமை பற்றியும்,

வெண்டேர் (பேய்த்தேர்) எனப் பெயர் பற்றியும்,

வெளிற்று மரம் என உள்ளீடின்மை பற்றியும்,

'வெளியார் முன்' (குறள் *714*) என இயல்பு பற்றியும்,

இச்சோறு வெண்படி எனக் கலப்பின்மை பற்றியும்,

இவ்வுரு வெண்கலம் (ஓர் உலோகம்) என ஒரு பெயரே பற்றியும்,

வெள்ளிடை எனத் தனிமை பற்றியும் (வேறென்றும் இல்லாதிருக்கும் இடம்)



இவ்வணி வெள்ளைப்பொன் என நிறமின்மை பற்றியும்,

இவனுக்கு வெள்ளைப்புத்தி என மந்தம் பற்றியும்,

இவ்வூரில் வெள்ளைப்பிள்ளையார் எனப் பண்புப்போலி (நிறத்துக்கு அப்பாற்பட்ட இறைவனுக்கு நிறம் காட்சி யளவையான் சிலையில் கற்பித்தது பண்புப் போலி) பற்றியும்,

இன்னும் பலவாய் ஒரு பண்பே விரிதலின் பெருகும் என்ரும். இக்கருத்து 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' (தொ. சொ. *372*) முதலியவற்ருனும் அறிக.

கருங்குதிரை — பண்பு முன்வந்தது.

வெண்ணிறம் — இருபண்பு வந்தன.

சிறுபைந்தூவி — இரு பண்பொடு பொருள் இசைந்தது.

சிறு வெள்ளை, பெரு வெள்ளை — இவை ஆகுபெயரும் அன்றி அன்மொழியும் அன்றி, நெல் என்னும் பொருள் தந்தமையின், இரு பண்புகள் தாமே பொருளை விளைத்தன.

அகத்திய முனிவன் — இயற்பெயர் முன்னும் சிறப்புப் பெயர் பின்னும் வந்தன.

முனிவன் அகத்தியன், பலாமரம் } — சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வந்தன.

அரசன் சோழன் — பொதுப் பெயர் முன்னும் சிறப்புப் பெயர் பின்னும் வந்தன.

மக்கட் சுட்டு — பின்மொழி ஆகுபெயர்.

குழற்பண் — குழல் ஓசையாகிய பண்; முன்மொழி ஆகுபெயர்.

புளிச்சுமை — புளிப்பினை உடைய புளியாகிய சுமக்கப்படும் பொருள்; இரு மொழி ஆகுபெயர்.

அராஅப்பாம்பு — ஒரு பொருட்கு இருபெயர் வந்தன.

மன்னன் குமாரன் — முற்சொல் தமிழ்மொழி.

அதி நுட்பம் — முற்சொல் வடமொழி.

அழகப்பிரான் — இரு சொல்லும் தமிழ்மொழி.

ஆதிபகவன் — இரு சொல்லும் வடமொழி.

'ஆதி' என்றதனால், வண்ணம் வடிவு அளவு சுவை முதலாகப் பலரும் எடுத்தோதியனவும், அணியினுள் உருவகம் முதலியனவும் கொள்க. — இ. கொ. 108 உரை

'சிலபெய ரெச்சமும் சிலவினைத் தொகையும்
இருவகை உவமையும் வண்ணச் சினைச்சொலும்
பண்புத் தொகைஎனப் புகரும் வடநூல்' —இ. கொ. 99

என்பதனையும் நோக்குக.

இனி, வீரசோழியம், பண்புத்தொகை பற்றி,

'முன்மொழிப் பண்பு இருமொழிப் பண்பு மொழிந்தமைந்த
பின்மொழி ஒப்பொடு முன்மொழி ஒப்பும் பிணக்கொன்றிலா
முன்மொழி நற்கருத் தும்முன் மொழிநற் றுணிவுமென
நன்மொழி யார்கன்ம தாராயம் ஆறென்ன நாட்டினரே'
— வீ. 48

என்று இவ்வாசிரியர் உரைத்தவற்றையே குறிப்பிட்டவாறும் காண்க.





## இடைச்சொல் தொகையும் உம்மைத் தொகையும்

23. முன்மொழிப் பேர்ச்சொல் இடைச்சொல்
இரண்டும் முரணி நிற்கும்
தன்மொழி அவ்வியயீபாவம்;
உம்மைச்சகாரத்திலே
இன்மொழித் தொந்தன் - சமாகாரத்தோடு
இதரேதரமாம்;
மன்மொழித் தோற்றம் - சமுச்சயத்தோடும்
அன்வாசயமே.

இஃது அவ்வியயீபாவமும் துவந்துவனும் சகார விரியும் கூறுகின்றது. பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லுமாக முன்மொழி மாறிநின்று, நாம பூர்வபதம் அவ்வியய பூர்வபதம் என அவ்வியயீ-பாவம் இருவகையாம். இனித் துவந்துவனும் சமாகாரம், இதரேதரயோகம் என இருவகையாம். சகாரவிரி, சமுச்சயமும் அன்வாசயமும் என இருவகையாம். – என்றவாறு.

தன்வினை என்பது ஒருவினையானாற்போலத் தன்மொழி ஒருமொழியாம். 'உம்மைச்சகாரம்' இருபெயர் ஒட்டிய பரியாயம். மன்மொழித் தோற்றம் – மன்னும் மொழித்தோற்றம். அஃதாவது உம்மை விரிந்து நிற்கும் தொகாநிலைத் தொடர்மொழி.

உ-ம்: வாள்மன் - அதுமன் – என நாம பூர்வ பதமாய் வந்த அவ்வியயீபாவம் ஆகிய முன்மொழிப் பெயர்ச்சொல் வரும்.

மற்றைஆடை – கொன்னார் – என அவ்வியய பூர்வ பதமாய் வந்த அவ்வியயீபாவம் ஆகிய முன்மொழி இடைச்சொல் வரும். அவ்வியயம் ஈண்டு இடைச்சொல்.

இக்கருத்தே பற்றித் தொல்காப்பியரும்,

**'முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதல்'** – *சொ.* 251

எனச் சூத்திரம் செய்தார். ஆண்டுச் சூத்திரத்தால் பெற்றனம் ஆயினும், தொகை என்பது ஈண்டுப் பெற்றாம்.

இனி, ஒருமை ஈறாய் வந்த அஃறிணை உம்மைத்தொகையைச் சமாகாரத் துவந்துவன் என்றும், உயர்திணைப் பன்மை ஈறாய் வந்த உம்மைத் தொகையை இதரேதரயோகத் துவந்துவன் என்றும், ஒருமை ஈறு காடு என்னும் ஒருபெயர்ப் பொதுச்சொல் போல் என்றும், ஏகவற்பாவி போல் என்றும், பன்மை ஈறு மரங்கள் என்னும் சொல்போல் என்றும், அநேகவற்பாவிபோல் என்றும் திருட்டாந்தமும் கூறுவர்.

உ-ம்: அறம்பொருள் – புலிவிற்கெண்டை – சங்கபடகம் என்றும், கபிலபரணர் – சேர சோழ பாண்டியர் – இராமலட்சுமணர் என்றும் இருதிணையினும் இருவகை மொழியினும் சமாகாரமும் இதரேதரமும் முறையே வரும்.

இனித் தொகாநிலை உம்மை வருமாறு :

நம்பியும் வந்தான் என்றால், நங்கையும் வந்தாள் என்று பொருள்பட்டு, இரு பெயர் ஒருவினை கொள்ளும் எச்ச உம்மையைச் சமுச்சயம் என்பர்.

நம்பி உழுதும் வருவன் என்றால் உழாதும் வருவன் என்றும், பசு மேய்த்தும் வருவன் என்றால் மேய்க்காதும் வருவன் என்றும் பொருள்பட்டு, ஒருபெயர் இருவினை கொள்ளும் எதிர்மறை உம்மையை அந்வாசயம் என்பர்.

'அறம்பொருள்' - புலிவிற்கெண்டை – சேர சோழ பாண்டியர் என வரும் உம்மைத் தொகைகள் ஒன்றினுக்கு ஒன்று அடை என்னும் விசேடணம் ஆகாது தொகும் என்க. ஒழிந்த தொகை எல்லாம் ஒன்றினுக்கு ஒன்று விசேடணம் ஆகியே தொகும் என்க. அதுபற்றித் தொல்காப்பியர்,



**'இருமொழி பன்மொழி'** – *சொ.* 417

எனச் சூத்திரம் செய்தார். மற்றைக் 'கற்சுனைக்குவளை இதழ்' என்னும் வேற்றுமைத்தொகை முதலியன எல்லாம் இருமொழித் தொகையாம் என்க.

அளவைப் பரிமாணம் என்றும், நிறையை உன்மானம் என்றும், எண்ணைச் சங்கியை என்றும் வடநூலார் பெயர் கூறுவர்.

'இன்மொழி' என்ற மிகையால் ஏகசேட பதத் துவந்துவனும் கொள்க.

**'அண்க ணாளனை நகுகம் யாமே'** – *அகநா.* 312

என்புழி, யாம் என்பது நீயும் யானும் என்னும் உம்மை தொக்கு யான் என்னும் பின்மொழி யாம் எனப் பன்மை ஈறாகி, ஏகசேடமாய் நின்று, நகுகம் என்னும் உளப்பாட்டுத் தன்மை வினையோடு முடிதலின் ஏகசேட பதத் துவந்துவன் என்பர்.

**'சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி**
**யாம் அவண் நின்றும் வருதும்'** – *சிறுபாண்.* 142, 3

என்புழி நீயும் அவனும் யானும் என்னும் உம்மை தொக்கு நீ அவன் யான் என நிற்றலும் அன்றி, நீ அவன் என்னும் முன்மொழிகள் இரண்டும் தொக்கு யான் என்னும் பின்மொழி யாம் எனப் பன்மை ஈறாகி, ஏகசேடமாய் நின்று, வருதும், என்னும் உளப்பாட்டுத் தன்மை வினையோடு முடிதலின், ஏகசேட பதத் துவந்துவன் என்பர்.

நீயிர் வம்மின் – பாடுதும் வாழி தோழி – பாடுகம் வம்மின் – போதுவம் என வருவனவும் அது.

இனி வடமொழியினும் 'துவம் அகம்' என்புழிச் சகாரமும் முன் மொழியும் தொக்கு, அகம் என்னும் பின்மொழி ஆவாம் எனவும் வயம் எனவும் ஆதேசம் ஆகி, ஏகசேட பதத் துவந்துவன் ஆம் என்பர்,

'நீயான் என்னும் உம்மைத் தொகையினும்
நீஅவன் யான்எனும் உம்மைத் தொகையினும்
அவன்நீ என்னும் உம்மைத் தொகையினும்
இறுதி பன்மை எய்தி ஏனவை
இற்று நிற்பது ஏக சேடனும்'

இவ்வுரைச் சூத்திரத்தானும் அறிக.

இனி, யான் என்பதனை யாம் என உயர்த்துக் கூறுதலும், நீ என்பதனை நீயிர் என உயர்த்துக் கூறுதலும் ஏகசேடன் ஆமோ எனின், அவை ஏகசேடன் ஆகாது உபசாரமாம் என்க.(6)

## விளக்கம்

இக்காரிகையில் இடைச்சொற்கள் பெயர்ச்சொற்களோடு கூடித் தொகையாமாறும், உம்மைத் தொகையும், உம்மை விரியும் கூறப்படுகின்றன. இவ்விடைச்சொல் தொகை பெயரை முற்கொண்ட இடைச்சொல் தொகை, இடைச்சொல்லை முற்கொண்ட இடைச்சொல் தொகை என இருவகைத்து.

உம்மைத்தொகையுள் ஒருமையீருகும் அஃறிணை உம்மைத் தொகையாம் சமாகாரம் எனவும், பன்மை ஈருகும் உயர்திணை உம்மைத்தொகையாம் இதரேதரயோகம் எனவும் இருவகை உண்டு. எச்சஉம்மை சமுச்சயம் எனவும், எதிர்மறை உம்மை அன்வாசயம் எனவும் கூறப்பெறும்.

வந்தான் என்பது தன்வினை ; வருவித்தான் என்பது பிறவினை. தன்வினையுள் வருதலாகிய ஒரேவினை நிகழ்ந்தது ; பிறவினையுள் வரச்செய்தலும் வருதலுமாகிய இருவினை நிகழ்ந்தன.

உம்மை என்பது வடமொழியில் சகாரம் எனப்படும்.

மன்னுதல் பொருந்தியிருத்தலாதலின் மன்மொழி என்பது ஈண்டு உம்மை விரிந்திருக்கும் உம்மை விரியாம் தொகாநிலைத் தொடரைக் குறித்தது.



தொல்காப்பியனார் இடைச்சொல் முன்னும் பின்னும் மொழி யடுத்து வரும் என்று மாத்திரம் குறிப்பிட்டார். அங்ஙனம் வருதலும் தொகையுள் ஒருவகை என்பது அவரால் குறிப்பிடப் படவில்லை.

உம்மைத்தொகை ஒன்றிலேயே ஒருமொழி அடுத்த மொழிக்கு அடை ஆகாத நிலை உண்டு ஆதலின், அதுவே இருபெயர், பலபெயர் என்ற இரு நிலையிலும் வரும். ஏனைய தொகை களெல்லாம் ஒன்றற்கு ஒன்று அடையாதலின் எத்தனை மொழிகள் அடுத்து வரினும் அவை அடையடுத்த நிலைமொழியாகக் கொள்ளப்பட்டு வருமொழியோடு புணரும் இருமொழி என்றே கொள்ளப்படும்.

நீயும் யானும் என்பனவற்றில், உம்மையும் முன்மொழியும் கெட்டு, யான் என்னும் ஒருமையீறு யாம் எனப் பன்மை யீருய்த் திரிந்து, நீயும் யானும் என்ற பொருளைத் தருவது ஒரேசொல் எஞ்சிநிற்கும் உம்மைத்தொகையாம். நீயும் யானும் அவனும் என்பன, யாம் எனத் தொக்கு வருதலும் ஒரேசொல் எஞ்சிநிற்கும் உம்மைத்தொகையாம்.

பாடுதும் – பாடுகம் – போதுகம் என்பனவற்றின் எழுவா யாகும் யாம் என்பதும், யானும் நீயும் என்பன எஞ்சிநிற்கும் ஒரு சொல் உம்மைத்தொகையாம்.

துவம், அகம் – நீ, யான்.

ஆவாம், வயம் – யாம்.

உயர்த்தற்கண் வரும் யாம், நீயிர் என்னும் ஒருமைச்சொற்கள் உபசார வழக்குப் பற்றி வந்தன.

'சிறுகண்.........வருதும்' என்ற சிறுபாணாற்றுப்படை யடிகளின் பொருளை நோக்கின், அவ்வடிகளில் காணப்படும் யாம் என்பது செல்வப் பாணனையும் அவன் சுற்றத்தாரையுமே குறிப்பதால் ஆண்டு நீ, யான், அவன் என்பன யாம் என ஆகாமை காண்க.

*இக்காரிகையில் கூறப்படும் செய்தியையே வீரசோழியமும்,*

*'முன்மொழி அவ்வியம் சேர்தொகை பேர்முன் மொழித்தொகையே*
*சொன்மொழி அவ்விய பாவம் மருவும்; துவந்துவமும்*
*வன்மொழி யாம்இத ரேதரம் வாய்ந்த சமாசாரமாம்;*
*நன்மொழி யான்உரைத் தார்கள் சமாசம் நறுநுதலே'*

*என்ற 49-ஆம் காரிகையில் குறிப்பிட்டுள்ளதும் காண்க.* *6*

## அன்மொழித் தொகை

24. இருமொழி, பன்மொழி, பின்மொழி
எண்ணோடு, இருமொழிஎண்
தருமொழி, ஒற்றுஒழி திக்கந்தராளம்,
சகமுன் நிற்கும்
ஒருமொழி, ஏனைவிதி கார
லக்கணத்தோடு வரும்;
பெருமொழி ஆகி, வெகுவிரி
அன்மொழிப் பேர்அடைந்தே.

*இது வெகுவிரீகி ஆமாறு கூறுகின்றது. துவிபத வெகுவிரீகி, வெகுபத வெகுவிரீகி, சங்கியோத்தரபத வெகுவிரீகி, சங்கியோபயபத வெகுவிரீகி, திகந்தராள லக்ஷண வெகுவிரீகி, சகபூர்வபத வெகுவிரீகி, வியதிகார லக்ஷண வெகுவிரீகி என வெகுவிரீகி எழுவகையாம்.*

*ஒற்று ஒழி திக்கந்தராளம் - திகந்தராளம். வரும் என்பது வினைமுற்றாய் நின்றது. பெயர் - பொருள். அன்மொழிப் பொருள் அடைந்து எனவே, அன்மொழியை அடையாமல் அதன் பொருளை அடைந்த பின், இரு மொழியும் பன்மொழியும் தொகும் என்க.*

*வெகுவிரீகிக்கு அந்நிய பத அர்த்தத்திலேயே சத்தி என்றும், சக்கிய சம்பந்தமான இலக்கணை வேண்டா என்றும்,*



**'இரத நூபுர சக்கிர வாளம்'** - சூளா. 4-12

*என்புழி அவ்வச் சொற்களின் பொருள்மேல் அன்றி, அவற்றோடு ஒரு சம்பந்தம் இன்றியும் ஒரு நகரத்தை உணர்த்தினற்போல வெகுவிரீகி தொகும் என்றும் உணர்க. வடநூலார் உரைத்தாங்கு உரைக்கும் சேனவரையர் உரை பின்னர்க் காட்டுதும்.*

**'ஆதி உதாத்தம் அன்மொழித் தொகைபெறும்'**
**'அந்த உதாத்தம் அல்லவை பெறுமே'**

*இவை உரைச் சூத்திரம்.*

*உ-ம்: உண்ணு முலை - முற்று முலை - பாயின மேகலை - பரசு பாணி - ஆரூட வாநரம் - நிட்கிராந்த சனம் என உபயபத வெகுவிரீகி வரும். திருக்கோவையாரில் 'பாயின மேகலை' (282) யைப் பெயரெச்சம் ஒரு சொல் ஆகலின் ஆகுபெயர் என்பர் பேராசிரியர். பெயரெச்சம் நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியுமாகப் புணர்ந்தது நோக்காமையின் மறந்து அவ்வாறு உரைத்தார்.*

*மட்டுவார்குழல் - பொன்ஏறு பூண்முலை - திருமயிலாடு துறை - குடங்கையின் அகன்ற விழி,*

**'கைபரந்து வண்டு இசைக்கும் கூந்தல்'**

*- தண்டி உதாரணம் 23*

*தெள்ளுந்திரை அமுது என்றும்,*

*பராக்கிரமோ பார்ச்சித சம்பத்து என்றும் வெகுபத வெகுவிரீகி வரும். இவை அடைஅடுத்து இருபதமே ஆகலின், வெகுபத துவந்துவனுக்கே அன்றி ஒழிந்த தொகைக்கு வாரா என்க; வரும் என்பர் வடநூலார்.*

*கார் நாற்பது - இனிய நாற்பது - புறநானூறு - கதிராயிரம் எனச் சங்கியோத்தர பத வெகுவிரீகி வரும். இதற்கு இன்ன தொகை நிலைக்களத்துப் பிறந்தது எனக் குறியீடு கூறிலர்.*

**'பத்தெட்டு உடைமை பலருள்ளும் பாடுஎய்தும்'**

*அஞ்சுஆறு - ஏழ்எட்டு என சங்கியோபய பத வெகுவிரீகி வரும்.*

வடகிழக்கு - வடமேற்கு - தென் கிழக்கு - தென்மேற்கு எனத் திகந்தராள லக்ஷண வெகுவிரீகி வரும். இதற்கும் இன்ன தொகை எனக் குறியீடு கூறிலர்.

'திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும்' – தொ. எ. 432

எனச் சந்தி இலக்கணம் சொன்னவர் குறியீடு கூறிலர். கிழக்கு மேற்கு என்பன துவந்துவன்.

'கெழுதகைமை' - கு. 802

கூடியகாமம் – சகநிதி - சமூலம் எனச் சகபூர்வ பத வெகுவிரீகி வரும். கெழுதகைமை ஆவது கூடிய தகைமையினை உடையான் எனப்பொருள்பட்ட இடத்துச் சகபூர்வபத வெகுவிரீகியாம். கெழு, சக என்பன உபசர்க்கம். தேசாதேசி – தண்டாதண்டி முட்டீமுட்டி என வியதிகார லக்கண வெகுவிரீகி வரும். இது வடமொழிக்கு அல்லது வாராது என்க. வியதிகாரலக்கணம், அன்னியோன்னியம், இதரேதரம், தடுமாற்றம் – இவை சமாநார்த்தகம்.

மலர்க்குழல் – தகரஞாழல் – பவளவாய் – கருங்கண் – தாழ் குழல் – இவை தத்தம் பொருளாய் நில்லாது அன்மொழிப் பொருளாய் நிற்கில் படுத்துச் சொல்லுக. எடுத்தல் படுத்தல் உயிர்க்கு அல்லது மெய்க்கு இன்மையின், ஈண்டு ஈற்றயல் என்னும் உபதையைப் படுத்துச் சொல்லுக.

'சுட்டு முதலாகிய ஆய்த இறுதி' – தொ. எ. 200

எனத் தொல்காப்பியரும் ஈற்றயலை இறுதி என்பர்.

இனி, வடநூலார் உம்மைத்தொகையில் வெகுவிரீகி வாராது என்றும், 'ஆநக துந்துபி' என்பதனை மத்தியபத லோபன் மேல் வந்த வெகுவிரீகி என்றும், அவருள் சிலர் ஆநக துந்துபி என்பதனை உம்மைத்தொகைமேல் வந்த வெகுவிரீகி என்றும் கூறுவர். தமிழ் நூலினும் தகரஞாழல் என்பது ஒன்றனையே தொல்காப்பியர் – நன்னூலார் முதலாயினர் உம்மைத் தொகைப் புறத்து வந்த அன்மொழித் தொகைக்கு உதாரணம் காட்டியது



அல்லது வேறு உதாரணம் இன்மையானும், செய்யுட்களில் யாண்டும் உம்மைத்தொகைப் புறத்து அன்மொழி வாராமை யானும், தகரஞாழல் என்பது தகரஞாழலாகிய சாந்து என்ப தன்றிச் சாந்து பூசினுள் எனப் பொருள் விரிதலின் 'துவிரேபம்' என்பதுபோல அன்மொழிக்கு அன்மொழியாய் வருதலானும் அது பயின்று வாராமை அறிக.

'தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டலும்' – சொ. 115

எனத் தொல்காப்பியர் கூறிய ஆகுபெயர் இலக்கணத்தைப் பாணினி பகவான் தற்குண சம்விஞ்ஞான வெகுவிரீகி, அதற்குண சம்விஞ்ஞான வெகுவிரீகி என அன்மொழிக்கு இலக்கணமாகக் கூறுவர்.

இனி,

'பண்புதொக வரூஉம் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயினானும்
ஈற்றுநின்று இயலும் அன்மொழித் தொகையே' - சொ. 418

என்னும் சூத்திரத்திற்கு,

"பண்புச்சொல் தொகும் சொல்லினும், உம்மை தொக்க பெயர்க்கண்ணும், வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும், இறுதிச்சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித் தொகை. எ–று.

பண்புத்தொகை படவும் உம்மைத்தொகை படவும் வேற்றுமைத் தொகை படவும் அச்சொல் தொக்கபின் அத்தொகை அன்மொழித் தொகை ஆகாமையின், தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களம் ஆகிய சொல் பற்றி வரும் என்பது விளக்கிய, தொகை வயினானும் என்னது,

'பண்பு தொக வரூஉம் கிளவியானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்'

என்றார்.

இறுதிச்சொல் படுத்தல் ஓசையால் பொருள் விளக்குமாறு வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் கண்டு கொள்க.

வெள்ளாடை – அகரஈறு என்பன பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தகரஞாழல் – என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

பொற்றொடி – என்பது வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

இனி அவை வெள்ளாடை உடுத்தாள் என்றும், அகரம் ஆகிய ஈற்றை உடைய சொல் என்றும், தகரமும் ஞாழலும் ஆகிய சாந்து பூசினுள் என்றும், பொற்றொடி தொட்டாள் என்றும் விரியும். பண்புத்தொகைப் புறத்துப் பிறத்தல் பெரும்பான்மை ஆகலின் முறையிற் கூருது அதனை முற்கூறினர். வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறத்தலின் உம்மைத்தொகைப் புறத்துப் பிறத்தல் சிறுபான்மை ஆயினும், ஒருபயன் நோக்கி அதனை அதன் முன் வைத்தார். யாதோ பயன் எனின், சிறுபான்மை உவமத்தொகையினும் வினைத்தொகையினும் அன்மொழி பிறக்கும் என்பது உணர்த்துதல் என்க. அவை பவளவாய் – திரிதாடி என வந்து, பவளம் போலும் வாயை உடையாள் – திரிந்த தாடியினை உடையான் என விரியும். பிறவும் அன்ன". இது சேனவரையர் கருத்து. (7)

விளக்கம்

திகந்தராளம் என்ற சொல்லை இக்காரிகை அமைத்தல் நோக்கி ஒற்று ஒழி திக்கந்தராளம் என அமைத்தார்.

அன்மொழிப் பேரடைந்தே என்பது அன்மொழிப் பொருளை அடைந்து என்று பொருள்படும். அன்மொழிப் பொருளை அடைந்து என்பது, பொற்றொடி என்பது தொட்டாள் என்ற அன்மொழியை அடையாமல், தொட்டாள் என்ற அச்சொல் இல்லாமலேயே பொற்றொடி தொட்டாள் என அதன் பொருளை மாத்திரம் சுட்டி நிற்கும் ஆற்றல் பெற்றிருத்தல் என்பதாம்.



வெகு விரீகி பிறமொழியிலேயே பொருள் சிறக்கும். அஃது இலக்கணைப் பொருளால் தன் பொருள் தருதல் வேண்டா. 'இதரநூபுர சக்கிரவாளம்' என்ற சொற்கள் அவ்விரு சொற்களின் பொருளையும் விடுத்து அப்பெயருடையதோர் ஊரினை உணர்த்துவது போல, அன்மொழித் தொகை அதன்கண் தொக்கு நிற்கும் சொற்பொருள்களுக்கு யாதும் தொடர்பில்லாத பிறிது ஒரு பொருளை உணர்த்தும்.

அன்மொழித் தொகையுள் முன்மொழியையும், ஏனைய தொகைகளுள் பின்மொழியையும் எடுத்து உச்சரித்தல் வேண்டும். உண்ணு முலை, முற்று முலை, பாயின மேகலை என்பன அன்மொழிப் பொருளால் ஒரு பெண்ணைக் குறிப்பன. இவ்வுதாரணங்களால் 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' (நூ. 369) என்பதன்றிப் பெயரெச்சத் தொடர் மேலும் அன்மொழித் தொகை வருமாறு உணரப்படும். எல்வளை, வாள்விழி முதலிய இடைஉரித் தொடர்ப்புறத்தும் வருதல் காண்க.

பரசு பாணி – மழுவை ஏந்திய கையை உடைய பரசுராமன்.
ஆரூட வானரம் – குரங்கை வாகனமாகக் கொண்ட பெருமான்.
நிட்கிராந்த சனம் – கடந்து செல்லப்பட்ட மக்களை உடைய நாடு.

பெயரெச்சம் பெயர்ச்சொல்லோடு நிலைமொழி வருமொழியாகப் புணர்ச்சி விதி பெற்றுத் தொடர்தலின், பாயின மேகலை முதலியன இருமொழித் தொடரேயாம்.

பராக்கிரமோ பார்ச்சித சம்பத்து – வலியால் ஈட்டிய செல்வம்.

மட்டு வார் குழல் என்பன அடையடுத்த இரு மொழிகளே என்பது தமிழ் மரபு. உம்மைத் தொகை நீங்கலான தொகைகள் இருமொழி தொக்கனவே என்பது தமிழ் மரபு. வடமொழி பல மொழித் தொகைகளையும் கொள்ளும்.

கார் நாற்பது முதலிய மூன்றும் ஒவ்வொரு நூலினையும், கதிராயிரம் சூரியனையும் அன்மொழிப் பொருளால் குறித்தன. கார் நாற்பது முதலிய மூன்றும் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை; கதிராயிரம் என்பது பண்புத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனத் தமிழ் மரபு பற்றிக் கொள்ளப்படும். முற்பதம் எண்ணுயின் துவிகு சமாசன் என்பது போலப் பிற்பதம் எண்ணுயிருப்பதற்குத் தனியே பெயர் இடப்பட்டிலது.

பத்தெட்டு முதலியன எண்ணைக் குறிக்காமல் பொருளின் மிகுதி குறைவுகளைக் குறித்து அன்மொழியாயின.

வடகிழக்கு - வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடைப்பட்ட கோணத்திசை; திசைபற்றிய அன்மொழித்தொகை. இது தமிழில் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையுள் அடங்கும். வடகிழக்கு முதலியவற்றின் புணர்ச்சி விதி கூறிய ஆசிரியர் அத்தொகைகளுக்குத் தனியே பெயர் குறிப்பிடவில்லை.

கெழுதகைமை கெழுதகைமை உடையானைக் குறித்தது. கெழு, கூடிய, சக என்பன ஒருபொருட் கிளவி. சக என்ற சொல்லை முன்மொழியாகக் கொண்ட தொகை அன்மொழிப் பொருளில் வரின், சக பூர்வ பத வெகுவிரீகியாம்.

சகநிதி - செல்வத்தோடு கூடி இருப்பவன்; சமூலம் - வேரொடு கூடியது.

தேசங்களிலே தேசங்களிலே பற்றிக்கொண்டு நிகழ்கின்ற பூசல் தேசாதேசி எனப்படும். தண்டுகளாலே தண்டுகளாலே அடித்து நிகழ்கின்ற பூசல் தண்டாதண்டி. முட்டிகளாலே முட்டிகளாலே தாக்கி நிகழ்கின்ற பூசல் முட்டாமுட்டி. இதனைச் சொல் தடுமாற்றம் பற்றி வந்த அன்மொழித்தொகை என்பர் வடநூலார். இது தமிழுக்கு இன்று. (வி. 47 உரை)



மலர்க் குழல் முதலியன அன்மொழித் தொகையாயின் குழல் முதலிய பின் மொழிகளைப் படுத்து உச்சரித்தல் வேண்டும். உச்சரிக்குங்கால், படுத்து உச்சரிக்கப்படுவன ஈற்றயல் எழுத்துக் களாகிய உயிர்களே. மெய்க்கு எடுத்தல் படுத்தல் என ஒலித்தல் வேறுபாடு இல்லை. ஈற்றயலை ஈறு என்று கூறுவதற்கு 'சுட்டு முதலாகிய ஆய்த இறுதி' (எ. 200). என்பது மேற்கோள். ஆய்தம் ஈற்றில் வாராது ஈற்றயலிலேயே வருதலின், ஈறு என்பது ஈற்றயலைக் குறித்தலும் உண்டு என்பது.

'செய்யுமென் எச்சஈற்று உயிர்மெய் சேறலும்' – ந. 341

என்ற நன்னூல் நூற்பா அடியும் அது.

ஆநகதுந்துபி – ஆநகமும் துந்துபியும் ஆகிய தெய்வ ஒலிகள் முழங்குமாறு உலகில் அவதரித்த வசுதேவன். தகர ஞாழல் – தகரமும் ஞாழலும் கூட்டி அமைத்த சாந்து என்ற பொருளில் அன்மொழித்தொகை. அச்சாந்தைப் பூசினவள் என்ற பொருளில் அன்மொழிக்கு அன்மொழி.

துவிரேபம் – இரண்டு ரகரம் – இவை இரண்டு ரகரங்களை உடைய சொல் என்று அன்மொழியாய்ப் பின் பிரமரம் என்பதற்கு அன்மொழி ஆகி வண்டு என்ற பொருளைத் தருவது காண்க.

தத்தம்......ஆகுபெயர் – புளித்தின்றான் என்பது போல்வது.

ஒப்பில்......ஆகுபெயர் – குழிப்பாடி நேரிது என்பது போல்வது.

பண்புத்தொகை முதலாகச் சொற்கள் தொகுவதற்கு முன்னரே அவற்றை நிலைக்களமாகக் கொண்டு அன்மொழித் தொகை பிறத்தல் வேண்டும். அன்மொழித் தொகையில், முதற் சொல் எடுத்தும் இறுதிச்சொல் படுத்தும் ஒலிக்கப்படும்.

சிறுபான்மையதாகிய உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறக்கும் அன்மொழித்தொகையை அதனினும் பெரும்பான்மைய தாகிய வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப் பிறக்கும்

அன்மொழித் தொகைக்கு முன்னர்க் குறிப்பிட்ட இலேசினல், உவமைத்தொகைப் புறத்தும் வினைத்தொகைப் புறத்தும் அன்மொழித்தொகை பிறத்தல் கொள்ளப்படும். படவே, அன்மொழித்தொகை ஐந்தொகைப் புறத்தும் பிறக்கும் என்றவாறு.

'இருமொழி பன்மொழி பின்மொழி எண்ணு டிருமொழிஎண்
மருவும் விதியா ரிலக்கணம் மற்றைச் சகமுன்மொழி
பரவும் திகந்தரா ளத்தொகை என்னப் பலசெல்தொகை
விரியும்ஓர் ஏழவை வேற்று மொழிப்பொருள் மெல்லியலே'

என்ற வீரசோழியக் காரிகையும் (47) நோக்குக.

தமிழில் உள்ள அறுவகைத் தொகைகளையும் வீரசோழியம்

'வேற்றுமை உம்மை வினைபண்பு உவமையொ டன்மொழிஎன்று
ஆற்றும் தொகைசெந் தமிழ்ணர்கள் ஆறென்பர்' – 50

என்று குறிப்பிடுதலும் காண்க. 7

## தொகைகளுள் பொருள் சிறக்கும் இடம்

25. தற்புருடன் துவிகு கர்மதாரயன்
தாம் முதன்மை
பிற்பதம்ஆம்; எழுவாய்ஆம்
ஒருஉத்தொகை, பெண்அணங்கே!
முற்பதம்; அவ்வியயிபாவம்
ஒப்பு முறைபிறழும்;
சொற்பதம் தொக்கவை எல்லாம்
முதன்மை துவந்தனுக்கே.

இஃது அத்தொகைகளுள் பிரதான பதம் கூறுகின்றது. தற்புருடன் முதல் மூன்றும் உத்தரபதப் பிரதானமாம். பிரதமா தற்புருடன் பூர்வபதப் பிரதானமாம். அவ்வியயிபாவமும் உபமித சமாசனும் மாறி வரும். துவந்துவன் உபய பதப் பிரதானமாம் என்றவாறு.



உ-ம்:

யானைக்கோடு – பலாக்காய் வந்தது – என்றும்,

**'இருதேவர் பார்ப்பார்'** – ஆசார. 31

என்றும்,

நீலக்குவளை – சாரைப்பாம்பு என்றும் முறையே மூன்றும் உத்தரபதப் பிரதானமாய் வரும்.

நுனிநா (எ. 91) இடைநா (எ. 90) முதல்நா (எ. 89) எனப் பிரதமா தற்புருடன் பூர்வ பதப் பிரதானமாய் வரும்.

யதாக் கிரமம் – உப கும்பம் – சாகப் பிரதி – என்னும் இவை ஒரு கால் உத்தரபதப் பிரதானம் ஆகியும், ஒருகால் பூர்வபதப் பிரதானம் ஆகியும் வரும்.

மதிமுகம், பெண் அணங்கு – என்னும் உபமித சமாசனும் அது. உவாப் பதினன்கு – இராப் பகல் – கபில பரணர் எனத் துவந்துவன் உபயபதப் பிரதானமாய் வரும்.

**'எழுத்து அசைசீர் பந்தம் அடிதொடை'** – யா. கா. 1

என்பது வெகுபதம் ஆகலின், சொற்பதம் தொக்கவை எல்லாம் முதன்மை என்றும்.

வெகுவிரீகி அந்நியபத அர்த்தப் பிரதானம் என்பது ஆண்டே அவ்விலக்கணத்தோடு கூறினும். (24) (8)

விளக்கம்

அறுவகைத் தொகையும் பொருள் சிறக்குமிடம் கூறுகின்றது.

'முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும்நான் கிடத்தும் சிறக்கும்அத் தொகைப்பொருள்'
– ந. 370

என்பது நன்னூல்.

வேற்றுமைத்தொகை எண்தொகை பண்புத்தொகை என்பன பின் மொழியிலும், உம்மைத்தொகை இரு மொழியிலும், அன் மொழித்தொகை புற மொழியிலும் பொருள் சிறக்கும். இடைச் சொல் தொகை முன்மொழி பின்மொழி இரண்டிலும் மாறி வரும். உவமைத் தொகையும் அத்தன்மைத்தே. எழுவாய் வேற்றுமைத் தொகை முன்மொழியிலேயே பொருள் சிறக்கும்.

யதாக்கிரமம் — முறைப்படி,

உபகும்பம் — குடத்தினருகில்,

சாக பிரதி — மரக்கறிக்குப் பதிலாவது. 8

## இடைப்பதங்கள் தொகுதலும் புணர்ச்சி விகாரமும்

26. சொன்ன தொகைக்குள் உருபும் பொருளும்
தொகுவது எல்லாம்,
இன்னகையாய்! மத்தியபதலோபன்;
இயைந்த சொற்கள்
பின்னரும் ஆகம ஆதேச
லோபம் பெறும்; பெறுமால்;
வன்ன விகாரம் விபரியம்
நாசம் வன்ன ஆகமமே.

இது மத்தியபத லோபனும் புணர்ச்சி விகாரமும் கூறு கின்றது. தற்புருடனுள் உருபும் பொருளும் உடன்தொகுதல் மத்தியபத லோபனும். தொகைகள் ஆகமம் முதலாகிய மூன்றும் பெறும். தனிமொழியும் தொடர்மொழியும் காரணம் இன்றி வன்னவிகாரம் முதல் நான்கும் பெறும். எ-று.



உ-ம்:

‘வளைக்கை’ - சீவக. 50
‘பொற்றொடி’ - சீவக. 1292
‘மாருநீர்வையம்’ - கு. 701
‘விரிநீர்வியன் உலகம்’ - கு. 13
‘நாமநீர்வைப்பு’ - கு. 149
‘கடல்ஞாலம்’ - தண்டி. உதாரணம்
‘வாய் உணவின் மாக்கள்’ - கு. 420

என்றும்,

பரசு ராமன் - கோதண்ட ராமன் - தசரத ராமன் என்றும் இருவகை மொழியினும் மத்தியபத லோபன் வரும். சாகப்பிரிய பார்த்திவன், சாக பார்த்திவன் என்பதனைக் காத்தியாயனர் மத்தியபத லோபன் என்பர். பாடியகாரர் இலக்கணை என்பர். இவை விரியுங்கால் கனலொடு புகையும் குடையொடு நிழலும் போல உருபும் பொருளும் ஒருங்கு விரியும்.

‘மக்கள் முறைதொகூஉம் மருங்கி னுன’ - எ. 350

என்னும் சூத்திரத்தால் காட்டிய சாத்தங்கொற்றன் - பெருவாயில் முள்ளி - காரிமாறன் - வடுகங்கண்ணன் என்பனவும் அது.

செம்பூத்தாமரை - வெண்பூஅலரி என்னும் வண்ணச் சினைச்சொல் செந்தாமரை - வெள் அலரி என வருவன மத்திய பதலோபன், செங்கரும்பு செங்கீரை போல முதலினது பண்பு ஆகாமையின் என்க. செங்கமத்து அலர் போலும் கண், கை, கால், செங்காந்தட்போது எனவும் வருமால் எனின், அவயவ விசேடணம் அவயவியோடு ஒட்டி வந்தன என்க; ஆதலின் சொல்லுவான் குறிப்பு எப்படி அப்படி என்க.

‘வத்திரு விவட்சை விவட்சா தீனம்
உரைப்போர் குறிப்புஎன்று உரைத்தனர் புலவர்’

இஃது உரைச்சூத்திரம்.

நன்னூலாரும் 'உரைப்போர்குறிப்பு' (*316*) என்றார்.

மலர்முகம் – தாமரைமுகம் என்பன பூர்வபத லோபனும் உத்தரபத லோபனும் ஆகாவோ எனின், தாமரையைச் சினையின் பிரத்தியயம் ஒன்றிவந்து கெடும் என்பர் காத்தியாயனர். பாடிய காரர் தாமரை என்பது முதலுக்கும் சினைக்கும் பெயர் என்பர். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்,

'முதலிற் கூறும் சினைஅறி கிளவியும்
சினையிற் கூறும் முதல்அறி கிளவியும்' - சொ. 114

என்பர் ஆதலின், இந்திரனும் இலக்கணை நேர்ந்தானாயிற்று.

யானைக்கோடு – பலாக்காய் என்றும்,
மரப்பாவை – நாடுரி என்றும்,
மரவேர் – மரநீட்சி என்றும்
முறையே ஆகமமும் ஆதேசமும் லோபமும் வரும்.

'மிகலே ஆகமம் கெடமிகல் ஆதேசம்
கெடுதலே லோபம் கிளக்குங் காலே'

இஃது உரைச்சூத்திரம்.

'உரிச்சொல் மேன' - சொ. 298
'உயர்திணை மேன' - சொ. 57
'கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பு' - அகநா. 176

மாகி – மாசி என வன்ன விகாரம் வரும்.

வைசாகி வைகாசி, தசை சதை என வன்ன விபரியயம் வரும்.

'காமவிதி கண்முகம் மென்மருங்குல் செய்யவாய்
தோமில் துகடினி சொல்அமுதம்' - பழம்பாடல்

என்னும் செய்யுளில் காவி மதி துடி கனி என வருவனவும் அது.



யாவர் – யார் என வன்னநாசம் வரும்.

யாது – யாவது என வன்ன ஆகமம் வரும்.

'பலர்அறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை
ஒன்றுஅறி சொல்முன் யாதுஎன் வினைஇடை
ஒன்றிய வகரம் வருதலும்' - எ. 172

என்னும் சூத்திரவிதி பெற்றதும் அது.

முன்னில் என்பது முன்றில் என்றும்,

'அட்டில் ஓலை தொட்டனை நில்' - நற் 300

என்பது நின்மே என்றும் வருதலும் அது.

மயூரம் – கூடோத்துமா – விகாரம்;
நாரிகேளி – சிங்கம் – விபரியயம்;
பிருஷோதரன் – வன்னநாசம்;

அஞ்சம் – வன்ன ஆகமம் – என வடமொழியினும் வரும். இவை, தனிமொழியாக, தொடர்மொழியாக - இன்ன எழுத்தின் பின் இன்ன எழுத்து வந்தால் இவ்வண்ணமாம் என்னும் விதியின்றி வருதலின், வேறே வைத்தாம்.

தட்டை – தண்டை முதலிய செய்யுள் விகாரங்களும் இவை அன்றோ எனின், அடிப்பாடும் தொடையும் இன்னோசையும் காரணமாகச் சந்தோபங்கம் வாராமல் வருதலின் அவை அன்று என்க. வடமொழியினும்,

'அபிமாஷம் மஷங் குர்யாத் சந்தோபங்கம் நகாரயேத்'

என வரும். பொற்குடம் – திரிதல்; சண்முகம், வாங்மூலம், வாகீசன் என்பன போல்வன ஆதேசம் என்பர். வன்னவிகாரமும் ஆதி விருத்தியும் விகரணியும் விகாரம் எனக் கொள்வர்.

அராஅப்பாம்பு – நிலைமொழியும் வருமொழியும் மிக்க ஆகமம்.

பொற்றாலி – இருமொழியும் திரிந்த விகாரம்.

தொண்ணூறு – இருமொழி முற்றும் திரிந்தன.

ஆந்தை, பூந்தை – உபயபதமும் கெட்ட லோபம்.

மராஅடி – பூர்வபத லோப விகாரம்.

பனாஅட்டு, அதாஅன்று – பூர்வபத விகாரம்.

அடி, அட்டு, அன்று என்பன உடம்படுமெய் பெருமையால் பின்மொழிப் பிரகிருதி பாவம்.

'பின்னரும்' என்ற லேசத்தாலே,

கிளி கடிந்தார் – கிளிக்கடிந்தார், குளங்கரை – குளக்கரை, இல்பொருள் – இல்லை பொருள் – இல்லைப் பொருள் – இல்லாப் பொருள் இவை எல்லாம் விகற்பம். வைசேடிகர் உறழ்ச்சி என்பதுவும் அது. கஃறீது – விகார விகாரம்; மேற்றிசை, பொன்னாடு – வருமொழி விகாரம், இப்புணர்ச்சி விகார பேதமெல்லாம் அம்மூன்றினுள் அடக்கிக் கொள்க.

**'நாடு கிழவோன்'** – பொருந. 248

**'காடகம் இறந்தோர்க்கே'** – யா. வி. மேற்.

'பிரமரிஷி' – 'ஹரீஏதௌ' என்பனவற்றை பிரகிருதிபாவம் என்பர்.

**'பெறுவழிப் பெருமை பிரகிருதி பாவம்'**

இஃது உரைச் சூத்திரம்.

இனி, இயைந்த சொற்கள் ஆவது என் எனின், நிலைமொழி ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக, வருமொழி முதல் எழுத்துப் பின்னர்ப் பிறந்து கெடும்; இவ்விரண்டும் முறையிற் பிறந்து கெடுவன ஒருங்கு நின்று புணருமாறு இன்மையின் புணர்ச்சி என்பது ஒன்று இல்லையாம் என்பார்க்கு, அச்-சொற்களைக் கூறுகின்றாரும் கேட்கின்றாரும் அவ்வோசையை



இடையறவு படாமை உள்ளத்தின்கண்ணே உணர்வார் ஆதலின், அவ்வோசை கேடு இன்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சி போலப் புணரும் சொற்கள் என்க. கண்கூடு – காட்சியளவை.

பூர்வ பதத்தின் ஈற்று எழுத்தும் உத்தர பதத்தின் முதல் எழுத்தும் தாப்பிசை என்னும் பாசபந்தம் போலப் புணர்வதன்றிப் பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங்குலி நியாயம் போலப் புராண ஆகலின்,

**'நிறுத்த சொல்லின் ஈறுஆகு எழுத்தொடு**
**குறித்துவரு கிளவியின் முதல்எழுத்து இயைய'** – எ. 108

என்றார் தொல்காப்பியர். தருக்க நூலார் எழுத்துக்களைப் பிறந்து கெடும் என்பர். சத்தநூலார் கெடாது நித்தியமாம் என்பர்.

பணிபணம் – கரிகரலீலை – வஞ்சகரீரம் – கரிகளபம் என்பன பூர்வபதமும் உத்தரபதமும் சமானார்த்தகம் என்பார்க்கு,

**'வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன்'** – கு. 563

**'அடிஅளந்தான் தாயது எல்லாம்'** – கு. 610

**'கோடாத செங்கோல்'** – சீவக. 7

என்பன போலக் கேவல பத மாத்திரையாய் நின்றன என்க.

இனிப் பாலாறு – பாலா – பால் – பா

எனவும்,

கா – காவி – காவிரி

எனவும்,

அக்கரச் சுதகமும் அக்கர வர்த்தனமுமாய் வந்து பொருள் வேறுபட்டாற் போல,

அராஅப்பாம்பு – யானைக்கோடு – மரவேர் – ஒரு மாரை – ஆந்தை – பூந்தை என எழுத்துக்கள் மிக்கும் குறைந்தும் தொகைச் சொற்களாக நின்றாலும் வேறு பொருள்படா என்க.

எழுத்துக்கள் தம்மொடு தாம் புணரும் இடத்தும், நிலைமொழியோடு வருமொழி புணரும் இடத்தும் முன்னர் ஒருவன் சொல்லச் செவி கருவியாக உணர்ந்து மனத்தின்கண் நிலைபெற்ற ஒலி எழுத்துக்களைப் பின்னரும் உணருமாற்றான் அகரம் முதலிய எழுத்துக்கெல்லாம் வேறு வேறு அடையாளமாக எழுதிய வடிவெழுத்திற்கு,

'புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உரு உருவாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்' - எ. 17

என்றும்,

'மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்' - எ. 104

என்றும் கூறிய இலக்கணம் செவி கருவியான் உணரும் ஒலியெழுத்துப் பெருமையின், இவ்விலக்கணம் வேண்டா என்க; வடமொழி வடிவெழுத்தும், பதினேழ்மொழி வடிவெழுத்தும் இவ்விலக்கணம் பெறாது அறியக்கிடந்தமையானும் என்க.

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' - எ. 46

'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' - எ. 18

என்பது ஒலி எழுத்திற்கு இலக்கணம் ஆகலின், வேண்டும் என்க. நன்னூலார் 'புள்ளிவிட்டு' (89) என்னும் சூத்திரத்துள் 'ஒற்று முன்னாய் உயிர் பின்னாய்' என ஒலி எழுத்து இலக்கணத்தை வடிவு எழுத்து இலக்கணத்தோடு ஒருங்கு ஓதினர் என்க. இனி, வடிவெழுத்து இலக்கணம் வேண்டாவோ எனின், தமிழ் எழுத்திற்கு எகர ஒகர மெய் புள்ளி பெறுதலின் வேண்டும் எனக் கொள்க. 9

## விளக்கம்

உருபும் பொருளும் உடன் தொக்க தொகையை வடநூலார் இடைப்பதங்கள் தொக்க தொகை எனப் பொருள்படும் மத்தியபதலோபன் என்பர்.



ஆகமம் – மிகுதல்; ஆதேசம் – கெட்டுமிகுதல்; லோபம் – கெடுதல்.

வன்ன விகாரம் – எழுத்துத்திரிபு; வன்ன விபரியயம் – எழுத்து மாறுபாட்டம்; வன்ன நாசம் – எழுத்துக் கெடுதல்; வன்ன ஆகமம் – எழுத்து மிகுதல்.

வளைக் கை – வளையலை அணிந்த கை.

பொற்றொடி – பொன்னாலாகிய தொடியினை அணிந்தவள்.

மாறு நீர்வையம் – வற்றாத நீரால் சூழப்பட்ட உலகம்.

விரிநீர் வியன் உலகம் – பரந்த கடலால் சூழப்பட்ட பரந்த உலகம்.

நாம நீர் வைப்பு – அஞ்சத்தக்க கடல் நீரால் சூழப்பட்ட உலகம்.

கடல் ஞாலம் – கடலால் சூழப்பட்ட உலகம்.

வாய் உணவின் மாக்கள் – வாயால் நுகரப்படும் உணவினை உட்கொள்ளும் மாக்கள்.

இவை தமிழ்மொழியில் இடைப்பதங்கள் தொக்க தொகை.

பரசு ராமன் – கோடாலியை ஏந்திய இராமன்.

கோதண்ட ராமன் – வில்லை ஏந்திய இராமன்.

தசரத ராமன் – தசரதனுக்கு மகனாகிய இராமன்.

இவை வடமொழியில் இடைப்பதங்கள் தொக்க தொகை.

சாகப் பிரிய பார்த்திபன், சாக பார்த்திபன் –

மரக்கறியை விரும்பும் மன்னன், மரக்கறி மன்னன். இதுவும் இடைப்பதங்கள் தொக்க தொகை.

கனலைப் புகை நீங்காது இருப்பது போலவும், குடையை நிழல் நீங்காது இருப்பது போலவும், உருபும் உருபு கொண்டு முடியும் சொல்லாகிய பொருளும் விரியும் என உவமை கூறினர்.

சாத்தங் கொற்றன் – சாத்தனுக்கு மகனாகிய கொற்றன்.

பெருவாயில் முள்ளி – பெருவாயிலாருக்கு மகனாகிய முள்ளி.

காரி மாறன் – காரியாருக்கு மகனாகிய மாறன்.

வடுகங் கண்ணன் – வடுகனுக்கு மகனாகிய கண்ணன்.

இவையும் இடைப் பதங்கள் தொக்க தொகை.

'அடைசினை முதலென முறைமூன் றும் மயங்காமை
நடைபெற்று இயலும் வண்ணச் சினைச்சொல்'
– தொ. சொ. 26

உ–ம்: செம் பூத் தாமரை, வெண் பூ அலரி.

செங்கரும்பு – செவ்விதாகிய கரும்பு, செங்கீரை – செவ்விது ஆகிய கீரை எனப் பண்புத்தொகை.

செந்தாமரை – சிவந்த பூவை உடைய தாமரை, வெள்ளலரி – வெள்ளிய பூவை உடைய அலரி என இடைப்பதங்கள் தொக்க இரண்டன் தொகை.

செம்மை பூவினுக்கு அடையாகவும், அதனை விடுத்துச் செங் கமலத்து அலர் – செங்காந்தட்போது – என முதலுக்கு அடையாயினமை, முதலோடு சினைக்கு ஒற்றுமை உடைமையின் சினையடையை முதல் மேல் ஏற்றிக் கூறப்பட்டது. இவற்றிற்கு அடிப்படை சொல்லுபவனுடைய உள்ளக் குறிப்பேயாம்.

மலர்முகம் – தாமரை மலர்முகம் என முன்மொழி கெட்டது என்றும், தாமரைமுகம் – தாமரை மலர் முகம் எனப் பின்மொழி கெட்டது என்றும் கூறல் ஆகாதோ எனின், மலர் என்ற சொல் முன் அதன் முதலாகிய தாமரையைக் குறிக்கும் சொல் வந்து கெட்டது; தாமரை என்ற சொல்லை யடுத்து அதன் சினையாகிய பூவைக் குறிப்பிடும் விகுதி வந்து கெட்டது என்பது காத்தியாயனர் கருத்து. தாமரை முதல் சினை இரண்டனையும் குறிப்பிடும் என்பர் பதஞ்சலியார்.



முதல் சினையையும், சினை முதலையும் ஆகுபெயரால் சுட்டும் எனத் தொல்காப்பியனார் கூறலின், தொல்காப்பியத்துக்கு முதனூல் யாத்த இந்திரனும் முதல் சினையையும் சினை முதலையும் சுட்டும் குறிப்பினை ஏற்றுக்கொண்டானாயிற்று.

யானைக்கோடு, பலாக்காய் – மிகுதல் – ஆகமம்.

மரப்பாவை, நாடுரி - கெட்டு மிகுதல் – ஆதேசம்.
(நாழி + உரி)

மரவேர், மரநீட்சி – கெடுதல் – லோபம்.

மேல என்பது மேன எனவும், கண்ணகல் என்பது கண்ணகன் எனவும், மாகி மாசி எனவும் எழுத்துத் திரிந்தன. வைசாகி – வைகாசி முதலியனவும் எழுத்து நிரல்நிறையும் எழுத்து மாறாட்டம்.

யாவர் – யார் என வகரம் கெடுதல் எழுத்துக் கெடுதல். யாது – யாவது என வகரம் மிகுதல் எழுத்து மிகுதல்.

'பலரறி சொல்முன்' என்ற தொல்காப்பிய நூற்பா (எழு. 172) யார், யாவது என்ற எழுத்துக் கெடுதலையும் எழுத்து மிகுதலையும் குறிப்பிடும்.

முன் + இல் – முன்றில்.

'முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே' – தொ. எ. 355

என்பது முன் + இல் – முன்றில் என்றாயினமைக்கு விதி.

மயூரம், கூடோத்துமா என்பன – மீ + ஊரன் – மீயூரம், மையூரம் என்றாகாது மயூரம் என்றாயினமை விகாரம். கூட + ஆத்துமா — கூடாத்துமா என்றாகாது கூடோத்துமா என்றாயினமை விகாரம்.

நாரிகேளி, சிங்கம் என்பன – நாளிகேரி, ஹிம்ச : என்பன–வற்றின் எழுத்து மாறாட்டம்.

பிருஷோதரன் – பிருஷத் + உதரன் – பிருஷதோதரன் என்றாகாமல் தகரம் கெட்டுப் பிருஷோதரன் என்றாயினமை எழுத்துக் கெடுதல்.

அஞ்சம் – ஹஸ என்பது ஹம்ஸ என எழுத்துமிகுதல்.

இத்திரிபுகளுக்கு முறையான விதி இல்லை.

‘ தண்டையின் இனக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மான்நோக் கினளே ’

எனத் தட்டை ‘ தண்டை ’ என வருதல் போலும் செய்யுள் விகாரங்கள் தொன்றுதொட்டு வரும் நெறி முறைமையும், எதுகை முதலிய தொடையும், செப்பல் முதலிய ஓசையும், ஓசை இனிமையும் காரணமாக வருவன.

ஓசைக்கு இடையூறு நிகழாமைப்பொருட்டு மாஷம் என்பதனை மஷம் எனக் குறுக்கியும் ஒலிப்பர் வடநூலார்.

பொன் + குடம் – பொற்குடம் – னகரம் றகரமாகத் திரிதல்.

சட் + முகம் – சண்முகம் – டகரம் கெட்டு ணகரம் மிகுதல்.

வாக் + மூலம் – வாங்மூலம் – ககரம் கெட்டு ஙகரம் மிகுதல்.

வாக் + ஈசன் – வாகீசன் – முதல் ககரம் கெட்டு மூன்றாம் ககரம் மிகுதல்.

எழுத்துத்திரிதலையும், தசரதன் மகன் தாசரதி என வரும் ஆதிவிருத்தியையும், பகுபதத்துள் வரும் இடைநிலை எழுத்துக் களையும் விகாரம் எனக் கொள்வது சிலர் கருத்தாம்.

ஆதிவிருத்தி – மொழிக்கு முதல் நின்ற இஈஏ – ஐஆகவும், உஊஓ – ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும் திரிவது.

அரா + பாம்பு – அராஅப்பாம்பு – நிலைமொழி ஈற்றில் அகரமும், வருமொழி முதலில் பகர ஒற்றும் மிக்கன.

பொன் + தாலி – பொற்றாலி ; நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரிந்தன.



ஒன்பது × பத்து – தொண்ணூறு ; நிலைமொழி வருமொழி இரண்டும் முழுதும் திரிந்தன.

ஆதன் + தந்தை – ஆந்தை ; பூதன் + தந்தை – பூந்தை ;

ஆத் + அந்தை, பூத் + அந்தை என்று ஆகி ஆந்தை, பூந்தை எனப் புணர்ந்தமையின் இருமொழியிலும் எழுத்துக் கெட்டமை காண்க. – தொ. எ. 347, 348

மரம் + அடி – மராஅடி ; நிலைமொழி ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது. – தொ. எ. 310, 311

பனை + அட்டு – பனாஅட்டு ; நிலைமொழி ஐகாரம் ஆகாரமாயிற்று. – தொ. எ. 284

அது + அன்று – அதான்று ; நிலைமொழி ‘ து ’ – தா ஆயிற்று. – தொ. எ. 258

மராஅடி – பனாஅட்டு – அதா அன்று இவற்றுள் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் உயிராதலின் உடம்படுமெய் பெற்று மராவடி – பனாவட்டு – அதாவன்று என்று வருதல் வேண்டும் ; அங்ஙனம் பெறவேண்டிய உடம்படுமெய் பெறாமல் பின்மொழி இயல்பாய் அமைந்தது.

விகற்பம், உறழ்ச்சி – ஒருகால் இயல்பாதலும் ஒருகால் திரிதலும், ஒருகால் இயல்பாதலும் ஒருகால் மிகுதலும் என்பன.

கல் + தீது – கற்றீது – கஃறீது ; ஆய்தத்திற்குத் தகரம் நட்பெழுத்தாயினும், லகரம் றகரமாய்த் திரிந்தவழி வருமொழித் தகரமும் றகரமாகத் திரிய மீண்டும் றகரம் ஆய்தமாகத் திரிந்தவழி வருமொழித் திரிபு அப்படியே ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. கல் – கற் என்றாகிப் பின் கஃ என்றாயது விகார விகாரம். – எ. 369

மேற்கு + திசை குகரம்கெட நின்ற மேற் என்ற நிலை மொழிக்கு ஏற்ப வருமொழித் தகரம் றகரமாயிற்று. – ந. 186

பொன் + நாடு - பொன்னுடு; நிலைமொழி னகர ஈற்றிற்கு ஏற்ப வருமொழி நகரம் னகரமாகத் திரிந்தது. - ந. 237

நாட்டுக்கிழவோன் - காட்டகம் என்று விகாரமாய் வர வேண்டியன, நாடுகிழவோன் - காடகம் என்றே இயல்பாய்ப் புணர்ந்தன. - ந. 183 உரை.

பிரமரிஷி — இடையே சந்தியில் வரவேண்டிய ரகரம் வாராமலே இயல்பாயிற்று.

ஹரிஏதௌ — ஹரி + ஏதௌ இரண்டும் பெற வேண்டிய புணர்ச்சி விகாரம் பெருமல் இயல்பாகவே புணர்ந்தன.

விகாரம் பெறுவழிப் பெருதுவருதலை வடநூலார் பிரகிருதிபாவம் என்னும் இயற்கைநிலை என்பர்.

கண்கூடாகப் புணர்தல் - வரிவடிவில் எழுதப்பட்ட சொற்கள் தம்மில் புணர்தல். 'நிலைமொழியின் ......... என்க' என்ற செய்தி நச்சினர்க்கினியர் உரைத்தது. - தொ. எ. 108 நச்.

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் கயிற்ருேடு கயிற்றைப் பிணைத்திடுதல்போல ஒற்றுமைப்பட்டுப் புணரும் அன்றி, விரலும் விரலும் சேர நின்ருற்போல ஒற்றுமையோடு வேற்றுமையும் பட்டு நில்லா.

பிறக்கும் பொருள்கள் யாவும் அழியும் என்னும் தருக்க நூலார் எழுத்தினைக் கெடும் என்பர். இலக்கணநூலார் எழுத்து என்றும் அழியாது என்பர்.

பணி பணம் — பணம் - பாம்பின்படம்; படத்தை உடையது பணி, ஈண்டுப் பணி என்பது மிகை.

ஒருமா + அரை – ஒருமாரை; ஒன்றரைமா என்னும் பொருளது.

'புள்ளி யில்லா' என்ற நூற்பா (தொ. எ. 17) 'மெய் எழுத்துக்கள் தம் புள்ளி நீங்கிய வடிவே வடிவாகக்கொண்டு அகரத்தோடு கூடி உயிர்மெய் எழுத்துக்களாம். அம்மெய்கள் ஏனைய உயிரோடு கூடுங்கால் கால் பெற்றும் மேல் விலங்கு பெற்றும் கொம்பு பெற்றும் கொம்பும் காலும் பெற்றும் இன்னும் பலவாருகத் திரியும் நிலையும் உண்டு' என்று குறிப்பிடும் செய்தியும், ஈற்றில் வரும் மெய்யெல்லாம் புள்ளி பெறும் என்ற செய்தியும் வரி வடிவு பற்றியனவே. இவ்வரிவடிவின் இலக்கணம் ஏனைய மொழிகளுக்கு ஏலாது எனினும், தமிழில் உயிர்களுள்ளும் எகரமும் ஒகரமும் புள்ளி பெறும் என்று குறிப்பிடுதல் இன்றியமையாததாதலின், அதனேடொப்ப மெய்யின் வரிவடிவு இலக்கணம் கூறலும் பொருந்துவதாம். நன்னூலார் 'புள்ளி விட்டு' (ந. 89) என்னும் நூற்பாவில், 'புள்ளிவிட்டு அவ்வொடு முன்உரு ஆகியும், ஏனைய உயிரோடு உருவு திரிந்தும், அதன் வடிவு ஒழித்து' என வடிவெழுத்திலக்கணமும், 'உயிரளவாய் ஒற்று முன்னுய் உயிர்மெய் வரும்' என ஒலி எழுத்திலக்கணமும் ஒருங்கு ஓதினர். 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' (தொ. எ. 46) 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' (தொ. எ. 18) என்பன ஒலி எழுத்திலக்கணமாம். இவை பல மொழிகளுக்கும் பொதுவாம்.

இச் செய்திகள் பல இலக்கணக்கொத்து நூலிலும் இடம் பெற்றுள்ளன. (113, 115, 116) 9

## தொகைகளுக்குப் புணர்ச்சி வேற்றுமையால் வரும் குறிகள்

27. நித்தம், அநித்தம், அலுக்கு, லுக்காம்
தொகை நின்றநிலை
மெய்த்த கிடக்கைமுறைத் தொகைப்
பாத்தம், விபரியமாம்



பொய்த்தொகை ஆறும் அவ்வாறினும்
தோன்றும்; பொருட்பெயர்ப்பின்
வைத்த வினைப்பெயர் தானே
உபபதம்; வாள்நுதலே!

இது அத்தொகைகட்குப் புணர்ச்சி விகற்பத்தால் மருவலுறும் குறி கூறுகின்றது. நித்தம் முதலாக விபரியயம் ஈருக ஆறும் அவ்வறுவகைத் தொகையினும் ஏற்புழித் தோன்றி அப்பெயர் பெறும்.

வடநூலுள் பாத்தமும் விபரியயமும் இல்லை ஆயினும், அவற்றின் விகற்பம் கண்டு யாமே குறி கூறினும்.

உ–ம்: ஒரு கலம், ஒரு பொருள் – இவை – துவிகுவில் வந்த நித்தியம். 'ஒன்று தேரினன்' என்னும் சிந்தாமணி (417) விகாரம். தேர் ஒன்றினன் எனின் அமையும்.

**'ஒன்றுநன்று உள்ளக் கெடும்'** - கு. 109

**'தன்தோள் நான்கின் ஒன்று கைமிகூஉம்'** – பழம்பாடல்

என்பன அநித்தியமாம் என்பார்க்கு, 'நன்று ஒன்று உள்ளக் கெடும்' என உரைத்த பரிமேலழகர் உரையானும் காண்க. தன் தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉம் என்றே கொள்க. கைம்மிகல் ஒரு சொல்.

கிழக்கேமேற்கு என்பது உம்மைத் துவந்துவனில் வந்த நித்தியம். கீழ்மேற்கு என அநித்தியம் ஆகாமை 'இருதிசை புணரின்' (தொ. எ. 431) என்னும் சூத்திர விதியால் அறிக.

**'இரண்டுமுதல் ஒன்பான் இறுதி'** – 480

என்னும் சூத்திர விதி பெற்ற இருமா இரண்டுமா – மூவுறுப்பு மூன்றுறுப்பு – நாற்கடல் நான்குகடல் – ஐயறிவு ஐந்தறிவு – அறுமுகம் ஆறுமுகம் – எழுகடல் ஏழ்கடல் – எண்டிசை எட்டுத் திசை எனவும்,

'ஐவாய வேட்கை அவா' – நாலடி 59

எனவும் அநித்தியம் வரும்.

புதல்வரைப் பெறுதல் – மன்னரைச் சேர்ந்து ஒழுகல் –

'நூற்றுவரைக் கொல்லி' – சிந்தா. 101

'சேர்ந்தாரைக் கொல்லி' – கு. 306

நம்பியைக் கொணர்ந்தவன் – நங்கையைக் கொணர்ந்தவன் – கொற்றனைக் கொணர்ந்தவன் – வண்டினைக் கொணர்ந்தவன் என உருபு தொகாமலே அலுக்கு வரும். அது,

'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்
சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்' – தொ. எ. 157

என்னும் சூத்திரத்தால் அறிக.

'இகழ்வார்ப் பொறுத்தல்' – கு. 151

'கேளிர்ப் பிரிப்பர்' – கு. 187

என விகாரத்தால் உயர்திணை மருங்கின் ஒழிந்து லுக்கு வரும்.

'சூத்திரகாரன்' 'கும்பகாரன்' 'உரைகாரன்' 'கட்டியங்காரன்' 'இசைகாரன்' – என உபபத சமாசன் வரும்.

பலாக்காய் – மாங்காய் – நாநுனி – நாவிளிம்பு எனப் பாத்தம் வரும்.

'நுனிக்கொம்பர்' – கு. 476

'கடைக்கண் – அரைக்காசு – முன்றில் – மீகண்'

'செய்த வேள்வியர்'

'எய்திய செல்வத்தர்' – நாலடி 350

'வீழ்ந்த பாசத்தார்' – தண்டி. உதா

'அறம் சொல்லும் நெஞ்சத்தான்' – கு. 185



'கழிந்த உண்டியர்' – முருகு. 130

'வேண்டா உயிரார்' – கு. 777

'அருங்கேடன்' – கு. 210

'கொண்ட கூழ்த்தாகி' – கு. 745

'உச்சிக் கூப்பிய கையினர்' – முருகு. 185

வீதராகி – பெண்ணணங்கு – வாய்ப்பவளம் – முகமதி எனப் பிரதமா தற்புருடன் உபமித சமாசனும் தத்திதனுமாக வரும். (*10*)

## விளக்கம்

தொகைச் சொற்களிடையே புணர்ச்சி விகாரம் நிகழ்தலின், அவ்விகாரம் பெற்ற நிலையில் அவற்றிற்கு வெவ்வேறு பெயர் கூறுகின்றது. அவை நித்தம், அநித்தம், அலுக்கு, லுக்கு, பாத்தம், விபரியயம் என்பன. இவை ஆறும் போய் அறுவகைத் தொகையுள் ஏற்புழித்தோற்றும். இவற்றுள் பின்னைய இரண்டும் வடமொழிக்கு இல்லை. போய் என்பது எதுகை நோக்கிப் பொய் எனக் குறுகியது.

ஒன்று + கலம் – ஒருகலம் என்று புணர்தலே இயற்கை என்பது.

'என்று கூறலும் ஏழை வேட்டுவிர்
ஒன்று தேரினன் ஒருவன் கூற்றமே' – சீவக. 417

எனச் சிந்தாமணியில் ஒரு தேரினன் என இயற்கையாக அமைய வேண்டியது எதுகை நோக்கி ஒன்று தேரினன் என்று அமைந்தது பொதுவிதிக்கு மாறாகும். ஒன்று என்பதனைத் திரித்தல் வேண்டா எனின், அதனை வருமொழியாகக் கொண்டு தேர் ஒன்றினன் எனின் அமையும். ஒன்று நன்று என்பது நன்று ஒன்று என்று மாறிப் பொருள் தருவதால் அது விகாரமன்று; ஒன்று கை என்னுது, தோள் நான்கின் ஒன்று கைமிகூஉம் என்று அமைதலின் அதுவும் விகாரமன்று. கைம்மிகல் – மிகுதல் என்னும் பொருட்டு; கை உபசர்க்கம்.

கிழக்கே மேற்கு எனப் புணர்தலே இயற்கை. என்னே ?

'இருதிசை புணரின் ஏ - இடை வருமே' – தொ. எ. 431

என்பது விதி ஆகலான். கீழ்மேற்கு என்பது வழு. இருமா - இரண்டுமா - முதலாக இயல்பும் திரிபுமாகிய இரு நிலேயும் ஏற்ற பெற்றி பெறுதல் அநித்தியமாகும். இருமா – இரண்டுமா என்ற இரண்டனுள் ஒன்றே ஏற்புடைத்து எனின் நித்தியமாகும்.

'செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐஎன் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடும் கெடுதல் என்மனர் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்' – தொ. எ. 288

என்ற விதிப்படி வேட்கை - அவா - வேணவா என்று அமைந்திருந்தால் அதனே நித்தியம் எனலாம். அங்ஙனமன்றி வேட்கையவா என நின்ருங்கு நின்றே புணர்ந்திருத்தலும் கூடுதலின், ஒரே விதியைப் பின்பற்றும் நித்தியமாகாது, அநித்தியமாயிற்று.

உருபு வெளிப்படையாக இருத்தல் அலுக்கு; உருபுமறைந்திருத்தல் லுக்கு.

இரண்டன் உருபு வெளிப்படையாக இருத்தலுக்கு விதி 'உயர்திணே......நிலேயலும்' (தொ. எ. 157) என்ற நூற்பாப்பகுதி.

புதல்வரைப் பெறுதல் முதலாயின 'உயர்திணே மருங்கின் ஒழியாது வருதல்'. கொற்றனேக் கொணர்ந்தான் என்பது 'அஃறிணே விரவுப் பெயர்க்கு அவ்வியல் நிலேயல்.'

'வண்டும் பெண்டும் இன்னெடு சிவணும்' (எ. 420) ஆதலின், வண்டு என்பது இன்சாரியை பெற்றவிடத்து,

'சாரியை உள்வழித் தன்உருபு நிலேயலும்' (எ. 157) என்ற விதிப்படி வண்டினேக் கொணர்ந்தான் என உருபு விரிந்தது.



இகழ்வாரைப் பொறுத்தல், கேளிரைப் பிரிப்பர் என 'உயர்திணே மருங்கின் ஒழியாது வருதல்' (எ. 157) என்ற விதி பற்றிப் புணர வேண்டியன, 'இகழ்வார்ப் பொறுத்தல்' 'கேளிர்ப் பிரிப்பர்' என்று விகாரமாக உயர்திணேக்கண் உருபு மறைந்து வந்தன.

சூத்திரகாரன் முதலிய தொகைச் சொற்களில் காரன் என்ற பின்மொழி விகுதியின் நிலேயினதாகவே இருத்தல் காண்க. சூத்திரகாரன் – கயிற்றை இயக்குவிப்போன்; கும்பகாரன் - குடம் செய்வோன்; கட்டியங்காரன் - கட்டியக்கூத்து நிகழ்த்துவோன்; இசைகாரன் - இசை பாடுவோன். இவை விரித்தால் இரண்டாம் வேற்றுமைத் தொடராம்.

பலாக்காய் முதலிய எடுத்துக்காட்டுக்களில் முன்மொழியும் பின்மொழியும் முதல்சினேத் தொடர்பில் ஆறன் பொருளில் வந்த வேற்றுமைத் தொகைகளாகப் புணர்ந்துள்ளன.

பாத்தம் - ஏகதேசான்வயி - முதல்சினே இணேப்பு.

நுனிக்கொம்பர் முதலியன விபரியயம் ஆகிய – மாறுபட்டு இருத்தலுக்கு எடுத்துக்காட்டு.

| | | |
|---|---|---|
| நுனிக்கொம்பர் | — | கொம்பரது நுனி. |
| கடைக்கண் | — | கண்ணது கடை. |
| அரைக்காசு | — | காசினது அரை. |
| முன்றில் | — | இல்லினது முன். |
| மீகண் | — | கண்ணினது மீ. (மேலிடம்) |
| செய்த வேள்வியர் | — | வேள்வி செய்தவர். |
| எய்திய செல்வத்தர் | — | செல்வம் எய்தியவர். |
| வீழ்ந்த பாசத்தர் | — | பாசம் வீழ்ந்தவர். |
| அறம் சொல்லும் நெஞ்சத்தான் | — | நெஞ்சசோடு அறம் சொல்வான் |

| | | |
|---|---|---|
| கழிந்த உண்டியர் | — | உண்டி கழிந்தவர். |
| வேண்டா உயிரார் | — | உயிர் வேண்டாதார். |
| அருங்கேடன் | — | கேடு அரியன். |
| கொண்ட கூழ்த்தாகி | — | கூழ் கொண்டதாகி. |
| உச்சிக் கூப்பிய கையினர் | — | உச்சியில் கைகளைக் கூப்பினர். |
| வீதராகி | — | ஆசை நீக்கியவன். (நீக்கப்பட்ட ஆசையை உடையவன்) |
| பெண்ணணங்கு | — | அணங்கு போன்ற பெண். |
| வாய்ப் பவளம் | — | பவள வாய். |
| முக மதி | — | மதி முகம். |

செய்த வேள்வியர் முதல் உச்சிக் கூப்பிய கையினர் காறும் விகுதி பெற்ற பெயர்ச்சொற்களாகிய தத்திதாந்தம். பெண் அணங்கு முதலியன முன் பின்னாக மாறிய உவமத்தொகை. இவை வடமொழியில் முன்மொழி எழுவாய் வேற்றுமையாதலின், முதல் வேற்றுமைத்தொகை எனப்பட்டன.

இச்செய்திகளில் சில இலக்கணக்கொத்துள் இயைபு நோக்கி வெவ்வேறிடங்களில் சுட்டப்பட்டுள்ளன. (*108, 114 – 116*) *10*

## தீர்க்கசந்தி, குணசந்தி, ஆதி விருத்தி என்பன

28. சுட்டெழுத்து ஆதிஅந்தப் பதமாகத்
தொக அவற்றின்
நெட்டெழுத்து ஒன்றல், சவன்னத்தின்
நீட்சி, பின்நீட்சி, தலைப்
பட்டு மற்றுஓர் அச்சுஇயைந்தால்
குணம்; முற்பதம் திரியக்
கட்டுஅழித்து அந்தம் புணர்ந்தால்
விருத்தி; கனங்குழையே!



இது அத்தொகைகட்கும் மேல்வரும் தத்திதனுக்கும் வரும் சந்தி விதியும் அவற்றின் குறியும் கூறுகின்றது.

வருமொழி முதலும் நிலைமொழி ஈறும் சுட்டெழுத்துக்களாய் நின்று தொகச் சுட்டெழுத்துக்கு இனம் ஆகிய நெட்டெழுத்து ஒன்று வருதல் சவன்னதீர்க்கம் எனப் பெயர் பெறும். தத்தம் இனம் அல்லாத நெட்டெழுத்துக்கள் வரின், அது குணம் எனப் பெயர் பெறும். நிலைமொழி திரியத் தத்திதப் பிரத்தியயம் வந்து புணர்தல் ஆதி விருத்தி எனப் பெயர் பெறும்.

என வே, மேல் வரும் தத்திதனுக்குத் தோற்றுவாய் செய்ததூஉம் ஆயிற்று.

'தானப் பிரயத் தினத்தால் ஒக்கும்
இனஎழுத்து எல்லாம் சவன்னம் என்ப'
'முயற்சி பிரயத் தினம்என மொழிப'

இவை உரைச் சூத்திரம்.

உ–ம்:

பத + அம்புயம் — பதாம்புயம்.
சசி + இந்திரன் — சசீந்திரன்.
வெகு + உவமை — வெகூவமை.
வத்து + உவமை — வத்தூவமை.

எனச் சுட்டெழுத்து மூன்றும் தத்தம் நெட்டெழுத்து வரக் கெட்டு வந்த சவன்ன தீர்க்கமாம். அர்த்தநாரீசுரன், திருக்காமீசுரன் என நெட்டெழுத்து முதலாய்ச் சவன்ன தீர்க்கமாய் வருதலும் கொள்க.

கங்கா + உதகம் - குல + உத்துங்கன் - நர + இந்திரன் என நின்று, கங்கோதகம் - குலோத்துங்கன் - நரேந்திரன் எனப் பிறிது ஓர் அச்சு வந்த குணசந்தியாம்.

பிரம + ஏவசத்தியம் - ஏக + ஏகம் என்பன - பிரமைவ சத்தியம் - ஏகைகம் என்றும், பிரம + ஓதனம் - பிரமோதனம் என்றும் வரும்.

குள + ஓதனம் - விம்ப + ஓட்டம் - குளோதனம், விம்போட்டம் என ஓகாரம் திரியாமலும் வரும்.

தசரதன் மகன் தாசரதி - சனகன் மகள் சானகி - இருடிகள் நூல் ஆரிடம் - இந்திரன் நூல் ஐந்திரம் - வேத சம்பந்தம் வைதிகம் - கோசலத்துப் பிறந்தாள் கௌசலை என்பன விருத்தி.

இரண்டாவது சமாச படலம் முடிந்தது.

## விளக்கம்

'தானம் முயற்சி அளவு பொருள்வடிவு
ஆனஒன்று ஆதிஓர் புடைஒப்பு இனமே' – நன். 72

என்பது இனமாதற்கு இலக்கணம். இவற்றுள் தானமும் முயற்சியுமே தலை சிறந்தன. இன எழுத்து சவன்னம் எனப்படும்.

சுட்டு - அ, இ, உ; அவற்றின் நெடில் ஆ, ஈ, ஊ. அகரத்தின் முன்னர் அகரமும் இகரத்தின் முன்னர் இகரமும் உகரத்தின் முன்னர் உகரமும் வர, அவை யாவும் கெட்டு முறையே ஆகாரமும் ஈகாரமும், ஊகாரமும் வருதல் சவன்ன தீர்க்க சந்தியாம்.

வருமொழி முதலில் இன நெட்டெழுத்து வரினும், சவன்ன தீர்க்க சந்தி நிகழும். அப்பொழுது வருமொழி இன நெட்டெழுத்துக் கெட நிலைமொழி நெட்டெழுத்தே நிற்கும்.

நாரீ + ஈசுரன், காமீ + ஈசுரன் - நாரீசுரன், காமீசுரன் எனக் காண்க.

அகர ஆகாரங்களின் முன்னர் இகர, ஈகார, உகர, ஊகார, ஏகார, ஓகார, ஔகாரங்கள் வரின், இரண்டும் கெட, ஏ-ஐ-ஓ-ஔ என்ற நெட்டெழுத்துக்கள் வருதல் குண சந்தியாம்.



மொழிக்கு முதல் நின்ற இ எ ஏ - ஐயாகவும், உ ஊ ஓ - ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும் இரு - ஆர் ஆகவும் திரிவது விருத்தி சந்தி. இது தத்திதாந்த பதத்தில் பெரும்பான்மையும் வரும்.

பதாம்புயம் - அடித்தாமரை, சசீந்திரன் - சசிதேவியோடு கூடிய இந்திரன், வெகூவமை - பலஉவமை, வத்தூவமை - பொருளுவமை, அர்த்தநாரீசுவரன் - பெண்ணொருபாகத் திறைவன், காமீசுவரன் - தேவியோடு கூடிய இறைவன், கங்கோதகம் - கங்கை நீர், குலோத்துங்கன் - குலத்தை முன்னேற்றியவன், நரேந்திரன் - மக்களுக்கு மன்னன், பிரமைவ சத்தியம் - பிரமம் ஒன்றே வாய்மையானது, ஏகைகம் - ஒவ்வொன்று, பிரமோதனம் - பிரமமாகிய உணவு, குளோதனம் - வெல்லச்சோறு, விம்போட்டம் - கொவ்வை இதழ்.

தசரதன் மகன் தாசரதி என்பன போன்ற விருத்தி சந்திகள் தத்திதாந்தமாம்.

தசரதன் மகன்-தாசரதி, அதிதிமகன்-ஆதித்தன், பசுபதியை வழிபடுவான் - பாசுபதன் - அகரம் ஆகாரமாயிற்று.

விநதை மகன் வைநதேயன், வியாகரணம் ஓதுவான் - வையாகரணன் - இகரம் ஐகாரம் ஆயிற்று.

ஈசுவரன் அருளியது - ஐசுவரியம் - ஈகாரம் ஐகாரம் ஆயிற்று.

குருவமிசத்தான் - கௌரவன், புத்தனை வழிபடுவான் - பௌத்தன் - உகரம் ஔகாரமாயிற்று.

ஓஷதியால் ஆக்கப்பட்டது - ஔஷதம் - ஓகாரம் ஔகாரமாயிற்று.

இருடியால் செய்யப்பட்டது - ஆரிடம் - இரு ஆர் ஆயிற்று - இவை எல்லாம் விருத்தி சந்திக்கு எடுத்துக் காட்டாகக் கொள்க.

இவ் வடமொழிச் சந்தி இலக்கணம் முத்து வீரிய எழுத்துப் படல மொழியியலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனை ஈண்டு நோக்குவோம்.

'சந்தி தீர்க்கம் குணமே விருத்தி
எனமூ வகைப்படும் என்மனர் புலவர்'

வடசொற்கள் புணரும் புணர்ச்சி - தீர்க்க சந்தி எனவும், குண சந்தி எனவும், விருத்தி சந்தி எனவும் மூவகைப்படும். - 34

### தீர்க்கசந்தி

'அ - ஆ இறுதிமுன் அ - ஆ வரினே
இருமையும் கெட ஆ ஏற்கும் என்ப'

அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன், அகர ஆகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழி யீறும் வருமொழி முதலும் கெட - ஓர் ஆகாரம் வந்து புணரும்.

எ-டு:

பத + அம்புயம் — பதாம்புயம்;
சேநா + அதிபதி — சேநாதிபதி. - 35

'இ - ஈ இறுதிமுன் இ - ஈ வரினே
இருமையும் கெட - ஈ ஏற்கும் என்ப'

இகர ஈகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன் இகர ஈகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட - ஓர் ஈகாரம் வந்து புணரும்.

எ-டு:

மகி + இந்திரன் — மகீந்திரன்,
கரி + இந்திரன் — கரீந்திரன். - 36

'உ - ஊ இறுதிமுன் உ - ஊ வரினே
இருமையும் கெட - ஊ ஏற்கும் என்ப'

உகர ஊகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன் உகர ஊகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் கெட - ஓர் ஊகாரம் வந்து புணரும்.



எ-டு:

குரு + உபதேசம் — குரூபதேசம்,
சயம்பூ + உபதேசம் — சயம்பூபதேசம். - 37

இவை தீர்க்க சந்தி.

### குணசந்தி

'அ - ஆ இறுதிமுன் இ - ஈ வரினே
இருமையும் கெட - ஏ ஏற்கும் என்ப'

அகர ஆகாரங்களை இறுதியாக மொழிக்கு முன் இகர ஈகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் கெட, ஓர் ஏகாரம் வந்து புணரும்.

எடு:

நர + இந்திரன் — நரேந்திரன்,
உமா + ஈசன் — உமேசன். - 38

'அ - ஆ இறுதிமுன் உ - ஊ வரினே
இருமையும் கெட ஓ எய்தும் என்ப'

அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன் உகர ஊகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும்கெட, ஓர் ஓகாரம் வந்து புணரும்.

எ-டு:

தாம + உதரன் — தாமோதரன்,
கங்கா + உற்பத்தி — கங்கோற்பத்தி. - 39

'அஆ இறுதிமுன் ஏ-ஐ வரினே
இருமையும் கெட-ஐ எய்தும் என்ப'

அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன் ஏகார ஐகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும்கெட, ஓர் ஐகாரம் வந்து புணரும்.

எ-டு:

லோக + ஏகநாதன் — லோகைகநாதன்,
மகா + ஐசுவர்யம் — மகைசுவரியம். - 40

'அஆ இறுதிமுன் ஓ-ஔ வரினே
இருமையும் கெட-ஔ எய்தும் என்ப'

அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்கு முன், ஓகார ஔகாரங்களை முதலாகிய சொல் வரின், நிலைமொழியிறுதியும் வருமொழி முதலும் கெட, ஓர் ஔகாரம் வந்து புணரும்.

எ-டு :

கலச + ஓதனம் — கலசௌதனம்,
மந்திரா + ஔடதம் — மந்திரௌடதம். - 41

இவை குண சந்தி.

**விருத்தி சந்தி**

'இ-ஏ முதற்கு-ஐ ஆம்என மொழிப'
மொழிமுதல் இகர ஏகாரங்கள் ஐகாரமாகும்.

எ-டு :

திதியின் மக்கள் — தைத்தியர்,
வேதசம்பந்தம் — வைதிகம். - 42

'முதலில் உ-ஊ-ஓ ஔ-ஆ கும்மே'
மொழிமுதல் உகர ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகும்.

எ-டு :

குருகுலத்தார் — கௌரவர்,
சூரன் மகள் — சௌரி,
சோமன் மகன் — சௌமியன். - 43

'அகர முதல்மொழி ஆகாரம் ஆகும்'
மொழிமுதல் அகரம் ஆகாரமாகும்.

எ-டு :

சனகன் மகள் – சானகி
எனவரும். - 44

இவை விருத்தி சந்தி. விருத்திசந்தியைத் தத்திதாந்த பதத்திலேயே காண்க.

சமாச படல விளக்கம் முடிந்தது. 11

— ★ —

# மூன்றுவது தத்திதபடலம்

★

## தத்திதனின் இலக்கணம்

29. துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்து
முன்சொல்தனைப் போய்
மன்னும் பிரத்தியயமே தத்திதாந்தம்;
வழாது அதனைப்
பன்னும் பொழுது, வலையான்முயன்று
உண்பவன் வலையன்
என்னும் பகுபதப்பேர்ஆம்
குறிப்புமுற்று - என்று அறியே.

இது தத்திதன் இலக்கணம் கூறுகின்றது, முற்சொல் தன்னைத் துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச் சேரும் பிரத்தியயத்தை உடைய சொல்லே தத்திதாந்தத்தை உடைய சொல்லாம். அதனை விரித்துத் தொகுத்து உதாரணம் காட்டும்பொழுது, வலையான் முயன்று உண்பவன் வலையன் என்னும் பகுபதக் குறிப்புப் பெயராம் என்றவாறு.

தொகைக்கு இவ்வாறு கொள்ளாமை விவட்சாதீனம்.

'பிரித்தனர் காட்டல்' – சொல். 463

என்னும் சூத்திரத்தில் சேனவரையரும் 'அருவாள நிலத்தான் அருவாளன் – சோழநிலத்தான் சோழியன் – எனவரும்' என்பர். பொதுப்பட 'முன்சொல்தனை' என்றதனாலே, தனிச்சொல்லும்

தொகைச்சொல்லும் கொள்க. ஆதலின் தொகையுள்ளும் முன்நின்ற மொழியைவிட்டுப் பின்நின்ற மொழியைக் கெடுத்துப் பிரத்தியயத்தைக் கூட்டி முடித்தலும், பின்நின்ற மொழியைக் கெடாது முற்றும் முன் நின்ற மொழியாக நிறுத்திப் பிரத்தியயம் கூட்டி முடித்தலும் ஆம். (*1*)

### விளக்கம்

இந்நூற்பாவில் தத்திதாந்த பதத்தின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

பிரத்தியயம் – பொதுவாக விகுதி, இடைநிலை, வேற்றுமை உருபுகளைக் குறிக்கும் சொல்லாம்; தத்திதன் என்பது பெயர் ஏற்கும் விகுதிகளையே குறிக்கும் சொல்லாம். இவ்விகுதிகளை ஏற்கும் குறிப்பு வினைமுற்றுப் பெயர்கள் தத்திதாந்த பதமாம்.

தத்திதாந்த பதத்திற்கு இவ்வாறு இலக்கணம் கூறிய இவர் தொகைகளுக்குச் சென்ற படலத்தில் இவ்வாறு நூற்பாவில் இலக்கணம் வகுத்திலர்; அஃது உரைப்போர் குறிப்பினால் ஒரு திறத்ததன்றிப் பல திறத்ததாகி வருதலின். விவட்சாதீனம் என்பது உரைப்போர் குறிப்பு என்பது முன்னும் கூறப்பட்டது. (26ஆம் காரிகை உரை).

'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்'
– தொ. சொ. *463*

என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரப் புறனடையாகிய இறுதி நூற்பாவில் 'அருவாள நிலத்தான் – அருவாளன்' முதலிய தத்திதார்த்தச் சொற்களைச் சேனாவரையர் விளக்கினார். தொகையில் தத்திதன் வருதலுக்குத் தெலுங்கன் சொல்லு தெலுங்கு – கனங்குழை உடையாள் கனங்குழையாள் – என முதற்சொல்லும், இரு சொல்லும் முறையே தத்தினாமாறு காண்க.



இந்நூலாசிரியரைப் போல வீரசோழிய நூலார் தத்திதாந்தச் சொல்லுக்கு இலக்கணம் கூறவில்லை. ஆயின் தம் நூலின் தத்தித படலத்தின் முதல் காரிகையில் தத்திதனாகிய பெயர் விகுதிகள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

'அன் இயன் ஈனன் இகன் ஏயன் வான்வதி அம் இகரம்
வன் உ அகரத்தோடு ஆன் ஆளன் மான் அகன் ஆதிமற்றும்
துன்னிய சீர்த்தத் திதத்தின் பிரத்தியம் சு-என்பதும்
மன்னும் மரபு பிழையாமல் எங்கும் வரப்பெறுமே' – *52*

'மன்னும் மரபு பிழையாமல்' என்பதனால், வேற்றுமைச் சுப் போலச் சு – எங்கும் அழியப்பெறும் எனக் கொள்க. (*52* உரை)

'அச்சியொடு ஆட்டி அனிஆத்தி அத்தி தி ஆளொடு அள் இ
இச்சி சி ஆதியும் பெண்மைத் தெளிவாம்' – *வீ. 56*

எனப் பெண்பாற் பெயரில் வரும் விகுதிகள் கூறப்பட்டுள்ளன.

'..................... மன் கன் ஆன் அன் வன் ஆள்
ஐஅம் அவன் அவள்மி – முதலாகும் திரப்பியத்தில்
பைய மதிக்க உலகத் தவர்க்கும் பயன்படலே' – *வீ. 55*

எனப் பொருள்களை விளக்கும் பெயர் விகுதிகள் கூறப்பட்டன.

பிரயோக விவேக நூலார் இங்ஙனம் விகுதிகளை விருப்பப்படி நீட்டி அமைக்காமல், தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களில் காணும் மரபைச் சிறிது ஒட்டி விகுதிகளை அமைத்துக் கூறுமாறு காண்க.

இலக்கணக்கொத்து,

'பகுபதத் திலக்கணம் பகருங் காலை' – *117*

என்ற நூற்பா உரையில் இப்படலச் செய்தியைத் தொகுத்துக் கூறியவாறும் நோக்குக.

## தத்திதன் வகைகளும், சாமானியத்தின் விகுதிகளும்

30. சாமானியம், அவ்வியயம், பாவம்
மூன்று எனத் தத்திதன் வேறு
ஆமால்; அவற்றின் விகுதியும்
மூன்று எனலாகி நிற்கும்;
சோமஆனனத்திருவே! ள - ன - ர
டு - று - து - ம் - சுட்டு - ஐ
சாமானியத்தன; திங்,
கிருத்தோடும் தலைப்படுமே.

*இஃது தத்திதன் பகுதியும் அவற்றுள் ஒன்றன் விகுதியும் கூறுகின்றது. சாமானிய தத்திதன், அவ்வியய தத்திதன், பாவ தத்திதன் எனத் தத்திதன் மூன்று ஆதலின், அவற்றின் பிரத்தியயமும் மூன்றும். அவற்றுள், சாமானிய தத்திதனுக்கு னவ்வொற்றும், ளவ்வொற்றும், ரவ்வொற்றும், டு, று, து, என்னும் மூன்று உயிர்மெய்யும், மகர ஒற்றும், சுட்டெழுத்துக்களும், ஐகாரமும் பிரத்தியயமாம். அன்றியும், இப்பிரத்தியயங்கள் திங் என்னும் வினைமுற்றுச்சொற்கும் கிருத்து என்னும் வினைமுற்றுப்பெயர்க்கும் மிச்சிரப் பிரத்தியயமாய் நிற்கும் என்றவாறு.*

*'ஆம்' என்னது 'ஆகிநிற்கும்' என்றதனல் கிருத்பாவம் என்னும் தொழிற்பெயர்க்கு ஈருதலும் சிறுபான்மை கொள்க.*

*உம்மையால், இப்பிரத்தியயங்களுள் சில இடைநிலை எழுத்துக்களோடும் பதபூர்த்தி என்னும் சாரியையோடும் தலைப்படுதலும் கொள்க. சாரியை பற்றுசு போல விகுதிபத உருபுகளிடை நின்று புணர்த்துவது. இக்காலத்துக் கம்மியர் பற்றுசினை இராகி என்பர்.*



*உ-ம்:*

*குழையன் – குழையள் – குழையர் – குண்டுகட்டு – காதற்று – முதற்று – குழையது – காபிலம் – தொல்காப்பியம் – அவிநயம் – பாணினீயம் – கௌடம் – திரமிடம் – குழையின – வில்லி – வாளி – நம்பி – வடுகு – தெலுங்கு – நங்கை – கௌசலை எனவும்,*

*சூலி – கபாலி – தந்தி எனவும் இருவகை மொழியினும் வரும்.*

*தொல்காப்பியம் - காபிலம் என்பன ஈறுதிரிந்த ஆகுபெயர் அன்றோ எனின்,*

**'முதலிற் கூறும்'** - தொ. சொ. 144

*என்னும் ஆகுபெயர்ச் சூத்திரத்துள், சேனவரையர் வெற்பன் – சேர்ப்பன் என்பன போல வந்த வினைக்குறிப்புப் பெயர் என்பர் ஆகலானும், ஈறு திரிதல் ஆகுபெயர்க்கு ஆகாமை அறிக.*

*பெயரியலில் தொல்காப்பியர் கூறிய பெயர்களுள் சில ஒழிந்து பெரும்பான்மையும் வரும் பெயர்களெல்லாம் தத்திதன் என்க.*

*பரத்திரி மகன் பாரத்திரைணேயன் – இது தொகைநிலைத் தொடர்மொழி முற்சொல்லாய் நின்று வரும். கனங்குழையாள், பொற்றொடியாள் என்பனவும் அது.*

*தெலுங்கன் சொல்லு தெலுங்கு – வடுகன் சொல்லு வடுகு – இவை தொகைநிலைத் தொடர்மொழியுள் முற்சொல் தன்னை நிறுத்தி, அதனொடு தொக்க சொல் என்னும் பிற் பதத்தை அழித்து முற்சொல்லினது ஈற்றினையும் அழித்து உகரப் பிரத்தியயம் ஏற்றி, தெலுங்கு – வடுகு என வரும்.*

*வலையன்பெண்டாட்டி – வலைச்சி என ஒருமொழியினும், பொருப்பரசன்மகள் – பொருப்பரசி எனத் தொகையினும் வரும்.*

ECOLE FRANÇAISE BIBLIOTHÈQUE PONDICHÉRY D'EXTRÊME-ORIENT

வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, போயிற்று, சொல்லும், வந்தன எனத் திங்ஙோடு வரும். பிறவும் அன்ன.

தீன், பாய்த்துள், புணர், சாக்காடு, பேறு, அறிவது, ஆக்கம், புணர்ச்சி, புணர்ப்பு, உடுக்கை எனக் கிருற்பாவபதத்தோடும் வரும். (2)

## விளக்கம்

இக்காரிகையில் ஆசிரியர் தத்திதன் – சாமானியதத்திதன், அவ்வியயதத்திதன், பாவதத்திதன் என மூவகைப்படும் எனவும், சாமானிய தத்திதனாகிய பெயர் விகுதிகள் ன–ள–ர–து–று–டு, ம் – அ – இ – உ – ஐ என்பன எனவும், இவ்விகுதிகள் வினை முற்றுக்கும், வினையாலணையும் பெயர்க்கும் தொழிற்பெயர்க்கும் பொதுவான விகுதிகளாம் எனவும் குறிப்பிட்டு, உரிய எடுத்துக் காட்டுக்களும் தந்துள்ளார். பெயுரோடு இவ்விகுதிகள் சேரும் போது இடையே இடைநிலைகளும் சாரியைகளும் வருதலும் உண்டு.

குழையன் – ன் ; குழையள் – ள் ; குழையர் – ர் ; குண்டுகட்டு– டு ; காதற்று, முதற்று – று ; குழையது – து ; காபிலம் தொல்காப்பியம், அவிநயம், பாணினீயம், கௌடம், திரமிடம் – ம்; குழையின – அ ; வில்லி வாளி, நம்பி – இ ; வடுகு, தெலுங்கு – உ ; நங்கை, கௌசலை – ஐ.

சூலி, கபாலி, தந்தி – இ ; சூலத்தை உடையவன், மண்டை யோட்டை உடையவன், தந்தங்களை உடையது என்னும் பொருளவாகிய வடசொற்கள் இவை.

சேனாவரையர் தொல்காப்பியன் + அம், கபிலன் + அம் என்பன அன்கெட்டு அம் புணர்ந்து தொல்காப்பியம் கபிலம் என்றாயின என்பர் ; ஈறு திரிதல் ஆகுபெயர்க்கு ஆகாது என்பர்.



இனி, சண்முகனார் ‘தமிழ் இயல்பு நோக்காது சேனாவரையர் அகத்தியம், தொல்காப்பியம், கபிலம் என்பன ஆகுபெயர் ஆகா எனவும், அன்விகுதி கெட்டுச் செயப்படு பொருள் உணர்த்தும் அம் விகுதியொடு புணர்ந்தன எனவும் உரைத்தார். அஃது இலக்கணம் அன்று; அம் விகுதி, எச்சம் – தேட்டம் – நாட்டம் முதலாயவற்றுள் எஞ்சு – தேடு – நாடு முதலாய வினை முதல்நிலையோடு கூடியே வினை முதற்பொருள் முதலாய அறுவகையுள் ஒரு பொருளை உணர்த்து மன்றிப் பெயர் முதல்நிலையோடு கூடி விகுதிப்பொருள் உணர்த்தல் யாண்டும் இன்மையானும், பெயர் முதல்நிலையோடு கூடின் பகுதிப்பொருளையே உணர்த்திக் குன்று சங்கு முதலாய பெயரொடு கூடிக் குன்றம் எனவும் சங்கம் எனவும் நின்றுழி விகுதிப்பொருள்களுள் ஒன்றும் உணர்த்தாமையான் அறியப்படும் ஆகலானும், அவ்விகுதி பிற பெயரொடு கூடி விகுதிப்பொருள் உணர்த்தாவிடினும் அகத்தியன் தொல்காப்பியன் முதலாய உயர்திணைப் பெயரொடு கூடியவழி உணர்த்துமெனின், தேடப்படுவன எல்லாம் தேட்டம் ஆயினாற் போல அகத்தியன் முதலிய அவரால் செய்யப்படுவன எல்லாம் அகத்தியம் எனவும் தொல்காப்பியம் எனவும் கபிலம் எனவும் பெயர்பெறல் வேண்டும்; அவ்வாறு அவர் செய்த தவம் முதலாய பிறவற்றுக்கெல்லாம் பெயராகாமல் அவர் செய்த நூல்களையே உணர்த்தலான் அதுவும் பொருந்தாமையானும், செய் என்பது எல்லாத் தொழிற்கும் பொதுவாகலன்றி நூல் செய்தற்கு மாத்திரம் பெயராகாமையானும் என்பது’ என்று பாயிர விருத்தியில் (ப. 233, 234) கூறியவற்றையும் நோக்குக.

பரத்திரி மகன் – முழுத்தொகைச் சொல்லும் திரிந்து தத்திதன் பெற்றது.

கனங்குழை உடையாள் – இது தொகைச்சொல் திரியாமல் தத்திதன் பெற்று வந்தது.

தெலுங்கன் சொல்லு தெலுங்கு – தொகையின் முதற்சொல் திரிந்து தத்திதன் பெற்றது.

வந்தான் முதலியன வினைமுற்றுச் சொற்கள்.

வந்தவன் முதலியன வினைமுற்றுத் திரிந்த வினையாலணையும் பெயர்கள்.

தீன் முதலியன தொழிற்பெயர்கள்.

தீன் – ன், பாய்த்துள் – ள், புணர் – ர், சாக்காடு – டு, பேறு – று, அறிவது – து, ஆக்கம் – ம், புணர்ச்சி – இ, புணர்ப்பு – உ, உடுக்கை – ஐ என்பன தொழிற் பெயருக்கும் பொதுவாகும் பெயர் விகுதிகள் என்பது இவர் கருத்து.

புணர் – முதல்நிலைத் தொழிற்பெயர்; தீன், பேறு என்பன தின், பெறு என்ற முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்.

பாய்த்துள் – உள், சாக்காடு – ஆடு, அறிவது – து, ஆக்கம் – அம், புணர்ச்சி – சி, புணர்ப்பு – பு, உடுக்கை – கை என்பன தொழிற்பெயர் விகுதி என்பது தமிழ்நூலார் கருத்து.

திங் – வினைமுற்று விகுதி; கிருத்து – வினையாலணையும் பெயர்; கிருத்பாவபதம் – தொழிற்பெயர். 2

## உடையான் மேல் நிற்கும் சாமானிய தத்திதன்

31\. உண்ணும் அதனால், உரைக்கும் இதனை,
உதனொடு ஒக்கும்,
எண்ணும் அதனை, இதனுக்கு நாயகன்,
ஈங்கு இருக்கும்,
பண்ணும் அதனை, பயிலும்
இதன், பல வற்றினையும்
நண்ணும் என்றுஆதல் உடையவன்
மேல்நிற்கும்; நன்னுதலே!



இது சாமானிய தத்தித பேதம் கூறுகின்றது. அதனால் உண்ணல் முதலாகப் பலவற்றினையும் நண்ணும் என்றாதல் ஈறாக வரும் பொருண்மை எல்லாம் உடையான் மேல் நிற்கும் சாமானிய தத்ததனாம் என்றவாறு.

**‘உடையான் திரவிய விசிட்டன் விசேடியம்’**

இஃது உரைச் சூத்திரம்.

அதனால் உண்ணலாவது – வலையன்.

இதனை உரைத்தலாவது – வைதிகன், பௌராணிகன், கவிஞன்.

உதனொடு ஒத்தலாவது – பொன் அன்னான், மயில் அன்னாள்,

கனகசதிர்சன், இருடிதுல்லியன்.

அதனை எண்ணலாவது – சோதிடன்.

இதனுக்கு நாயகனாவது – வைதர்ப்பன், நைடதன், கௌசலன், வைகைத்துறைவன், குமரிச்சேர்ப்பன், மலையமான், புனல்நாடன், தமிழ்நாடன், புலியூரன்.

ஈங்கு இருத்தலாவது – சோழநாடன், பாண்டிநாடன், பட்டினவன், நாகரிகன்.

அதனைப் பண்ணலாவது – மருத்துவன்.

இதனைப் பயிறலாவது – கூத்தன், நிருத்தன்.

பலவற்றினையும் நண்ணலாவது ஈண்டு உரைத்து உரையாத பொருள்களையும் குணத்தையும் எண்ணையும் சாதியையும் காலத்தையும் அவயவத்தையும் அவற்றோடு இயைந்த வினைகளையும் கொள்க.

ஈண்டு உரைத்து உரையாத பொருள்கள் ஆவது: தண்டி– குண்டலி – வில்லி – வாளி – கச்சினன் – கழலினன் என வரும்.

குணமாவது: கரியன் - செய்யன் - தீர்க்கன் - ரத்தா - சுக்கிலா - சாமளா - பீதா என வரும்.

எண்ணுவது - பஞ்சவர் - அட்டசகச்சிரர் - பஞ்சமம் - அட்டமம் - தசமம் - சதுட்டயம் - ஏகாதசி - துவாதசி - பஞ்சதசி - ஒருவர் - இருவர் - எழுவர் என வரும்.

சாதி ஆவது: பார்ப்பார் - அரசர் - வணிகர் - வேளாளர் - பிராமணர் - சத்திரியர் - வைசியர் - சூத்திரர் என வரும்.

காலமாவது: விசாகன் - பரணியான் என வரும்.

அவயவமாவது: கண்ணன் - செவியன் - தந்தி - கும்பி - கரி - பணி என வரும்.

அவற்றோடு இயைந்த வினைகளாவது: கச்சினன் - கழலினன் என வரும்.

கச்சினை உடுத்தவன், கழலினைக் கட்டினவன் என்னும் தொடர் மொழிகள், கச்சு - கழல் என்னும் முற்சொல் ஒழிய, மற்றை உருபும் வினைச் சொல்லும் போய், அன் என்னும் ஈறு வந்து, சாரியை பெற்று, முற்சொல்லோடு புணர்ந்து, கச்சினன் - கழலினன் எனத் திரவிய விசிட்டனைப் பொருள்பட்டு, உடைப் பொருள் மேற்பட உடையான் கீழ்ப்பட 'மேலைக் கிளவியொடு வேறுபாடு இல்லா' (தொ. சொ. 215) உடையவன் மேல் நின்றன. ஒழிந்தனவும் இவ்வாறே கொள்க. (3)

## விளக்கம்

சாமானிய தத்திதன் உடையவன்மேல் நிற்கும் சாமானிய தத்திதன், உடைப்பொருள் மேல் நிற்கும் சாமானிய தத்திதன் என இருவகைப்படும். அவற்றுள் முதல்வகையின் விரி இக் காரிகையுள் கூறப்பட்டுள்ளது.

வேதத்தை உரைப்பவன் வைதிகன்; புராணத்தை உரைப்பவன் பௌராணிகன்; கவியை உரைப்பவன் கவிஞன்.



கனக சதிர்சன் - பொன்னெப்பான்; இருடி துல்லியன் - முனிவனெப்பான்; பட்டினத்தில் (கடற்கரை ஊர்) இருப்பவன் - பட்டினவன்; நகரத்திலிருப்பவன் - நாகரிகன்.

மருந்தினைப் பண்ணுவான் மருத்துவன்.

தண்டினை (கதை) உடையவன் தண்டி; வாளை உடையவன் வாளி; ஏனையவும் அன்ன.

ரத்தா - செந்நிறம் உடையவன்; உடையவள், உடையது.

சுக்கிலா - வெண்ணிறம் உடையவன்; உடையவள், உடையது.

சாமளா - நீல (கரு) நிறமுடையவன், உடையவள், உடையது.

பீதா - மஞ்சள் நிறமுடையவன், உடையவள், உடையது.

பஞ்சவர் - ஐவர்.

அட்டசகச்சிரர் - எண்ணயிரவர்.

பஞ்சமம், அட்டமம், - ஐந்தாவது, எட்டாவது.

தசமம் - பத்தாவது.

சதுட்டயம் - நான்காயிருக்கும் தன்மை.

ஏகாதசி, துவாதசி, பஞ்சதசி - பதினொன்றுவது, பன்னிரண்டாவது, பதினைந்தாவது.

விசாக நாளில் பிறந்தான் வைசாகன். (காரிமாறன்)

தந்தத்தை உடையது தந்தி; கும்பத்தை உடையது கும்பி; கரத்தை உடையது கரி; பணத்தை உடையது பணி (பாம்பு).

கச்சினை உடுத்திருப்பவன் கச்சினன்; கழலினைக் கட்டியிருப்பவன் கழலினன்.

கச்சினன் முதலியவற்றுள் கச்சு முதலிய உடைப்பொருளை எடுத்து உச்சரிக்க; விகுதியைப் படுத்து உச்சரிக்க.

இங்ஙிலே, உடையான் மேல் நிற்கும் தத்திதன் எல்லா-வற்றிற்கும் ஒக்கும்.

‘உண்ணும் இதனல் உரைக்கும் இதனை உடையான் இது
பண்ணும் இதனைப் பயிலும்இதில் பயன்கொள்ளும் இத்தால்
எண்ணும் இதனை இதனுக்கு நாயகன் ஈங்கிருக்கும்
நண்ணும் இதனை இதைஒக்கும் இங்குளன் அன்னபத்தே’
– வீ. 53

என்பதனை நோக்குக. 3

## உடைப்பொருள் மேல்நிற்கும் சாமானிய தத்திதன்

32. வல்ஆர் இளங் கொங்கை மாதே!
இவற்கு மகன்மகள் மற்று
அல்லா முறை வருக்கம் கிளை
பத்தன் என்று ஆதல், புறம்
செல்லாது உடைப்பொருள் மேல்நிற்கும்
இத்தத்திதப் பொருண்மை
எல்லாம் விசிட்டம்கொள் சாமானியம்
என்று இயம்புவரே.

இதுவும் அது. இவற்கு மகன் முதலாகப் பத்தன் ஈருக வரும் பொருண்மை எல்லாம் உடைப்பொருள் மேல் நிற்கும் சாமானிய தத்திதனும் என்றவாறு.

‘உடைப்பொருள் விசிட்டத் திரவியம் விசேடம்’

‘உடைமை விசிட்டம் ஒருபொருட் கிளவி’

இவை உரைச் சூத்திரம்.



உ-ம் :

மகனுவது – கார்த்திகேயன், காங்கேயன், வைநதேயன், வைச்சிரவணன்.

மகளாவது – பார்ப்பதி, பாகீரதி, பொருப்பரசி, சாத்தி, கொற்றி.

வர்க்கமாவது – ராகவன், காகுத்தன், கௌரவன்.

கிளையாவது – தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமள், நுமர், மதீயர், அஸ்மதீயர், துவதீயர், யுஷ்மதீயர், ததீயர்.

இவை அல்லாத முறையாவது – தந்தை, எந்தை, நுந்தை, தங்கை, எங்கை, நுங்கை, தம்பி, எம்பி, உம்பி, பிதாமகன், பௌத்திரன், பிதுர்வியன், மாதுலன் எனவரும்.

நம்பி நங்கை என்பன முறை அன்றி வத்திரு விவட்சை யாகலின் இதனுக்கு நாயகனுள் அடங்கும்.

பத்தனுவது – சைவன், பாகவதன்.

இவையெல்லாம் உடையான் மேற்பட உடைப்பொருள் கீழ்ப்பட்ட உடைப்பொருள் என்னும் விசிட்டத்திரவியத்தின் மேல்நிற்கும் தத்திதப் பிரத்தியயம்.

ஒருசார் வடநூலார் அவற்றை விசேடியத்தின் மேல் நின்ற எனவும், இவற்றை விசேடணத்தின்மேல் நின்ற எனவும் கூறுவர்.

இனி, அஃறிணையினும் இவ்வாறு –

‘பரியது கூர்ங்கோட்டது’ – கு. 599

‘நல்லாள் உடையது அரண்’ – கு. 746

தொல்காப்பியம் – பாணினீயம் – ஐந்திரம் –

'யான் எனது என்னும் செருக்கு' - கு. 346

'போகா தம' - கு. 876

'தமது பாத்து உண்டற்றால்' - கு. 1107

'தனதுஆயின் தானும் அதனை வழங்கான்' - நாலடி 276

'நினதே பெரும' - புறநா. 85

'அஃதுஇல்லார் உடையது உடையரோ' - கு. 591

'தன்கைத்து' - கு. 758

'பிடித்து எருவும்' - கு. 1037

'வகை தெரிவான்கட்டே' - கு. 27

என வரும்.

இனி, தனது - தமது என அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல உயர்திணைக்கண் தனன் - தனள் - தனர் என வாராமையானும், சிவன் தமர் - மணிவண்ணன் தமர் - நமன் தமர் -

'கல்லா மாஅன்னார் தமர்' - கு. 814

என இருமையினும் வருதலானும்,

'தநநுஎ எனும் அவை' - சொ. 410

என்னும் சூத்திரத்துள், சேனாவரையர் இவற்றை இருமைக்கும் பொது என்றும், முதலும் ஈறும் பிரிக்கப்படா என்றும் கூறுவர். இக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் தாம் நாம் என்பன குறுகி நின்று ஈறுபெற்ற என்று மாறுபடக் கூறுவர்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை' - கு. 70

எனவும்,

'நல்லிளங்கோசர் தந்தை'

எனவும் வருதலின், தந்தை என்பதும் இருமைக்கும் பொதுவாம்.

விச்சிரவசுவின் மகன் வைச்சிரவணன் (குபேரன்)

பர்வதராசன் மகள் பார்வதி;

பகீரதன் மகள் பாகீரதி (கங்கை)

சாத்தன் மகள் சாத்தி; கொற்றன் மகள் கொற்றி.

ரகுவின் வமிசத்தான் ராகவன்; ககுத்தன் வமிசத்தான் காகுத்தன்; குருவின் மரபினன் கௌரவன்.

மதீயர் - என்னைச் சேர்ந்தவர்; அஸ்மதீயர் - நம்மைச் சேர்ந்தவர்;

துவதீயர் - உன்னைச் சேர்ந்தவர்; யுஷ்மதீயர் - உங்களைச் சேர்ந்தவர்;

ததீயர் - அவனைச் சேர்ந்தவர்; பிதாமகன் - தந்தைக்குத் தந்தை;

பௌத்திரன் - மகன்வழிப் பெயரன்; பிதுர்வியன் - தந்தையின் இனத்தவன்;

மாதுலன் - தாயின் இனத்தவன்; மாமன்.

என், எம் - தந்தை, தம்பி, தங்கை, - எந்தை, எம்பி, எங்கை.

நின், நும் - தந்தை, தம்பி, தங்கை - நுந்தை, நும்பி, நுங்கை.

நம்பி - நங்கை என்பன எம்பி - எங்கை என்பனபோல முறைப் பெயராக வாராமல், சொல்லுவான் குறிப்பான் ஆடவருள் மிக்கான், மகளிருள் மிக்காள் என்னும் பொருளிலேயே வருதலின், இவை இதனுக்கு நாயகனுள் அடங்கும் என்னுர். நமக்குத் தலைவன், நமக்குத் தலைவி எனப் பொருள் செய்க.

'நம் ஊர்ந்து வருஉம் இகர ஐகாரமும்' - தொ. சொ. 163

நமக்கு இன்னுர் என்னும் பொருள்பட வந்தன. (சேனு)

சிவனுக்குப் பக்தன் சைவன்; பகவனுக்குப் பக்தன் பாகவதன்.

உடைப்பொருள் மேல் நிற்கும் தத்திதத்தை உடைய சொல்லின் விகுதியை எடுத்தும் பகுதியைப் படுத்தும் உச்சரித்தல் வேண்டும்.



முன் காரிகையுள் கூறப்பட்டன உடைப் பொருள்மேல் நின்றன எனவும் இக்காரிகையுள் கூறப்பட்டன உடையான் மேல் நின்றன எனவும் வடநூலாருள் சிலர் மாற்றிக் கூறுவர்.

இனி, வீரசோழிய நூலார், உடையான்மேல் நிற்றல் உடைப் பொருள்மேல் நிற்றல் என்ற பாகுபாட்டையே கொள்ளாமல்,

'உண்ணும் இதனல் உரைக்கும் இதனை உடையன் இது
பண்ணும் இதனைப் பயிலும் இதின்பயன் கொள்ளும்இத்தால்
எண்ணும் இதனை இதனுக்கு நாயகன் ஈங்கிருக்கும்
நண்ணும் இதனை இதைஒக்கும் இங்குளன் அன்னபத்தே' - 53

'மகன் இவனுக்கு இவளுக்கு இந்தவர்க்கத்தினன் இவனைத்
தகவியதேவன் எனும்யாவன் என்று நல்தத்திதங்கள்
நிகழும்; பிறபொருளின் கண்ணும்நிற்கும்; நினைந்துஅவற்றைப்
புகழ்மலி தெய்வப்புலவர்க்கும் பொச்சம் அடக்கரிதே' - 54

எனப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பரியது, கூர்ங்கோட்டது, உடையது, தொல்காப்பியம், பாணினீயம், ஐந்திரம், எனது, தம, தமது, தனது, நினது, உடையது, கைத்து, பிடித்து (பிடி அளவு உடையது) கட்டு (கண்ணது) என்பன அஃறிணைக்கண் தத்திதன் வந்தமைக்கு எடுத்துக்காட்டு.

சிவன் தமர் முதலிய மூன்றும் ஒருமைப்பொருளன. கல்லா மாவன்னுர் தமர் பன்மைப்பொருட்டு. இவ்வாறு தமன் முதலிய சொற்கள் தன்னுடையவன் என ஒருமைக்கும் தம்முடையவன் எனப் பன்மைக்கும் பொதுவாக வருதலின், இவற்றைத் தம் + அன் எனப் பிரிப்பின் பன்மைப் பொருளன்றி ஒருமைப் பொருள் தாராமையின், இவற்றைப் 'பிரிப்பப்பிரியா' என்னுர்.

மகன் தந்தைக்கு ஆற்றும் என்புழி, தந்தை ஒருவனுக்குத் தந்தையாகவும், நல்லிளங்கோசர் தந்தை என்புழி, தந்தை பலருக்குத் தந்தையாகவும் வருதலின், தந்தை என்ற சொல்லையும் பிரித்தல் கூடாது.

**53–54**

'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வருஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே' – தொ. சொ. 215

என்ற நூற்பா உரையுள் – 'குழையன் என்பது குறிப்புவினை முற்றாயவழி, குழை என்பதனை எடுத்தும் விகுதியைப் படுத்தும் சொல்லுக; வினையாலணையும் பெயராயவழி, விகுதியை எடுத்தும் குழை என்ற பகுதியைப் படுத்தும் சொல்லுக' என்றகருத்தில் சேனாவரையர் விளக்கம் தந்துள்ளார். அதனை இவ்வாசிரியர் ஈண்டு உடன்படுகிறார். ஆனால் 40-ஆம் காரிகை உரையில் கிருத்துப் படுத்தல், திங்ந்தம் எடுத்தல் என மாறிக் கூறுவாரும் உளர் என்று ஆசிரியர் ஆண்டுக் கூறுவது சேனாவரையர் நச்சினார்க்கினியர் போல்வார் கருத்தேயாம்.

தத்திதன் தொகைச் சொற்களைப் போலப் பிரித்துப் பொருள் கொள்ளப்படும் ஆற்றல் உடையன அல்ல என்பது விளக்கப் பட்டது.

நச்சினார்க்கினியருக்கு, விகுதியும் பொருள்படுதலின் விகுதியைப் பிரித்தும் பொருள் செய்யலாம் என்பது கருத்து.

வடமொழியில் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அவ்வியயம் ஆதலின், குழ மழ என்ற உரிச்சொற்களும், மற்றை என்ற இடைச் சொல்லும் பெயர் விகுதி பெற்று வந்த அவ்வியய தத்திதாந்த பதங்கள் ஆகும் என்றார். இவற்றைச் சாமானிய தத்தினாகக் கோடல் கூடாது என்பது இவர் கருத்து.

இலக்கணக் கொத்துள்,

'பகுபதத்து இலக்கணம் பகருங் காலைப்
பகாப்பதம் தொடர்மொழி இரண்டினுள் படாமல்
ஒருமொழி ஈற்றினும் தொடர்மொழி ஈற்றினும்
பின்மொழி கெட்ட முன்மொழி ஈற்றினும்



முன்மொழி கெட்ட பின்மொழி ஈற்றினும்
அளவிலை யாகி வரும்விகு திகளில்
பொருந்தும் விகுதிகள் பொருந்தல் அன்றியும்
வேற்றுமை உவம உருபுகள் இடைநிலை
சாரியை நான்கும் தனித்தும் பொருந்தியும்
வேற்றுமைப் பொருள்களை ஏற்று நின்றும்
ஒவ்வொரு வேற்றுமை வெவ்வே றாகியும்
... ... ... ... ... ...
பெயர்ச்சொல் முதலா நான்கினும் பிறந்தும்
பெயர்தான் அறுவகை யாகப் பிரிந்தும்
பகுபதம் ஆயினும் பலகுணப் படலால்
பகாப்பதம் என்னப் பெயர்படல் அன்றியும்' 47

என்ற பகுதியின் உரையில் இச்சாமானிய தத்திதன் பற்றிய பல செய்திகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. 4

## அவ்வியய தத்திதன்

33. பேர்கொண்ட சுட்டுப்பெயரில்
பிளந்து நில்லாஇடனும்
நேர்கொண்ட எண்சுட்டு எகாரங்கள்
ஏழொடு நின்றவை
ஏர்கொண்ட ஏழன் இடப்பொருள்
காட்டும் இடைச்சொற்களாம்;
தார்கொண்ட பூங்குழலாய்!
அவை அவ்விய தத்திதனே.

இஃது அவ்வியய தத்திதன் ஆமாறு கூறுகின்றது. சுட்டுப் பெயருள் பிளந்து நில்லாத இடப்பெயர்களும், எண் முதலியவை ஏழாம் வேற்றுமைப் பொருளோடு நின்றனவும் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாம். அவையே தமிழ் மொழிக்கு அவ்வியய தத்திதனாம் – என்றவாறு.

உ-ம்: ஆங்குக்கொண்டான் - ஆற்கொண்டான் - ஈற்கொண்டான் என வரும்.

இவை எல்லாம்,

**'சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழி'** - எ. 427

என்னும் சூத்திரத்தானும்,

**'மன்னும் சின்னும் ஆனும் ஈனும்'** - எ. 333

என்னும் சூத்திரத்தானும் காட்டிய ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியயதத்திதன்.

'பேர்கொண்ட' என்ற விதப்பால், யாண்டு - யாங்கு - எங்கு என வினாப்பெயருள் பிளந்து நில்லாத இடப்பெயர் வருதலும் கொள்க.

ஒருவயின், இருவயின் - பலவயின் - இவை எண்ணொடு நின்ற ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியயதத்திதன்.

அவ்வயின், இவ்வயின், உவ்வயின், எவ்வயின், அங்கண், இங்கண், அவ்வாய், ஆயிடை இவை,

**'சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்'** - எ. 334

என்னும் சூத்திரத்தால் காட்டிய ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் என்னும் அவ்வியய தத்திதன். நன்னூலில் அங்ஙனம் - இங்ஙனம் - உங்ஙனம் எனக் காட்டியனவும் அன்ன.

**'அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே'** - புறநா. 173

வடாஅது வேங்கடம் - தெனாது குமரி - குணாது கடல் - குடாது குடகம் என்பன, குடக்குள்ளது குடாது - தெற்குள்ளது தெனாது - வடக்குள்ளது வடாது - குணக்குள்ளது குணாது - சேய்மைக்கண்ணது சேய்த்து - அணிமைக்கண்ணது அணித்து - எனப்படும்.



இவற்றைச் சேனாவரையரும் 'இன்றுஇல' (220) என்னும் சூத்திரத்துள், ஏழாம் வேற்றுமைப் பொருட்கண் வந்த வினைக் குறிப்புப்பெயர் என்பர். வினைக்குறிப்புப்பெயர் எல்லாம் தத்திதன் என்பது,

**'பகுபதப் பேராம் குறிப்பு முற்று'**

என்றதனால் அறிக. (29)

**யத்திர, தத்திர, அத்திர, யத:, தத:, அத:**

என்பனவற்றிற்கு எவ்வயின், அவ்வயின், இவ்வயின், எங்கு, அங்கு, இங்கு - என வரும் சுட்டெழுத்துக்களையும், சுட்டுப் பெயரையும் வடமொழியார் விவட்சிதார்த்தம் என்பர்.

அப்பொருள், இப்பொருள், அக்கொற்றன், இக்கொற்றன், அவ்விரல் - என்பன சுட்டெழுத்துக்களை இடைச்சொல் ஆக்கி நிலைமொழியாக நிறுத்தி, உயிர் மயங்கியலில் வருமொழியோடு புணர்த்தலின், அவை தொகைச்சொல் என்னும் சமஸ்தபதமாவதல்லது அவ்வியய தத்திதன் ஆகா என்க. வடமொழியினும் தற்பாவம், தற்புருடன் தற்காலம் என வரும்.

**'சுட்டு முதல் வயின்'** - எ. 334

என்பது, அவ்வயின் - இவ்வயின் என்பனவற்றை ஒருமொழி ஆக்கி அவற்றோடு ஒருமொழி புணர்த்தலின், அவை அவ்வியய தத்திதன் என்க. சுட்டெழுத்துக்களையும் வினா எழுத்துக்களையும் நிலைமொழியாக நிறுத்திக் கண் வயின் முதலியவற்றைப் புணர்த்தாமையானும், அவ்வயின் இவ்வயின் முதலாயின சொற்கள் அவ்வியய தத்திதன் ஆதல் தெளிக.

ஆன் என்பது,

**'அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்**
**கண்என் வேற்றுமை நிலத்தி னானும்'** - சொ. 213

எனப் பெயரின் பின் நின்று ஏழன் உருபுமாய்,

'வினைமுதலானும், ஆன்வந்து இயையும்' – சொ. 232

என ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல்லுமாய், ஆங்கு என்னும் பொருள் உணர்த்தி நின்று அவ்வியயதத்திதன் ஆயிற்று. (5)

### விளக்கம்

சுட்டுப்பொருள் பிளந்து நிற்கும் இடைச்சொற்கள் அவ்வியயீபாவத்தொகையாதலின், நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாகப் புணக்கப்படாது ஒரு சொல்லாகவே கொள்ளப்படும் அவ்வயின் – அங்கு முதலிய சொற்களே அவ்வியய தத்திதனும்.

தமிழில் ஏழன் பொருள்படும் இடைச் சொற்களே அவ்வியய தத்திதனும். அவ்வியயதத்திதாந்தம் – விகுதி பெற்று வரும் இடைச்சொற்கள்.

ஆங்கு – சுட்டாகும் முதலெழுத்து நீண்ட மென்றொடர்க் குற்றியலுகரச் சொல். ஆன், ஈன், – அவ்விடம் இவ்விடம் என்னும் பொருளில் வரும் சொற்கள். இவை அகர இகரங்களை அடிப்படையாகக் கொண்டு திரிந்த சொற்களாம்.

சுட்டுப் பெயர்களேயன்றி, வினைப்பெயர்களுள் பிரிக்க முடியாத இடப்பெயர்களும் அவ்வியயதத்தித பதமாக வருதலுக்கு யாங்கு முதலியன எடுத்துக்காட்டு. ஒருவயின் முதலியன, ஏழன் பொருள்படும் இடைச்சொற்கள் எண்ணுப் பெயரொடு புணர்ந்து அவ்வியயதத்திதாந்தம் ஆயினமைக்கு எடுத்துக்காட்டு.

அவ்வாய், ஆயிடை – அவ்விடம் என்னும் பொருள. 'சுட்டுமுதல் வயின்' (எ. 334) என்ற நூற்பாவால் அவ்வயின் முதலியன நிலைமொழி வருமொழிகளாகக் கொண்டு புணர்க்கப்படாத இடைச்சொற்கள் என்பது அறியப்படும்.



அணித்து, சேய்த்து, வடாது, தெனாது, குணாது, குடாது என்பன ஏழன் பொருட்கண் வந்த வினைக்குறிப்புப் பெயர். இவையும் சாமானிய தத்திதனும் என்பது தத்திதபடல முதல் காரிகையான் அறியப்படும்.

யத்திர: தத்திர: — எவ்வயின், அவ்வயின்.

யத: தத: — எங்கு, அங்கு.

அத்திர: அத: — இவ்வயின், இங்கு.

'சுட்டின் இறுதி ...... ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே' (தொ. எ. 204) முதலிய விதியான் அக் கொற்றன் முதலியன நிலைமொழி வருமொழிகளாகப் புணர்ந்தன ஆதலின், இவை தத்திதாந்த பதமல்ல; அவ்வியயீபாவ சமாசன் என்க.

தத் + பாவம் – தற்பாவம்; தத் + புருடன் – தற்புருடன்; தத் + காலம் – தற்காலம்; இவையும் அவ்வியயீபாவ சமாசன்.

உடைமையானும் (சொல். 213) என்பது உடைமைக்கண்ணும் என விரிதலின் ஆன் ஏழன் உருபாய் வந்தது. 'ஆன்வந்து இயையும்' (சொல். 232) என்ற இடத்தில் ஆங்கு என்னும் பொருளுடையதாய் ஏழன்உருபின் பொருள்பட வந்தது.

இவ்வாறு வரும் சொற்களை அவ்வியயதத்திதாந்தபதம் எனல் எல்லாருக்கும் உடன்பாடன்று. தமிழிற்கு இது புதுமையாம். இவற்றை வீரசோழிய நூலார் தத்திதன் எனக் குறிப்பிடாமையும் காண்க. இவற்றை இலக்கணக்கொத்து நூலார்,

'இடப்பொருள் உணர்த்தும் வினைச்சுட்டு எண்பெற
இடைச்சொல் லாகவே எழுந்து நிற்கும்'

பகுபதம் என்று விளக்கி – யாண்டு, யாங்கு, எங்கு, எங்கண், எவண், யாவண், எங்ஙனம் யாங்ஙனம் எனவும்,

ஆன, ஈன, அங்கு, இங்கு, உங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, அவண், இவண், உவண், அம்பர், இம்பர், உம்பர், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் எனவும்,

ஒருவயின், இருவயின், மூவயின், எண்வயின் எனவும் இடப் பொருள் உணர்த்தும் வினைச்சுட்டு எண்பெற இடைச்சொல் லாகவே எழுந்து நின்றன என வரலாறும் தந்துள்ளார். – 117
5

## பாவதத்திதன்

34. முட்டாது கூறிய பல்வகைப்
 பண்பின் முதல்நிலையும்
கட்டான ஆண்பெண் முதலிய
 நாமமும் கைகலந்து,
மட்டுஆர் மலர்க் குழலாய்!
 தன்மைகாட்டிய – மை – உகரம்
தட்டாமல் நிற்பதுவே பாவதத்திதன்
 தண் தமிழ்க்கே.

இது பாவதத்திதன் ஆமாறு கூறுகின்றது. பண்பின் முதல்-நிலையோடும் ஆண்பெண் முதலாகிய பெயரோடும் மகர ஐகாரமும் சிறுபான்மை உகரமும் பொருந்திப் பாவதத்திதனும் என்றவாறு.

'பாவம் தன்மை பகருங் காலை'

இஃது உரைச் சூத்திரம்.

உ-ம் : வெள் – செ – கரு – நெடு – பெரு என நின்று மகர ஐகாரம் பெற்று, வெண்மை, செம்மை, கருமை, நெடுமை, பெருமை என்றும், உகரம் பெற்று வெளுப்பு, கறுப்பு என்றும் வருவன பண்பின் முதல்நிலைக்கண் வந்த பாவதத்திதன். தவளபாவம், தாவளியம், தவளிமா, நீலிமா என வடமொழியினும் வரும்.



ஆண்மை – பெண்மை – தாளாண்மை – குடிமை – செங்கோன்மை – வள்ளன்மை – காதன்மை – இவறன்மை – ஒருமை – இருமை – எழுமை – பகைமை – கேண்மை – புகழ்மை – சமழ்மை– இவை எல்லாம் ஆண் பெண் முதலிய நாமத்தின்கண் வந்த பாவதத்திதன்.

'வேந்தனும் வேந்து கெடும்' – கு. 899

'முரசுகெழு தானை மூவ ருள்ளும்
அரசுஎனப் படுவது நினதே பெரும' - புறநா. 35

இவற்றுள் வேந்து, அரசு என்பன – வேந்தனது தன்மை, அரசனது தன்மை என பாவத்தன்மையை உணர்த்தும் உகர ஈற்றுப் பாவதத்திதனும்.

புங்ஸதுவம், ஸ்திரீத்துவம் என வடமொழியினும் வரும்.

'பிறனியலாள், பெண்மை நயவா தவன்' - கு. 147

'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்' – கு. 1133

'பொருண்மை சுட்டல்' – சொ. 66

என்பனவும் அது.

இனி,

'சொன்மை தெரிதல் பொருண்மை தெரிதல்' – சொ. 156

– சொற்றெரிதல் பொருள் தெரிதல்,

'இளமைத் தன்மைக்கு உளம்மெலிந்து இரங்கல்' – ந. அ. 186

– இளந்தன்மை, முப்பத்து மும்மைத்தேவர் – முப்பத்து முத்தேவர்,

, இருமை வகைதெரிந்து' – கு. 33

– இருவகை,

'இம்மைப் பிறப்பில் பிரியலம்' – கு. 1315

– இப்பிறப்பில் பிரியலம்,

'குறுமை எழுத்தின் இயல்பு ஐகாரம்' - பழைய நூற்பா.

– குற்றெழுத்தின் இயல்பு ஐகாரம்,

'இருபே ராண்மை செய்த பூசல்' - குறுந். 43
- இருபேராண்மையர் செய்த பூசல்,

'மடிமை குடிமைக் கண்' - கு. 608
- குடிமையான்கண்,

'ஆண்மை அடுத்த மகன் என்கிளவி' - சொ. 168
- ஆண் அடுத்த மகன் என் கிளவி [அஃதாவது ஆண்மகன் என நிற்கும்]

'வல்லது அரசு' - கு. 885
'வல்லது அமைச்சு' - கு. 638
'செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்அடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து' - தண்டி. உதாரணம்.

என வருவன எல்லாம் தன்மை உணர்த்தாது, தன்மை உடைப் பொருளையே உணர்த்தலின், பகுதிப் பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்திதப் பிரத்தியயம்.

வடமொழியிலே திரிலோகி என்பதனைத் 'திரைலோக்கியம்' என்பர் கர்ணுமிருத ஆசாரியர். சதுர்வர்ணம் என்பதனைச் 'சாதுர்வர்ணியம்' என்பர்.

இனி,

'குடிமை ஆண்மை' - சொ. 56

என்னும் சூத்திரத்தினும் திருவள்ளுவரினும் - இளம்பூரணர், சேனவரையர், பரிமேலழகர் இவற்றை ஆகுபெயராகிய இலக்கணை என்பர். நச்சினர்க்கினியர் 'குடிமை ஆண்மை' என்பனவற்றைப் பண்பின்மேலும் பண்புடைப் பொருளின்மேலும் நிற்கும் என்பர்.

இனி,

'நாணுடைப் பெண்ணே பெருமை உடைத்து' - கு. 907
'பெண்ணின் பெருந்தக்க(து) இல்' - கு. 1187

என்பனவற்றைப் பரிமேலழகர் ஆகுபெயர் என்பர்.



அருளுடைமை, பொறையுடைமை என்றால், உடையனய் இருத்தல் எனப் பொருள்பட்டுப் பாவதத்திதன் மேல் நின்ற தத்திதன். சாத்தன் உடைமை என்றால் சாத்தனது உடைப் பொருள்மேல் நின்ற பாவதத்திதன்.

வடமொழியினும் கிருபாவிசிட்டத்துவம், தேவதத்த விசிட்டத்துவம் என வரும். பின்னது சுவத்தின்மேல் நின்றது. முன்னது சுவாமி வியாபாரகுணத்தின் மேல் நின்றது.

இனி, தச்சனது தொழில் தச்சு எனவும், கொல்லனது தொழில் கொல் எனவும் கொண்டால் பாவதத்திதனும். தச்சுத் தொழிலை உடையான் தச்சன், கொல்லுத்தொழிலை உடையான் கொல்லன் எனப் பொருள் கொண்டால் சாமானிய தத்திதனும்.

தச்சு வந்தது, கொல்லு வந்தது என வருவன பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தப் பிரத்தியயம். இவ்வுதாரணங்களை நன்னூலார் பதவியலுள் காட்டியதானும் அறிக. இவை எல்லாம் விவட்சாதீனம் என்னும் சொல்லுவான் குறிப்பு எப்படி அப்படி என்க.

பெண்மை ஆண்மைகட்குப் பொருள் கட்புலனாகிய அமைதித் தன்மை, ஆளுந்தன்மை என்பர் நச்சினர்க்கினியர். (சொல். 57) அது பொருந்தும். (6)

மூன்றாவது தத்திதபடலம் முடிந்தது.

விளக்கம்

பெரும்பாலும் பண்புப் பகுதிகளோடு வரும் விகுதி பாவ தத்திதன் எனப்படும். வீரசோழியம், இவ்விகுதிகளின் பட்டியலை 'மை - அம் - பு - து - வு - கம் - வல்-அளவு ஆதி குணக்குறிப்பில் வையம் வலிநெடு ஆதிபின் ஆம்' (வீ. 55) என்று குறிப்பிடும்.

மை – வலிமை; அம் – நீளம்; இதில் நெடு – நீள் எனத் திரிந்தது. பு – ஆலிப்பு; து – வலிது; வு – மெலிவு; கம் – குறுக்கம்; வல் – இளவல்; அளவு – தண்ணளவு; பிறவும் அன்ன; என எடுத்துக்காட்டுக்கள் தரப்பட்டுள்ளன. (வீ. 55 உரை)

வெண்மையுடைமை, தவளபாவம் – தாவளியம் – தவளிமா எனவும், நீல நிறமுடைமை நீலிமா எனவும் பாவதத்திதனும்.

ஆண்மை முதலியன ஆண் முதலிய பெயரடியாகத்தோன்றிய பண்புச் சொற்கள்.

வேந்தன் – அரசன் என்னும் பெயரடியாகப் பிறந்த வேந்து – அரசு என்ற உகர ஈற்றுப் பண்புச்சொற்களைக் காண்க.

ஆண்மை – பெண்மை – வடமொழியில் புங்ஸ்துவம் – ஸ்திரீத்துவம் என வரும்.

பெண் – ஆண் – பொருள் என்ற பெயர்களடியாகச் செய்யுளின்கண்ணும் பெண்மை – ஆண்மை – பொருண்மை என்ற பண்புச்சொற்கள் தோன்றியமை காண்க.

பெயர்ச்சொல்லோடு மை முதலிய விகுதிகள் சேர்ந்து பண்புப்பெயர்கள் அமைவது போலவே, மை முதலிய விகுதிகள் சேர்ந்து அமைந்த பண்புப்பெயர்கள் பண்பினை உணர்த்தாது மை விகுதிக்குத் தனிப்பொருளின்றி, அது பகுதிப்பொருள் விகுதியாகப் பண்புடைய பொருளையே உணர்த்துதலும் உண்டு – என்பதற்குச் 'சொன்மை தெரிதல்' முதலியன எடுத்துக்காட்டு.

வல்லது அரசு என்பது வல்லன் அரசன் எனவும், வல்லது அமைச்சு என்பது வல்லன் அமைச்சன் எனவும் வேந்து கொடுங்கோலன் என்பது வேந்தன் கொடுங்கோலனெனவும், உகர ஈற்றுப் பண்புப்பெயர் பண்புடைப் பொருளை உணர்த்திற்று.



சுவார்த்தம் – பகுதிப்பொருள் விகுதி; அரசர்கள் என்புழி, கள் என்பது தனியே தனக்காக ஒரு பொருள் விளக்காமல் இருத்தலின் அதனைப் பகுதிப் பொருள் விகுதி என்பதுபோல.

திரைலோக்கியம் — மூவுலகும் உடையனுந் தன்மை.

திரிலோகி — மூவுலகும் உடையான்.

சாதுர் வர்ணியம் — நான்கு சாதிகளாந் தன்மை.

சதுர் வர்ணம் — நான்கு சாதிகள்.

குடிமை முதலியன ஆகுபெயராய்க் குடிமையை உடையவன் முதலிய பொருள் உணர்த்தும் என்றும், குடிமை முதலிய சொற்களே பண்பினையும் பண்பை உடைய பொருளையும் உணர்த்தும் என்றும் இருவகைக் கருத்தும் இலக்கண ஆசிரியர்கள் இடையே நிலவுகின்றன.

(நாணுடை) பெண் – பெண்தன்மை; பெண்ணின் பெருந் தக்கது இல் – பெண்மையின் பெருந்தக்கது இல் – பெண் என்பது பெண்மை எனப் பொருட்பண்பைக் குறிக்குமிடத்து ஆகுபெயராகும் என்பது பரிமேலழகர் கருத்து.

அருள் உடைமை – அருள் உடையவனய் இருத்தல்;

பொறை உடைமை – பொறை உடையவனய் இருத்தல்;

உடைமை என்ற பாவதத்திதன் இருத்தல் என்ற தொழிற் பெயரைக் குறித்தலின், அருள்உடைமை முதலியன பாவ தத்திதன் மேல்நின்ற சாமானிய தத்திதனும்.

கிருபா விசிட்டத்துவம் – கருணையின் சிறப்பு; பண்பின் மேல் நின்றது.

தேவதத்த விசிட்டத்துவம் – தேவதத்தனது சிறப்பு ; பொருள் மேல் நின்றது. (சுவம் – செல்வம்)

சாத்தன் உடைமை – சாத்தன் உடைய பொருள் ;

இது பாவதத்திதன் உடைப்பொருள்மேல் நிற்கும் சாமானிய தத்திதனுகப் பொருள்பட்டது.

தச்சன் என்பதனை அடிப்படைச் சொல்லாகக் கொண்டு, தச்சு என்பது தச்சனது தொழில் எனக் கொண்டால், தச்சு என்பது பாவதத்திதாந்தச் சொல்லாம்.

இனி, தச்சு என்பதனை அடிப்படைச் சொல்லாகக் கொண்டு, தச்சன் என்பது தச்சுத் தொழிலை உடையான் எனப் பொருள் கொண்டால், அஃது உடைப்பொருள் மேல் நிற்கும் சாமானிய தத்திதனுகும்.

இக்கருத்தை அடியொற்றியே வீரசோழியம் 54ஆம் காரிகை உரையில் – 'பார்ப்பானல் செயற்படுவது பார்ப்பு ; இவ்வண்ணம் கொல்லு – தச்சு என முடியும். சொற்கள் ஒன்றை ஒன்று காதலித்துக் கிடத்தலால், இவற்றின் நின்றே கொல்லன் – தச்சன் – என முடிந்தது எனினும் அமையும்' என்று விளக்கப்பட்டதும் காண்க.

தச்சு வந்தது – 'தச்சு'த் தச்சனைக் குறித்தவிடத்து, உகர விகுதி தன்பொருள் உணர்த்தாது தச்சனை உணர்த்தலின், தன்பொருள் உணர்த்தும் வாய்ப்பின்றி வந்ததை உட்கொண்டு, இவ்விகுதியைப் பகுதிப்பொருள் விகுதி என்பர். இங்ஙனம் பொருள்கோடல் கொள்ளுவான் குறிப்பிற்கு ஏற்ப அமைவதாகும்.



நன்னூல் 'பெயரினும் சிலவே' (140) என்பதன்கண் இவ் விகுதிகளை அடக்கும். இலக்கணக்கொத்து, இப்பாவ தத்திதச் செய்திகளை,

'பகுபதத் திலக்கணம் பகருங் காலை' – 117

என்ற நூற்பாவில்,

'தன்மை மாத்திரம் தானுய் நின்றும்' – 117

என்று குறிப்பிட்டு,

வெண்மை, வெளுப்பு, வெள்ளை, கருமை, கறுப்பு, ஆண்மை, பெண்மை, ஆடுதல், ஆடல், ஆட்டம் எனத் தன்மை மாத்திரம் தானுய் நின்றன எனவும்,

'பகாப்பதப் பொருள்படப் பகுபதம் ஆகியும்' – 117

என்று குறிப்பிட்டு,

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்'

முதலியன பொருள், சொல் எனப் பகாப்பதமாகவே பொருள்படும் எனவும்,

'பகாப்பதச் சொல்படப் பகுபதம் ஆகியும்' – 117

என்று குறிப்பிட்டு,

'இல்லதென் இல்லவள் மாண்பானல்'

'அப்படைக்கு ஆயிரம் பாய்மா வந்தன'

'களி மடி மானி'

'அவனினும் இவன் குணம்'

கவி வந்தான்,

இறை காக்கும்,

கோ உண்மை கூறுவான்,

ஆயிரம் தச்சுச் செய்த தேர்,

பத்துக் கொல்லுச் செய்த இருப்புலக்கை,

மூவேந்து சொன்ன மொழி, (அரசு, அமைச்சும் அது)

இருவருக்கும் நடு இவன்,

பேதை தொழுதாள் (பெதும்பை முதல் ஆறும் அது)

இவற்றுள் நின்ற பகாப்பதங்களை எல்லாம், மாண்பினள், பாய்மாவுடையார், களியன் மடியன், குணவான், கவிஞன், இறைவன், கோன், தச்சர், கொல்லர், வேந்தர், அரசர், அமைச்சர், நடுவன், பேதையாள் எனப் பகுபதமாகவே பொருள் கொள்வர். இதனைத் தமிழ்நூலார் ஆகுபெயருள் அடக்கி வழங்குவர் என்று பலவாகக் கூறியுள்ளவாற்றை நோக்குக.

நன்னூலார்,

'செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே' – 135

என்ற நூற்பாவில் பண்பின் முதல்நிலைக்கண் வந்துள்ள பாவ தத்திதனைச் சுட்டியுள்ளவாற்றையும் நோக்குக. 6

தத்திதபடல விளக்கம் முடிந்தது.

— ★ —

# நான்காவது திங்ஙுப்படலம்

★

## செய்வினை செயப்பாட்டு வினைப்பகுதி

35. முன்னிலை ஏவல் ஒருமைச்சொல்
போலும் முதல்நிலைகள்
இன்னிலைத்தாது பகுதி என்றும்;
செப்பு இளமுலையாய்!
அந்நிலைத்தாது – சகன்மகத்தோடும்
அகன்மகமாய்,
பின்னிலை வி - பிவரின், காரிதம்
எனப் பேர்பெறுமே.

இது தாதுப்பகுதி கூறுகின்றது. முன்னிலை ஏவல் ஒருமைச் சொல் போலும் நட – வா – மடி என்று நன்னூலில் கூறிய முதனிலைத் தொழிற்பெயர்கள் தாது எனவும் பிரகிருதி எனவும் பெயர் பெறும். அவை சகன்மகத் தாது அகன்மகத் தாது எனவும், நடப்பி – வருவி என விப்பியோடு நின்று காரிதம் எனவும் பெயர் பெறும் என்றவாறு.

காரிதம் எனினும், ணிசந்தம் எனினும் ஒக்கும்.

'விப்பி ணிசந்தம் காரிதம் ஆகும்'

இஃது உரைச் சூத்திரம்.

**'வினையின் தொகுதி'** – சொ. 415

என்னும் சூத்திரத்துள், உண் – தின் – செல் என்னும் முதல்-நிலைகளை வடநூலார் தாது என்பர் என்று சேனாவரையரும் உரைப்பர். 'முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் ஆகும்' என்னது போலும் என்றது, முதனிலை என்னும் தாதுக்களும் வேறே, முன்னிலை ஏவல் ஒருமைச்சொற்களும் வேறே என்பது அறிவித்தற்கு என்க. என்னையோ எனின், நட – வா முதலிய தாதுக்கள் நடத்தல் – வருதல் எனப் பொருள்பட்டு, ஐம்பால் மூன்றிடத்திற்கும் பொதுவான தொழிற்பெயராய் நின்று, பின் காலம் காட்டும் இடைநிலை எழுத்துக்களோடு வரும் விகுதிகளை அடைந்து, நடந்தேன், நடந்தாய், நடந்தான் என வரும். இவ்வாறு காலத் திரயம் காட்டும் இடைநிலைதோய் இறுதியோடும் ஒட்டுக.

இனி, முன்னிலை ஏவல் ஒருமைச்சொல்லாவது நடவாய் – வாராய் என்பன ஆய் என்னும் ஈறு குன்றி, நட – வா என முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் ஆவதன்றி, நட – வா என்பன தாமே முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் ஆகா என்க. அம் முதல்-நிலைகள் எல்லாம் ஏவல் வினையாயின், முன்னிலை விகுதி ஒழியத் தன்மை விகுதியோடும் படர்க்கை விகுதியோடும் கூடி, நடந்தேன் நடந்தான் என வருதல் இடவழுவாதலின் பொருந்தாது என்க. ஏவற்சொல் உதாரணமும், வடநூல் முடிபும், தொல்காப்பியச் சூத்திரமும், 'மற்று, ஏயும்பிரேரணை செய்யாய் எனல் செய்எனக் குன்றுமே' (46) என்பதனுள் விளங்கக் காட்டுதும்.

இனி, அகன்மகத் தாதுச் செயப்படுபொருள் குன்றி நட வா என வரும். சகன்மகத் தாதுச் செயப்படுபொருள் குன்றாது மடி சீ விடு என வரும். இவ்விரண்டும் கேவலத்தாது ஆகையால் 'இன்னிலைத் தாது' என்றும்.

**'செயப்படு பொருள் குன் றுவினை குன்றிய**
**வினைத்திறம் இரண்டும் சகன்மகம் அகன்மகம்'**

இஃது உரைச் சூத்திரம்.



**'வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்'** – சொ. 118

என்னும் சூத்திரத்துள் இவ்வாறு சேனாவரையரும் உரைப்பர்.

ணிச்அந்தமாவது ஏவுவான் வினையும் இயற்றுவான் வினையும் உடனே தோன்றும் ஏவற் கருத்தா வினை.

**'ஆற்றின் ஒழுக்கி'** – கு. 48

**'கேளிர்ப் பிரிப்பர்'** – கு. 187

**'தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றி'** – சி. பாயிரம்

ஊட்டு – தீற்று – ஆட்டு – காட்டு – தேற்று என வி – பி இன்றித் திரிந்தும், ஒற்றுப் பெற்றும் வரும் சகச ணிச்அந்தம்.

**'தேற்ரு ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்'** – நாலடி 75

**'நட்பாடல் தேற்ரு தவர்'** – கு. 188

என்புழித் தேரு ஒழுக்கம் – தேருதவர் எனப் பொருள்படுமால் எனின், இதனைப் பகுதிப்பொருள் விகுதி என்னும் சுவார்த்தத்தில் வந்த காரிதம் என்ப.

**'தெளித்தசொல் தேறியார்'** – கு. 1154

– தெளிவித்த சொல் தேறியார்,

அரசன் எடுத்த ஆலயம் – அரசன் எடுப்பித்த ஆலயம்,

இந்த வயல் உழுத அந்தணன் – இந்த வயல் உழுவித்த அந்தணன்,

**'காடுகொன்று நாடாக்கிக் குளம் தொட்டு'** – பட்டின. 283-4

– காடு கொல்வித்து நாடு ஆக்குவித்துக் குளம் தொடுவித்து எனவும்,

**'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'** – கு. 1032

– உழுவிப்பார் எனவும், அநுபபத்தி தோன்றிய இடத்து இவ்வாறு பொருள்படுவதனை அந்தர்ப்பாவித ணிச் என்பர்.

'உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே' - தொ. எ. 76

என்பதற்குக் காட்டிய தபு என்பதும் அது.

நட, வா முதலிய முதல்நிலைத்தாதுக்கள் முன்னிலை ஏவல் வினையாங்கால் எடுத்து உச்சரிக்க; முதல்நிலைத் தொழிற்பெயர் ஆங்கால் படுத்து உச்சரிக்க.

'இன்னிலை' என்றதனால், முதல்நிலைவினை முன்னிலைஏவல் வினை மாத்திரையாய் நில்லாது வினையெச்சப் பொருட்டாயும், பெயரெச்சப் பொருட்டாயும், புடைபரந்து வினைதன்னைச் சொல்லும் பெயர்ப்பொருட்டாயும், முற்றுச்சொல்லாய் நின்ற இடத்து அம்முதல்நிலை பிரிந்துநின்று வினைதன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாயும் நிற்கும்.

உ-ம்:

'வரிப்புனை பந்து' - முருகு. 68

- வரிந்து புனை பந்து,

'அறுவேறு வகையின்' - முருகு. 58

- அற்று வேறு வகையின்,

'பாலறி வந்த' - சொ. 162

- பால் அறிய வந்த,

சாக்குத்தினன் - சாவக்குத்தினன் என்றும்,

'பொருதகர்' - கு. 486

- பொருத தகர், அடுபுலி - அட்டபுலி,

'சொற்பால் அமுதுஇவள்' - கோவை. 8

- சொல்லும் பகுதியில் அமுது இவள் என்றும்,

'அறிகொன்று அறியான்' - கு. 638

- அறிதலைக் கொன்று,



'கெடுவாக வையாது உலகம்' கு. 117

- கெடுதலாகவையாது என்றும், பொருள்படுதல் காண்க.

'தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்' - கு. 508

என்புழித் தெளிந்தான் என்னும் முற்றுவினைப்பெயரின்கண் நின்ற முதல்நிலை தெளிதலாய் எழுவாய் ஆனது காண்க.

இன்னும், முதல்நிலைத்தாது முற்றாய் முடிவனவும் உள.

உ-ம்:

'உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்' - கு. 813

என்னும் திருவள்ளுவருள் நேர் - நேர்வர் எனவும்,

'ஏயே நிகர்அவற் றுள்ளே'

என்னும் சூத்திரத்துள் நிகர் - நிகர்க்கும் எனவும் பொருள்பட்டு நிற்கும்.

இன்னும்,

'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு' - கு. 352

என்புழிக் காட்சியவர் என்னும் சாமானியதத்திதனில் காட்சி என்னும் பதம் பிரிந்து எழுவாயாய் நிற்பதும் கொள்க. இவ்வாறு வருதல் வைதிகப் பிரகிரியை.

இன்னும் வடமொழியார் சுப்புத் தாது என்னும், பெயர் அடியாகப் பிறக்கும் வினைகளும் உள.

உ-ம்:

'நாவலொடு பெயரிய பொலம்' - முருகு. 18

'ஐனப் பெயரிய வேற்றுமை' - தொ. சொ. 71

'அழகிய சொக்கர்'

'பேதைக்கு அமர்த்தன கண்' - கு. 1084
'பைத்த பாம்பணையான்' - திவ். பிர. 2928
'மைத்த கூந்தல்'
'கொடுப்பது அழுக்கறுப்பான்' - கு. 166
'நல்கூர்ந்தார்' - கு. 1046
'முதலா ஏன தம்பெயர் முதலும்' - தொ. எ. 66
'அவ்வித்து அழுக்காறு உடையானை' - கு. 167
'கடுத்தது காட்டும் முகம்' - கு. 706
'ஞகாரை ஒற்றிய' - தொ. எ. 296
'கரும்பை ஒத்தாள்' - சீவக. 191

எனப் பலவகைப் பெயர் அடியானும் பிறந்தவினை வருதல் காண்க.

கடங்கரோதி – கடயதி – துலயதி என வடமொழியினும் வரும்.

'பெயர் அடியாகப் பிறந்த வினையினைச்
சுப்புத் தாதுஎனச் செப்புவர் புலவர்
நாம தாது என நவில்வதும் அதுவே'

இஃது உரைச் சூத்திரம். (1)

## விளக்கம்

வினை விகுதி பற்றிப் பெரும்பாலும் குறிப்பிடும் இப்படலம், மிகுதி பற்றிய குறியாய்த் திங்நுப்படலம் எனப் பெயர் பெற்றது. திங் – வினை விகுதி.

பெயர்ப்பகுதி பிராதிபதிகம் எனப்படுவது போலவே, தெரிநிலை வினைப்பகுதி தாது என்று கூறப்படுகிறது. வினைப் பகுதியைத் தொல்காப்பியனர் 'ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர்' (எ. 296) என்றாற்போல முதனிலைத் தொழிற்பெயர் என்னும் கருத்தினர். சேனாவரையர் 'இவற்றை வடநூலார் தாது என்பர்'



என்ற செய்தியையும் குறிப்பிட்டுள்ளார். (சொ. 415) செயப்படு பொருள் குன்றாத வினைப்பகுதி, செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதி எனவும் பிறவினைப் பகுதி எனவும் தாது பகுக்கப் படும்.

காரிதம் – பிறவினை, ணிச் – பிறவினை விகுதியாகிய பி. வி என்பன.

தாதுக்கள் எழுத்தொற்றுமையால் ஏவல் ஒருமை வினைகள் போன்று இருப்பினும் அவற்றின் வேறுபட்டவையாம். நட என்ற பகுதியடியாக முக்காலமும் காட்டும் இருதிணை ஐம்பால் மூவிட வினைமுற்றுக்களும் தோன்றும்.

நட என்ற ஏவல்முற்று நடவாய் என்பதன்கண் ஆய் என்னும் விகுதி குன்றி நட என நின்று ஏவல் வினையாகுமன்றிப் பகுதி யாகிய நட என்பது தானே ஏவல் முற்றாகாது. பகுதிகள் எல்லாம் ஏவல் முற்றாயின் அவை ஏவலுக்குரிய முன்னிலையோடு தவிர ஏனைய தன்மை படர்க்கைகளோடு வருதல் இடவழுவாகும். இதனைப் பற்றிய செய்திகள்,

'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்என் கிளவி ஆகிடன் உடைத்தே' – தொ. சொ. 450

என்ற நூற்பாவிற்குச் சேனாவரையர் உரைத்த உரையானும் விளக்கமுறும். இ. கொ. 66-உரையையும் நோக்குக.

செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதி – நட, வா முதலியன.

செயப்படுபொருள் குன்றாத வினைப்பகுதி – சீ, விடு முதலியன.

அவன் மடிந்தான் எனச் செயப்படுபொருள் குன்றியும், அவன் துணியை மடித்தான் எனச் செயப்படுபொருள் குன்றாதும் ஒரே வினைப்பகுதி பகுபதமாக முடியும்போது இருவகையாக

வேறுபட்டு வருதலும் உண்டு. பிரிந்தான், பிரித்தான் முதலியனவும் அன்ன. அவன் நிறம் வெளுத்தான், அவன் துணியை வெளுத்தான் என்பது மெல்லொற்று வல்லொற்றாகாமல் இருநிலையும் பெற்றது.

கேவலத்தாது – தன்வினைப்பகுதி; காரிதத்தாது – பிறவினைப் பகுதி.

தொழில் தோன்றுவதற்குக் காரணம் – வினை, எழுவாய், செயப்படுபொருள், நிலன், காலம், கருவி, இன்னதற்கு, இதுபயன் என்ற எட்டும் - என்பதனை முதல் நூற்பாவில் கூறி (சொல். 112) 'வழங்கியல் மருங்கின்' (சொ. 113) என்ற நூற்பாவில் ஒவ்வொரு வினையும் இவ்வெட்டினையும் கோடல் வேண்டா; செயப்படு பொருளும், கருவியும், இன்னதற்கு இதுபயன் என்பனவும் குன்றி வருதலும் உண்டு என்று சேனாவரையர் குறிப்பிடுவார்.

ணிச் அந்தம் – பிறவினைவிகுதி பெற்ற வினை.

வருவித்தான் என்ற சொல்லில் வருவித்தலாகிய ஏவுவான் தொழிலும் வருதலாகிய இயற்றுவான் தொழிலும் உடன் அமைந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒழுகி | – தன்வினை; | ஒழுக்கி | – பிறவினை | – | ஒற்றுமிக்கது. |
| பிரிவர் | – தன்வினை; | பிரிப்பர் | – பிறவினை | – | ஒற்றுமிக்கது. |
| தோன்றி | – தன்வினை; | தோற்றி | – பிறவினை | – | ஒற்றுவலித்தது. |
| உண் | – தன்வினை; | ஊட்டு | – பிறவினை | – | திரிந்தது. |
| தின் | – தன்வினை; | தீற்று | – பிறவினை | – | திரிந்தது. |
| ஆடு | – தன்வினை; | ஆட்டு | – பிறவினை | – | ஒற்றுமிக்கது. |
| கூடு | – தன்வினை; | கூட்டு | – பிறவினை | – | ஒற்றுமிக்கது. |
| தேறு | – தன்வினை; | தேற்று | – பிறவினை | – | ஒற்றுமிக்கது. |

தேற்ற ஒழுக்கம் – தேற்ற என்ற பிறவினை தேற என்ற தன்வினைப் பொருளில் வந்தது. பொருளின்றி வந்த இப்பிறவினை



வேறுபாட்டை, 'சான்றோர்கள்' என்ற சொல்லில் வந்துள்ள கள் ஆகிய பகுதிப்பொருள்விகுதிபோலத் தனக்கெனச் சிறப்பான பொருள் அற்றதாக வருவது எனவே கொள்க. தேற்றுதவர் தேறுதவர் என்ற பொருளில் வந்ததும் அது. இவை தன்வினைப் பொருளில் வந்த பிறவினைகளாம்.

தெளித்த சொல் – தெளிவித்த சொல்; இது முதலான சொற்கள் பிறவினை விகுதி மறைந்து வந்தன. பிறவினைவிகுதி மறைந்து வந்தமை அந்தர்பாவித ணிச் ஆகும். அநுபபத்தி – பொருத்த மின்மை.

தபு என்ற சொல் தன்வினையாகவும், தபுவி என்ற பிறவினைப் பொருளதாகவும் வரும். பிறவினைப்பொருளில் அப்பொருள் தரும் விகுதி மறைந்து நிற்கும்.

நட என்பது ஏவல் வினையாயின் எடுத்து உச்சரிக்கப்படும்; முதல்நிலைத் தொழிற்பெயராக நிற்குமிடத்தே, பெயராதலின் படுத்து ஒலிக்கப்படும்.

வரிப்புனைபந்து......சாக்குத்தினன் - வினைஎச்சப் பொருட்டு.

பொருதகர்......சொற்பால் – பெயரெச்சப் பொருட்டு.

அறி கொன்று, கெடுவாகவையாது – தொழிற்பெயர்ப் பொருட்டு. தெளிந்தானது தெளிவு இடும்பை தரும் என்று பொருள் செய்க.

மாசறு காட்சியவர்க்கு அக்காட்சி இன்பம் பயக்கும் – என அக்காட்சி என்பதனைத் தோன்றா எழுவாயாகக் கொண்டு அமைப்பது செய்யுள் முடிபு.

பெயரிய – பெயர்; அழகிய – அழகு; அமர்த்தன – அமர்; பைத்த – பை; மைத்த – மை; அழுக்கறுப்பான் – அழுக்காறு; நல்கூர்ந்தான் – நல்குரவு; முதலும் – முதல்; அவ்வித்து –

அவ்வியம்; கடுத்தது – கடி; ஒற்றிய - ஒற்று; ஒத்தாள் – ஒப்பு எனப் பலவகைப் பெயர்களையும் பகுதியாகக் கொண்டு வினைகள் தோன்றின. பெயர் அடியாகப் பிறந்த வினைப்பகுதியை வடநூலார் சுப் என்பர். இ. கொ. 68 உரையை நோக்குக.

கடங்கரோதி – குடத்தை வனைகிறான்.

கடயதி – குடத்தை வனைகிறான் } செய்தல்வினை ஒழியப் பெயரடியாகவே வினை பிறந்தவாறு.
துலயதி – நிறுக்கிறான் }

வீரசோழிய நூலார் தாதுக்கள் பற்றி,

'மன்னிய சீர்வட நூலில் சரபச என்றுவந்து
துன்னிய தாதுக்க ளின்போலி போலத் தொகுதமிழ்க்கும்
பன்னி தாதுக் களைப்படைத் துக்கொள்க; முன்னிலையின்
உன்னிய ஏவல் ஒருமைச்சொற் போன்றுல கிற்கொக்கவே'
– வீ. 60

என்று காரிகை யாத்துள்ளார். அதன் உரைப்பகுதி வருமாறு:

"வடமொழியில் சர – பச என்ற தாதுக்கள் போலத் தமிழில் நட – அடு என்ற தாதுக்கள் வரும். ஏனைய பல தாதுக்களும் அன்ன. அவை முன்னிலை ஏவல் ஒருமைப் பொருட் போலி போன்றன. அவை ஏவல் வினையாதற்கு உரிய ஆய் விகுதி புணர்ந்து கெட்டது என்க. விகுதி புணராக்காலும் அப்பொருள் தரின் விகுதி புணர்ந்ததனல் பயன் என்னை எனின், அது வடநூல் விதி என்க. அவை முதல்நிலையாகி மற்ற இருதிணை ஐம்பால் மூவிட வினைகளை ஆக்குதலின் அவை ஏவல் வினையாங்கால் விகுதி புணர்ந்து கெட்டது எனல் வேண்டும் என்க. தமிழ்ச்சொல்லிற்கெல்லாம் வட நூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழும் பெறும். அப்படித் தோற்றுவித்துக் கொள்ளும் தாதுக்களும் மூவகைப்படும். நட – வா – மடி முதலிய தமிழ்த் தாதுக்களும், சிந்தி – வந்தி முதலிய வடமொழித் தாதுக்களும், கொடி – செப்பு – சிக்கு முதலிய திசைச்சொல் தாதுக்களும் ஆம். கருமத்தை நீங்காத தாது, கருமத்தை நீங்கிய தாது எனத் தாது இருவகையாம். ஆடினன் – கேவலத் தாது; ஆட்டினன் – காரிதத் தாது. ஆட்டு வித்தான் – காரிதகாரிதத்தாது." (வீ. 60, 61, 65, உரை)



இக்காரிகை உரைச்செய்திகள் பலவற்றையும் 66, 68-ஆம் நூற்பாக்களின் உரையில் இலக்கணக்கொத்து விரிவாகக் கூறுவது காண்க. 1

## பரப்பைபதமும் ஆற்பநேபதமும்

36. பன்னிய போதுஅறி லாதேசம்
என்னும் பரப்பைபதம்
இன்னிய கர்த்தரி நீங்கா
திங்ஙந்த வினைமுற்றிலே;
முன்னிய கர்த்தரி கர்மணி
பாவம் இம்மூன்றிடத்தும்
மன்னிய தங் – எனச் சொல்
ஆற்பநேபதம் வந்து எய்துமே.

இது பரப்பைபதமும் ஆற்பநேபதமும் கூறுகின்றது. காலம் உணர்த்திய வாதேசம் என்னும் பரப்பைபத வினைமுற்றுச் சொற்கள் கருத்தாவில் அல்லது வாரா; வாதேசம் என்றும் தங் என்றும் கூறப்படும் ஆற்பநேபதம் தனியே கருத்தாவினும் யக் என்னும் செயப்பாட்டு வினையோடு கருமத்தினும் பாவத்தினும் வரும் என்றவாறு. என்னை 'முன்னைச் செயப்பாட்டுவினை பாவகர்மணி மொய்த்த யக்கே' (45) என வருதலின் என்க.

திங்–அந்த வினைமுற்று இருபெயரொட்டாய்த் தாப்பிசை என்னும் பாசபந்தம் போல நின்றது.

போது – காலம்; வாதேசம் என்பதனை ஆற்பநே பதத்தோடும் கூட்டுக.

திங் – எனவும் தங் எனவும் ஙவ்வொற்று ஈறாய் வடமொழி வினைமுற்றுச் சொற்கு வரும் பெயரைத் தற்சம தற்பவமாகத் தமிழ்மொழி வினைமுற்றிற்கும் யாம் கூறியது ஈண்டு மிகுதியும் பயனாயிற்று என்க. பயன் என்னை எனின், ஙவ்வொற்றும் ஙகர அகரமும் பயன்படுதலன்றி மற்றைப் பதினோரெழுத்தும் தமிழ் மொழியின் நின்று பயன் இன்மை என்னும் குற்றம் தங்க வரும் என்று விளங்கக்கூறாது மொழிக்கு முதலெழுத்துக் கூறுவார்போல்,

‘சுட்டு-யா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே’ - 106

எனச் சூத்திரம் செய்து நன்னூலார் காட்டிய உதாரணத்தால் ங – வரியில் பதினோரெழுத்தும் பயன்படாமை ஒக்கும். மொழி முதல் இடையின் நின்று பயன்படா எழுத்துக்களெல்லாம் ஈற்றிலே ஒற்றாய் நின்று உயிர் முதலிய சொல்லோடு புணர்ந்து பயன்படும். அவ்வாறு ஙவ்வொற்றுத் திங்ஙெனவும் தங்ஙெனவும் ஈறாய் நின்று, உயிர் முதல் மொழியோடு புணர்ந்து பயன்பட வ்ருதலின் என்க.

சடகோபர்,

‘பற்பநாபன் உயர்வற உயரும் பெருந்திறலோன்
எற்பரன்’ – *திவ். பிர.* 2861

என்றார் ஆதலின், பரஸ்மைபதம் ஆத்மநேபதம் என்னாது மகரத்தைப் பகரம் ஆக்கி, பரப்பைபதம் ஆற்பநேபதம் என்றாம். அவை பிறனுக்குப்பதம், தனக்குப்பதம் என அலுக்காய் நின்றன.

‘அந்நிய கர்மணிக் கிரியா பலத்தைப்
பயப்பது பரப்பை பதம்என மொழிப’

‘கர்த்திரு கர்மணிக் கிரியா பலத்தைப்
பயப்பது ஆற்பநே பதம்என மொழிப’

‘தனக்குப் பிறர்க்குஎனத் தான்வரும் நியமம்
ஏகபதிக்கு இன்மையின் இடுகுறி என்ப’



‘ஞித்துச் சுவரிதேத்து என்னும் இரண்டினும்
உபய பதிக்கும் ஒரோவழி நியமம்
மயங்கலின் காரணக் குறிஎனல் வழுவே’

‘குற்றெழுத்து இறுதி குற்றெழுத்து ஈற்றயல்
பரப்பை பதம்எனப் பகர்ந்தனர் புலவர்’

‘நெட்டெழுத்து இறுதி நெட்டெழுத்து ஈற்றயல்
ஆற்பநே பதம்ஏன்று அறைந்தனர் புலவர்’

‘செயப்பாட்டு வினையொடு சேரில் ஈரிறுதியும்
ஆற்பநே பதம்என்று அறைந்தனர் புலவர்’

‘தனித்தனி வருவது ஏக பதியே’

‘ஒருமுதல் நிலையில் ஈர்ஈற்று அயலும்
வரின்அஃது உபய பதிஎன மொழிப’

இவை உரைச் சூத்திரம்.

என்னையோ எனின், புலவிநுணுக்கத்துள்,

‘யாரினும் காதலம் என்றேனா’ – கு. 1314

‘இம்மைப் பிறப்பில் பிரியலெம் என்றேனா’ – கு. 1315

‘அஞ்சுதும் வேபாக்(கு) அறிந்து’ – கு. 1128

என்புழி அம் ஈறும் எம் ஈறும் தும் ஈறும் ஈண்டு ஈறு வேறு-படுதலே அன்றி உளப்பாட்டுத்தன்மை ஆகாமை போலவும்,

‘சூடினீர்’ – கு. 1313

‘என் மறந்தீர்’ – கு. 1316

‘தும்மினீர்’ – கு. 1317

என்பனவும் ஈண்டு ஈறு வேறுபடுதலே அன்றி ஏகசேடம் என்னும் படர்க்கை கூடிய முன்னிலை ஆகாமை போலவும், ஆற்பநேபதம் – பரப்பைபதம் என்பன தனக்கு – பிறர்க்கு எனப் பொருள் படாது ஈறு வேறுபடுதலே கொள்க.

இனித் தொல்காப்பியரும்,

'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' - சொ. 5

'ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்' - சொ. 6

'ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலர்அறி சொல்லே' - சொ. 7

எனக் கூறி, பின்னும் கூறவேண்டிய இடத்து அவ்வாறு கூருது, அன் ஆன் அள் ஆள் அர் ஆர் (சொல். 205, 6) என வேறுபடுத்து, வடநூலார் ஆற்பநேபதம் பரப்பைபதம் இரண்டினுக்கும் ஈறு வேறு கூறினுற்போல, தமிழ் மொழிக்கும் கூறினுர் என்க.

உ-ம் :

சமைக்கின்றனன், சமைக்கின்ருன், சமைப்பன், சமைப்பான், சமைக்கின்றிலன், சமையான் – இவை உபயபதி. இவ்வாறு பால் இடங்கள் தோறும் ஏற்றவழிக் கண்டு கொள்க.

உண்கிருன், உண்மார், உண்டனை, உண்டாம் – இவை ஆற்பநே பதத்தில் ஏகபதி.

சொல்லும், வரும், உண்கு, உண்டு, வருது, சேறு, உண்கும், உண்டும், வருதும், சேறும், உண்பல், உண்ப, வருதி, வம்மின், வந்தது, போயிற்று–இவை பரப்பைபதத்தில் ஏகபதி. இவற்றேடு ஏற்ற கருத்தாவைக் கூட்டிக் கர்த்தரிப் பிரயோகம் என்க.

சாத்தன் ஆடையைத் தரும் – இது சகன்மகர்த்தரிப் பிரயோகம். சர்த்தன் வரும் – இது அகன்மகர்த்தரிப்பிரயோகம். இனி, சாத்தனல் ஆடை தரப்படும் – சாத்தனல் வரப்படும் – என அவ்விருவகைக் கருத்தாவும் மூன்றன் உருபோடு கூடிச் செயப்பாட்டு வினையொடு முடிந்தால், முறையே கர்மணிப்பிரயோகமும் பாவப்பிரயோகமும் ஆம் என்க. இவ்வாறு தலைதடுமாறி நின்று பெயர் வேறுபட்டாலும் இவ்விரண்டும் கர்த்தரிப் பிரயோகத்தின் பொருளேபடும் என்க.



'அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்' – கு. 298

'மனத்தான் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தான் இகழப் படுவர்' - நாலடி 180

எனச் செய்யுட்கண் கர்மணிப் பிரயோகம் வந்தது.

'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்' – கு. 698

இது செய்யுட்கண் வந்த பாவப்பிரயோகம். என்னை ? ஒளியோடு ஒழுகப்படும் என்பது ஒளியால் ஒழுகுதல் செயப்படும் என விரிந்து, 'ஊசியொடு குயின்ற தூசு' என்றற்போல ஒடு என்னும் மூன்றன் உருபு உடன் நிகழ்ச்சி ஆகாது ஆன் பொருட்டாய், ஒழுகப்படும் என்பதன்கண்ணே திங்பாவமான ஒழுகு என்னும் முதல்நிலை பிரிந்து கிருத்பாவமாய் ஒழுகுதல் எனத் தல் ஈறு பெற்று எழுவாயாய், படும் என்பதன்கண் செய் என்னும் முதல் நிலையோடு அகரம் பெற்றுச் செய்ய என நின்ற அகன்மகச் செயப்பாட்டு ஒருமை முற்ருய் நிற்பது எனக் கொள்க. ஒளியோடு ஒழுகப்படும் என்றலும் ஒளியால் ஒழுகப்படும் என்றே பொருள் படும். இவ்வாறு பரிமேலழகர் உரையானும் காண்க.

'வஞ்சரை அஞ்சப்படும்' - 824

என்னும் குறளினும்,

'கொள்ளப்படாது மறப்பது அறிவுஇல் என் கூற்றுக்களே'
– கோவை 87

என்னும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் முதல்நிலையைப் பிரித்து எழுவாயாக்கி முடித்தலும் காண்க.

சமைக்கின்றனன் என அன் ஈருய் உரைத்தால் பிறர்க்கு எனவும், சமைக்கிருன் என ஆன் ஈருய் உரைத்தால் தனக்கு எனவும் பொருள்படும் என்பர். அவ்வாறு வாராது மயங்கியே பெரும்பான்மையும் வரும் என்பது பின்னர் வடமொழியால் காட்டுதும்.

தேவதத்தன் உண்டவன் எனக்கிருத்தோடும், தேவதத்தன் கச்சினன் எனத் தத்திதனோடும், தேவதத்தன் யாவன் எனப் பிரச்சின பதத்தோடும், தேவதத்தன் அவன் எனத் தற்சத்தத் தோடும், தேவதத்தன் உண்டு எனச் சற்பாவபதத்தோடும் வந்து, விச்சிராந்தி என்னும் முடிவு பெற்றுக் கர்த்தரிப்பிரயோகமாம் என்க. (2)

## விளக்கம்

லாதேசம் – ஆற்பநேபத பரப்மைபத வினைச்சொற்கு வரும் காலம்காட்டும் இடைநிலை போன்ற உருபுகள். தங் என்பதும் அது.

யக் – செயப்பாட்டு வினை; நயக் – செய்வினை.

திஙந்தம், வினைமுற்று என்பன ஒருபொருளன, திஙந்தவினை முற்று என்பது இருபெயரொட்டு, இரண்டு சொற்களும் கயிற்றினல் இணைத்தாற்போல இணைந்து நின்றன.

லாதேசம் என்னும் பரப்மைபதம், லாதேசம் என்னும் ஆற்பநேபதம் எனக்கூட்டிப் பொருள் செய்யப்பட்டது.

ஙகரவரியில் ஙகர அகரமும் ஙகர ஒற்றுமே பயன்படுவன. ஏனைய பயன்படுவதில்லை. திங் என்பதனை நிலைமொழியாக நிறுத்தி வருமொழியாக உயிர்முதல் மொழிகளைப் புணர்க்கு மிடத்து, ஙகர வரியிலுள்ள ஏனைய எழுத்துக்களும், திங் + ஆல்– திங்ஙால், திங் + இன் — திங்ஙின், திங் + உடைய – திங்ஙுடைய, திங் + என்பது – திங்ஙென்பது, திங் + ஓடு – திங்ஙோடு முதலாகப் பயன்படுதலுக்கு வாய்ப்பு ஏற்படுதலின், திங் என்ற வடமொழிப் பெயரைத் தமிழிலும் கொண்டது, தமிழுக்கும் பயன்படுவதாயிற்று.

பத்மநாபன் – பற்பநாபன் என்றாயினவாறுபோல, ஆத்மநே பதம் – ஆற்பநேபதமாயிற்று.



ஆற்பநேபதம் – தனக்குச்சொல், பரப்மைபதம் – பிறனுக்குச் சொல் என உருபு விரிந்து நின்றன.

பிறனுக்குப் பயன்படுமாறு நிகழ்த்தப்படும் செயலைக் குறிப்பது பரப்மைபதம். செயற்படும் எழுவாய்க்கே பயன் படுமாறு நிகழ்த்தப்படும் செயலைக் குறிப்பது ஆற்பநேபதம். தனக்கு என்றும் பிறர்க்கு என்றும் பொருள்படும் வரையறை ஏகபதிச் சொற்களுக்கு இல்லை. ஏகபதி என்பதனை இடுகுறிப் பெயராகவே கொள்க; ஏனெனின் ஏகபதிக்குக் கூறிய வரையறை ஒரோவழி உபயபதிக்கும் நிகழும்.

குற்றெழுத்தை இறுதியாகவும் ஈற்றயலாகவும் கொள்ளும் வினைமுற்று முதலியன பரப்மைபதமாம்.

நெட்டெழுத்தை இறுதியாகவும் ஈற்றயலாகவும் கொள்ளும் வினைமுற்று முதலியன ஆற்பநேபதமாம்.

இந்நியமம் செய்வினைக்கே கொள்க. செயப்பாட்டுவினையில் வரும்போது ஆற்பநேபதம் குற்றெழுத்து, நெட்டெழுத்து இரண்டனையும் ஈற்றெழுத்தாகவோ, ஈற்றயல் எழுத்தாகவோ கொண்டு வரலாம்.

குறில் நெடில் என்ற இரண்டனுள் ஒன்றனையே ஈற்றெழுத்-தாகவோ, ஈற்றயலெழுத்தாகவோ கொண்டு வருவது ஏகபதி. ஒரேபகுதிக்குக் குறில் நெடில் என்ற இரண்டும் ஈறாகவோ ஈற்றயலாகவோ வருதல் நிகழில், அப்பதம் உபயபதியாகும்.

இச்செய்திகள் எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக முறையே விளக்கப்பட்டுள்ளன.

ஆற்பநேபதம், தனக்கு எனவும் பரப்மைபதம் பிறனுக்கு எனவும் பொருள் வேறுபாடு தருவதற்காக ஈறு வேறு பட்டன என்பது வடமொழிக்கு உரிய செய்தி. தமிழில்,

காதலம், பிரியலெம், அஞ்சுதும் - என்பன தன்மைப் பன்மை வினைமுற்றுச் சொற்கள். இவற்றிற்கு யானும் நீயும் என்பனவோ, யானும் நீயும் அவனும் என்பனவோ திரிந்து ஒரு சொல்லாக எஞ்சி நிற்கும் யாம் என்பதே எழுவாயாதல் வேண்டும். ஆனால் யான் என்பதே உபசாரவழக்கால் யாம் எனத் திரிந்து ஒருமைப் பொருளதாய் இப்பன்மை வினைகளைக் கொண்டு முடிந்துள்ளது. காதலன், பிரியலென், அஞ்சுவல் என்ற ஈறுகளுக்கும், காதலம், பிரியலெம், அஞ்சுவம் என்ற ஈறுகளுக்கும் சொல்லில் வேறுபாடே யன்றிப் பொருளில் வேறுபாடு இல்லை. அதுபோல, ஆற்பநேபதம் பரப்பைபதம் என்பனவற்றிற்கும் தமிழில் சொல் வேறுபாடன்றிப் பொருள் வேறுபாடு இல்லை என்க. தொல்காப்பியனார் னஃகான் - ளஃகாள் - ரஃகான் என்பன-வற்றை ஆன் - ஆள் - ஆர் என்ற ஆற்பநேபதங்களாகவும், அன் - அள் - அர் என்ற பரப்பைபதங்களாகவும் பின்னர் எடுத்துக்கூறிப் பொருள் வேறுபாடு எதுவும் காட்டாமையும் கண்டு கொள்க.

சமைக்கின்றான், சமைக்கின்றனன் - சமை என்ற ஒரே பகுதியில் ஆற்பநேபதமும் பரப்பைபதமும் அமைக்கப்படுவதால் இஃது இரு நிலையும் கொண்ட சொல்லாதல் காண்க.

உண்கிறான், உண்மார், உண்டனை, உண்டாம் - இவை ஆற்பநேபதமாகிய ஒரேநிலை பெற்றவை.

சொல்லும்.........போயிற்று - இவை பரப்பை பதமாகிய ஒரே நிலை பெற்றன.

இவற்றிற்கு அவன் முதலிய எழுவாய்களைக் கூட்டி, அவன் உண்கிறான் அவன் சொல்லும் என்றாற்போல எழுவாயோடு வினைமுற்று முடியும் வாக்கியங்களை அமைத்துக் காண்க.

சாத்தன் ஆடையைத் தரும் - எழுவாய் செயப்படுபொருள் குன்றாத வினை கொண்டு முடிந்தது.



சாத்தன் வரும் - எழுவாய் செயப்படுபொருள் குன்றியவினை கொண்டு முடிந்தது.

சாத்தன் ஆடையைத்தரும், சாத்தன்வரும் என்ற செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றினால், எழுவாயானது மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்கவே, சாத்தனால் ஆடை தரப்படும், சாத்தனால் வரப்படும் என அவ்வாக்கியங்கள் அமையும்.

அங்கிலையில் ஆடை என்ற செயப்படுபொருள் தரப்படும் என்ற வினைக்கு எழுவாயாகும். வருதல் என்ற தொழிற்பெயர் படும் என்ற வினைக்கு எழுவாயாகும். செய்வினையைச் செயப்பாட்டு வினையாக் மாற்றினாலும், சாத்தன் என்ற எழுவாயின் செயலே போந்த பொருளாக' அமைதல் காண்க.

அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் - அகந்தூய்மை என்ற செயப்படுபொருள் செயப்பாட்டு வினைக்கண் எழுவா-யாயிற்று. இனத்தால் இகழப்படுவர் - இனத்தால் மறுவிலர் இகழப்படுவர் - என மறுவிலர் என்ற தோன்றாச் செயப்படு-பொருள் செயப்பாட்டு வினைக்கண் எழுவாயாயிற்று.

ஒளியோடு ஒழுகப்படும் - ஒளியான் ஒழுகுதல் செய்யப் படும். ஈண்டு ஓடு என்ற மூன்றன் உருபு ஆன் என்பதன் பொருட்டாய்க் காரணமாயிற்று, ஒழுகப்படும் என்பதன்கண் ஒழுகு என்னும் பகுதி பிரிந்து ஒழுகுதல் எனத் தொழிற்பெயர் விகுதிபெற்று எழுவாயாய் வந்தது; படும் என்பது செய்யப்படும் என்னும் பொருளதாதலின், செய்ய என நின்ற செயப்படு பொருள் குன்றிய வினையாகும் செயப்பாட்டுவினை வினைமுற்றாய் ஒருமைப்பொருளில் நின்றது. செயப்பாட்டு வினைக்கண் செயப்படு பொருள் எழுவாயாதலின் அதற்குச் செயப்படுபொருள் இன்று என்பது. பரிமேலழகர் ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்' என்று பொருள் கூறினர்.

" 'வஞ்சரை அஞ்சப்படும் – வஞ்சரை அஞ்சுதல் வேண்டும்' எனப் பரிமேலழகரும்,

" 'கொள்ளப்படாது மறப்பது அறிவில்என் கூற்றுக்களே' அறிவில்லாதேன் சொல்லிய சொற்களை உள்ளத்துக் கொள்ளத் தகாது; கொள்ளப்படாது என்பது வினைமுதல் மேலும் செயப்படு பொருள் மேலுமன்றி வினைமேல் நின்ற முற்றுச்சொல்; 'அகத்தினு, வஞ்சரை அஞ்சப்படும்' என்பதுபோல" எனப் பேராசிரியரும், அஞ்சுதல் வேண்டும் – கொள்ளுதல் தகாது என முதல்நிலைகளைப் பிரித்துத் தொழிற்பெயராகிய எழுவாயாக்கி முடித்துள்ளனர்.

எழுவாயானது வினையாலணையும் பெயரையும் விகுதிபெற்ற பெயரையும் வினப் பெயரையும் சுட்டுப் பெயரையும் பொருண்மை சுட்டும் வினையையும் கொண்டு முடிவதற்கு எடுத்துக்காட்டுக்கள் தரப்பெற்றுள்ளன.

தேவதத்தன் உண்டு என்பது தேவதத்தன் செயல் எதனையும் சுட்டாது, அவன் உளனுயிருத்தல் ஒன்றனையே சுட்டும். 2

## வினையாலணையும் பெயரின் இலக்கணம்

37. திருநுதலாய்! கருத்தாஆதி ஆதல்,
இ - சேர்ந்து இறுதல்,
ஒருபெயர்ச்சொல் எனச் சுப் - ஏறி
நீங்கல், உருபுபெறல்,
பொருவரும் ஈற்றயற்கே
ரூபபேதம் பொருந்தலொடு
வரு வினைமுற்றுப்பெயர்தாம்
கிருத் – அந்தம் வண்தமிழ்க்கே.



இது கிருத்அந்தம் கூறுகின்றது. வினைமுற்றுப் பெயராகிய கிருதந்தம் கருத்தாஆதி ஆதல் முதலாக ரூபபேதம் பொருந்தல் ஈருக ஒன்பது இலக்கணமும் பெறும் என்றவாறு.

'ஆதி' என்றமையால், கருமமும் பாவமும் கரணமும் அதிகரணமும் கொள்க.

நாலடியாரும், தண்டி ஆசிரியரும், சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்த வண்ணமே முறையே,

'யோசனையோர் கேட்பர்' – நாலடி 100
'யுத்தமும் அயுத்தமும்' – தண்டி. 62
'ரவிகுல திலகன்'

எனத் தற்சமமாகக் கூறினற்போல, யாமும் உருவபேதம் என்னுமலே ரூபபேதம் என்றும். யூகி, யோகம் என்பனவற்றை மொழிக்கு முதலாக்கி நேமிநாதத்தாரும் நன்னூலாரும் சூத்திரம் செய்ததும் அது.

உ-ம்:

'தார்தாங்கிச் செய்வது தானை' – கு. 767
'வினையே செய்வது' – சொ. 112

என்னும் இரண்டும் அஃறிணையில் கருத்தா ஆன கிருதந்தம் என்னும் வினைமுற்றுப் பெயர்.

'உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' – கு. 166

இவ்விரண்டும் கருமமான கிருதந்தம்.

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு' – கு. 339

இவ்விரண்டும் பாவமான கிருதந்தம்.

'வேல்அன்று வென்றி தருவது' – கு. 546

இது கரணமான கிருதந்தம்.

'பற்றியார் வெல்வது அரண்' – கு. 748

'ஆற்ற விளைவது நாடு' – கு. 732

'யாம் இருப்பது உறையூர்' – இம்மூன்றும் அதிகரணமான கிருதந்தம்.

'உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான்' – கு. 850

என்பது உயர்திணையில் கருத்தாவான கிருதந்தம்.

'இல்வாழ்வான் என்பான்' – கு. 41

என்பது உயர்திணையில் கருமமான கிருதந்தம்.

இவற்றைத் தொல்காப்பியர்,

'தொழில்நிலை ஒட்டும் ஒன்று' – சொ. 70

என்பர். ஒழிந்தன வந்தவழிக் காண்க.

மண்ணுணி, ஊருணி (கு. 215) இவை முறையே கருத்தாவினும் கருமத்தினும் வந்து இகரம் சேர்ந்து இறும் கிருதந்தம். மானேந்தி, பிறைசூடி, அம்பலத்தாடி, குடக்கூத்தாடி, நூலோதி, சடாதாரி, வேடதாரி, சோமயாசி – இவை உயர்திணைக்கண் இகரம் சேர்ந்து இறுதலாகிய கிருதந்தம்.

'சேர்ந்தாரைக் கொல்லி' – கு. 306

'நூற்றுவரைக் கொல்லி' – சீவக. 101

ஞாயிறு காணி – இவை அஃறிணைக்கண் இகரம் சேர்ந்து இறுதலாகிய கிருதந்தம். இவை உபபத சமாசனுமாம்.

பங்கசம், பங்கசாதம், வனருகம் என்பனவும் உபபதத்தின் மேல் வந்த கிருதந்தம்.

தார்தாங்கிச் செல்வது முதற்காட்டிய உதாரணமெல்லாம் வினைமுற்றுச்சொல் ஆயினும், பிராதிபதிகமும், தத்திதனும், பாவபதமும் போலச் சுப் என்னும் பிரதமை ஏறி நீங்கிய வினை



முற்றுப்பெயராம் என்க. மேல் உருபுபெறல் எனவும் வருதலின், சுப் என்பது ஏழ் உருபிற்கும் பொதுப்பெயர் ஆயினும், ஈண்டுப் பிரதமாவிபத்திக்கே கொள்க.

'ஒற்றுஅளபு எடுப்பினும், அற்றுஎனப் மொழிப'

– தொல். பொ. 330

என்னும் செய்யுளியல் சூத்திரம் எழுத்தியலுள் ஒற்று அளபு எடுத்தற்கும் விதியாய் நின்ற வியபதேசம்போல, ஈண்டுக் கிருதந்தத்து,

'ஒருபெயர்ச் சொல்லெனச் சுப் ஏறி நீங்கும்'

என்றதே, பிராதிபதிகமான நிலம் நீர் தீ வளி வெளி முதலாயின வற்றிற்கும், கச்சினன், கழலினன் என்னும் தத்திதனுக்கும் விதி ஆயிற்று என்க.

'அதிதேசம் வியபதேசம் ஆம் மாட் டெறிதல்'

இஃது உரைச்சூத்திரம்.

வடமொழியில் அக்கினிசித்து என்னும் கிருத்தும், ததி என்னும் பிராதிபதிகமும் சுப் ஏறி நீங்கினாற்போல – என்க.

உ-ம்:

'நெறிநின்றார் நீடுவாழ் வார்' – கு. 6

என உருபு ஏறி நீங்கல் வரும்.

'ஒறுத்தாரை ஒன்றாக வையாரே' – கு. 155

'இரப்பார்க்கு ஒன்று, ஈவார்மேல் நிற்கும் புகழ்' – கு. 232

என உருபுபெறல் வரும்.

நயவாதான், செறப்பட்டார், தின்பார் என நேரே நில்லாமல்,

'பெண்மை நயவா தவன்' – கு. 147

'வேந்து செறப்பட் டவர்' – கு. 895

'ஊன்தின் பவர்' – கு. 252

என ஈற்றயற்கே ரூபபேதம் பொருந்தல் வரும்.

'உபதை ஈற்றயல் ஒருபொருட் கிளவி'

இஃது உரைச் சூத்திரம்.

'தாம்வீழ்வார் மென்தோள்' - கு. 1103

'இல்வாழ்வான் என்பான்' - கு. 41

'உடுப்பதூஉம் உண்பதூஉம்' - கு. 166

என்னும் கருமமாய் நின்ற வினைமுற்றுப்பெயர் என்னும் கிருதந்தமும், முதல்நிலையும் வினையெச்சமும் பெயரெச்சமும் கருமத்தோடு முடியும் கிருதந்தமும், செயப்பாட்டு வினையோடு தோன்றுதும், பொருள் உரைக்குங்கால் தம்மால் வீழப்பட்டவர், இல்வாழ்வான் எனப்படுவான், உடுக்கப்படுவது, உண்ணப்படுவது எனச் செயப்பாட்டு வினையோடு தோன்றியும்,

செய்குன்று - செய்யப்பட்டகுன்று,

'அடுநரு' - கு. 1090

- அடப்பட்ட நரு என்றும்,

'அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி' - கு. 888

என்புழி அரத்தால் பொரப்பட்ட பொன் - உரம் பொரப்பட்டு என்றும், திருக்கோவையாரில்,

'யாழும் எழுதி எழில்முத்து எழுதி' - 79

என்புழி யாழும் எழுதப்பட்டு எழில்முத்தும் எழுதப்பட்டு என்றும்,

'யாம் வீழும் திருநுதற்கு இல்லை இடம்' - கு. 1123

என்புழி எம்மால் வீழப்பட்ட திருநுதல் என்றும் நயக்காய்த் தோன்றியக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க.

'செயப்பாட்டு எச்சமும் செயப்படு பொருளும்
நயக்காம் என்பர் நற்கிரு தந்தம்'

'வினைமுதல் கருவி அனைமுதல் இரண்டொடும்
மூன்றும் வேற்றுமை தோன்றுது அதற்கே'



'ஒரோவழி யக்ஃம்அவ் வுருபும் வரப்பெறும்'

இவை உரைச்சூத்திரம்.

ஆதலின், அரம் பொருத பொன் - தாம் வீழ்வார் என்பன-போலக் கேள்வி தோளாதவர் - முகடிமூடினர் - என வாராது, சிறுபான்மை கேள்வியால் தோட்கப்படாத செவி, (கு. *418*) முகடியான் மூடப்பட்டார் (கு. *936*) என வரும். (*3*)

## விளக்கம்

வினையாலணையும் பெயர் கருத்தா ஆதல், செயப்படு-பொருளாதல், தொழிற்பெயராதல், கருவியாதல், இடம் ஆதல், இகரம் பெற்று முடிதல், முதல்வேற்றுமை உருபு பெற்று நீக்கல், ஏனைய உருபுகளைப் பெறுதல், ஈற்றயலெழுத்துத் திரிதல் என்ற ஒன்பது இலக்கணமும் பெறும் என்பது.

சிறுபான்மை வடமொழியைத் தமிழில் தற்பவமாக்காது வடமொழியில் உள்ளவாறே வழங்குதலுண்டு என்பது வர்க்கம் என்ற சொல்பற்றி முன்னும் கூறப்பட்டது (*20* கா. உரை) ஈண்டும் ரூபபேதம் என்ற சொல்பற்றிக் கூறப்படுகிறது. நாலடி என்ற நூலைத் தொகுத்தவர் நாலடியார் என்று கொள்க.

செல்வது தானை ; செய்வது தொழில் முதல்நிலை ; செல்வது, செய்வது - என்னும் வினையாலணையும் பெயர்கள் எழுவாயாயின.

உடுப்பது உண்பது - செயப்படுபொருளாயின.

உறங்குவது, விழிப்பது - தொழிற்பெயரான வினையாலணையும் பெயர்கள். இவ்வினையாலணையும் பெயர்கள் - உறங்குதல், விழித்தல் எனத் தொழிற்பெயர்ப் பொருளிலேயே வந்துள்ளமை காண்க.

வேல்... தருவது - கருவிப்பொருளில் தருவது என்ற வினையாலணையும் பெயர் வந்துள்ளது.

வெல்வது அரண் – வெல்வதற்கு இடனாவது என்ற இடப் பொருளில் வெல்வது என்ற வினையாலணையும்பெயர் வந்துள்ளது.

இல் என்பான் – வினையாலணையும் பெயர் எழுவாயாய் உயர் திணைக்கண் வந்தது.

இல்வாழ்வான் என்பான்–என்பான் என்ற வினையாலணையும் பெயர் உயர்திணையில் எனப்படுவான் எனப் பொருள்பட்டுச் செயப்படுபொருளாய் வந்தது.

தொழில்நிலை ஒட்டும் ஒன்று – வினைமுற்றை ஒத்திருக்கும் வினையாலணையும் பெயர். ஒட்டும் உவம உருபு.

மண்ணுணி - மண்ணை உண்பது – கருத்தா.

ஊருணி – ஊரரால் உண்ணப்படுவது – செயப்படுபொருள். இவை வினைப்பகுதி இகரம் சேர்ந்து வினையாலணையும்பெயர் ஆயினமைக்கு எடுத்துக்காட்டு.

மானேந்தி...... வேடதாரி – ஏந்து, சூடு, ஆடு, ஓது, தரி என்ற பகுதிகள் ஏந்தி, சூடி, ஆடி, ஓதி தாரி என்ற இகர ஈற்றுச் சொற்களாகி வினையாலணையும் பெயராயின.

சடாதாரி, வேடதாரி சோமயாசி – சடையைத்தரித்தவன், வேடத்தைத் தரித்தவன், சோமயாகம் செய்தவன் என்னும் பொருளன. இவை யாவும் உயர் திணை.

சேர்ந்தாரைக் கொல்லி – தன்னை அடைந்தவரைக் கொல்வது (நெருப்பு); நூற்றுவரைக் கொல்லி – பலரை ஒருசேரக் கொல்வது (மதிற்பொறிகளுள் ஒன்று); ஞாயிறு காணி – சூரியனைக்காண்பது. (சூரியகாந்தம் என்ற கல்) – இவை அஃறிணைக்கண் வந்தன. இவை இரு சொற்கள் ஒட்டி அமைந்த தொகைகளாம்.

பங்கசம் – சேற்றில் தோன்றுவது; பங்க சாதம் – சேற்றில் தோன்றுவது. வனருகம் – நீரில் தோன்றுவது; இவையும் இரண்டு சொற்கள் மேல் வந்த வினையாலணையும் பெயர்.



வினைமுற்று வினையாலணையும் பெயராய் எழுவாயாய் வரும் போது எழுவாய் உருபு ஏறி நீங்குதல் வேண்டும் என்பது வடமொழி மரபு. சுப் – என்பது எல்லா வேற்றுமை உருபு களுக்கும் உரிய பொதுப்பெயர் எனினும், இரண்டாவது முதலியன அடுத்துக் கூறப்படுதலின் ஈண்டுச் சுப் – பிரத்தியயம் என்பது எழுவாய் வேற்றுமை உருபினையே சுட்டுவதாகும்.

எழுத்ததிகாரத்துள் ஒற்றளபெடைக்கு விதி கூறப்பட வில்லை. ஆயினும், பொருளதிகாரச் செய்யுளியலில் ‘ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப’ (தொ. பொ. 330) என உயிரளபெடையோடு மாட்டேறாகச் சூத்திரம் செய்யப்பட்டது. அம்மாட்டேற்று நூற்பா எழுத்ததிகாரத்துள் ஒற்று அளபெடுத்தற்கும் விதியாயிற்று. அதுபோல, வினையாலணையும் பெயர் எழுவாயாகும்போது சுப் – பிரத்தியயம் வந்து நீங்கும் என்று கூறிய விதி, காரக படலத்துள் கூறப்பட்ட பெயர்ப் பகாப்பதமாகிய பிராதிபதிகத்திற்கும், தத்தித படலத்துள் கூறப்பட்ட விகுதிபெற்ற பெயர்களாகிய தத்திதாந்தத்திற்கும் மாட்டேற்றால் கொள்ளப்படும் என்பது. அதிதேசம், வியப தேசம் என்ற வட சொற்கள் மாட்டெறிந்து ஒழுகல் என்பதன் பொருளில் வந்த வட சொற்களாம்.

அக்கினிசித்து – கருடன் முதலிய வடிவாக யாககுண்டம் அமைத்துச் செய்யப்படும் யாகங்களைச் செய்தவன். (அக்நியை வேதி அமைத்துப் பேணுபவன்) சித்து – சுப் ஏறி நீங்கியது.

ததி – ததீ: எனற்பாவது, ததி எனச் சுப்பேறி நீங்கி வந்தது.

நெறி நின்றார் நீடு வாழ்வார் – நின்றார் என்ற வினைமுற்று வினையாலணையும்பெயராம் போது எழுவாய்க்கு உரிய சுப் பிரத்தியயம் புணர்ந்து கெட்டது என்பர்.

ஒறுத்தார் என்ற வினையாலணையும் பெயர் ஒறுத்தாரை எனவும், இரப்பார் என்ற வினையாலணையும் பெயர் இரப்பார்க்கு எனவும், ஈவார் என்பது ஈவார்மேல் எனவும் உருபுபெற்றன.

நயவாதான் - செறப்பட்டார் - தின்பார் என்பன நயவாதவன் - செறப்பட்டவர் - தின்பவர் என ஈற்றயல் திரிந்து, ஐயமின்றி வினையாலணையும் பெயராயின.

வீழ்வார், வாழ்வான், உடுப்பது, உண்பது - இவை செயப்படுபொருளாய் நின்ற வினையாலணையும்பெயர் செய்வினையாய்த் தோன்றிச் செயப்பாட்டு வினையாய் முடிவதற்கு எடுத்துக்காட்டு.

செய் குன்று, அடு நறு - முதல்நிலை செய்வினையாய்த் தோன்றிச் செயப்பாட்டுவினையாய்ப் பொருள் தந்தது. உரம் பொருது - வினையெச்சம் செய்வினையாய்த் தோன்றிச் செயப்பாட்டு வினையாய்ப் பொருள்பட்டது. அரம் பொருத என்னும் செய்வினைப் பெயரெச்சம் செயப்பாட்டு வினையாய்ப் பொருள்பட்டது. யாழும் எழுதி - யாழும் எழுதப்பட்டு எனச் செய்வினை வினையெச்சம் செயப்பாட்டு வினையாய்ப் பொருள் தந்தது. யாம் வீழும் திருநுதல் - வீழும் என்ற செய்வினைப் பெயரெச்சம் வீழப்படும் எனச் செயப்பாட்டு வினையாய் பொருள் தந்தது.

வினையாலணையும் பெயரில் செயப்படு பொருளாய் வருவனவும் எச்சங்களும் செய்வினையாய் வருமாயின், அவற்றின் முன் வரும் பெயர்ச்சொற்கண் மூன்றும் வேற்றுமை உருபு தோன்றுது.

தாம் வீழ்வார் - தம்மால் விழப்படுவார் - செய்வினை ஆயவழி முற்சொல்லின் மூன்றனுருபு தொக்கமை காண்க. அரம் பொருத பொன் என்பதும் அது.



இவை ஒரோவழி செயப்பாட்டுவினை விரிந்தும் வரப்பெறும். செயப்பாட்டுவினை விரிந்து வருங்கால், முதற்சொல் மூன்றன் உருபு பெறுதலும் பெருமையும் ஆகிய இருநிலையும் உண்டு.

கேள்வியால் தோட்கப்படாத செவி -

முகடியால் மூடப்பட்டார் - என உருபு பெற்றும்,

வேந்து செறப்பட்டவர் என உருபு பெருதும் வந்தமை காண்க.

இவ்வினையாலணையும் பெயர் பற்றி இலக்கணக்கொத்து நூலார்,

'வினைமுற் றுப்பெயர் விரிக்குங் காலை
வினைமுதல் செயப்படு பொருளே கருவி
இடமே தொழிற்பெயர் இவ்வைந்து அன்றியும்
எட்டுருபு ஏற்றே எண்பொருள் ஆதல்
ஈற்றயல் திரிதல் ஈரெச்ச மாதல்
ஈறுஇகரம் ஆதல்அவ் ஈறுஇகரம் ஆயவை
வினைமுதல் செயப்படு பொருளொடு கருவி
இடம்வினை எச்சமாய் இயங்குதல் அன்றியும்
இன்னும் பலவகை எனவிளம் புவரே' - இ. கொ. 83

என்று நூற்பா யாத்து,

| | | |
|---|---|---|
| " இல் என்பான் | — | வினைமுதல். |
| உடுப்பது | — | செயப்படுபொருள். |
| வேல்......தருவது | — | கருவி. |
| விளைவது நாடு | — | இடம். |
| உறங்குவது...... | — | தொழிற்பெயர். |

சேர்ந்தார் வாழ்வார், ஒறுத்தாரை, கொண்டானல், ஒறுத் தார்க்கு, ஈன்ருளின், கொண்டானது, கொண்டான் கண், இரப்பான்! இதனைஏல் - என எட்டுருபு ஏற்றல்.

தின்பார் - தின்பவர் — ஈற்றயல்திரிதல்.

நடந்த குதிரைகள் — நடந்த - பெயரெச்சமாயிற்று.

உண்பான் வந்தான் — உண்பான் - வினையெச்சமாயிற்று.

மான் ஏந்தி — ஈறுஇகரம் ஆயிற்று.

மண்ணுணி வெண்ணெய் உண்டான் — வினைமுதல்.

ஊருணி நீர்நிறைந்தது — செயப்படுபொருள்.

இவ்விளக்குக் கண்காட்டி — கருவி.

இப்பானை நாழிபொங்கி — இடம்.

அம்பலத்தாடி வந்தான்<br>மயிலேறி நீங்கினன் } ஆடி ஏறி என்ற வினையாலணையும் பெயர் வினையெச்சமாயின.

[யாழும் எழுதி என்பதும் வினையாலணையும் பெயர் வினையெச்சமாகிச் செயப்படுபொருளோடு முடிந்தது என்பது பிரயோகவிவேக உரை.]

'இன்னும் பல' என்றதனனே, 'தாம்வீழ்வார்' முதலாயின உருபும் படுசொல்லும் தொக்கு வினைமுற்றுப் பெயராய் எழுவாயாயும், உண்பது நாழி முதலாயின அவ்வாறே செயப்படு பொருளாயும் வருதல் முதலாயின எல்லாம் காண்க." (இ. கொ. 83 உரை.) என்று எடுத்துக்காட்டோடு உரை வரைந்தமையும் காண்க. 3

## இருவகை வினையெச்சங்கள்

38\. விரிக்கும் பெயர் ஆர்த்ததாதுகமான
வினைக்குறையில்
தெரிக்கும் துவா - துமுந் - செய்து
என்பதோடு செய என்பதாம்;



தரிக்கும் திலகநுதால்! சதிர் -
கானச்சுச் சானச்சென்று
பிரிக்கும் பிரத்தியயமே
நிகழ்காலப் பெயரெச்சமே.

இஃது இருவகை எச்சத்தின் குறி கூறுகின்றது. ஆர்த்த தாதுகம் எனப் பெயர்பெற்ற எச்சங்களுள் செய்து செய்ய என்னும் இரண்டும் முறையே துவா துமுந் எனப் பெயர் பெறும். நிகழ்காலப் பெயரெச்சம் சதிர்ப்பிரத்தியயம் என்றும் கானச்சு என்றும் சானச்சு என்றும் பெயர் பெறும் என்றவாறு.

'ஆர்த்த தாதுகம் ஆம்ஈ ரெச்சமும்'

'சார்வ தாதுகம் தாம்வினை முற்றே'

'விச்சிராந்தி பெருது ஆர்த்த தாதுகம்'

'சார்வ தாதுகம் தாம்அது பெறுமே'

'செய்யாச் செய்யூச் செய்பு என்எச்சம்
கமுனே ணமுலே யப் - எனல் ஆகும்.'

'எனஎன் எச்சம் இதிஎனல் ஆகும்.'

'செயின் செய்தால் எனச்செப்பும் இரண்டினை
அதிசேத் என்பர் அறிந்திசி னோரே.'

'நுவிலே செய்யிய என்னும் அதுவே'

'தப் – பிரத் தியமும் சப் – பிரத் தியமும்
இறப்புஎதிர்பு உணர்த்தும் பெயர்எஞ்சு கிளவி'

இவ்வுரைச் சூத்திரங்களானும் ஒழிந்த எச்சங்களுக்குப் பெயர் அறிக.

சதிர் கருத்தாவினும், கானச்சும் சானச்சும் கருத்தாவினும் கருமத்தினும் நிகழ்காலம் பற்றி வருதலானும் 'பிரிக்கும் பிரத்தியயம்' என்றும்.

வடநூலார் செய்து என்பதற்குக் கிருத்துவா, செய்ய என்பதற்குக் கர்த்துமுந் என்னுது, துவா – துமுந் என ஈறுபற்றிப் பெயரிடுவர். அவர் மதம் பற்றித் தொல்காப்பியரும் சிறுபான்மை,

'பின்முன் கால்கடை வழிஇடத்து' – சொ. 229

எனவும் ஈற்று வினையெச்சம் ஆக்குவர்.

உ–ம்: உண்டு வந்தான், உண்டு வருதல், மீன் விழுங்கி யற்று, (கு. 931) கற்று வல்லவன், உண்ணு வந்தான், உண்ணூ வந்தான், உண்குபு வந்தான், பாடவல்லவன், பாடவருதல், உண்ண உண்டு, உடுக்க உண்டு, உண்ணுக்கால், உண்ணவில்லை, உடுக்கவில்லை,

'அவியினும் வாழினும் என்' – கு. 420

அறம் செய்யின் சுவர்க்கம் புகுவான், அறம் செய்தால் சுவர்க்கம் புகுவான்,

'நாள்என ஒன்று போல் காட்டி' – கு. 334

'பெய்யெனப் பெய்யும் மழை' – கு. 55

பெய் என்று பெய்யும் மழை என வரும்.

கற்கிற மாணுக்கன், கற்கின்ற மாணுக்கன், கல்லாநின்ற மாணுக்கன் எனக் கருத்தாவைக் கொண்ட நிகழ்காலப் பெயரெச்சத்தைச் சதிர்ப்பிரத்தியயம் என்பர்.

கற்கப்படும் நூல், கற்கப்படும் ஆசிரியன் என நிகழ்காலம் காட்டிய செய்யும் என்னும் செயப்பாட்டு வினைப்பெயரெச்சத்தைக் கருமத்தோடும் கருத்தாவோடும் வந்த சானச்சு என்பர். சுர பேதத்தால் கானச்சும் அது.

பிரம தத்த வரன், முத்த கேசன், தத்த காஞ்சனம், தத்த படம் நிட்கிராந்த பூமி, சுத்த சலம், என்பன பூத காலம் பெற்ற தப் பிரத்தியயம்.



'தேரான் பிறன்இல் புகல்' – கு. 144

என்பது தேராத பிறன் இல் புகல் எனப் பொருள் பட்டாற் போலக் 'குர்வந் தேவதத்தன்' என்பது 'குர்வத் தேவதத்தன்' எனப் பொருள்படும். இஃது அவ்வுரையாலும் காண்க.

இனி, மறுத்தற்கண்,

'ஒருமகள் நோக்கினரை உயிரொடும் போகொடாத திருமகள்' – சீவக. 2186

எனச் சிந்தாமணியினும்,

'கனவினும் காண்கொடா கண்ணும் கலந்த
நனவினும் முன்நீங்கும் நாணும்' – புறத்திரட்டு 1524

எனச் சான்றோர் செய்யுளினும் போகொடாள், காண்கொடாள் என எச்சமாயும் முற்றாயும் வரும். திருவாய்மொழியினும்

'வந்து ஒட்ட' – திவ். பிர. 2747

எனப் பொருள் விரியும்.

பொருள் செயல்வகை, வினை செயல்வகை,

'தோன்ற லாறே' – சொ. 160

'உயிர்த்த லாறே' – எ. 17

என்பனவற்றுள் செயல், தோன்றல், உயிர்த்தல் என்பன பெயரெச்சமாம்; அவை பொருள்செய்யும் வகை, வினைசெய்யும் வகை, தோன்றும் நெறி, உயிர்க்கும் நெறி, எனப் பொருள் விரிதலின் என்க. சென்மபூமி, சென்ம நட்சத்திரம் என்னும் வடமொழியும் அது.

யட்டும் யாதி - வேட்கப் போகிறான்; அது யாகாய யாதி எனப் பொருள்பட்டு வேள்விக்குப் போகிறான் என நிற்கும்.

குர்வந் தேவதத்தன் – பண்ணுகிற தேவதத்தன்; அது சானச்சு கர்த்தாவில் வந்தது.

பச்சியமாந ஓதனம் – கருமத்தில் வந்தது.

சற்பிராமணன் – நல்ல பிராமணன் எனப் பொருள்பட்டுப் பெயரெச்சக் குறிப்பாய் நின்றது.

செய் கிரு; செய்து – கிருத்துவா ; செய்ய - கர்த்துமுந்; செயல் – கருமம், கிரியை ; செய்தவன் – கருத்தா ; செய்கிறேன் – கரோமி ; செய்வேன் – கரிஷ்யே ; செய்யாய், செய் – குரு ; கும்பம் செய்பவன் – கும்பகாரன் ; செய்வித்தல் – காரிதம் ; செய்கிறான் – கரோதி என்னும் வினைமுற்றுச்சொல். இவற்றுள் முந்திய உதாரணச் சொல்லிற்கு அடுத்த உதாரணம் வடமொழியில் வந்த பெயர் என்று அறிக. என்னையெனின், செய் என்னும் தமிழ்மொழி வினைமுற்றுச்சொல் போல வடமொழியில் 'கிரு' என்னும் வினைமுற்றுச்சொல்லாம். இதுபோல, இங்ஙனம் சொல்லப்பட்ட உதாரணங்களுக் கெல்லாம் உய்த்துணர்க. (4)

## விளக்கம்

ஈரெச்சங்களின் வடமொழிப்பெயர் – ஆர்த்ததாதுகம். இவ் வெச்சங்கள் தாமாகப் பொருள் முடிவுபெறா. வினைமுற்றின் பெயர் சார்வதாதுகம். வினைமுற்றுக்கள் தாமே பொருள் முடிவுபெறும்.

செய்யா – கமுஞ் ; செய்யூ – ணமுல் ; செய்பு – யப் ; செய்தென – இதி ; செயின், செய்தால் – அதிசேத் ; செய்யிய – நுவில்.

த – பிரத்தியயம் — இறந்தகாலப் பெயரெச்சம்.

ச – பிரத்தியயம் — எதிர்காலப் பெயரெச்சம்

சதிர்ப்பிரத்தியயம் — கருத்தாவைக் கொண்டு முடியும் நிகழ்காலப் பெயரெச்சம்.

சானச்சு, கானச்சு — எழுவாயோடும், செயப்படு பொருளோடும் செயப்பாட்டுவினைக்கண் வரும் நிகழ்காலப் பெயரெச்சம். நிகழ்காலப் பெயரெச்சம், சதிர் – சானச்சு என்னும் இரு வகையினை உடையது ஆதலின் 'பிரிக்கும் பிரத்தியயம் என்றார்.



தொல்காப்பியர் 'பின் முன்' (சொ. 229) என ஈறுபற்றி வினையெச்சங்களுக்குப் பெயரிட்டது வடமொழி மரபு பற்றியது.

வினையெச்சம் தெரிநிலைமுற்று, குறிப்புமுற்று, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றைக் கொண்டு முடிதலை – உண்டு வந்தான், விழுங்கியற்று, உண்டு வருதல், கற்றுவல்லவன் என்ற எடுத்துக்காட்டுக்களில் காண்க.

உண்ணா – செய்யா ; உண்ணூ – செய்யூ; உண்குபு – செய்பு; பாடவந்தான் ...... உடுக்கவில்லை – செய ; உண்ணுக்கால் – கால் ஈற்று வினையெச்சம் ; அவியினும் வாழியினும் – செயின் ; அறம் செய்யின், அறம் செய்தால் – செயின் ; காட்டி – செய்து ; பெய்என – பெய் என்று சொல்ல – செய ; பெய் என்று - பெய் என்று சொல்ல – இதுவும் செய என்பதனுள் அடங்கும்.

கற்கிற மாணுக்கன் – செய்வினையில் வரும் நிகழ்காலப் பெயரெச்சம் எழுவாயைக் கொண்டு முடிதலால் சதிர்பிரத்தியயம்.

கற்கப்படும் நூல் – செயப்பாட்டுவினை நிகழ்காலப் பெயரெச்சம் செயப்படுபொருள் கொண்டது.

கற்கப்படும் ஆசிரியன் – செயப்பாட்டுவினை நிகழ்காலப் பெயரெச்சம் எழுவாய் கொண்டது. இவ்விரண்டும் சானச்சு எனவும் கானச்சு எனவும் கூறப்படும்.

பிரம தத்தவரன் – பிரமனால் கொடுக்கப்பட்ட வரத்தை உடையவன்.

முத்த கேசன் – அவிழ்ந்த மயிர்முடியை உடையவன்.

தத்த காஞ்சனம் – சுடப்பட்ட தங்கம்.

தத்த படம் – எரிக்கப்பட்ட ஆடை.

நிட்கிராந்த பூமி – கடக்கப்பட்ட நிலம்.

சுத்தசலம் – சுத்தமாக்கப்பட்ட நீர்.

இவை இறந்த காலப்பெயரெச்சம் என்னும் தப்பிரத்தியயம்.

யட்டும் யாதி – யஷ்டும் யாதி – வேட்கப் போகிறுன்.

யாகாய யாதி – வேள்விக்குப் போகிறுன்.

குர்வந் தேவதத்தன் – செய்கின்ற தேவதத்தன் – நிகழ்காலம்.

குர்வத் தேவதத்தன் – செய்த தேவதத்தன் – இறந்தகாலம்.

(குர்வத் தேவதத்தன் சமத்தபதம் என்னும் தொகை; குர்வந் தேவதத்தன் வியத்தபதம் என்னும் தொகாநிலை என்பர்.)

இங்ஙனம் நிகழ்காலப்பெயரெச்சம் வடமொழியில் இறந்த காலப் பெயரெச்சமாகப் பொருள்படுவது போலத், தமிழில் தேரான் பிறன் என்ற முற்று தேராத பிறன் எனப் பெயரெச்சமாகப் பொருள் தருவது ஆயிற்று.

போகொடாத என்பது போகொடாள்ஆகி என வினையெச்சமாயும், காண்கொடா கண்ணும் என்பது கண்ணும் காண் கொடாள் என முற்றுயும் வந்தன.

திருவாய்மொழியில்,

'யான்ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்
தான்ஒட்டி வந்துஎன் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊன்ஒட்டி நின்றுஎன் உயிரில் கலந்துஇயல்
வான்ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே' – *1-7-7*

என்னும் பாசுரத்தில், தான் என்னை அடைவதற்காக என் நெஞ்சத்தைத் தன்னிடத்துக் கவர்ந்து என வருதலின், தான்ஒட்டி வந்து என்பது தான்வந்து ஒட்ட எனச் செய்து என்எச்சம் செய என் எச்சம் ஆயிற்று.



பொருள் செயல் வகை முதலியன செய்யும் என்னும் பெயரெச்சமாகத் தொழிற்பெயர் அமைந்தன.

சென்மபூமி – பிறந்த இடம்.

சென்ம நட்சத்திரம் – பிறந்த நாள்.

பச்சியமான ஓதனம் – சமைக்கப்படுகின்ற உணவு. 4

## செய்தென் எச்சமும் பிற எச்சங்களும்

39. நிறக்கும் துணைவினை ஓர்காலத்து
எய்திடும், நேர்ந்தநிலை
மறுக்கும், பலஅடுக்கும், காலம்
மூன்ருெடும் மன்னும், முன்பின்
பிறக்கும், துவாதி சமான
கர்த்தாவைப்பெறும்; முற்றுமாய்ச்
சிறக்கும், பிற பின்னகர்த்தாவொடும்
சென்று சேருமன்றே.

இஃது அவ்விருவகை எச்சங்களின் விகற்பலக்கணம் கூறுகின்றது. துவா என்னும் செய்துஎன் எச்சம், துணைவினை ஓர்காலத்து எய்தல் முதலாக முற்றுமாய்ச் சிறத்தல் ஈருக வரும் ஏழ்இலக்கணமும் பெறும். பிற என்னும் துமுநாதிகள் வேறு கருத்தாவையும் பெறும் என்றவாறு.

துவாதி – செய்து செய்யா செய்யூ செய்பு என்னும் நான்கும் என்க.

'சமான கருத்தா ஒருவினை முதலே
பின்ன கருத்தா வேறுவினை முதலே'

இஃது உரைச் சூத்திரம்.

உ-ம்: கண்மூடிச் சிரித்தான் - வறிது நீந்திச் செல்லும் நீளிடை - கொடி ஆடித் தோன்றும் - விரைந்து போயினன் - ஈகுபு வந்தான் - குதிரை ஏறிக்கொண்டே சென்றான் - ஓடி வந்தான் என இவை துணைவினை ஓர்காலத்து எய்தியது.

உண்ணுது வந்தான், உண்டுவாரான் என எச்சமும் முடிக்கும் சொல்லும் எதிர் மறுத்தது.

'மருங்குஓடித் தீவினை செய்யான் எனின்' - கு. 210

'கற்றில கண்டு அன்னம்' - கோவை 97

என்னும் குறளினும், திருக்கோவையாரினும், பரிமேலழகரும் பேராசிரியரும் செய்தலோடும் கற்றலோடும் முடியும் என்பர். இதுவுமது. பிரதியோகி நியோகியோடே ஒக்கும் என்பதே கருத்தாயிற்று. இதனை ஆகாரியாரோபம் என்பாரும் உளர்.

'அறவினை யாதெனின் கொல்லாமை' - கு. 321

என்னும் குறளுள், பரிமேலழகர் விலக்கியது ஒழிதலும் செய்தலோடு ஒக்கும் ஆதலின் கொல்லாமை அறவினை ஆயிற்று என்பர்.

'காலின்நீர் நீங்காமை உண்டிடுக, பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க' - ஆசார. 19

என்பது, எச்சமும் முடிக்கும் சொல்லும் எதிர்மறுத்தலின், அது சொல்லான் முடியாது, ஈரம் புலர்ந்தபின் ஏறுக எனப் பொருள் படுதலின், அஃது எதிர்மறை ஆகாது என்க. இதனை அலங்கார நூலார் 'அபாவாபாவம்' என்பர்.

'நிறக்கும்' என்ற சேடத்தால் சதிர்ப்பிரத்தியயத்துக்கு மறையும் அடுக்கும் கொள்க.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்' - கு. 448

'புரைதீரா மன்னு இளமை' - நாலடி 11

'மூவா முதலா உலகம்' - சீவக. 1

என வரும்.



'மாழை மென் நோக்கி இடையாய்க் கழிந்தது வந்து வந்தே' - கோவை. 61

'அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' - நாலடி. 213

என்பன ஒன்றுபல அடுக்கல்.

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்' - கு. 1101

என்புழி வேறுபல அடுக்கல்.

இன்னும் அச்சேடத்தால்,

'சென்றது சென்றது வாழ்நாள்' - நாலடி. 4

'வந்தது வந்தது கூற்று' - நாலடி. 4

என முற்றுச்சொல்லும்,

'அவர் அவர் எச்சத்தால் காணப் படும்' - கு. 114

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' - கு. 423

படை படை, தீத்தீ எனப் பெயர்களும், அடுக்கி, மக்கள் இரட்டையும் விலங்கு இரட்டையும் போல வரும்.

இன்னும் அதனனே-

'துடிதுடித்துத் துள்ளி வரும்'

'கலகல கூஉந்துணை' - நாலடி. 140

'வற்றிய ஓலே கலகலக்கும்' - நாலடி. 256

'சலசல மும்மதம் பொழிய' - சீவக. 82

'பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்' - நாலடி. 251

'புன்னம் புலரி'

'குறுகுறு நடந்து' - புறநா. 88

'வயிறு மொடுமொடுத்தது'

'சிற்றஞ் சிறுகாலே' - திவ். பிர. 502

'செக்கச் சிவந்தது'

'கன்னங் கரிய'

என்பனவற்றை இலையிரட்டையும் பூஇரட்டையும்போல் வந்தன,

'இரட்டைக் கிளவி இரட்டில்பிரிந்து இசையா' - சொல். 48

என்னும் சூத்திரவிதி பெற்றன என்பர்.

இவற்றை வடநூலார் 'தேதீவ்யமானம்' என உதாரணம் காட்டி, யங் லுக்கு என்பர். புநப்புந - ரக்ஷரக்ஷ - சிவசிவ - ராமராம - திநேதிநே என வடமொழிக்கண்ணும் மக்கள் இரட்டைபோல வரும்.

நேற்று உண்டு வந்தான் - இஃதோ உண்டு வருகிறான் - நாளை உண்டு வருவான் என்று காலத்திரயமும் கொண்டது.

'செய்துஎன் எச்சத்து இறந்த காலம்
எய்துஇடன் உடைத்தே வாராக் காலம்' - தொ. சொ. 239

என விதித்ததும் அது.

'நேர்த்து நிகர்அல்லார் நீர்அல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்' - நாலடி. 64

'கொழுநற் றொழுதெழுவாள்' - கு. 55

'தொழுது எழுவார் வினைவளம் நீறெழ' - கோவை. 118

என்புழி வெகுண்டுவேரார், எழுந்து தொழுவாள், எழுந்து தொழுவார் என முன்பின்னுகப் பிறந்தது.

வடநூலாரும் வாய்பிளந்து உறங்கினன், குறட்டைவிட்டு உறங்கினன் எனவும், கொடுத்து இரந்தான் எனவும் காட்டுவர்.

'வழுக்கினுள் வைக்குந்தன் நாளை எடுத்து' - கு. 776

'பருகுவன் பைதல்நோய் எல்லாம் கெட' - கு. 1266

இவையும் முன்பின் பிறந்ததாக அமைக்க.

இனிக்

'கொழுநற் றொழுதுஎழுவாள்' - 55

'தொழுதுஎழுவார் வினைவளம் நீறெழ' - 118



என்னும் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும், பரிமேலழகரும் பேராசிரியரும் தொழாநின்று எழுவாள், தொழாநின்று எழுவார் எனத் துணைவினையாய் உரைப்பர். எழுதல் துயில் ஒழிதல் ஆதலின், எழுந்து தொழுவாள் என முன்பின்னுகப் பொருள்படுதலன்றி, நகுபுவந்தான், ஓடிவந்தான் என்பனபோலத் தொழாநின்று துயில் ஒழிதல் கூடாது என்க.

'வைகறை யாமம் துயில்எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதுஎழுக' - ஆசார. 4

என்பது துயில் ஒழிந்து பின் தந்தையும் தாயும் தொழுது பின் காரியத்தில் செல்க என்று பொருள்பட்டு வருதலானும், அவர் உரை அசம்பாவிதம் என்க.

'மோயினள் உயிர்த்த காலை' - அகநா. 5

என முற்றுமாய்ச் சிறந்தது.

'நறப்பாடலம் புனைவார் நினைவார்' - கோவை. 205

'கலைத்தொழில் படஎழீஇப் பாடினன் கனிந்து
இலைப்பொழில் குரங்கின ஈன்ற தூண்தளிர்' - சீவக. 671

'கானவர் இரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த லோடும்
ஆனிரை பெயர்ந்தது ஆயர் ஆர்த்தனர் அணிந்த திண்தோள்
தான்ஒன்று முடங்கிற்று ஒன்று நிமிர்ந்தது சரம்பெய் மாரி
போல்நின்ற என்ப மற்றப் பொருவரு சிலையி னற்கே'
- சீவக. 454

'செய்யோன் செழும்பொற்சரம் சென்றது சென்றதுஆவி'
- சீவக. 2331

'அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்இதழ் முல்லை - மகிழ்ந்துஇதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை' - தண்டி. உதாரணம்

'சோலைபயிலும் குயில்மழலை சோர்ந்து அசைந்த
ஆலும் மயிலினங்கள் ஆர்த்தெழுந்த – ஞாலம்
குளிர்ந்த முகில்கறுத்த கோபம் சிவந்த
விளர்ந்த துணைப்பிரிந்தார் மெய்' – *தண்டி. உதாரணம்*

இவையெல்லாம் செய என்எச்சம் முற்றாய்த் திரிந்தது.

இவ்வாறு வரும் முற்றுக்களை முற்றாகவே பொருள் உரைக்கில் ஏகவாக்கியமாகாது, பின்னவாக்கியமாகிப் பொருள் சித்தியாது என்க.

'கோழி கூவிப் போது புலர்ந்தது'

'உரற்கால்யானை ஒடித்துஉண்டு எஞ்சிய யாமரம்' – *குறுந்.* 232

என்புழிக் கூவப் போது புலர்ந்தது – உண்ண எஞ்சிய யாமரம் எனத் தமிழ்நூலார் பொருள் உரைத்துச் செயஎன் எச்சம் செய்து எனத் திரிந்தது என்றும்,

'வினைஎஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' – *தொ. சொ.* 437

'அம் முக் கிளவியும் சினைவினை தோன்றின்', – *தொ. சொ.* 231

என்னும் இரண்டு சூத்திரத்தால் சேனாவரையர் நச்சினார்க்கினியர் செய்துஎன் எச்சம் சமானகர்த்திருகம் அன்றிப் பின்ன கர்த்திருகமாகவும் வரும் என்றும் கூறுவர்.

இவற்றை வடநூலார் கூவுவித்து, எஞ்சுவித்து என அந்தர்ப் பாவித ணிச் ஆக்கிக் கூறுவர். கோழியைக் கூவுவித்தற்கும் யாமரத்தை எஞ்சுவித்தற்கும் காலமும் யானையும் ஏது ஆகலின்' சம்பாவிதமாம்.

'குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்' – 171

என்புழிக் குடி பொன்றுவித்து என்னும் பொருள் விளங்கக் குடி பொன்றச் செய்து என்று உரைப்பர் பரிமேலழகரும்.

இனி, ஞாயிறு பட்டு வந்தான் சாத்தான் – என்றால் ஞாயிற்றைப் படுவித்தற்குச் சாத்தான் ஏது ஆகாமையின் அஃது அசம்பாவிதமாம். ஆதலின் ஞாயிறுபட எனத் துமுந் அர்த்தமாக்குவர். நன்னூலார் எச்சத் திரிபுகளை,



'சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை' – *ந.* 346

எனச் சத்தவிகாரம் ஆக்குவர்.

உண்டு வந்தான் சாத்தன் – இது சமான கர்த்திருகம். துவாதி மூன்றும் இவ்வாறே வரும்.

சாத்தன் உண்ண வந்தான் – சாத்தன் உண்ணக் கொற்றன் சோறு கொடுத்தான் எனத் துமுந் சமானகர்த்தாவோடும் பின்ன கர்த்தாவோடும் வரும். செயின், செய்தால் எனக் கூறும் அவ்விய கிருத்துக்களும் இருவர் வினையும் கொள்ளும்.

'கருநாய் கவர்ந்த காலினர் சிதகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதானும் கொள்வர்'
– *திவ். பிர.* 3007

என்பதனை,

'இரும்பு ஆர்க்கும் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்'
– *நாலடி.* 122

'சேனைத் தலைவராய்' – *நாலடி.* 3

என்னும் பாட்டுக்கள் போல ஆய் என்னும் சன் கொடுத்து விரவா வினையெச்சம் ஆக்குவர். இவ்வினைஎச்சங்களைக் கிரியா விசேடணம் என்பர்.

'அரியானை அந்தணர்தம் சிந்தை யானை' – *தேவா* 6-1

என்னும் பாட்டினைக் கருமவிசேடணம் என்பர்.

'இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே' – *கு.* 447

என்றும்,

'கூற்றுவனை மன்மதனை அரக்கர் கோவை'
– *நேமி. மேற்.* 68 *சொ.*

என்றும், தொடர்ந்தும் தொடராதும் வருவதும் அது.

'கட்கினியான் காதலன் காதல்வகை புனைவாள்'
– *நாலடி.* 384

'அகல்விசும்பு ளார்கோமான் இந்திரன்' – குறள் 25

'காலார் கழலார் கடுஞ்சிலையார்' புற. வெ. கர. 2

என ஒரு பொருள்மேல் பல பெயர் வந்து ஒருவினை கொள்வதனையும், இடைப்பிறவரலாய் நின்ற பெயரெச்சத்தையும் கர்த்திருவிசேடணம் என்பர். இவ்வாறு பெயர்பல அடுக்கி ஒரு பயனிலை கொள்வதனையும், வினைபல அடுக்கி ஒரு பெயர் கொள்வதனையும் அகத்தியரும் நன்னூலாரும்,

'எனைத்து முற்று அடுக்கினும்' – அகத்தியம்

'உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும்' – ந. 355

என்னும் சூத்திரங்களால் அடக்குவர்.

'பெண்ஏவல் செய்து ஒழுகும் ஆண்மை' - கு. 907

'மடல்ஏறாப் பெண்ணின் பெருந்தக்கது இல்' – கு. 1137

ஒழுகுவான் ஆண்மை, மடல்ஏறாதவள் பெண்மை எனப் பெயரெச்சங்கள் முற்றுப்பெயராயும்,

'தேரான் பிறன்இல் புகல்' - கு. 144

தேராதபிறன் எனமுற்றுப் பெயரெச்சமாயும் அருத்தவிகாரமாய்ப் பொருள் திரிந்தன.

கலுபீத்துவா என்னும் துவாப்பிரத்தியயம் வேண்டா குடித்து என நின்று வேண்டா குடிக்க எனப் பொருள்பட்டுத் துமுந் அர்த்தமாம் என்பர். துமுந் துவாவாய்த் திரிந்த ஆதேசம் என்னாது, துமுந் பொருளில் வந்த துவா என்பர். (5)

## விளக்கம்

இக்காரிகையில் வினையெச்சங்களுள் செய்து செய்யா செய்யூ செய்பு என்ற நான்கினையும் ஒருவகையாகவும் செய செயின் முதலியவற்றை ஒரு வகையாகவும் பிரித்து முறையே துவா-ஆதி வினையெச்சம் என்றும், துமுந்-ஆதி வினையெச்சம் என்றும் குறிப்பிட்டுச் செய்து என் எச்சத்து இலக்கணத்தைச் சிறப்பாகக் கூறுவர்.



செய்து என் எச்சம் முற்றொடு ஒரே காலத்து நிகழும் துணை வினையாதல், நேர்ந்த நிலை மறுத்தல், பல அடுக்குதல், மூன்று காலமும் காட்டுதல், முன்பின் பிறத்தல், தன் எழுவாய் வினையைக்கொண்டு முடிதல், முற்றாய்ச் சிறத்தல் என்ற ஏழு இலக்கணத்தோடு சிறுபான்மை பிறவினைமுதல் வினை கோடலும் உண்டு.

கண்மூடிச் சிரித்தான் ........ ஓடிவந்தான் – கண்மூடியிருத்தலும் சிரித்தலும் ஒரேகாலத்து நிகழ்ந்தன. ஏனையவும் அன்ன.

உண்ணாது வந்தான் – எச்சம் எதிர்மறுத்தது.

உண்டு வாரான் – முடிக்குஞ் சொல்லாகிய முற்று எதிர்மறுத்தது.

உண்டு என்ற வினையெச்சம் வாரான் என்ற வினைமுற்றின் வருதல்தொழில் கொண்டு முடிந்தது.

ஓடி என்பது செய்யான் என்பதன்கண் உள்ள செய்தல் வினையோடும், அன்னம் கண்டு கற்றிலை என்பதனுள் கண்டு என்பது கற்றலோடும் முடிந்தன. மறைவினை விதிவினையோடு ஒக்கும் என்பது மரபு.

பிரதியோகி – மறைவினை; நியோகி – விதிவினை.

ஆகாரியாரோபம் – நன்றாக அறிந்துவைத்தும் ஒன்றற்கு உண்மையில் இல்லாத செய்தியை அதன்மேல் ஏற்றிக் கூறும் இல்லதனைக் கொணர்ந்து ஏற்றிக் கோடல். அது, புத்திபூர்வமாகச் சிலையைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுதலும், பிறன் ஒருவனைத் தந்தையாகக் கொண்டு சிராத்தம் புசிப்பித்தலும் போல்வன (பி. வி. 50 உரை) காலில் நீர் நீங்காமை உண்டிடுக – நீங்காமை என்ற வினையெச்சம் புலர்வதன்முன் என்ற உடன்பாட்டுப் பொருள் தந்தது. பாடலின் இம்முதலடி இங்கு எடுத்துக்காட்டுக்குத் தேவை இன்றி வந்துள்ளது.

ஈரம் புலராமை ஏறற்க என்ற இரண்டு இன்மைகள் புலர்ந்தபின் ஏறுக என்ற உடன்பாட்டுப் பொருள் தந்தன. ஆதலின் இதுவும் முன்னதும் மறையல்ல.

அபாவாபாவம் – இன்மையது அபாவம்.

'காரார் கொடிமுல்லை நின்குழல்மேல் கைபுனைய
வாராமை இல்லை வயவேந்தர்' – தண்டி. எடுத்துக்காட்டு.

வாராமை இல்லை என்பது வருதல் உண்டு என்ற உடன்பாட்டுப் பொருள் தந்தவாறு.

நிகழ்காலப் பெயரெச்சத்து எதிர்மறை 'இல்லாத ஏமரா' 'புரைதீரா மன்னு' 'மூவா முதலா' என இரண்டு அடுக்கி வந்தது.

'வந்து வந்து' 'அறிந் தறிந்து' – ஒரே வினையெச்சம் இரண்டு அடுக்கி வந்தது.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று – செய்து என் வாய்பாட்டு வினையெச்சம் பல அடுக்கி வந்தன.

சென்றது சென்றது, வந்தது வந்தது – முற்று அடுக்கியது.

அவரவர் ...... தீதீதீ – பெயர் அடுக்கியது.

இவை மக்கள் இரட்டையும் விலங்கு இரட்டையும்போலப் பிரித்தும் பொருள் செய்யப்படுமாறு காண்க.

கலகல, சலசல, குறுகுறு (நடந்து), மொடுமொடுத்தது – இவை பிரிக்கப்படின் இருமொழியும் பொருள்தாரா.

துடிதுடித்து, பண்ணப் பணைத்த, புன்னம் புலரி, சிற்றஞ் சிறுகாலே, செக்கச் சிவந்தது, கன்னங் கரிய – இவை பிரிக்கப் படின் முன்மொழி பொருள்தாராது பின்மொழியே பொருள்தரும். இவ்விரு நிலையினை உடைய சொற்களும் இலையிரட்டை, பூ



இரட்டைபோலப் பிரிக்கப்படாத நிலையில் உள்ள இரட்டைக் கிளவியாம் என்க. 'இரட்டைக்கிளவி' (சொ. 48) என்ற நூற்பா உரையில் இவற்றைப் பிரித்தால் உரிய பொருள் எய்தாது என்பதனைச் சேனாவரையரும் விளக்கியுள்ளார்.

தேதீவ்யமானம் – திவ்யமானம் + திவ்யமானம் – தேவீவ்ய மானம். ய முதலிய எழுத்துக் கெட்டமையின் யங் கெட்டது என்றார். இஃது இரட்டைக்கிளவி.

யங் லுக்கு – முன்மொழிக்கூறு கெட்டது என்பது பொருள்.

புநப்புந – மீண்டும் மீண்டும்; ரக்ஷரக்ஷ – காக்க காக்க; திநேதிநே – நாளும் நாளும்; இவை வடமொழியில் வரும் அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு.

செய்து என் எச்சம் குறிப்பிடும் வினை, அது கொண்டுமுடியும் வினைமுற்றுக் குறிப்பிடும் வினைக்கு முன் நிகழ்தலைக் குறிக்கும். கொண்டு முடியும் வினைமுற்று எந்தக் காலமோ அதேகாலத்தைச் செய்து என் எச்சமும் காட்டி, அம்முற்றின் நிகழ்ச்சிக்கு எச்சத்தின் நிகழ்ச்சி முற்பட்டது என்பதனையே சுட்டும்.

உண்டு வந்தான் — உண்டு – இறந்தகாலச் செய்தி.
உண்டு வருகிறான் — உண்டு – நிகழ்காலச் செய்தி.
உண்டு வருவான் — உண்டு – எதிர்காலச் செய்தி.

'செய்து...காலம்' என்ற தொல்காப்பிய நூற்பா (சொ. 239) செய்து என் எச்சம் எதிர்காலத்தும் வருதலைக் குறிப்பிடுகிறது.

'வேர்த்து வெகுளார்' முதலியன வெகுண்டு வேரார் முதலாக எச்சமும் முற்றும் மாறி வந்தனவாம்.

'தன் நாளை வைத்து வழக்கினுள் எடுக்கும்' 'பருகிப்பைதல் நோய் எல்லாம் கெடுவன்' என முற்று எச்சங்களை மாற்றிப் பொருள் செய்க.

கொழுநற் றொழுது எழுவாள் என்பது எழுந்து தொழுவாள் என்றே பொருள் செயப்படல் வேண்டும் என்ற செய்தி விளக்கப் பட்டுள்ளது.

மோயினள் உயிர்த்த காலை - மோந்து உயிர்த்த காலை; செய்து என் எச்சம் முற்றாய்த் திரிந்தது.

இனி, செய என் எச்சம்பற்றிக் கூறப்படுகின்றது.

பாட, பொழில் குரங்க, தூண் தளிர் ஈன்ற எனவும் - ஆனிரை பெயர, ஆயர் ஆர்ப்ப, ஒன்று முடங்க, ஒன்று நிமிர்ந்தது எனவும் -

சரம் செல்ல, ஆவி சென்றது எனவும் -

தோன்றி அவிழ, காயா அலர, முல்லை இதழ்நெகிழ, கொன்றை இதழ்விள்ள, கருவிளைவிள்ளக் காந்தள் குலை கொண்டன எனவும் -

குயில் அசைய, மயிலினங்கள் எழ, ஞாலம் குளிர, முகில் கறுக்க, கோபம் சிவப்ப, மெய் விளர்த்த எனவும் -

முற்றுக்களைச் செய என்எச்சத்திரிபாகக் கொண்டு பொருள் செய்க. அல்லாக்கால் ஒவ்வொரு பகுதியும் தனித்தனி வாக்கியம் பலவாகிக் குறித்த பொருளை விளக்காது போகும் என்பது.

'கோழி கூவிப் போது புலர்ந்தது'

'யானை ஒடித்து உண்டு எஞ்சிய யா - இவற்றில்,

கூவியது கோழி, புலர்ந்தது போது;

உண்டது யானை, எஞ்சியது யாமரம்;

கூவி, உண்டு என்ற செய்து என்எச்சங்கள் தம் வினைமுதல் வினையை விடுத்துப் பிறவினைமுதல் வினை கொண்டன. இங்ஙனம் செய்து என்எச்சம் பிறவினை கோடல் மரபன்று என்று கொள்வார், இவற்றைக் கூவ - உண்ண என்ற செய என் எச்சங்களின் திரிபு என்பர்.



சேனாவரையர் 'வினை எஞ்சு கிளவி' (சொ. 457) என்னும் நூற்பாவிலும், நச்சினார்க்கினியர் 'அம்முக் கிளவியும்' (சொ. 231) என்னும் நூற்பாவிலும் செய்து என்எச்சம் பிறவினை கோடலைத் தழுவிக் கொள்வர். இவற்றை வடநூலார் பிறவினை விகுதி தொக்கு நின்றனவாகக் கொள்வர். கோழி கூவுதற்குக் காலமும் யாமரம் எஞ்சுதற்கு யானையும் காரணமாதலின், பிறவினைப் பொருளில் இவ்வாசிரியரும், இலக்கணக் கொத்து ஆசிரியரும் (72) சிவஞான முனிவரும் 'எஞ்சுவித்த' எனப் பொருள் கொள்வர். அங்ஙனம் கோடல் பொருந்தாது என்பதனைச் சண்முகனார் "'உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய யா' என்புழியும் கோழி கூவிப் போது புலர்ந்தது என்புழியும், யானை ஒடித்து உண்டபின் யாமரம் தானே எஞ்சுதலும், போது புலர்வதற்கு முன் கோழி தான் கூவுதலும் உடைய ஆகலானும், யானை ஒடித்தற்றொழிலும் உண்ணுதற்றொழிலும் உடைத்தாயினாற் போல எஞ்சுவிக்கும் தொழில் உடைத்து அன்று ஆகலானும், போது புலர்தற்றொழில் உடைத்தாயினாற்போலக் கூவுவிக்கும் தொழில் உடைத்து அன்று ஆகலானும், அவர் கூறிய விவ்விகுதிப் பொருள் இன்மையான், ஒடித்து உண்டபின் எஞ்சிய யா எனவும் கோழி கூவியபின் போது புலர்ந்தது எனவும் பொருள்கோடலே அமைவுடைத்து என்பது.

இனி, உண்டபின், கூவியபின் என்னும் பின் ஈற்று வினை-யெச்சங்களே உண்டு, கூவி எனத்திரிந்து நின்றன எனக்கொள்க. அவை பின் என்னும் காலப்பெயர் கொண்ட பெயரெச்சம் என்று கொள்ளற்க.

இனி, பிரயோகவிவேக நூலார் கோழியைக் கூவுவித்தற்கும் யாமரத்தை எஞ்சுவித்தற்கும் காலமும் யானையும் ஏதுவாகலின் சம்பாவிதம் என்று கூறினர் ஆதலின் விவ்விகுதிப்பொருள்-உண்மை பெறப்படுமால் எனின், காலம் உணர்ந்து கூவுதல் கோழிக்கு இயற்கையாதலின் அதன் உணர்ச்சி ஏதுவாதலன்றிக் காலம் ஏது ஆகாமையானும், காலம் எல்லாத்தொழிற்கும்

பொதுவகையான் ஏதுவாதலன்றிக் கூவுதற்கு மாத்திரம் ஏது எனல் கூடாமையானும், யானை ஒடித்து முற்றும் உண்ணுமைக்குக் காரணம் அம்மரத்தின் இயல்பன்றி யானையின் இயல்பு ஆகாமையானும் பொருந்தாது என்பது" என்று விளக்கியுள்ளார். (பா. வி. 221, 22)

காரணகாரியப்பொருளில் ஞாயிறு பட்டு வந்தான் என்ற தொடர் வாராமையின், அதனை ஞாயிறு பட வந்தான் எனச் செய்து என் எச்சத்தைச் செய என் எச்சம் ஆக்குதலே இவ்வாசிரியர் கருத்து. ஞாயிறு பட்டபின் வந்தான் என்று பொருள் கோடலும் உண்டு. (சேனு.)

செய்து, செய்யூ, செய்பு என்பன தம் வினைமுதல் வினையே கொள்ளும். ஆதலின் இவ்வெச்சத்திரிபு கூறல் வேண்டுவதாயிற்று. ஏனைய செய முதலியன இரு வினைமுதல் வினையும் கொள்ளும் என்பது எடுத்துக்காட்டான் விளக்கப்பட்டது.

'குடிமடிந்து ......... உஞற்றிலவர்க்கு' – குடியைமடிவித்துக் 'குற்றம் பெருகும் எனக் கொள்ளின், மடியின்மை என்னும் அதிகாரப் பொருளோடு முரணக் குற்றமே எழுவாயாய் விடும் ஆதலின், மடிய என்னும் எச்சம் மடிந்து எனத் திரிந்தது என்ற பரிமேலழகர் உரையே ஏற்றது'. (பாவி. 221)

குடிபொன்றி – பொன்ற என்ற செயவென் எச்சம் செய்தென் எச்சமாகத்திரிந்தது என்றார் பரிமேலழகர்.

இவ்வாசிரியர் 'குடியைப் பொன்றுவித்து என்னும் பொருள் விளங்கப் பரிமேலழகர் பொன்றச் செய்து என்று உரைப்பர்' என்றார். 'கற்பித்து என்றவிடத்துக் கற்றலும் கற்பித்தலுமாகிய இருவினை மாணுக்கன் ஆசிரியன் இருவரிடத்தும் நிகழ்ந்தாற் போலப், பொன்றுதலும் பொன்றுவித்தலும் இரு வேறு பொருளிடத்து நிகழாமையானும், நடுவின்றி நன்பொருள்



வெஃகுதலால் குடி தானே பொன்றும் என்பது கருத்தாகலானும், விவ்விகுதிப் பொருள் சிறவாது. பரிமேலழகர் உரைத்த செயவென் எச்சத்திரியே கொள்க.' (பா. வி. 221)

காலினராய்ப் பானையராய்ப் பிச்சை கொள்வர் என முற்று எச்சமாயிற்று. இவை செய்து என் எச்சத்திரிபாய்த் தம் வினை-முதல் வினையாம் முற்றிற்கு அடையாகும்.

அரியானை, சிந்தையானை, அகத்தானை முதலியன பெரும்-பற்றப் புலியூரானை எனப் பின்வரும் செயப்படுபொருளுக்கு அடையாக்குவர். அரியான் சிந்தையான் அகத்தான் ஆகிய பெரும்பற்றப்புலியூரானை எனப் பொருள் செய்க. இவை ஒன்றேடொன்று தொடர்ந்தன. இடிக்குந் துணையாரை என்பது ஆள்வாரை என்பதற்கு அடையாய்த் தொடர்ந்துவந்தது.

கூற்றுவனை மன்மதனை அரக்கர்கோவை – ஒவ்வொரு சொல்லும் நிரல்நிறையாகத் தனித்தனி வினைகோடலின் இவை ஒன்றேடொன்று தொடரா.

'கூற்றுவனை, மன்மதனை, அரக்கர் கோவை,
கூன்நிலவை, குஞ்சரத்தை, இஞ்சி மூன்றை
**ஏற்று** உலகுஇன்புற, உருவம்மாள, தோள்கள்
இற, எறிப்ப, இமயப்பெண் வெருவ, வேவ,
கால்தொழிலால், நயனத்தால், விரலால், கற்றைக்
கதிர்முடியால், கரதலத்தால், கணையால், பின்னும்
ஊற்றழிய உதைத்து, எரித்து, நெரித்து, சூடி,
உரித்து, எரித்தான்; அவன்எம்மை உடையகோவே'
– (நே. மே.)

இப்பாடலில் கூற்றுவனை ஏற்று உலகு இன்புறக் கால் தொழிலால் உதைத்து என்றாற்போல, இஞ்சி மூன்று ஈறாக உடைய ஆறு பெயர்களையும் நிரல்நிறைப்படுத்தியே பொருள் கொள்க.

'கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊராண் இயல்பினள் — உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்' – நாலடி. 384

இனியாள் புனைவாள் உட்கு உடையாள் இயல்பினள் மாதராள் ஆகிய பெண் உணரும் எனவும்,

கோமான் இந்திரனே சாலும் எனவும்,

'காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார் — காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வும் உண்டு' – பு. வெ. க. 2

கழலார் சிலையார் வேலார் தோற்றத்தார் போல்வார் உளர்ந்தார் எனவும், ஒரு பொருள்மேல் பலபெயர் வந்து ஒரு வினை கொண்டன. இறுதிப் பெயரை எழுவாயாகக் கொண்டு ஏனைய வற்றை எழுவாய் அடை என்பர். கைக்கொண்ட, வெருவந்த முதலிய பெயரெச்சங்களும் எழுவாய் அடை.

ஒழுகும் ஆண்மை – ஒழுகும் என்ற பெயரெச்சம் ஒழுகுவான் என்ற வினைமுற்றுப் பெயராகப் பொருள் திரிந்தது.

தேரான் பிறன்இல் – தேரான் என்ற முற்று தேராத பிறன் எனப் பெயரெச்சமாகப் பொருள் திரிந்தது.

கலு பீத்வா (வேண்டா குடித்து) என்ற செய்து என் எச்சத்தைச் செயவென் எச்சப் பொருளில் வந்தது என்பர் வடநூலார்.

ஓர் எச்சம் பிறிதோர் எச்சமாய்த் திரிந்தது என்னுது, பிறிது ஓர் எச்சப்பொருட்டாய் வந்தது என்று கூறும் மரபு வடமொழியில் உண்டு. தமிழிற்கும் அது கொள்ளப்படுவதும் உண்டு. 'சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை' (நன். 346) என்ற நூற்பாவால் வினையெச்சம் திரிந்து வந்தது என்று சுட்டுவதும் உண்டு. 5



## ஓசை வேறுபாடு

40. எடுத்தல், படுத்தல், நலிதல் என்று
ஆகும் இசை அனைத்தும்,
தொடுத்த உதாத்தம், அநுதாத்தம்,
ஏனைச் சுவரிதமாம்;
அடுத்த கிருத்துள் முற்று எல்லாம்
எடுத்தல், அருந் திஙந்தம்
படுத்தல்; இரண்டும் உடைத்தாம்,
சருபம் படுந் தொடரே.

இது சுரம் என்னும் ஓசையும் அது வரும் இடனும் கூறுகின்றது. எடுத்தல் முதலாகிய மூன்று ஓசையும் உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்னும் மூன்று சுரமாம். அவற்றுள், எடுத்தல் கிருத்துள் சருபமான முற்றுப்பெயரோடும், படுத்தல் திஙந்தத்தோடும், இவ்விரண்டும் சொல்லாகப் பொருளாக வேறுபடுகின்ற சருபச் சிலிட்டத்தோடும் வரும்.

'அடுத்த' என்ற மிகையால் விலங்கலும் கொள்க.

'பிரசயம் விலங்கல் பேசுங் காலே'
இஃது உரைச் சூத்திரம்.

எல்லாப் பொருளும் என்பது எப்பொருளும் என நின்றாற் போலச் சமானரூபம் சருபம் என நின்றது.

கிருத்துப் படுத்தல் திஙந்தம் எடுத்தல் என மாறிக் கூறுவாரும் உளர்.

உ-ம்:

'நெறிநின்றார் நீடுவாழ் வார்' – கு. 6

'மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்' – கு. 3

என்புழி நெறிக்கண் நின்ருர், சேர்ந்தார் என்னும் கிருத்தை உதாத்தமாக எடுத்து உச்சரிக்க. வாழ்வார் என்னும் திஙந்தமாகிய ஆற்பநேபதத்தை அநுதாத்தமாகப் படுத்து உச்சரிக்க.

சொல் வேறுபடாது பொருள் வேறுபட்ட சரூபசிலிட்டமும், பொருள் வேறுபடாது சொல் வேறுபட்ட சரூபசிலிட்டமும், சொல்லும் பொருளும் வேறுபட்ட சரூபசிலிட்டமும் எனச் சரூபசிலிட்டம் மூவகைப்படும்.

உ-ம்:

**'குழல்வளர் முல்லேயில் கோவலர் தம்மொடு**
**மழலேத் தும்பி வாய்வைத்து ஊத'** – *சிலப்.* 4–15, 16

**'சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி ஆட'** – *சீவக.* 2029

எனச் சொல் வேறுபடாது பொருள் வேறுபட்ட சரூபம் வந்தவாறு காண்க.

அஃது இஃது உஃது என்னும் சுட்டுமுதலாகிய ஆய்தக் குற்றுகரமும், அது இது உது என்னும் முற்றுகரமும் பொருட் புணர்ச்சிக்கண் உயிரோடு புணருங்கால், அஃதழகிது, இஃதழகிது, உஃதழகிது என நிற்கும். அஃது இஃது உஃது என்னும் குற்றுகரமும், அது இது உது என்னும் முற்றுகரமும் உருபு புணருங்கால், அன் சாரியை பெற்றும் ஆய்தம் கெட்டும் உருபு ஏறியும் அதனே - இதனே - உதனே என நிற்கும். இவை பொருள் வேறுபடாது சொல் வேறுபட்ட சரூபம். ஈண்டும் எடுத்தல் படுத்தல் கொள்க.

செம்பொன்பதின்பலம், குன்றேருமா, குறும்பரம்பு, நாடியாது, எட்டியாது, எட்டு, கொட்டு, தாமரை - இவை சொல்லும் பொருளும் வேறுபட்ட சரூபம். ஈண்டும் எடுத்தல் படுத்தல் கொள்க.



இவ்வாறு வரும் நாநார்த்தபதத்தொடரை எல்லாம் தொல்காப்பியர் இரட்டுற மொழிதல் என்பர். அதுபற்றிப் பரிமேலழகரும் 'பெரியாரைப் பிழையாமை' என்பதனே இரட்டுற மொழிதல் என்பர். இக்கருத்து அறியாத நச்சினர்க்கினியர்,

**'ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்'** – *சொ.* 460

என்னும் சூத்திரத்தை 'இருபொருள் ஒருசொல் பிரிவில வரையார்' என நலிந்து பொருள்கொண்டு இச்சிலேடை உதாரணத்தைக் காட்டி இடர்ப்படுவர் என்க.

இனி, நாநார்த்த பதம் எல்லாம் வர்ணவற்பாவம் என்னும் எழுத்தொப்புமை உடைய பலபொருள் ஒருசொல், பலசொல் அல்லது ஒருசொல் அன்று எனவும், ஒன்றல்லவை பல என்பதனுனும் பல என்பதல்லது ஒருசொல் அன்று எனவும், இருசொல் ஆதலின் இருகால் உரைக்க எனவும் வடநூலார் கூறுவர். என்னே? பயக்ஷீரம் பயோம்புச [பயம் - பால்; பயம் - நீர்] என அமரசிங்கத்துள் வருதலின் என்க. அதுபற்றிச் சேனவரையரும் 'காலம் உலகம்' (சொ. 57) என்னும் சூத்திரத்துள் உலகம் என்பதற்கு அவ்வாறு உரைப்பர். தொல்காப்பியரும்

**'தெவ்வுக் கொளற்பொருட்டே'** – *சொ.* 345

**'தெவ்வுப் பகையாகும்'** – *சொ.* 346

எனவும், கண் என்பது ஏழாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமைப் பொருளும் ஆதலின்,

**'கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'** – *சொ.* 81

எனவும்,

**'கண்கால் புறம் அகம்'** – *சொ.* 82

எனவும், இரட்டித்துக் கூறுவர். அப்பைய தீக்ஷிதர்,

'ஏக நாளா வலம்பி பலத் துவந்துவம்'

போல என்று திருட்டாந்தம் கூறி, ஒருகால் உரைக்கவே, பலபொருளில் பிரவிருத்தி நிமித்தம் ஒருங்கு தோன்றும் என்றும் கூறுவர்.

'உப்ப காரம் ஒன்றுஎன மொழிப
இருவயின் நிலையும் பொருட்டுஆ கும்மே' – எ. 76

என்புழி, தபு என்னும் சொல் கெடு எனவும் கெடுவி எனவும் அந்தர்ப்பாவிதணிச் என்பர் தொல்காப்பியர் ஆதலின், ஈண்டும் எடுத்தும் படுத்தும் சொல்லுக.

ஆடிக்குக் கொண்டான் – சித்திரைக்குக் கொண்டான் என்புழி, இக்குச்சாரியை முதலெழுத்தாகிய இகரம் கெட்டுப் புணர்ந்த இடப்பொருட்டுத் தொகைமொழி என்பர். அவை நான்கன் உருபு தொடர்ந்த பொருளாகச் சொல்லுங்காலும் எடுத்தும் படுத்தும் சொல்லுக.

ஐ – முதலிய சில எழுத்துக்கள் விலங்கலாம்.

நலிதலை ஈறும் ஈற்றயலுமாக உடைய செய்யுள் உறுப்பைச் சுரிதகம் என்பர். உருவகம், தீவகம் என்பதுபோலச் சுவரிதகம் என்பது சுரிதகம் என நின்றது. தமிழ்நூல் உரைகாரர் சுரிந்து இறுதலின் சுரிதகம் என்பது அறியாமை. (6)

விளக்கம்

எடுத்தல் – உதாத்தம், படுத்தல் – அநுதாத்தம், நலிதல் – சுவரிதம், விலங்கல் – பிரசயம் என வடமொழியிற் பெயர்பெறும். பிரசயம் சுவரிதத்தினும் உயர்ந்த ஒலி. ஐ முதலிய எழுத்துக்கள் வெளிப்படும் தம் ஒலி குறுக்கிட்டுச் செல்லும் இயல்பின ஆதலின் விலங்கலொலி உடையன என்பர்.



'எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னின் மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்'
– திவ். பிர. 2882

முதலிலுள்ள எக்காலம் எல்லாக்காலமும் என்ற பொருளிலும் பின் உள்ளது எந்தக்காலத்தும் என்ற பொருளிலும் வந்தன.

எல்லாம் + காலம் — எக்காலம்.

எ + காலம் — எக்காலம்.

'எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை
நலிதல் விலங்கலொடு நான்குஎன் பார்சிலர்
மூன்றுஎனத் துணிந்தே மொழிகுவர் பலரே'

என்பது இலக்கணக்கொத்து 127ஆம் நூற்பா.

ஒரே சொல் வினைமுற்றாகியவழிப் படுத்தும், வினையாலணையும் பெயராகிய வழி எடுத்தும் ஒலித்தல் வேண்டும் என்பார் இவர். வினைமுற்றை எடுத்தும் வினையாலணையும்பெயரைப் படுத்தும் ஒலிக்கவேண்டும் என்பார் சேனாவரையர். (தொ. சொ. 215 உரை)

எவன் என்பது படுத்தல் ஓசையால் பெயராயவழி – (தொ. எ. 122 நச். சொ. 221 நச்.) உண்பாய் உரைப்பாய், தின்பாய் என்ற முன்னிலை வினைகளை எடுத்தல் ஓசையால் கூறும்வழி அவை ஏவற் பொருண்மை உணர்த்தும்.
– தொ. சொ. 225 நச்.

நட, வா முதலியன எடுத்தல் ஓசையால் முன்னிலை ஏவல் ஒருமை முற்றாய் நிற்கும். படுத்தல் ஓசையால் அச்செய்கைமேல் பெயர்த்தன்மைப்பட முதல்நிலையாயும் நிற்கும். – தொ. சொ. 226 நச்.

நடத்துவித்தான் என வருங்கால் இடைநிலையாகிய எழுத்துக்களும் பெற்று முன்னர் எடுத்தல் ஓசையாய் இடைநின்ற ஈறாகிய இகரம் படுத்தல் ஓசைப்பட்டு இடைநிலையாய் நிற்கும். – தொ. சொ. 226 நச்.

செய்யும் என்னும் சொல் எடுத்தல் ஓசையால் கூறப்படின் முற்றாம். படுத்தல் ஓசையால் கூறப்படின் பெயரெச்சமாம்.
– தொ. சொ. 237 நச்.

திணையும் பாலும் காலமும் இடனும் தோன்றும் தொழிற்-சொல் படுத்தல் ஓசைப்பட்டு நின்றால் தொழிற்பெயராய் நின்று பயனிலைகொண்டும் உருபு ஏற்றும் காலத்தைத் தோற்றுவிக்கும்.
– தொ. சொ. 71 நச்

உண்பாய் என்னும் சொல் ஓசை வேற்றுமையான் முற்றும், தொழிற் பெயரும், வினையெச்சமும், வியங்கோளுமாய் நிற்கும்.
– தொ. சொ. 450 ந.

உண்டான் தின்றான் என்னும் தொடக்கத்துப் படுத்துச் சொல்லப்படும் தொழிற்பெயர். – தொ. சொ. 70 சே.

நடவா முதலிய முதல்நிலைத் தனிவினைகளை முற்றாக்க வேண்டில் எடுத்துச் சொல்லுக. முதல்நிலைத் தொழிற்பெயராக்க வேண்டில் படுத்துச் சொல்லுக.

கட்டு என்பதனை முற்றுகர முற்றாக்கவேண்டில் எடுத்துச் சொல்லுக. குற்றுகரத் தொழிற்பெயராக்க வேண்டில் படுத்துச் சொல்லுக.

'நெறி நின்றார் நீடு வாழ்வார்' என்பதனை முறையே பெயராக்கவேண்டில் எடுக்க. முற்றாக்கவேண்டில் படுக்க.

செய்யும் என்பதனை எச்சமாக்கவேண்டில் எடுக்க. முற்றாக்கவேண்டில் படுக்க.

அம்பலத்தாடி என்பதனைப் பெயராக்கவேண்டில் எடுக்க. எச்சமாக்கவேண்டில் படுக்க. – இ. கொ. 126 உரை

இவற்றால் எடுத்தல் படுத்தல் ஓசைபற்றி இலக்கண ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுண்மை வெளிப்படை.



சரூபசிலிட்டம் – சமானரூபமான வடிவுஒற்றுமையில் வரும் செம்மொழிச் சிலேடை. சிலேடையை உடையது சிலிட்டம்.

குழல்வளர் முல்லை – வெய்ங்குழலில் இருந்து வெளிப்படும் முல்லைப்பண், கூந்தலில் காட்சி வழங்கும் முல்லைமலர் – என ஒரே சொற்றொடர் இருபொருள் தந்தது.

'திருநீர்க்குமரி ஆட' சிறந்த புண்ணிய நீரை உடைய குமரித்துறையில் நீராட, அழகிய நீர்மையை உடைய இப் பெண்ணை நுகர – என ஒரே சொற்றொடர் இருபொருள் தந்தது; இவை சொல் வேறுபடாது பொருள் வேறுபட்டமைக்கு எடுத்துக்காட்டு.

'அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்' – தொ. சொ. 167

என்பதனால் அது, அஃது முதலிய சுட்டுப்பெயர்கள் குறிப்பிடப்படும்.

அஃது + அழகிது — அஃதழகிது.

அது + அழகிது — அஃதழகிது.

'முன்உயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அவ்வழி யான' – தொ. எ. 423

என்ற நூற்பாவின் போந்த பொருளால் கொள்க.

அது + ஐ - அது + அன் + ஐ - அதனை.

'சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே' - தொ. எ. 176

என்பது விதி.

அஃது + ஐ - அஃது + அன் + ஐ - அது + அன் ஐ - அதனை.

'யாதன் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான' - தொ. எ. 200

என்பது விதி. இவை சொல் வேறுபட்டும் பொருள் வேறுபடாவாயின.

அஃது என்பதனை எடுத்தும் அது என்பதனைப் படுத்தும் ஒலிக்க.

| | | |
|---|---|---|
| செம்பொன்-பதின்பலம் | — | செம்பொன் பதின்பலம், செம்பு ஒன்பதின் பலம். |
| குன்றேறுமா | — | குன்று ஏறு மா, குன்று ஏறு ஆமா. |
| குறும்பரம்பு | — | குறும் பரம்பு, குறும்பர் அம்பு. |
| நாடியாது | — | நாடி யாது, நாடு யாது. |
| எட்டியாது | — | எட்டி யாது, எட்டு யாது. |
| எட்டு | — | எட்டு, எள் து. |
| கொட்டு | — | கொட்டு, கொள் து. |
| தாமரை | — | தாமரை, தாம் மரை. |

இவை சொல்லும் பொருளும் வேறுபட்டமை காண்க. இவற்றுள் பொருட் சிறப்புடைய சொல்லை எடுத்தும், மற்றவற்றைப் படுத்தும் ஒலிக்க.

பலபொருள் ஒருசொற்றொடர்கள் இரட்டுற மொழிதல் என்னும் உத்தி வகையுள் அடங்கும்.

பலபொருள் ஒருசொல் என்பது எளிமை கருதி எழுத்து ஒப்புமை கொண்டு ஒன்றாகக் கொண்டதன்றி, இயற்கையில் ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒவ்வொரு பொருளையே குறிப்பதாகும். ஆகவே, ஒவ்வொரு பொருள் தரும்போதும் தனித்தனியே ஒவ்வொரு சொல்லாம். நீர் என்ற பொருளில் வரும் பய என்பதும், பால் என்ற பொருளில் வரும் பய என்பதும் வேறு.



நிலம் என்ற பொருளில் வரும் உலகம் என்பது வேறு; மக்கள் என்ற பொருளில் வரும் உலகம் என்பது வேறு. ஏழாம் உருபாக வரும் கண் என்பது வேறு; ஏழன் பொருளில் வரும் கண் என்பது வேறு. கொள்ளுதல் என்ற பொருளில் வரும் தெவ் என்பது வேறு; பகை என்ற பொருளில் வரும் தெவ் என்பது வேறு.

ஏக நாளா வலம்பி பலத் துவந்துவம் – ஒரே காம்பில் தொங்கும் இரண்டு பழங்கள் போன்ற உம்மைத் தொகை.

அதுபோல ஒரே சொல் பல பொருளைத் தரும் ஆற்றலை இயற்கையாகவே பெறும் என்பர் அப்பைய தீக்ஷிதர். பிரவிருத்தி நிமித்தம் – ஈடுபடும் காரணம். (மொழி பொருட் காரணம்)

தபு – தபுவி என்ற பொருளில் வருங்கால் அந்தர்பாவிதணிச் என்பர் இவ்வாசிரியர். இனி, சண்முகனார் "வடநூலார் பொருள் பற்றிப் பால் கூறாமல் சொல் பற்றிப் பாவனையால் பால் கொண்டு கூறுமாறு போலப் பாவித்துக் கொள்ளற்பாலவாய இலக்கணம் பல கூறுப ஆதலின், விகுதி முதலாயவை முதல்நிலையோடு கூடி வழங்காவிடத்தும் அச்சொல்லில் அவை புணர்ந்து கெட்டன எனப் பாவனையாற் கோடல் அவ்வடமொழிக்கே உரிய சிறப்பியல்பு ஆயிற்று.

"இனி, தமிழ் நூலார் பாவனையால் ஒன்றும் கொள்ளாமல், பொருட்கண் உள்ள இயல்பு பற்றியே ஆண்மை பெண்மையும் ஒருமை பன்மையும் பிறவும் கூறுப ஆகலின், விகுதி முதலாயவை முதனிலையொடு கூடி வழங்குமிடத்து விகாரமின்றி வழங்குதலும், விகாரம் பெறுமிடத்து முழுதும் கெடுதலாகிய விகாரம் பெறின் ஆண்டு இன்னது கெட்டது என்று அறிதல் அரிதாகலின், முழுதும் கெடலின்றி, சிறு மரம் காலத்தால் பெரிதாகலும் பெரு மரம் தச்சனால் சிறிதாகலும் அவை நெருப்பால் கரியாகலும் போல, யாதானும் பிறிது ஒரு விகாரம் பெற்று வழங்கலும் தமிழ் மொழிக்கே இயல்பாயிற்று.

" இவ்வாறு இரு மொழிக்கும் வேறுபாடு மிக உடைமையான், வடமொழிக்கே உரிய அந்தர்பாவிதணிச்சு முதலாய இலக்கணங்களை ஆசிரியர் தமிழில் கொள்ளாராயினர். அங்ஙனமாகவும் தம்மை அவரினும் நுண்ணிதின் உணர்ந்தாராக மதித்துப் பிரயோக விவேக நூலார் முதலாயினர் (இலக்கணக் கொத்து நூலார், சிவஞான முனிவர்) மரபு நிலை திரியப் பல கூறித் தொல்காப்பியனர் கருத்து உணராது, 'தபு என்பதை அந்தர்ப்பாவிதணிச்சு என்பர் தொல்காப்பியனர்' எனவும் கூறினர். அவை எல்லாம் இலக்கணம் ஆகாமை அறிக" என்று குறிப்பிட்டுள்ளமை காண்க. – பா. வி. 219

'திங்கள் முன்வரின் இக்கே சாரியை' – தொ. எ. 248

'திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன' – தொ. எ. 286

'இக்கின் இகரம் இகரமுனை அற்றே' – தொ. எ. 126

என்னும் விதிகளால், ஆடி – சித்திரை முதலிய திங்கட் பெயர்கள் ஏழாவதன் பொருளில் வினையொடு முடியுங்கால் ஆடிக்குக் கொண்டான் – சித்திரைக்குக் கொண்டான் (ஆடி மாதத்தில், சித்திரைமாதத்தில்) என வரும். இவை நான்கன் உருபு ஏற்குங்காலும் ஆடிக்குக் கொண்டான் முதலாக வரும். இடம் நோக்கிப் பொருள்கொள்க.

சுரிதகம் என்ற செய்யுளுறுப்பின் பொருள் விளக்கப்பட்டது.

'சொல்வேறு படாஅது பொருள்வேறு படுதலும்
பொருள்வேறு படாஅது சொல்வேறு படுதலும்
பொருள்சொல் ஒருங்கே போய்வேறு படுதலும்
ஒருமூன்று என்பர் தொடர்மொழி இயல்பே' – இ. கொ. 126

'பலபொருட்கு ஒருவடிவு ஆகும் பதங்களை
ஓசையொடு கூறுவர் உயர்ந்தோர் அவைதாம்
தனிமொழி தொடர்மொழி எனும்இரண் டினும்வரும்' – 126

என்ற இலக்கணக்கொத்து நூற்பாவினையும் நோக்குக.





## விகரணி முதலியன

41. பகுதிக்குஉரிய விகரணி ஈரைந்தும்;
பாணி செப்பும்
தொகுதிக்கு உரிய லகாரம்
இடைநிலை தோய் இறுதி;
விகுதிக்கு உரிய லிங் - லோட்டு
வியங்கோள்; விதிப்பொருட்டாம்
தகுதிக்கு உரிய கிருத்தியம் -
வேண்டும், தகும், படுமே.

இது, சில எழுத்திற்கும் சில பிரத்தியயத்திற்கும் சம்ஞை என்னும் குறியீடு கூறுகின்றது. பகுதிப் பின் நிற்றற்குரிய எழுத்துக்கள் பத்துவகை விகரணியாம். வினை செயல்மருங்கின் காலமொடு வருவன ஆகிய காலம் உணர்த்தும் இடைநிலைதோய் இறுதி தச லகாரமாம். அவற்றுள் வியங்கோள், லிங் எனவும் லோட்டு எனவும் இருவகையாம். வேண்டும், தகும், படும் என்னும் மூன்றும் கிருத்தியப் பிரத்தியயமாம் என்றவாறு.

பாணி – காலம்.

'முதல்நிலைப் பின்னரும் இடைநிலை முன்னரும்
மேவிய எழுத்தே விகரணி என்ப'

'தவ்வியம் இக்குத் தவ்வியம் அநியம் என்று
இவ்வகை மூன்றும் கிருத்தியப் பிரத்தியயம்'

இவை உரைச்சூத்திரம்.

உ–ம்:

உண்ணப்படும், உண்ணுநின்றான்,

'சொல்லுக சொல்லை' – கு. 645

'வினைகலந்து வென்றீக' – கு. 1268

'தேமலர் அங்கண் திருவே புகுதக' – சீவக. 2130

'இன்பத்தின் பக்கம் இருந்தைக்க' – நாலடி. 79

'அறைகுவன் சொல்லே' – ந. 258

'கூடிப் பெருகுவம்' கு. 1328

என் விகரணி எழுத்துக்கள் ஏழு வந்தன. ஒழிந்த மூன்றும், வந்த வழிக் காண்க.

அநாதி, ஆதி என அலுக்காயும் லுக்காயும் வந்தாற்போல, அறைகுவன், அறைவன் – பெறுகுவம், பெறுவம் என வரும்.

உண்ணுநின்றான், உண்ணுவோம் – என்புழி அலுக்காயே வந்தது. உண்டான் என்பது அஸ்தி என்பது போல லுக்காயே வந்தது.

'அஅஉஊ எனும் நான்கு உயிரும்
த-தை-கு என்னும் உயிர்மெய் மூன்றும்
விகரணி உயிர்சில மெய்ஊர்ந்து வருமே
ஏனை மூன்றும் ஈண்டுஇல என்பர்'

இஃது உரைச் சூத்திரம்.

த-ட-ற ஒற்று – இன் முதலாகிய காலம் காட்டும் இடைநிலையோடு நீங்காத அன் ஈறு முதலியவற்றை விரித்து லகாரமாதல் காண்க.

இனி, வியங்கோள் ஆவன – வாழியர், வாழிய, வாழி, வாழ்க என ஆசீர்வாதம் என்னும் வாழ்த்தற் கண்ணும்,

'பரந்து, கெடுக உலகுஇயற்றி யான்' – கு. 1062

'பொற்பாவாய், நீருய் நிலத்து விளியரோ' நாலடி. 266

எனச் சாபத்தின் கண்ணும்,



'தேமலர் அங்கண் திருவே புகுதக' – சீவக. 2130

'எந்தைவருக, எம்மான் வருக' – நே. சொ. 13 மேற்.

என வேண்டிக்கோடலாகிய பிரார்த்தனைக் கண்ணும், ஏவலாகிய பிரேரணைக்கண்ணும் வந்தன.

'கங்கையான் நீள்கழலான் காப்பு'

'குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி' –தொ. சொ. 55

'மறப்பது அறிவுஇல்என் கூற்றுக்களே' – கோவை. 87

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படல்' – கு. 958

'இயற்கைப் பொருளை இற்றுஎனக் கிளத்தல்'– தொ. சொ. 19

என விதிப் பொருட்டின்கண்ணும் வந்தன.

உயிர் ஈறும் ஒற்று ஈறுமாய் வரும் இருவகை வியங்கோளையும் லிங் – என்றும், லோட்டு என்றும் கூறுப.

கிருத்தியம் போல லோட்டும் வடநூலார் விதிப் பொருட்டாம் என்பர். அதுபற்றி லோட்டிற்கும் கிருத்தியத்திற்கும் நடுவே தீபகமாக விதிப் பொருட்டாம் என்றும்.

கிருத்திய உதாரணம்:

'ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்' – கு. 653

'நிரந்தம் நினைப்ப தாகநீ நினைக்க வேண்டுமே'

'நீயே என்குறை சொல்லல் வேண்டுமால் அலவ'
– அகநா. 170

'யான் பொருதல் வேண்டும்'
'வெய்யோற்கு அநேகநாள் வேண்டுமால்'–தண்டி. உதாரணம்

'இனைத்துஎன அறிந்த சினைமுதல் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்'
– தொ. சொ. 33

'இன்னன வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னன் சாரியை இன்மை வேண்டும்' - தொ. எ. 131

என்புழிச் செய்யும் என்னும் முற்று ஆகாமல் வேண்டும் என்னும் தவ்வியப் பிரத்தியயமாய் வந்தது.

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்' - கு. 960

என்னும் பாட்டில் பரிமேலழகரும் இதனை விதிப்பொருட்டு என்றார். வடமொழியில் கர்த்தவ்வியம் என்பதற்குப் பொருள் செய்யவேண்டும் என்பது.

'இவரால் இக்காரியம் செய்யத் தகும்'

'எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்களைச்
செய்தொழிலால் காணப் படும்' - நாலடி. 350

'கடைநிலத்தோர் ஆயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்' - நாலடி. 133

கீழ்களை - கற்றுணர்ந்தோரை என இரண்டாம் வேற்றுமை விரிந்து நின்றும், உயர்திணைப் பன்மை 'படும்' என்பதனோடு முடிதலின், செய்யும் என்னும் முற்றாகிய ஆற்பநேபதம் அன்றி அநவ்விய கிருத்துள் விதிப்பொருட்டாகிய கிருத்தியம் என்பது தெற்றென அறிக.

இனி,

'உள்ளப் படுவன' - 87

என வரும் திருக்கோவையாருள் சொற்சோதனை காட்டிய 'வஞ்சரை அஞ்சப்படும்' என்பதற்கு அஞ்சத்தகும் என்பர் பேராசிரியர். பரிமேலழகர் அஞ்சவேண்டும் என்பர் ஆதலின், கிருத்தியப் பிரத்தியயம் மூன்றும் ஒன்றற்கு ஒன்று பிரதிபதமாய் இருதிணை ஐம்பால் மூன்றிடத்தினும் நிற்றலின், அநவ்விய கிருத்தாம் என்க.



முற்கூறிய விகரணியுள் - பெறுகுவம், உண்ணுகிடந்தான், உண்ணு இருந்தான், புகுதக - என்புழி, பெறு என்பது பகுதி; கு - என்பது விகரணி; வம் என்பது காலம் காட்டும் லகாரமாகிய இடைநிலை தோய் இறுதி.

புகு என்பது பகுதி; த - என்பது விகரணி; க என்பது லகாரம் என்னும் இடைநிலை தோய் இறுதி.

சொல்லு, அருளு என்பதில் உ - விகரணி பெற்று நின்றாற் போல, பச - சகி, தச என விகரணி பெற்று நிற்கும் முன்னிலை ஏவல் வினைச்சொல். இவற்றுள் லகாரம் என்னும் இடைநிலை தோய் இறுதி குன்றியது 'ஆயும் அல்அந்தம்' (46) என்னும் பாட்டினுள் காட்டுதும். 'திருநுதல்' (37) முதல் இதுவரை கிருத் அந்தம் என்பர். (7)

## விளக்கம்

விகரணி - பகுதிக்குப் பின்னரும் இடைநிலைக்கு முன்னரு மாகப் பெரும்பாலும் வரும் எழுத்து - அ, ஆ, ஈ, உ, த, தை, கு என்ற ஏழும் தமிழில் விகரணி எழுத்துக்களாம்.

வடமொழியுள் தசவிகரணிகள் :

| | | |
|---|---|---|
| 1. | ப்வாதி | (பவதி) |
| 2. | அதாதி | (அத்தி) |
| 3. | ஜுஹோத்யாதி | (ஜுஹோதி) |
| 4. | திவாதி | (தீவ்யதி) |
| 5. | ஸ்வாதி | (ஸுநோதி) |
| 6. | துதாதி | (துததி) |
| 7. | ருதாதி | (ருணத்தி) |
| 8. | தநாதி | (தநோதி) |

9. க்ரியாதி (க்ரீணுதி)

10. சுராதி (சோரயதி)

வடமொழியில் கூறப்பட்ட அத்தி, ய, ந என்ற மூன்றும் தமிழிற்கு வாரா.

தசலகரம்:

| | | |
|---|---|---|
| லட் | — | நிகழ்காலம். |
| லேட் | — | வேதத்தில் முக்காலமும். |
| லங், லுங், லிட் | | இறந்தகாலம். |
| ல்ருட், ல்ரங், லுட் | | எதிர்காலம். |
| லோட் | — | விதித்தல். |
| லிங் | — | விதித்தல், வாழ்த்தல் முதலிய. |

இவை காலம் காட்டும் இடைநிலைகள் விகுதியோடு சேர்ந்து பொருள்படுவன.

காலங்காட்டும் இடைநிலையோடு கூடிய விகுதி லகாரம் எனப்படும். வடமொழியில் இவை பத்தாகும். இவற்றுள், உயிரீற்று ஒற்றீற்று வியங்கோள்கள் லிங் எனவும் லோட் எனவும் பெயர் பெறும். தமிழில் ன், ள், ர், ம், து, று, அ—என்பன காலங் காட்டும் இடைநிலையோடு கூடும் இறுதியாம். தாமே காலங்காட்டும் விகுதிகள் ப, மார், கு, டு, து, று, கும், டும், தும், றும், அல் முதலியன.

வேண்டும் – தகும் – படும் என்பன ஒன்றனைச் செய்தல் வேண்டும் என்ற விதிப்பொருளில் வரும் விகுதிகளாம்.



உண்ணப்படும் அ; உண்ணு நின்றான் – ஆ; வென்றீக – ஈ; சொல்லுக – உ; புகுதக – த; இருந்தைக்க – தை; அறைகுவன், பெறுகுவம் – கு.

அலுக்கு என்பது பெற்று வருதலையும், லுக்கு என்பது கெட்டு வருதலையும் குறிக்கும்.

அநாதி – அந் என்ற விகரணி பெற்றது. ஆதி – விகரணி கெட்டது. அறைகுவன், அறைவன் – விகரணி பெற்றும் கெட்டும் வந்தன. உண்ணுவோம் – விகரணி பெற்றே வந்தது; உண்டான் என்பது விகரணி கெட்டே வந்தது.

வியங்கோள் வாழ்த்து, சபித்தல், வேண்டிக்கோடல், ஏவல், விதித்தல் என்ற பொருட்கண் வரும்.

வடமொழியில் கிருத்தியப் பிரத்தியயம் மூன்று எனப்பட்டது. அவை தவ்வியம் (கர்தவ்யம்) இக்குத்தவ்வியம் (போக்தவ்யம்) அநீயம் (கரணீயம்) என்பன. அவைபோலத் தமிழில் வேண்டும் தகும் படும் என்ற மூன்றும் இது செயல் வேண்டும் என்று குறிப்பிடும் விதிப்பொருளவாம் விகுதி நிலையினவாக வரும்.

அநவ்வியம் – இடைச்சொல், உரிச்சொல் அல்லாதது.

வேண்டும் என்பது செய்யும் என்னும் முற்றுகாமல் விதிப் பொருளில் வரும் விகுதியாக வரும். அஞ்சப்படும் என்பதற்குப் பேராசிரியர் அஞ்சத்தகும் எனவும், பரிமேலழகர் அஞ்சவேண்டும் எனவும் பொருள் செய்தலின், வேண்டும் – தகும் – படும் என்பன ஒருபொருட் கிளவிகளாம். இவை வினைமுற்றுக வரும் இடைச் சொற்களாம்.

'கற்றுணர்ந்தோரைத் தலைநிலத்து வைக்கப் படும்'

வைக்கப்படும் என்ற வினைமுற்றிற்கு எழுவாய் நிலையில் கற்றுணர்ந்தோர் என்ற உயர்திணைப் பன்மைப் பெயர் இருத்தலி-

னாலும், செய்யும் என் முற்று பல்லோர் படர்க்கைக்கண் வாராது ஆகலானும், வைக்கப்படும் என்பது செய்யும் என் முற்று ஆகாமல் விதிப்பொருளில் வரும் பொது வினைமுற்றாவது காண்க.

இலக்கணக்கொத்து ஆசிரியர்,

'வேறுஇல்லை உண்டுயார் வேண்டும் தகும்படும்
வினைபெயர் எச்சம் வியங்கோள் பத்தும்
திணைபால் இடம்எலாம் செல்லும் என்ப' – 85

என்னும் நூற்பா உரையுள்,

"வேண்டும்முதல் மூற்றும் முற்றிற்கும் எச்சத்திற்கும் பொதுவாய செய்யும் என்னும் வாய்பாடு அன்றோ எனின்,

'ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்'

யான் போகல் வேண்டும் – நீ உரைத்தல் வேண்டும் என உயர்திணைப் பல்லோர் படர்க்கை தன்மை முன்னிலைக்கண் வருதலின், அன்று என்க. இம் மூன்றும் ஒரு பொருட்கிளவி யாய்த் தொழிற் பெயராய்த் (பகுதியாகிய முதல்நிலைத் தொழிற் பெயர்) தேற்றப் பொருள்பட்டே நிற்கும் என்க.

தேற்றப் பொருளாவது – இக்காரியம் செய்தலே தக்கது, தகுதி, பொருத்தம், துணிவு, தெளிவு, நன்மை, அமைதி, முடிவு, வேண்டுவது; இக்காரியம் செய்யாமை வழுவே, இழிவே, சிறுமையே, தீமையே, குற்றமே எனப் பொருள்படுதல்.

'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்'
– தொ. சொ. 33

'இனைத்தென்று அறிபொருள் உலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்' – ந. 399

'இன்என வருஉம் வேற்றுமை உருபிற்கு
இன்என் சாரியை இன்மை வேண்டும்' – தொ. எ. 131



'நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்' – கு. 960

'வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்'
– ந. 389

எனவும், இவரால் இக்காரியம் செய்யத்தகும், இக்கூழ் அருந்தத்தரும், இச்சோறு உண்ணத்தகும், இந்நீர் குடிக்கத் தகும் எனவும்,

'முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்' – கு. 824

'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்' – கு. 698

'கற்றறிந்தோரைத் – தலைநிலத்து வைக்கப் படும்'
– நாலடி 133

'கீழ்களைச் – செய்தொழிலால் காணப் படும்' – நாலடி 350

எனவும்,

'இருவினைக்குத் தக்க உடல்'

'கொள்ளப்படாது மறப்பது அறிவில்
என் கூற்றுக்களே' – கோவை 87

எனவும் வரும். இங்ஙனம் வரும் செய்யுள்கட்கெல்லாம் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினார் முற்றாகவும் எச்சமாகவும் பொருள் உரைக்கின் வழுவாம் என்று கருதி, வியங்கோள் பொருட்டு என்றும், விதிப் பொருட்டு என்றும், தகுதிப்பொருட்டு என்றும், வேண்டுவது என்றும் தமக்கு வேண்டியவாறே பொருள் எழுதிச் சொற்குணம் வாளாபோயினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலுள் 37ஆம் நூற்பா முதல் 41ஆம் நூற்பாவாகிய இது முடிய வினையாலணையும் பெயர் பற்றிய செய்தி கூறப்பட் டுள்ளது என்பர். 7

## பெயரும் வினையும் பொதுவாவனவும்

42. அடைமொழியாம் தொகை, தத்திதன்,
காரகமாம் சுபந்தம்;
நடைமயிலே! வினைஎல்லாம் திங் - அந்தம்;
நற்ருது வினை
புடைபெயர்ந்தும் தனைச் சொல்பெயர்
பாவம்; பொதுவில் நிற்கும்
இடைநிலை, யார், உண்டு இல்,வேறு,
எச்சம் அவ்யயம் என்று அறியே.

*இதுவும் அது. தொகை முதல் மூன்றும் சுப்அந்தமாம். வினையெல்லாம் திங் – அந்தமாம். முதல்நிலைத் தொழிற்பெயரும் உம்மையால் புடைபரந்த தொழிற்பெயரும் ஆகிய திங்பாவமும் கிருத்பாவமும் பாவபதமாம். திணைபால் இடம் மூன்றிற்கும் பொதுவாய் வருகின்ற இடைச்சொல் முதலாகிய அறுவகைச் சொல்லும் அவ்வியயமாம் என்றவாறு.*

*'அடைமொழி' என்ற விதப்பான், பாவபதமும் சுபந்தமாம். நன்னூலாரும் 'வினையின்பெயரே' (286) என்புழி வினைதன்னைச் சொல்லும் பெயர் என்றார்.*

*முதல்நிலை புடைபரத்தல் ஆவது –* **சாமானியம்** *(30) என்னும் பாட்டுள் காட்டிய திங் முதலாகிய பாவபதப் பிரத்தியயங்கள் என்க.*

*பறவை, உடுக்கை, துடைப்பம், கிடக்கை என முறையே கருத்தாவும், கருமமும், கரணமும், அதிகரணமும் ஆகிப் புடைபரந்த பாவபதம் வரும். புனைந்துரை – பெய்துரை –*

**'கெடுவாக வையாது'** – கு. 117

**'அறிகொன்று அறியான்'** – கு. 638

*என்னும் முதல் நிலைகளும் உரைத்தல் – கெடுதல் – அறிதல் எனப் பொருள் விரிந்து சொல் விரியாத திங்பாவ பதமாம்.*



*இடைச்சொல்லும் எச்சமும் அல்லாத நான்கும் வினைக் குறிப்பு ஆதலின், அவற்றைக் கம்மியமானக் கிரியையாய் நிற்கும் அவ்வியயம் என்பர். இருதிணை ஐம்பால் மூவிடமாய் அடங்கிய லிங்கத்திரயமும் புருடத்திரயமும் வசனத் திரயமும் ஆன மூன்றிற்கும் பொதுவாய் நிற்றலின், இடைச்சொல் முதலிய ஆறினையும் அவ்வியயம் என்பர்.*

*உயர்திணை முப்பாற்கும் உரிய யார் என்னும் பிரச்சின பதம்,*

**'ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெம்**
**கோதைகூட் டுண்ணியதான் யார்மன் — போதெல்லாம்**
**தாதோடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்**
**தூதோடு வாராத வண்டு'** – *பழம்பாடல்*

*என்றும்,*

**'நான்ஆர் என்உள்ளம்ஆர் ஞானங்கள்ஆர்'** – *திருவா.* 216

*என்றும், 'நீ யார்' என்றும் இருதிணை ஐம்பால் மூவிடத்தும் வருதலானும், அவ்வியயம் ஆயிற்று.*

**'மயில்கண் டன்ன மடநடை மகளிர்'** – *முருகு.* 205

*எனவும்,*

**'மயில் எனப் போந்து'** – கோவை. 224

*எனவும்,*

**'மணி மயில் தொழில்'** – *பரி–திரட்டு.* 1-63

*என்வும், திருமுருகாற்றுப் படையினும், திருக்கோவையாரினும், பரிபாட்டினும் முறையே மயிலை நடைக்கு உவமை ஆக்கலின், 'நடைமயிலே' என்றும்.*

*வடமொழி உதாரணம் —*

**கிம், அத்தி, நாத்தி, பிருதக்கு**

*இவை யார், உண்டு, இல்லை, வேறு என்பனவற்றின் பிரதிபதம்.*

**பிரச்சினம், சற்பாவம், அபாவம், விபாகம்**

*என்பன இந்நான்கிற்கும் பெயர். அமரசிங்கம்* என்னும்

ÉCOLE FRANÇAISE BIBLIOTHÈQUE PONDICHÉRY D'EXTRÊME-ORIENT

நிகண்டில் மூன்றும் காண்டத்துள் அவ்வியய வர்க்கமெல்லாம் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆம் ஆதலின், உரிச்சொல்லும் இடைச்சொல்லுள் அடங்கும் என்க.

'ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது' - குறள் 1176

இது சூசக அவ்வியயம்.

'உருஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறுஅஅய் வாழிய நெஞ்சு' - குறள் 1200

என்புழி வாழிய என்பது வாசக அவ்வியயம். (8)

## விளக்கம்

தொகை, தத்திதன், காரகம் என்பன பெயர் விகுதி பெறுஞ் சொற்களாம். வினையெல்லாம் வினை விகுதி பெறும் சொற்களாம்.

உரை, கெடு, அறி என்பன சொல்லளவில் முதல்நிலைத் தொழிற் பெயராய்ப் பொருள் அளவில் விகுதி பெற்ற தொழிற் பெயராகும்.

வேறு இல்லை உண்டு யார் என்பன குறிப்பு வினை-முற்றாயினும், எச்சங்கள் இரண்டும் தெரிநிலை குறிப்பு வினைக-ளாயினும், இடைச்சொல் போல இவை இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாதலின் இடை உரியின் பெயரான அவ்வியயம் என்று கொள்ளப்பட்டன.

யார் என்ற வினைவினை பண்டு உயர்திணை முப்பாற்கும் உரித்தாய் இருந்தும், பிற்காலத்தில் திணை பாலிடங்களுக்குப் பொதுவாயினமையின் அதுவும் அவ்வியயம் ஆயிற்று.

மயிலை நடைபற்றி உவமங்கோடற்கு மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

கிம் – யார்; அஸ்தி – உண்டு; நாஸ்தி – இல்லை; பிருதக்கு – வேறு.



கிம் - பிரச்சினமாகிய வினைவைத் தெரிவிக்கும்.

அஸ்தி – உண்டு என்னும் சத் – பாவத்தைத் தெரிவிக்கும் சொல்.

நாஸ்தி – இல்லை என்னும் அபாவத்தைத் தெரிவிக்கும் சொல்

பிருதக்கு – பிரித்தல் என்னும் விபாகத்தைக் குறிக்கும் சொல்.

ஓஒ – ஓசையாய்க் குறிப்பினால் பொருள் உணர்த்தும் இடைச்சொல்.

வாழிய – சொல்லாய் வெளிப்படையாகப் பொருளுணர்த்தும் இடைச்சொல்.

'வேறுஇல்லை உண்டுயார் வேண்டும் தகும்படும்
வினைபெய ரெச்சம் வியங்கோள் பத்தும்
திணைபால் இடமெலாம் செல்லும் என்ப' – இ. கொ. 85

முதல்நிலைத் தொழிற்பெயரும், முதல்நிலை திரிந்த தொழிற் பெயர்களும், விகுதிபெற்ற தொழிற்பெயர்களும் பாவபதமாகும். இவை பெயருள் அடங்கும். இவற்றை இலக்கணக்கொத்து நூலார்,

'முதல்நிலை தொழிற்பெயர் முற்றுஈ ரெச்சமென்று
ஐவகை யுள்ளே அடங்கும் வினையே' – இ. கொ. 69

என்ற நூற்பாவில் வினையுள் அடக்கியுள்ளார்.

திணைபால் இடங்களுக்குப் பொதுவாய் நிற்கும் இடைச் சொற்கள், யார், உண்டு, இல், வேறு, எச்சம் என்பன இடைச் சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய அவ்வியயமாம். யார், உண்டு, இல், வேறு என்பன குறிப்பு வினைமுற்று என்று தமிழ்நூலார் கூறுவர்.

திங் முதலாகிய பாவபதப் பிரத்தியயங்கள் – வினைமுற்றுச் சொல்லின் பகுதியாகிய தொழிற்பெயர் ஏற்று வரும் தல் – அல் – அம் – ஐ முதலிய விகுதிகள்.

பறவை – பறப்பது – எழுவாய்; ஐ – விகுதி.

உடுக்கை – உடுக்கப்படுவது – செயப்படுபொருள்; ஐ விகுதி.

துடைப்பம் – துடைக்க உதவுவது – கருவி; அம் – விகுதி.

கிடக்கை – கிடக்க இடமாவது – இடம்; கை – விகுதி.

இவை விகுதிபெற்ற தொழிற் பெயர்களாம். 8

## மூவகைக் காலம் முதலியன

43. காலத்திரயம், புருடத்திரயம்,
கலந்த லிங்கச்
சீலத்திரயம், வசனத்திரயம்,
சிறந்தவற்றுள்
கோலப் பெண், ஆண்,அலி என்று
இவை ஆகும் குறிவசனம்,
நிலத்தடங்கண் நல்லாய்!
எழுவாய்க்கு நிகழ்த்தினவே.

44. பூதத்தொடு, வர்த்தமானம்,
பவிடியம் போது;வயின்
ஓதத்தகைய பிரதம, மத்திம,
உத்தமம் ஆம்;
மேதக்க சேடம் இலேசம்;
பகுதிப்பொருள்விகுதி
மாதர்ச் சுவார்த்தம் என்று;
தோடாபவாதம் வழுஅமைப்பே.



இவ்விரண்டும் அவை. காலத்திரயம் முதலாக வசனத்திரயம் ஈறுகப் பன்னிரண்டுள் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்றும் முறையே பூத காலம், வர்த்தமான காலம், பவிடியத் காலமாம். படர்க்கை முன்னிலை தன்மை என்னும் இம்மூன்றும் பிரதமபுருடன் மத்திமபுருடன் உத்தமபுருடன் எனஆம். ஆண்பால் பெண்பால் அலிப்பால் என்னும் இம்மூன்றும் புல்லிங்கம், திரீலிங்கம், நபுஞ்சக லிங்கம் எனஆம். எழுவாய்க்குக் கூறிய ஒருமை இருமை பன்மைக்கு ஏகவசனம் துவிவசனம் வெகுவசனம் என ஆம். சேடம் இலேசம் என்பது உம்மைத்தொகை. இவை முறையே குறையும் மிகையும் ஆம். நூநாதிகம் என்பதும் அது. பகுதிப் பொருள் விகுதி சுவார்த்தமாய் வரும் பிரத்தியயம். வழுக்காத்தல் தோஷாபவாதமாம் என்றவாறு.

'குறியே லிங்கம் கூறுங் காலே'

இஃது உரைச் சூத்திரம்.

சத்துவ குணத்தைப் புல்லிங்கம் எனவும், ரசோகுணத்தைத் திரீலிங்கம் எனவும், தமோகுணத்தை நபுஞ்சகலிங்கம் எனவும் இவை சாத்திரலிங்கம் எனவும் கொள்வர். இக்குணங்களோடு கலவாத பொருள் ஒன்றும் இல்லையாம். ஆதலின் இக்குணங்களோடு கூடிய பொருளை உணர்த்தும் சொல்லையும் உபசாரத்தால் அவ்வாறு கூறுவர் என்று பாணினி முதலாயினரும் சைமினியும் நாலாம் அத்தியாயத்தில் கூறினர் என்க. இவ்வாறு வரும் சாத்திரலிங்கத்தை லௌகிகலிங்கம் என்று கொள்ளாது ஒழிக. இம்மூன்று குணமும் மிகுதி குறை ஒப்பாய் நிற்றல் பற்றி ஒருபொருட் சொல்லே மூன்று லிங்கமுமாம் என்பர்.

'மிகுதி குறை ஒப்புஎன வருஉம் மூன்றும்
உபசயம் அபசயம் சமம்எனல் ஆகும்'

இஃது உரைச் சூத்திரம்.

'இலேசம் மிகையே லவம்என மொழிப
வெகுளக் கிரகணம் என்பதும் அதுவே
குறையே சேடம் கூறுங் காலே'

இஃது உரைச் சூத்திரம்.

ஆகாரஇறுதி அகரஇறுதி இயற்றே என்னுது,

'ஆகார இறுதி அகர இயற்றே' தொ. எ. 221

என்பதும்,

'ஆதியது என்பது அபிகிதகர்த்தா அநபிகிதகர்த்தா'

என்னுது அநபிகிதம் என்பதும், - பி. வி. 14

'செய்த செய்கின்ற செய்யுமென் வாய்பாட்டில்' - ந. 340

என்னுது பாட்டில் என்பதும்,

எடுத்துக்காட்டு என்னுது 'காட்டு' - ந. 22

என்பதும்,

'இல்வாழ்க்கை வழி எஞ்சல்'

என்னுது,

'வாழ்க்கை வழி எஞ்சல்' - கு. 44

என்பதும்,

சீர்தூக்கிச் செயல் என்னுது 'தூக்கிச் செயல்' - கு. 471

என்பதும் சேடமாம். இவ்வாறு உரைத்ததனல் பிறிது ஓர் இலக்கணமும் கொள்ளுதல் உரைகாரர் மதம் என்க. இலேசம் பெரும்பாலும் வருதலின், எழுதிக்காட்டல் வேண்டா ஆயிற்று.

சங்தோபிசிதமும் காரிகையும் போல இலக்கிய இலக்கணங்கள் ஒருங்கு தோன்ற 'மாதர்ச்சுவார்த்தம்' என்ரும்.

உ - ம் :

'மாதர் மனேமாட்சி யாள்' - நாலடி. 382

என்றும்,

'கனங்குழை மாதர்கொல்' - கு. 1081

என்றும்,

'குறிஎதிர்ப்பை நீரது உடைத்து' - கு. 221

என்றும்,

'வண்ண வண்டின்குரல் பண்ணே போன்றனவே' - பரிபாடல் 14-4

என்றும்,



'நத்தம் போற் கேடு' - கு. 258

என்றும்,

'சோதி வாயவும் கண்ணவும் சிவந்தன'

என்றும்,

நீலகம், மௌத்திகம், படகம் என்றும், இருவகை மொழியினும் சாமானிய தத்திதனில் வரும்.

'கௌத்திரி பிலவே' - எ. 307

என்பது போல வரற்பாலது,

'திரிபுஇடம் இன்றே' - தொல். சொ. 101

என்பதும்,

இரு பெயரோடும் என்பது,

'இருவயின் பெயரோடும்' - ந. 89

என்பதும் அவ்வியய தத்திதனில் வரும். பாவ தத்திதனில் வருதல்

'முட்டாது கூறிய' - பி. வி. 34

என்னும் பாட்டினுள் காட்டினும்.

வழுவற்க என்றலும் வழு அமைத்தலும் என வழுக்காத்தல் இரு வகைப்படும். குறித்த பொருளை அதற்கு உரிய சொல்லால் சொல்லுக என்றல் வழுவற்க என்றலாம். குறித்த பொருட்கு உரிய சொல் அன்று ஆயினும் ஓராற்றுன் அப்பொருளை விளக்குதலின் அமைக என்றல் வழு அமைத்தலாம். அதனை வடநூலார் **நிரங்குசாக்கவய** : என்று போவர்.

ஆண்டு உரைத்த காலமாவது - மலை நிற்கும், யாறு ஒழுகும், தீச்சுடும் என்றலின் நிகழ்வு அல்லது இல்லை என்பாரும், ஒருவர் நடக்கும் தொழிற்கண் ஒரு காலம் முன்சென்று ஒழிய ஒரு காலம் பின் செல்லுமாதலின் இறப்பும் எதிர்வும் ஆம் என்பாரும், இவை எல்லாம் ஒரு பொருளின் பண்பும் தொழிலும் அல்லது காலம் என்ற சொற்கு ஒரு பொருட்பேறு இல்லை என்பாரும் என ஆசிரியர் நால்வர் ஆதலின், அகத்தியர்,

**'உலக வழக்கம் ஒருமுக் காலமும்**
**நிலைபெற உணர்தரு முதுமறை நெறியால்'**

என வேதம் கூறிற்று என்பர். முன் பிறந்தான், பின் பிறந்தான், மூத்தான், இளையான் என்பனவற்றை உதாரணம் காட்டிக் காலம் உண்டு என்பாரும் உளர். (9, 10)

## விளக்கம்

நூனம், சேடம் – குறைவு;

லவம், வெருளக்கிரகணம், அதிகம், இலேசம் – மிகை.

சத்துவம் – சாந்த நிலை;

ரசோகுணம் – கோப நிலை;

தமோகுணம் – மந்த நிலை;

சாத்திரலிங்கம் – மொழிக்குப் பயன்படும், பாவனையால் கொள்ளப்பட்டுள்ள சொல் பற்றிய பால் பாகுபாடு.

சைமினி இயற்றிய நூல் – பூர்வமீமாஞ்சை.

லௌகிகலிங்கம் – உலகியலில் பொருள் பற்றிக் கொள்ளப் படும் பால்பாகுபாடு. ஒரே பொருளில்வரும் பத்தினி – பெண்பால்; தாரம் – ஆண்பால்; களத்திரம் – அலிப்பால். இம் மூன்று சொற்களும் முறையே கோபம், சாந்தம், மந்தம் மிகுதி பற்றி, மனைவி என்ற சொல்லின் பரியாயச் சொற்களாய் முப்பாலும் பெற்றமை காண்க.

அகரம், அநபிகிதம், பாட்டில், வாழ்க்கை, தூக்கி – என்பன குறையாய் வந்தன. இவற்றின் முழுச்சொற்கள் முறையே அகரஇறுதி, அநபிகிதகருத்தா, வாய்பாட்டில், எடுத்துக்காட்டு, இல்வாழ்க்கை, சீர்தூக்கி – என்பனவாம்.

இவற்றைச் செய்யுள் விகாரத்தால் ஏற்பட்டன என்று இலக்கணக்கொத்து ஆசிரியர் 89-ஆம் நூற்பாவுரையுள் விளக்கியுள்ளார்.



சந்தேகிபிசிதம் – வேகத்தில் உக்தை முதலிய சந்தோ-பேதங்களுக்கு அக்கரசங்கியை கற்பிப்பதாகிய வேதாங்க நூலாகும் சந்தோவிசிதி.

காரிகை – யாப்பருங்கலக்காரிகை. அதன்கண் அமைந்துள்ள 'குறிலே நெடிலே குறிலிணை' முதலிய காரிகைகள் இலக்கணம் இலக்கியம் என்ற இரண்டனையும் சுட்டுவது காண்க. வடமொழி-யிலுள்ள சந்தோபிசிதமும் அது. மாது என்ற சொல் பகுதிப் பொருள் விகுதியாகிய அர் பெற்று மாதர் என்றாகியதைச் சேர்த்து 'மாதர்ச் சுவார்த்தம்' என்றது, இலக்கியமும் இலக்கணமும் உடன் கூறிற்றும். மாதர் மனைமாட்சியாள் என ஒருமையாக வருதலும் உண்மையின் 'அர்' பலர்பால் விகுதியாகாது, ஈண்டுப் பகுதிப் பொருள் விகுதி எனப்பட்டது. நீர் – நீரது எனவும், பண் – பண்ணை எனவும், நத்து – நத்தம் எனவும், வாய் – வாய எனவும் பகுதிப்பொருள் விகுதி பெற்றன.

நீலம் – நீலகம் எனப் பகுதிப் பொருள் விகுதி பெற்றது.

முக்த்து – மௌத்திகம் எனப் பகுதிப்பொருள் விகுதி பெற்றது.

படம் – படகம் எனப் பகுதிப்பொருள் விகுதி பெற்றது.

கொளத்திரியில – கொளத்திரிபிடம் இன்றே,

இரு பெயராகும் – இருவயின் பெயராகும்,

சொல் தெரிதல்–சொன்மை தெரிதல். – என விகுதி பெற்றன.

இவ்வுதாரணங்களோடு, கொம்பர் – கொம்பு என்பதனையும் காட்டி, இவற்றைத் தமிழ் நூலார் பகாப்பதமாகவே கொண்டு விகுதியைப் பகுதிப்பொருள் விகுதி எனப் பெயரிட்டு வழங்குவர் எனப் 'பகாப்பதச் சொற்பட பகுபதம் ஆகியும்' (117) என்ற தொடருக்கு விளக்கவுரை வரைவர் இலக்கணக் கொத்து ஆசிரியர்.

பாவ தத்திதனில் வருதல் – ஆண், பெண் என்பனவற்றை ஆண்மை, பெண்மை என்பது.

*நிரங்குசாக் கவய:* – வரையறையாகிய அங்குசத்தைப் பயன் கொள்ளாது நெகிழ்த்துவிடும் கவிகள்; தோட்டி நீவிய கவிகள்.

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்'.
– தொ. சொ. 240

என்ற விதியான், மலை நிற்கும் என நிகழ்காலச் செய்யும் என் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. 'முந்நிலைக் காலமும்' என்ற நூற்பா வடமொழி மரபு பற்றியது எனவும், முக்காலத்தினும் ஒத்தியல் பொருளை 'முப்பஃது என்ப' (எ – 1) என்றாற்போல எதிர்காலத்தால் கூறுவதே தமிழ்மரபு எனவும் சிவஞானமுனிவர் சூத்திர விருத்தியுள் குறிப்பிட்டுள்ளார். காலம் மூன்று என்பாரோடு கூட்டக் காலம் பற்றிய கருத்து வேறுபாடுடையார் நால்வர் ஆசிரியர் ஆதல் காண்க. 9, 10

## உபசர்க்கம் முதலியன

45. வினைப்பெயரோடு அவ்வயயமாம்
கை – ஆதி மிடைந்து நின்ற-
தனைப் பெயரிட்டது உபசர்க்கம்;
சுட்டினுள்தான் அகரத்தினைப்
பெயரிட்டது தற்சத்தம்;
யற்சத்தம் யா - எகரம்;
முனைச் செயப்பாட்டுவினை பாவகன்மணி
மொய்த்த யக்கே.

இதுவும் அது. வினைப்பெயரோடு கூடி நின்ற கை முதலாகிய அவ்வியயங்கள் உபசர்க்கமாம். வினைப்பெயர் எனவே வினைச் சொல்லோடு வருதலும் கொள்க. அகரச்சுட்டு முதலாகிய



சொற்கள் தற்சத்தமாம். யா என்னும் வினாப்பெயரும் எகரம் முதலாகிய வினாப்பெயரும் யற்சத்தமாம். செயப்பாட்டு வினை கர்மணிப் பிரயோகத்தின்கண்ணும் திங் பாவப்பிரயோகத்தின் கண்ணும் வந்த யக்காம் என்றவாறு.

அகரத்தையும் எகரத்தையும் நிலைமொழியாய் நிறுத்தித் தொல்காப்பியர் முடித்தலின், அவ்விரண்டு எழுத்தையும் ஆகு பெயராகவும் கொள்க.

உ-ம்:

கைமிகல்,
**'கலந்தாரைக் கைவிடுதல்'**
**'கைதூவேன்'** – கு. 1021
**'ஞாலம் கருதினும் கைகூடும்'** – கு. 484

எனக் கை என்பது உபசர்க்கமாய் வினைப்பெயரோடும் வினைச் சொல்லோடும் வந்தது.

**'நூல்கால் யாத்த மாலை வெண்குடை'** – நெடுநல் 184
எனவும்,
**'உயிரின் தலைப்பிரிந்த ஊன்'** – கு. 258
எனவும்,
**'கல்லாத மேற்கொண்டு ஒழுகல்'** – கு. 845
'மேற்கோள்' எனவும்,
**'மீக்கூறும் மன்னன் நிலம்'** – கு. 385
எனவும்,
**'ஒல்லை உணரப் படும்'** – கு. 826
**'வல்லைக் கெடும்'** – கு. 480

புறங்கொடுத்தல், புறந்தருதல், (புறநா. *312*) புறப்படல், அகப் படல், 'இலம்படு புலவர்' (புறநா. *155*) எனவும் உபசர்க்கம் வரும்.

கை, கால், தலை, மேல், மீ, ஒல்லை, வல்லை, புறம், அகம், இலம் என்பவை உபசர்க்கம். பரிமாறுதல் – வடமொழி உபசர்க்கம் பெற்ற தமிழ் வினைச்சொல்.

வடநூலார் உபசர்க்கம் இருபது என்பர். அதிலோபம், அதிசயம், (தண்டி. 53) என்பன வடமொழி உபசர்க்கம். சிந்தாமணியாரும்

'அதிலோப மாந்தர்' – சீவக. 2986

என்றார்.

'அதி நுட்பம்' – கு. 636

என்பது வினைப்பெயரோடும் வினைச் சொல்லோடும் வாராமையின் அவ்வியயீபாவம் என்க.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு' – கு. 423

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்' – கு. 341

என்பன யற்சத்தம் வந்தபின் தற்சத்தம் வரும்.

இந்நியமம் வடநூலர் மதம் ஆதலின், திருவள்ளுவரும் அவ்வாறு செய்யுள் செய்தார் என்க.

பாவகர்மணியில் வரும் செயப்பாட்டு வினையை யக் என்பர். அன்றியும்,

'பொத்துப் படும்' – கு. 468

'மன்று படும்' – கு. 1138

'சோர்வு படும்' – கு. 405

எனப் பெயர் அடுத்தும் வரும் படுவை 'யக்கு' என்றும், இயற்றப்படுதல், வேறுபடுக்கப்படுதல் எனத் தொழிற்பெயர் அடுத்துவரும் படுவை 'ய' என்றும் கூறுவர். (11)



## விளக்கம்

தொழிற்பெயரோடும் வினையோடும், வினையாலணையும் பெயரோடும் பகுதிக்கு முன் வரும் கை முதலிய இடைச் சொற்களும் அதி முதலிய உரிச்சொற்களும் போல்வன உபசர்க்கம் எனப் பெயர் பெறும்.

தொல்காப்பியனர் உயிர்மயங்கியல் இரண்டாம் நூற்பாவிலும் மூன்று நான்கு ஐந்து ஆறும் நூற்பாக்களிலும் அகரச் சுட்டை நிலைமொழியாக நிறுத்தி வருமொழி புணர்த்தற்கு விதி கூறியுள்ளார்.

'எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்' (தொ. சொ. 35) என்றாற்போல எகர வினவை நிலைமொழியாக நிறுத்தி வருமொழியோடு புணர்த்தும் செய்தியை உடம்பொடுபுணர்த்துத் தாம் வரைந்த நூற்பாக்கள் வாயிலாக விளக்கியுள்ளார்.

கால் யாத்த – கால்; தலைப்பிரிந்த – தலை; மேற்கொண்டு, மேற்கோள் – மேல்; மீக்கூறும் – மீ; புறங்கொடுத்தல், புறந்தருதல், புறப்படல் – புறம்; அகப்படல் – அகம்; இலம்படு புலவர் – இலம், ஒல்லை, வல்லை – என்பன வினைப் பெயர் முதலியவற்றோடு அகத்தொடர்பின்றிப் புறத்தொடர்பே பெற்றன. இலம்பாடு என்பது வறுமை என்னும் பொருள் உடைய, இருசொல் சேர்க்கப்பட்ட உரிச்சொல் ஆதலின், அச்சொல்லில் உள்ள இலம் என்பதனை உபசர்க்கமாகப் பிரிப்பின், படுபுலவர் என்பது இலம்படு புலவர் என்ற பொருள் தாராது என்பதும் குறிப்பிடத்தக்கது. மீக்கூறும் என்பதும் கூறும் என்பதும், புறந்தருதல் என்பதும் தருதல் என்பதும், புறங்கொடுத்தல் என்பதும் கொடுத்தல் என்பதும், புறப்படல் என்பதும் படல் என்பதும், அகப்படல் என்பதும் படல் என்பதும் பொருள் வேறுபாடுடையன. எனவே, கை – கால் – தலை – மேல் என்பன பொருள் வேறுபாடு தாராமலும், மீ – புறம் – அகம் – இலம் –

ஒல்லை – வல்லை என்பன பொருள் வேறுபாடு தந்தும் வினைப்பெயர் முதலியவற்றின் முன் இணைந்து வந்த இடை உரிச் சொற்களாம் என்பது. இவற்றை வடநூற் பெயரைக் கொண்டு இவ்வாசிரியர் உபசர்க்கம் என்கின்ருர்.

உபசர்க்கம் – பெயர் வினைகளின் முன் பொருள் வேறு படுத்தும் வேறுபடுத்தாதும் இணைந்து வரும் இடை உரிச் சொற்கள்.

இவ்வாசிரியர் குறிப்பிடும் பல செய்திகளையும் விடாது தம் நூலுட் கொள்ளும் இலக்கணக்கொத்து நூலார்க்கு இஃது உடன்பாடன்று போலும்.

அதி – மிகுதிப் பொருள் தருவதோர் உரிச்சொல்லாய் வடசொற்களில் உபசர்க்கமாக வரும்.

அதிநுட்பம் – அதி என்பதனை அடுத்து வந்த சொல் வினைப் பெயரோ வினையோ அன்மையின், ஈண்டு அதி என்பது உபசர்க்க மாகாது; அதி நுட்பம் என்பது இடைச்சொல் தொகையேயாம்.

'எப்பொருள்......அப்பொருள்' (கு. 423), 'யாதனின்...... அதனின்' (கு. 341) என்ற முறை வடநூலார் மரபு.

தொழிற் பெயரைச் செயப்படுபொருளாகக் கொண்டுவரும் செயப்பாட்டு வினை யக்கு எனப்படும். (வாழ்தல் விரும்பப்படும்.) மேலும் பெயர்களை அடுத்து வரும் படு என்ற சொல்லும் 'யக்கு' எனப் பெயர்பெறும். வருத்தம் பொத்துப்படும், காமம் மன்று படும், சொற்பொருள் சோர்வுபடும்: – இவற்றில் பெயரை அடுத்துவரும் படு 'யக்கு' எனப்படும் என்பது அறிக.

இயற்றப்படுதல் முதலியவற்றில் தொழிலை அடுத்துவரும் படு 'ய' எனப்படும்.





## தொகை, தொகாநிலை, செய்யாய் என்பன

46. ஆயும் அல்அந்தம், அச்அந்தம்,
அல்ஆதி, அச்ஆதி-இவை

மாயும் மெய்ஈறு, உயிர்ஈறு,
உயிர்ஆதி, மதிநுதலாய்!

தோயும் மெய்ஆதி; சமத்தம், வியத்தம்,
தொகை-விரி; மற்று

ஏயும் பிரேரணை, செய்யாய் எனல்
செய்எனக் குன்றுமே.

இது சில சொற்குப் பெயரும், முன்னிலை ஒருமை வினைச் சொல் குன்றி நிற்பதும் கூறுகின்றது. மெய்ஈறு அலந்தம் எனவும், உயிர்ஈறு அசந்தம் எனவும், மெய்ம்முதல் அலாதி எனவும் உயிர்முதல் அசாதி எனவும் பெயர் பெறும். தொகைப் பதம் சமத்த பதம் எனவும், தொகாப்பதம் வியத்த பதம் எனவும் பெயர் பெறும். செய்யாய் என்பது செய் எனக் குன்றும் என்றவாறு.

'பிரேரணை ஏவல் பேசுங் காலே'

இஃது உரைச் சூத்திரம்.

உ-ம்: ஆல் – அலந்தமும், அசாதியும்;

மணி – அலாதியும் அசந்தமும் ஆம்.

சக்கரன் செல்வம் – மன்னன் குமாரன் – சங்கம் படகம் – வட்டம் பலகை – கமலம் தாள் – என்பன விரி என்னும் வியத்த பதம், அப் பதங்கள் சக்கரச் செல்வம், மன்னகுமாரன், சங்க படகம், வட்டப் பலகை, கமலத்தாள் எனப் பிளவுபட்டு இசையாது ஒருசொல் நீர்மையவாய்ச் சமத்தபதம் என்னும்

தொகையாம். சக்கரனது செல்வம், பன்னனுக்குக் குமாரன், சங்சமும் படசமும், வட்டமாகிய பலகை, கமலம் ஒத்ததாள் எனப் பொருள்பட்டு நிற்கும். அவ்வாறல்லது அது - கு என்னும் விபத்திகளும், உம்மைகளும், உவம உருபுகளும் நின்று அழியா என்க.

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை' - கு. 1151

என்புழி உரையாய் என்பது உரை என நின்றது.

வடநூலுள்ளும் பசஹி என்பது பச எனக் குறைந்து நின்று, பசஹி எனப் பொருள்படும். பஜ, தியச, திசஎன்பனவும் அது. வடநூலார் இவ்வாறு உரைக்கும் கருத்தே பற்றித் தொல்காப்பியரும்,

'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய் என் கிளவி ஆகிடன் உடைத்தே' - தொ. சொ. 450

என்றார். இச்சூத்திரத்திற்கு வடநூலார் மதம் பற்றிச் சேனாவரையர் செய்யாய் என்னும் முன்னிலை ஏவல்வினைச்சொல் செய் எனக் குன்றும் என்று உரைப்பர். இனி, நச்சினார்க்கினியர், செய்யாய் என்னும் எதிர்மறைச் சொல் செய் என்னும் உடன்பாட்டுச் சொல்லாம் என்றும், அது குன்றினது அன்று என்றும் உரைப்பர். செய்யீர் என்பதும் அவ்வாறு பொருள் படுதலின், 'செய் என் கிளவி' - என்பது அன்றியும், 'செய்யும் என் கிளவி ஆகிடன் உடைத்தே' என வேறு ஒரு சூத்திரம் செய்ய வேண்டும்.

'மகன்எனல் - மக்கட் பதடி எனல்' - கு. 196

என்பதும் உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு விதியும் பெறும்; அதற்கும் சூத்திரம் வேறு வேண்டும். தொல்காப்பிய-னருக்கு எதிர்மறையும் உடன்பாடுமாய் நிற்கும் என்பது கருத்தாயின்,



'செய்யாய் என்னும் எதிர்மறை வினைச்சொல்
செய்வாய் என்னும் உடன்பாடும் ஆகும்'

எனச் சூத்திரம் செய்வர். அவ்வாறு சூத்திரம் செய்யாமையானும் அஃது உரையன்மை அறிக. இனி முதல்நிலைகளைத் தொல்காப்பியர்,

'ஒற்றுஇறு தொழிற்பெயர்' - ந. 27

'உயிர்இறு தொழிற்பெயர்'

என்றது அல்லது, முன்னிலை ஏவல் வினைச்சொல் என விதியாமை யானும், அம்முதல்நிலைகள் பெயராய் நின்றே பின் மூன்று இடத்திற்கும் உரிய இடைநிலை தோய் இறுதிகளைச் சேர்ந்து வினைச்சொல் ஆவதன்றித் தனியே நின்று வினைச்சொல் ஆகாமை யானும், தனியே நின்று முன்னிலை வினைச்சொல் ஆயிற்று என்றால், தனியே நின்று படர்க்கை வினைச்சொல் ஆதலும், தன்மை வினைச்சொல் ஆதலும் வேண்டும்; அவ்வாறு ஆகாமையானும், நச்சினார்க்கினியர் உரை வடநூலோடு மாறுபட்டதாம் என்க.

'சாவஎன் எச்சத்து இறுதி குன்றும்' - தொ. எ. 209, ந. 169

எனத் தொல்காப்பியர் முதலாயினர் எடுத்தோதிய உபலக்கணத்தால்,

'பாலறி வந்த' - தொ. சொ. 162

'செய்தக்க அல்ல' - கு. 466

'மண்மாண் புனைபாவை அற்று' - கு. 407

என வருவனவும் அது.

'நுண்மாண் நுழைபுலம்' - கு. 407

'வரிப்புனை பந்து' - முருகு. 68

என வரும் செய்து என் எச்சத்து ஈறும், வினைத்தொகைகளாய்க் குன்றிய பெயரெச்சத்து ஈறும் இவ்வாறே கொள்க. இவை விவட்சாதீனம். (12)

விளக்கம்

செய்யாய் முதலியன முன்னிலை ஒருமை ஏவல் வினை என்பது இவர் கருத்து.

இவ்வாசிரியருக்குப் பிளவுபட்டிசைத்தலே தொகாநிலை; ஒட்டி ஒருசொல்நீர்மைப்படுதலே தொகை. 'உருபு முதலியன விரியின் தொகாநிலை; தொகின் தொகை' என்பது கருத்தன்று. ஆதலின் சக்கரன் செல்வம் (சக்கரனது செல்வம் என்பதன்று) முதலியவற்றைத் தொகாநிலையெனவும், அவை ஒட்டி ஒருசொல் நீர்மைப்படும் சக்கரச்செல்வம் முதலியவற்றைத் தொகைநிலை எனவும் குறிப்பிட்டார். இது வடநூலாருள் ஒருசாரார் மரபு.

பஜ – தியஜ – திச – வழிபடு, விடு, கொடு.

'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே' – சொ. 450

என்பது போல,

'செய்யீர் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யும்என் கிளவி ஆகிடன் உடைத்தே'

என்றும் ஒரு நூற்பாவினைச் செய்தல் வெண்டும். மேலும் 'எனல்' என்ற வியங்கோள் உடன்பாடு, எதிர்மறை என்ற இரண்டன் கண்ணும் வருவதால் அதற்கும் வேறு சூத்திரம் வேண்டும். செய் என்பது தனித்து ஏவற் பொருள் காட்டுதல் இயலாது என்பது விளக்கப்பட்டுள்ளது.

செய்யாய், செய்யீர் – சொல் ஒன்றே விதிவினையும் மறை வினையும் ஆயினமைக்கு மேற்கோள். – இ. கொ. 67. உரை

இவ்வாசிரியர் 'செய்யாய் என்னும்' என்ற நூற்பாப் பற்றிக் குறிப்பிட்ட செய்திகளுள் பெரும்பாலனவற்றைச் சிவஞான முனிவரும் தம் சூத்திர விருத்தியுள் குறிப்பிட்டுள்ளார்.



சாவ என்பது ஈறு கெட்டுச் சா என்று முதல்நிலைத்தொழிற் பெயர் அளவில் நின்று வினையெச்சப் பொருள் தரும் என்று எடுத்தோதியதன் அடிப்படையில் மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தலால்,

பாலறி வந்த – பால் அறிய வந்த – வினையெச்சம்,

செய்தக்க அல்ல – செய்யத்தக்க அல்ல – பெயரெச்சம்,

புனை பாவை – புனைந்த பாவை – பெயரெச்சம்,

நுண்மாண் நுழைபுலம் – மாண்டு நுழைந்த புலம் – ஈரெச்சம்,

வரிப்புனைபந்து – வரிந்து புனைந்த பந்து – ஈரெச்சம்

என ஈரெச்சங்களும் வினைப்பகுதிகளாய்க் குன்றியும் தம்பொருள் உணர்த்தின. இவை யாவும் சொல்லுவான் குறிப்பை ஒட்டிப் பொருள் அறியக் கிடந்தன. இவ்வெடுத்துக்காட்டுக்களை 'முதல்நிலைத் தனிவினை............இருவகை எச்சமும் ஆம்' (இ. கொ. 66) என்ற சூத்திரப் பகுதிக்கு வரைந்த உரையுள் தந்து விளக்கியுள்ளார் இலக்கணக் கொத்து ஆசிரியர். 12

## இலக்கணை இன்னது என்பது

47. சின்மயம் சார்ந்த தத்தம்பொருள்
இன்றிச் சிலபதங்கள்
அந்வயம், சம்பந்தம், தாற்பரியத்தோடு
அநுபபத்தி,
சொல்மயம் தோன்றப் பொருள்வேறு
உணர்த்தின், துடிஇடையாய்!
தன்மயம் சார்ந்த இலக்கணையாம்
என்பர் தார்க்கிகரே.

இது பிறநூல் முடிந்தது தான் உடம்பட்டு இலக்கணை கூறுகின்றது. சில பதங்கள் தத்தம் பொருளை அன்றி அந்வயமும்

சம்பந்தமும், தாற்பரியமுமே பயனுக அம்மூன்றினேடும் தனித்தனி அநுபபத்தியும் தோன்ற வேறு பொருளை அறிவிக்கும் ஆகலின் இலக்கணையாம் என்றவாறு.

சொன் மயம் – சொற்பொருள்; உபபத்தி அன்மை – அநுபபத்தி; அதற்குப் பொருள் பொருத்தமின்மை.

இலக்கணையாவது பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தத்தம் பொருளை உணர்த்தாது, பொருளின் சம்பந்தப் பொருளையும், தாற்பரியப் பொருளையும் அறிவித்தல். சக்திய சம்பந்தத்தால் இலக்கணை என்றூர் வட நூலார்.

உ–ம்:

'சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையும்
நின்றதுகொல் நேர்மருங்கில் கையூன்றி — முன்றில்
முழங்கும் கடாயானை மொய்மலர்த்தார் மாறற்(கு)
உழந்துபின் சென்றஎன் நெஞ்சு' – பழம்பாடல்

'வைகல் பூங்கழிவாய் வந்துமேயும் குருகினங்காள்
.........கைகள் கூப்பிச் சொல்லீர்' – திவ். பிர. 3227

என்புழி, நேர்மருங்கில் கையூன்றி – கைகள் கூப்பிச் சொல்லீர் – என்னும் சொற்கள் தத்தம் பொருளை உணர்த்துதலும் செய்யாது, வேறு பொருளை உணர்த்தும் சம்பந்தமும் தாற்பரியமும் இன்றி, அப்பதங்கள் நெஞ்சோடும் குருகோடும் அந்நுவயமே பயனுக நின்றன.

கங்கையுள் இடைச்சேரி – புளித்தின்றான் என்றால், அவற்றுள் கங்கை – புளி என்னும் பதங்கள் தத்தம் பொருள்மேல் அன்றி அப்பொருளின் சம்பந்தத்தால், கரை – பழம் என்னும் பொருளை அறிவித்து நின்றன.

'வீதி உளங்கிழித்து உருவச் சென்றான்' – சீவக. 2138

'நிலம் செதிள் எடுத்த பாய்மா' – சீவக. 2924



'தீத்தும்மு வேலான்' – சீவக. 2557

'பாய்இருள் பருகிப் பகல்கான்று எழுதரு பரிதி' – பெரும். 1-2

'கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்' – நான்மணி. 6

'நீள்அரிமேல் கண்படுக்கும்' – தண்டி. உதாரணம்

என்புழி, உளம் – செதிள் – தும்மு – கான்று – வயிற்றில் – கண்படுக்கும் என்னும் பதங்கள் தத்தம் சொற்பொருள் இன்றித் தாற்பரியம் தோன்ற உள்ள – நடுக்கிழித்து – வீதிதுகள் ஆர்க்க – தீச் சிதறவிட்ட வேல் – இருள் நீக்கி எரித்து எழும் பரிதி – வயிற்றிடத்தில் – நீள் அரிமேல் கிடக்கும் என வேறு ஒரு பொருளை அறிவித்து நின்றன. இவை எல்லாவற்றிற்கும் அநுபபத்தி தாமே தோன்றுவன காண்க. இவ்வுதாரணங்கள் அன்றி, இவற்றுக்கெல்லாம் வேறே உதாரணம் காட்டுவாரும் உளர். அவையும் இவையால் அடங்கும் நுண்ணறிவினர்க்கு என்க.

அவயவமே பயனுக நின்றதனைப் பொருள்வேறு உணர்த்துமவற்ரேடு ஒருங்கு நிறுத்தி முடிப்பது கூடுமாலோ எனின்,

'எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்' – ந. 357

என்னும் சூத்திரம் போலக் கடாவுரை காட்டி மறுக்கக் கிடந்தது.

இவ்விலக்கணங்கள் சத்த நூல் இலக்கணம் அன்மையின், தொல்காப்பியர், பொருளியலுள்,

'நோயும் இன்பமும்' – தொ. பொருள் 196

என்னும் சூத்திரத்துள்,

'உறுப்புஉடை யதுபோல் உணர்வுஉடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல்'

எனச் செய்யாமரபின் தொழில் படுத்து அடக்குவர்.

வடமொழியில் காளிதாசனும் மேகசந்தேசத்தினுள் இவ்வாறு கூறுதல் காண்க. இவ்விலக்கியங்களே இலக்கணமாகப் பிற்காலக் கவிகளும்,

'முல்லைஎனும்
மென்மாலைத் தோள்அசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது' — களவெண்பா 84

எனவும்,

'வால்வளை வாய்விட்டு ஆர்ப்ப'

எனவும்,

'கண்களே சொல்லும் வாய்திறந்தே'

எனவும் கூறுவர். (13)

விளக்கம்

சத்தநூலுக்கு உரிய அல்லாத பொருளதிகாரச் செய்திகள் சத்தநூலுக்குப் பயன்பட்டு வருதலைச் சுட்டவேண்டி, இலக்கணை பற்றிக் கூறுவது, பிற நூல் முடிந்தது தானுடன்படுதலாம். இதனை அளவைநூலார் கருத்து என்றலும் ஆம்.

அந்வயம் – பொருள் பொருத்தமுற இணைவது.

சம்பந்தம் – தொடர்பு; தாற்பரியம் – போந்தபொருள். சொல்பற்றி நோக்கின் பொருள் பொருத்தமின்மையும், சம்பந்தப் பொருள் – போந்தபொருள் முதலிய கொண்டு நோக்கின் பொருத்தமுடைமையும் இலக்கணையது இயல்பாம்.

சக்கிய சம்பந்தம் – பொருளால் நட்புரிமைத் தொடர்பு.

'சென்றது......நெஞ்சு' – சென்றது கொல் முதலிய வினை நெஞ்சோடு முடிந்து, நெஞ்சு மாறனை விரும்பும் திறத்தையே நுவலுவது காண்க. இதன்கண் தொடர்பான பொருளோ, போந்த பொருளோ கொள்ள இடமில்லை. இதனை விட்ட இலக்கணை என்ப.



கங்கையுள் இடைச்சேரி – கங்கைக் கரையில் இடைச்சேரி; புளித்தின்றான் – புளியினது பழத்தைத் தின்றான் என, கங்கை – புளி என்பன தம்மோடு தொடர்புடைய கரை – பழம் என்பன வற்றை உணர்த்துதல் விடாத இலக்கணை.

'வீதி உளம் கிழித்து' என்ற தொடரை நேராகச் சொல்லுக்குச் சொல் பொருள் செய்தால் பொருத்தமின்மை தோன்றும் ஆதலின் போந்த பொருளாக வீதியின் நடுப்பகுதியை விரைவாகக் கடந்து என்று பொருள் செய்க. வீதிக்கு உளமோ. உளத்தைக் கிழித்தலோ இல்லை எனினும், வீதியின் நடுவை விரைவாகக் கடத்தல் உண்மையின், இது விட்டும் விடாத இலக்கணை, 'நிலம் செதிள் எடுத்த' முதலாயினவும் அன்ன.

விட்ட இலக்கணை அந்நுவயத்தாலும், விடாத இலக்கணை சம்பந்தத்தாலும், விட்டும் விடாத இலக்கணை தாற்பரியத்தாலும் பொருள் தருமாறு காண்க.

அவயவமே பயனுக நின்றது அந்நுவயம்; பொருள் வேறு உணர்த்துவன சம்பந்தமும் தாற்பரியமும்; அவயயமே பயனுக நிற்றலாவது–வினைபெயர் கொண்டு முடியும் சொற்றொடர் அமைப்பு ஒன்றுமே பொருந்தி நிற்பது,

'எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்' – ந. 357

உ–ம்: குறைத்தான் மரத்தை. முதலியன.

எழுவாய் உருபு வினைமுற்றுப் பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும் சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோ எனின், கேட்போர்க்குச் சாத்தன் இது செய்தான் என வினையை உணர்த்தும்போது சாத்தன் என்னும் எழுவாய்க்கு வந்தான் என்னும் முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இது செய்தான் சாத்தன் என வினைமுதலை உணர்த்தும்போது

வந்தான் என்னும் முற்றுவினைக்குச் சாத்தன் என்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னும் முற்றுத்தொடருக்கும் இவ்வாறு அறிக - என்பது அந்நூற்பா விளக்கம்.

இதனால் அந்நுவயப்படுத்துவதற்கும் சம்பந்தமாகிய பொருள் தொடர்பு இன்றியமையாதது என்பது புலனாதல் காண்க. வந்தான் சாத்தன் என்பது எழுவாய்த்தொடராகப் பொருள்படின் சாத்தன் வந்தான் என்று மாற்றி அந்நுவயப்படுத்துக. வினை முற்றுத்தொடராயின் அவ்வாறே கொள்க. இங்ஙனமே சாத்தன் வந்தான் என்பது வினைமுற்றுத் தொடராகப் பொருள்படின் வந்தான் சாத்தன் என மொழிமாற்றிக் கொள்க என்பது.

முடிக்கும் சொல் முன்னும் பின்னும் இடம் மாறி நிற்றலும் உண்மையின், அவற்றை முறையாக முடித்துக் காட்டலின் பொருள் ஓரளவு போதருதல் காண்க.

நெஞ்சினை உறுப்புடையது போலவும் உணர்வு உடையது போலவும் மறுமாற்றம் கூறுவது போலவும் கூறுதலும், வார்த்தை பேசும் ஆற்றல் இல்லனவற்றோடு கூடி அவற்றை அவை செய்யும் மரபு அற்ற செய்திகளைச் செய்யுமாறு பணி கொள்ள விழைதலும், காமம் இடையீடுபட்ட காலத்தில் நிகழ்வனவாகக் கொண்டு செய்யுள் செய்வர் என்பது பொருளதிகாரச் செய்தி.

– தொ. பொ. *196*

மேகத்தைத் தூதுவிடுதல் இத்தகைய விட்ட இலக்கணையாம். இவ்வாறு முற்கால இலக்கியம் கூறும் செய்திகளையே தமக்கு இலக்கணமாகக்கொண்டு பிற்காலக் கவிகளும்,

'அந்திப்பொழுது தோள் அசைய மெல்ல நடந்தது, வளைகள் வாய்விட்டொலித்தன, கண்கள் வாய்திறந்து சொல்லின' என்றாற் போல இலக்கணைப் பொருள் படச் செய்யுள் செய்துள்ளனர்





## காரணம் காரியம் முதலியன மாறிவருதல்

48. மருள்அறு காரணம் காரியம்
 பேரொடு வந்து உறழும் ;
இருள்அறும் ஒண்குணப்பேர் குணிப்பேர் ;
 வினையோடு இயையும்
பொருள்வினை மற்றோர் பொருளினும்
 தோன்றும்; புலத்தொடும்ஆம் ;
தெருள்உறு பண்பு புலன் - இவை
 மாறியும் சேர்ந்திடுமே.

*இதுவும் அது. காரணப்பெயர் காரியப்பெயர் ஆகியும், காரியப்பெயர் காரணப்பெயர் ஆகியும் மாறி வரும். குணம் குணியாயும், குணவினை குணிவினையாயும் வரும். ஒரு பொருளின் தொழில் அதனொடு இயைந்த பிறிது ஒருபொருளோடும் வரும். இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தோடும் வரும். பண்பும் புலனும் மாறியும் வரும் என்றவாறு.*

*புலம் – இடம்; புலன் – விடயம்.*

*உ-ம் :*

**'பிறப்பு என்னும் பேதைமை'** – கு. 358

*பிறப்பிற்கு ஏதுவாகிய பேதைமை; இது காரியம் காரணமானது.*

**'தீவினை என்னும் செருக்கு'** – கு. 201

*தீவினையால் வரும் செருக்கு – இது காரணம் காரியமானது.*

**'இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்'** – கு. 53

*மாண்புடையாள் ஆனால் – இது குணம் குணி ஆனது.*

**'சிற்றினம் அஞ்சும் பெருமை'** – கு. 451

*இது குணவினை குணிவினை ஆனது.*

'முன்இன்று பின்நோக்கச் சொல்' - கு. 184

இது ஒருபொருளின் வினை மற்றொரு பொருளின் வினையானது.

'குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று' - கு. 523

'இந்தப் பானை நாழி அரிசி பொங்கும்'

இவை புலம் என்னும் இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றன.

'பொருளினும் தோன்றும்'

என்ற சகரத்தால்,

'பீலிபெய் சாகாடும் அச்சிறும்' - கு. 475

என்னும் சினைவினை முதல்வினையாதலும் கொள்க.

இன்சொல், வன்சொல் (கு. 99) மதுரகவி (திவ். பிர. 947)

'செவிகைப்பச் சொல்பொறுக்கும்' - கு. 389

என்னும் உபசாரங்கள் எல்லாம் பண்பு புலன் மாறி வந்தன. (14)

விளக்கம்

குணம் - பண்பு; அஃதாவது ஒருபொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் கெடாது நிற்பது. குணி - பண்பி.

மாண்பு என்ற பண்பு மாண்பினைக் குறித்தது.

பெருமை அஞ்சும் - பெருமை என்ற பண்புக்கு ஏற்ற வினை அஞ்சும் என்பதன்று. பெருமை உடையோருக்கே அஞ்சுதல் தொழில் உண்டு.

'கண்நின்று......சொல்' தான் அவர்முன் இல்லாதிருக்கும் போது பின்வரும் குற்றங்களை நோக்காத சொல் என்புழி, நோக்காமையாகிய கண்ணறச் சொல்லுவானது வினை சொல்மேல் ஏற்றப்பட்டது.



குளவளா - குளத்தின் உள்இடத்தையும், பானை - பானையின் உள்ளிடத்தையும் குறித்தன. இறுதல் அச்சின் தொழில். அச்சினைவினை முதலாகிய சாகாட்டிற்கும் வினையாயிற்று. சொல்லுவானது இனிமை, வன்மை, மதுரம் என்பன சொல்மேலும் கவிமேலும் ஏற்றப்பட்டன. வாயின் சுவையாகிய கைப்பு என்பது செவிமேல் ஏற்றப்பட்டது. இவை உபசார வழக்கு. *16*

## வடமொழி தமிழ் - வேறுபாடு

49. சாற்றிய தெய்வப்புலவோர் மொழிக்கும்
தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறின், திணைபால்
உணர்த்தும் வினைவிகுதி -
மாற்றருந் தெய்வமொழிக்கு இல்லை;
பேர்க்கு எழுவாய்உருபும்
தேற்றியலிங்கம் ஒருமூன்றும் -
இல்லை செழுந்தமிழ்க்கே.

இது வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பேதம் கோடி கூறு இட்டு, ஒரு கூறு உண்டோ இன்றோ என்று கூறுகின்றது. திணை உணர்த்தும் வினை விகுதியும், ஆண்பால் பெண்பால் உணர்த்தும் வினை விகுதியும் வடமொழிக்கு இல்லை. தமிழ் மொழிக்குப் பிரதமா விபத்தியும் லிங்கத்திரயமும் இல்லை- என்றவாறு.

'சேதனன் உயர்திணை அஃறிணை அசேதனம்'

இஃது உரைச் சூத்திரம்.

ஏற்புழிக் கோடலான், தமிழ்மொழிக்கும் அஃறிணைக்கண் ஆண்பால் பெண்பால் உணர்த்தும் வினைவிகுதி இல்லை என்க.

**'எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே'** — ந. 295

என்றதனாலே, தமிழுக்குப் பிரதமாவிபத்தி இல்லை என்பது முன்னே கூறினாம்; பின்னும் கூறியது இலிங்கம் சிறுபான்மை கொண்டு பெரும்பான்மை விலக்க வேண்டிய அநுவாதத்தால் என்க.

**'ஒரு மூன்றும் இல்லை'**

என்ற சகாரத்தில், முற்றும்மை எச்சப்படுத்தி ஒருபொருள் தானே தன்னை விசேடிக்கும் இடத்தும், குணங்கள் குணிகளை விசேடிக்கும் இடத்தும் வடநூலார் மதம் பற்றி இலிங்க நியமம் ஏகதேசமாக வரும்.

உ-ம்: சயதி என்றால் செயிப்பள், செயிப்பன், செயிக்கும், செயித்தது என ஓர் ஈறே நின்று பொருள் உணர்த்தும் என்க.

**'நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்**
**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு'** — கு. 924

என்னும் திருவள்ளுவரில் பரிமேலழகர் நாண் என்னும் நன்மை எனற்பாலதனை நல்லாள் எனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி முறைபற்றி என்றார் ஆதலின், வடமொழியுள் 'லச்சை' என்பது பெண்பாற்சொல் என்க.

இனிச் சிலப்பதிகாரத்திலே,

**'திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லோ'** - சிலப். 4-4

எனவும்,

**'இன்னிள வேனில் வந்தனன் ஆக'** - சிலப். 8, 7

எனவும் பெயராலும் வினையாலும் அவ்வச்சொற்களை ஆண்பாலாக்குவர்.

**'பால்வாய்ப் பிறைப்பிள்ளை ஒக்கலைக் கொண்டு பகலிகழ்ந்த**
**மேல்பால் திசைப்பெண் புலம்புறு மாலை'** - திருவிருத்தம் 35

எனப் பெண்பாலாக்குவர், சடகோபர் திருவிருத்தத்துள்.



**'வேனில்அம் செல்வன் சுவைத்து உமிழ் பாலை'**
— திவ். பிர. 2503

என்பதும் அது.

**'தோற்பையுள் நின்று தொழில்அறச் செய்தூட்டும்**
**கூத்தன் புறப்பட்டக் கால்'** - நாலடி. 26

என்னும் நாலடியாருள், கூத்தன் உயிர்க் கூத்தன்.

**'கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்**
**மங்கலம் பாடி மலிவெய்தக் – கங்கையாள்**
**பூம்புனல் ஆகம் கெழீஇயினான் போர்அடுதோள்**
**வேம்பார் தெரியல்அம் வேந்து'** - பு. வெ. பாடாண் 36

இச்செய்யுளுள் குமரியாற்றைக் 'கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்' என்றும், கங்கையாற்றை ஈறுதிரித்துக் கங்கையாள் என்றும் பெண்பாலாக்குவர்.

இனிச் சிந்தாமணியுள்,

**'ஆனையுள் அரசன்தன் அணிகிளர் வலமருப்பு'**
- சீவக. 2445

என வருவதனையும் அதன்பால் படுத்துக.

இனிப்

**'பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே'** - தொ. சொ. 165

என்னும் சூத்திரத்துள் சேனாவரையர் அந்தணர் அரசர் என்னும் பன்மை ஈற்றுச் சாதிப்பெயரை உயர்திணைப்பெயர் என்றும், அந்தணன் அரசன் என்னும் ஒருமைஈற்றுச் சாதிப் பெயரை விரவுப்பெயர் என்றும் கூறுவர். அதுவும் ஒக்கும்.

நாண் என்னும் நல்லாள், தென்றலஞ் செல்வன் முதலியன எல்லாம் சாதிப்பெயர் அன்மையானும், பரிமேலழகர் நாண் என்னும் நல்லாள் என்பதனை உருவகம் என்னாமையானும், விரவுப்பெயர் ஆகாது இலிங்கம் என்னும் பால் உணர்த்தும் சொல்லேயாம் என்க. தான் என்னும் படர்க்கை விரவுப் பெயரையும், நீ, நீயிர் என்னும் யுஷ்மத் சத்தமாகிய முன்னிலை

விரவுப்பெயரையும், யான் யாம் என்னும் அஸ்மத் சத்தமாகிய தன்மை விரவுப்பெயரையும் வடநூலார் சாமானியலிங்கம் என்றும், இலிங்கம் தோன்றாதன என்றும், இடைச்சொற்களையும் இலிங்கம் தோன்றாதன என்றும் கூறுவர். திங்களுஞ் செல்வன் முதலியன எல்லாம் தன்னைத்தான் விசேடித்தன. பிற்காலக் கவிகளும்,

'சூழு மலர்முகத்துச் சொல்மாமகள்' — மூவருலா

'பொலம்புரி காஞ்சிப் புகழ்மகள்'

'கொதித்து மேற்றிசை மகள்நலத்து அகப்பதம்'

'உறு பகற் சிறுவன்'

'கங்கையாள் கடல் தலைமகன்'

'தணிப்பில் பெருங்கீர்த்தித் தையல்' — மூவருலா

எனத் தன்னைத்தான் விசேடிக்குமிடத்து அவ்வாறு கூறுவர்.

வடநூலார் கர்மதாரயன் என்னும் பண்புத்தொகைக்குப் பண்பு வேறு ஒரு லிங்கமாக நின்றாலும், பண்பு உடைப் பொருள் எந்த லிங்கமாம் அந்த லிங்கமாக்கிப் புணர்த்துவர் ஆதலின், அடையாக நின்ற குணலிங்கத்தை அநித்தியலிங்கம் என்பர்.

உ-ம்: கருஞ்சாத்தன், சாத்தி, சாத்தர், குதிரை, குதிரைகள் என்பனவற்றைப் பொருள் விரிக்குங்கால், கரு என்ற பண்பின் முதல்நிலையைக் கரியன், கரியள், கரியர், கரியது, கரியன என ஈறு திரித்து வருமொழி எந்த லிங்கம் அந்த லிங்கமாக்கித் தொகுப்பர் என்பது பற்றித் தொல்காப்பியரும்,

'ஐம்பால் அறியும் பண்புதொகு மொழி' — எ. 482

என்றும், குணச்சொல் குணமுடையதனை உணர்த்தலான், ஒன்றனை ஒன்று விசேடித்து இரு சொல்லும் ஒரு பொருளின்மேல் வருமிடத்து,

'இன்னது இதுஎன வரூஉம்.' — சொ. 416

என்றும் பண்புத் தொகைச் சூத்திரம் செய்தது நேரே காண்க.



கரிய சாத்தன் எனச் சாமானிய லிங்கமாகவும் விரிப்பர். இவை எல்லாம் குணங்கள் குணிகளை விசேடித்து நின்றன. இவ்வுரை சேனாவரையர் உரை.

கருங்குதிரை என்பதனைக் கரிது குதிரை கரியது குதிரை என விரித்தால் எழுவாயும் பயனிலையும் ஆவது அல்லது தொகை ஆகாது என்று மறுத்த நன்னூலார் கூறியவண்ணம் கருமை செம்மை என்பனவற்றோடு புணர்ந்ததன்றோ எனின், அவர் வாமனன் சிநேந்திரன் செய்த சத்த நூல் பற்றி அவ்வாறு கூறுவர்.

'வருந்தி ஈன்றாள் மறந்து ஒழிந்தாள்
வளர்த்தாள் சொல்கேட்டு இல்கடிந்தாள்' — சீவக. 1668

எனக் குயில் காக்கைகளை ஈன்றது - வளர்த்தது - என்னாமலே, ஈன்றாள் வளர்த்தாள் என உயர்திணைக் கிருதந்தமாக்கிப் பெண்பாலாக்குதலும் அது. இக்கருத்து அறியாத நன்னூர் உரைகாரர் இவற்றை எல்லாம் உருவகம் என்பர்.

தக்ஷிணாமூர்த்தி என்புழி, இருமொழியும் பெண்பால் ஆதலின் முந்தினது நெட்டெழுத்தானது. தக்கிணதேசம் என்புழித் தேசம் ஆண்பால் ஆதலின், நிலைமொழிஈறு நெடில் குறிலாய் வருமொழிக்காக ஆண்பாலாய் அகரமானது; என்னை? விசேடியம் எந்த லிங்கமோ அந்த லிங்கமாய் விசேடணமும் ஆனது. (15)

## விளக்கம்

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இடையே வேறுபாடு கோடியில் ஒரு கூறுகூட இன்று. அத்தகைய சிறுகூற்று வேறுபாடே ஈண்டுக் கூறப்படுகின்றது. எழுவாய் வேற்றுமை உருபும், சொல்பற்றிய பாலும் தமிழுக்கு இல்லை. தமிழில் அஃறிணைவினை ஆண்மைக்கும் பெண்மைக்கும் பொதுவாதல் வெளிப்படை. ஆனால் பெயர்களில் அஃறிணைக்கண்ணும் ஆண்பால் பெண்பால் உண்மை தொல்காப்பிய மரபியல் நூற்பாக்களாலும்,

'இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னனே' — நன். 352

முதலிய நூற்பாக்களானும் அறியப்படும்.

எழுவாய்க்கு உருபு தமிழில் இல்லை என்று ஈண்டும் பெற்றதன் பெயர்த்துரை, தமிழிற்கு இல்லாத சொற்பாலோடு சிறுபான்மை தமிழ்சொற்கள் வரும் இயைபு பற்றி என்க.

'கூறின பின்னும் கூறின சில; அவை
அநுவாதம் என்றே அறிந்தே அடக்குக' — இ. கொ. 7

என்றார் இலக்கணக்கொத்து நூலாரும்.

ஒரு மூன்றும் – மூன்றும் என்ற உம்மை முற்றும்மை. அதனை எச்சப்படுத்தி, 'முற்றிய உம்மை தொகைச்சொல் மருங்கின் - எச்சக் கிளவி உரித்தும் ஆகும்' (தொ. சொ. 285) என்ற விதியை உட்கொண்டு, சிறுபான்மை தமிழிலும் சொல் பற்றிப் பால் வருதலும் கொள்ளப்படும்.

நாண் என்பதற்குரிய வடசொல் லஜ்ஜா என்பது; அது அம் மொழியில் பெண்பாற் சொல். அச்சொல் பற்றிய பாலினைத் திருவள்ளுவரும் ஏற்று நல்லாள் எனத் தமிழிலும் பெண்பாலாகக் கூறினர். இது ஒருபொருள் தன்னைத்தானே விசேடித்தது.

இன்னிளவேனில் வந்தனன் என்பது வேனில் என்ற அஃறிணைச்சொல் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

திங்களஞ்செல்வன் – பெயரே ஆண்பாலாக வந்தது. தென்றல் தன்னைத்தானே செல்வன் என விசேடித்தது.

வேனில் வந்தனன் – வினையால் வேனில் என்ற பெயர் ஆண்பாலாயிற்று.

மேல் பால் திசைப்பெண் – திசையாகிய பெண் எனத் தன்னைத்தானே விசேடித்தது. வேனில் அஞ்செல்வன் என்பதும் அது.



தோற்பை...... கூத்தன் – உயிரைக் கூத்தன் என ஆண்பாலாக்கினர்.

அந்தணன் முதலிய ஒருமைப்பெயர் பாம்பு முதலிய அஃறிணைக்கண்ணும் வருதலின் அவற்றை ஒருமையாயவழி விரவுப்பெயர் என்கிறார்.

'அந்தணன் நாறும் ஆன்பால் அவியினை அலர்ந்த காலை
நந்தியா வட்டம் நாறும் நகைமுடி அரச னயின்
தந்தியாம் உரைப்பின் தாழைத் தடமலர் வணிக னகும்
பந்தியாப் பழுப்பு நாறின் சூத்திரன் பால தென்றான்'.
— சீவக. 1287

என்ற சிந்தாமணிப் பாடலையும் நோக்குக.

'ஆனையுள் அரசன்' — சிந். 2445

என்பதும் அரசன் என்ற சொல் ஒருமைக்கண் பிறவும் பெயராதலுக்கு எடுத்துக்காட்டு.

நாண், தென்றல் முதலியன அந்தணன் என்பது போன்ற சாதிப்பெயர் அன்மையின் இவை விரவுப்பெயர் அல்ல. தான், நீ, நீயிர், யான், யாம் என்ற விரவுப்பெயர்கள் இரு திணைக்கும் பொதுவாதலேயன்றி, ஆண் பெண் என்ற இரு பாற்கும் பொதுப் பெயராம். ஆகவே இனஒருமை இனப்பன்மையன்றி, ஆண் பெண்என்ற பால் தோன்றாதன.

கரு, செவ் என்பன தாம் கொள்ளும் அடைகொளிக்கு ஏற்பப் பால் மாறுவன. எனவே, இவை மாறுபடும் பாலுடையவாகும். தொல்காப்பியனார், பண்பு அடையையும் அடைகொளியையும் 'இன்னது இது' எனப் புணர்த்தலின், கரு என்பது கூடிய கரும்பார்ப்பான், கரும்பார்ப்பனி, கரும்பார்ப்பார், கருங்குதிரை, கருங்குதிரைகள் என்பனவற்றைக் கரியனாகிய, கரியளாகிய, கரியராகிய, கரிதாகிய, கருமையவாகிய என விரித்துப் பொருள் கொள்ளுமாறு வடமொழியார் போலத் தமிழ் மரபுக்கும் பண்புத்தொகை நூற்பா அமைத்துள்ளார்.

கரிய சாத்தன் என்பதில் கரிய என்பது பால் காட்டாது. கருங்குதிரை என்பதனைக் கருமையாகிய குதிரை என இருபெயரொட்டுப் போல விரிப்பின், கருமையும் குதிரையும் ஒன்று ஆகாமையின், நன்னூலார் பண்புத் தொகைக்குக் கூறிய விதி அவ்வளவு சிறப்பிற்றன்று.

காக்கையின் முட்டையை அடைகாத்துக் குஞ்சுபொரிவிக்கும் குயிலை வருந்தி ஈன்றாள் எனவும் வளர்த்தாள் எனவும் உயர்திணைச் சொற்களாக்கி, உயர்திணை வினை முடிவுபெறச் செய்தல் தமிழில் சிறுபான்மை சொற்பால் பற்றி அமைந்ததாகும். இவற்றை உருவகம் என்பது ஏற்றதன்று என்பர் இவ்வாசிரியர்.

தக்ஷிணாமூர்த்தி – வடமொழியில் ஆகார ஈற்றுச்சொல் பெரும்பாலும் சொல்பற்றிப் பெண்பால் ஆதலின், தக்ஷிண என்பது தக்ஷிணா என நீண்டது. மூர்த்தி என்பதும் சொற்பால் பற்றிப் பெண்பால். அதற்கு அடையாகும் தக்ஷிணா என்பதும் பெண்பாலாதலே வேண்டும். ஆதலின், தக்ஷிணாமூர்த்தி என்று அத்தொடர் அமைந்தது.

தக்ஷிணதேசம் – தேசம் என்பது சொற்பால் பற்றி ஆண்பால். அதற்கு அடையாகும் தக்ஷிண என்பதும் தக்ஷிணா எனப் பெண்பாற்பெயராக நீளாது, தக்ஷிண என ஆண்பாற்பெயராகவே வந்தது.

அடைகொளி எந்தப்பாலில் உள்ளதோ அந்தப்பாலில்தான் அடைமொழியும் இருத்தல் வேண்டும் ஆதலின், தென் திசை என்ற பொருள்தரும் தக்ஷிண என்றசொல், ஆண்பால் அடைகொளியை அடையும் போது தக்ஷிணதேசம் எனவும், பெண்பால் அடைகொளியை அடையும் போது தக்ஷிணாமூர்த்தி எனவும் அமைந்தமை காண்க.





## நூற்புறனடை

50. ஆக்கும் பிரதிபதத்துடனே
அழியா நிருத்தி,

நோக்கும் படியச்சு அனைய உதாரணம்,
நோக்கினர் - சீர்

தூக்கும் பொழுது, அரிதாவது ஒன்று இல்லை;
சொல்லாதனவும்

காக்கும் திறம் கண்டு காப்பதுவே
கடன், கற்றவர்க்கே.

இஃது இந்நூலுள் உரைத்துஉரையாதன மயங்காது உணருமாறும், அவையடக்கம் என்னும் விநயமும் கூறுகின்றது. நூற்புறனடையுமாம். பிரதிபதமும், நிருவசனமும், உதாரணமும் சீர்தூக்கிப் பார்க்கும் அளவில் அரிதாய் அறிதற்பாலது சிறிதாயினும் இல்லையாம். இந்நூலுள் கூறாதனவற்றைக் கூறியதன்பாற் சார்த்தி உணர்த்தி, அவற்றை வழுவாமல் பாதுகாத்தல் நாவலர்க்கு முறைமை என்றவாறு.

பிரதிபதமாவது பரியாயபதங்கள் பலவற்றினுள் ஒன்று இரண்டு பிரசித்த பதமாக வருதலும், முழுதும் வருதலுமாம். என்னையோ எனின், அடி, கால்; நாசி, மூக்கு; காது, செவி; நெருப்பு, தீ; புடவை, சேலை என வருதலும், ஊழ், பால், முறை, தெய்வம், நியதி, உண்மை, பாக்கியம், பொறி, விதி என ஊழ் என்னும் அதிகாரத்துள் காட்டியனவும் ஆம்.

'நிருவசனம் நிருத்தி என இருவகை வசனமும்
சொல்லின் முடியும் இலக்கண ததுவே'

இஃது உரைச்சூத்திரம்.

நிருவசனம் அல்லது நிருத்தி என்பதாவது ஊழ்; 'அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய

நியதி' என ஒரு சொற்கு வாக்கியத் தொடராகப் பொருள் உணர்த்துவது என்க. குடந்தம் 'என்பதற்குக் 'குடந்தம் கை கூப்பி மெய் கொட்டி நிற்றல்' எனச் சூத்திரமாகக் கிடப்பதூஉம் அது. இவ்வாறு மெய்ப்பாட்டியலுள்ளும், தண்டிஅலங்காரச் சூத்திரத்துள்ளும் ஒவ்வொரு சொற்களைப் பிரித்துப் பிரித்துக் கூறுவர்.

படியச்சு - அஃதாவது ஒரு பொருள் இருந்தவண்ணம் மயங்காது காட்டுதல். அவை எடுத்துக்காட்டும் உதாரணம்.

இனி, சொல்லாதனவற்றிற்கு உதாரணம்: வேறு வேறு, ஒன்று ஒன்று, பத்துப் பத்து, பையப்பைய என்பன வெவ்வேறு, ஒவ்வொன்று, பப்பத்து, பைபய எனத் தொகைச்சொற்கள் போல நிற்கும். வட நூலாரும் ஏகம் ஏகம் என்பதனை ஏகைகம் என்பர்.

பிறிதின் இயைபு நீக்குதலை அந்நிய யோக வியவச்சேதம் என்றும், இயைபின்மை நீக்குதலை அயோக வியவச்சேதம் என்றும் கூறுவர்.

சாதி ஒருமையைச் சாதி ஏகவசனம் என்பர். அஃதாவது ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும் தோன்ருது நின்றும் பின் ஒருமை பன்மை வினை ஈருக மேல் வந்து முடிக்கும் சொற்களும் இன்றித் தானே பன்மைப் பொருள் உணர்த்துவது.

'ஈறு தோன்றிய சாதி ஒருமையும்
ஈறு தோன்ருத சாதி ஒருமையும்
எனஇரு திறப்படும் இருதிணை மருங்கினும்'

இஃது உரைச் சூத்திரம்.

உ-ம்:

'சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தான் இடை' - கு. 37

என உயர்திணைக்கண் வரும். இதனைத் தொல்காப்பியத்துள்,



'மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்' - தொ. சொ. 449

என்பதனல் அடக்குவர் நச்சினர்க்கினியர் என்க.

'கவியொடும் புதனெடும் கலந்து நாடொறும்
புவிபுகழ் நிடதர்கோன் புரவி ஏழுடைக்
குவிதலைத் தேர்கடாய்க் குஞறு நின்றெழும்
அவிர்கதிர் வானவன் அழகு மேவினன்'

வடநூலார் உயர்திணையிலும் சாதி ஒருமை காட்டினர் என்பது அறியவேண்டி, வடமொழி நளன்காவியத்துள் இக்கவியை மாத்திரம் யாம் மொழிபெயர்த்தாம்.

இனி, அஃறிணைக்கண்ணும்,

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' - கு. 428

எனத் திருவள்ளுவரினும்,

'நூல் எனப்படுவது நுவலுங் காலை' - தொல். பொ. 478

எனத் தொல்காப்பியத்தினும், ஈறு தோன்றிய சாதிஒருமை வரும்.

'தென்புலத்தார் தெய்வம்' - கு. 43

'குணம்என்னும் குன்றுஏறி நின்ருர்' - கு. 29

என்புழித் தெய்வம் குணம் என ஈறு தோன்ருச் சாதிஒருமை வரும். அவற்றின் உரையானும் காண்க.

'கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து' - கு. 496

'வேலாண் முகத்த களிறு' - கு. 500

என்புழிப் பன்மை வினைச்சொல்லோடும் பன்மை வினைக்குறிப்புப் பெயரோடும் முடிந்தன ஆயினும், அவற்றின்கண் சாதிஒருமை என்னுமை காண்க.

'எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு' - கு. 392

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' – கு. 391

இவற்றையும் வடநூலார் சாதிப்பன்மை என்பர்.

இனி, ஒருபொருளை முன்னர் எடுத்துக்கூறுவது புரோவாதம். அதனை ஒரு நிமித்தத்தால் பின்னரும் எடுத்துக்கூறுவது அநுவாதம்.

உ-ம்:

'அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு' – கு. 31

'அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை' – கு. 32

என வரும்.

'ஒருபெயர்ச்சொல் எனச் சுப்ஏறி நீங்கல்' – பி. வி. 37

என்பதும்,

'ஒற்று அளபெடுப்பினும் அற்று என மொழிப'
– தொ. பொ. 330

என்பதும் அநுவாதத்தால் புரோவாதம் கூறாமலும் சித்திக்க நின்ற மாட்டேறும்.

விண்டதாமரை –

'விலங்கலைக் கால்விண்டு மேன்மேல் இட' – கோவை. 24

என்புழி, விண்ட – விண்டு என்னும் சொற்கள் சகன்மகமும் அகன்மகமுமாய் வரும்.

இனி, அலங்கார நூலார் இசையெச்சத்தைக் 'காகு' என்பர். அதற்கு உதாரணம்,

'நுமர்உள்ளல் எம்மை மறைத்திரோ' – கு. 1318

என்பதாம். அது சொல்லுங்கால் முகவிகாரமாதல், சொல் விகாரமாதல் தோன்ற நிற்கும்.



'நுகப்பிற்கு, நல்ல படாஅ பறை' – கு. 1115

என, இலக்கணை அடியாய்த் தோன்றிய குறிப்பை 'இலக்கணு மூலத்தொனி' என்பர்.

'குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிர்இடை நட்பு' – கு. 338

எனப் பெயர்அடியாய்த் தோன்றிய குறிப்பை 'அபிதா மூலத் தொனி' என்றும், விருத்தலக்கணை என்றும் கூறுவர். அரக்கரைப் புண்ணிய சனம் என்பதும் அது.

உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியை நிபாதம் என்பர்.

'வகைதெரிவான் கட்டே உலகு' – கு. 645

'பழமுதிர் சோலை மலைகிழ வோனே' – முருகு. 317

என வரும்.

'நிறக்கும் துணை'யுள்

உரைத்த ஆகாரியாரோபமாவது புத்திபூர்வதமாகச் சிலையைத் தெய்வமாகக்கொண்டு வழிபடுதலும், பிறன் ஒருவனைத் தந்தையாகக்கொண்டு சிராத்தம் புசிப்பித்தலும் போல்வது.

அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை அநுஷங்கம் என்றும், அவாய்நிலையால் வருவித்து முடிக்கும் சொல்லை அத்தியாகாரம் என்றும் கூறுவர்.

'கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்' – கு. 567

என்புழி அரம் என்னும் ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனிக் கூட்டி முடிப்பதனைத் தேர்வடம் இழுப்பார்போலப் பிரத்தியேகபந்தாந்நுவயம் என்பர். இதுவும் தூராந்நுவயத்துள் அடக்கிக்கொள்க. பாணினீயத்துள் 'ராதிப:' என்னும் சூத்திரத்துள் பாடியகாரர் முதலாயினர் ரவ்விற்குக் காரப் பிரத்தியயத்தோடு 'இப' என்னும் பிரத்தியயமும் விகற்பமாய் வரும் என்று, வால்மீகி 'ரகாராதிநீ' என்று உரைத்ததனை உதாரணம் காட்டி முடிப்பர் என்க.

விகற்பம் – உறழ்ச்சி, எய்தியதன்மேல் சிறப்பு – விசேடம், என்பன பரியாயம். அஃது அறியாதார், உற்சர்க்கத்துக்கு அபவாதம் என்னும் நிஷேத விதியாக மயங்கி, வான்மீகம் ஆரிடம் என்பர். [பொதுவிதிக்கு மாறாக வரும் சிறப்புவிதியாகிய வழுவமைதி எனக்கோடல் எய்தியதன்மேற் சிறப்புவிதியை எய்தியது விலக்கிய பிறிதுவிதியாக மயங்கிக்கொண்டமை.]

இனி அலங்கார நூலார், அபிதை – இலக்கணை – வியஞ்சனு விருத்தி என மூன்று வகையாக்குவர். அவர் மதம்பற்றிப் பரிமேலழகரும்,

**'சொல்லின், தொகைஅறிந்த தூய்மை யவர்'** – கு. 721

என்னும் திருவள்ளுவர் குறளுள், செஞ்சொல் – இலக்கணைச் சொல் – குறிப்புச்சொல் என்பர்.

எடுத்தோத்தினைச் சத்தநூலார் பிரதிபதோக்தம் என்பர். போலியை 'அந்நியதாப் பிரதிபத்தி' என்பர். 'மங்கலம் என்பதோர் ஊர் உண்டுபோலும்' எனவரும் 'இவ' சத்தமாகிய ஒப்பில்போலியும். அயங்கலூராசாசீத் என வரும் வடமொழியிலும். வேண்டா என்னும் கலு என்பதனையும் வாக்கிய-அலங்காரம் என்பர்.

பொதுவாய் எய்திய விதியை உற்சர்க்கம் என்றும், எய்தியது விலக்கிப் பிறிது வரும் சிறப்புவிதியை அபவாதம் என்றும் கூறுவர்.

கிங்கரோதி – யாதுசெய்தான் என வரும். இது சகன்மகமும் அகன்மகமும் ஆகி வினாவின் வரும்.

**'பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே'** – ந. 462

இச் சூத்திரம் பாணினி கூறியவாறு கூறினர். அது வடமொழியில் காட்டுதும். வடநூலார் இரண்டு எழுத்திற்கு ஒரு காரப் பிரத்தியயம் கொடுத்து 'தலகாரம்' என்றாற்போல,



**'ணனஃகான் முன்னர்'** – தொ. எ. 26

**'லளஃகான் முன்னர்'** – தொ. எ. 24

என்பர் தொல்காப்பியர்.

இனிச் சராவதியாற்று மேல்கரை கீழ்கரை ஆசிரியர் பறவையை வர்த்திகா, வர்த்தகா என்பர்.

இந்நூலுள் சந்தேகம் தோன்றுவதனை மாபாடியம், கையடம், சித்தாந்தகௌமுதி, சத்தகௌமுதி, வாக்கியபதீயம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்தகௌத்துவம் கற்றவரைக் கேட்க. காசிகாவிருத்தி பிரக்கிரியாகௌமுதி என்னும் இரண்டினும் சித்தாந்தம் பிறவாது ஆதலின் அவை கற்றோரைக் கேளாது ஒழிக. வாக்கியபதீயம், அரிபீடிகை, ஏலாராசீயம் முதலாயின வழங்குங்காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினர் என்க. *(16)*

விளக்கம்

விநயம் – பணிவு. சான்றோருக்குமுன் தான் அடங்கி ஒழுகுதல். தொடக்கத்தில் 'பெரும்புங்கவர்' (3) என்ற தற்சிறப்புப் பாயிரத்தில் தம்மைப் பிறன்போல் உயர்த்திக் கூறியதனால், இறுதியில் அவையடக்கத்தைக் குறிப்பிட்டார். ஏனையோர் முதலிலேயே அவையடக்கமும் கூறுவர்.

பரியாயச் சொற்களுள் 'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி' உணர்தல் வேண்டும் என்பர் தொல்காப்பியனாரும்.

ஊழ் என்னும் அதிகாரத்துக் காட்டியன – ஊழ், பால், ஆகுஊழ், போகுஊழ், இழவுஊழ், ஆகலூழ், உண்மை, வகுத்தான் என்பன.

'பொறியின்மை யார்க்கும் பழியன்று' (கு. 618) என்பதனால் பொறி என்பதும் ஊழின் பொருள்படும் சொல்லாம். முறை, நியதி, பாக்கியம், விதி என்பன உரையில் கொள்ளப்படும்.

நிருத்தியை இலக்கணக்கொத்து நூலார் 'ஓர் சொற்பொருளை உறுத்தற்பொருட்டால் மொழி வருவித்து முடித்தல் (இ. கொ. 89) என்பர்.

அதற்கு உதாரணமாக, ஊழ் – 'அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி' என்றாற்போல்வன – என விளக்கமும் வரைந்தார்.

மெய்ப்பாட்டியலில் – புகுமுகம் புரிதல் முதலியவற்றின் உரையையும் தண்டியலங்காரத்தில் விரியுவமை முதலியவற்றின் விளக்கத்தையும் காண்க. இலக்கண விளக்க ஆசிரியர்,

'உற்றபண்பு ஆதியின் உவமம் செய்வுழி
மற்றவை வெளிப்பட வகுத்த விரிஉவமமும்' – பொ. 268

என்றாற்போல வாக்கியத்தொடராக விளக்கியதும் காண்க.

படியச்சு – எடுத்துக்காட்டு.

ஒவ்வொன்று முதலியவற்றைத் தொல்காப்பியனார்,

'தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்' – தொ. எ. 483

என்று குறிப்பிடுவார்.

'கவியொடும் புதனொடும் கலந்து' என்ற தொடரில், கவி, புதன் என்ற சொற்கள் கவிஞர்களையும், அறிவாளிகளையும் சுட்டுவது சாதி ஒருமை. இவை சொல்லால் ஒருமையாகிப் பன்மை வினையொடும் முடியாமல் தம் ஆற்றலால் பன்மை காட்டலின் சாதி ஒருமையாயின.

சிவிகை பொறுத்தான் என்பது வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப் பாலைவிட்டுப் பன்மைப் பாலையே விளக்கும். சிவிகை ஊர்ந்தான் ஒருவனாகவும் பொறுப்பார் பலராகலான், சிவிகை பொறுத்தான் என்பது உயர்திணைச் சாதி ஒருமையாய்ப் பன்மை காட்டிற்று. (இ. கொ. 130)



அஞ்சுவது, நூல் எனப்படுவது – என அஃறிணை ஒருமையீறு தோற்றி, அஞ்சுவன – நூல்கள் இவற்றை உணர்த்தின. தேர் ஓடா, நாவாய் ஓடா, வேலாண்முகத்த களிறு இவை பன்மைப் பொருளில் வரும் பால்பகா அஃறிணைப் படர்க்கைப் பெயராம்.

எண்என்ப எழுத்தென்ப – அஃறிணையில் சாதிப்பன்மை.

கண்என்ப – உயர்திணையில் சாதிப்பன்மை.

எண்...உயிர்க்கு – இதனுள் உயர்திணைச் சாதிப்பன்மையும் அஃறிணைச் சாதிப்பன்மையும் காண்க. (இ. கொ. 130)

கற்பவை – அஃறிணைச் சாதிப்பன்மை.

சுப் ஏறி நீங்கலும், ஒற்று அளபெடுத்தலும் முன்னர்க் கூறப் பெறவில்லையாயினும், முன்னர்க் கூறப்பட்டன போலப் பின்னர் எடுத்து விளக்கப்படுதல், புரோவாதம் இன்றியும் அநுவாதம் நிகழ்தலுக்கு எடுத்துக்காட்டு.

தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்துள் ஆகார ஊகார ஏகார ஓகார ஈற்றுப் பெயர்களுக்கே எழுத்துப்பேறளபெடை கூறி, ஈகார ஈற்றுக்குக் கூறினரல்லர். ஆயின் சொல்லதிகாரத்துள் முன்பு குறிப்பிட்டுள்ளவரைப் போல,

'அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்' – சொ. 125

என்று கூறிய விளிமரபு நூற்பா, முன்பு கூறாததனையும் கூறியது போல அநுவாதம் அமையச் செய்ததாதலும் காண்க.

விண்ட தாமரை – விண்ட – செயப்படுபொருள் குன்றிய வினை. விலங்கலைக் கால்விண்டு – காற்று மலையைப் பிளந்து; விண்டு – செயப்படுபொருள் குன்றா வினை. விள் என்ற ஒரு பகுதியே இருநிலையும் பெற்றது. இதனை,

'தன்வினை பிறவினை இவ்விரு வினைப்பொது' – இ. கொ. 67

என்ற நூற்பாப்பகுதியில் சுட்டி, இவன் வெளுத்தான்,

'தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' – தொல். பாயி.

'பொருள் முதல் ஆறினும் தோற்றி' – ந. 321

என்ற எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக விளக்கியுள்ளார் இலக்கணக்கொத்து ஆசிரியர்.

இசை எச்சம் – இருசொல் எஞ்சி நிற்பது; சொல் எச்சம் – ஒரேசொல் எஞ்சி நிற்பது – என்பது இவ்வாசிரியருக்கும் சேனவரையருக்கும் பரிமேலழகருக்கும் கருத்தாகும்.

'நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ' எம்மை–நும்மோடு தொடர்பில்லாத எம்மை – எனப் பொருள் தருவது இசையெச்சம். இவ்விசையெச்சப்பொருளைக் கூறுவாருடைய மெய்ப்பாடு கொண்டோ, சொல்லை ஒலிக்கும் திறம் கொண்டோ உணர வேண்டும் என்பது.

'நல்ல பறை படாஅ' – நற்செயலுக்குரிய பறைகள் ஒலிக்கப் படமாட்டா. இது தாற்பரியப் பொருளால் இறப்பு நிகழ்தல் என்ற குறிப்பை உணர்த்தலின், இஃது இலக்கணை அடியாகப் பிறந்த குறிப்பாகும். பறைக்கு நன்மையோ தீமையோ உணர்தல் இன்று என்பது காண்க.

'உடம்போடு உயிரிடை நட்பு' – ஈண்டு நட்பு இன்மையை நட்பு என்றார். இது பெயரிடை அமையும் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு பொருளைக் குறித்துஉணர்வதாகும். இது மாறுபாட்டுப் பொருளைக் குறிக்கும் இலக்கணைஎனவும் கூறப்படும். பாவமே செய்யும் அரக்கரைப் 'புண்ணிய சனம்' என்று கூறுவதும் மாறுபாட்டு இலக்கணையாம்.

வகைதெரிவான் என்றபெயரால் தெரிகின்ற புருடன் ஒருவன் உளன் என்று உணர்வதும், பழமுதிர்சோலை மலைகிழவோன்



என்ற பெயரால் அஃது அவனுக்கு உரிய இருப்பிடங்களில் ஒன்று என்று உணர்வதும் சான்றோர் இங்ஙனம் சொற்களை அமைத்தல் கொண்டு பெறப்படுவன ஆகிய உடம்பொடு புணர்த்தலாம்.

அதிகாரத்தாலும் அவாய் நிலையாலும் வருவித்து முடிப்பதனை இலக்கணக்கொத்து ஆசிரியர் 'அதிகாரத்தால் அவாய்நிலை தன்னால்' என்ற 89-ஆம் நூற்பாவில் விளக்கியுள்ளார்.

கடுமொழியும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம், கை இகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் – அரம் எனத் தேரை இருமருங்கும் இருவடங்கள் தனித்தனியே கொண்டு இழுப்பார்போல, வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம் என்பதோடு கடுமொழி, கைஇகந்த தண்டம் என்ற இரண்டனையும் தனித்தனியே கூட்டிப் பொருள் செய்வர். இதுவும் பொருள்கோள் வகையைச் சாரும்.

"'கடுமொழியும்......அரம்'

'பொருள் கருவி காலம் வினை இடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.'

இவற்றுள் அரம் என்பதும், ஒடு என்பதும் ஒருசொல் நின்றே தனித்தனி உதவுதல் காண்க. முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் முதலாயினவும் அது" என்று இலக்கணக்கொத்து நூலார் 130-ஆம் நூற்பா உரையுள் குறிப்பிட்டுள்ளார்.

'ரகாரதிநி நாமாநி ஸந்த்ராஸம் ஜநயர்திமே
ரத்நாநிச ரதாச்சைவ ராமத்ரஸ்தஸ் ராவண'

ரகாராதிநி – ரகரம் காரச் சாரியையும் பெறும்; 'இப' என்ற சாரியையும் பெறும் என்று கூறியதனை மறந்து காரச்சாரியை பெறாது, இப என்ற சாரியையே பெறும் என்று திரியக்கொண்டு ரகரத்திற்குக் காரச்சாரியை தருதலை ஆரிடத்துக் கொள்ளப்படும் வழுவமைதியாகக் கொள்வர் சிலர்.

அபவாதம் - எய்தியது விலக்கிப் பிறிதுவரும் சிறப்பு விதி.

நிஷேத விதி - எய்தியது மறுக்கும் விதி. அபவாதத்தின் பரியாயச் சொல்.

அபிதை - பெயர்ச் சொல்; இலக்கணை - தாற்பரியச் சொல்;

வியஞ்சனா விருத்தி - குறிப்புச் சொல்.

எடுத்தோத்து - நூற்பாவினுள் விளக்கிக் கூறுதல்.

அயங்கலூராசாதீத் - அவன் அன்றோ இருந்தான்; கலு - அசை.

கிம் கரோதி - யாது செய்தான்; இது வடமொழியில் செயப்படுபொருள் குன்றிய வினையும், செயப்படுபொருள் குன்றா வினையும் ஆம் என்பர் வடநூலார்.

'இதுசெயல் வேண்டும்' — சொ. 243

என்ற தொல்காப்பிய நூற்பாவின் போந்த கருத்தும் அது.

புதியன புகுதலுக்கு வடமொழி தமிழ் என்ற இரண்டிலும் ஒப்ப நிகழ்ந்ததொன்றைச் சுட்டுகிறார். ஓர் எழுத்துச் சாரியை ஓர் எழுத்துக்கே வருதல் வேண்டும் என்பது விதி. அவ்விதியை நீக்கி வடநூலார் 'த-ல-காரம்' என ஈரெழுத்துக்களுக்கு ஒரே சாரியை வழங்குவது போலத் தொல்காப்பியரும் இரண்டு எழுத்துக்களுக்கு, 'ளஃகான்' (எ. 24) என்றாற்போல ஒரே எழுத்துச் சாரியை கொடுப்பர்.

வர்த்திகா, வர்த்தகா - பறவை. - இது வடமொழியுள் புதியன புகுதல்.

தொல்காப்பிய உரையாளர் பலரும் வடமொழிமரபு உணர்ந்தே அந்நூற்கு உரை எழுதியுள்ளனர் என்பது இவர் கருத்தாகும். இக்காலத்து ஏலாராசீயம், அரிபீடிகை முதலிய வடமொழி இலக்கண நூல்கள் வழக்கிலில்லை.





## நூல் அரங்கேற்றம்

51\. *சீதள சந்த்ரமுக ராமபத்திர*
*தீக்கிதர்க்குப்*
போதொடு சென்று புகல்வோம்;
அவர்க்குப் பொழுது இல்லையேல்,
மேதினியில் தமிழ்செய்
பிரயோக விவேகந்தன்னைப்
பேதம்இலாத பதஞ்சலிபால்
சென்று பேசுவமே.

*திங்ஙுப்படலம் முடிந்தது.*

**பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்**
**சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்தான் - நேர்கொண்டு**
**கேட்டான் இனிக்கண்ணுல் கேட்கும் பதஞ்சலிதான்**
**கேட்டால்என் கேளாக்கால் என்.**
**உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை**
**ஐம்பத் தொருகவியால் உரைத்தான் – செம்பொன்சீர்**
**மன்னும் மதில்குருகூர் வாழ்சுப் பிரமணியன்**
**என்னும் ஒருவே தியன்.**

*பிரயோக விவேக உரை முற்றும்.*

விளக்கம்

**சீதள சந்த்ரமுக**

'அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்'

என்பதனை உட்கொண்டு, தம் கல்விச் செருக்குப் பற்றிப் பிறரை முகம் திரிந்து நோக்கா இயல்பினராம் இராமபத்திர தீக்கிதரைக் குளிர்ந்த சந்திரனைப் போன்ற முகத்தினர் என்றும், தஞ்சை

ஆத்தானப் புலவராகிய அவருக்கு ஓய்வு நேரம் கிட்டும்போது, அவர் முன்னிலையில் இந்நூலை அரங்கேற்றுவோம் என்றும், அவருக்கு ஓய்வு இன்று எனின், இவ்வுலகில் தமிழின் சொல்லிலக்கணம் பற்றிச் செய்யப்பட்ட இந்நூலை இராமபத்திர தீக்கிதரை ஒத்து இலக்கணப் புலமைக்கு நிலைக்களனாய்ப் பாடியகாரர் என்று புகழப்படும் பதஞ்சலியார் முன்னிலையிலேயே அரங்கேற்றுவோம் என்றும் தம் நூலின் சிறப்புப்பற்றிய பெருமிதம் தோன்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**பேர்கொண்டு நின்ற**

பெருமைமிக்க சொல்லிலக்கணம் பற்றிய இந்நூலை இலக்கணப் புலமையாகிய சிறப்பைத் தனக்கு உரிமையாகக் கொண்ட இராமபத்திர தீக்கிதன் தன் முன்னிலையில் அரங்கேறச் செய்து செவிமடுத்தான் ஆதலின் அச்சிறப்பு ஒன்றே இந் நூலுக்குச் சாலும்; இனி கண்களையே காதுகளாகக் கொண்டு கேட்கும் பதஞ்சலி இந்நூலைக் கேட்டாலும் அதனால் தனிச்சிறப்பு இல்லை; கேளாக்காலும் அதனால் குறைவு இன்று என்பது.

பதஞ்சலியை ஒத்த தகுதியுடையார் இராமபத்திர தீக்கிதர் என்பது. பதஞ்சலியைப் பாம்பாகக் கொண்டு 'கண்ணால் கேட்பவர்' என்றார்.

**உம்பர்க்குஉரிய**

செல்வவளம் சான்று மதிலால் சூழப்பட்ட திருக்குருகூரில் வாழும் சுப்பிரமணியன் என்ற அந்தணன் தேவரும் விரும்பும் பிரயோகவிவேகத்தை ஐம்பத்தொரு காரிகைகளில் இயற்றினான் என்பது.

பிரயோகவிவேக உரைவிளக்கம் முடிந்தது.

— ★ —

## பிரயோக விவேகம் காரிகை முதற் குறிப்பு அகரவரிசை


| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| அடைமொழியாம் தொகை | 42 | 300 |
| அண்ணிய கர்மத்து அபிகிதம் | 12 | 63 |
| ஆக்கிய சொற்கள் தகுதி | 19 | 114 |
| ஆக்கும் பிரதிபதத்துடனே | 50 | 335 |
| ஆதியது என்ப அபிகிதகர்த்தா | 14 | 77 |
| ஆயும் அல் அந்தம் அச் அந்தம் | 46 | 315 |
| ஆவி எழுத்து அச்சொடு சுரம் ஆகும் | 4 | 22 |
| ஆறோடும் ஐந்தொடும் மூன்றோடும் | 15 | 81 |
| இந்திரன் தாமரையைக் கரத்தாற் கொய்து | 10 | 54 |
| இருமொழி பன்மொழி பின்மொழி எண்ணோடு | 24 | 160 |
| உடன் நிகழ்கின்ற சகார்த்தாதியாகும் | 16 | 89 |
| உண்ணும் அதனால் உரைக்கும் இதனை | 31 | 204 |
| எடுத்தல் படுத்தல் நலிதல் என்றாகும் | 40 | 281 |
| ஏயும் கருமம் சுதந்திரம் ஏது என்று | 11 | 55 |
| காலத்திரயம் புருடத்திரயம் | 43 | 304 |
| கூறும் இரச்சுவம் தீர்க்கம் புலுதம் | 5 | 24 |
| கூறிய ஐ- இரண்டு ஆன்-ஒடு-மூன்று | 6 | 36 |
| சாமானியம் அவ்வியயம் பாவம் மூன்று | 30 | 200 |
| சாற்றிய தெய்வப்புலவோர் மொழிக்கும் | 49 | 327 |
| சின்மயம் சார்ந்த தத்தம் பொருள் இன்றி | 47 | 319 |
| சீதள சந்த்ரமுக ராமபத்திர | 51 | 347 |
| சுட்டெழுத்து ஆதிஅந்தம் பதமாக | 28 | 190 |
| சொன்ன தொகைக்குள் உருபும் பொருளும் | 26 | 170 |

| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| தற்புருடத்தொகை வேற்றுமை எட்டனுள் | 21 | 132 |
| தற்புருடன் துவிகு கர்மதாரயன் | 25 | 168 |
| தற்புருடன் துவிகு பலநெல் | 20 | 129 |
| திருநுதலாய்! கருத்தா ஆதியாதல் | 37 | 248 |
| துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்து | 29 | 197 |
| தேற்றும் தமிழுக்கு எழுவாய் விபத்தி | 8 | 49 |
| நித்தம் அநித்தம் அலுக்கு லுக்கு | 27 | 184 |
| நிறக்கும் துணைவினை ஓர் காலத்து எய்திடும் | 39 | 265 |
| நீர்கொண்ட சென்னி மகேச்சுரன் | 1 | 1 |
| பகுதிக்கு உரிய விகரணி ஈரைந்தும் | 49 | 291 |
| பழியாவினை செய்பவன் கருத்தா | 9 | 33 |
| பன்னிய போதுஅறி லாதேசம் என்னும் | 36 | 239 |
| பன்னும் பகாப்பதப்பேரே | 7 | 43 |
| பூதத்தொடு வர்த்தமானம் பவிடியம் | 44 | 304 |
| பெரும் புங்கவர் புகழ் போதாயனி | 3 | 19 |
| பேர்கொண்ட சுட்டுப்பெயரில் பிளந்து | 33 | 215 |
| பொற்பு அமர் தெய்வமொழிப் பாகுபாடும் | 2 | 8 |
| மண்டலத்துப் பதினெண் தேசிகச்சொல் | 18 | 107 |
| மருள்அறு காரணம் காரியம் பேரொடு | 48 | 325 |
| முட்டாது கூறிய பல்வகைப் பண்பின் | 34 | 220 |
| முற்றிய காரகமாம் கிரியாசட்டி | 17 | 100 |
| முன்மொழிப்பண்பு இருபண்பு | 22 | 145 |
| முன்மொழிப் பேர்ச்சொல் இடைச்சொல் | 23 | 155 |
| முன்னிலை ஏவல் ஒருமைச்சொல் போலும் | 35 | 229 |
| வல்லார் இளங்கொங்கை மாதே | 32 | 208 |
| விடயம் ஒரோவழி மேவுதல் | 13 | 71 |
| விரிக்கும் பெயர் ஆர்த்ததாதுகமான | 38 | 258 |
| வினைப்பெயரோடு அவ்யயமாம் கை-ஆதி | 45 | 310 |


★

## உரை நூற்பாக்கள் அகரவரிசை


| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| அஆஉஈ எனும் நான்கு | 41 | 292 |
| அகர இகரம் ஏகாரம் | 5 | 27 |
| அகர உகரம் ஓகாரம் | 5 | 27 |
| அதிதேசம் வியபதேசம் | 37 | 251 |
| அந்த உதாத்தம் | 24 | 161 |
| அந்நிய கர்மணி | 36 | 240 |
| அப்பியந்தரமே பாகியம் | 12 | 66 |
| அருத்தவத் தாதுர | 7 | 44 |
| ஆக்கம் சன் என்று | 16 | 94 |
| ஆதி உதாத்தம் | 24 | 161 |
| ஆர்த்ததாதுகமாம் | 38 | 259 |
| இகார உகாரம் | 5 | 27 |
| இயற்கை சகசம் | 5 | 26 |
| இயற்றப்படுவது | 12 | 65 |
| இருமொழிப் பண்பு | 22 | 145 |
| இலேசம் மிகையே லவம் | 44 | 305 |
| இவ்விரண்டு அல்லவை | 17 | 101 |
| ஈச்சிதம் தன்னோடு | 12 | 64 |
| ஈறு தோன்றிய | 50 | 336 |
| உடைப்பொருள் விசிட்டத் | 32 | 208 |
| உடைமை விசிட்டம் | 32 | 208 |
| உடையான் திரவிய | 31 | 205 |
| உபதை ஈற்றயல் | 37 | 252 |
| ஏன என் எச்சம் | 38 | 259 |

| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ஏவுதல் கருத்தா | 11 | 57 |
| ஒருமுதல் நிலையில் | 36 | 241 |
| ஒரோவழி மேவுதல் | 13 | 71 |
| ஒரோவழி யக்கும் | 37 | 253 |
| கம்மியமானம் | 16 | 93 |
| கர்த்திரு கர்மணி | 36 | 240 |
| கிழமை சம்பந்தம் | 17 | 101 |
| குறியே சமிக்கை | 4 | 23 |
| குறியே லிங்கம் | 43 | 305 |
| குறையே சேடம் | 44 | 305 |
| குற்றெழுத்து இறுதி | 36 | 241 |
| சத்தி சங்கேதம் போடம் | 18 | 107 |
| சமவாய சம்பந்தம் | 17 | 101 |
| சமான கர்த்தா | 39 | 265 |
| சம்பாவனை அவதாரணம் | 22 | 145 |
| சார்வதாதுகம்தாம் வினை | 38 | 259 |
| சார்வதாதுகம்தாம் அது | 38 | 259 |
| சிறுபான்மையே ஏக | 2 | 9 |
| சுரூபம் யாதானும் | 17 | 101 |
| சுரூயமாணம் | 16 | 93 |
| செயப்படுபொருள் குன்று | 35 | 230 |
| செயப்பாட்டு வினையொடு | 36 | 241 |
| செயப்பாட்டெச்சமும் | 37 | 252 |
| செயின் செய்தாலென | 38 | 259 |
| செய்யாச் செய்யூச் செய்பு | 38 | 259 |
| சேதனன் உயர்திணை | 49 | 327 |
| சையோக சம்பந்தம் | 17 | 101 |
| சொல்லப்படுநிலை | 11 | 58 |
| ஞித்து சுவரிதேத்து | 36 | 241 |





| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| தகுதி அவாய்நிலை | 19 | 114 |
| ததபாவம் ததந்நியம் | 21 | 134 |
| தப்பிரத்தியயமும் | 38 | 259 |
| தவ்வியம் இக்குத்தவ்வியம் | 41 | 291 |
| தனக்குப் பிறர்க்கென | 36 | 240 |
| தனித்தனி வருவது | 36 | 241 |
| தானப் பிரயத்தினத்தால் | 28 | 191 |
| துணைநிலை அகதிதம் | 12 | 64 |
| துன்னரும் எழுத்துசொல் | 18 | 108 |
| தேசிகச் சொல்லொடு | 2 | 9 |
| நாநார்த்தகமே பல | 18 | 107 |
| நிருவசனம் நிருத்தி | 50 | 335 |
| நிலைத்திணை அசலம் | 11 | 58 |
| நீ யான் என்னும் | 23 | 158 |
| நுவிலே செய்யிய | 38 | 259 |
| நெட்டெழுத்து இறுதி | 36 | 241 |
| பாயிரம் நாந்தி | 3 | 20 |
| பாவம் தன்மை | 34 | 220 |
| பிரசயம் விலங்கல் | 40 | 281 |
| பிரதானத்தொடு அப்பிரதானம் | 16 | 93 |
| பிரதிக்கினை | 2 | 8 |
| பிராசீனர் முன்னோர் | 2 | 13 |
| பிராப்பியம் எய்தப்படுவது | 12 | 65 |
| பிராயிகம் பெரும்பான்மை | 2 | 9 |
| பிரேரணை ஏவல் | 46 | 315 |
| பின்மொழித் துல்லியம் | 22 | 145 |
| பெயர் அடியாகப் பிறந்த | 35 | 234 |
| பெறுவழிப் பெருமை | 26 | 174 |
| பேதம் சாமானியம் | 17 | 101 |

| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| பொருள்நிறை அளவொடுபுணர் | 21 | 135 |
| மிகலே ஆகமம் கெடமிகல் | 26 | 172 |
| மிகுதி குறை ஒப்பு | 43 | 305 |
| முதல்நிலைப் பின்னரும் இடைநிலை | 41 | 291 |
| முயற்சி பிரயத்தினம் | 28 | 191 |
| முன்மொழித் துல்லியம் | 22 | 145 |
| முன்மொழிப் பண்பு | 22 | 145 |
| முன்மொழி விசேடியம் | 22 | 145 |
| வத்திரு விவட்சை | 26 | 171 |
| விச்சிராந்தி பெருது | 38 | 259 |
| விடயம் உரிமை | 13 | 71 |
| விதி அநுயோகி | 16 | 94 |
| விபத்தி வேற்றுமை உருபு | 8 | 51 |
| விப்பி ணிசந்தம் | 35 | 229 |
| வினைமுதல் கருவி அனைமுதல் | 37 | 252 |
| வீப்பிசை என்ன | 16 | 90 |
| வேறுபடுக்கப்படுவது | 12 | 65 |
| வேற்றுமை நயத்தால் | 13 | 71 |


★

## எடுத்துக்காட்டு நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை


| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **அ** | | |
| அஃறிணை மருங்கின் | 6 | 38 |
| அகர இகரம் | 5 | 27 |
| அகர உகரம் | 5 | 27 |
| அகரத்திம்பர் | 5 | 27 |
| அச்சக் கிளவிக்கு | 15 | 84 |
| அதங்கோட்டாசாற்கு | 2 | 12 |
| அதற்பொருட்டாதல் | 16 | 91 |
| அதிர்வும் விதிர்ப்பும் | 18 | 109 |
| அதுச்சொல் வேற்றுமை | 33 | 217 |
| அதுவாகு கிளவி | 16 | 91 |
| அதுவென் வேற்றுமை | 19 | 120 |
| அந்தந் தமக்கிலவே | 2 | 9 |
| அம்ம கேட்பிக்கும் | 11, 18 | 58, 109 |
| அம்போதரங்கம் | 2 | 9 |
| அம்முக் கிளவியும் | 39 | 270 |
| அம்முன் இகரம் | 5 | 27 |
| அல்லதன் மருங்கின் | 7 | 45, 46 |
| அல்வழி வேற்றுமை | 19 | 117 |
| அவ்வே மாத்திரை | 2 | 9 |
| அளபிறந்து உயிர்த்தலும் | 5 | 26 |
| அறைகுவன் சொல்லே | 41 | 291 |
| அன்ன மரபின் இரண்டொடு | 19 | 118 |

| தொடக்கம் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **ஆ** | | |
| ஆ ஓ ஆகும் இடனுமார் | 18 | 111 |
| ஆகார இறுதி அகர | 44 | 306 |
| ஆடூஉ அறிசொல் | 18 | 109 |
| ஆண்மை அடுத்த மகன் | 34 | 222 |
| ஆண்மை திரிந்த பெயர் | 18 | 109 |
| ஆயிரு திணையின் | 18 | 109 |
| ஆயிரு தொடைக்கும் | 5 | 29 |
| ஆறுருபும் வெளிப்படல் | 19 | 121 |
| **இ** | | |
| இஈ ஆகும் | 15 | 83 |
| இடப் பொருளுருபே | 6 | 38 |
| இடையில் நான்கும் | 2 | 10 |
| இடைநா | 25 | 169 |
| இயற்கைப் பொருளை | 41 | 293 |
| இரட்டைக் கிளவி | 39 | 268 |
| இரண்டாகுவதே | 6 | 36 |
| இரண்டு முதல் ஒன்பான் | 29 | 185 |
| இருமொழி பன்மொழி (இருபெயர், பலபெயர்) | 23 | 157 |
| ஏழாவது – சத்தமி | 6 | 36 |
| **ஐ** | | |
| ஐந்தாவது – பஞ்சமி | 6 | 36 |
| **ஒ** | | |
| ஒப்பில் வழியால் பொருள் செய்யும் உவம உருபுகள் – ஆர்த்தி | 6 | 37 |
| ஒப்பு – துல்லியம் | 22 | 145 |
| ஒருபொருட் சொற்கள் – சமாநார்த்தகம் | 24 | 162 |
| ஒருபொருள் பற்றிய வேற்றுச்சொல் – பிரதிபதம், பரியாயபதம் | 50 | 335 |
| ஒருமை – ஏகவசனம் | 7 | 44 |
| ஒருமை ஈருகும் அஃறிணை உம்மைத்தொகை – சமாகாரத் துவந்துவன் | 23 | 156 |
| ஒருமைப் பொருளில் வரும் எண்தொகை – ஏகவற்பாவி | 21 | 135 |
| ஒருமைவிளி – சம்போதனம் | 5 | 25 |
| ஒருவினைமுதலைக் கொண்டு முடியும் வினை – சமான கர்த்திருகம் | 39 | 265 |
| ஒரு வினைமுதல் – சமான கருத்தா | 39 | 270 |
| ஒரே காம்பில் தொங்கும் இரு பழம் போன்ற உம்மைத்தொகை – ஏக நாளா வலம்பி பலத்துவந்துவன் | 40 | 284 |
| ஒரே முற்றுச்சொற்றொடர் – ஏகவாக்கியம் | 39 | 270 |
| ஒரே வகைப்பட்ட விதியற்றது – அநித்தம் | 27 | 185 |

ÉCOLE FRANÇAISE
BIBLIOTHÈQUE

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **ஒ** | | |
| ஒரே வினைப்பகுதி குறில் நெடில் என்ற இரண்டனையும் ஈறாகவோ ஈற்றயலாகவோ கொள்வது - ஏகபதி | 36 | 241 |
| ஒரோவழி மேவுதல் – உபச்சிலேடம் | 13 | 71 |
| ஒலிக்குறைவு - சந்தோபங்கம் | 5 | 25 |
| ஒற்றும் உயிரும் ஈறாகிய வியங்கோள் – லோட்டு, லிங் | 41 | 293 |
| ஒற்றுமைத் தொடர்பு – சமவாய சம்பந்தம் | 13, 17 | 72, 101 |
| ஒற்றுமைப்பட்டுப் பரவியிருத்தல் – அபிவியாபகம் | 13 | 72 |
| ஒன்றன் பொருள்படும் வேற்றுச்சொல் – பிரதி பதம், பரியாய பதம் | 50 | 335 |
| **க...** | | |
| கருத்தின்றாதல் – அநீச்சிதம் | 12 | 63 |
| கருத்துண்டாதல் - ஈச்சிதம் | 12 | 63 |
| கலப்புவிகுதி – மிச்சிரப்பிரத்தியயம் | 30 | 200 |
| காரணப்பெயர், இடுகுறிப்பெயர் – யோகரூடம் | 2 | 9 |
| காரணப்பொருளில் வரும் எழுவாய் – ஏது கருத்தா | 11 | 57 |
| காலங்காட்டும் இடைநிலைதோய் இறுதி – லகாரம் | 41 | 291 |
| காலங்காட்டுவதாகிய தெரிநிலை – சுரூயமாணம் | 15 | 93 |
| குறிப்பால் பொருளுணர்த்தும் இடைச்சொல் – சூசகாவ்வியயம் | 42 | 302 |
| குறிப்புச் சொல் – வியஞ்சனாவிருத்தி | 50 | 340 |
| குறிப்புவினை – கம்மியமானக்கிரியை | 15 | 93 |
| குறியீடு – சமிக்ஞை | 4 | 23 |
| குறியீட்டுவேற்றுமை – சமிக்ஞா பேதம் | 2 | 9 |
| குறில் – இரச்சுவம் | 5 | 24 |
| குறில் ஈறு, ஈற்றயலாகும் வினைச்சொல் – பரப்பைபதம் | 36 | 241 |





| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **க...** | | |
| குறை – அபசயம், சேடம், நூநம் | 43 | 305 |
| குறையும் மிகையும் – நூநாதிகம் | 43 | 305 |
| குன்றக்கோடல் – அப்பிரதிபத்தி | 21 | 137 |
| கூட்டெழுத்து – சத்தியக்கரம் | 5 | 24 |
| கூட்டத்தொடர்பு – சையோக சம்பந்தம் | 13 | 72 |
| கூட்டிப்பிரித்தல் – யோகவிபாகம் | 13 | 72 |
| கூறியது கூறல் – புனருத்தி | 2 | 11 |
| கெடமிகல் – ஆதேசம் | 26 | 170 |
| கெடுதல் – நாசம், லோபம் | 7, 26 | 44, 170 |
| கேட்டே ஏற்றல் – பிரேரக சம்பிரதானம் | 13 | 73 |
| கேளாது ஏற்றல் – (மறு இடத்துக்கொடை) அநிராகர்த்திரு சம்பிரதானம் | 13 | 73 |
| கொடை – சம்பிரதானம் | 11, 31 | 57, 73 |
| **ச...** | | |
| சமய ஆற்றல் – சமய சங்கேதம் | 18 | 110 |
| சாதி ஒருமை – சாதி ஏகவசனம் | 50 | 336 |
| சாரியை – பதபூர்த்தி | 30 | 200 |
| சிறப்பித்தல் – விசிட்டங்கொளல் (அடைகொளி ஆக்குதல்) | 32 | 208 |
| சிறப்பின்மை (தலைமையில் பொருள்) – அப்பிரதானம் | 16 | 94 |
| சிறப்பு (தலைமைப் பொருள்) – பிரதானம் | 16 | 93 |
| சிறப்புடையோன் – விசிட்டன் (அடைகொளி) | 31 | 205 |
| சிறுபான்மை – ஏகதேசம் | 2 | 9 |
| சுட்டுச் சொல் – தற்சத்தம் | 45 | 310 |
| சுட்டுப் பெயர் – விவட்சிதார்த்தம் | 33 | 217 |
| செஞ்சொல் – அபிதை (பெயர்ச் சொல்) | 50 | 340 |
| செய என்னும் வினையெச்சம் – கர்த்துமுந், துமுந் | 38 | 260 |
| செயப்படுபொருளாகுந்தன்மை – கருமவற்பாவம், கருமபாவம் | 12 | 64 |

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ச... | | |
| செயப்படுபொருளாகும் வினைமுற்றுப் பெயர் – கருமமான கிருதந்தம் | 37 | 249 |
| செயப்படுபொருளில் செயப்பாட்டு வினைக்கண் வரும் நிகழ்காலப் பெயரெச்சம் – கானச்சு, சானச்சு (கற்கப்படும் நூல், கற்கப்படும் ஆசிரியன்) | 38 | 260 |
| செயப்படுபொருளுக்கு அடை – கர்ம விசேடம் | 39 | 271 |
| செயப்படுபொருள் – கருமம் | 9 | 53 |
| செயப்படுபொருள் எழுவாயாதல் – கரும கருத்தா | 11 | 56 |
| செயப்படுபொருள் குன்று வினைப்பகுதி – சகன்மகதாது | 35 | 230 |
| செயப்படுபொருள் குன்றிய வினை – அகன்மகம் | 11 | 56 |
| செயப்படுபொருள் செயப்பாட்டு வினைகொண்டு முடிந்து எழுவாயாதல் – கர்மணி பிரயோகம் | 36 | 242 |
| செயற்கு என்ற வாய்பாடு – துமர்த்தம் | 6, 16 | 39, 92 |
| செயற்கை – ஆகந்துகம் | 5 | 26 |
| செய் என் வினைப்பகுதி – கிரு | 38 | 262 |
| செய்தால் என்ற வினையெச்சம் – யதிசேத் | 38 | 259 |
| செய்து என்ற வினையெச்சம் – கிருத்துவா, துவா | 38 | 260 |
| செய்பு என்ற வினையெச்சம் – யப் | 38 | 259 |
| செய்யவேண்டும் என்று விதிக்கும் விகுதி – கிருத்திய பிரத்தியயம் | 41 | 291 |
| செய்யா என்னும் வினையெச்சம் – கமுஞ் | 38 | 259 |
| செய்யிய என்னும் வினையெச்சம் – நுவில் | 38 | 259 |
| செயின் என்னும் வினையெச்சம் – யதிசேத் | 38 | 259 |
| செய்யுட்சொல் – சுலோகபதம் | 5 | 25 |
| செய்யுள் முடிபு – வைதிகப் பிரகிரியை | 18 | 108 |
| செய்யூ என்ற வாய்பாடு – ணமுல் | 38 | 259 |
| செய்வித்தல் என்னும் பிறவினை – காரிதம் | 35 | 229 |





| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ச... | | |
| செய்வினை – நயக் (கர்த்தரிப்ரயோகம்) | 36 | 242 |
| செயப்பாட்டுவினை – யக் (கர்மணிப்ரயோகம்) | 36 | 242 |
| செய்வேன் – கரிஷ்யே | 38 | 262 |
| சென்று சேருமிடம் – ஆதாரம் | 13 | 72 |
| சென்று சேருமிடத்துக்கு அடிப்படையாக இருப்பது – ஆதேயம் | 13 | 72 |
| சேய்மையில் பொருள்கொள்வது – தூரான்வயம் | 19 | 115 |
| சேர்க்கை – சையுத்தம், சையோகம், யோகம் | 5 | 24 |
| சேர்ந்த தொடர்பு – சக்கிய சம்பந்தம் | 24 | 160 |
| சொல் – பதம் | 18 | 108 |
| சொல் பொருளுணர்த்தும் ஆற்றல் – சக்தி, சங்கேதம், போடம் | 18 | 108 |
| சொல்லாலாகும் குறிப்புப்பொருள் – அபிதாமூலத்தொனி | 50 | 339 |
| சொல்லிலக்கண நூல் – சத்த நூல் | 18 | 108 |
| சொல்லுக்கு முன் இணைந்து வரும் இடைச்சொல் – அவ்வியயம் என்னும் உபசர்க்கம் | 45 | 310 |
| சொல்லுருபு – விபத்தியர்த்தம் | 6 | 36 |
| த... | | |
| தகுதி – யோக்கியதை | 19 | 114 |
| தடுமாறு தொழில் – இதரேதரக்கிரியை | 15 | 84 |
| தடுமாற்றம் – அந்நியோந்நியம், இதரேதரம், விதியாரிலக்கணம் | 24 | 162 |
| தனக்குச் சமமாவது – தற்சமம் | 2 | 9 |
| தனித்தனி வாக்கியம் – பின்ன வாக்கியம் | 39 | 270 |
| தனித்தனி வினை கொண்டு முடியும் எழுவாய் – பின்ன கருத்தா | 39 | 265 |
| தனித்தனிவினை – பின்னக்கிரியை | 16 | 90 |
| தன்வச எழுவாய் – சுதந்திரகருத்தா | 11 | 57 |
| தன்வினைப் பகுதி – கேவலதாது | 35 | 230 |

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| த... | | |
| தன்னிடமிருந்து தோன்றுவது – தற்பவம் | 2 | 9 |
| தன்னோடியையின்மை நீக்கம் – அயோகவியவச்சேதம் | 50 | 336 |
| தாப்பிசை – பாசபந்தம் | 26 | 175 |
| தானாகவே தோன்றியது – சுயம்பு | 18 | 110 |
| திசைபற்றிய அன்மொழித்தொகை – திகந்தராளலக்ஷணவெகுவிரீகி | 24 | 162 |
| திரிபின் ஆக்கம் – விகாரசட்டி | 17 | 102 |
| தெரிநிலை – அபிகிதம் | 11 | 58 |
| தெரிநிலை எழுவாய் – அபிகித கருத்தா | 14 | 77 |
| தெரிநிலைச் செயப்படுபொருள்–அபிகித கருமம் | 14 | 77 |
| தெரிநிலை வினை – சுரூயமாணக் கிரியை | 16 | 93 |
| தெரியாநிலை – அநபிகிதம் | 11 | 58 |
| தெரியாநிலை எழுவாய் – அநபிகித கருத்தா | 11 | 58 |
| தெரியாநிலைச் செயப்படுபொருள் – அநபிகித கருமம் | 12 | 63 |
| தேர்வடம் இழுத்தல் போன்ற பொருள்கோள் – பிரத்தியேக பந்தாநுவம் | 50 | 339 |
| தேற்றச்சொல் – சுயமேவபதம் (தானே தாமே) | 11 | 56 |
| தேற்றம் - அவதாரணம் | 22 | 145 |
| தொகாநிலைத் தொடர் – வியத்த பதம் | 46 | 315 |
| தொகைச் சொற்றொடர் – சமத்த பதம் | 7, 46 | 46, 315 |
| தொடரால் பொருள் செய்வது – நிருவசனம், நிருத்தி | 9, 50 | 54, 335 |
| தொடர்ச்சியைத் தெரிவிக்கும் சொல் – ஆகிருதி கணம் (ஆதி, முதலிய போல்வன) | 16 | 90 |
| தொழில் பற்றிய காரணம் - காரக ஏது | 12 | 66 |
| தொழிற்பெயரைச் சேர்ந்த படுவிகுதி – ய | 45 | 312 |
| தொழிற்பெயர் (முதல்நிலை) – திங்பாவபதம் | 42 | 300 |
| (விகுதிபெற்றது) – கிருத்பாவபதம் | 30, 42 | 202, 300 |



| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ந | | |
| நலிதல் – சுவரிதம் | 40 | 284 |
| நான்காவது – சதுர்த்தி | 6 | 36 |
| நிகழ்காலப் பெயரெச்சம் – சதிர்ப்பிரத்தியயம் | 38 | 259 |
| நிலைத்திணை – அசலம் | 11 | 58 |
| நிலையிடும் ஆறாவது – நிர்தாரணே சட்டி | 13 | 73 |
| நிலையிடும் ஏழாவது – நிர்தாரணே சத்தமி | 13 | 72 |
| நிறுத்தலளவை – உன்மானம் | 23 | 157 |
| நூலுதாரணம் – மூலோதாரணம் | 3 | 20 |
| நெடிலோ. குறிலோ இரண்டையும் ஈறாகவோ, ஈற்றயலாகவோ கொள்ளும் வினைப்பகுதி – உபயபதி | 36 | 241 |
| நெடிலோ குறிலோ ஒன்றையே ஈறாகவோ ஈற்றயலாகவோ கொள்ளும் வினைப்பகுதி – ஏகபதி | 36 | 241 |
| நெடில் – தீர்க்கம் | 5 | 25 |
| நெட்டெழுத்து இறுதி ஈற்றயலாகும் வினை – ஆற்பநேபதம் | 36 | 241 |
| நேர்பொருளை விடுத்துத் தொடர்புடைய பிறிது ஒருபொருளை உணர்த்துவது – இலக்கணை | 47 | 320 |
| ப... | | |
| பகாப்பதம் - அகண்ட பதம் | 7 | 43 |
| பகுதிக்கும் இடைநிலைக்கும் இடைப்பட்ட பகுபத உறுப்பு – விகரணி | 41 | 291 |
| பகுபதம் - சகண்ட பதம் | 7 | 45 |
| பகுதிப்பொருள் விகுதி – சுவார்த்தப் பிரத்தியயம் | 34 | 222 |
| பகுதிப்பொருள் காட்டும் பிறவினை விகுதி – சுவார்த்தக் காரிதம் | 35 | 231 |
| படு விகுதி தொக்கது – நயக்கு | 37 | 252 |
| படு விகுதி விரிந்தது – யக்கு | 37, 45 | 252, 312 |
| பண்பு, தொழில் – பாவம் | 34 | 220 |
| பண்புத்தொகை – கருமதாரயன் | 20 | 129 |

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ப... | | |
| பண்புப் பெயராகும் (தொழிற்பெயராகும்) வினையாலணையும் பெயர் – பாவமான கிருதந்தம் | 37 | 249 |
| பண்புப்பெயர், தொழிற்பெயர் – பாவதத்தித பதம் | 7 | 46 |
| பண்புப்பெயர் (தொழிற்பெயர்) எழுவாயாதல் – பாவப்பிரயோகம் | 36 | 243 |
| பண்பு தொழில் இவற்றை யடுத்த பெயர் விகுதி – பாவதத்திதன் | 34 | 220 |
| பதிகம் – நாந்தி, பிரதீகம் | 3 | 20 |
| பயனிலைகொண்டு முடிதல் – கிரியாசமாத்தி | 8 | 51 |
| பரவியிருப்பது – விபு | 18 | 108 |
| பலபொருளொடு சொல் - நாநார்த்த பதம் | 18, 40 | 110, 283 |
| பன்மை – வெகுவசனம் | 7 | 44 |
| பன்மையீறுகும் உயர்திணை உம்மைத்தொகை – இதரேதரத் துவந்துவன் | 23 | 156 |
| பன்மைப் பொருள் தரும் எண்தொகை – அநேகவற்பாவி | 21 | 135 |
| பன்மைவிளி – சம்புத்தி | 5 | 25 |
| பாயிரம் – நாந்தி, பிரதீகம் | 3 | 20 |
| பால் மாறக்கூடியது – அநித்திய லிங்கம் | 49 | 330 |
| பிரித்தல் – விபாகம் | 42 | 301 |
| பிரித்துக்கூட்டல் – விபாக யோகம் | 13 | 72 |
| பிறவினை விகுதி – ணிச் | 6 | 39 |
| பிறவினைவிகுதி மறைந்திருக்கும் நிலை – அந்தர்பாவித ணிச் | 39 | 270 |
| பிறவினை விகுதி பெற்ற வினைச்சொற்கள் – ணிச் அந்தம் | 6 | 39 |
| பிறிதின் இயைபு நீக்கம் – அந்நியயோகவியவச்சேதம் | 50 | 336 |
| பிறிது – அந்நியம் | 21 | 134 |
| பின்மொழி – உத்தரபதம் | 26 | 172 |
| பின்மொழி எண் - சங்கியோத்தர பதம் | 24 | 161 |





| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ப... | | |
| பின்மொழி கெடுதல் – உத்தரபத லோபன் | 26 | 172 |
| பின்மொழிச் சிறப்பு – உத்தரபதப் பிரதானம் | 25 | 168 |
| புறப்பாட்டெல்லை – பஹிர்ஸீமா – வெகிச்சீமை | 11 | 59 |
| புறமொழியில் பொருள் சிறப்பு – அந்நியபத அர்த்தப்பிரதானம் | 25 | 169 |
| புறமொழிப் பொருள் – அந்நியபதார்த்தம் | 24 | 160 |
| பெண்பால் – ஸ்திரீலிங்கம் | 43 | 305 |
| பெயரெச்சம் – தப்பிரத்தியயம், சப்பிரத்தியயம், சதிர்ப்பிரத்தியயம், சானச்சு, கானச்சு | 38 | 259 |
| பெயர் அடியாகப்பிறந்த வினைப்பகுதி – சுப்புத்தாது, நாமதாது | 35 | 234 |
| பெயர் விகுதி – தத்திதன் | 7 | 46 |
| பெயர் விகுதிபெற்ற சொல் – தத்திதாந்தம் | 6 | 39 |
| பெயரைச்சேர்ந்த படுவிகுதி – யக்கு | 37, 45 | 252, 312 |
| பெரும்பான்மை – பிராயிகம் | 2 | 9 |
| பெருவழக்கற்றது – அப்பிரசித்தம் | 18 | 110 |
| பொது விதி – உத்சர்க்கம் | 50 | 340 |
| பொருட்டிரிவு – அருத்தவிகாரம் | 39 | 272 |
| பொருட்டு என்னும் நான்கன்பொருள் – தாதர்த்தியம், நிமித்தம் | 6 | 39 |
| பொதுப்பால் - சாமானிய லிங்கம் | 49 | 331 |
| பொருண்மை சுட்டல் – சற்பாவம் | 42 | 301 |
| பொருண்மை சுட்டும் உண்டு என்பது – சற்பாவபதம் | 36 | 244 |
| பொருத்தமின்மை - அநுபபத்தி | 47 | 320 |
| பொருளை உணர்த்தும் சொல் ஆற்றல் – சக்தி, போடம், சங்கேதம் | 18 | 107 |
| பொருள் – திரவியம் | 18, 32 | 108, 208 |
| பொருள் உடைமை – அர்த்தவத் | 7 | 44 |
| பொருள் உடையவன் (அடைகொளி) – திரவியவிசிட்டன் | 31 | 205 |
| போலச் செய்தல் – அநுகரணம் | 5 | 25 |
| போலியைக் கோடல் – அந்நியதா-பிரதிபத்தி | 21, 50 | 137, 340 |

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ம... | | |
| மயக்கம் – சையோகம், சையுத்தம் | 5 | 24 |
| மறை – தத் விருத்தம் | 21 | 134 |
| மறைந்திருக்கும் பிறவினை விகுதி – அந்தர்பாவித ணிச் | 39 | 270 |
| மறைந்திருத்தல் – லுக்கு | 39 | 268 |
| மாட்டறிந் தொழுகல் – அதிதேசம், வியபதேசம் | 37 | 251 |
| மாறுத புணர்ச்சி – நித்தம் | 27 | 185 |
| மாறுபடக் கோடல் – விப்பிரதிபத்தி | 21 | 137 |
| மாறுபட்ட இலக்கணை – விருத்தலக்கணை | 50 | 339 |
| மிகுதல் – ஆகமம் | 26 | 170 |
| மிகுதி – அதிகம், லேசம், லவம், வெகுளக்கிரகணம் | 43 | 305 |
| மிகுதிகுறையின்மை – சமம் | 43 | 305 |
| மிகைச்சொல் – இலேசம், அதிகம், உபசயம், லவம் | 43 | 305 |
| முக்காலம் – காலத்திரயம் | 33 | 305 |
| முடிக்கும் சொல் இரண்டனைக்கொண்டு முடியும் வேற்றுமை – உபபதவிபத்தி | 14 | 79 |
| முடிபு – விச்சிராந்தி | 38 | 259 |
| முதல்நிலைத்தொழிற்பெயர் – திங்பாவம் | 42 | 300 |
| முதல்வேற்றுமை உருபு – சுப்பிரத்தியயம் | 7 | 44 |
| முத்திறச்சொல் – வசனத்திரயம் | 43 | 305 |
| முப்பால் – இலிங்கத்திரயம் | 43 | 305 |
| முயற்சி – பிரயத்தினம் | 27 | 191 |
| முன்மொழி – பூர்வபதம் | 26 | 172 |
| முன்மொழிஅடை, அடைகொளி – விசேடண பூர்வம், விசேடிய பூர்வம் | 22 | 145 |
| முன்மொழி இடைச்சொல் – அவ்வியயபூர்வம் | 23 | 155 |
| முன்மொழி உவமை – உபமாபூர்வம் | 22 | 145 |
| முன்மொழி கெடுதல் – பூர்வபதலோபன் | 26 | 172 |
| முன்மொழிச் சிறப்பு – பூர்வபதப்பிரதானம் | 25 | 168 |





| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| ம... | | |
| முன்மொழிதல் – புரோவாதம் | 50 | 338 |
| முன்மொழிப் பெயர் – நாமபூர்வபதம் | 23 | 155 |
| முன்னும் பின்னும் மொழியடுத்துவரும் இடைச்சொல்தொகை – அவ்வியயீபாவ சமாசன் | 20 | 129 |
| முன்னுள்ளதன் அபாவம் – பிராகபாவம் | 19 | 121 |
| முன்னூலார் – பூர்வாசாரியர் | 8 | 51 |
| முன்னோர் – பிராசீனர் | 2 | 13 |
| மூக்கின்வளி எழுத்து – அநுநாசிகம் | 5 | 25 |
| மூவிடம் – புருடத்திரயம் | 43 | 305 |
| மூன்றாவது – திருதியை | 6 | 36 |
| மெய் – அல், வியஞ்சனம் | 4 | 23 |
| மெய்முதல் – அலாதி | 46 | 315 |
| மெய்யீறு – அலந்தம் | 46 | 315 |
| மெய்யெழுத்துப் பற்றிய புணர்ச்சி – அல்லுச்சந்தி | 19 | 118 |
| மெல்லினம் – பரிசாக்கரம், அநுநாசிகம் | 5 | 24, 25 |
| மேற்கோள் – பிரதிக்கினை | 2 | 8 |
| மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்றி முடித்தல் – உபலக்கணம் | 46 | 317 |
| மொழிப்பொருட்காரணம்–பிரவிருத்தி நிமித்தம், வியுற்பத்தி | 18 | 108 |
| வ... | | |
| வடிவு வேற்றுமை – ரூபபேதம் | 8 | 51 |
| வரையறுத்த துணிவு (முடிந்த முடிவு) | 16 | 94 |
| வரையறை – நியமம் | 15 | 82 |
| வல்லினம் – பரிசாக்கரம் | 5 | 24 |
| வழிமொழிதல் – அநுவாதம் | 50 | 338 |
| வழுக்காத்தல் – தோடாபவாதம் | 44 | 305 |

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **வ...** | | |
| வாழ்த்து (வியங்கோள்) – ஆசீர்வாதம் | 41 | 292 |
| விகுதி பெற்ற தொழிற்பெயர் – கிருத்பாவம் | 30, 42 | 202, 300 |
| விடாத ஆகுபெயர் – தற்குண சம்விஞ்ஞானவெகுவிரீகி | 24 | 163 |
| விட்ட ஆகுபெயர் – அதற்குண சம்விஞ்ஞான வெகுவிரீகி | 24 | 163 |
| விதிக்கும் விகுதி – தவ்வியப் பிரத்தியயம் | 41 | 294 |
| விதிப்பொருட்டாகிய விகுதி – தவ்வியப் பிரத்தியயம் | 41 | 294 |
| வியங்கோள் – லிங், லோட்டு | 41 | 294 |
| விரலும், விரலும் சேர நிற்றல் – யோகாங்குலி நியாயம் | 26 | 175 |
| விருப்பாய் ஏற்றல் – அநுமந்திரு சம்பிரதானம் | 13 | 72 |
| விலங்கல் – பிரசயம் | 40 | 281 |
| வினாச்சொல் – பிரச்சினபதம் | 42 | 301 |
| வினைகொண்டு முடியும் ஆறாவது – கர்மணி சட்டி | 14 | 78 |
| வினைகொண்டு முடியும் எழுவாய் – கர்த்திரு காரகம் | 8 | 50 |
| வினைகொண்டு முடியும் செயப்படுபொருள் – கர்த்திரு கருமம் | 12 | 64 |
| வினைகொண்டு முடியும் வேற்றுமை - காரகம் | 16 | 89 |
| வினைகொண்டு முடியும் வேற்றுமை உருபு – காரக விபத்தி | 14 | 79 |
| வினைசெய்யிடம் – சதி சத்தமி | 16 | 89 |
| வினைநிகழ்ச்சி பற்றி வரும் ஏழாவது – சதி சத்தமி | 16 | 89 |
| வினைப்பகுதி – தாது | 35 | 229 |
| வினைப்பகுதி அல்லாத பெயர்ப்பகுதி முதலியன – அதாது | 7 | 44 |





| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **வ...** | | |
| வினைப்பகுதியிலிருந்து உண்டானது – தாதுநிட்பன்னம் | 7 | 45 |
| வினைமுற்று – சார்வதாதுகம் | 38 | 259 |
| வினைமுற்று பெயர் – கிருதந்தம் | 7 | 46 |
| வினைமுற்று பெயர் விகுதி – கிருத்து | 30 | 200 |
| வினையடை – கிரியா விசேடணம் | 39 | 271 |
| வினையாலணையும் பெயர் – கிருதந்தம் | 7 | 46 |
| வினையாலணையும் பெயர் விகுதி – கிருத்து | 30 | 200 |
| வினைமுற்று – திங் | 36 | 240 |
| வினையின்மை – கிரியாபாவம் | 16 | 90 |
| வினைவிகுதி பெற்ற சொல் (முற்று) – திஙந்தம் | 36 | 239 |
| வெளிப்படை – பாகியம், பிரசித்தம் | 12 | 66 |
| வெளிப்படையாகப் பொருள் தரும் இடைச்சொல் – வாசகாவ்வியயம் | 42 | 302 |
| வெளிப்படையின்மை – அப்பியந்தரம் | 12 | 66 |
| வேண்டுகோள் – பிரார்த்தனை | 41 | 293 |
| வேறுபடுக்கப்படுவது – விகாரியம் | 12 | 65 |
| வேறுபாடின்மை – அபேதம் | 17 | 102 |
| வேறு – பிருதக்கு | 42 | 301 |
| வேற்றுப்பால் – அந்நியலிங்கம் | 49 | 330 |
| வேற்றுமை - விபத்தி | 6 | 36 |
| வேற்றுமை உருபாகும் இடைச்சொற்கள் – சுப்பிரத்தியயம் | 7 | 44 |
| வேற்றுமை உருபு – சுப் | 37 | 251 |
| வேற்றுமைத்தொகை – தற்புருடன் | 20 | 129 |
| வேற்றுமைப்பொருளில் வரும் ஏனைய சொற்கள்– விபத்தியர்த்தம் | 6 | 36 |
| வைதல் – சாபம் | 41 | 292 |


★

ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாமல் பொதுவாகக் கூறும்

## வடமொழி இலக்கணச் செய்திகள்

### காரக படலம்

வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். 3 – 20

மெய்யுள் சில எழுத்தை **மகாப் பிராணன்** என்றும், சில எழுத்தை **அர்த்தப் பிராணன்** என்றும், சில எழுத்தை **அற்பப் பிராணன்** என்றும் கூறுவர்.

சித்தாந்த கௌமுதியில் **ஸம்ஞா** பிரகரணத்தில், '**பூர்வத்ராஸித்தம்**' என்னும் சூத்திர விளக்கத்தில்,

> அயுக்மா: வர்க்கயமகா: யணச்ச அல்பாஸவ: ஸ்மிருதா:
> வர்க்காணும் ப்ரதம, த்ருதீய பஞ்சமா: யரலவா: அல்பப்
> ப்ராணு: - த்விதீய சதுர்த்தௌ சலச்ச மகாப்ராணு:

என்று குறிக்கப்பட்டமை காண்க. 4 – 23

வடநூலார் **சையோகம்** ஒரு மொழியினும் புணர்மொழியினும் கொள்வர். 5 – 24

வடநூலார், குறில் தனியே ஒருமாத்திரையாய்ப் பிறப்பதோர் எழுத்தும், நெடில் தனியே இரண்டு மாத்திரையாய்ப் பிறப்பது ஓர் எழுத்தும் ஆனாற்போலப் **புலுதமும்** தனியே மூன்று மாத்திரையாய்ப் பிறப்பதோர் எழுத்து என்று கூறி, வேதத்துள் சந்தோபங்கம் வாராமல் குறில் நின்ற இடத்தும் நெடில் நின்ற இடத்தும் புலுதம் ஆதேசமாக வருவதல்லது குறிலும் நெடிலும் போலப் பொருள் வேறுபடுத்த வாராது என்றும், உலக வழக்கில் சம்புத்தி சம்போதனத்தில் வரும் என்றும், சுலோகபதமான சம்புத்தியில் குறிலும் நெடிலும் இயல்பாய் நிற்கும் என்றும், சேய்மை விளியிலே தாளஒசை மணிஓசை என்கின்ற அநுகரணத்தொனி போலும் என்றும் கூறுவர். 5 – 25



அஃறிணை மருங்கில் என்றாற்போல இரட்டித்து வாராவிடத்து இல் – என்னும் உருபு **லுக்கு** ஆயிற்று என்பர் வடநூலார்.
6 – 38

இனி, சகார்த்தமாய் வந்த திருதியையைச் **சகார்த்தத் திருதியை** என்றும் **சகார்த்தம்** என்றும்,

தாதர்த்தியமாய்வந்த சதுர்த்தியைத் **தாதர்த்தியேசதுர்த்தி** என்றும் **தாதர்த்தியம்** என்றும்,

தும் என்பதின் அர்த்தமாய் வந்த சதுர்த்தியைத் **துமர்த்தம்** என்றும்,

சத்தமி அர்த்தமாய் வந்த கண், கால் முதலிய உபசர்க்கத்தைச் **சத்தமி அர்த்தம்** என்றும்,

துமுந் என்பதின் அர்த்தமாய் வந்த துவா என்பதனைத் **துமுநர்த்தம்** என்றும்,

ணிச் – என்பதின் அர்த்தமாய் வந்த சொல்லை **ணிச் அர்த்தம்** என்றும்,

தத்திதார்த்தமாய் வந்த துவிகுசமாசனைத் **தத்திதார்த்தம்** என்றும்,

சுவார்த்தமாய் வந்த பிரத்தியத்தைச் **சுவார்த்தப் பிரத்தியயம்** என்றும், **சுவார்த்தம்** என்றும், அதுவே **பிரகிருதி அர்த்தம்** என்றும் இன்னும் பல கூறுவர்.

இனி, சகார்த்த பதத்தை உத்தரத்திலே உடைய திருதியையைச் **சகார்த்தத் திருதியை** என்றும், ஒன்றன் நிமித்தத்தைத் **தாதர்த்தியம்** என்று கூறுவாரும் உளர். 6 – 39

வடநூலார் நிலைமொழிப் பொருளை ஒருமை இருமை பன்மை ஆக்கவேண்டி எழுவாய் விபத்தி முதல் ஏழு விபத்தியும் ஒன்று மூன்றாய் இருபத்தொன்றாம் என்பர். 7 – 45

வடநூலார் '**ஆத்மாநம் சிநத்தி**' என்பதனைத் தமிழார் தன்னைக் குத்தினன் என்பர். 12 – 64

வடநூலார் உள் - என்னும் சத்தமி விபத்தி ஒரு பொருளைக் கூட்டிப் பிரித்தல் என்னும் **யோகவிபாகத்தினும்,** ஒரு பொருளைப் பிரித்துக் கூட்டல் என்னும் **விபாகயோகத்தினும்** ஆதாரமின்றிவருவதனை **நிர்தாரணே சத்தமி** என்பர். *13 – 72*

'**கிராமாயகச்சத்**' முதலியவற்றை வடநூலார் **கர்மணி சட்டி** என்பர். *14 – 78*

நேரே முடிக்குஞ் சொல்லோடு வந்த மயக்கங்களைக் **காரக விபத்தி** என்பர். நூலைக் குற்றங் கூறினன் – முதலாயின உபபதத்தோடு முடிதலின் **உபபத விபத்தி** என்பர். *14 – 79*

'புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை'

புலவியுள் – புலவா நிற்கும் அளவில் என்று பொருள்பட்ட **சதிசத்தமி** என்னும் வினை நிகழ்ச்சியாம்.

**சதிசத்தமி – யஸ்யச பாவேந பாவ லக்ஷணம் –**
எவனுடைய செயலால் வேறு செயல் ஊகிக்கப்படுகிறதோ அந்தக் காரணச் செயலைச் சொல்லும் சொல் ஏழாம் வேற்றுமையை அடையும் என்பது. உதாரணம்:– **கோஷு துஹ்ய மாநாஸு கத:** *16 – 92*

**க்ரியாம் குர்வந்தி காரகம்**

**காரகே** – பாணினீயம் அத். 1. பாதம் 4. சூத். 26.

என்ற சூத்திரத்தில் **க்ரியா ஜனனம் காரகம் – கரோதி க்ரியாம் நிர்வர்த்தயதீதி காரகம்** என்று மாபாடியம் கூறும். *16 – 93*

இன்னும் வடநூலார் தேவதத்தன் நெடியன், தேவதத்தன் ஒருவன் – எனத் தத்திதனேடும் எண்ணேடும் முடிவனவற்றை நெடியன் ஆயினன் – ஒருவன் ஆயினன் என – **சன்** கொடுத்துக் காரகம் ஆக்குவர். *16 – 93*

★



## சமாச படலம்

வடநூலார் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் **லௌகிகப் பிரகிரியை, வைதிகப் பிரகிரியை** என்பர். *18 – 108*

சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாய்த் தோன்றும் என்றும், சொல்லை **நித்தியம்** என்றும், **விபு** என்றும் **திரவியம்** என்றும் சத்த நூலார் கூறுவர். *18 - 108*

இனி, சொல்லை **ஈசுர சங்கேதம்** எனவும் **சமய சங்கேதம்** எனவும் நாநார்த்த பதங்களையும் சமாநார்த்த பதங்களையும் **கட்டிய வழக்கு** எனவும் சில வடநூலார் கூறுவர். *18 – 110*

வடநூலாரும் அச்சுச்சந்தியினும் அல்லுச்சந்தியினும் உருபுகளையும் உம்மையையும், உவமையையும் ஈருக வைத்துப் புணர்த்தார். *19 – 118*

வடநூலார் அழிவுபாட்டபாவத்தைப் **பிரத்துவஞ்சா பாவம்** எனவும், முன் உள்ளதன் அபாவத்தைப் **பிராகபாவம்** எனவும் கூறுவர். (காவியாதர்சம் – ஏதுஅணிப் பகுதியில் காண்க.) *19 – 121*

அர்த்த பிப்பலி முதலிய சொற்களில் முன் நின்ற மொழி பிரதமை ஆகலின் அவை **பிரதமா தற்புருடன்** என்பர் வடநூலார். *21 – 132*

**கருஷ பாஷாணம்** (உரைகல்) என்னும் வினைத் தொகையை வடநூலார் இடம் உணர்த்தும் வினைப்பெயர் என்பர். (உரைக்கப்படுவதாகிய கல்) *22 – 148*

ஒருமையீருய் வந்த அஃறிணை உம்மைத்தொகையைச் **சமாகாரத் துவந்துவன்** என்றும், உயர்திணைப் பன்மையீருய் வந்த உம்மைத்தொகையை **இதரேதர யோகத்துவந்துவன்**

என்றும், ஒருமையீறு காடு என்றும் ஒரு பெயர்ப் பொதுச்சொல் போல் என்றும், **ஏகவற்பாவிபோல்** என்னும், பன்மையீறு மரங்கள் என்னும் சொல்போல் என்றும், **அநேகவற்பாவி** போல் என்றும் கூறுவர்.

பாணிநீயம்
அத். பா. சூ.

1. த்வந்த்வச்ச ப்ராணி தூர்ய ஸேநாங்காநாம் 2 – 4 – 2
   உதாரணம் – பாணிபாதம் முதலியன.
2. அநுவாதே சரணாநாம் 2 – 4 – 3
   உதாரணம் – கடகாலாபம் முதலியன.
3. அத்வர்யு க்ரதுரந புஞ்சகம் 2 - 4 – 4
   உதாரணம் - அர்காச்வமேதம்.
4. அத்யயந தோர்வி ப்ரகீருஷ்டா ரூயாநாம் 2 – 4 – 5
   உதாரணம் - பதக க்ரமகம்.

சார்த்தே த்வந்த்வ : 2 – 2 – 29

ராஜதந்தாதி ஷுபுரம் 2 – 2 - 31

*23 – 156*

எச்ச உம்மையைச் **சமுச்சயம்** என்பர். *23 – 156*

எதிர்மறை உம்மையை **அந்வாசயம்** என்பர். *23 – 156*

அளவை **பரிமாணம்** என்றும் நிறையை **உன்மானம்** என்றும் எண்ணைச் **சங்கியை** என்றும் வடநூலார் பெயர் கூறுவர். *23 – 157*

நீ யான் அவன் என்பன தொக்கு முன்மொழியும் பின் மொழியும் கெட்டு, யான் யாம் எனத் திரிந்து நீயும் யானும் அவனும் என்று பொருள் தருவதனை **ஏகசேட பதத் துவந்துவன்** என்பர். வடமொழியினும் **துவம் அகம்** என்புழிச் சகாரமும் முன்மொழியும் தொக்கு அகம் என்னும் பின்மொழி **ஆவாம்** எனவும் **வயம்** எனவும் ஆதேசமாகி ஏகசேட பதத் துவந்துவனும் என்பர். *23 – 157*



பல பதங்கள் தொகுதல் வெகுபத துவந்துவனுக்கே அன்றி ஒழிந்த தொகைக்கு வாரா என்க. வரும் என்பர் வடநூலார். *24 – 161*

வடநூலில் உம்மைத்தொகையில் வெகுவிரீகி வாராது எனவும் **ஆநக துந்துபி** என்பதனை மத்தியபத லோபன் மேல் வந்த **வெகுவிரீகி** எனவும், அவருள் சிலர் ஆநக துந்துபி என்பதனை உம்மைத்தொகைமேல் வந்த வெகுவிரீகி எனவும் கூறுவர். *24 – 162*

வடமொழியில் வன்ன விகாரமும், ஆதி விருத்தியும் விகரணியும் **விகாரம்** எனக் கொள்வர். *26 – 173*

★

## தத்தித படலம்

ஒருசார் வடநூலார் இந்நூல் 31-ஆம் காரிகையில் சொற்றவை விசேடியத்தின்மேல் நின்ற எனவும், 32-ஆம் காரிகையில் சொற்றவை விசேடணத்தின்மேல் நின்ற எனவும் கூறுவர். *32 – 209*

**யத்திர, தத்திர, அத்திர, யத : தத : அத :** என்பன-வற்றை வடமொழியார் **விவட்சிதார்த்தம்** என்பர். *33 – 217*

வடமொழியில் **சதுர்வர்ணம்** என்பதனைச் **சாதுர்வர்ணியம்** என்பர். (ஸ்ரீ கீதை 4-13) *34 – 222*

★

## திங்நுப் படலம்

தேற்று ஒழுக்கம் – தேறு ஒழுக்கம் எனப் பொருள்படுமால் எனின், இதனைப் பகுதிப் பொருள் விகுதி என்னும் **சுவார்த்தத்தில் வந்த காரிதம்** என்பர். *35 – 231*

காடு கொன்று – காடு கொல்வித்து; **அநுபபத்தி** தோன்றினவிடத்து இவ்வாறு பொருள்படுவதனை **அந்தர்ப்பாவித ணிச்** என்பர். 35 – 231

கடம் கரோதி – கடயதி, துலயதி என வடமொழியினும் வரும்.

**தத்கரோதி ததாசஷ்டே** – நாமதாது ப்ரகரணம்.
உதாரணம் – கடம் கரோதி – கயயதி.
35 – 234

வடநூலார் **ஆற்பநேபதம் பரப்பைபதம்** இரண்டினுக்கும் ஈறு வேறு கூறினர். 36 – 242

வடநூலார் கிருத்துவா, கர்த்துமுந் என்னுது **துவா - துமுந்** என ஈறு பற்றியே பெயரிடுவர். 38 – 260

கற்கின்ற மாணுக்கன் எனக் கர்த்தாவைக் கொண்ட நிகழ்காலப் பெயரெச்சத்தைச் **சதிர்ப் பிரத்தியயம்** என்பர்.
38 – 260

கற்கப்படும் நூல் கற்கப்படும் ஆசிரியன் - என்னும் நிகழ் காலம் காட்டிய செய்யும் என்னும் செயப்பாட்டுவினைப் பெயரெச்சத்தைக் கருமத்தோடும் கருத்தாவோடும் வரும் **சானச்சு** என்பர். சுர பேதத்தால் **கானச்சும்** அது. 38 – 260

குர்வத் தேவதத்தன் என்பது சமஸ்த பதம். (தொகை)

குர்வந் தேவதத்தன் என்பது வியஸ்த பதம். (தொகாநிலை)
38 – 261

'கற்றில கண்டு அன்னம்' இதனை **ஆகார்யாரோபம்** என்பாரும் உளர். 39 – 266

'புலராமை ஏறற்க' – இதனை அலங்கார நூலார் **அபாவாபாவம்** என்பர். 39 – 266



வடநூலார் இரட்டைக் கிளவிக்கு **'தேதீவ்யமானம்'** என உதாரணம் காட்டி யங் லுக்கு என்பர். 39 – 268

வடநூலாரும் 'வாய்பிளந்து உறங்கினன் – குறட்டை விட்டு உறங்கினன்' எனக் காட்டுவர். 39 – 268

'கோழி கூவிப் போது புலர்ந்தது' – கூவுவித்து என வடநூலார் **அந்தர்பாவித ணிச்** சாக்கிக் கூறுவர். 39 – 270

ஒரு பொருள்மேல் பலபெயர் வந்து ஒருவினை கொள்வதனையும் இடைப்பிறவரலாய் நின்ற பெயரெச்சத்தையும் **கர்த்திரு விசேடணம்** என்பர். 39 –272

**'கலு பீத்துவா'**–என்னும் **துவாப் பிரத்தியயம்** – வேண்டா குடித்து என நின்று, வேண்டாகுடிக்க எனப் பொருள்பட்டு, **துமுநர்த்தமாம்** என்பர். துமுந் துவாவாய்த் திரிந்த ஆதேசம் என்னுது, துமுந் பொருளில் வந்த துவா – என்பர். 39 – 272

கிருத்துப் படுத்தல் – திஙந்தம் எடுத்தல் என மாறிக் கூறுவாரும் உளர். 40 – 281

நாநார்த்த பதம் எல்லாம் இருசொல் ஆதலின் இருகால் உரைக்க என வடநூலார் கூறுவர். **பயக்ஷீரம், பயோம்புஜம்** என அமரசிங்கத்துள் வருதலின் என்க. 40 – 283

இடைச்சொல் முதலிய ஆறினையும் **அவ்வியயம்** என்பர்.
42 – 301

சத்துவகுணத்தைப் **புல்லிங்கம்** எனவும், ரசோகுணத்தைத் **திரீலிங்கம்** எனவும் தமோகுணத்தை **நபுஞ்சகலிங்கம்** எனவும் இவை **சாத்திரலிங்கம்** எனவும் கொள்வர். இவ்வாறு வரும் சாத்திரலிங்கத்தை **லௌகிகலிங்கம்** என்று கொள்ளாதொழிக. இம்மூன்று குணமும் மிகுதி குறை ஒப்பாய் நிற்றல் பற்றி ஒரு பொருட்சொல்லே மூன்று லிங்கமுமாம் என்பர்.

(பத்நீ – திரீலிங்கம்; தாரம் – புல்லிங்கம்; களத்ரம் – நபுஞ்சக லிங்கம். இம்மூன்றும் மனைவி என்ற ஒரு பொருளையே குறிப்பன.) 43 – 305

வழுவமைத்தலை வடநூலார் நிரங்குசாக் கவய: என்று போவர். 44 – 307

வடநூலார் உபசர்க்கம் இருபது என்பர். 45 – 312

**ப்ர, பரா, அப, ஸம், அநு, அவ, நிஸ், நிர், துர், துஸ், ஸு, ப்ரதி, பரி, உப, அதி, வி, நி, உத், அபி, இப** என்பன.

**உபசர்க்கம் - உதாரணம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப்ர | — | ப்ரபவதி | ப்ரதி | — | ப்ரதிகச்சதி |
| பரா | — | பராஜய: | பரி | — | பரிபாலயதி |
| அப | — | அப்ம்ருத்யு: | உப | — | உபஸ்ஸார |
| ஸம் | — | ஸம்ஸ்கார: | அதி | — | அதிதிஷ்டதி |
| அநு | — | அநுகச்சதி | வி | — | விஜயதே |
| அவ | — | அவலோகதே | நி | — | நிகீர்ய |
| நிஸ் | — | நிஸ்தீர்ய | உத் | — | உத்பததி |
| நிர் | — | நிர்கச்சதி | அபி | — | அபிகச்சதி |
| துர் | — | துரத்யய: | இப | — | ராதிப: |
| துஸ் | — | துஸ்ஸாத்ய: | | | |
| ஸு | — | ஸுஜன: | | | |

போல்வன.

**யற்சத்தம்** வந்தபின் **தற்சத்தம்** வருதல் வடநூலார் மதம். 45 – 312

பாவகர்மணியில் வரும் செயப்பாட்டு வினையை **யக்கு** என்பர். அன்றியும் பொத்துப்படும், மன்றுபடும், சோர்வுபடும் எனப் பெயரடுத்து வரும் படுவை **யக்கு** என்றும், இயற்றப்படுதல் வேறுபடுக்கப்படுதல் எனத் தொழிற்பெயர் அடுத்து வரும் படுவை **ய** என்றும் கூறுவர். 45 – 312



வடநூலுள்ளும் **பசஹி** என்பது **பச** எனக் குறைந்து நின்று பசஹி எனப் பொருள்படும்.

**அதோ ஹே :** பாணிநீயம் அத் 6. பாத 4. சூ. 105

என்றவிதிப்படி, பச் + அ + ஹி — ஹி என்ற விகுதி மறைந்து, பச என்பது முன்னிலை ஒருமை வினையின் உருவமாகும். 46 – 316

சக்கிய சம்பந்தத்தால் **இலக்கணை** என்றார் வடநூலார். 47

தமிழில் வடநூலார் மதம்பற்றி இலிங்கநியமம் ஏகதேசமாக வரும். 49 – 320

படர்க்கை முன்னிலை தன்மை விரவுப்பெயர்களை வடநூலார் **சாமானியலிங்கம்** என்றும், இலிங்கம் தோன்றாதன என்றும், இடைச்சொற்களையும் இலிங்கம் தோன்றாதன என்றும் கூறுவர். 49 – 330

வடநூலார் கர்மதாரயன் என்னும் பண்புத்தொகைக்குப் பண்பு வேறொரு லிங்கமாய் நின்றாலும் பண்புடைப்பொருள் எந்த லிங்கமாம் அந்தலிங்கமாக்கிப் புணர்த்துவர் ஆதலின், அடையாக நின்ற குணலிங்கத்தை **அநித்தியலிங்கம்** என்பர்.

**பும்வத் கர்மதாரய ஜாதீய தேசீயேஷு** 6-3-42
**நப்ராண் நபாந் நவேதா நாஸத்யா நமுசி**
**நகுலநக நபுஞ்சக நக்ஷத்ர நக்ர**
**நாகேஷு ப்ரக்ருத்யா** 6-3-75
49 – 330

வடநூலாரும் ஏகஏகம் என்பதனை ஏகைகம் என்பர் 50 – 336

சாதி ஒருமையைச் **சாதிஏகவசனம்** என்பர். 50 – 336

'நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை' என இலக்கணை அடியாகப் பிறந்த குறிப்பை **இலக்கணா மூலத்தொனி** என்பர். 50 – 339

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு'

எனப் பெயரடியாகப் பிறந்த குறிப்பை **அபிதா மூலத்தொனி** என்றும் **விருத்தலக்கணை** என்றும் கூறுவர். – 339

உடம்பொடு புணர்த்தல் என்றும் உத்தியை **நிபாதம்** என்பர். 50 – 339

அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை **அநுஷங்கம்** என்றும், அவாய்நிலையான் வருவித்து முடிக்கும் சொல்லை **அத்தியாகாரம்** என்றும் கூறுவர். 50 – 339

'கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்'

என்புழி அரம் என்னும் ஒருமைப் பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனிக் கூட்டி முடிப்பதனைத் தேர்வடம் இழுப்பார்போலப் **பிரத்யேக பந்தாந்நுவயம்** என்பர். 50 – 339

எடுத்தோத்தினைச் சத்தநூலார் **பிரதிபதோக்தம்** என்பர். 50 – 340

போலியை **அந்யதாப்பிரதிபத்தி** என்பர். 50 – 340

அசைச்சொற்களை **வாக்கியாலங்காரம்** என்பர். 50 – 340

பொதுவாய் எய்திய விதியை **உத்சர்க்கம்** என்றும், 50 – 340

எய்தியதுவிலக்கிப் பிறிதுவரும் சிறப்புவிதியை **அபவாதம்** என்றும் கூறுவர். 50 – 340

★

## உரையில் காணப்படும் வடமொழி இலக்கண ஆசிரியர், நூல்கள் பற்றிய குறிப்பு

1. **அப்பைய தீக்ஷிதர்:** பொருளணியை வடமொழியில் சிறந்த மகாகவியாகிய காளிதாசர் உவமைஅணி முதல் ஏதுஅணி ஈறாக நூறு அணிகள் விளங்க இலக்கண இலக்கியம் அமைந்த சுலோகங்களாக இயற்றிச் **சந்திராலோகம்** என்று பெயரிட, அந்நூலுக்கு இவர் உரையெழுதி, ஆங்காங்குள்ள பல சுலோகங்களை உதாரணமாகக் காட்டியதோடு, அவற்றிற்கு இன்றியமையா அலங்காரங்களை வாக்கியரூபமாகத் தெரிவித்து, நூற்றுக்குமேல் ஊற்றாக **இரசவதலங்காரம்** முதல் **ஏகவாசகாநுப் பிரவேச சங்கராலங்காரம்** ஈறாக இருபது அணிகளைச் சேர்த்துக் **குவலயாநந்தம்** என்ற நூல் இயற்றிய-தோடு, உவமையணியே பல அணிகளாக விரிவடைந்தது என்ற கருத்தினை விளக்கிக்கூறும் **சித்திர மீமாஞ்சை** என்ற சிறிய அணிநூல் ஒன்றும் வடமொழியில் இயற்றியுள்ளார்.

ஒரே சொற்றொடர் கூறப்பட்ட அளவிலேயே, அது பல பொருள்களுக்கும் இருப்பிடமாய்ப் பல பொருள்களையும் கொள்ள வாய்ப்பு அளித்தலுக்கு ஒரே காம்பில் தொங்குகின்ற இரண்டு பழங்களை **'ஏகநாளாவலம்பி பலத் துவந்துவன்'** என உவமை கூறுகிறார். 40 – 284

2. **அமரசிங்கர்:** பழைய நிகண்டு நூல்களில் **சாஸ்வதரால் அநேகார்த்த சமுச்சயா** என்ற பெயரோடு இயற்றப்பட்ட நிகண்டே பழங்காலத்தில் பிரசித்தமாயிருந்தது. பாணினீயம் தோன்றியபின் வடமொழியில் அதற்கு முற்பட்ட ஏனைய பல வியாகரண நூல்களும் சிறப்பிழந்தமை போலவே,

அமரசிங்கரால் இயற்றப்பட்ட **அமரகோசம்** வெளிவந்தபின் அதற்கு முற்பட்ட நிகண்டு நூல்கள் வழக்கற்றுவிட்டன. கி. பி. 500-ஐ ஒட்டி இயற்றப்பட்ட இந்நூலுக்கு **மகேசுவரர்** என்பவர் உரை எழுதியுள்ளார். கி. பி. 1300-ஐ ஒட்டிப் **புருஷோத்தம தேவர்** என்பவரால் ' திரிகண்ட சேஷம் ' என்ற பிற்சேர்க்கை ஒன்று இதற்கு அமைந்துள்ளது.

ஒரு சொல்லுக்கு ஒரே பொருள்தான் உண்டு. வடிவு ஒற்றுமை உடைய பல சொற்களையும் ஒரே சொல்லாகக் கருதிக் கொண்டு நாம் ஒருசொல்லுக்கே பலபொருள்களைக் கற்பிக்கிறோம். பால் என்ற பொருளில் வரும் பய என்ற சொல் வேறு; நீர் என்ற பொருளில் வரும் பய என்ற சொல் வேறு. **பயக்ஷீரம், பயோம்புச** என அமரசிங்கத்துள் ஒவ்வொரு பொருளில் வரும்போதும் ஒரே வடிவுடைய சொற்கள் வெவ்வேறாகவே கொள்ளப்படுகின்றன. 40 – 283

அமரசிங்கத்துள் மூன்றும் காண்டத்துள் அவ்வியய வர்க்கம் எல்லாம் கூறப்படுகின்றன. அவை இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாக உள்ளன. ஆதலின் உரிச்சொற்களையும் அவ்வியயத்துள் அடக்குக. 42 – 302

3. **அலங்கார நூலார்**: வடமொழியில் அணியிலக்கணம் பற்றிய நூல்கள் பலவாக உள்ளன. அவை – **பாமஹசூத்ரம், வாமநசூத்ரம், காவ்யாதர்சம், சரசுவதீகண்டாபரணம், சிருங்காரதிலகம், காவ்யப்பிரகாசம், அலங்கார சர்வஸ்வம், ரஸதரங்கிணி, ரஸமஞ்சரி, த்வந்யாலோகம், சாகித்ய சிந்தாமணி, சாகித்ய சூடாமணி, சாகித்ய தர்ப்பணம், சமத்கார சந்திரிகை, பிரதாபருத்திரீயம், சாகித்ய ரத்நாகரம், சந்திராலோகம், குவலயாநந்தம், சித்திரமீமீமாஞ்சை, அலங்கார கௌஸ்துபம், ரஸ கங்காதரம், ஏகாவளி, காவியதர்ப்பணம்** போன்ற நூல்களும் அவற்றின் உரைகளுமாம். இந்நூல்களையும் இவற்றிற்கு உரைகளையும் வரைந்த சான்றோர்களே அலங்கார நூலார் எனப்படுவர்.



இதனை அலங்காரநூலார் அபாவாபாவம் என்பர்.

( அபாவாபாவம் இன்மையது இன்மை, இஃது ஏது அணியின் ஒருகூறு.) 39 – 266

அலங்காரநூலார் இசையெச்சத்தைக் காகு என்பர். 50 – 338

அலங்காரநூலார் **அபிதை, இலக்கணை, வியஞ்சநா விருத்தி** எனச் சொல்லை மூன்றாக்குவர். பரிமேலழகர் இவற்றைச் செஞ்சொல், இலக்கணைச் சொல், குறிப்புச்சொல் என்பர். 50 – 340

4. **இந்திரன்** – இந்திரனால் பாணினீயத்துக்கு முன் வடமொழியில் ஓரிலக்கண நூல் செய்யப்பட்டது எனவும், அஃது ஐந்திரம் என்று வழங்கப்பட்டது எனவும், கூறுவர். அகத்தியனாருக்கு ஐந்திரமே உடன்பாடு என்பதும், அதன்கண் விளிவேற்றுமை முதல் வேற்றுமையாக அடக்கப்படாது தனித்து எட்டாம் வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது என்பதும், அக் கருத்தை,

' ஏழியல் முறையது எதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன் ஒருவகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன் '

என்ற நூற்பாவில் அகத்தியர் சுட்டியுள்ளார் என்பதும், தொல்காப்பியரும் ஐந்திரத்தில் சிறந்திருந்ததனாலேயே **' ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் '** என்று புகழப்படுகிறார் என்பதும், முதற்சொல் சினையையும் சினைச்சொல் முதலையும் குறிப்பதனைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பதனால், அவருக்கு முதல் நூல்களில் ஒன்றாகிய ஐந்திரத்தை இயற்றிய இந்திரனுக்கும் இலக்கணை உடன்பாடு போலும் என்பதும் கூறப்படுகின்றன. 1 – 26, 2 – 172

5. **கர்ணமிர்த ஆசிரியர்** – ஸ்ரீ கிருஷ்ணகர்ணம்ருதம் என்ற அரிய செய்யுள் நூலை இனிய சுலோகங்களில் இயற்றித் தந்தவர் **லீலாசுகர்.** இவர் **திரிலோகம்** என்பதனைத் **திரைலோக்கியம்** என்று தம் நூலின் இரண்டாம் அத்தியாயத்தின் 105ஆம் பாடலில் கையாண்டுள்ளார். அப்பாடல் பின்வருமாறு.

**'உர்வ்யாம் கோபி மஹீதர: லகுதா:**
**தோர்ப்யாம் தருதோ லீலயா**
**தேநத்வம் திவி பூதலேச சததம்**
**கோவர்தநோத் தாரக:**
**த்வாம் த்ரைலோக்கியதரம் வஹாமி**
**குசையோரக்ரே நதத் கண்யதே**
**கிம்வா கேசவ பாஷணேந பஹுநா**
**புண்யை: யசோ லப்யதே.'**

திரிலோகம் – மூவுலகு; திரைலோக்கியம் – மூவுலகாந்தன்மை.
34 – 222

6. **காசிகாவிருத்தி:** கி. மு. 500ஐ ஒட்டி இயற்றப்பட்ட பாணிநீயம் என்ற வடமொழிச் சொல்லிலக்கண நூல் ஏறத்தாழ 4000 சூத்திரங்களை உடையது. இந்நூலுக்கு பல உரைகள் தோன்றின எனினும் நூல் முழுமைக்கும் ஏறத்தாழ 1100 ஆண்டுகள் வரை உரை எழுதப்படவில்லை. அக்குறை தீர கி. பி. 650ஐ ஒட்டி வாரணசி என்னும் காசிநகரில் வாழ்ந்த **ஜயதீர்த்தர், வாமநர்** என்ற அறிஞர் இருவர் நூல் முழுமைக்கும் உரை வரைந்தனர். காசிநகரில் இயற்றப்பட்ட காரணத்தால் அவ்விருத்தியுரை காசிகாவிருத்தி என்று வழங்கப்படுகிறது. காசிகாவிருத்தியுரைகாரர் பேத சம்பந்த சட்டியில் முப்பத்தாறு பேதம் காட்டினர். 17 – 102

கர்மதாரயனில் முன்மொழி குணம்பற்றி வாராது, சாதி பற்றி வந்தமைக்கு எடுத்துக்காட்டாகக் **காசிகாவிருத்திகாரரும் 'கிருஷ்ணசர்ப்பம்'** என்பதனைக் கூறுவர். 20 – 147



7. **காத்யாயநர்:** பாணிநீயம் கி. மு. 500ஐ ஒட்டித் தோன்றியது. கி. மு. 300ஐ ஒட்டி வாழ்ந்த இப்பெரும்புலவர் பாணிநீய சூத்திரங்களுள் 1245க்கு உரை வரைந்துள்ளார். இவருக்கு **வரருசி** என்ற பெயரும் உண்டு. 1 – 1

பதினொன்று என்பதனை ஒன்றை அதிகமாக உடைய பத்து என்று விரித்து உருபும் பொருளும் உடன்தொக்க மத்யபதலோபன் என்பர் காத்யாயநர். **ஏகாதிகாம்தச: ஏகாதச:** 21 – 136

சாகபார்த்திபன் என்பதனைக் காத்யாயநர் மத்ய பத லோபனென்பர். **சாக பார்த்திவா தீநாஞ்ச** – என்பது அவர் உரை. 26 – 171

மலர்முகம், தாமரைமுகம் – என்பன பூர்வபதலோபனும் உத்தரபத லோபனும் ஆகாவோ எனின் தாமரையைச் சினையின் பிரத்தியம் ஒன்று வந்து புணர்ந்து கெடும் என்பர் காத்யாயநர்.
26 – 172

காத்யாயநர் சமாசனில் விபத்தி இல்லை என்று சித்தாந்தம் பண்ணினர். அவர் உரைத்தாங்கு உரைப்பர் சேனவரையரும்.

**ஸுபோ தாது: ப்ராதிபதிகயோ:** பாணிநீயம் 2 - 4 – 71 என்ற சூத்திரத்தை அடியொற்றிக் கூறியுள்ளார். 19 – 119

8. **காளிதாசர்:** வடமொழிப் பெருங்கவிஞருள் ஒருவர். உவமைகளை மிகச் சிறப்பாக அமைத்துப் பாடுவதில் தமக்குத் தாமே இணையானவர். இவர் இயற்றிய **ரகு வம்சம்** என்ற மகா காவியத்தின் முதல் சுலோகம்.

**'வாகர்த்தாவிவ சம்ப்ருத்தெள வாகர்த்தப் பிரதிபத்தயே**
**ஜகத: பிதரெள வந்தே பார்வதீ பரமேச்வரெள'**

என்பது. சொல்லும் பொருளும் போல உலகங்களுக்கெல்லாம் தாய் தந்தையாய் விளங்குகின்ற அம்மையப்பராகிய பார்வதீ பரமேசுவரரைச் சொல்லும் பொருளும் பயனடையும் பொருட்டு வணங்குகின்றேன் என்பது அதன் பொருள்.

காளிதாசனும் '**வாகர்த்தாவிவ**' என்னும் சுலோகத்தால் சொல்லும் பொருளும் பேதாபேதமாய் வரும் என்று கூறுவன்.
*18 – 108*

காளிதாசருடைய **மேகசந்தேசம்** என்ற பெயரிய மேக தூதம் மந்தாக்ராந்த விருத்த யாப்பில் *115* செய்யுட்களைக் கொண்டது. குபேரனுக்கு ஏவலனான இயக்கன் ஒருவன் தன் பணியில் வழுவியதால் மத்திய பாரதத்திலுள்ள ராமகிரி மலைச் சாரலுக்கு அனுப்பப்பட்டானாக, அவன் தன் மனைவியிடத்துக் கொண்ட வேட்கையால் மாரிக்கால மேகத்தைக் கண்டு அதனை விளித்துத் தூது அனுப்பியதைக் கூறும் பாடல் இது.

வடமொழியில் காளிதாசனும் மேகசந்தேசத்தினுள் மேகத்தை உறுப்பு உடையதுபோல், மறுத்துரைப்பதுபோல் செய்யாமரபின் தொழிற்படுத்தடக்குதல் காண்க. *47 – 321*

*9.* **கீதை :** குருக்ஷேத்திரத்தில் போர்க்களத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்ட நூல் ஸ்ரீகீதையாகும். இது *18* அத்தியாயங்களையும் *697* சுலோகங்களையும் உடையது. ஸ்ரீகீதையில் நான்கு சாதிகள் என்ற பொருளில் **சதுர்வர்ணம்** என்று குறிப்பிடவேண்டும் இடத்தில் நான்குசாதிகளாந்தன்மை என்று பொருள்படும் **சாதுர்வர்ணியம்** என்ற பாவபதம் வந்து சதுர்வர்ணம் என்ற பொருளைச் சுட்டுகிறது. *34 – 222*

> **'சாதுர்வர்ணியம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச :**
> **தஸ்யகர்த்தாரமபி மாம் வித்ய கர்த்தார மவ்யயம்'** 4 - 13

குணத்துக்கும் கர்மத்துக்கும் ஏற்ப நான்கு வருணங்களை நான் படைத்தேன்; அதற்குக் கர்த்தா எனினும் என்னை அவிகாரி என்றும் அகர்த்தா என்றும் அறிக' என்பது அதன் பொருள்.

*10.* **குணிவிருத்தி :** பாணிநியின் வியாகரணத்திற்குக் காத்யாயநர் வார்த்திகம் எழுதிய பின்னரும் பதஞ்சலியார்



மாபாடியம் இயற்றும் முன்னரும் (கி. மு. மூன்றும் நூற்றுண்டுக்கும் கி. மு. முதல் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட பகுதி) சான்றோர் பலர் உரை வரைந்துள்ளனர். அவற்றில் பலவற்றைப் பதஞ்சலியாரும் தம்மாபாடியத்தில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று குணிவிருத்தி என்பது.

இனி, குணிவிருத்திகாரர் தானே, தாமே என்னும் சுயமேவ பதம் தொடர்ந்து, செயப்படுபொருள் குன்றிய வினையோடு முடியும் கருமத்தைக் கரும கருத்தா என்பர். இது பாடியகாரருக்கு உடன்பாடன்று. பாடியகாரருக்குமுன் **குணிவிருத்தி**. *11 – 56*

*11.* **கையடம் :** பாணிநி வியாகரணத்துக்குப் பதஞ்சலியாரால் வரையப்பட்ட பேருரையான மாபாடியத்துக்குப் பதின் மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த **கையடர்** என்பாரால் வரையப்பட்ட விளக்கம் **கையடம்** எனப்படும்.

கையடத்துள் **நிருவர்த்தியம், விகாரியம், பிராப்பியம்** எனச் செயப்படுபொருள் மூவகையாகப் பகுக்கப்பட்ட வண்ணம் சேனாவரையர் முதலாயினரும் இயற்றப்படுவதும், வேறுபடுக்கப் படுவதும், எய்தப்படுவதும் எனச் செயப்படுபொருளை மூன்றாக்குவர். *22 - 65*

*12.* **சந்தோபிசிதம் :** வேதத்திலுள்ள உக்தை முதலிய ஒலி வேறுபாடுகளுக்கு எழுத்து எண்ணிக்கை கற்பிக்கும் வேதாங்க நூல் இது. இதன்கண் காணப்படும் விதிகளுக்கு வேதத்திலிருந்து எடுத்துக்காட்டுக்களும் இணைத்தே கூறப்படும்.

சந்தோபிசிதம் போல இலக்கண இலக்கியங்கள் ஒருங்கு தோன்ற '**மாதர்ச்சுவார்த்தம்**' என்றும். *44 - 306*

*13.* **சைநேந்திரன் :** சைநேந்திரன் ஒரு வியாகரண நூல் செய்தார் என்பது சைனர்களின் மரபு. அம்மரபை ஒட்டி இரண்டாம் வேற்றுமையின் பொருள், பண்புத்தொகை விளக்கம் முதலியவற்றைப் பவணந்தி முனிவர் குறிப்பிட்டுள்ளார் என்று கூறும் மரபும் உண்டு.

நன்னூலாரும் ஆக்கல் அழித்தல் அடைதல் முதலாக சைநேந்திரன் மதம்பற்றிப் பலவாக்குவர். 12 – 65

கருங்குதிரை என்பது நன்னூலார் கூறியவண்ணம் கருமை என்பதனோடு புணர்ந்ததன்றே எனின் அவர் வாமநன்சிநேந்திரன் செய்த சத்த நூல்பற்றி அவ்வாறு கூறுவர். 49 – 331

*14.* **சைமினி**: வேதங்களிலும் பிராமணங்களிலும் உள்ள சடங்குகளைப் பற்றியும் அவற்றின் பயன்களைப்பற்றியும் விளக்கிக் கூறும் **பூர்வமீமாஞ்சை** என்று வழங்கப்படும் **கர்மமீமாஞ்சா சூத்திரம்** என்ற நூலை இயற்றியவர் இவர். இந்நூல் 2300 ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது. இதற்குச் **சரபஸ்வாமி** என்பவரால் பாஷ்யம் வரையப்பட்டுள்ளது. அதற்கு கி. பி. 700ஐ ஒட்டிக் **குமரிலரால்** '**தந்த்ரவார்த்திகம்**' என்ற விளக்கவுரை வரையப்பட்டுள்ளது. 'வேதம் ஒருவரால் படைக்கப்பட்டதன்று; அஃது அநாதி. ஒலி நித்தியமானது. சொல்லுக்கு பொருள் உணர்த்தும் ஆற்றல் இயற்கையாகவே அமைந்தது. அது கட்டிய வழக்கன்று' முதலிய செய்திகள் இந்நூலில் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

சத்துவகுணத்தைப் புல்லிங்கமெனவும், ரசோகுணத்தைத் திரீலிங்கம் எனவும், தமோகுணத்தை நபுஞ்சலிங்கம் எனவும், இக்குணங்களோடு கலவாத பொருள் ஒன்றும் இல்லை எனவும் இக்குணங்களோடு கூடிய பொருளை உணர்த்தும் சொல்லையும் உபசாரத்தால் அவ்வாறு கூறுவர் எனவும் **ஜைமினி** நாலாம் அத்தியாயத்தில் கூறினர் என்க. 43 – 305

*15.* **தண்டியாசிரியர்**: வடமொழியில் **காவியாதர்சம்** என்ற அணிநூலை இயற்றியவர் இவர். அதுவே இப்போது மிகப் பிரபலமாக உள்ளது. அதனை ஒட்டியே வீரசோழிய அலங்காரப் படலமும் தமிழ்த் தண்டியலங்காரமும் தோன்றின.

தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல யாமும் மூலோதாரணமும் காட்டினும். 3 – 20



ஆசார்ய தண்டிகள் உவம உருபுகளைச் சார்த்தி என்றும் ஒப்பில் வழியால் பொருள் செய்வனவற்றை ஆர்த்தி என்றும் கூறுவர். 6 – 37

**இவ, யதா, ததா** – இவை ஆப்தி

**துல்ய, ஸம, ஸங்காச, ப்ரதிம, சதிருசாதய**: – இவை **ஆர்த்தி** என்பர் தண்டியாசிரியர்.

ஆசாரிய தண்டி – விசேடிய பூர்வபத கர்மதாரயன். 22 – 146

இனமின்றிச் செய்யுளில் வந்த கர்மதாரயனுக்குத் தண்டியாசிரியரும் '**தவளசந்திரன்**' என்பர். 22 – 147

*16.* **நளன்கதை**: கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த **ஸ்ரீ ஹர்ஷர்** என்ற கவிஞரால் நைஷத சரிதம் 22 காண்டங்களில் இயற்றப்பட்டது.

வடமொழி நளன்கதையில் 'வனத்தில் அரமனையைச் சென்றான்' என்ற கதிதாதுவும் அது. 15 – 82

'கவியொடும் புதனொடும் கலந்து நாடொறும்
புவிபுகழ் நிடதர்கோன் புரவி ஏழுடை
குவிதலைத் தேர்கடாய் குணது நின்றெழும்
அவிர்கதிர் வானவன் அழகு மேவினன்'

வடநூலார் உயர்திணைச்சாதி ஒருமை காட்டினர் என்பது அறிய வேண்டி வடமொழி நளன் காவியத்திலிருந்து இக்கவியை மாத்திரம் யாம் மொழிபெயர்த்துக் காட்டினும். 50 – 337

*17.* **பதஞ்சலியார்**: கி. மு. 500ஐ ஒட்டி இயற்றப்பட்ட பாணினீயத்திற்குக் காத்யாயநர் வார்த்திகம் எழுதிய பின்னர்ப் பற்பல உரைகள் வெளிவந்தனவாக, அவற்றை எல்லாம் உட்கொண்டு, கி. மு. 100ஐ ஒட்டி, பாணினீயத்தின் 4000 சூத்திரங்களில் 1713 சூத்திரங்களுக்கு மாத்திரம் பதஞ்சலியார்

*இயற்றிய* **மாபாடியம்** *என்ற பேருரை அகப்பட்டுள்ளது. இம்மாபாடியத்திற்கு கி. பி. ஏழாம் நூற்றாண்டினராகிய* **பர்த்ருஹரி** *என்பார்* **வாக்கியபதீயம்** *என்ற விளக்கமும் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டினராகிய* **கையடர்** *என்பார்* **கையடம்** *என்ற விளக்கமும் வரைந்துள்ளனர். இம்மாபாடியத்தின் நடையின் கம்பீரத்தை வடமொழி வல்லார் அனைவரும் வியந்தும் நயந்தும் பாராட்டுவர்.*

*பாணினீ பிராதிபதிகத்தையும்* **தாதுநிஷ்பன்னம்** *என்றாரால் எனின், எழுத்துமாறாட்டம் என்னும்* **அக்கரப்ரஞ்சம்** *வாராமை பற்றி அவ்வாறு உரைத்தார் என்பர் பாடியகாரர்.* *7 – 45*

*கேண்மை தானே நந்தும் முதலியன செயப்படு பொருள் குன்றாத வினையோடு முடியாமையின் இவை கருமகருத்தா ஆகா என்பர் பாடியகாரர்.* *11 – 56*

*பேதசம்பந்த சட்டியை நூற்றொருபேதமாய் விரியும் என்று பாடியகாரர் சீட்டுக் கொடுப்பர்.* *17 - 102*

*எண் அளவு நிறைகள் தம்மொடுதாம் புணர்ந்த தொகையைப் பாடியகாரர் உம்மைத்தொகைத் துவந்துவன் என்பர்.*

**தச + ச + ஏகம் + ச — ஏகாதசம் –– த்வந்த்வபக்ஷ:** 21 – 136

*மலர்முகம், தாமரை முகம் என்பனவற்றில் தாமரை முதலுக்கும் சினைக்கும் பெயர் என்பர் பாடியகாரர்.* *26 - 172*

*சாகப்பிரிய பார்த்திபன் – சாகபார்த்திபன் என்பதனைப்* **பாடியகாரர் இலக்கணை** *என்பர்.* *26 – 171*

*18.* **பாணினியார் :–** *பாரதத்தின் வடமேற்குக் கோடிப் பகுதியில் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர். ஏறத்தாழ 4000 சூத்திரங்களில் வடமொழி வியாகரண நூல் வரைந்துள்ளார். அஃது இவர் பெயரால் பாணினீயம் என்று வழங்குகிறது. இவர் தமக்குமுன் வாழ்ந்த இலக்கணம் வல்ல சான்றோர்களில் அறுபத்துநால்வர் பெயரைக் குறிப்பிடுகிறார்.*



*இவர்தம் காலத்துக்கு முற்பட்ட* **தாதுபதம்** *(ஏறத்தாழ 2000 தாதுக்களைப் பற்றிக் கூறும் நூல்)* **கணபதம்** *(ஓரினச் சொற்களின் தொகுப்பு) முதலிய நூல்கள் இவரால் குறிப்பிடப்பட்டுள்ளன. பிற்காலத்து எழுந்த* **தாதுமஞ்சரி, பதமஞ்சரி** *என்பன தாதுபதம், கணபதம் என்ற நூல்களை அடிபொற்றி வரையப்பட்டனவே யாகும். உத்திவகைகளை முதல் முதல் கையாண்டவர் இவரே. அவ்வுத்தி வகைகள் ஒருங்கு திரட்டப்பட்டுச் சென்ற நூற்றாண்டில்* **நாகோஜிபட்டர்** *என்பவரால்* **'பரிபாஷேந்து சேகரம்'** *என்ற நூலாக அமைக்கப்பட்டுள்ளன.*

*பெயர்ச் சொற்கள் யாவும் வினைப்பகுதியாகிய தாதுக்களில் இருந்து தோன்றியனவே என்ற* **சாகடாயநர்** *கொள்கையை அடியொற்றியே பாணினி வியாகரணம் முற்றும் அமைந்துள்ளது.*

*பாணினியாரால் பெரிதும் குறிப்பிடப்படுபவர் சாகடாயநர், கார்க்கியர், சாகல்யர் முதலானோர். பாணினீயம் தோன்றியபின் ஏனைய இலக்கணங்கள் மறைந்த விட்ட செய்தி ஒன்றே இதன் பெருஞ்சிறப்புக்கு உரிய நற்சான்றாகும்.*

*கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பாணினீயத்தின் 1245 சூத்திரங்களுக்குக் காத்யாயநர் என்ற வரருசியால் வார்த்திகம் ஒன்று வரையப்பட்டது. அடுத்து அந்நூலுக்குக் குணிவிருத்தி முதலிய உரைகள் தோன்றின. கி. மு. முதல் நூற்றாண்டில் பதஞ்சலியாரால் வரையப்பட்ட மாபாடியம் என்ற பேருரை இப்பொழுது 1713 சூத்திரங்களுக்கே அகப்பட்டுள்ளது.*

*பாணினீயம் முழுமைக்கும் கி. பி. 650-ஐ ஒட்டிக் காசி நகரில் வாழ்ந்த ஜயாதித்யர், வாமநர் என்ற சான்றோரால் காசிகாவிருத்தி என்ற விளக்கவுரை வரையப்பட்டது. ஏழாம் நூற்றாண்டில் பர்த்ருஹரி என்பவரால் மாபாடிய விளக்கமான வாக்கியபதீயம் என்ற நூலும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் கையடர் என்பவரால் கையடம் என்ற நூலும் இயற்றப்பட்டன.*

பதினைந்தாம் நூற்றாண்டில் இராமபத்திரர் என்பவரால் பாணினீயம் கற்பவர் நலங்கருதிப் பல பகுப்புக்களாக முறை செய்யப்பட்ட **பிரிகிரியா கௌமுதி** என்ற நூல் வரையப்பட்டது.

அம் முறைவைப்பை இன்னும் எளிமைப்படுத்திக் கற்பவர் உள்ளத்தில் எளிதில் பதியச்செய்யும் வகையில் பதினேழாம் நூற்றாண்டில் பட்டோஜி என்பவரால் **சித்தாந்த கௌமுதி** இயற்றப்பட்டது. அதுவும் நாளடைவில் கற்பார்க்கு எளிமைத்-தன்றாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் வரதராசர் என்பவரால் **லகு கௌமுதி** என்ற நூலாகச் சுருக்கி வரையப்பட்டது. பாணினீயம் எட்டு அத்தியாயங்களை உடையது. ஒவ்வோர் அத்தியாயமும் பல பாதங்களை உடையது. ஒவ்வொரு பாதத்திலும் பல சூத்திரங்கள் உள்ளன.

பாணினி பிரதிதிபதிகத்தைத் தாதுநிஷ்பன்னம் என்றார். **அக்கரப்ரஞ்சம்** வாராமைக்கு அங்ஙனம் கூறினர். 7 – 45

**சித்தாந்த கௌமுதி**யின் **சப்தாதிகாரத்தில் அஜந்தப்புல்லிங்கப் பிரகரணத்தில்** முதல் சூத்திரம்,

**அர்த்தவத் அதாது : அப்பிரத்யய : பிரரதிபதிகம்** - என்பது, இதனுள் **அதாது** என்று கூறியிருப்பதே பிராதிபதிகம் தாதுநிஷ்பன்னம் என்பதற்குச் சான்று. வினைப்பகுதிபோல எழுத்தொற்றுமையுடைய பெயர்ச்சொற்களும் இருத்தலால். அப்பெயர்ச் சொற்களை அப்படியே வேர்ச்சொற்களாகவே கொள்ளாமல், அவற்றிற்கு அடிப்படையான வினைப்பகுதிகள் உண்டு என்று கொள்க என்பதே இதன் கருத்து. ஒரே வடிவில் காணப்படும் பெயர்களுக்கும் வினைப்பகுதிகளுக்கும் கீழ்க்கண்ட உதாரணங்களைக் கொள்க.

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| ஆடு | ஒரு விலங்கு | உடம்பை விரைய அசை |
| ஈ | ஒரு பறவை | கொடு |
| எய் | முள்ளம் பன்றி | அம்பைச் செலுத்து |



| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| எள் | எள்ளு | பரிகாசம் செய் |
| ஓடு | மட்கலம் | விரையச் செல் |
| கல் | பாறை | கற்றுக்கொள் |
| செய் | வயல் | ஒருசெயலைச் செய் |
| செல் | மேகம் | இடம் பெயர் |
| சொல் | நெல் | கூறு |
| பார் | பூமி | நோக்கு |
| வில் | சிலை | விலைக்குக் கொடு |
| வீ | பூ | சா |
| வை | வைக்கோல் | ஓரிடத்தில் வை. |

வினைப்பகுதிகளை ஒத்த வடிவினவான இப்பெயர்ச் சொற்கள் இதே வடிவிலோ, வேறுபட்ட வடிவிலோ அமைந்த அடிப்படை வினைச்சொற்களிலிருந்தே உண்டாயின என்பது பாணினியார் கருத்து. 7 – 45

16 - 92

**சதிசத்தமி**

**யஸ்ய ச பாவேந பாவ லக்ஷணம்.**

எவனுடைய செயலால் வேறுசெயல் ஊகிக்கப்படுகிறதோ அந்தக் காரணச்செயலைக் கூறும் சொல் ஏழாம் வேற்றுமையை அடையும் என்பர் பாணினியார்.

1-4-26

**க்ரியாம் குர்வந்தி காரகம் -**

**'காரகே'**

என்ற சூத்திரத்தில்

**கிரியா ஜனனம் காரகம் -**
**கரோதி க்ரியாம் நிர்வர்த்தயதீதி காரகம்**

16 – 93

என்று மாபாடியம் விளக்கும்.

பாணினி ஒடு உருபு ஏற்ற சொல்லை **அப்பிரதானம்** என்பர்.

**'ஸகயுத்தே அப்ரதானே'**

**ஸஹ்யர்த்தேந யுக்தே அப்ரதானே த்ருதீயாஸ்சாத்**

(உ-ம்) புத்ரேண ஸஹ ஆகத: பிதா.

(மகனோடு தந்தை வந்தான்) 16 - 94

பாணிநி இரண்டாம் அத்தியாயத்துள் சமாசனில் விபத்தியும் விதித்து லோபமும் விதித்தார். ஆறும் அத்தியாயத்துள் விபத்தி இல்லாமல் பதம் புணரும் பொருட்புணர்ச்சி கூறுவர். 19 - 118

பாணினி பகவான் நஞ்ஞுவில் முன்நின்ற நகாரம் கெட்டு வேறொரு நகாரம் வந்தது என்பர்.

ந லோபோ நஞ்ஞ: 6 - 3 - 73

என்ற சூத்திரப்படி,

ந + ப்ராஹ்மண: - அப்ராஹ்மண:

தஸ்மாந்நுடசி — 6 - 3 - 74

என்ற சூத்திரப்படி

ந + அச்வ: அநச்வ:

என வரும். 21 - 34

சங்கபாண்டு - புருடவியாக்ரம் - மயூரவியஞ்சகம் என்னும் உதாரணம் மூன்றுக்கும் மூன்று சூத்திரம் செய்வார் பாணிநியார்.

'உபமிதம் வியாக்ராதி பிஹி சாமாந்ய அப்ரயோகே'

'மயூர வியம்சகாதயச்ச'

முதலியன. 22 - 146

ஆகுபெயரிலக்கணத்தைப் பாணிநிபகவான் தற்குண சம்விஞ்ஞானவெகுவிரீகி, அதற்குணசம்விஞ்ஞானவெகுவிரீகி என அன்மொழித்தொகை இலக்கணமாகக் கூறுவர். 24 - 163

அநேக மந்யபதார்த்தே 2 - 2 - 24

அந்ய பதார்த்த ப்ரதாநோ பஹுவ்ரீகி

(உ-ம்) ப்ராப்தோதக: க்ராம: பீதாம்பர: ஹரி:



குணங்களோடு கூடிய பொருளை உணர்த்தும் சொல்லையும் உபசாரத்தால் அவ்வாறு கூறுவர் என்று பாணிநியாரும் கூறினர். 43 - 305

பாணிநீயத்துள் ராதிப: என்னும் சூத்திரத்துள் பாடியகாரர் முதலாயினர் ரவ்விற்குக் காரப்பிரத்தியயத்தோடு 'இப' என்னும் பிரத்தியயமும் விகற்பமாய்வரும் என்று கூறினர். 50 - 339

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே' — நன். 462

என்பது பாணிநீயத்தை உட்கொண்டு கூறியது. 50 - 340

*19.* **வாக்கியபதீயம்:** ஏழாம் நூற்றாண்டில் பர்த்ருஹரி என்பவரால் மாபாடியத்துக்கு எழுதப்பட்ட விளக்கம் இது. இதன்கண் செயப்படுபொருள் நிர்வர்த்தியம், விகாரியம், பிராப்பியம் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது. 12 - 65

*20.* **விருத்தரத்நாகரம்:** விருத்த வகைகளின் இலக்கணத்தைப் பொருள்கோள்வகை செய்யுள்விகாரம் முதலியவற்றுடன் உதாரணத்தோடு குறிப்பிடும் இந்நூல் கேதாரபட்டர் என்பவரால் இயற்றப்பட்டது. 19 - 116

## எடுத்துக்காட்டு வடசொற்களும் சொற்றொடர்களும்

| சொற்கள் | காரிகை எண் | பக்க எண் |
|---|---|---|
| **அ** | | |
| அகங்கன் – மரணம் இல்லாதவன் | 21 | 133 |
| அகளங்கன் – மறுவற்றவன் | 21 | 133 |
| அக்கிநிசித்து – அக்கிநியை வேதி அமைத்துப் பேணுபவன் | 37 | 251 |
| அக்கிநீஇஇஇ இதி – ஏ! அக்கிநியே | 5 | 27 |
| அஞ்சம் – அன்னப்பறவை ஹஸ – ஹம்ஸ ஆயிற்று (வர்ண ஆகமம்) | 26 | 173 |
| அட்டமம் – எட்டாவது | 31 | 206 |
| அட்டசகச்சிரம் – எண்ணுயிரம் | 21 | 137 |
| அட்டசகச்சிரர் – எண்ணுயிரவர் | 31 | 206 |
| அட்டசதம் – எண்ணூறு | 21 | 137 |
| அட்டபதி – எட்டடிகளை உடையது | 21 | 136 |
| அத: – இங்கு | 33 | 217 |
| அதன்மம் – அறம் அல்லாதது | 21 | 133 |
| அதாது – வினைப்பகுதி அல்லாதது | 7 | 44 |
| அதி – மிகுதிப்பொருட்டாவதோருரிச்சொல் | 45 | 312 |
| அதிகரகம் – கும்பத்தில் | 6 | 38 |
| அதிநுட்பம் – மிக்கநுட்பம் | 45 | 312 |
| அதிலோபமாந்தர் – மிக்க இவறன்மையுடைய மக்கள் | 45 | 312 |
| அதிலோபம் – மிக்க இவறன்மை | 45 | 312 |
| அத்தி – உண்டு என்னும் பொருண்மை சுட்டல் | 42 | 301 |
| அத்திர – இவ்வயின் | 33 | 217 |
| அத்துவநி கச்சதி – வழியில் செல்கிறுன் | 15 | 82 |
